T. 1747

SRI VENKATESVARA ORIENTAL SERIES—No. 18

EDITOR:—P. V. RAMANUJASWAMI, M.A.

# திருவேங்கட தலபுராணம்

## திருப்பதி மான்மியம்

தேவார நகரம் மதுரகவி
வீரராகவஸ்வாமி ஐயங்காரவர்கள்
இயற்றியது.

பதிப்பாசிரியர்:
வித்வான்
T. P. பழனியப்ப பிள்ளை, B.O.L.
தமிழ் ஆராய்ச்சியாளர்

திருவேங்கடேசுவரன் கீழ்க்கலை ஆராய்ச்சிக் கழகம்
திருப்பதி.

1949

PRINTED AT
T. T. D. PRESS,
TIRUPATI.
250 Copies
10-8-'49.

ஸ்ரீ:

# முகவுரை.

திருவேங்கட தலபுராணம் என்பது திருவேங்கடம், திருமலை என்று பெயர் விளங்குகின்ற தெய்வத் தலம் பற்றிய பழைய வரலாறுகளைக் கூறும் நூல் ஆகும். இது வடமொழியில் உள்ள அஷ்டாதச மஹாபுராணங்களைப் போலச் சர்க்கம் முதலிய பஞ்ச லக்ஷணங்களை உடையது ஆகாமல் புண்ணிய க்ஷேத்திரங்களின் மான்மியங்களைத் தெரிவிக்கும் ஸ்தல மாஹாத்மிய நூல் வரிசையைச் சேர்ந்தது ஆகும். இத்தகைய தலபுராணங்கள் தமிழ் மொழியில் கி. பி. 16-வது நூற்றாண்டு தொடங்கித் தமிழ்ப் புலவர்கள் பலரால் பல சைவவைணவ தலங்களுக்கும் பாடப்பட்டுள்ளன. அம்முறையில் திருவேங்கடம் ஆகிய மிகப் புராதன புண்ணிய க்ஷேத்திரத்துக்கு உரியது ஆகத் தமிழ்ச் செய்யுளால் இயன்றது இது. இஃது ஐம்பத்தொன்பது அத்தியாயங்களும் ஆயிரத்து நானூற்று எண்பத்து இரண்டு திருவிருத்தங்களும் உடையது. மதுரை ஜில்லாவைச் சேர்ந்த பெரியகுளம் தாலுகா தேவார நகரவாசி ஆகிய—மதுரகவி—ஸ்ரீ வீரராகவ ஸ்வாமி அய்யங்கார் அவர்கள் பாடியது. மதுரகவி அவர்கள் பாடியமையால் மதுர வாக்கு அமைந்துள்ளது.

திருவேங்கடத் திருப்பதி இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட பழைய தமிழ் இலக்கணம் ஆகிய தொல்காப்பியத்தில் "வட வேங்கடம்" எனத் தமிழகத்தின் வடவெல்லைத் திருப்பதியாகக் கூறப்பட்டுள்ளது. அத் தொல்காப்பியத்தொடு ஒத்த கால இசைத் தமிழ் இலக்கணம் ஆகிய இசை நுணுக்கம் என்பதும்

"வேங்கடம் குமரித் தீம்புனல் பௌவமென்று
இந்நான் கெல்லை தமிழது வழக்கே"

என்று சுட்டியது. இவற்றின் பின்னர் எழுந்த தமிழ் இலக்கண நூல்கள் ஆகிய வீரசோழியம், நன்னூல் முதலியனவும் இவ்வாறே திருவேங்கடத்தைத் தமிழ் நாட்டின் வடவெல்லை எனக் குறித்துக் கூறியுள்ளன. அகநானூறு, புறநானூறு ஆகிய தமிழ்ச் சங்கத்துச்

செய்யுள்கள் பல (அகம்-27, 61, 83, 85, 141, 209, 211, 213, 265, 295, 311, 359, 393; புறம்-381, 385, 389, 391.) திருவேங்கடம் தமிழகத்தில் சிறப்புடன் விளங்குவதனைப் பாராட்டியுள்ளன. தமிழ்ப் பெருங்காப்பியங்களுள் ஆக உள்ள சிலப்பதிகாரம், கம்ப ராமாயணம், வில்லிபுத்தூர் ஆழ்வார் பாரதம் முதலியனவும் இதனை மிகச் சிறப்பாகப் பாராட்டியுள்ளன. சிலப்பதிகாரம் வேனிற் காதைத் தொடக்கத்தில்,

"நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்
தமிழ்வரம் புறுத்த தண்புனல் நல்நாடு" எனவும்,

கடலாடு காதையில்,

"வேங்கட மலையுந் தாங்கா விளையுள்
காவிரி நாடும்" எனவும்,

காடுகாண் காதையில்,

"வீங்குநீ ரருவி வேங்கட மென்னும்
ஓங்குயர் மலையம்" எனவும் இத் தெய்வத்தலம்

தமிழ் நாட்டில் சிறப்புற்றுள்ளமையைக் காட்டி யுள்ளது.

கம்ப ராமாயணம் கிட்கிந்தா காண்டம் நாடவிட்ட படலத்துள்,

வடசொற்கும் தென்சொற்கும் வரம்பாகு நான்மறையு மற்றை நூலு
மிடைசொற்ற பொருட்கெல்லா மெல்லையதாய் நல்லறத்துக்—
கீறாய் வேறு
புடைசுற்றுந் துணையின்றிப் புகழ்பொதிந்த மெய்யேபோற்—
பூத்து நின்ற
உடைசுற்றுந் தண்சார லோங்கியவேங் கடத்திற்சென்—
றுறுதிர் மாதோ."

என இதன் தெய்வச் சிறப்பு பாராட்டியுள்ளது.

வில்லிபுத்தூராழ்வார் பாரதம் அருச்சுனன் தீர்த்த யாத்திரைச் சர்க்கத்தில் அருச்சுனன் 'சேஷாசலம்' என்னும் திருப்பெயர் பெற்று விளங்கிய திருவேங்கட மலையினை அடைந்தனன் என்று கூறுமிடத்தில்,

பத்திக்கு வரம்பாகிய பார்த்தன்பல தீர்த்தம்
அத்திக்கினு மெத்திக்கினு மாமென்றவை யாடிச்

சித்திக்கொரு விதையாகிய தென்னாட்டினை யணுகித்
தத்திச்சொரி யருவித்தட வரவக்கிரி சார்ந்தான்

எனப் பாடித் தமிழ் நாட்டு வட திருமலையைப் பாராட்டியுள்ளார்.

நாலாயிர திவ்வியப் பிரபந்தம் என்னும் தெய்வத் தமிழ்த் திருப் பாடல்களைப் பாடியருளிய ஆழ்வார்களுள் பெரியாழ்வார், ஆண்டாள், குலசேகராழ்வார், திருப்பாணாழ்வார், திருமழிசையாழ்வார், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார், பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் என்ற பதின்மரும் ஒருநூற்றுத் தொண்ணூற்றொரு பாசுரங்களில் இத்திருவேங்கடத் திருமலையினைப் பாடியருளினர். சைவ தலபுராண நூல் ஆகிய சீகாளத்திப் புராணத்தின் கண்ணும் இத்திருமலையை,

அரவணைச் செல்வன் வாழு மந்தமிழ் நிலத்தி னெல்லைத்
திருமலை கண்டு கண்டோர் செறிவினைத் தொடா றுக்கும்
பெருவரை கண்டி றைஞ்சிப் பிறங்குவெள் ளருவி தாழும்
பொருவரு மேம கூடப் பொருப்பினை யினிது கண்டான்

என்று சுட்டியுள்ளனர். திருமலையிலுள்ள கல்வெட்டுகள் பலவும் தமிழகத்தின் வடக்குப் பகுதியாகிய தொண்டை மண்டலத்துள்ளது இத்திருவேங்கடம் என்று காட்டுகின்றன. ஈராயிரம் ஆண்டுகளாக உள்ள இவ்வழக்குக்கு ஒப்ப இத்தலபுராண நூல் நாட்டுச் சிறப்பு உரைத்த அத்தியாயத்தில்

அலர்ம கட்கினி யானடிக் கன்பனுய் முறையே
உலகின் மீதறந் தழைத்திட வுயிரெலாம் புரக்கும்
வலனு றும்புகழ்த் தொண்டைமா னெனுமனன் பெயரா
லிலகு தொண்டைநாட் டியலணி யெடுத்திசைத் திடுவாம். (1)

என்று இந்நாடு தொண்டைமான் என்னும் தமிழ் மன்னன் ஆண்டமையால் தொண்டை நாடு, தொண்டை மண்டலம் எனப் பெயர் பெற்றதென்று கூறியுள்ளது. மேலும் பொன்முகியாறு தொண்டை மண்டலத்தில் விளங்குவது என்பதனை

நாடு கின்றவர் பவமெலா மொழித்துநன் குயர்ந்த
வீட ளித்திடும் பொன்முகி விரைமலர்ப் பழனத்
தாடு சென்றகு றடங்குள முளவெலா நிரப்பி
ஈடி றெண்டைநாட் டிலங்கமு தெனப்பாந் ததுவே. (8)

என்ற செய்யுளால் புலப்படுத்தினது. தொண்டைமண்டலத்தை வருணித்த பின்

" செவ்விய தொண்டை நாட்டின் திறஞ்சொலற் கடங்கா தன்றே"

என்று கூறிவிட்டு இத்தகைய தொண்டை நாட்டிற் சிறந்து விளங்கும் திருப்பதி நகரின் திறம் பாராட்டியுள்ளதும் காண்க. அது

மருப்பொலி வானோர் தங்கள் வளர்திகழ் பதியின் வாழ்ந்தே
இருப்பதி னழியா முத்தி யெய்துதற் கரிதா மென்று
விருப்பமீ தூர வந்து விளங்குறப் பிறத்தற் கெண்ணுந்
திருப்பதி நகரின் வண்மை தெரிந்தவா றினிச்சொல் வோமே

என்பது. மேற்கண்ட வாற்றால் இத்தெய்வத் தலச்சிறப்பினைப் பழைய தமிழ் நூல் வரலாற்றுக்கு இணங்கக் கூறியுள்ளது இப் புராண நூல் என அறிக நூலிறுதியில்

தொண்டை நாடு வாழி சொன்ன முகியும் வாழி தூய்நலங்
கொண்ட சேட சயிலம் வாழி கோயில் வாழி

என வாழிப்பாட்டுள்ளும் இச்செய்தியை வற்புறுத்திக் கூறியிட்டது காண்க. ஆதலின் இம்மரபுக்கு மாறாக இத் தெய்வத்தலம் வடநாட்டிற் சேர்ந்ததென்று சிலர் கூறுவது ஆன்றோர் வழக்கொடு பொருந்துவது அன்று எனத் தேர்ந்து கொள்ளற் பாலது.

தீர்த்தங்களின் மகிமையைக் கூறுமிடத்து 66 கோடி தீர்த்தங்கள் உள்ளன என்றும் அவற்றுள் 1008 சிறந்தன என்றும் அவற்றில் 216-ம் அவற்றில் 108-ம் அவற்றில் 68-ம் சிறந்தன என்றுரைத்து அவற்றில் விபவம், முத்தி தருபவை 6-ம், 26-ம் என்று கூறி அவற்றினுஞ் சிறந்த தன்மையன ஏழு ஆகும் என்றும் அவை குமாரதாரிகை, தும்புரு தீர்த்தம், கிருஷ்ண தீர்த்தம், ஆகாச கங்கா தீர்த்தம், பாண்டு தீர்த்தம், பாபவிநாச தீர்த்தம், சாமி புஷ்கரிணி என்றும் கூறுகிறது. ஏழு மலை ஆகிய அஞ்சனாசலம், நாராயணாசலம், வராஹாசலம், இடபாசலம், சிம்மாசலம், கருடாசலம், சேஷாசலம் என்று சிறப்பிக்கப்படும் க்ஷேத்திர மகிமையும், மூர்த்தியின் பிரபாவமும் பலவாற்றானும் விளங்கக் கூறுவதுடன் வைணவ சமயச் சிறப்பும் ஆகமப்பொருளும் கிளர்ந்துள்ளது.

வடமொழியிலுள்ள மூல புராணங்களிற் கண்ட வேங்கடாசல மாஹாத்மியங்களைத் தொகுத்து வெளியான சமஸ்கிருத வேங்கடா

சல மாஹாத்மியத்தை 78-ஆண்டுகளுக்கு முன்பு தமிழில் வசன ரூபமாய்ப் பெயர்த்துச் செய்த திருமலை மஹாத்மியம் என்ற ஒரு நூல் ஒரு வைணவப் பெரியாரால் வெளியாயிற்று. அந்நூலைப் பின்பற்றி இச்செய்யுள் தலபுராண நூல் அமைந்தது எனத் தெரிகின்றது. இது தோன்றி இப்போது 62 ஆண்டுகள் ஆயின. சம்ஸ்கிருத வேங்கடாசல மாஹாத்மியத்தில் கண்டவாறே இந்நூலின் ஒவ்வோர் அத்தியாயத்தின் இறுதியிலும் இன்னின்ன புராணத்தின் செய்தி இதில் அடங்கியது எனக் காட்டுகின்றது. அவ்வாறு பிரமாண்டம், பவிஷ்யோத்தர காண்டம், வராகம், வாமனம், பதுமம், காந்தம், மார்க்கண்டம் முதலிய புராணப் பெயர்கள் காணப்படுகின்றன.

திருமலை-திருப்பதி தேவஸ்தானக் கமிட்டியாரால் நிறுவப்பெற்ற திருவேங்கடேசுவரன் கீழைக் கலையாராய்ச்சி நிலையத்தில் தலைமைத் தமிழ் ஆராய்ச்சியாளன் ஆக யான் பணியேற்ற போது அந்நிலையத்தின் அத்யக்ஷர் ஆக விளங்கிய ஸ்ரீ. M. கிருஷ்ணமாசாரியர் அவர்கள் M.A.M.L. Ph. D. M.R.A.S. கல்விச்சாலைத் தமிழறிஞர்களுடன் கலந்து கொண்டு வடமொழி, தெலுங்கு இவ்விரண்டினும் உள்ள வேங்கடாசல மஹாத்மியங்களோடு ஒப்பத் தமிழினும் தலமான்மியம் வெளியீடாக வேண்டியமை கருதி இத் தமிழ்த் தலபுராணத்தைப் பதிப்பிக்குமாறு பணித்திட்டார்கள். அப்போது தேவஸ்தானக் கமிட்டியாருள் ஒருவராக இருந்த மதுரைத் தமிழ்ச் சங்கம் உப அக்கிராசனர் ஆகிய ஸ்ரீமான் உ. வே. T. C. ஸ்ரீநிவாஸய்யங்கார் B.A. B.L., M.L.C. அவர்களும் இப்பணியைப் பெரிதும் ஆமோதித்தார்கள். அவர்கள் விருப்பிற்கு இணங்க இத் தலபுராணம் புதிதாகப் பதிப்பு எய்துகின்றது. படிப்போர்க்கு எளிதில் நூற்பொருள் தெரியுமாறு குறிப்புரை என்னால் எழுதப்பட்டு உடன் சேர்க்கப்பட்டுள்ளது. வரலாற்றுச் சுருக்கமும் தனியே எழுதப்பட்டுள்ளது. 1887-ம் ஆண்டில் சென்னைச் சருவ கலா சாலைத் தலைமைத் தமிழ்ப் புலவராயிருந்த கோமளபுரம் - இராஜகோபால பிள்ளையவர்கள் பார்வையிட்டு முதல் பதிப்பாகிய இந்நூல் பலவகைத் திருத்தங்களுடன் இப்போது பதிப்பாகியது. மேற் கூறிய பெரியார் இருவரும் யான் ஆராய்ச்சி நிலையத்தில் நிகழ்த்தும் உரிய தமிழாராய்ச்சியுடன் அவ்வப்போது திருவேங்கடமுடைய பெருமான் விஷயமாக எற்பட்டுள்ள தமிழ்ப் பிரபந்தங்கள் எல்லாவற்றையும் ஆய்ந்து பதிப்புச் செய்யுமாறும்

பணித்திட்டார்கள். அவர்கள் ஆணைப்படி இதுவரை அச்சேருது ஓலைச் சுவடிப் பிரபந்தமாகவே யிருந்த சேடமலைப் பதிற்றுப் பத்தந்தாதி, திருவேங்கடமுடையான் மேகவிடுதூது என்பவை என்னால் பதிப்பு எய்தின. இப்போது எம் ஆராய்ச்சி நிலையத்தில் அத்யக்ஷர் ஆக உள்ள ஸ்ரீமான் உ. வே. P. V. இராமாநுஜ ஸ்வாமி ஐயங்கார் M.A. அவர்களும் முன்னவர்கள் போலத் திருவேங்கடமுடையான் விஷயமான தமிழ் நூல் வெளியீடுகளில் சிறந்த ஈடுபாடுடையார்களாக இருக்கின்றார்கள்.

சில யாண்டுகளுக்கு முன்பு யான் திருப்பதிப் புது நகர்ப் பகுதியிலுள்ள திருமாளிகை யொன்றில் எழுந்தருளியிருந்த நம் தமிழ் நாட்டு அத்வைத வேதாந்தி ஸ்ரீ விலக்ஷணானந்த சுவாமியவர்களைக் கண்டு உரையாடிக் கொண்டிருந்த போது அவர்கள் " திருவேங்கட தலபுராணம்-தமிழ்ச் செய்யுள் நூலைப் பாடியவர்கள் எம் தந்தையின் தந்தையார் ஆகிய மதுரகவி வீரராகவஸ்வாமி ஐயங்கார் அவர்களே ; தேவார நகரம் ஆகிய எங்கள் நகருக்குச் சுரபி ஸ்தலபுராணம் முதலிய வேறு தமிழ்ச் செய்யுள் நூல்களும் அவர்கள் செய்துள்ளார்கள் : அப்பெரியார் வழியில் வந்த எனக்குக் கவி பாடும் தமிழறிவு வந்தது அம்மாபின் பயனே " என்று தெரிவித்தருளினார்கள். நூலாசிரியர் செய்தியாக இஃது அப் பெரியாரவர்களால் யான் புதுமையாகத் தெரிந்து கொண்டது ஆகும். இந் நாள்வரை அவரைப்பற்றி அறியாதார்க்கு இஃது அறிய நேர்ந்தது ஒரு நல்ல பேறு ஆகும்.

" இந்திரற்கும் பிரமற்கும் முதல்வன் றன்னை
இருநிலங்கால் தீநீர்விண் பூத மைந்தாய்ச்
செந்திறத்த தமிழோசை வடசொல் லாகித்
திசைநான்கு மாய்த்திங்கள் ஞாயி றாகி
அந்தரத்திற் றேவர்க்கு மறிய லாகா
அந்தணனை......................... " என்று திருநெடுந்

தாண்டகத்தில் திருமங்கையாழ்வார் அருளிச் செய்தவாறு அஷ்டமூர்த்தத்துடன் செந்தமிழ் மொழியாகவும் திகழுகின்ற திருவேங்கடமுடைய எம்பெருமான் தமிழகத்தின் வடவெல்லை நிலத்தில் திருக்கோயில் கொண்டருளித் தமிழகத்தின் தலைக்காப்பாகத் திகழ்கின்றமையால் அப்பெருமான் புகழ் விரித்த தமிழ் நூல் ஆகிய இத்தலபுரா

ணத்தை வெளியிடும் நற்பணியில் எளியேனை ஈடுபடுத்திய மஹோபகாரிகள் ஆகிய திருமலை-திருப்பதி தேவஸ்தானக் கமிட்டியார் அவர்களுக்கும், கமிஷணர் - திருவாளர். B. வீராசாமி நாயுடு B.A., அவர்களுக்கும் எளியேன் நன்றியுணர்வு பெரிதும் உரியது ஆகும்.

திருவேங்கடமுடைய பெருமான் திருப்பணியில் ஈடுபட்ட எளியேன் அறிவாற்றல்களில் சிறியவன். குற்றங்குறைகள் இருப்பின் நல்லறிஞர் பொறுத்தருளி என்னைத் திருத்தக் கடவர். இது போல ஏனைய தமிழ் நூற் பதிப்புகளும் நிறைவேறும்படித் திருவருள் கூட்டுமாறு திருவேங்கடமுடையான் திருமலரடிகளைச் சிந்தித்து வந்திக்கின்றேன்.

தி. பொ. பழனியப்ப பிள்ளை.

தமிழ் ஆராய்ச்சியாளன்.

## பொருள் அடக்கம்.


| அத்தியாயம் | | பக்கம் |
|---|---|---|
| | சிறப்புப்பாயிரம் ... ... | 1 |
| 1. | நாட்டுச் சிறப்பு ... ... | 6 |
| 2. | நகரச் சிறப்பு ... ... ... | 12 |
| 3. | நாரதர் திருப்பாற்கடல் அடைந்தது ... | 18 |
| 4. | திருமலைத் தோற்றம் உரைத்தது ... ... | 26 |
| 5. | ஸ்ரீநிவாசன் நாராயண முனிக்கு அருள் செய்தது ... | 30 |
| 6. | இடபாசுரனைக் கொன்றது ... ... | 35 |
| 7. | அஞ்சனாதேவி தவநிலை உரைத்தது ... | 44 |
| 8. | வேங்கடாசலப் பெயர் நிகழ்த்தியது ... | 51 |
| 9. | சோழனுக்குச் சக்கரவர்த்தி பிறந்தது ... | 56 |
| 10. | சக்கரவர்த்தி அரசு புரிந்தது ... ... | 61 |
| 11. | தொண்டைமான் சக்கரவர்த்தி திருப்பணி உற்சவம் நடத்தியது ... ... | 67 |
| 12. | கிருஷ்ண சன்மாவின் சரித்திரம் உரைத்தது ... | 78 |
| 13. | மேருபுத்திரன் என்பதை விளங்க உரைத்தது ... | 85 |
| 14. | சாமி புட்கரிணியின் பெருமை உரைத்தது ... | 91 |
| 15. | வாயு, அகத்தியன், சங்கனுக்கு அருள் புரிந்தது ... | 96 |
| 16. | தீர்த்த மகிமை உரைத்தது ... ... | 103 |
| 17. | தீர்த்த விவரம் உரைத்தது ... ... | 107 |
| 18. | தொண்டைமான் சக்கரவர்த்திக்குத் திருவாழி திருச்சங்கு ஈந்தது ... ... | 113 |
| 19. | தீர்த்த யாத்திரையின் விவரம் உரைத்தது ... | 125 |
| 20. | தான விசேடம் உரைத்தது ... ... | 129 |
| 21. | சற்சங்கத்தால் வந்த மகிமை உரைத்தது ... | 134 |
| 22. | தும்புருவுக்கு அருள் செய்தது ... ... | 140 |

அத்தியாயம் பக்கம்


23. பெரிய திருவடி பரமபதத்திலிருந்து கிரீடாசலம் கொண்டு வந்தது ... ... 144

24. யாக மகிமை குமாரதாரிகை மகிமை உரைத்தது ... 147

25. சங்கன் என்னும் அரசன் சாமித்துவம் அடைந்தது ... 153

26. இராமன் என்னும் பிராமணன் சித்தி பெற்றது ... 157

27. சக்கரவர்த்தி திருமகன் வேங்கடம் அடைந்தது ... 161

28. தேவர்களுக்கும் தசரத சக்கரவர்த்திக்கும் வரம் கொடுத்தது ... ... 167

29. பிரமன் உற்சவம் நடத்துவித்தது... ... 176

30. சக்கர வேந்தன் வெற்றி உரைத்தது ... 182

31. இராமாநுசன் பிரார்த்தனைப்படி சீநிவாசன் சங்கு சக்கரம் தரித்தது ... ... 192

32. வைணவச் சிறப்பு உரைத்தது ... ... 194

33. தத்துவம் கன்மம் ஞானம் பிரபத்தி மார்க்கம் உரைத்தது ... ... 197

34. சௌனகாதியர் திருவேங்கடத்தானை ஆராதித்து வரம் பெற்றது ... ... 204

35. சேடகிரி நான்கு யுகத்துக்கு நான்கு பேர் பெற்றது... 208

36. வராகப் பெருமான் மந்திரசித்தி உரைத்தது ... 213

37. அலர்மேல்மங்கை அவதரித்தது... ... 217

38. ஸ்ரீநிவாசன் வேட்டையாடி வந்து பதுமினியைக் கண்டது ... ... ... 220

39. வகுளமாலிகை பதுமினியிடத்தில் தூது சென்றது ... 224

40. பதுமினி கலியாணத்திற்கு நகர் வர்ணனை உரைத்தது... 236

41. ஸ்ரீநிவாசன் அலர்மேல்மங்கை நாச்சியாரை மணம் புரிந்தது ... ... ... 245

42. குருவைநம்பி, தொண்டைமான் சக்கரவர்த்தி மோட்சம் பெற்றது ... ... 256

43. பிரயாகையின் மான்மியம் உரைத்தது ... 263

| அத்தியாயம் | | பக்கம் |
|---|---|---|
| 44. | சண்முகன் தவம் உரைத்தது ... ... | 268 |
| 45. | இந்திரன் சாப விமோசனம் பெற்றது ... | 272 |
| 46. | விச்சுவசேனர் உற்பத்தி உரைத்தது ... | 278 |
| 47. | பெரிய திருவடியையும் வாயுவையும் திருமலையில் நிறுவியது ... ... | 282 |
| 48. | அகத்தியர் முதலிய முனிவர் திருமலை வலம் வந்தது ... | 288 |
| 49. | சங்காசன் தவமும் உபரிசரவசுவின் கதையும் உரைத்தது ... ... | 294 |
| 50. | அகத்தியர் முதலிய ரிஷிகளுக்கும் தேவர்களுக்கும் குரு சுக்கிரன் வசு இவர்களுக்கும் சேவை தந்து வரம் கொடுத்தது ... ... | 299 |
| 51. | கங்கையினும் சிறந்தது சாமி புட்கரிணி என்று மார்க்கண்டருக்குப் பிரமன் உபதேசித்தது ... | 303 |
| 52. | சுகப்பிரம ரிஷிக்கு ஸ்ரீநிவாசன் சேவை சாதித்தது ... | 309 |
| 53. | சூலி நரசிங்க உபாசனை செய்ததும் பதுமசரசின் பெருமையும் சுகர் சரித்திரமும் உரைத்தது ... | 313 |
| 54. | சுவர்ணமுகி கல்லியை நதி மகிமை உரைத்தது ... | 324 |
| 55. | சங்கன் சரித்திரமும் அஞ்சனை வரம் பெற்றதும் உரைத்தது ... ... | 327 |
| 56. | மார்க்கண்டர் கருடனால் திருமலை அடைந்தது ... | 331 |
| 57. | மார்க்கண்டரும் சுத்தரும் ஸ்ரீநிவாசன் சேவை பெற்றது ... ... ... | 333 |
| 58. | அருந்ததி தவநிலை உரைத்தது ... ... | 337 |
| 59. | வீட்டுமாசாரியர் தருமனுக்குத் திருமலையில் ஸ்ரீநிவாசன் வரவு உரைத்தது ... | 340 |

ஸ்ரீ

ஹரி ஓம்.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

ஸ்ரீநிவாஸன் திருவடிகளே சரணம்.

# திருவேங்கட தலபுராணம்.

## சிறப்புப் பாயிரம்.

### காப்பு.

### நம்மாழ்வார்.

கலிவிருத்தம்.

செய்ய சேட கிரிப்பெருஞ் சீர்மையை
வய்ய மேற்றமிழ்ப் பாவின் வழங்கவே
துய்ய செந்தமிழ்த் தொன்மறை சொல்லிய
அய்யன் பாத மகத்து ளிருத்துவாம். (1)

### பன்னிருவர்.

எண்சீர்விருத்தம்.

சீர்மைபெறும் பொய்கையார் திகழ்பூ தத்தார்
சென்னசா கரங்கடத்தும் பேயார் தூய
நீர்மையுயர் திருமழிசைப் பெருமான் மீளா
நெறியையருண் மாறனெழிற் சேரர் கோமான்

---

1. சேடகிரி - ஆதிசேஷன் வடிவு ஆகிய திருமலை. சேஷாசலம், சேஷாத்ரி முதலிய பெயர்களை நோக்குக. வையம் - உலகம். போலி வகையால் 'வய்யம்' என உள்ளது. பா - என்றாராயினும் பாவினம் ஆகிய விருத்தச் செய்யுள். துய்ய - தூய. செந்தமிழ்த் தொன்மறை - திராவிட வேதம் ஆகிய திருவாய்மொழி முதலிய பிரபந்தங்கள். அய்யன் - ஐயன் - என்பது போலி வகையால் 'அய்யன்' என நின்றது : தலைமை யுடையோன் என்னும் பொருட்டு. நம்மாழ்வார் - யாவரினும் தலைமை யுடையார்.

2. சென்னசாகரம் - பிறவியாகிய கடல். மீளாநெறி - வீட்டு நெறி. மாறன் - சடகோபர். சேரர் கோமான் - குலசேகராழ்வார். பட்டர்பிரான் - வில்லிபுத்தூராழ்வார். எம்மான் - எம்பிரான் ஆகிய திருமால். தொண்டர்

பார்மகிழ்நன் பட்டர்பிரா னெம்மான் றொண்டர்
பதத்துகளார் திருப்பாண ரேந்தன் ஞான
மார்கலிய னணிமதுர கவிபூங் கோதை
யாமிவர்தா ளெஞ்ஞான்று மகத்துள் வைப்பாம். (2)

## இராமாநுஜர்.

### கலிநிலைத்துறை.

சமய வாதவல் லிருட்கொரு தபனனாய்த் தோன்றி
அமல னாதியா மரிதிரு மகிமையை யடைவே
தமர வாரிசூழ் தாரணியி னிலைபெற நாட்டும்
விமல னாமெதி பதிபதம் விரும்பிவாழ்த் துதுமால். (3)

## மணவாளமாமுனிகள்.

### அறுசீர்விருத்தம்.

பணவாள ராவிறையே மால்சமயம்
வெளியாயிப் பாரில் நாட்டக்
குணவாள னாகுமெதி ராசனென
முன்றோன்றிக் குருகூர் தன்னில்

---

பதத்துகளார் - தொண்டரடிப்பொடி யாழ்வார். திருப்பாணரேந்தல் - திருப்பாணர் ஆகிய தலைவர் என்றார் 'முனிவாகநர்' என்ற தலைமைப் பாட்டினால். அன்றி ஏந்தல் ஞானம் ஆர்கலியன் - சீரிய ஞானம் நிறைந்த திருமங்கை யாழ்வார். ஞானம் ஆர்கலியன் - ஞானக்கடல் என்னும் பொருளும் நயத்தால் அறிக.

3. வல்லிருள் - உலகை விட்டு நீங்காத இருள். தபனன் - சூரியன். அமலனும் ஆதியும் ஆகிய அரி என்க. தமரம் - ஒலி. வாரி - கடல். தாரணி - நிலவுலகு. எதிபதி - துறவியர் தலைவர் ஆகிய இராமாநுச முனிவர்.

4. பணவாள் அரா இறை - படத்தையும் ஒளியையும் உடைய அரவினங்கட்குத் தலைமையுடைய ஆதிசேடன். மால் சமயம் - ஸ்ரீவைஷ்ணவம். எதிராஜன் - இராமாநுஜ முனிவர். குருகூர் - ஆழ்வார் திருநகர். நிணவாளன் - பகைவர் உடலில் கொழுப்புப் படிந்த வாட்படை யுடையோன். காரி - மாறன் காரியார் என்று பெயர் பெற்ற நம்மாழ்வார் திருத்தந்தையார். இவர்

நிணவாள ஞங்காரி யருண்மாறன்
மறைப்பொருணன் னெறியோர்க் கீய
மணவாள மாமுனியாய்ப் பின்வந்தான்
மலர்ப்பதத்தை மனத்துள் வைப்பாம். (4)

ஆசாரியர்.

கட்டளைக் கலித்துறை.

பூத்தானன் ஞபியின் வேதாவொ டண்டம் புவனமெல்லாங்
காத்தான் றிருவொடு வாழ்வேங் கடமெனுங் கார்வரையா
மாத்தான மேன்மை தமிழான் வனைய வளக்குருகை
ஆத்தா னடிக்கம லப்போதென் சென்னி யணிகுவனே. (5)

ஆதிவராகப்பெருமாள்.

அறுசீர்விருத்தம்.

முன்னீரி லேகிடந்த மூரிவைய
மருப்பின்முகந் தெடுத்தே மூவாப்
பொன்னுகங் குளப்படியிற் றுகள்போலப்
பொருந்தவுயர் சுவேத மாக

---

ஒரு குறுநாட்டுத் தலைவர் ஆதலின் "நிணவாளன்" என விசேஷிக்கப்பட்டார். மாறன் மறைப் பொருள் - நம்மாழ்வார் திருவாய்மொழித் தமிழ் மறைப் பொருள். மணவாளமாமுனி - ஈண்டு ஸ்ரீராமாநுஜ முனிவரின் அபராவதாரம் எனக் கூறப்படுவது காண்க.

5. நன்ஞபியின் வேதாவொடு அண்டம் புவனமெல்லாம் பூத்தான் காத்தான் என மாறுக - திருவுந்திக் கமலத்தில் பிரமனையும் அண்ட புவனங்களையும் தோற்றுவித்துக் காப்பவன் ஆகிய திருமால் என்க. திருவொடு வாழ்வேங் கடமென்னும் கார்வரையாம் மாத்தான மேன்மை - இலக்குமியொடும் எழுந்தருளியுள்ள திருவேங்கடம் என்னும் மேகம் தங்கிய மலையாகிய சிறந்த தலத்தின் சிறப்பை. திருவேங்கட நாதன் சீநிவாசன் ஆதலின் 'திருவொடு வாழ்' என்று விசேடித்தார். வனைய - வர்ணித்து உரைக்க. குருகை ஆத்தான் - திருக்குருகூர் ஆப்தனுர் ஆகிய நம்மாழ்வார்; அன்றி அத் திருப்பெயர் பூண்ட ஆசாரியர். சென்னி - தலை.

6. முன்னீர் - கடல். நிலத்திற்கு முற்படப் படைப்பு எய்தியது எனக் காரணம். இனி முந்நீர் என்பது எதுகை நோக்கி முன்னீரென நின்றதெனக் கொண்டு ஆற்று நீர் ஊற்று நீர் வேற்று நீர் இவையுடைய கடல் எனினும், படைத்தல் அளித்தல் அழித்தல் ஆகிய மூன்று நீர்மையையுடைய கடல்

மின்னுகந் திசையனைத்து மிகுமொளிக
டவழநின்ற வீர வீர
மன்னேனப் பெருமானை யென்நாளு
மனத்துள்வைத்து வணங்கு வாமால். (6)

ஸ்ரீநிவாசன்.

வேறு.

மண்டல மகிழப் பாலார் வாரியின் பற்று நீக்கி
எண்டவர் பலரும் வேண்ட வெழிற்பணி மலைமேல் யாழ்கைக்
கொண்டுறை முனிசொற் கேட்டுக் கோனேரிக் கரையி னின்றோன்
முண்டக மலர்ப் பாதத்தை முறையினிற் றொழுதல் செய்வாம். (7)

திருமகளார்.

எழுசீர்விருத்தம்.

ஆரண னரன்விண் ணிறைமுத லோர்க
ளடிபணிந் தனதருள் பெறுமோர்
காரண மன்றே வவரவர் தமக்குக்
கனிவுறு பதங்கிடைத் தவெலாம்

---

எனினும் ஆம். மூரி வையம் - பழைய உலகம். திருமாலுண்டு மீட்டும் உமிழப் படுதலின் பழைய உலகமென்றார். மருப்பின் - கொம்பினால். மூவாப் பொன் - முதுமை யெய்தாத் திருமகள். ஆகம் - திருமேனி. குளப்படி - குளம்புகளின் அடியில். துகள் - தூளி. சுவேதம் - வெண்ணிறம். ஈண்டு சுவேதவராகம். மின் நாகம் - ஒளி பொருந்திய மலை. மன்னேனப் பெருமாள் - ஆதிவராகப் பெருமாள்.

7. பால் ஆர்வாரியின் பற்று - திருப்பாற்கடலில் வாழும் திருவுள்ளம். எண்டவர் - மதிக்கப்படும் (தவசியர்) முனிவர். பணிமலை - ஆதிசேஷகிரி. (திருவேங்கட மலை) யாழ்கை கொண்டுறை முனி - மகதியாழைக் கையிலு டைய நாரத முனிவர். கோனேரிக்கரை - ஸ்ரீ சுவாமி புஷ்கரிணி என்ற தீர்த்தத்தின் கரை. முண்டக மலர் - தாமரை மலர்.

8. ஆரணன் - பிரமன். விண்ணிறை - தேவர்கள் தலைவன் ஆகிய இந்திரன். அரன் - சிவன் - திருமகள் புருஷகார பூதை ஆதலின் இங்ஙனம் தேவர்கள் யாவரும் அவன் அடிபணிந்து தத்தம் பதங்களை எய்தினர் என்க.

நாரண னுரத்தி னுகந்துவாழ் முனையே
நாயினே னினதெழிற் பாத
வாரண மலரை வணங்கினேன் கருணை
மலிவுற நோக்கியா ளெனையே. (8)

## சேனை முதலிகள்.

அகத்தினி லறிவெள் ளளவுமே யில்லா
வதிகமுஞ் சிதடனு யிடினும்
மிகக்கரு ணைச்சீர்ச் சேனைகா வலனே
விமலைதன் மருகியை யென்னுப்
புகுத்தமர்ந் திருப்பப் பொருவில்வான் கருணை
பூத்தருள் பொலிவடப் பொருப்பின்
மருத்துவ மதனை வடித்தசெந் தமிழால்
வயங்குமா வணைந்திட வின்றே. (9)

## நூற்பயன்.

### அறுசீர்விருத்தம்.

பூதலத் ததிக நன்மை பொருந்திடு ஞான முண்டாம்
மீதலத் தழியா முத்தி விளைத்திடுங் கல்வி சேரும்
ஓதுதற் கரிய பூமா னுகந்துவாழ் மார்பன் மேவும்
சீதமுற் றுயர்ந்த சேட கிரிவளஞ் செப்பு வோர்க்கே. (10)

---

உரம் - திருமார்பு - "அகல கில்லே னிறையுமென் றலர்மேன் மங்கை யுறை மார்பா." என்றார் ஆழ்வார். வாரணமலர் - தாமரை மலர்.

9. சிதடன் - குருடன். சேனை காவலனே - சேனை முதலியாரென வழங்கும் விஷ்வக்ஸேனர். விமலை - திருமகள். தன்மருகி - தன் மருமகளாகிய சரசுவதியை. என் நா புகுந்து அமர்ந்து இருப்ப - என் நாவில் நுழைந்து தங்கியிருக்க. பொருவில் - ஒப்பற்ற. வடப்பொருப்பு - வடமலையென வழங்கும் திருவேங்கடமலை.

10. மீதலம் - எந் நிலத்துக்கும் மேல் நிலமாகிய ஸ்ரீ வைகுண்டம் ஸ்ரீமான் - செந்தாமரை மலரில் எழுந்தருளியுள்ள மான்போன்ற திருமகள் கேள்வன். சீதம் - குளிர்ச்சி.

### அவையடக்கம்.

ஆதி மறைக ளனைத்தையுநா லாக வகுத்த வியாதமுனி
ஓது முயருங் காதைகளி னுரைத்த சேடா சலமகிமை
கோதி றமிழ்யாப் பாவதனுற் கூறத் துணிந்த தென்போலாஞ்
சீத வரியைக் கடக்கவொரு சிறிய வுறவி நினைவதுவே. (11)

### வேறு.

வேங்கடமா மலைமகிமை வடமொழியிற்
சுகன்றாதை விளம்பு மிந்தப்
பாங்குடைய கதையதனைத் தமிழ்விருத்தத்
தாலடியேன் பகர்ந்த தெல்லாம்
ஓங்குபொருட் சுவையுடன்சொல் லுருசியிலா
தெனினுமுயர் ஞான மேவும்
தேங்குபுகழ்ப் புலவரரி சரிதமெனத்
திருவுளங்கொண் டுவப்பர் தாமே. (12)

சிறப்புப் பாயிரம் முற்றிற்று.

## 1. நாட்டுச் சிறப்பு உரைத்த அத்தியாயம்.

### கலிநிலைத்துறை.

அலர்ம கட்கினி யானடிக் கன்பனைப் முறையே
உலகின் மீதறந் தழைத்திட வுயிரெலாம் புரக்கும்
வலனு றும்புகழ்த் தொண்டைமா னெனுமனன் பெயரா
லிலகு தொண்டைநாட் டியலணி யெடுத்திசைத் திடுவாம். (1)

---

11. சேடாசலம்-ஆதிசேடன் வடிவாய திருமலை. தமிழ்யாப்பு - தமிழ்ச் செய்யுள். சீதவரி-சீதம் - அரி - குளிர்ச்சியுடைய கடல். உறவி - எறும்பு.

12. சுகன்தாதை - சுக முனிவர் தந்தை ஆகிய பராசரன். அரிசரிதம் - திருமாலின் வரலாறு.

1. அலர் மகள் - தாமரை மலரி லெழுந்தருளிய திருமகள். அறம் தழைத்திட - தருமம் செழிக்க. வலன் - வெற்றி. மனன் - மன்னன் - இடைக்குறை.

மங்கு லம்பனைத் தாமன்மெய்ம் மானவான் படர்ந்து
பொங்கு தண்கடல் புகுந்தய முகந்துபொற் றுளபத்
தொங்க லம்புய னுருவெனத் துலங்கிமீண் டெய்தி
எங்க ணும்பரந் திடையற நெருங்கிமீ தெழுந்த. (2)

அந்த மாதவ னங்கைமே லாழிபோன் மின்னி
நந்து போன்மென முழங்கிநன் குரைபெறு சார்ங்கம்
உந்து மாசுக தாரைபோ லுயர்வுறு மெழில்வை
குந்த மால்வரைக் குடுமியிற் றுரைகொண் டனவே. (3)

தாரை கொண்டுபெய் மாரியாற் றழைத்தெழு நீத்தம்
வேரி துன்றிய வனந்திடர் விரிசுனை யோடை
சேர வெங்கணு நிறைத்தெணில் கோடறச் சிதறி
ஆர வாரத்தொ டருவிகள னந்தமா யடர்ந்த. (4)

நலங்கொள் பொன்முகி நதியினிற் கலந்துயர் வகுளம்
இலங்கு சண்பக மசோகெழிற் றேவதா ரம்வேய்
வலங்கொள் சந்தனம் பலாசமா நாகநீ ணீபம்
துலங்கு குங்குமந் தூரொடுஞ் சூன்றுசென் றதுவே. (5)

---

2. பனைத்தாமன் - பனை மாலையுடைய பலராமன். மெய்மான - திரு மேனியை யொப்ப. அவன் திருமேனி வெண்ணிறமாதல் அறிக. 'வால்வளை மேனி நாஞ்சிலோனும்' - பரிபாடல். அயம் - நீர். பொன்துளபத் தொங்கல் அம்புயன் - பொன்மயமான திருத்துழாய் மாலையை யணிந்த அழகிய திருத்தோள்களையுடைய திருமால்.

3. மாதவன் - திருமகள் கொழுநன். (மா - திரு. தவன் - கொழுநன்) ஆழி - சுதர்சனம் என்ற திருச்சக்கராயுதம். நந்து - பாஞ்சஜன்னியம் என்னும் திருச்சங்கம். சார்ங்கம் - வில். உந்து - செலுத்தும். ஆசுகம் - அம்பு. (விரைவிற் செல்வது எனக் காரணப் பெயர்) வரை - மலை. குடுமி - உச்சி.

4. நீத்தம் - நீர்ப்பெருக்கு. வேரி - தேன். வனம், திடர், சுனை, ஓடை - இட விசேடங்கள். எண்ணில் கோடு - எண்ணிக்கை யில்லாத கரை யிடங்கள். அநந்தம் - எண்ணற்றன. அடர்ந்த - நெருங்கிப் பொழிந்தன.

5. பொன்முகிநதி - சுவர்ணமுகி அல்லது பொன்முகலி என்னும் ஆறு. அசோகு, தேவதாரம். மூங்கில், சந்தனம், செம்முருக்கு, மா, நாகம், கடம்பு, குங்குமம் இவற்றைத் தூரொடு பறித்தது. வகுளம் - மகிழமரம். வேய் - மூங்கில். பலாசம் - செம்முருக்கு. மா - மாமரம். நீபம் - கடம்பு. தூர் - அடிவேர். சூன்றது - பறித்தது.

அறுசீர்விருத்தம்.

வண்டுடன் மலருந் தேனு மான்மத வெறியும் வாசம்
கொண்டவ ணளாவி யெங்குங் குவிமக ரந்தத் தூளும்
விண்டலத் தருக்கள் பெய்த விரிமலர்த் தாதும் வாரி
எண்டிசை விதிர்ப்ப வோல மிட்டலைத் தேகிற் றன்றே. (6)

சங்கையி றாளங் கோமே தகந்தம ணியமா ணிக்கம்
பொங்கொளி வயிர நீலம் புட்பரா கத்தி னோடும்
அங்கத மணிக ளீர்த்தே யவனிமா துடுத்த சீர்சால்
வங்கவெண் டிரைநீர் வாரி வயிறுகீண் டொழுகிற் றன்றே. (7)

கலிநிலைத்துறை.

நாடுகி ன்றவர் பவமெலா மொழித்துநன் குயர்ந்த
வீட ளித்திடும் பொன்முகி விரைமலர்ப் பழனத்
தூடு சென்றக றடங்குள முளவெலா நிரப்பி
ஈடி றெண்டைநாட் டிலங்கமு தெனப்பாங் கதுவே. (8)

கலிவிருத்தம்.

கொழுமடுத் துழுநர்தங் குழுவின் சும்மையும்
எழுமுளை வித்தெடுத் திறைக்கு மோதையும்
அழகுறு முழத்தியர் குரவை யார்வமும்
விழுமிய கடலொலி மெலிய விஞ்சுமே. (9)

---

6. மான்மதம் - கஸ்தூரி. வெறி - மணம். மகரந்தத்தூள் - பூவின் மணத்தூள். விண்தலத்தருக்கள் - தேவருலகிலுள்ள கற்பக முதலிய ஐந்து மரங்கள்.

7. சங்கை - எண்ணிக்கை. தாளம் - முத்து. தமனியம் - பொன். அவனிமாது - பூமிதேவி. வங்கம் - கப்பல். கீண்டு - கிழித்து.

8. பவம் - பிறப்பு. பழனம் - வயல். வீடு - மோக்ஷம். ஈடு - ஒப்பு.

9. கொழு - கலப்பைக் கருவிக் கொழு. குழு : கூட்டம். சும்மை - ஆரவாரம். ஓதை - ஓசை. குரவை - கைபிணைந்து ஆடும் ஆட்டம் '' குரவை யென்பது கூறுங்காலை செய்தோர் செய்த காமமும் விறலும் எய்த வுரைக்கு மியல்பிற் றாகும் ''.

அறுசீர்விருத்தம்.

நீலக் குவளை வயலினுழு நிவந்த குவடு பொருமூரி
மாலைப் பகட்டி னடியினொளிர் வளைக டகர்ந்து தெறித்தமுத்தாற்[பால்
சோலைக் கனிக டொளைபடுதேன் றுணைக்கோட் டெருமை முலைவழி
சாலக் கமழ்பூந் தேறல்படீஇச் சாலிப் பைங்கூழ் வளர்த்திடுமால்.(10)

செந்நெல் வானின் மீமிசையே செறிந்து தழைந்து கதழ்ந்தசெழுங்
கன்னல் பூக மிலாங்கலிபூங் கதலி யின்ன செங்கதிரோன்
மன்னு பொற்றேர்ப் பூண்பரிமா வட்டை தடுப்ப மறுகிமனம்
சென்னி தாழ்த்தி யிடைநுழைந்து செல்லா நிற்குந் தினமவணே.(11)

வண்டுஞ் சுரும்பும் பூந்தேனும் வரிநீண் ஞிமிறும் பாண்செய்யக்
கொண்டன் முழவி னார்ப்பெடுப்பக் கோலிச் சிறைவான் மயிலாட
விண்டு மலர்ந்த கருங்குவளை விழித்து நோக்க விரிதெண்ணீர்
முண்ட கத்த முழுமலரா முகநன் றலர்ந்து செய்யுவக்கும். (12)

வேறு.

அழகுறு மாயர் மாத ரளைகடை யமலை கேட்டு
விழுமிய வெற்பி னுளும் வேங்கைவா யடங்கித் துஞ்சும்

---

10. நிவந்த - உயர்ந்த. குவடு - குன்று. மூரி - திமில். பகடு - எருது. வளை - சங்கு. பூந்தேறல் - பூவினின்று வழியும் தெளிதேன். சாலிப் பைங்கூழ் - நெல்லின் பசும் பயிர்.

11. கதழ்ந்த - விரைந்த. கன்னல் - கரும்பு. பூகம் - கமுகு. இலாங்கலி - தென்னை. கதலி - வாழை. பரிமா - குதிரை. வட்டை - உருளி. மறுகி - கலங்கி. சென்னி - தலை.

12. வண்டு, சுரும்பு, தேன், ஞிமிறு, - இவை வண்டின் சாதிபேதம் (சிந்தாமணி.) பாண் செய்ய - பாடல் செய்ய. கொண்டல் - மேகம். முழவு - குடமுழா என்னும் தோல் கருவியாய வாச்சியம். முண்டகம் - தாமரை. செய் ஆகிய அரசன் என உருவகம் செய்ததாகக் கொள்க. பாட, ஆர்க்க, ஆட, நோக்க முகம் அலர்ந்து உவக்கும் என முடிக்க.

13. ஆயர்மாதர் - இடைச்சியர். அளை - வெண்ணெய். அமலை - அரவம். வேங்கை வாய் அடங்கித் துஞ்சும் - வேங்கைகள் தயிர்கடையும் ஒலியைக் கேட்டுத் தம் முழக்கினும் விஞ்சியது ஆகி யிருத்தலின் தம் முழக்கினை

உழுவர்தம் மகளிர் பாடு மோதைகேட் டுருகி நெய்தல்
கெழுமிய மகர மோடு கிளரிரு றுயிலு மாதோ. (13)

கலிநிலைத்துறை.

அதிம ணித்திரள் பொருந்தியம் பொன்னிற மமைந்தே
பதம ணிந்துமண் மேலவர் பகருதற் கரிதாய்
மதும ணக்குநல் வளஞ்செறி வயனிறை செந்நெல்
புதும ணத்தமென் மகளிர்போற் றலைகவிழ்ந் தன்றே. (14)

தீட்டும் வாளினுற் குறைத்தரித் திரள்சுமந் தோடி
நீட்ட மாயுயர் குவடெனப் போர்பல நிரைத்துக்
கோட்டு மூரிவெம் பகடுகள் கொடுவைநீத் தொளிர்நெற்
கூட்டி யேமனை யெங்கணுங் கொண்டுபோய்க் குவிப்பார். (15)

ஆயு நூன்மறை யவர்கவி வாணரா துலர்க்குத்
தூய பாலனங் கனியொடு சுவைபெற வளித்தே
ஞாய மோடற நவையற நாடொறும் வளர்த்து
நேய மாகிய சுற்றமோ டுண்பர்நிச் சலுமே. (16)

---

யடக்கித் துஞ்சும் என்க. ஓதை - ஓசை : இச் செய்யுள் திணை மயக்கம் : முல்லை நிலமாதர் தயிர்கடையும் ஓசையால் குறிஞ்சியிலுள்ள வேங்கைகள் வெருவி வாயடங்கும்; மருத நில மகளிர் பாடும் ஓசை கேட்டு நெய்தல் நிலத்து மகாமும் இருலும் துயிலும் எனத் திணைகள் மயங்குமாறு காண்க.

14. அதி - மிக்க. மணித்திரள் - தானியமணித்திரட்சி. பொன்னிறம் - முற்றிய கதிர்க்குப் பொன்னிறம் படுதலியல்பு. பதம் - பக்குவம் - மதுமணக்கும் - தேன் மணம் தரும். புது மணத்த......கவிழ்ந்தன்று : புது மணம் கொண்ட இளமகளிர் நாணத்தால் தலை கவிழ்ந்திருத்தல் போலக் கதிர்ப் பொறையால் தலை சாய்ந்து கிடந்தன என்பது.

15. குறைத்து - அறுத்து. அரித்திரள் - அறுத்த தாள்களின் குவியல். குவடு - குன்று. கோட்டு மூரி வெம்பகடுகள் : கொம்புகளையுடைய முதிர்ந்த கடிய எருதுகள். வைநீத்து - வைக்கோல் தாள்களை விலக்கி.

16. ஆயும் நூன் மறையவர்கள் - ஆராயும் வேதம் வல்ல வேதியர்கள். கவிவாணர் - கவிஞர்கள். ஆதுலர் - வறியவர். பாலனம் - பாலன்னம். அறம் நவையற ஞாயமோடு நாள்தொறும் வளர்த்து - தருமத்தைக் குற்றம் நீங்க நீதியோடு நாள்தோறும் வளரச் செய்து. நிச்சலும் - நாள்தோறும்.

### அறுசீர்விருத்தம்.

சத்துவந் தழைத்தோ ரல்லாற் றமச குணத்தா ரில்லை
உத்தம விவேக ரல்லா லுணர்வில ரொருவ ரில்லை
நித்தமு மெய்ய லாற்பொய் நிகழ்த்துவா ரில்லைத் தர்ம
சித்தர்க ளல்லாற் றீமை செய்பவ ரில்லை மாதோ. (17)

இருநிதிக் கிழவன் செல்வத் திழிகுந ரெவரு மில்லை
தருவிறை சுகபோ கத்திற் றாழ்குநர் யாரு மில்லை
உருவினிற் சிறந்தோ ரல்லா லொருவரு மருவ ரில்லை
வருநறுங் கல்வி தேரு மாந்தர்க ளில்லை யாதோ. (18)

பங்கய மலர்க ளெல்லாம் பரிதியை விரும்பல் போல
மங்கையர் மனங்க ளெல்லா மகிழ்நரை விரும்பி நிற்கும்
பொங்கெழின் மயில்க ளெல்லாம் புயலினை விரும்பல் போலப்
பங்கமின் மக்க ளெல்லாம் பரனடி விரும்பு வாரே. (.9)

வருணவாச் சிரம தன்மம் வழுவிலா தெவர்க்கு மிக்க
கருணையா யுதவி நீதி காதலித் தாசா ரத்தோ
டிரவினும் பகலு நன்மை யெய்துறப் பொழுது போக்கித்
திருவரு டழைப்ப நாளுஞ் சிறந்துவாழ்ந் திருப்ப ரன்னர். (20)

---

17. சத்துவம் - முக்குணங்களுள் தலைமையான குணம். தாமசம் - அவற்றுள் இழிந்த குணம். தர்ம சித்தர்கள் - அறத்தையே நினைந்து இயற்று பவர்கள்.

18. இருநிதிக் கிழவன் - தேவருலகிலுள்ள நிதித் தலைவனாகிய குபேரன். தருவிறை - பஞ்சதருக்களுக்குத் தலைவனாகிய இந்திரன். அருவர் - நல்லுருவில்லாதவர் என்னும் பொருளது.

19. பங்கயமலர் - தாமரைமலர். பரிதி - சூரியன். மகிழ்நர் - காதலர். பொங்கு எழில் - மிக்க அழகு. புயல் - மேகம். பங்கம் இல் மக்கள் - குற்றம் அற்ற நன் மாந்தர்கள்.

20. வருணவாச்சிரம தன்மம் - (பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர) வருணங்கட்கும் பிரமசரியம், கிருகத்தம், வானப்பிரத்தம், சந்நியாசம் ஆகிய நான்கு ஆச்சிரமங்களுக்கும் ஸ்மிருதிகளில் விதித்த கடப்பாடுகள். ஆசாரம் - ஒழுக்கம்.

இவ்வணஞ் சிறப்பு வாய்ந்தே யேர்குடி யிருந்து நாளும்
அவ்விய மவித்த சிந்தை யருந்தவ ருடனே விண்வாழ்
எவ்வமில் புலவ ரெல்லா மினிதுகந் தேகொண் டாடும்
செவ்விய தொண்டை நாட்டின் றிறஞ்சொலற் கடங்கா தன்றே. (21)

மருப்பொலி வானோர் தங்கள் வளந்திகழ் பதியின் வாழ்ந்தே
இருப்பதி னழியா முத்தி யெய்துதற் கரிதா மென்று
விருப்பமீ தூர வந்து விளங்குறப் பிறத்தற் கெண்ணுந்
திருப்பதி நகரின் வண்மை தெரிந்தவா றினிச்சொல் வோமே. (22)

நாட்டுச் சிறப்பு உரைத்த அத்தியாயம் முற்றிற்று.

## 2. நகரச் சிறப்பு உரைத்த அத்தியாயம்.

பொன்னினு மணிக ளாலும் பொலிவுற வழகு வாய்ந்து
மின்னுரு மாட கூட வேதிகை யாக சாலை
மன்னிய தாளப் பந்தர் மடமடைப் பள்ளி சீரார்
அன்னசத் திரமிவ் வெல்லா மனந்தமீ தெழுந்து தோன்ற. (1)

---

21. ஏர்குடி - ஏற்றம் மிக்க குடிகள். அவ்வியம் அவித்த சிந்தை - அழுக்காறு என்ற தீக்குணத்தை ஒழித்த சிந்தையையுடைய. எவ்வம் - குறை. 'தொண்ட நாடு' எனவும் பாடம்.

22. மருப்பொலி வானோர் தங்கள் வளந்திகழ்பதி - மணத்தால் விளக்கம் மிக்க தேவர்கள் உறையும் விண்ணூராகிய அமராவதி. இச் செய்யுள் கம்பர் திருவாக்கில் போந்த - "எவ்வுலகத்தோ ரியாவரும்" (பால. கா. நகர்) என்பதன் கருத்து ஒப்புமை யுடையது.

1. மாடம், கூடம், வேதிகை, யாகசாலை, மடம், மடைப்பள்ளி அன்ன சத்திரம் - முதலிய இட விசேடங்கள் உரைக்கப்பட்டன. வேதிகை - திண்ணைகள். மடைப்பள்ளி - பாகசாலை. அனந்தம் - எண்ணற்றவை.

கன்னலுங் கமுகுஞ் செய்ய கதலியு மொளிர்வெண் முத்தால்
துன்னுதோ ரணமுந் தூய விதானமுந் துலங்க நேரில்
பன்னக மணிக ளாலு மிரவினும் பகலே போல
நன்னய மிகுந்து தோன்று நவையிலா வணங்க ளெல்லாம். (2)

மகரதோ ரணமி லங்கு வாயின்மண் டபநீள் கோயிற்
சிகரமா மணிவி மானந் திசையிரு நான்கு மின்ன
அகலும்வா னளவிச் சென்றே யமரரை யழைப்ப போல
மிகுமெழில் சிறந்த வெண்ணில் கேதன மிளிர்வ மாதோ. (3)

எண்ணிய பொருள்க ளெல்லா மிவணுள வென்று தேவர்
நண்ணியுள் ளுவப்பி னோடு நாடியே கொள்வ ரென்னின்
விண்ணவர் பதியை யிந்த வியனகர்க் குவமை யாக
மண்ணையர் புகல்வ ரல்லான் மற்றெவர் வழங்கு வாரே. (4)

கலிநிலைத்துறை.

ஆதி நான்மறை யவருறை யாலய மொருசார்
மாதி ரம்புகழ் மன்னவர் மாளிகை யொருசார்
தீதில் வாணிபர் செறிதரு செழுமனை யொருசார்
ஏத நீங்கிய சூத்திரி ரிருக்கைய தொருசார். (5)

---

2. கன்னல் - கரும்பு. கதலி - வாழை. தூய விதானம் - தூய்மையான மேற்கட்டிகள். பன்னக மணி - நாகத்தின் இரத்தின மணிகள். ஆவணங்கள் - கடைத் தெருக்கள்.

3. அமரர் - தேவர்கள். கேதனம் - கொடிகள்.

4. உள்ளுவப்பு - உள்ள மகிழ்ச்சி. விண்ணவர்பதி - அமராவதி. வியனகர் - இடன் அகன்ற ஊர். மண்ணையர் - அறிவிலார்; இரட்டுற மொழிதலான் மண்ணவருமாம்.

5. ஆலயம் - இருக்கைகள் என்னும் பொருட்டு. மாதிரம் - திசைகள். ஏதம் நீங்கிய சூத்திரர் - சூத்திரருள் சற்சூத்திரர் அசற் சூத்திரர் என்ற இரு பிரிவு உள்ளன ஆதலின் அசற்சூத்திரரின் நீக்குதற்கு இங்ஙனம் விசேடித்து உரைத்தார்.

நேமத் தாலுய ரந்தணர் நிச்சலு மியற்றும்
ஓமத் தூமமு மகிலிடுந் தூமமு மொன்றாய்
ஏமத் தாலுயர் மாளிகை மேனிலை யெங்கும்
போமத் தாற்புய லினமெனப் பொருந்திவந் துறங்கும். (6)

காற்றின் வேகமு மனஞ்செலுங் கடுப்புமுண் ணணித்
தோற்றி டுங்கதி பெறுந்துர கதநிரை யுடனே
மாற்ற ருந்திறன் மதமுறு புழைக்கைம்மா வணியும்
சாற்று நன்மணி சயந்தனங் களும்புடை தயங்கும். (7)

மனைக ளெங்கணு மங்கல முழவதி ரோசை
புனையு நீண்மறு கெங்கணும் புனைசிலம் போசை
பனிம லர்த்தரு வெங்கணும் பாண்செய்வண் டோசை
அனவ றஞ்செயு மிடமெலா மணிகொள்சங் கோசை. (8)

---

6. நேமம் - நியமம் - வருணக் கட்டளை. நிச்சலும் - நாள்தோறும். ஓமத்தூமம் - ஹோமகுண்டங்களினின்று எழும் நறும் புகை. அகிலிடு தூமம் - நறுமணத்திற்கெனப் புகைக்கும் அகில் புகை. ஏமத்தாலுயர் மாளிகை - பொன்னாலுயர்ந்து விளங்கும் மாளிகை. போமத்தால் உறங்கும் - போகின்ற அச் செயலால் வானிடத்திற் செல்லும் மேகங்கள் தம்முடைய இனம் ஆகிய மேக படலம் எனக் கருதி வந்து தங்கி உறங்கும் என்க. இது மயக்கவணி.

7. கடுப்பு - வேகம். 1 - 2 - அடி - வாயுவேக மனவேகங்களைக் காட்டிலும் மிக்க வேகம் பொருந்திய கதிகளையுடைய குதிரைகள் என்க. துரகதம் - விரைந்து செல்லுதற்குரியது எனக் காரணக் குறியால் குதிரைக்குப் பெயர். குதிரைகளுக்கு ஐங்கதி உண்டென்பர். மல்லகதி, மயூரகதி, வியாக்கிரகதி, வானரகதி; சசகதி, அன்றி ஆஸ்கந்திதம், இரேசிதம், வற்கிதம் முதலியனவுமாம். புழைக்கைம்மா - துளை பொருந்திய கையுடைய விலங்கு என யானைக்குப் பெயர். நிரை, அணி என்பன - வரிசைகளை யுணர்த்தும். சயந்தனம் - தேர்கள். புடை - பக்கங்கள். தயங்கும் - விளங்கும்.

8. மங்கல முழவு - சுப காலங்களில் கொட்டும் பேரிகை வாத்தியம். மறுகு - தெருக்கள். சிலம்போசை - மகளிர் காலணிகளின் ஓசை. மலர்த்தரு - மலர் மரங்கள். பாண்செய் வண்டு - பாடலைச் செய்யும் வண்டுகள். அனவறம் - அன்னதானம். சங்கோசை - சங்கின் ஒலி.

மாட மேனிலை மங்கையர் வதனநீ டொளியை
நாடி வானுலா வருநளிர் மதியென நினைந்து
பேடி னோடுள மகிழ்ந்ததி பிரியமாய் விரைவின்
ஓடி யேநிலா முகிகள்வந் தெங்கணு முலவும். (9)

வித்த கத்திரு நாயகன் விழவினை விரும்பிச்
சித்தர் விஞ்சையர் தேவர்கந் திருவர்கண் முதலா
எத்த லத்துறை வோர்களு மெய்தியே குழுமி
இத்த லத்தினுக் கொப்பிலை யெனுமுரை புகல்வார். (10)

ஏற்றம் விஞ்சுமப் பதியிடை யிருக்குநர்க் கென்றும்
தோற்றி டும்பய மென்பது தோற்றிடா தெவர்க்கும்
மாற்ற ருஞ்சினத் திறல்கொடு வந்தவண் மருவக்
கூற்று மஞ்சுவ னெனிலதன் பெருமையார் குணிப்பார். (11)

பேரு லாவுசெங் கதிர்மதி பிறங்குமந் நகர்க்கு
நேரு லாவருங் காலையி னீடொளி மழுங்கிச்
சீரு லாவுபன் மணிகளின் றிகழொளி செறிய
ஏரு லாவிய பன்னிற மிசைவர்நா டொறுமே. (12)

---

9. நளிர் மதி - குளிர்ந்த சந்திரன். பேடு - பெண் பறவை. நிலா முகிகள் - நிலா முகிப்புள்; வடமொழியுள் சகோரமெனப்படும். இவை நிலவின் கதிர்களை யுண்ணும் இயல்பு உடையன என்பர் ஆதலான் இவை மகளிர் முகத்தைச் சந்திரனென மயங்கி வந்தன என்க. இது மயக்கவணி.

10. வித்தகத் திருநாயகன் - வித்தகம் சிறந்த திருமகளின் தலைவன் ஆகிய சீநாராயணன். விஞ்சையர் - வித்தியாதரர். கந்திருவர் - தேவகான வித்தையிற் சிறந்தோர்.

11. எவர்க்கும் மாற்றருஞ் சினத்திறல் கொடுவந்து - பிறரால் விலக்குதற்கு அரிய கோபமும் ஆற்றலும் மேற்கொண்டு தோன்றி. கூற்றுவன் அஞ்சுதற்குக் காரணம் - ஆண்டு உள்ளார் மறந்தும் புறந்தொழா மாந்தர்களாதலின் அவர் பால் அணுகுதற்கு அச்சம் மேற்கொள்ளுதல் என்க - "திறம்பேல் மின்கண்டீர்" - (திவ்யப்ர).

12. செங்கதிர் - சிவந்த கிரணங்களையுடைய சூரியன். மதி - சந்திரன். உலாவருங்காலை - சூழ்ந்து வரும்போது. சூரிய சந்திரர்கள் வான் மண்டலம் சூழ்ந்து வருங்கால் இந்நகர்க்கு நேர் வந்தால் இந்நகர்ப் பன்மணி யொளியால் தம்மொளி மழுங்கிப் பல வேறு நிறம் பெற்று விளங்குவர் என்றவாறு.

மாணிக் கம்பெரு மாகத வயிரநன் னீலம்
ஆணிப் பொன்னினு மழகுற வணிமறு கெல்லாம்
ஓணத் தானடி தொழவுகந் துறுநிலத் தவர்கள்
காணிக் கைத்திரள் கொடுகலந் தெங்கணுங் கஞல்வார் (13)

மாத வத்தினர் மகிழ்வுடன் வாழ்த்தவா னமரும்
தாது லாமலர்க் குழலியர் சதிமுறை நடிப்ப
மோது துந்துபி முரசுகா களஞ்சின முழங்க
ஆத பத்திரங் கதலிகை யனந்தமாய் மிடையும். (14)

கீத வோதையுங் கிளர்முர சோதையும் பணில
நாத வோதையு நாரியர் சிலம்பினோ தையுநீர்
ஓத வோதையு மோவநின் றொலிப்பதை யல்லால்
வேத வோதையு முழங்குவ வீதிக ளெல்லாம். (15)

மருக்க மழ்ந்ததார் வானவ ரொடுபுவி மாக்கள்
திருக்க னிந்தொளி திகழணி பணியினந் துவன்றி
நெருக்கி யொன்றொடொன் றுராய்தலா னிலமெலாங் கிரணம்
விரிக்கு நன்மணி யுடன்கன கத்துகள் விளங்கும். (16)

---

13. ஓணத்தான் - திருவோணத் திருநாளிற்கு உரிய இறைவன் ஆகிய திருவேங்கட முடையான். காணிக்கை - கையுறைப் பொருள். கஞல்வார் - நெருங்குவார்.

14. தாதுலா மலர்க்குழலியர் - பூந்தாது பொருந்திய மலர்களை யணிந்த கூந்தலையுடைய தேவ மாதர்கள். சதிமுறை நடிப்ப - தாளச்சதிக்குப் பொருந்த நடனம் செய்ய. துந்துபி - முரசு. காகளம் - வாத்திய விசேடங்கள். ஆதபத்திரம் - வெய்யில் மறையான குடைகள். கதலிகை - கொடிச் சீலைகள். அநந்தம் - எண்ணிக்கை யில்லாதன.

15. கீத ஓதை - பாடல் ஒலி. பணிலம் - சங்குகள். நாரியர் - பெண்கள். சிலம்பினோதை - சிலம்புகளின் ஓசை. நீர் ஓத ஓதை - நீர் பாய்தலான் உண்டாம் ஓசை.

16. மரு - மணம். திருக்கனிந்து - செல்வம் சிறந்து. துவன்றி - நெருங்கி.

மீத லத்துவா ழுரம்பையர் மென்மலர்க் குழலின்
தாத ளைந்தெழுந் தளிக்குலந் தாவிமொய்ப் பதினல்
பூத லத்துறை மகளிர்பூங் குழல்களும் பாரி
சாத நன்மலர் வேரியே பொலிவுறத் தழைக்கும். (17)

எழுசீர்விருத்தம்.

மீதலத் தமுத மயின்றதி போக
மேவிவீற் றினிதிருப் பவரும்
தீதறத் திகழிப் பதியிடை யொருசார்ச்
செந்துவாய்ச் செனித்தன்மேன் மையெனுக்
காதலித் துறைவர் கருதுமப் பதியிற்
பிறப்பது கனமகஞ் சததா
ருதாத் துடனே புரிந்தவர்க் கலது
மற்றையோர் யாவர்க்கு மரிதே. (18)

ஏற்றமா மாதி மறைப்பொரு டெளிந்தோ
ரெண்வகை யோகமுந் தேர்ந்தோர்
சாற்றுமூன் றனலும் வளர்த்தவ ரரிய
தவம்புரிந் தவர்களென் பெல்லாம்
நோற்றவ ரைந்து வேள்வியு முடித்தோர்
நுவலுமெவ் வறஞ்செய்தோ ரெனினும்
போற்றியித் தலத்தை நினைத்திலார்க் கில்லை
பொருவிலாப் பேரின்ப வீடே. (19)

---

17. மீதலம் - வானுலகு. அளிக்குலம் - வண்டின் கூட்டம். வான மாதர் கூந்தலின் மொய்த்துப் பூந்தாது அளைந்த வண்டினங்கள் நிலவுலக மாதர் கூந்தலினும் மொய்ப்பதனல் அவர்கள் கூந்தல் தேவருலகப் பாரிசாத மலர் மணம் கொள்ளும் என்றார்.

18. மீதலத் தமுதம் - தேவருலகிலுள்ள அமிருதம். இத்தலத்து ஏதேனும் ஒருயிர்ப்பிராணியாய்ப் பிறத்தலையும் தேவர் விரும்புவரென்றால் மக்களாக ஈண்டுப் பிறத்தற்குப் பல யாகஞ் செய்த பலன் வேண்டுமென்றார்.

19. எண்வகை யோகம் - அட்டாங்க யோகம். அவை இயமம், நியமம், பிராணயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பன. மூன்று அனலும் வளர்த்தோர் - தக்கிணக்கினி, காருகபத்தியம், ஆகவனீயம் என்பன. ஐந்து வேள்வி - பஞ்சமகா யக்ஞம் - அவை பிரம்ம, தேவ, மாநுஷ, பிதிர், பூத யக்ஞங்கள்.

உயிரெலாந் தந்து காத்தழிக் கின்ற
வொருதனி முதலவ னிவண்வந்
தியையுற விருந்தா னென்பதை யறிந்தே
யாமுமங் கெய்துவோ மென்று
நயமுற வவண்வாழ் நித்திய முத்தர்
தம்மொடு வைகுந்த நகரம்
உயர்விசும் பகன்று விரைவின்வந் தமர்ந்த
தொத்ததவ் வொளிகொண்மா நகரே. (20)

நகரச் சிறப்பு உரைத்த அத்தியாயம் முற்றிற்று.

## 3. நாரதர் திருப்பாற்கடல் அடைந்த அத்தியாயம்.

அறுசீர்விருத்தம்.

பூமலிந் ததிகமேன்மை பொருந்துநை மிசமென் றோதும்
நாமமுற் றோன்ற சீரார் நல்வனத் திடையின் மேவும்
காமமற் றுயர்ந்த சௌன காதியர் சூத னென்னு
மாமுனிக் கன்பு சான்று மலரடி சிரமேற் சூடி (1)

மாதவர்க் கரசே சன்ம மரணமாம் பிணியை வீட்டி
ஓதுதற் கரிய தாய வுயர்பத முதவு மாயோன்
பூதலத் துகந்து வைகும் புண்ணியத் தலங்க டம்மில்
ஏதமற் றுயர்ந்த தான மெதுவெனச் சூதன் விள்ளும். (2)

முன்னமே ழிசையாழ் கொண்ட முனிபிரு குவினை நோக்கிச்
சொன்னதை வியாத னென்னுந் தொன்முனி யெனக்குச் சொன்னான்
அன்னதை யானே நுங்கட் கறைகுவல் கேண்மி னென்னாத்
தன்னுளே மகிழ்ந்து சூதன் றனெடுத் துரைப்ப தானான். (3)

---

20. நித்தியர் - நித்ய சூரிகள். முத்தர் - முக்தான்மாக்கள். வைகுந்த நகரம் - திருமாலின் பரமபதத் திருவிருக்கை.

1. நைமிசம் - நேமி சம்பந்தமுடையது.

2. ஏதம் - குற்றம். விள்ளும் - சொல்லுவான்.

3. ஏழிசை யாழ்கொண்ட முனி - சரிகம பதநி என்ற ஏழுவகைச் சுரங்களின் நிலைகொண்ட வீணை வல்ல முனிவர் நாரதர்.

பேரறி வுடைய ஞருகும் பிருகுமா முனிவன் மேனுள்
நாரத முனியைப் போற்றி நான்முக ஞனுங் காணுச்
சீரியல் பொருள்கள் யாவுந் தெரிவுறு மனத்தா யிந்தப்
பாரினி லோங்கு மேன்மைப் பதியெது பகரென் ருனல். (4)

அவ்வுரை வினவி நல்யா ழுருந்தவ னவிலுஞ் சீர்சால்
திவ்விய வநேக தீர்த்தஞ் சிறந்ததெப் பவமும் பாற்றிச்
செவ்விய பயன்க ளெல்லாந் திறனுற வளிப்ப தென்றும்
அவ்விய மவித்த சிந்தை யருந்தவர் புகழ்வ தாமால். (5)

இந்திர ஞேடு வானே ரிருடிக ளெவருஞ் சூழத்
தந்தியா னனன்வே ளோடுஞ் சந்திர மௌலி வேதன்
சந்ததம் பணிவ தாகிச் சகலமங் களமு நல்கும்
கந்தமார் பொழில்கள் சூழ்வேங் கடமலே யென்றுேன் றுண்டால். (6)

நல்லியல் வேத ஞேடு நக்கஞ தியருங் கூடி
எல்லேயி லூழி கால மிமைவுற விருந்தே வேறு
பல்லிட மனஞ் செலாமே பத்தியான் மிகவ ருந்திச்
சொல்லினு முடியா தந்தத் தொன்மலே மகிமை தானே. (7)

அப்பெருந் தகைய சீர்சா லம்மலே முடியின் வாசத்
துப்புறழ் கமல மேனேச் சொன்மலர் பலவற் றுாலும்
ஒப்பறு மனநே மிப்புள் ளொடுகாண் டங்க ளாலும்
செப்புதற் கரிய தாய சிறப்பமைந் துளது மாதோ. (8)

மேதகு நதிக ளெல்லாம் விரும்பிவந் தேத்த வென்றும்
ஏதமின் றுயர்கோ னேரி யென்னுநன் ஞமம் பெற்ற
சீதநீர்க் கரையின் வாசத் திருமக ளுடன்வை குந்த
நாதனுள் ளுவந்து தோன்றி நாடொறும் வசிக்கின் றுளுல். (9)

---

4. அறைகுவல் - சொல்லுவேன்.

5. பவம் - பிறப்பு. பாற்றி - ஓட்டி. அவ்வியம் - அழுக்காறு.

6 தந்தி ஆனனன் - யானே முகத்தையுடைய கணபதி. வேள் - முருகன். சந்திர மௌலி - சந்திரனே முடியில் தரித்த சிவன். வேதன் - பிரமன். கந்தம் - மணம்.

7. நக்கன் - சிவன்.

8. அனநேமிப்புள் - அன்னம், சக்கரவாகப்புள். காண்டம் - நாரை.

9. சீதம் - குளிர்ச்சி.

என்றிசை யாழ்கைக் கொண்டோ னிசைத்தல்கேட் டிடும்பை யெல்
வென்றிடு பிருகு வென்னு மெய்ப்முனி பரம னாகும் [லாம்
மன்றலந் துளவ மாலன் மறைமுத லுயிர்க டோறும்
நின்றவ னழியா முத்தி நிலையின னாதி யாவோன். (10)

என்னகா ரணத்தி னாலங் கேய்ந்தன னெனக்க டாவக்
கன்னலி னமுதிற் பாகிற் கனிவுறு மமுதப் பாடல்
கின்னரர் மயங்க யாழிற் கிளர்நரம் பிசைக்குங் கான
நன்னய முணர்ந்த சிந்தை நாரத நீத்தோன் கூறும். (11)

எங்கணு நிறைந்த வாதி யீசனை யமுதிற் றோன்றும்
மங்கைதங் ககலத் தானை வணங்கிடு மார்வத் தாலே
பொங்குபா லாழி நோக்கிப் போயினேன் மேனா ளங்கண்
தங்குநற் சுவேதத் தீவின் றன்னெழில் பலகண் ணுற்றேன். (12)

விண்ணினை யளப்ப நீண்டு விளங்கிய பாரி சாதத்
தண்ணறும் பூவின் வேரி தலைமயக் குறவார்ப் போடு
கண்ணகன் றலைக்கு நீள்பாற் கடனடு வெண்ணில் கோடி
வண்ணநற் கதிர்கள் வீசு மணிப்பெருந் தூண்க டோன்ற (13)

மண்டப மாட கூட மாளிகை கோபு ரங்கள்
விண்டொடர் மான மெல்லாம் விளங்குசெம் மணியும் பொன்னும்
கொண்டமைந் துலப்பி லாத கோடிகூ ரியர்வந் தென்னக்
கண்டன னதனை யானுங் கருத்தினி துவந்து மாதோ. (14)

---

10. இடும்பை - துயரம். மன்றல் அம் துளவம் மால் - மணம் மிக்க துளசி மாலை யணிந்த திருமால்.

11. கன்னல் - கரும்பு. கின்னரர் - யாழ் வாசிப்பில் சிறந்த தேவ வகுப்பினர். நீத்தோன் - துறந்த பெரியோன்.

12. அமுதிற் றோன்றும் மங்கை - அமிர்தத்துடன் உதித்த திருமகள். அகலத்தானை - திருமார்பினை யுடைய திருமாலை. பாலாழி - திருப்பாற் கடல்.

13. வேரி - மறுமணம். ஆர்ப்பு - ஆரவாரம்.

14. மானம் - விமானங்கள். உலப்பிலாத - முடிவில்லாத.

பத்திசெய் கலுழன் சேஞ பதிமுத லளவி லாத
நித்திய வருக்கர் சூழ நிகரறு சுகன்மார்க் கண்டன்
சுத்தபா ரத்து வாசன் றாயநற் புண்ட ரீகன்
வித்தக யாஞ்ஞ வல்கன் வீரமா ருதிசா பாலி (15)

இன்னமும் பற்பன் முத்த ரெழுந்திருந் திருகை கூப்பி
முன்னுறு மறையா லேத்த முளரியா சனத்தோ னக்கன்
பொன்னகர்க் கிறைவன் மற்றும் போந்தபுத் தேளி ரெல்லாம்
துன்னியுண் ணினைந்து நாவிற் றுதித்துமன் பொடு சேவிக்க (16)

எழுசீர்விருத்தம்.

மேதகு சனக சனந்தனே முதலோர்
விருப்பொடு பூசனை புரியச்
சீதவெண் மதிய மெண்ணிலாக் கோடி
சேர்ந்தெனத் திருமுக மிலங்க
மாதர்மென் கமல நறவெனக் கருணை
வழிந்தெழு நயனங்க டிகழ
ஆதவன் கதிர்போல் விளங்குநன் மணிச்சூட்
டாவிறை யெனுமணை மீதே (17)

முரண்டரு முலகி னலைகடன் முகந்து
முற்றுசூன் முதிர்ந்தெழு முகில்போல்
இரண்டரை யிலக்க மியோசனை கரிய
வெழிற்றிரு மேனிநீண் டிலங்கப்

15. கலுழன் - கருடாழ்வான். சேனபதி - விஷ்வக்சேனர். நித்திய அருக்கர் - நித்திய சூரிகள்.

16. முளரியாசனத்தோன் - தாமரை மலரை யிருக்கையாக உடைய பிரமன். நக்கன் - சிவன். பொன்னகர்க்கு இறைவன் - தேவருலகின் தலைவனாகிய இந்திரன். புத்தேளிர் - தேவர்கள்.

17. கமல நறவு என - தாமரைத் தேன் போல. நயனம் - திருக்கண்கள். ஆதவன் - சூரியன். அரவு இறை - பாம்புகட்கு அரசன் ஆகிய ஆதிசேடன். அணை - படுக்கை.

18. முரண்தரும் - மாறுபாடு கொண்ட. சூல் முதிர்ந்தெழு முகில் -

புரண்டுறு மூழி பலவொரு கணமாய்ப்
போகுறப் பள்ளிகொண் டழகாய்த்
திரண்டெழு தனப்பொன் பூமிமா நீளை
திருவடித் தாமரை வருட (18)

கண்வழுக் குறுதண் சோதிசெய் விலையில்
கவுத்துவ மணியொளி சுதுவத்
திண்வரை யுரத்தின் வலப் புறத் தெழிலார்
சீவற்ச மெனுமறுத் திகழத்
தண்வரு முயர்வை சயந்தியா மாலை
தயங்கிடப் பிரமசூத் திரந்தான்
விண்வரு தடித்தின் கொடியெனத் திரண்ட
வெற்றியம் புயங்களில் விளங்க (19)

நோக்கிய குறிப்பி னுட்பம துணர்ந்தே
நொடியினிற் பகைவர்தந் தலையை
நீக்கிடும் விசைய நேமிவாள் சார்ங்க
நெடுங்கதை வலம்புரி யென்னும்
ஊக்கம துடைய வாயுதங் கரங்க
ளைன்கினு மொளியுறத் திகழ
மேக்குயர் பசும்பொன் னுலகுளோர் பொழியும்
வெறிகமழ் மலர்மழை மலிய (20)

---

கருப்பெருகி எழுந்த மேகம். பொன் பூமி மாநீளை - இலக்குமியும், பூதேவியும், நீளாதேவியும்.

19. கவுத்துவமணி - கௌஸ்துபம் என்னும் அரிய தெய்வமணி. வரை உரம் - மலை போன்ற திருமார்பு. பிரமசூத்திரம் - மார்பின் முப்புரி நூல். தடித்தின் கொடியென - மின்னற் கொடி போல.

20. நொடி - நொடித்தற் பொழுது. நேமிவாள் சார்ங்க நெடுங்கதை வலம்புரி - சுதர்சனம் என்னும் சக்கராயுதம், நாந்தகம் என்னும் வாளாயுதம், சார்ங்கம் என்னும் வில், கௌமோதகீ என்னும் கதாயுதம், பாஞ்சசன்னியம் என்னும் சங்கு. திருக்கரங்கள் நான்கினில் பஞ்சாயுதங்கள் அமையுமாறென்னை யோவெனின் வில் இடத்தோளின் அமைவதனால் ஏனைய நான்கும் கரங்களில் அமைந்தன என்க. பொன்னுலகோர் - விண்ணுலகு பொன்னுலகெனப் படுதலின் விண்ணவர். வெறி - நறுமணம்.

இத்திற மெவரும் வியப்புற விருந்த
விணையில்பா லாழிநா யகனை
எத்தலங் களுக்கு மிறைவனை யெங்கு
மியைவுறு முயிரனைத் தினுக்கும்
புத்தியோ டிட்ட காமிய மெவையும்
பொருந்துறத் தந்தழி யாத
முத்தியு மளிக்கு முதல்வனைக் கண்டென்
மொய்ம்மயிர் சிலிர்த்துட றடித்து (21)

அகத்திலா னந்த மிகுந்தெழுந் தாடி
யரியநான் மறைகொடு துதித்தே
மிகுத்தவுள் ளன்பு மலிந்தெழப் படிமேல்
வீழ்ந்துவீழ்ந் தேபணிந் தெழுந்து
முகிழ்த்திரு கரனுஞ் சிரத்தின்மே லேந்தி
முன்னரங் கடைந்துநின் றேனைச்
சகத்திர நாம னருள்கனிந் தொழுகுந்
தாமரைக் கண்ணினு னோக்கி (22)

அறுசீர்விருத்தம்.

வாராய் கமலன் மகனேயிம் மண்ணோ டுலக மனைத்தையுநீ
பாரா தொன்று மிலையதனாற் பாரி லெனக்குத் திருவிளையாட்
டோரா யியற்றத் தகுமெழிலா யியையு மிடம்யா துரையெனயான்
நேரா யிறைஞ்சி யருட்கடலே நிமலா மூலப் பரஞ்சுடரே (23)

எழுசீர்விருத்தம்.

பன்னருங் கோடி யண்டங்க ளவையும்
படைத்திடந் துண்டுமிழ்ந் தளந்த
தன்னிக ரில்லாச் சோதிநீ யறியாத்
தலமுமொன் றுளதுகொ லெனினு

---

21. பாலாழி நாயகனை - திருப்பாற்கடல் நாதனை. இட்ட காமியம் - விரும்பிய பொருள்கள். அழியாத முத்தி - பரமபதம்.

22. படி - பூமி. இருகரனும் முகிழ்த்து - இரண்டு கைகளும் குவித்து. சகத்திர நாமன் - ஆயிரம் திருப்பெயர் உடையான்.

23. கமலன் மகனே - பிரம புத்திரனே.

24. " உலகங்கள் எவற்றையும் படைத்தும் தோண்டியும் உண்டும் உமிழ்ந்து வெளிப்படுத்தியும் திருவடிகளால் அளவிட்டும் புரந்த சோதியே "

நன்னய மிகுத்த வன்பொடென் மீது
    நாட்டம்வைத் தருளிச்செய் ததற்குன்
பொன்னடிக் கடியே னறிந்தமாத் திரமே
    புகலுவன் கேளெனப் புகழ்ந்தே. (24)

உலககா ரணனே மறைகளுக் கெட்டா
    வொருவனே யடிகளுள் ளுவப்ப
இலகெழி லுசித மிகமலி தான
    மேதெனி னிறுதுபொற் பாத
மலரினி லுதித்த கங்கையின் றென்பான்
    மருவிய தண்டக வனமே
தலமதிற் சிறந்த தகலமோர் மூன்று
    சதவியோ சனைதழைத் தோங்கும். (25)

தென்றிசை யுவரிக் குத்தா குடக்காய்ச்
    சிறந்தகீழ் கடற்குமேல் புறமாய்
ஒன்றுட னுன்கி யோசனைக் கப்பா
    லொப்பறு மெழில்படைத் திலங்கு
மன்றலம் புவன மத்தியத் தலமா
    மதிற்பலர் மனத்தினுன் னுமம்
என்றுமுண் ணினைந்துந் துதித்திறைஞ் சியுமே
    யிருப்பவ ராகையி னாலே (26)

பரமனே கருணை மலிபெருங் கடலே
    பகாரு மவ்வனத் தடையும்
பிரமனே யாதி பிபீலிகை யீறாய்ப்
    பிறங்கிய சுராசுரர் மனிதர்
மிருகமா சுகமூர் வனநிற்ப வாகி
    விளங்கிய வுயிர்க்கெலா மிரங்கித்
தருமமோ டத்த காமிய மோக்கந்
    தரும்பொருட் டாயெழுந் தருளி (27)

---

என்று புகழ்ந்து இந்த லீலா விபூதியில் நீ அறியா இடமுமுண்டோ வென இறைஞ்சி. நாட்டம் வைத்து அருளிச் செய்தது-திருக்கண் சாத்தியருளியது.

26. உவரி - கடல். உத்தரகுடக்கு - வடமேற்கு.

27. பிபீலிகை - எறும்பு. சுராசுரர் - சுரர் அசுரர். ஆசுகம் - பறவை. தருமமோடத்த காமிய மோக்கம் - அறம் பொருள் இன்பம் வீடு என்ற உறுதிப் பொருள்கள்.

அவ்விட மடிகள் வசித்துற லழுக
தாமென யான்சொலப் பரமன்
செவ்விதி னெனைப்பார்த் தெழிலுற மிருந்த
செம்பியன் றருமக வாகி
எவ்வமி றிகிரி மன்னனு யென்மே
லியையுறும் பத்தனு யினிமேல்
கவ்வையங் கடல்சூ ழுலகினிற் றோன்று
மவனையாங் காத்தல்கா ரணமாய் (28)

செவிக்கமு தெனயாழ் நரம்பினி திசைக்குந்
திருக்கறு முனிவநீ நவிலும்
புவித்தலத் துயருந் தானமே விரும்பிப்
போயவண் வசித்திட வுளத்தே
உவப்புற நினைக்கின் றேமெண வுரைத்தா
னென்றுயர் நாரத முனிவன்
தவச்சிறப் புடைய பிருகுவுக் கன்பாற்
சாற்றினன் வியப்புற வெனவே. (29)

சூதமா முனிவன் பவளவாய் விண்டு
சொல்லினன் சௌனகா தியரா
மேதகு முனிவர் கருத்துடன் கேட்டே
மெய்புள கித்தக மகிழ்ந்து
சீதர னவண்வந் தடைந்தமை யெல்லாந்
தெருளுறக் கிருபைசெய் தெமக்கிங்
கோதுதி யெனவே பின்னுமம் முனைவ
னுவந்துள முரைப்பதா யினனால். (30)

---

28. அடிகள் - பெருந்தகையீர் என்னும் பொருட்டு. செம்பியன் - சிபிவம்சியாகிய சோழ வரசன். எவ்வம் - குறை. திகிரி மன்னன் - ஆணையாகிய சக்கரத்தையுடைய அரசன். கவ்வை - ஒலி.

29. திருக்கு அறு - மாயை அற்ற.

30. சீதரன் - திருமகள் கேள்வன். முனைவன் - முன்னவனாகிய முனிவன்.

கறங்குதெண் டிரைப்பா லாழியி னுளுங்
 கண்முகிழ்த் தரியயோ கத்தால்
உறங்குமா தவன்ற னுந்தியம் போதி
 னுதித்தவ னுறைதரு முலகில்
பிறங்குமிக் கதையை யீரொன்ப தெனமுன்
 பேசிய புராணங்க டம்மில்
நறுங்கலை யுணர்ந்தோர் புகழ்பிர மாண்ட
 நவையற நவின்றிடு மாதோ. (31)

நாரதர் திருப்பாற்கடல் அடைந்த அத்தியாயம் முற்றிற்று.

## 4. திருமலைத் தோற்றம் உரைத்த அத்தியாயம்.

அறுசீர்விருத்தம்.

வெண்டிரைப் பாலின் வேலை வித்தக னநந்தாழ் வானை
முண்டக மலர்க்க ணோக்கி முகமலர்ந் தினிது கூறும்
தொண்டரி லுனைப்போற் சீர்த்த தொண்டர்க ளெனக்கு வேறு
கண்டில னதனு லிங்கோர் கவ்வையுண் டுரைப்பக் கேளாய். (1)
வீணைநா ரதன்போந் தென்பால் விளம்பிய மாற்ற மெல்லாம்
ஏனுலா மேனி யாய்கேட் டிருந்தனை யேயவ் வண்ணம்
பேணியான் சென்று மேவப் பெட்டனன் நீயு மாங்கோர்
சேணிலா நிறுவுங் கோடு திகழ்பறம் புருக்கொ ளென்றான். (2)

31. உந்தியம்போது - திருநாபிக் கமலம். நவை - குற்றம். பிரமாண்டம் - பிரமாண்ட புராணம்.

1. வேலை - கடல். அநந்தாழ்வான் - ஆதிசேடன். முண்டகம் - தாமரை. கவ்வை - உலகுரை.

2. ஏண் - வலிமை. பெட்டனன் - விரும்பினேன். கோடு - சிகரம். பறம்பு - மலை.

என்றசொற் சிரமேற் கொண்டே யெண்ணறு முவகை பூத்து
மன்றலார் பூங்காச் சூழு மலையென வவத ரித்து
வென்றியந் திகிரி யாய்நீ விரும்பிநே மித்த தானத்
தொன்றினே னடியன் மேன்மை யுறவென்றன் சிரத்தின் மீதே (3)

திருமகள் பூமி நீளா தேவிய ருடனே யன்பாய்
மருவியே நின்றுன் செய்ய மலரடி விரும்பிப் போற்ற
வருமவர் வேட்ட யாவு மாசற வளித்து மற்றும்
பொருவறு மளவி லாத புண்ணிய தீர்த்த மெல்லாம் (4)

தூயவா னந்தத் தோடு தோன்றுமா வருள்செய் கென்ன
ஆயிர நாமத் தோனு மவ்வா மளித்த பின்னர்
நேயபூ மாது பார்மி னீளைமா னிவரை யன்பாற்
சேயதா மரைநோக் கத்தாற் றிருவருண் மல்கி நோக்கி (5)

சேடிய ருடனே நீவிர் சென்றரைக் கணத்தி னுதி
சேடன்வா னுயர்ந்த கன்ற சிலம்பென நின்ற வாங்கண்
நாடிநீர் நடமி னென்ன நவின்றவட் சார நின்ற
ஈடகல் சேனை நாத னெழின்முக மினிதி னோக்கி (6)

விதியர னிந்தி ராதி விட்புலத் தொழும்பர் சூழத்
துதிபெறு தவர்க ளோடு துனைந்துசென் றெமது சேடன்
மதிதவழ் சிகர மேவு மலையென நின்ற வந்தில்
எதிரறு முவகை யோடு மெய்துமி னெனநே மித்தான். (7)

---

3. உவகை பூத்து - மகிழ்ச்சி கொண்டு. மன்றலர் பூங்கா - மணம் பொருந்திய பூக்களையுடைய சோலை. வென்றி அம்திகிரியாய் - வெற்றி யுடைய அழகிய திருச்சக்கரப் படையையுடைய திருமாலே! என விளி. 3, 4, 5 செய்யுட்கள் குளகம் ஆதலின் ஒருசேரப் பொருள் கொள்க.

4. வேட்ட - விரும்பிய பொருட்கள். பொருவு - ஒப்பு.

5. ஆயிர நாமத்தோன் - 'சகஸ்ர நாமன்' எனக் கூறும் வழக்குப் பற்றி வந்தது. பூமாது - திருமகள். பார்மின் - பூமிதேவி. நீளைமான் - நீளாதேவி.

6. சிலம்பு - மலை. அவண் - அவ்விடம். ஈடு அகல் - ஒப்பு அற்ற. சேனை நாதன் - சேனை முதலியார்.

7. விதி - பிரமன். அரன் - உருத்திரன். இந்திராதி - இந்திரன் முதலியோர். விண்புலம் - வானுலகு. தொழும்பர் - அடியவர். தவர் - தவசியர். துனைந்து - விரைந்து. அந்தில் - அவ்விடத்தில். (இடைச் சொல்).

அஞ்சிறைக் கலுழன் செய்ய வடலெருத் திலங்க நீல
மஞ்செனப் பொலிந்து தோன்றி மனநனி பரிந்து சீதம்
விஞ்சியே மெலிய ராகி விரைமன் றல் கமழ்வா ராகி
எஞ்சலி லொளிசான் மேனி யெழிலொடு மியைவ ராகி (8)

எவ்விடத் தெந்த ஞான்று மியல்புறச் சென்று கிட்டிச்
செவ்விய தொண்டி யாவுஞ் செய்ம்முறை யினிதி ழைற்றும்
எவ்வமில் வியாள வேந்த னெழின்மலை மிசைப்பொன் பூமான்
திவ்விய நீளை யென்னுந் தேவியர் தணவா தேய (9)

எண்ணுமுக் கண்ண னெண்க ணிமையவன் வலாரி யேனோர்
உண்ணினைந் தன்பாற் போற்ற வுடங்குசென் றணைவோர் தம்மைக்
கண்ணருள் சுரந்து ஞான்றுங் காதலித் தெதிர்நோக் குற்றுங்
கண்ணலஞ் சீனிவாச னமர்ந்தினி திருந்தா னன்றே. (10)

வேறு.

செவிக்கினிய வமிழ்தமெனச் செவ்வியயாழ்
முனியிசைத்த செஞ்சொற் கேளாத்
தவப்பெரிய பிருகுமுனி தானவில்வான்
சேடனெனுஞ் சைலந் தன்னில்
உவப்புடைய சிரமெதுகொ லுடலெதுகொல்
வாலெதுகொ லுரக வேந்தன்
புவிக்கணினம் மலையான புதுமையையும்
புகலெனநா ரதனுங் கூறும். (11)

---

8. அஞ்சிறைக் கலுழன் - அழகிய சிறகுகளையுடைய கருடாழ்வான். அடல் எருத்து - வலிமை பொருந்திய கழுத்து. நீலமஞ்சு - கரிய மேகம். தோன்றி - தோன்ற எனத் திரிக்க. மனம் நனி பரிந்து - உள்ளத்துள் மிக்க அன்பு கொண்டு. விரை மன்றல் - மிக்க மணம். பின் 9-ம் திருவிருத்தத்துள் வரும்; "பொன், பூமான், திவ்விய நீளை என்னும் தேவியர் - மனநனி பரிந்து......இயைவாராகித் தணவாது ஏய" எனக் கூட்டிப் பொருள் காண்க.

9. எவ்வம் இல் வியாளவேந்தன் - குறைவு இல்லாத பாம்புகட்கு அரசனாகிய ஆதிசேடன். இவர் அடிமை யியல்பு முதல் இரண்டடிகளில் உள்ளது. "இது சென்றாற் குடையாம்" என்ற ஆழ்வார் அருளிச் செயல் பற்றி வந்தது. தணவாது - பிரியாமல்.

10. முக்கண்ணன் - சிவன். எண்கண் இமையவன் - பிரமன். வலாரி - இந்திரன். உடங்கு - உடன். ஞான்றும் - நாள் தோறும். உம் - தொறுப் பொருட்டு.

11. சைலம் - மலை. உரகவேந்தன் - அரவுகட்குத் தலைவன் ஆகிய ஆதிசேடன்.

எண்சீர்விருத்தம்.

திடமுடைய பனகவிறை திகழுஞ் சோதிச்
சென்னியெனுந் தானமதே சீரா ரும்வேங்
கடமலைவா லுத்தரத்திற் சிறந்த தான
கனமருவுஞ் சீசைல மெனும்பேர் பெற்ற
தடியவர்கட் கிட்டமெலா மளிக்குஞ் சீர்சா
லமலனெனு நரமடங்கன் மூர்த்தி வாழும்
இடமகோ பிலமஃதே யுடலா மென்ன
விசைத்தெழிலு ரதன்பினரு மியம்ப லுற்றான். (12)

அகத்தியனே முதலான வருந்த வத்தோ
ரம்மலையி னருவிகளிற் றோய்ந்தே நாளும்
மகத்தலமென் றுவந்துவெகு கால மாக
மனமலையா தைந்திடக்கித் தவஞ்செய் கின்றார்
சகத்திரநா மன்றனது தேக மேயச்
சரியிதிரு மலையுயர்நா ராய ணன்றன்
மிகுத்தவெழி லுருவவநந் தாழ்வான் றானே
மேதகுநன் மலையாகி நின்றான் மன்னோ. (13)

அந்தவெழிற் றிருமலையை யுகந்தே யன்பா
லகமகிழ்ந்தா னந்தமடங் காது பொங்கி
வந்துவமை யரும்பெரிய நித்தர் முத்தர்
வாணிபதி யுமாபதிவா சவனே யாதி
பந்தமறு புலவர்சித்தர் முனிவர் யோகர்
பல்லோரு மாங்குசரா சரங்க ளாகி
வந்தனைசெய் தெக்காலு முறைவ ரென்னின்
வழுத்தவெவர் திறமதியின் மதிக்குங் காலே. (14)

---

12. பனகம் - பன்னகம் என்பதன் இடைக்குறை; பாம்பு என்பது பொருள். உத்தரம் - வடக்கு. கனம் - மேகம். நரமடங்கல் - நரசிங்க மூர்த்தி. இக் கவியுள் ஆதிசேடன் சிரபாகமே வேங்கடமென்றும், வால் பாகமே சீசைலமென்றும், உடல் பாகமே அகோபில மென்றும் கூறியது.

13. ஐந்து அடக்கி - பஞ்சேந்திரியங்களையும் அடக்கி.

14. நித்தர் - நித்ய சூரிகள். முத்தர் - முத்தி பெற்றவர்கள். வாணி பதி - சரசுவதி தேவியின் கணவன் ஆகிய பிரமன். உமாபதி - உமாதேவி யின் கணவன் ஆகிய சிவன். வாசவன் - இந்திரன். சராசரங்கள் - அசை யும் பொருளும் அசையாப் பொருளும்.

என்றியாழ் முனிவனங்கட் பிருகு வென்னு
மிருந்தவனுக் கிசைத்தனனென் றிருநூல் யாவும்
நன்றறியுஞ் சூதமுனி செவ்வாய் விண்டு
நாகருல கத்தமுது தோற்பத் தீய
வென்றதிறற் சௌனகா தியர்தங் காதின்
வேட்கையொடு விளம்பினனிக் காதை யெல்லாம்
துன்றுபுகழ்ப் பிரமாண்ட மெனும்பேர் பெற்ற
தூயபுரா ணஞ்சாலச் சொல்லு மாதோ. (15)

திருமலைத் தோற்றம் உரைத்த அத்தியாயம் முற்றிற்று.

## 5. சீநிவாசன் நாராயண முனிக்கு அருள்செய்த அத்தியாயம்.

தேன்றுளிக்கும் பசுந்துளவ வணியன் மார்பன்
றிருமகளுக் கினிதண்ட மெண்ணில் கோடி
ஈன்றளிக்கு மாதிதிரு மலைமேற் செய்த
வினியவிளை யாட்டெவரு மியம்ப லாற்றார்
ஆன்றளிக்கு நிலையான பெரியோய் நாயே
னறியவுரை யெனும்பிருகுக் கன்பாய்ப் பட்ட
கான்றளிர்ப்ப நரம்பினிசை யேழும் பாடுங்
கடவுண்முனி கனிவினெடுங் கழறு மம்மா. (1)

---

15. யாழ் முனிவன் - நாரதன். இருந்தவன் - பெரிய தவசி. நாகருலகத்தமுது - தேவாமிருதம். தீயவென்ற திறல் - தீமையாகிய குற்றங்களை வென்ற திறம்.

1. அணியல் - மாலை. இனிதன் - இனியவன். பட்ட கான் தளிர்ப்ப - உலர்ந்து போன காடும் பசுமையாய்த் தழைக்க. நரம்பின் இசை ஏழும் - யாழ் இசைச் சுருதிகளாகிய சரிகம பதநி என்ற ஏழும். கழறும் - சொல்லுவான்.

மாண்டகுமா மறைப்பொருள்க ளனைத்துந் தேற
வடித்துணர்நா ராயணனு மறையோன் மேனாள்
நீண்டயுக மாதிபரா பரமாய் நின்ற
நின்மலநா ராயணனை நோக்கிப் போற்ற
வேண்டியுல கிற்றிரிந்து மாழ்கிக் காணான்
விரைமலரோ னைத்தவத்தான் விரும்பி யேத்தி
ஆண்டவனைத் தரிசனைசெய் தஞ்ச லித்தே
யரிபதநான் கண்டுதொழ வருளென் றானால். (2)

அவ்வரைகேட் டபிராமி பதியு மெய்ம்மை
யந்தணன்வாண் முகநோக்கி யநாதி யாகிச்
செவ்விபெறு முலககா ரணனாய் நின்றோன்
றிருவினொடு முகந்துயர்சே டாச லத்தின்
எவ்வமுறு பிறவிதணி திருக்கோ னேரி
யெழிற்கரையி னினிதிருந்தா னுகை யாலத்
தெய்வமலை மேற்றவஞ் செய்தி யென்று
செப்புதலு மம்மொழியைச் சிரமேற் றாங்கி (3)

பொருவிறிரு மலையடைந்து சீர்செய் சாமி
புட்கரிணிக் கொழுங்கரையம் புலன டர்த்தித்
திருவினொடு நிராமயனை யுளத்தி ருத்தித்
திட்டியைநீ ணாசிமுனை நிறுவி யோகம்
மருவிநெடும் பகலளவும் புரிய வாங்கே
மகிழ்ந்தனந்த கல்யாண குணனு மாயோன்
கருணைமடை திறந்தகண்ண னெஞ்சு வந்து
கனகமலை யெனும்பெருமெய்க் கழலுன் மீதே (4)

---

2. மாழ்கி - மயங்கி. விரைமலரோனை - மணம் பொருந்திய நாபிக் கமலத்தில் தோன்றிய பிரமதேவனை. அரிபதம் - திருமாலின் திருவடிகள்.

3. அபிராமிபதி - சரசுவதியின் நாயகனாகிய பிரமன்.

4. நிராமயன் - நோயில்லான் - என்ற காரணத்தால் இறைவன் திருப் பெயர். திட்டி - (திருஷ்டி) பார்வை. கனகமலை - பொன் மலை.

மின்னுடனஞ் சனமேக மெழுந்த தென்ன
விரைமலர்ச்செந் திருவினுடன் விளங்கித் தோன்றித்
தன்னிகரி னேமிவளை யிரவி யிந்து
தாழுவொளி தவழுவுயர் புயங்க ளுன்கின்
மன்னெழிலங் கதஞ்சால வொளிகள் வீச
வனமாலை கவுத்துவமா மணிவில் வீச
நன்னயயோ கத்தவனாய் விளங்கு சீர்நா
ராயணனு மறையவன்மு னண்ணி னானே. (5)

அந்தணனு நோக்கியக மகிழ்ச்சி யுள்ளே
யடங்காது பொங்கவெழுந் தாடிப் பாடிக்
கந்தமல ரவனரனே முதலா யுள்ள
கடவுளர்க்கு மிருடிகட்கு மியாவர் கட்கும்
அந்தரியா மியுமாகிச் சீவ கோடி
யனைத்தினுக்கு முயிர்க்குயிரா யமர்ந்து தோன்றுச்
சிந்துதிரைப் பாலாழி யமருஞ் சோதி
திருமகிழ்நன் செம்பதும மலர்க்க ணானே. (6)

முத்தொழிலு மினிதியற்றி யுலகுக் கெல்லா
முதற்பரமா யீறில்பரம் பொருளாய் நின்ற
நித்தனே யடியவர்கட் கருள்செய் தூய
நின்மலனே வேதமுத லெவருங் காணுக்
கத்தனே நாயேன்றன் விழிமுன் பாகக்
கருணையுட னெழுந்தசெய்ய கமலை மார்பா
அத்தனே யெனப்பலவாய்த் துதித்தன் போடு
மடிபணிந்தா னந்தபர வசமா னானே. (7)

---

5. அஞ்சன மேகம் - கரிய மை போன்ற மேகம். நேமி வளை - சக்கரமும் சங்கும். இரவி இந்து - சூரியனும் சந்திரனும். இவை நிரனிறை. அங்கதம் - தோள்வளை. வில் - ஒளி.

6. கந்தம் - வாசனை. அந்தரியாமி - உயிருள் உறைபவன்.

7. முத்தொழில் - படைத்தல் அடைத்தல் துடைத்தல். கமலை மார்பா - திருமகள் தங்கும் திருமார்பை யுடையவனே.

**அறுசீர்விருத்தம்.**

நறைகமழ் துளபப் பைந்தார் நாரணன் மகிழ்வி னோடு
மறையவன் றன்மே லன்பு மலிந்தெழ நோக்கி யென்னை
இறையென வுணர்ந்தே யோக மியற்றுமுன் விருப்ப மெல்லாம்
அறையெனச் சிரத்தின் மீதே யஞ்சலி யத்த னாகி (8)

மூலமே நினது பாத முளரியை யன்பி னோடு
ஞாலமேற் கண்டு போற்ற நாயினேன் விரும்பி யெங்கும்
சாலவே யுழந்தி யாக்கை தான்வருந் தியும னந்த
காலமே கழிந்துங் கண்ணிற் காண்கில னாகி நொந்தேன். (9)

போதனைத் தவத்தான் மிக்க பூசனை புரிந்த வன்றான்
ஓதுறு மாற்றத் தாலிங் குற்றியோ கத்த மர்ந்துன்
சோதிசெய் வடிவைக் கண்டு தொழுதிணை சொல்ல லாகா
மேதகு தொண்ட னானேன் மேவினி யினிய தென்னோ. (10)

மண்ணினி னுறைவோ ரென்போல் வருத்தமுற்றி யோகஞ் செய்ய
எண்ணினு முடலி னாற்ற லிராதவர்க் காகை யாலே
தண்ணளி பெறுமா றெண்ணில் சராசரங் களுக்கும் வேட்ட
தண்ணலே யளித்திங் கென்று மகல்கிலா திருத்தி யென்றான். (11)

பின்னரு மறைவ லோனும் பெரியவிப் பொருப்புக் கென்றும்
என்னுடைப் பெயர்பூண் வேண்டு மெனவடி யிறைஞ்சி நின்றான்
தன்னையுள் ளுவந்து நீதான் சாற்றிய படியே யார்க்கும்
இன்னறீர்த் தருள்கோ னேரி யென்னுமித் தீர்த்தந் தன்னில் (12)

---

8. நறை - தேன். இறை - பரம் பொருள். அறை - சொல். அஞ்சலியத்தன் - குவித்த கையன்.

9. மூலமே - ஆதிமூலமே. பாதமுளரி - பாதங்களாகிய தாமரை. உழந்து - வருந்தி. யாக்கை - உடம்பு.

10. போதன் - பூவினிடத்திற் பிறந்துள்ளோனாகிய பிரமன்.

11. ஆற்றல் - வலிமை. தண்ணளி - குளிர்ந்த அன்பு.

12. பொருப்பு - மலை. பூண் - பூணுதல். இன்னல் - துன்பம்.

விதியா னிந்தி ராதி விண்ணவர் பூவி னாளும்
வதிபவர் யாவ ரேனு மகிழ்ந்துவந் தாடி யென்னைத்
துதிசொலிப் பணிவா ராயிற் றொலைவில்வெம் பவங்கள் செய்ய
கதிரெதி ரிருள்போ னீக்கக் கருதியதி யாவு மீந்தே (13)

அழிவிலா துயருந் தான மாங்கதி யடைவிப் பேனென்
றொழிவிலா துயரு மந்த வோங்கற்கம் மறையோன் போம்
அழகுலா வருஞ்சீர் நாரா யணகிரி யெனும்பேர் சாற்றிப்
பழமறை யுணர்ந்தோ னுக்கும் பரமமாங் கதியை யீந்தான். (14)

எண்ணரும் பவங்க ளெல்லா மிரவிமுன் னிமம்போற் போக்கும்
தண்ணறு மலர்தி ளைக்குஞ் சாமிபுட் கரிணி தன்னில்
உண்ணயந் தாடு வோர்கட் குறுபலன் போலப் பூவில்
புண்ணியந் தவமி யாகம் பொருவிலேன் பிலைத ராவால். (15)

எனப்பெரி யோர்க ளாயோ ரிசைக்குறு பெருமை வாய்ந்த
கனச்சிறப் புறுகோ னேரிக் கரையினி லடியர்க் கெல்லாம்
மனத்தினி னினைத்த யாவும் வழங்கியே மலர்மேல் வந்த
வனப்புறு தேவி மார்பின் மகிழ்வுறப் பணிவில் வீச (16)

ஆனந்த நிலைய மானத் தமர்ந்தினி திருந்தா னென்று
தேனுந்து தொடையாழ் வல்ல செழுந்தவன் பிருகு வென்னும்
ஞானந்த வாத சிந்தை நன்முனிக் குரைத்தா னென்று
தானந்த மாதி யாகச் சாற்றினன் சூதன் மாதோ. (17)

---

13. விதி - பிரமன். அரன் - சிவன். பூவில் நாளும் வதிபவர். நில உலகில் என்றும் வசிப்பவர். செங்கதிர் எதிர் இருள்போல் - சூரியன் முன் இருள் கெடுதல் போல.

14. ஓங்கல் - மலை.

15. இமம் - பனி. ஆடுவோர் - முழுகுவோர்.

16. வனப்பு - அழகு.

17. ஆனந்த நிலைய மானம் - ‘ஆனந்த நிலையம்’ என்ற திருப்பெயர் பெற்ற விமானம். தேன் உந்து தொடையாழ் - இனிமை பெருகும் இசையை யுடைய யாழ்.

பேசரும் பெருமை சார்ந்த பிரமாண்ட மெனும்பேர் பெற்ற
மாசறு புராணந் தன்னின் வளம்பெறச் சொலுமி தெல்லாம்
காசினி யதனிற் கேட்போர் கருதிய யாவும் மெய்தித்
தேசுற வாழ்ந்தே பின்னர்த் திருவிறை பதஞ்சேர் வாரே. (18)

சீநிவாசன் நாராயண முனிக்கு அருள்செய்த அத்தியாயம் முற்றிற்று.

## 6. இடபாசுரனைக் கொன்ற அத்தியாயம்.

### கலிவிருத்தம்.

பின்னரு நாரதன் பிருகுக் கோதிய
கன்னியந் துளவினன் காதை யாமமு
தின்னமு மெமக்கரு ளென்று சௌனகர்
சொன்னது கேட்டுமெய்ச் சூதன் சொல்லுமால். (1)

தேனுலாங் கடிபொழிற் சேட வெற்புறை
சீனிவா சன்னொரு தினத்தின் காலையே
சேனைநா தன்முக நோக்கித் தீமைசெய்
ஈனமாம் விலங்குட னிதமி றுட்டரை. (2)

வெல்லவிவ் வனத்திடை வேட்ட மாடுவான்
செல்லவுட் குறித்தன நீநின் சேனையோ
டொல்லையின் வருகென வுணர்த்தி யைங்கதி
வல்லமா மீக்கொடு வழீஇக்கொண் டானரோ. (3)

---

1. கன்னி - தூய்மை. காதையாம் அமுது - சரிதம் ஆகிய அமிர்தம்.

2. கடி - மணம். சேட வெற்பு - சேஷாசலம். இதம் இல் துட்டர் - நன்மை யில்லாத துட்டத் தன்மையுடைய வனசரர்.

3. வேட்டம் - வேட்டை. ஒல்லையின் - விரைவின். ஐங்கதி - பஞ்ச கதி. குதிரைச் செலவின் பெயர்கள் - மல்ல மயூர வானர வியாக்கிர சச முதலிய கதிகள். மா - குதிரை.

தீயவேல் சூலம்வா டிகிரி யேமுதல்
ஆயவெம் படையுட ளுவந் தாங்கியே
மேயதா னைக்கடல் விரைந்து பின்வரத்
தூயசே னுபதி துனைந்து போயினன். (4)

மடங்கல்வெம் புலிகிரி மகிட மெண்குவெங்
கடங்கலுழ் கரிமுதற் கடுவி லங்கினம்
அடங்கலு முடல்சிதைந் தாவி பொன்றுறத்
தடங்கையா யுதங்கொடு சாடி னுர்களே. (5)

அளவிலா விலங்கக லாம லேவலை
வளைவுற விடுத்துவில் வளைத்துச் சீருற
மிளிருறு மெண்ணிலா விசிகம் வீசியே
களைதல்செய் தனர்பெருங் கால னுணவே. (6)

சென்றகல் வனமெலாந் திரிந்தோர் செவ்விதா
மன்றலஞ் சோலையின் வருமக் காலையிற்
குன்றென வுயரிய கொடிய ளுறுபூங்
கொன்றையன் பத்திமை குறித்த நெஞ்சினுன். (7)

திருத்கு சீசைல மெனச்சி றந்திடும்
பொருப்பதின் றக்கணப் புறத்தி னுடொறும்
இருப்பவ னிடபனென் றிசைக்கு நாமத்தான்
செருக்குடைத் திண்டிற லசுரன் சீரிலான். (8)

---

4. திகிரி - சக்கரம். ஆவம் - அம்பறாத் தூணி. தானைக் கடல் - சேனையாகிய பெரும் பரப்பு.

5. மடங்கல் - சிங்கம். கிரிமகிடம் - மலை எருமை. எண்கு - கரடி. வெங்கடம் - மிக்க மதம். கரி - யானை. சாடினுர் - வதைத்தார்.

6. விசிகம் - அம்பு. காலன் காண - யமனும் தன் தொழிலின் மிக்க தென்று உள்ளம் வெட்குமாறு.

7. பூங்கொன்றையன் பத்திமை - சிவன்பாற் கொண்ட பக்தி. பொருப்பு - மலை.

8. செருக்கு - கருவம்.

கந்துக மேற்கொடு கானில் வேட்டமாய்
வந்தமா வினையறி யாது மானுடா !
இந்தமா வனமென திங்ஙன் யாவரும்
சிந்தையின் வெருக்கொடு சேர லார்கணீ (9)

சற்றுமுட் பயமிலா தெனது சார்பின்சார்
உற்றனை தருக்கொளீஇ யுனையோ ரம்பினால்
எற்றுவே னெனச்சினந் தெய்து வான்றனை
அற்றமில் பெருங்குணத் தமல னோக்கியே (10)

தன்னுடன் வருங்கொலைச் சவரர் மன்னனாய்
மன்னுசம் பரன்றனை வருக வென்றழைத்
தன்னவன் றனையெதிர்த் தமர்செய் கென்றலும்
சென்னிதாழ்த் தெழுந்தனன் றிசைந டுங்கவே. (11)

கதமுறப் படைக்கலங் கையி னேந்திவெம்
மதமுட னிகல்பொரு வடவைத் தீயனான்
விதலய னாகவெம் பகழி வீசினன்
எதிர்குந ரிலாத்திற லிசைகொள் வீரனே. (12)

வீசுமா சுகந்தனை விலக்கித் தானவன்
ஏசிலம் பெண்ணிலா தேவ விப்பரி
சூசல்போ லுலவியங் கொழிவி லாமிகு
பூசல்க ளிருவரும் புரியுங் காலையே. (13)

---

9. கந்துகம் - குதிரை. வெரு - அச்சம்.

10. தருக்குக் கொளீஇ - செருக்குக் கொண்டு. அற்றம் - குறைவு. அமலன் - மலங்களினின்று முற்றும் நீங்கிய இறைவன்.

11. சவரர் - வேட்டுவர். சென்னி - தலை.

12. கதம் - கோபம். வடவைத்தீ - கடல் நடுவில் உள்ள பெருந் தீ. விதலையன் - நடுக்க முடையவன். பகழி - அம்பு.

13. ஆசுகம் - அம்பு. தானவன் - அசுரன். பூசல் - சண்டை.

அருந்திற லசுரா னு மற்ற நோக்குறீஇ
வருந்திட வேடுவர் மன்னே யங்கிபோற்
பொருந்திய சாங்களிற் பொருது கந்துகத்
திருந்தமான் முனஞ்சினந் தெய்தி னனரோ. (14)

அறுசீர்விருத்தம்.

ஆதி நாயகனுஞ் சேனைக் கதிபனை நோக்கி யிந்தப்
பாதகன் மாய வெய்ய பகழிக ளுதவுவா யென்
ருேதலுங் கடிதின் முன்ன ரோடியவ் வசுரன் றன்மேன்
மோதுற வனந்த வாளி முறைமுறை தொடுத்தார்த் தானே. (15)

தொடுத்தவெம் பகழி யெல்லாந் துகளுற வசுர னூறிக்
கடுத்தெணில் விசிக மூழிக் கார்மழை பொழிவ தேய்ப்ப
விடுத்தலு மவைக ளியாவும் வெயிலெதிர் பனிபோ லோடத்
தடுத்தெதி ரொருவ ரொவ்வாத் தானைகா வலனுஞ் சீறி (16)

ஆலமா மெனவும் வெய்ய வசனியே றெனவுந் தீய
காலனு மெனவு மூழிக் கடுங்கன லெனவும் வானின்
மேலெலாம் புகைகண் மண்ட விண்ணவர் விழிகள் போர்ப்பச்
சாலவார் கணைகள் வல்ல தனுவளைத் தேவி னானே. (17)

இருவரு மிவ்வா ருக வெதிர்ந்ததிர்ந் தேகாண் போர்கள்
வெருவவத் திரங்க ளாலும் வெய்யசத் திரங்க ளாலும்
உருமென வெய்தெ றிந்தே யுலகுகம் பிக்க வானின்
மருவுறு புலவர் யாரு மகிழ்ந்ததி சயித்தார் மன்னோ. (18)

---

14. அற்றம் - சோர்வு. அங்கி - நெருப்பு. சாம் - அம்பு. கந்துகம் - குதிரை.

15. அநந்தவாளி - எண்ணற்ற அம்புகள்.

16. துகள் - தூள். விசிகம் - அம்பு. தானை காவலன் - சேனை முதலி.

17. ஆலம் - நஞ்சு. அசனியேறு - வலிய இடி. தனு - வில்.

18. அத்திரம் - கைவிடுபடை. சத்திரம் - கைவிடாப்படை. உரும் - இடி. கம்பிக்க - நடுங்க. புலவர் - தேவர்.

காதக வசுரன் கற்ற கடுந்தொழி லியாவுஞ் சேனை
நாதன்முன் காட்டி யாற்றான் நாமினி யெதிரி னின்றாற்
சாதனிச் சயமென் றெண்ணித் தன்பெரு மாயை யாலே
மீதுற வெழுந்தே யார்க்கும் விழிக்கிலக் காகா வண்ணம் (19)

சந்தவிருத்தம்.

மங்குலி னூடி மறைந்து கொடும்பல மாயைவி ளைந்தொளிரும்
புங்க முறுங்கணை சங்கையி லாவகை பொழியவு மெம்பெருமான்
அங்கையி னேமியை யங்கவ னங்க மறும்படி யேவுதலும்
செங்கதிர் கோடி யெழுந்த தெனும்படி திகிரி யெழுந்ததுவே. (20)

விண்டல மீதுற வண்டக டாகமும் விண்டிடு மென்னவெரி
மண்டிட வேபிர சண்டமு ழக்கொடு மண்டல மாய்வரவே
கண்டவர் பீதியொ டெண்டிசை பாறினர் கண்டக னூடிமறை[ரோ.
கொண்டலு மேயன லுண்டதவ் வசுரன்மெய் கொண்டந டுக்கம (21)

ஆதிப ராபர னழிய தேயிது வல்லது வேறிலையென்
பாதக மாமுடல் சேதமு றும்முயிர் பாகதி மேவுமவன்
பேத வுருத்தெரி யாதென்மி குத்திடு பேதைமை யாலெதிரே
மோதி யெதிர்த்தது தீதல யான்மிக முன்செய் தவப்பயனே (22)

என்று நினைந்தெழி லிறைவனை யெய்தி யிறைஞ்சியெ ழுந்தெதிரே
நின்று சிரந்தனி லங்கை குவித்தொளிர் நேமிய னேயரியே
இன்றெ னெடும்பவ மொருவுற நன்னர்க ளெய்துநன் றுளனவே
ஒன்றிய சிந்தையி னுணர் வோடுல குண்டவ னைப்புகழ்வான். (23)

---

19. காதகம் - வஞ்சனை.

20. மங்குல் - மேகம். புங்கம் - தொடர்ச்சியாய அம்புகள். சங்கை - எண்ணிக்கை. நேமி திகிரி - சக்கரப் படை.

21. அண்ட கடாகம் - அண்டத்தின் மேலெல்லை. எரி - தீ. மண்டலம் - வட்டம். பீதி - அச்சம். பாறினர் - ஓடினர். கண்டகன் - கொடிய அசுரன்.

22. பேதவுரு - வேறு வடிவம்.

23. பவம் - பிறப்பு. ஒருவுற - நீங்க. நன்னர் - நலம்.

ஓதுல கங்கள னைத்தையு முண்டுமு மிழ்ந்து மிடந்துமளந்
தாதியு மந்தமு மாகி யகண்டமு மாகியு யிர்க்குயிராய்
நீநிந டாத்தி யடைந்திடு மன்பர் நினைத்தவெலா மருளும்
வேதமு டிக்கணின் மேவி நடம்புரி வித்தக னேநமவே. (24)

பங்கயன் யாமழு வோனுடன் விண்ணவர் பதிமுத லாமமரர்
புங்க முனித்தலை வோர்தவ யோகியர் பூசனையா னெடிய
சங்கையில் காலம் வருந்தவு மேயவர் தம்மு னுருவடிவை
இங்கென் விழிக்கெதிர் கண்டு பணிந்த வெனக்கிணை யாவர்களே. (25)

அற்புத னேயுன தாழியி னாலென தங்கமெ ருக்கியநான்
ஒப்பறு மாகதி மேவவ ளித்து முயர்ந்திடு மிந்தமலைக்
கெற்பெய ரெய்தவ ரந்தரு கென்ன விசைத்து நறுங்கமலப்
பொற்புறு பாதம்வ ணங்கி மகிழ்ந்துயர் பூவைவ ணன்புகல்வான். (26)

கலிநிலைத்துறை.

மரண முற்றிடுங் காலெனைப் பரனென மதித்தே
கரண மைம்புலன் வழிபுகாக் கருத்தொடுந் துதித்துச்
சரண டைந்தமை யுவந்தொளிர் தனிப்பதந் தந்தேன்
கிரண நன்மணி கிளருமிக் கிரிக்குமுன் பெயரை (27)

இட்ட னன்னிட பப்பொருப் பெனவினி யுலகோர்
கட்டு ரைப்பரென் றறைதாக் கருநிற வவுணன்
மட்ட றப்பெரு குவகைபுண் மலியவே நின்றான்
கிட்ட ரும்பர மாங்கதி கிட்டிய தெனவே (28)

அந்த வேலையி னூழியங் கனலென வாழி
வந்த வன்றலை யிருபுயம் வேறுற மண்மேல்
சிந்த வானவர் பூமழை சிந்தின ரார்த்தார்
கந்த வார்குழன் மாதரார் களிநட மகவ. (29)

---

24. இடந்தும் - தோண்டியும். நம - வணக்கம்.

25. பங்கயன் - பிரமன். மழுவோன் - சிவன். விண்ணவர் பதி -

26. எருக்கிய ஒழித்த. பூவைவண்ணன் - திருமால்.

27. கரணம் - மனம் புத்தி முதலிய அந்தக்கரணங்கள்.

28. பொருப்பு - மலை.

29. ஊழியங்கனல் - உலக முடிவுக் காலத்துப் பெருந் தீ. கந்தம் - மணம்.

பாவ காரிபட் டனனெனும் பரிவினுற் சாலத்
தேவ துந்துபி முழங்கின வறநடங் குயிற்ற
நோவ கன்றன மினியென முனிவர்க ளுவலப்
பூவ ருந்திரு மார்பனும் புந்திமிக் குவந்தே (30)

ஈண்டி யஞ்சலித் தெதிருறுங் கடவுளர் தமக்கு
வேண்டு நல்வரம் வியப்புற வளித்துமுன் போல
நீண்டு யர்ந்தசே டாசல நேர்ந்தினி திருந்தான்
மாண்ட வத்தினர் யாவரு மகிழ்வுற மாதோ. (31)

கலிவிருத்தம்.

அன்றுதொட் டிடபா சலமெ னப்பெயர்
நின்றதம் மலைக்கென நிகழ்த்தி நோறு
மன்றலந் தொடையல்யாழ் வல்ல மாமுனி
பின்றையும் பிருகுமா முனிக்குப் பேசுவான். (32)

எழுசீர் விருத்தம்.

முந்திய திரேதா யுகந்தனின் மிகுந்த
முரணுடைக் கேசரி யென்போன்
அந்தகாந் தகனை யுளத்தினி விருத்தி
யருமக வாசையி னுலே
சிந்தையை வேறு வழிசெலா தடக்கிச்
செயவருந் தவமியற் றிடலும்
வந்தவன் றபசை யுகந்தெதிர் நின்றான்
மலைமகண் மருவுநா யகனே. (33)

முன்பொளி திகழ நின்றமுக் கணனை
முதிர்தவன் விழியினு னேக்கி
அன்பொடு வலம்வந் தடியிணை யிறைஞ்சி
யாகமப் படிதுதித் திடலும்

30. பாவகாரி - பாவச் செயலாளன். நடம் குயிற்ற - நடனம் செய்ய. 31. ஈண்டி யஞ்சலித்து - திரண்டு வணங்கி. 32. மன்றல் அம் தொடையல் - மணம் உடைய அழகிய மாலை. 33. அந்தகாந்தகன் - யமனை முடித்த சிவன். மகவு - குழந்தை.

உன்பெருந் தவத்தை யுவந்தனன் விருப்ப
முரையெனக் கேசரி சிரத்தின்
றன்பெருங் காங்க ளன்பொடுங் குவித்தே
தாழ்ந்துபின் சாற்றலுற் றனனால். (34)

வெற்றிசெய் வலிய பராக்கிர மஞ்சேர்
வீரனு யாவரா லும்வீ
வற்றநற் புதல்வன் வேண்டுமென் றறைய
வைம்முக னுண்மக விலையோர்
சிற்றிடைச் சிறுமி யளித்தன னவட்குன்
சிந்தையின் படியொரு புதல்வன்
உற்றிடுஞ் சிலகா லத்தின்மே லென்றுங்
குரைத்துயர் கைலைபுக் கனனே. (35)

இந்துவே ணியன்வந் தீந்தநல் வரத்தை
யெண்ணியே கேசரி யென்போன்
சிந்தையுண் மகிழ்ந்தே யிருந்திடு நாளிற்
சிலதினங் கழிந்தபின் னவனுக்
கந்தமுற் றியவோர் கனிபிறந் திடலு
மஞ்சனை யெனும்பெயர் சாற்றிச்
சந்ததங் கண்ணுக் கிமையென வருகிற்
சார்ந்துகாத் தேவளர்த் தனனால். (36)

இனியநன் மழலை மிழற்றியு நகைத்து
மிருந்துடன் றவழ்ந்துமுன் னடந்தும்
நனிமிகு பருவ மடைந்திட வொருநா
ணங்கைதன் னலமெலா நோக்கிக்
கனிவுற விவளுக் கொத்தநன் மகிழ்நன்
யாரெனக் கருதும்வே லையின்வாய்
தனைநிக ரறுமோர் வானரத் தலைவன்
சார்ந்துகே சரிமுன்சாற் றுவனால். (37)

---

35. வீவு - மரணம். ஐம்முகன் - சிவன். 36. இந்து வேணியன் - சந்திரனை முடியில் தரித்த சிவன். 37. மழலை - மென்மொழி. கனி - கன்னிகை.

உனதரு கிருக்குங் கனியினை யெனக்கிங்
குதவெனக் கேசரி நமது
தனையளுக் கிவனே தகுமென வெண்ணிச்
சம்மதித் தவன்றனக் கெழிலாய்
இனியநன் மணஞ்செய் தளித்தன னெவரு
மின்புறப் பூமக ளுவப்பப்
நணியறந் தழைப்ப விரதியு மதனு
நாணவவ் விருவருஞ் சிறந்தே (38)

தடங்கிரிப் புறத்தும் வனங்களி னிடத்துந்
தண்மலர்த் தடநதி யோடை
இடங்களி னெங்கு மதனநூல் வழியே
யின்பமுற் றளவருங் காலம்
மடங்கலே றெனுமவ் வானரத் தலைவன்
மனைவியா மஞ்சனை யுடனே
அடங்கலா மோக வாரியி னாழ்ந்தே
யகமகிழ்ந் தினிதிருந் தனனால். (39)

என்றுயர் கடவுண் முனிபிரு குவினுக்
கிசைத்தன னெனக்கொடு மோகம்
வென்றிடுஞ் சூத மாமுனி யென்னும்
விழுத்தவன் நைமிசா ரண்யத்
தொன்றிய தவர்கட் கமுதெனச் செவியி
னுகுத்தன னிவைபிர மாண்டம்
நன்றறி வுடையோர் தெளிவுற விரித்து
நவையற நவின்றிடு மாதோ. (40)

---

38. தனயள் - புதல்வி. பூ மகள் - நில மகள். 39. மடங்கல் ஏறு - ஆண் சிங்கம். அடங்கலா - அடங்காத. மோகவாரி - காதற் கடல்.

இடபாசுரனைக் கொன்ற அத்தியாயம் முற்றிற்று.

## 7. அஞ்சனாதேவி தவநிலை உரைத்த அத்தியாயம்.

கலிவிருத்தம்.

நற்றவப் பிருகுமா முனிக்கு நாரதன்
பிற்றையு மொழிகுவான் பெலங்கொண் வானரக்
கொற்றவன் றன்னொடுங் கூடுஞ் செய்யவாய்ச்
சிற்றிடை யஞ்சனை யென்னுஞ் சீரினாள். (1)

இத்தனை காலமு மிடைவி டாதெழிற்
சித்தச நூல்வழி சேர்ந்தி ருந்துநாம்
புத்திரர் பெறவில்லை யென்று புந்தியுண்
மெத்தவுந் துயர்கொடு மெலிவுற் றாளரோ. (2)

தருமதே வதைமிகு தயைகொ டேயிவள்
மருவிய துயரினை மாற்று வேனெனாத்
தெருவினி லொருகுறத் தெரிவை போலவே
உருவுகொண் டணுகின ளுலகு வப்பவே. (3)

குறிசொலு மவளெனக் கரத்திற் கோலொடும்
சிறுமருங் கினிலொரு சேய்கொ டேயரு
குறமகிழ்ந் தாசன முதவி நல்லுரை
அறையவங் கிருந்துகந் தருள்வதா யினாள். (4)

முல்லையி னரும்பெனு முறுவ லாய்மக
வில்லையென் றலக்கண்மிக் கெய்தி னையுனக்
கெல்லையில் வலியுடை மகவொன் றெய்துமென்
சொல்லைமெய் யெனமனந் துணிந்து கோடியால். (5)

அகத்துழு தறிவுடை யணங்க னையெழு
சகத்திர வருடமா சாரத் தோடெழின்

---

1. பிற்றை - பின்பு. கொற்றவன் - அரசன். செய்ய - சிவந்த. 2. சித்தசநூல் - காமநூல். புந்தி - புத்தி. 3. தெரிவை - பெண். 4. கோல் - மந்திரக்கோல். மருங்கு - இடுப்பு. சேய் - குழந்தை. 5. முறுவல் - பற்கள். அலக்கண் - மனத்துயர். மகவு - குழந்தை. கோடி - கொள்ளுவாய்.

மிகுத்தவேங் கடமலை மேவி யிந்தியம்
செகுத்தருந் தவம்புரி யென்று செப்பினாள். (6)

மனத்தினா னினைத்ததை வழுத்தி னாளென
வனத்துறை குறமகள் வாய்மை நம்பியே
கனத்தபொற் பணியணி கலையும் வேண்டுவ
அனைத்துமஞ் சனைகொடுத் தனுப்ப வேகினாள். (7)

அக்குற மகள்புறத் தகன்ற காலையே
சக்கர முட்டன்வலம் புரியுந் தாங்குமெட்
டக்கர னுறைதிரு வசல நாடியே
புக்கன ளயர்விலாப் பொருவில் சிந்தையாள். (8)

விண்ணவர் சித்தர்சாத் தியர்வித் தியாதரர்
புண்ணிய முனிவர்கிம் புருடர் கின்னரர்
எண்ணிலர் சூழவந் திருந்து நாடொறும்
திண்ணிய செய்தவஞ் செய்யுந் தானமாம். (9)

ஆகாய கங்கையி னணுகித் தோய்ந்தெழுந்
தேகாக மோடுமிந் தியங்க ளைந்தவித்
தாகாரம் பவனமா யரியை யுன்னியே
மேகார மனையவ டவத்தின் மேயினாள். (10)

கலித்தெழு மாரிநீ காரம் வேனலால்
சலித்திடா தெழுசகத் திரசம் வச்சரம்
பலித்திட நின்றருந் தவத்தைப் பண்ணலும்
ஒலித்தெழு வாயுவுள் ளுவப்பை நண்ணியே (11)

---

6. அணங்கு - தெய்வப் பெண். சகத்திரம் - ஆயிரம். ஆசாரம் - ஒழுக்கம். இந்தியம் - இந்திரியங்கள். செகுத்து - அடக்கி. 7. வாய்மை - வாய்ச்சொற்கள். பொற்பணி - பொன்னாபரணம். கலை - ஆடை. 8. வலம்புரி - சங்கு. எட்டு அக்கரன் - திருவட்டாக்கர மந்திர நாமத்தை யுடைய திருமால். அசலம் - மலை. அயர்வு - தளர்ச்சி. 10. ஆகாய கங்கை - தீர்த்தம். ஏகாகம் - தனிமை. பவனம் - வாயு. மேகாரம் - மயில். 11. மாரி - மழை. நீகாரம் - பனி. வேனல் - வெய்யில். சம்வச்சரம் - ஆண்டு. உள்ளுவப்பு - உள்ள மகிழ்வு.

அஞ்சனைக் குரியவா கார மாயவள்
கஞ்சமொத் தொளிர்தருங் கையி னூடொரேம்
எஞ்சலி லிரதநற் கனிகொ டீந்திட
வஞ்சியு நுகர்ந்தருந் தவத்தின் மன்னுநாள் (12)

சம்புவம் பிகையொடத் தலத்தைச் சார்ந்துளம்
இன்புற வசித்திட வெதிரோர் வானரம்
அன்புடன் மந்தியோ டாட நோக்கியே
தன்பெரு மனநசை தழைப்ப வுன்னினன். (13)

இவ்வித நாமகிழ் வெய்து வோமெனச்
செவ்விய மலைமக ளோடு செப்பியாங்
கெவ்வமில் கவியுரு வெய்தி மோகவாழ்
பவ்வமுட் படிந்தனு பவிக்குங் காலையே (14)

ஒழுகுவீ ரியத்தையோ ரிலையினுட் கொடே
அழகுறு மஞ்சனு தேவி யங்கையின்
முழுதுண ராசுகன் கொடுக்க முன்னுகர்
பழமிதென் றருந்தினள் பழிப்பில் சிந்தையாள். (15)

எண்ணிய தவஞ்செய்நாட் கெல்லை யெய்துறல்
நண்ணின விதுவரை நவையொன் றின்றியே
பெண்ணிவள் புரிதவம் பெரிது நன்றென
விண்ணவர் முதலினோர் வியக்குங் காலையே (16)

கருப்பமுற் றகடுமீக் கனக்க வேமனம்
நெருப்புறை தளிரெனக் கருகி நீடுமிப்
பொருப்பினிற் றவத்தினைப் புரிந்த தன்றியோர்
விருப்பமுற் றிலனிவை விளைந்த தேதென (17)

---

12. கஞ்சம் - தாமரை மலர். இரதம் - இன்சாறு. வஞ்சி - பெண். 13. சம்பு - சிவன். மந்தி - பெண் குரங்கு. நசை தழைப்ப - காம இச்சை எழ. 14. எவ்வம் - குறைவு. கவியுரு - குரங்கு வடிவு. ஆழ் பவ்வம் - ஆழமான கடல். 15. ஆசுகன் - வாயு தேவன். 16. நவை - குற்றம். 17. அகடு - வயிறு. மீக் கனக்க - மேல் பெருக்க. பொருப்பு - மலை.

சிந்தையுட் டுயர்கொடு திகைத்தி ருந்துழி
அந்தர வாணியங் கறைகு வாண்மினே
உந்தனன் வயிற்றிடை யுறைந்தி டுங்கரு
இந்துவே ணியனிதற் கைய மின்றரோ. (18)

பிறந்திடு வானவன் பெருமை தன்னையான்
அறிந்தவை நவிலுவ னன்பிற் கேட்டியால்
நிறந்தரு மிரவிதன் குலத்தி னேமியான்
சிறந்தவன் போடினித் தீமை வோற (19)

மாற்றில்ல லறம்வளர்த் திடவி ராமனைத்
தோற்றுவா னவனடி சுமக்க நாடொறும்
நோற்றவன் வீவிலா னுணங்கு கேள்வியான்
ஆற்றல்சால் பெருமைய னறிஞ் ஞருமே. (20)

வெந்துய ரினிவிடு கெனவி னுவிநற்
சிந்தையின் மகிழ்வோடு சிறந்த வஞ்சனை
தந்தையாங் கேசரி தன்மு னுதியோ
டந்தமாய் நடந்தவை யனைத்துஞ் செப்பினள். (21)

இனிதவன் மகிழ்ந்துகேட் டிருக்கு நாளில்வெள்
அனநடை திங்களீ ரைந்துஞ் சென்றிட
நனிமிகு திறல்செய்வா னரத்து ருக்கொளும்
தனையனை யீன்றன டவத்தின் மேன்மையாள். (22)

உதயனை நிகரொளி யோங்கக் கோபமும்
எதிரறு வீரமு மெய்தி யேபிறந்
ததிபசி யுடனவி ரருக்கன் றன்னையோர்
புதியநற் கனியெனப் புசிக்க வெண்ணியே (23)

---

18. அந்தர வாணி - ஆகாய வாணி. இந்து வேணியன் - சந்திரனை முடியில் உடைய சிவபிரான். 19. நவிலுவன் - சொல்வேன். கேட்டி - கேட்பாய். இரவி - சூரியன். நேமியான் - சக்கரதாரனாகிய திருமால். 20. நோற்றவன் - நோன்பு செய்தவன். வீவு - மரணம். நுணங்கு - நுட்பமான. 22. அனநடை - அன்னப் பறவை போன்ற நடையுடைய அஞ்சனை. தனையன் - குழந்தை. 23. உதயன் - சூரியன். அருக்கன் - சூரியன்.

### கலிநிலைத்துறை.

எழுந்து மீமிசைத் துனைந்துதா யேழ்பரிக் கதிரை
விழுங்க மேவலும் விண்ணவர் வெருக்கொளீஇ யலற
உழுந்து பேர்வுழி யொய்யென விரிஞ்சனுங் கனுகி
அழன்று தன்பெய ராயவா சுகந்தனை விடுத்தான். (24)

விடுத்த காலையின் மயர்ந்துமண் மிசைவிழக் கண்டு
கடுத்த வேகமோ டோடியக் கான்முளை தன்னை
எடுத்தி ருந்துதன் மடிமிசை யேந்தியஞ் சனையாம்
தடித்தெ ழுந்தனத் தாடுயர்ச் சலதியிற் சாய்ந்தாள். (25)

### எழுசீர் விருத்தம்.

நாட்டநீர் பெருகக் கடவுளர் தம்மை
நாடியின் றுதித்தவென் சிசுவை
வீட்டுதற் கெண்ணிப் பிரமவத் திரத்தை
விடுத்ததெக் காரண மென்போல்
வேட்டெழின் மகவைப் பெற்றுணர்ந் திலிரோ
வென்றுளம் விம்மியே கலுழும்
வாட்டடங் கருங்க ணஞ்சனை யென்னு
மாதுரை செவியினின் மடுத்தே (26)

மங்கைபா கன்றன் வீரிய மவனே
வந்தவ தரித்தனன் றேவர்
தங்கள்கா ரியமா யென்றுள மறிந்து
சஞ்சல மடையுமஞ் சனைதன்

---

24. துனைந்து - விரைந்து. தாய் - தாவி. ஏழ்பரிக்கதிரை - தேரில் பூட்டிய ஏழு குதிரைகளையுடைய சூரியன். வெரு - அச்சம். உழுந்து பேர்வுழி - உழுந்து உருளும் சிறிது போது. விரிஞ்சன் - பிரமன். அழன்று - கோபித்து. தன் பெயராசுகம் - பிரமாஸ்திரம். 25. மயர்ந்து - மயங்கி. கான்முளை - குழந்தை. துயர்ச்சலதி - துக்கக் கடல். 26. நாட்டம் - கண்கள். வீட்டுதல் - கொல்லுதல். வேட்டு - விரும்பி. கலுழும் - கலங்கும். 27. இங்கிதம் - குறிப்பு.

திங்கண்வாண் முகத்தை நோக்கிவா னவர்கள்
செப்புவார் நின்வயிற் றுதித்தோன்
இங்கித மறியும் புத்தியா லதிக
வித்தையா லெவரினும் பெரியோன். (27)

விண்ணவ ரசுர ரரக்கர்வல் லியக்கர்
வீணையர் முதலினோ ராலும்
மண்ணவர் விலங்கு பறவையென் றுள்ள
வலியசெந் துக்களி னாலும்
திண்ணிய படைக ளுடன்சரங் களினுஞ்
செருக்குமா றிலனரிக் கன்பாம்
புண்ணிய னிணையி லானெடு மகனீள்
புகழ்நனி பெருகுவன் மாதோ. (28)

ஆனதா லினிநீ துயர்ந்திடல் வேண்டா
வழகிய வுன்மகன் றனக்கொன்
றீனமில் வாகு வலிமையும் வரமு
மீந்தனஞ் சுகமுறத் தெளிந்து
தானதி யடல்பெற் றெழுமென வினிதாய்த்
தவறிலஞ் சனைதனக் கருளி
வானவர் விடையோ னருகுற வந்த
மலாவன் கருணையுண் மலிந்தே (29)

அம்பென மிளிருங் கருந்தட நெடுங்க
ணஞ்சனு தேவியை நோக்கி
உம்பரும் வியப்ப வுயருமிச் சேடா
சலத்தினி லுலப்பருங் காலம்
தம்பமொத் தரிய தவம்புரிந் துலகு
தனக்குப காரமா மகவை
இம்பரி னளித்தா யாதலா லுன்பே
ரிச்சிலம் பெய்திடும் படியே (30)

---

28. வீணையர் - கந்தருவர். சரம் - அம்பு. அரி - திருமால். 29. அதி யடல் - மிக்க வலிமை. 30. உம்பர் - தேவர். உலப்பருங்காலம் - முடிவில்லாத காலம். தம்பம் - நட்டதூண். இம்பர் - இவ்வுலகம்.

அஞ்சன கிரியென் றுலகெலாம் வழங்கத்
தக்கதென் றருளித்தம் பதியின்
கஞ்சநாண் மலரோன் சென்றிட வந்த
கடவுளர் தம்முல கடைந்தார்
மஞ்சனு மனுமன் றன்னுடன் சேட
மலையினி லிருந்துதன் னிடஞ்சேர்ந்
தஞ்சுத றவிர்ந்தே யஞ்சனு தேவி
யகமகிழ் வுடனினி தமர்ந்தாள். (31)

ஈதெலாங் கடவுண் முனிபிரு குவினுக்
கிதையமுண் மகிழ்பெற வாங்கண்
ஓதினு னெனவே நைமிசா ரணியத்
துறைதவர் விருப்பொடுங் கேட்கப்
பாதக வெகுளி காமமே முதலாம்
பகையினைப் பற்றறத் துடைத்த
சூதமா தவத்தோன் வடித்ததெள் ளமுதச்
சுவையெனச் சொற்றனன் மாதோ. (32)

விளங்கிய பிரமாண் டப்பெயர்ப் புராணம்
விரித்துரைத் திடுமிவை யெல்லாம்
உளங்கனிந் தன்பி னெழுதுவோர் கேட்போ
ரோதநீர்க் கடல்புடை சூழும்
வளங்கெழு முலகி னதிநலம் பெற்று
வாழ்ந்துபின் மலைமகண் மருவும்
களங்கறுத் தவன்கைப் பலிதவிர்த் தவன்வாழ்
கதியினிற் கலந்துவாழ் குவரே. (33)

---

31. மஞ்சன் - மைந்தன்.

அஞ்சனுதேவி தவநிலை உரைத்த அத்தியாயம் முற்றிற்று.

# 8. வேங்கடாசலப் பெயர் நிகழ்த்திய அத்தியாயம்.

அறுசீர் விருத்தம்.

மெய்த்தவப் பிருகு வென்பான் மேதகு மண்ணி னல்யாழ்
வைத்தகை முனியை நோக்கி மண்ணின்வேங் கடமென் றிந்தச்
சுத்தசே டாச லத்தைச் சொல்வதே னருள்செ யென்னப்
பத்திசெய் கானம் வல்ல பண்ணவன் பணிப்ப தானன். (1)

விந்தைசேர் சீசை லத்தின் மேற்புறந் தனிற்சி றந்த
நந்தன புரமென் றேயோர் நகரதற் கரச னுய
நந்தனல் வருண தன்ம நவையிலாச் சிரம தன்மம்
சந்ததம் வழுவி லாது தானர சியற்று நாளில் (2)

ஆங்குறை நாலென் றோது மாரணத் தெல்லை கண்டு
தீங்கறு வேள்வி யாவுஞ் செய்புரந் தரனென் றோதும்
பாங்குடை மறைவ லாளன் பயந்தமா தவனு மத்தோன்
ஓங்கிய கலைகள் யாவு முணர்ந்தவ னுருவின் மிக்கோன் (3)

மன்மதன் கணைகள் பாய மதிமிக மருண்டு நைந்து
தன்மனை யாட்டி யாகுஞ் சந்திர ரேகை யொடு
நன்மைசேர் வனங்க ளோடை நறைமலர்த் தடங்கள் கானம்
பன்மலை யருவி யென்னப் பகருறு மிடங்க டோறும் (4)

வசந்தகா லத்திற் சென்று மலர்கொய்து புனைந்து தென்றல்
அசைந்துவந் துலவ நாறு மலரணை மிசையிற் கூடிக்
கசிந்தவன் போடு காமன் கலைமுறை தவறு வண்ணம்
இசைந்தனு ராக போக மெய்தின ரென்ப மன்னே. (5)

---

1. கானம் - பாடல். பண்ணவன் - முனிவன். பணிப்பது - கட்டளை யிடுவது. 2. விந்தை - வியப்பு: வருணதன்மம் - சாதியறங்கள். நவை - குற்றம். ஆச்சிரம தருமம் - நிலையறங்கள். சந்ததம் - எப்போதும். 3. ஆரணம் - மறைகள். வேள்வி - யாகம். மறைவலாளன் - வேதம் வல்ல பிராம்மணன். 4. நறை - தேன். தடம் - தடாகம். 5. வசந்த காலம் - இளவேனிற் காலம். அனுராகம் - வழி வழி யெழும் காமம்.

### எண்சீர் விருத்தம்.

கடியவராக் குக்குடமார்ச் சால மாதி
　　காணமுடன் றசவிதசும் பனம்பு ரிந்து
தடமுலேமேற் சத்தமணி மாலே யோடு
　　சந்திரரே கையுமுகிராற் சமைத்தே தந்தத்
திடுகுறியு மிதழினிற்செய் திருண்டு நீண்டே
　　யெழிறிகழுங் குழல்சோர விடைதள் ளாட
மடிநெகிழ விவ்விதமா யநந்த லீலே
　　மனமகிழ்ச்சி பெறநடத்தி வருமந் நாளில் (6)

ஆங்கொருதா மரைத்தடத்தி னருகே சீத
　　மளேந்துமந்த மாருதம்வந் தசைந்து வீச
ஓங்கியுயர்ந் தெழுந்தவொரு மாக்கீழ் மேவி
　　யுவந்திரதி யுடன்மதன்வந் திருந்த தென்னப்
பாங்குடனங் கிருந்துகரும் பிரசந் தன்னேப்
　　பாலேயமு தைப்பழித்த மொழியா ளோடும்
தேங்கியிருட் குறையுளெனுஞ் சிந்தை மேவுஞ்
　　செழுமறையோன் மிகவுமுள மகிழ்கா லத்தே (7)

### கலிவிருத்தம்

முன்னி யற்றிய தீவினே முற்றுமோர்
அன்ன மென்னடை நீச வணங்குரு
மன்னி மாதவ னுமறை யோன்கணின்
மின்ன லென்ன விளங்கொளி வீசவே (8)

எதிரி னின்றுல வும்மெழின் மாதினே
முதிரு மின்னெளி யாலுயர் மோகன
மதிமு கத்தும டந்தை வடிவமாய்
விதிசெய் தீங்கண் விடுத்ததை யென்னவே (9)

---

6. அரா - பாம்பு. குக்குடம் - கோழி. மார்ச்சாலம் - பூனே. கரணம் - லீலேத் தொழில். தசவிதம் - பத்துவிதம். சும்பனம் - நாவாற் சுவைத்தல். உகிர் - நகம். குழல் - கூந்தல். இடை - இடுப்பு. 7. சீதம் - குளிர்ச்சி. மந்தமாருதம் - தென்றற் காற்று. இரசம் - சாறு. உறையுள் - வாசஸ்தானம். 8. நீச வணங்கு - இழிகுல மகள். 9. மடந்தை - இளம்பெண்.

கண்டு மாதவ வேதியன் காதனைய்
மண்டி விஞ்ச மனைவியை நீத்துளங்
கொண்டு சென்று குதுகலத் தோடுவாய்
விண்டு வேண்டி வியந்து விளம்புவான். (10)

முதிய சந்திர னேமுக மூள்கொலை
நுதிகொள் கூர்ங்கணை யோவிழி நோன்மைசேர்
நிதிகொ ளும்மலை யோமுலை நீடுமால்
சதன மோவுன் வயிற்றின் றகைமையே. (11)

அற்ப மாமிழை யோவிடை யாடிடும்
சர்ப்ப மோவல்குற் றூனமென் றேபினும்
பொற்பெ லாப்புகழ்ந் தேபுற நோக்கலான்
நிற்ப வாங்கவ ணெஞ்ச மிளகியே (12)

முறுவ ரேன்ற நகைத்தெழின் மோகனெய்
நறைம லர்க்கணை யாலிடர் நண்ணியே
முறையி கந்து புகழ்ந்துமுன் னூல்வரும்
மறைய வன்வச மாகினண் மால்கொடே. (13)

மாத வன்னெனும் மாமறை யோனதி
பாத கம்வரு மென்று பயந்திலான்
ஏதம் பேசி யிகழ்வரென் றெண்ணிலான்
போதந் தன்னைவெங் காமம் பொதியவே. (14)

## அறுசீர்விருத்தம்.

மாலினி யெனுஞ்சண் டாள மங்கைதன் னேடுங் காம
நூலியல் வழாது கூடி நொடிப்பொழு தேனு நீங்கான்
சோலைக டொறுஞ் சீதச் சுனையிடந் தோறு நீண்ட
கோலநன் மலைக டோறுங் கொடியகா னகங்க டோறும் (15)

---

10. நீத்து - விடுத்து. வாய்விண்டு - வாய்விட்டுக் கூறி. 11. நுதி - முனை. கணை - அம்பு. நோன்மை - பெருமை. சதனம் - இருப்பிடம் - மாலின் இருப்பிடம் - ஆலிலை. 12. இழை - சரடு. பொற்பு - அழகு. 13. முறுவல் - பல். மோகன் - மன்மதன். மால் - காம மயக்கு. 14. ஏதம் - குற்றம். போதம் - அறிவு. பொதிய - மூடிவிட. 15. சண்டாள மங்கை - புலைச்சி. சீதம் - குளிர்ச்சி.

சென்றுகை கலந்து கோவின் செழுந்தசை முதலா மூன்கள்
தின்றுமட் டருந்தித் தீமை தினந்தின மியற்றித் தன்கை
ஒன்றிய தனங்க டோற்றுங் குறுவகுந் துவின்கட் கூடிச்
சென்றிடு மறைவ லாளர் திரளினைத் தடியாற் றுக்கி (16)

பணிமுதற் பொருள்க ளெல்லாம் பறித்தவ னுவப்ப வீந்து
துணிவுகொண் டிங்ங னகத் தோன்றுநாட் சிலக ழித்துப்
பிணியினு னலிந்த டித்துப் பேதுறப் பலமு மோய்ந்து
தணியவே புலைச்சி சிந்தை சாற்றியங் ககற்றி னளால். (17)

சொல்லருங் கொடிய பாவஞ் சுமந்துகொண் டவ்வ னத்தில்
அல்லலங் கெய்தப் பித்த னுமென வலைந்து பன்னாள்
செல்லலும் பின்பு தன்னைச் சிந்தையான் மிகவு நொந்து
பல்லிடந் திரிந்து சேட பருப்பதத் தருகுற் றுனல். (18)

உற்றவ னநந்த னென்னு மோங்கன்மீ திவரும் போது
பற்றின னெளிசெய் தேயு வாபாத சூடம் பற்றிச்
சற்றுவே லையினின் மின்போற் சடசட வெனவே யோசை
முற்றிட வவன்றன் பாவ முழுவதுஞ் சாம்ப ராகி (19)

பூமிசை விழவப் போதே புடத்தில்வைத் தெடுத்த பொன்போல்
நேமமாம் பிரம தேசு நிறைந்தொளி திகழ மாசில்
மாமதி நிகர்ப்ப நின்ற மறையவன் றனையாங் குற்ற
சேமநன் முனிவர் யாருந் திருவுள மகிழ்ந்து நோக்கி (20)

அனைவரு மருகிற் சென்றிங் கையநீ யாருன் செய்கை
தனையெமக் குரைசெய் யென்னத் தாழ்ந்ததி பத்தி யோடும்
சனனமா தியதாச் செய்த சரித்திர மனைத்துஞ் சாற்ற
முனிவரா திறும்பூ தெய்தி முற்றுறச் செவியி னேற்றுர். (21)

---

16. கோவின் தசை - பசுவின் இறைச்சி. மட்டு - கள். வகுந்து - மலையிடை வழி. 17. பணி - ஆபரணம் பிணி - நோய். 18. அல்லல் - துன்பம். பருப்பதம் - மலை. 19. ஓங்கல் - மலை. தேயு - அக்கினி. ஆபாதசூடம் - அடிமுதல் முடிவரை. 20. புடம் - தீயிலிடல். தேசு - ஒளி. மாசு - குற்றம். 21. சனனம் - பிறப்பு. இறும்பூது - வியப்பு.

மாதவ னென்னு நாம மறையவன் செய்த தீய
பாதக மிந்நீள் சேட பருப்பத மகிமை தன்னால்
பீதிகொண் டெறிந்து தூளாய்ப் பெயர்ந்ததென் றுணர்ந்து செய்யாள்
நாதனை யன்பான் மிக்க நான்மறை விதியா லேத்தி (22)

தீதுறு நீச மாதின் சேர்க்கையே முதல வான
பாதக நாளுஞ் செய்த பாவிமா தவனென் றோதும்
வேதியன் கொடிய பாவம் வெந்துக முன்பு போல
மேதகு பிரம தேசு மேவிய படியி னாலே (23)

அத்திரு மலைக்குச் சீரார் வேங்கடா சலமென் னும்பேர்
வைத்தன ரதுவே தென்னில் வேவென வழங்கெ ழுத்தே
கொத்துறு பவத்தைக் கூறுங் கடமெனக் கூறி ரண்டாம்
சுத்தவக் காங்கொ ளுத்தப் படுமெனச் சொல்வர் மேலோர். (24)

வெங்கொடும் பவங்க ளெல்லாம் வெந்திடச் செய்வ தானன்
மங்கலம் பொருந்துஞ் சீர்வேங் கடமலை யான தென்று
தங்களாச் சிரமந் தன்னிற் றவத்தவ ரனுக லோடும்
சிங்கறீர் மாத வப்பேர்ச் சீர்மறை யாளன் றனே (25)

ஆங்குயர் நியமத் தோடிந் தியங்களை யடக்கி யந்த
ஓங்கலி னநந்த கால மொருவரா லியற்றொ ணாத
தீங்கிலாத் தவங்கள் செய்து திருவிறை யருளைப் பெற்றுப்
பாங்குடன் சிறந்த மேலாம் பாகதி பற்றி னானால். (26)

பேர்பெறுந் தவத்தான் மிக்க பிருகுவுக் குயர்யாழ் வல்லோன்
சீர்பெறு மிந்தக் காதை செப்பினு னென்று மேலாம்
சூர்புகழ் தலமா நைமி சாரண்யக் துறவோர் கேட்ப
ஏர்பெறுஞ் சூத னென்னு மிருந்தவ னியம்பி னானே. (27)

---

22. பீதி - அச்சம். செய்யாள் - இலக்குமி. 24. வே - பாவம். அக்கரம் - எழுத்து. கடம் - கொளுத்தப்படும். 25. சிங்கல் - குறைவு. 26. நியமம் - முறைமை. இந்தியம் - இந்திரியங்கள். ஓங்கல் - மலை. திருவிறை- திருமகள் தலைவனாகிய நாரணன். 27. துறவோர் - துறவிகள். ஏர் - அழகு.

இயம்புமிச் சரிதை யெல்லா மிகலறு பிரமாண் டத்தின்
நயம்பெற வினிது பேசு நன்றென நவில்வோர் கேட்போர்
வியம்புனை யுலகின் மீதே வேட்டவை வேட்டாங் கெய்திச்
சயம்பெறு நேமி மாறன் பதியிடைச் சார்கு வாரே. (28)

வேங்கடாசலப் பெயர் நிகழ்த்திய அத்தியாயம் முற்றிற்று.

## 9. சோழனுக்குச் சக்கரவர்த்தி பிறந்த அத்தியாயம்.

அறுசீர்விருத்தம்.

மாதவப் பிருகு வென்பான் மகதியாழ் முனியை நோக்கி
நீதிசேர் பகவான் முன்ன நியமித்த சோழன் மைந்தன்
பூதலத் தெவண்வாழ் கின்று னவனெவன் புயங்க வெற்பின்
ஆதியன் பெவ்வா றுற்ற தறைகென வருள்வ தானுன். (1)

இக்கலி யுகத்தி னீதி யெழிலறம் வழுவா வண்ணம்
மக்களி லுயர்ந்த சோழ மன்னவன் புவியா ளுளின்
மிக்கவே கத்து ரங்க மேற்கொடு விரும்பி வேட்டம்
புக்கன னெண்ணி கந்த பொருபடை யுழவர் போத. (2)

எண்ணில்கா னகங்க ளெங்கு மேகியங் கரிக ளோடும்
திண்ணிய விலங்கை யெல்லாஞ் செறுத்துயர் சேட வெற்பின்
நண்ணியங் குளவ னத்தி னுடினன் றிரியுங் காலை
கண்ணின்மின் னொளியைப் போலோர் கன்னியைக் கண்ணுற் றுனல். (3)

28. வியம் - ஏவல். வேட்டவை - விரும்பியவை. வேட்டாங்கு - விரும்பியவாறு. 1. மகதி யாழ் - நால்வகை யாழில் ஒன்று. பகவான் - இறைவன். புயங்கம் - பாம்பு. வெற்பு - மலை - சேஷாசலம். 2. துரங்கம் - குதிரை. படையுழவர் - ஆயுதந் தாங்கிய வீரர். கரி - யானை. செறுத்து - வேட்டையில் அழித்து. 3. மஞ்சு - மேகம். நுதல் - நெற்றி. கஞ்ச வாளியன் - தாமரை மலர் அம்புடைய மன்மதன். சாபம் - வில். மானும் - ஒக்கும். அஞ்சனம் - மை. வை - கூர்மை. கயல் - கெண்டை மீன். சிவணும் - ஒக்கும். எட்பூ - எள்ளின் மலர். நாசி - மூக்கு. பொருவும் - ஒக்கும்.

மஞ்சினை நிகருங் கூந்தல் வான்பிறை நுதலை நேரும்
கஞ்சவா ளியன்கைச் சாபங் கரும்புரு வத்தை மானும்
அஞ்சன விழிவை வேலை யமுதினைக் கயலை வாளை
நஞ்சினைச் சிவணு மெட்பூ நாசியைப் பொருவு மாதோ. (4)

செப்பொனி னூச றன்னைச் செவிவென்றி கொளுஞ்செவ் வாயோ
அம்பவ ளத்தை யொக்கு மழகிய முறுவன் முத்தை
வெம்பியே தூக்கு மாடி கபோலத்தை விழையுங் கண்டம்
கம்புளை நகைக்கு மென்றோள் கழையினைக் கடுக்கு மன்றே. (5)

கனந்திகழ் கனக வெற்பைக் காமவேண் முடியைக் காணின்
சினந்தெழுங் கொங்கை சிங்கஞ் சிற்றிடை துணையும் வாழை
இனந்தனை நிகர்கு றங்கா மெழின்முழந் தாளோ நள்ளி
முனைந்தெழு வரால்க ணைக்கான் மோட்டாமை புறங்கா லாமே. (6)

இவ்வகை யுறுப்பு வாய்ந்த வெழில்பெறு முருவத் தோடு
செவ்விய வன்ன நாணத் திரிபவ ளார்கொ லென்று
எவ்வமின் மன்ன னுள்ளத் தெண்ணிமா மதன னேவும்
வெவ்விய கணைகள் வந்து மெய்புறப் பொருது சொல்வான். (7)

அழகெலாந் திரட்டி யிந்த வணங்கவ யவங்க ளாகப்
பழமறை யவன்வ ருந்திப் படைத்தனன் கொல்லோ வென்ன
வழுவிலா மனத்தா னங்கு மையலா லயர்ந்து வீழச்
செழுமலர் கொய்து நின்ற சீர்பெறு மணங்கு கண்டாள். (8)

---

5. ஊசல் - ஊஞ்சல். முறுவல் - பற்கள். ஆடி - கண்ணாடி. கபோலம் - கன்னம். கண்டம் - கழுத்து. கம்புள் - சங்கு. கழை - மூங்கில். வென்றி கொள்ளும், வெம்பித் தூக்கும், விழையும், நகைக்கும், கடுக்கும் - என்பன எல்லாம் உவமை வாசகங்கள் : ஆதலால் ஒக்கும் என்னும் பொருளன. 6. கனம் - மேகம். கனக வெற்பு - பொன் மலை. முடி - கிரீடம். துணையும் - ஒக்கும். குறங்கு - தொடைகள். நள்ளி - நண்டு. 7. எவ்வம் - குறை. எழில் - அழகு. 8. அணங்கு - தெய்வ மகள். மையல் - மோகம்.

மீனகே தனன்வெ குண்டு விரைமலர்ச் சரங்க ளேவத்
தா னுமுள் ளடங்கா மைய றழைத்தெழ நிற்குங் காலே
தே னுறை யலங்க லங்தோட் செம்பியன் றெளிந்து நோக்கி
வானவர் மருந்தே போலு மங்கையோ டினிது சொல்வான். (9)

சற்றுமுட் பயமி லாதிவ் வனந்தனிற் றனிய ளாக
உற்றனை நீயா ருன்னை யுவப்புடன் றவத்தாற் பேணிப்
பெற்றவ னார்கொ லன்னப் பெடையனு யெவரை யுன்கை
பற்றவுட் டுணிந்தார் நின்றன் பற்றெவர் பக்க லென்று (10)

எழுதரு வனப்பு வாய்ந்த வேந்திழாய் புகறி யென்னப்
பழுதறு கன்னி செய்ய பவளவாய் திறந்து தேனும்
விழுமிய வமுது மேய்ப்ப விளம்புவாள் பாதா ளத்தின்
கெழுமிய வரவ வேந்தன் கீர்த்திமான் றனுச னென்போன் (11)

பெற்றிடும் புதல்வி யானப் பிதாவெனைப் புவனந் தன்னில்
உற்றிடு மாசர் தம்மி லுயர்குண மழகு கல்வி
வெற்றியு முடையோற் கீய வேட்கைய னுத லாலே
மற்றடந் தோளா யங்கு வந்தவற் கேட்டி யாயின் (12)

கலைநிறை மதிகா ணுற்ற கனைகட லென்னப் பொங்கிச்
சிலைவலோய் நினக்கே யென்னைத் திருமணம் புணர்ப்பா னென்ன
நலனுறு மாசன் கேட்டு நங்கைநீ நவிலும் வாய்மை
நிலைமையே யாயி னும்யா னிகழ்த்துவ தொன்று கேளாய். (13)

பாதலத் தணுகி யுன்னைப் பரிந்துவந் தீன்ற சீரார்
தாதையைக் கண்டு கேட்குங் காறும்யான் றரிக்க லாற்றேன்
ஆதலான் முதிஞர் கூறு மெண்வகை மணம வற்றுள்
ஓதுகாந் தருவ மென்றுன் றுண்டஃ துரைப்பக் கேண்மோ. (14)

---

9. மீனகேதனன் - காமதேவன். சரங்கள் - அம்புகள். அலங்கல் - மாலை. செம்பியன் - சோழவரசன். வானவர் மருந்து - தேவாமிருதம். 10. அன்னப் பெடை யனாய் - பெண் அன்னப் பறவை போன்றவளே. பற்று - அன்பு. 11. எழுதரு வனப்பு - எழுதுதற்கு இயலாத அழகு. புகறி - சொல்லுவாய். 12. புவனம் - நிலவுலகு. கேட்டி - கேட்பாய். 13. சிலைவலோய் - வில்லாண்மை யுடையோனே. பூரண சந்திரனைக் கண்ட கடல் பொங்குதல் உவமை. 14. எண்வகை மணம் - பிரமம், பிராசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், ஆசுரம், இராக்கதம், பைசாசம்.

அரசர்கன் னியரிற் பல்லோ ராங்கதி னெழுகி னார்வீ
விரைகமழ் குழலா யந்த வேள்வியிற் கிசைவா யென்று
பிரிகலா னங்கை பற்றப் பெண்கொடி நாணி நீப்பத்
தரியலர் சிங்க மன்னன் றணிக்கலா விரக னாகி (15)

அன்னமே தேனே தெய்வ வமுதமே மயிலே நாணம்
தன்னமு மிலாது நீத்துத் தயைபுரிந் துயிரைப் பேணி
இன்னலை விலக்கற் கொத்த வினியநன் மருந்து நோக்கின்
உன்னல தில்லை கண்டா யெனப்பல வுரைத்து வேண்ட (16)

கூற்றினைக் கணையை வாளைக் கொடியகார் விடத்தை வேலைத்
தோற்றிட வென்று நீண்டு துலங்குமை விழியா டானும்
மாற்றரு மாசை மீறி மனமிசைந் திடவக் கானின்
ஏற்றமா தவிப்பந் தற்கீ ழிருவரு மிதய மொத்தே (17)

மோகமா னூலிற் கொத்த முறையுளி வழாது கூடி
ஆகமு மனமு மொன்று யளவில்கா மப்போர் செய்து
நாககன் னிகைநற் சோழ நரபதி வாய்மை யாலே
ஏகினள் பாதா ளத்தி னீன்றவன் முன்பு மாதோ. (18)

அருகினி லடைந்து சோழ வரசனு னடந்த வெல்லாம்
தெரிவுற மொழியக் கேட்டுச் சிந்தையின் மகிழ்வு கூர்ந்து
பொருவரு மகளுக் கொத்த புருடனென் றெண்ணிச் சீரார்
உரகமன் னுளத்து மிக்க வோகையுற் றிருந்தா னன்றே. (19)

சென்னிதன் னகரை நோக்கிச் சென்றன னுரக வேந்தன்
கன்னிகை சின்னாள் சென்று கபோலமும் விளர்த்தா காரம்
தன்னிலே யுவர்ப்புத் தோன்றச் சயனத்தில விருப்ப மூன்ற
மின்னொளி நாணு மேனி மேற்பசு நரம்பு தோன்ற (20)

---

15. வீ - மலர். விரை - மணம். வேள்வி - ஈண்டு விரும்பி மணத்தலாகிய காந்தருவம். தரியலர் - பகைவர். விரகன் - காம வேட்கையன். 16. தன்னம் - சிறிது. இன்னல் - துயர். 17. கூற்று - எமன். கணை - அம்பு. இதயம் - மனம். 18. முறையுளி - விதிப்படி. ஆகம் - உடம்பு. நரபதி - அரசன் 19. உரக மன் - பாம்புகட்கு அரசன். ஓகை - உவப்பு. 20. சென்னி - சோழன். உவர்ப்பு - வெறுப்பு. சயனம் - படுக்கை.

## எழுசீர் விருத்தம்.

முகிண்முலை முகடு கருப்பெழ வயிறு
முறைமுறை பெருத்தெழக் கருப்பத்
தகுதியாங் குறிகண் டென்றவன் மகிழத்
தையன்மா தந்தச நிறைந்து
மிகவுமார் புணைத்த லிடைவலி முதலாம்
வேதனை மேற்கொடு விரிநீர்ச்
செகமனைத் தினையுஞ் செவ்விதி னோம்பிச்
செலுத்துசெங் கோலுடை யவனாய் (21)

அச்சுத னடிய னாகிநல் லறங்க
ளனைத்தையுஞ் செழிப்புற வளர்க்கும்
உச்சித குணநல் லிலக்கண முடைய
வோர்மக வளித்தன ளன்றே
மெச்சிய கலைதேர் பிருகுமா முனிவன்
வினவயாழ் முனிவிளம் பினனென்
றிச்சைவே றறுத்த சூதமா முனிவன்
சௌனகர்க் கியம்பினன் மாதோ. (22)

சீதநீ ருவரி சூழுல கத்தோர்
தெளிதா வியன்பிர மாண்டம்
ஓதிடு மிதனை வியப்புறக் கேட்போ
ருளமகிழ்ந் தினிதெடுத் துரைப்போர்
பாதக மெல்லாம் பரிதிமுன் னிருள்போற்
பாறநன் னலமெலாந் துய்த்துக்
கோதற வுயருங் கதியினி லடியார்
குழுவொடு கூடிவாழ் குவரே. (23)

---

21. முகிழ் - அரும்பு. முகடு - உச்சி. தசம் - பத்து. மார்பு பணைத்தல் - மார்பு வலித்தல். இடைவலி - இடுப்பு வேதனை. 22. அச்சுதன் - திருமால். 23. உவரி - கடல். பரிதி - சூரியன். பாற - ஓட, துய்த்து - நுகர்ந்து. கோது - குற்றம்.

சோழனுக்குச் சக்கரவர்த்தி பிறந்த அத்தியாயம் முற்றிற்று.

## 10. சக்கரவர்த்தி அரசு புரிந்த அத்தியாயம்.

### எழுசீர் விருத்தம்.

வழிந்துமட் டொழுகும் வெறிமலர்ப் பசுந்தார்
மகதியாழ் முனிவரன் பினரும்
செழுந்தவப் பிருகு முனிவனை நோக்கிச்
செப்புவா னவ்வரா விறைவன்
தழைந்தபே ரன்பு மிகமலிந் தெழுமா
தன்மகள் சூன்முதிர்ந் தீன்ற
குழந்தைசா தகமும் வடிவுமுன் கண்டு
குவலய வரசர்க்கு மரசாம் (1)

எனவுள மகிழ்ந்து நாடொறுங் கண்ணுக்
கிமையெனப் பெரிதுநன் கோம்பி
இனிதவண் வளர்க்குங் காலைநற் பருவ
மெய்தவங் கோர்தினந் தன்னில்
அனையடி வணங்கி நின்றெனைத் தந்தோ
னாவன் பதியெது வென்று
வினவிய மகனைத் தாயுள மமர்ந்து
விளம்புவா ணின்பிதா வென்போன் (2)

பூதல மதனி லரசிய லோம்பும்
பொற்றதோட் சோழபூ பதியென்
றோதுநா மத்தா னொருதின மதிலுல்
லாசமாய் வேங்கட மலையின்
றாதுகு மலர்ப்பூம் பொதும்பரி லென்னைக்
கண்ணுறீஇ வேட்டுக்காந் தருவ
நீதியான் மணஞ்செய் தனனெனக் கேளா
நிகரறு மெறுழ்வலிக் குமரன் (3)

---

1. மட்டு - தேன். வெறி - நறுமணம். அராவிறைவன் - நாக ராசன். சூல் - கர்ப்பம். குவலயம் - உலகம். 2. ஓம்பி - பேணி. அனை - அன்னை. பதி - ஊர். 3. பொற்ற - அழகிய. தாது - பூந்துகள். பொதும்பர் - மலர்ச்சோலை. எறுழ்வலி - மிக்க வன்மை.

அய்யனைக் காண வேண்டுமென் றுளத்தி
லாசைகொண் டனையருள் பெற்றே
வய்யக மதிற்செல் வழியறிந் தணுகி
வளவனன் பதியடைந் தவன்றன்
செய்யபங் கயத்தாள் பணிந்துநின் றிடலுஞ்
செம்பிய னற்புதத் துடனே
மெய்யெழில் பலவுங் கண்டுநீ யாவன்
விளம்பென வழங்கன்மே யினனால். (4)

வேங்கடா சலத்தின் விரைமலர்க் காவின்
விருப்புற வெனையளித் தவளைப்
பாங்குடன் கண்டு மணந்தது நாகர்
பதியினிற் றுன்பிறந் ததுவும்
தீங்கறு நற்றாய் சொற்றிடுங் குறியுஞ்
செப்பிட வஞ்செவி சாத்தித்
தேங்கிய வருள்சேர் சிந்தையான் மிகவுந்
திகைப்புட னிருந்திடும் வேலை (5)

சந்த விருத்தம்.

ஆகாச வாணி யசரீரி யாகி
யாசன்ற ஐய மொருவ
நீகாச மற்ற பெரியோ ரமைச்சர்
நிறைகின்ற வவையு முணா
வாகான சோழ மனனே விசார
மருவே லுனக்கு மகிழ்வாய்
நாகாதி பன்றன் மகள்பெற் றெடுத்த
நவையற்ற மைந்த னிவனும். (6)

---

4. ஐயன் - என்பது போலியால் அய்யன் - தந்தை. வையகம் - நிலவுலகு. வளவன் - சோழன். செய்ய - சிவந்த. பங்கயம் - தாமரை. செம்பியன் - சோழன் - சிபிவம்சி என்பது காரணப் பொருள். 5. மலர்க்கா - மலர்ச்சோலை. 6. ஆகாசவாணி - வான்வாக்கு. ஐயம் ஒருவ - சந்தேகம் நீங்க. நீகாசம் - ஒப்பு, உவமை. அமைச்சர் - மந்திரிகள். அவை - சபையோர். வாகு - அழகு. விசாரம் மருவேல் - ஐயம் அடைய வேண்டா. நாகாதிபன் - நாக அரசன். நவை - குற்றம்.

நீடாழி சூழு முலகத்தில் யாரு
நிகரன்றி நீடு தருமம்
வாடாது நீதி மரபே செலுத்து
மதிமன்னர் மன்ன னெனவே
தேடா தறிஞர் பெறவம்பொ னல்கு
செயசக்ர வர்த்தி யாகிக்
கோடாது நாளு நலமே மலிந்த
குணசீல னுரு மிவனே. (7)

வேறு சந்தம்.

சீரார் மலர்ச்சோலை செறிசேட வரைமீது திகழ்மாலினுக்
காராத னஞ்செய்து வியனுந்தி ருத்தொண்டை யன்போடுமெய்ப்
பேராரும் விழவைப்பு ரிந்தன்பு பெருகிப்பி ராணுகுவான்
ஓராம லின்னேதொன் முடிசூ டெனப்பெரி துரைத்திட்டதே.(8)
மகனைத்தன் னருகாக வாவென் றழைத்துள்ள மகிழ்பூத்துநற்
செகமொப்ப முடிசூடி யுலகாளெ னப்பண்டு செப்பியிடலும்
நிகரற்ற மாசக்ர வர்த்திப்பெ ரும்பேர் நிலாவப்படி
மகிழ்வுற் றிடப்புரந் தன்பாக வின்போடு வாழ்நாளிலே. (9)

எண்சீர் விருத்தம்.

அண்டர்கள்வந் தஞ்சலிசெய் தரசே யுன்றே
ராணையினு லாநிரையை யன்பி னேடும்
தண்டலைசூ ழராப்பொருப்பின் மேய்த்து வாழ்வோந்
தவறின்றி யடிகளுக்காய்ப் பாற்கு டங்கள்
கொண்டுவரும் வழியிலொரு புற்றுண் டாங்கட்
குடனெல்லா முறைமுறையே யிரண்ட வாக
விண்டுவிழு கின்றனநா டோறு மிந்த
விறும்பூது விளம்பநனி வந்தோ மென்றூர். (10)

---

7. நீடு ஆழி - நெடிய கடல். கோடாது - கோணுமல். 8. சேட வரை - சேஷகிரி. ஆராதனம் - பூசை. வியன் - பெருமை. விழவு - உற்சவம். ஓராமல் - ஆராயாமல். 9. படி - பூமி. புரந்து - பரிபாலித்து. 10. அண்டர்கள் - இடையர்கள். அஞ்சலி - கைகுவித்தல். ஆநிரை - பசுக் கூட்டம். தண்டலை - சோலை. அராப் பொருப்பு - சேஷகிரி. அடிகள் - பெரியீர். விண்டு - பிளந்து. இறும்பூது - அதிசயம்.

என்றமொழி செவியுறலும் வியப்புள் ளூர
வினையில்லா விகல்வேந்த னுவக்குங் காலை
அன்றிரவி லோர்கனவு தோன்றக் கண்டே
யற்புதமீ தெனவுதயத் தெழுந்து தங்கட்
கொன்றியநற் கடன்முடித்துச் சுதன்ம மேபோ
லொளிர்மணிமண் டபத்தரியா சனத்தின் மேவி
நன்றறியு மதியமைச்ச ரறிஞர் தம்மை
நாடியன்போ டின்பமுற நவிலு வானால். (11)

கலைபலவு முணர்மதிவல் லுநரே யானோர்
கனவிரவிற் கண்டுணர்ந்தே னதுயா தென்னின்
அலைகடனீ ருண்டெழுகார் மேகம் போல
வழகமைமே னியிற்கொடிமின் றடித்துப் போலுஞ்
சிலைநுதலி யொடுந்தனுவி னேடுஞ் செய்ய
செழுங்கமல மலர்விழிக டிகழப் பூவின்
விலையரிய பொற்றுகிலு மிளிர்ந்து தோன்ற
மேதகுநற் புருடனென்முன் விளங்கி னானால். (12)

அப்புமான் றனையாரை யிருப்பெங் கேயிங்
கணுகியகா ரணமதனை யருள்செய் கென்றியான்
செப்பவவ னுவந்துதிரு மலைமேல் வைகுஞ்
சீநிவா சப்பெருமா னென்னை நோக்கி
இப்பொழுதே யுனையழைத்து வாவென் றானென்
றோதலுநா னுடல்புளகங் கொளமகிழ்ந்தே
ஒப்பரிய சேடகிரிக் கவனோ டேகி
யுயர்ந்தொளிசெய் சுடர்மணிமா னத்தி னுங்கண் (13)

தோன்றியெழிற் றிருப்பூமி நீளை யொண்மை
துளும்புசதுர்ப் புயந்திகிரி வளையுங் காதின்
ஞான்றமகரக்குழைவில் வீச வாச
நறுந்துளவ மாலைமணி யார மின்ன

11. வியப்பு - அதிசயம். இகல் - வலிமை. சுதன்மம் - இந்திர சபை. அரியாசனம் - சிம்மாசனம். 12. தடித்து - மின்னல். சிலை நுதலி - வில் போன்ற நெற்றியுடைய பெண். தனு - வில். பொற்றுகில் - பொன்னுடை (பீதாம்பரம்). 13. புமான் - புருஷன். யாரை - யார்? புளகம் - மயிர்க் கூச்சு. மானம் - விமானம். 14. மைதுளும்பு - கரு நிறம் விளங்கும்.

வான்றிகழ்செங் கதிர்கோடி யுதித்த தேய்ப்ப
மகுடமொளி தரவயனே டண்டம் யாவும்
ஈன்றவனென் முன்னர்விழி காண்ட லுற்று
னிதயநனி நெக்குருகி யிறைஞ்சி னேனால். (14)

மந்திரிய ராசனவில் வாய்மை கேட்டு
வழங்குவாம் மலைமேலோர் வன்மீ கத்துள்
அந்தரியா மியுமாகிச் சீவ கோடி
யனைத்தினுக்கு முயிர்க்குயிரா மமலன் மேவிச்
சந்ததமும் வசிக்கின்று னவ்வன் மீகந்
தனைப்பான்மஞ் சனஞ்செய்தே கரைத்தா லந்த
முந்துதனி முதல்கருணை முடுகித் தோன்றி
முராணுப்பே றளிக்குமென மொழிந்த காலை (15)

ஓடியொரு வேடுவன்வந் தஞ்ச லித்திட்
டொப்பிகந்த வொருதிகிரி யேந்தல் கேட்டி
சேடகிரி மீமிசையி னத்தை வித்தைத்
தேடியெடுத் துப்பொடிசெய் தந்நுண் மாவால்
நாடொறுமென் மனைவிமக்கள் சுற்றத் தோடு
நலிவின்றி யுடல்பேணி வாழு மென்றன்
வீடணுகி நிச்சலுமவ் விதையை யாண்வெள்
ளேனமொன்று தின்றுவிரை விசையிற் போமால். (16)

காதலுடைப் புதல்வனையெங் குடிஞை மாட்டுக்
காவல்வைத்து வேட்டைசென்று வருமோர் நாளின்
கோதகலம் மாவையளை யொடுவி ராவிக்
கொடுதுய்க்குங் குட்டனையா னேக்கி யென்றும்

சதுர்ப்புயம் - நான்கு தோள்கள். திகிரி - சக்கரம்; வளை - சங்கு. ஞான்ற - தொங்குகின்ற. மகரக் குழை - மகர வடிவினதாய காதணி. வில் - ஒளி. துளவம் - துளசி. செங்கதிர் - சூரியன். 15. வன்மீகம் - புற்று. அந்தரியாமி - உயிர்களுக்குள் உறைபவன். மஞ்சனம் - முழுக்கு. 16. அஞ்சலித்திட்டு - கைகுவித்து வணங்கி. திகிரி ஏந்தல் - ஆஞ்ஞா சக்கரத்தை யுடைய அரசனே (விளி). கேட்டி - கேட்பாயாக. நத்தை வித்து - (மணிப்புங்கம் வித்து). வெள்ளேனம் - வெண்பன்றி. 17. குடிஞை - குடிசை. கோது - குற்றம். அளை - தயிர். துய்க்கும் - உண்ணும். குட்டன் - சிறுவன். புற்

ஆதிபக வானுவப்ப வமுது செய்யா
தருந்தறவிர்ந் தோமதனை யறிந்து நீயிப்
போதவனுக் கமுதுசெயா துண்டா யென்று
புற்றரவா மெனச்சினந்து வாளை யேந்தி (17)

வெட்டவணு குறுங்காலை விசும்பி னோர்சொல்
விண்ணேற்றின் மிகவுரறி விளம்பு மாமால்
கிட்டிமக னைக்கொலைசெ யாதி யார்க்குங்
கிளர்குணத்தா னின்மீது கிருபை யாலே
இட்டமுடன் மணிநத்த மால வித்தை
யின்பமுற வமுதுசெய்தா னிவ்வெல் லாம்போய்
மட்டவிழ்தார் மன்னவன்பாற் புகல்வா யந்த
வாள்வேந்தன் கணுக்கண்டா னென்ற தன்றே. (18)

இந்தவகை வனசரன்வந் தியம்பக் கேட்ட
வேந்தலண்டர் விளம்பியதுங் கனவை யோர்ந்து
மந்திரிக ணவின்றதுவு முணர்ந்தே யுள்ள
மகிழ்வுறவக் கணத்தினவ ரோடுஞ் சென்று
அந்தமுறுஞ் சேடவெற்பை யடைந்தன் போடு
மமைச்சர்தமை முகநோக்கி யாழி சூழும்
நந்தமுல கிற்பசுவின் பால லைத்து
நாளையிவட் கொணர்திரென நவின்றிட் டானல். (19)

அயனருளுங் கடவுண்முனி பிருகு வென்னு
மருந்தவனுக் கன்பினொடு மறைந்தா னென்று
மயல்வெகுளி முதற்றீமை யாவும் போக
மாற்றிமிகு மெய்ஞ்ஞான வறிவின் மேலாம்
இயல்புடைய சூதனெழிற் சௌன காதி
யிருடியருக் கிசைத்தனனிவ் வெல்லா மிக்க
நயமுடைய பிரமாண்ட மெனும்பு ராண
நவையறநற் றெளிவுறநன் கறையு மன்னோ. (20)

---

றரவு - புற்றில் வாழும் பாம்பு. 18. விண்ணேறு - இடி. உரறி - ஒலித்து. மட்டு - தேன். 19. வனசரன் - வேடுவன். அண்டர் - இடையர். சேட வெற்பு - சேட மலை. ஆழி - கடல். 20. மயல் - மயக்கு. வெகுளி - கோபம்.

**சக்கரவர்த்தி அரசு புரிந்த அத்தியாயம் முற்றிற்று.**

## 11. தொண்டைமான் சக்கரவர்த்தி திருப்பணி உற்சவம் நடத்திய அத்தியாயம்.

**எழுசீர் விருத்தம்.**

நாரத முனிவன் பிருகுவுக் கன்பாய்
நவிலுவான் பின்னரு மந்தச்
சீருடை யாசற் காண்மைவெள் ளேனஞ்
சேரிடம் வேடுவன் செப்ப
நேருற வெவனுந் துருவியே செலுங்கா
னித்தலு நத்தைவித் தருந்தும்
வீரவெண் கேழல் கண்டதி சயித்து
விருப்புறீஇ நோக்கும்வே லையின்வாய் (1)

ஆங்கொரு வன்மீ கத்தினுட் செல்ல
வாய்வுறு மமையத்திற் றனக்குப்
பாங்குறை வேட னிறைவனை நோக்கிப்
பகருவான் பொற்கணன் முன்னர்த்
தேங்கிய கடலுட் டிண்புவி பெயர்த்துச்
செல்லுழி யவனுடல் கீண்டு
தாங்கிப் படியைத் தந்தவா ணேனந்
தானிஃ தையுற வின்றே. (2)

இப்பொழு திந்நீள் புற்றினை யகழ்ந்திட்
டெறிதரி னேகமா முதலாம்
ஒப்பரும் பரமன் வெளிப்படு மென்ன
வுத்தம விறையவன் கேளாத்
தப்பிதம் வருமுன் மொழிப்படி செய்த
றகுவதன் றெனவித முடனே
செப்பியுள் வெருவும் பத்தியுங் கனலத்
திரண்டவட் கோவலர் கொணர்ந்த (3)

---

1. ஏனம் - பன்றி. நித்தல் - நாள்தோறும். கேழல் - பன்றி. 2. வன்மீகம் - புற்று. பொற்கணன் - இரணியாட்சன். படி - பூமி. ஐயுறவு - சந்தேகம். 3. அகழ்ந்து - தோண்டி. இதம் - நன்மை. கனல - பெருக. கோவலர் - இடையர்.

பாலினுற் றிருமஞ் சனம்புரிந் தாங்கட்
பரியபுற் றைக்கரைக் குதலும்
மேலகத் தமா ருலகையும் விலேகொண்
மேன்மைய தாயொளி தவழுங்
கோலநன் மணிகள் குழுமவற் புதமாங்
கோமள மலிவிமா னத்தைச்
சாலவு மகிழ்வுற் றிருகணு ேனுக்கித்
தாழ்ந்தெழுந் திருகையுங் குவித்தே (4)

பத்தியோ டாங்கு நிற்புற வந்தப்
பன்மணி மானத்தி னுப்பண்
நித்தனு மூலப் பாஞ்சுட ராய
நின்மலன் றிகிரிசங் கிலங்க
உத்தம மான திருவுரந் தோன்ற
வொளிர்மணிப் பணிகள்வில் வீச
வித்தக வேன வுருவனு முதலே
வேட்கையா னுேக்கியஞ் சலித்தே (5)

பங்கயன் சிவன்வா சவன்முத லோரைப்
படைத்துட னன்னவர் களுக்கங்
கிங்கித மறிந்து தொழில்கள்கட் டளேயிட்
டெவரினு முயர்வற வுயர்ந்த
கொங்கலர் பசிய திருத்துள வலங்கற்
கொண்டலே யடைந்திடு மன்பர்
தங்களுக் கிட்ட காமிய மெல்லாந்
தந்துபின் முத்தியு மளித்தி. (6)

---

4. திருமஞ்சனம் - நீராட்டு. அமரருலகு - தேவர் உலகம். கோமளம் - சாயல். 5. மானம் - விமானம். நாப்பண் - நடுவிடம். திரு உரம் - திருமார்பு. பணிகள் - அணிகலன்கள். வில் - ஒளி. ஏன வுருவனு முதல் - சுவேத வராகமூர்த்தி. 6. பங்கயன் - பிரமன். வாசவன் - இந்திரன். இங்கிதம் - குறிப்பு. கொங்கு - தேன். அலங்கல் - மாலே. கொண்டல் - மேகம். இட்ட காமியம் - விரும்பிய பொருள்கள். முத்தி - மோக்ஷம்.

ஈசனே! கருணை மலிபெருங் கடலே!
யீறிலா வொருவனே! யுயரும்
மாசிலா வேத முடிமிசை நடிக்கும்
வாசாம கோசரப் பொருளே!
தேசனே! யுலகை யுண்டுமிழ்ந் தளந்த
தீரனே! திருவினுக் குவந்த
நேசனே! யென்று துதிசெய்தா னந்த
நேமியுட் டுளேந்துநின் றனனே. (7)

இவ்வகை முறையாற் பற்பல மொழிகொண்
டேத்தியங் கிறைஞ்சியா னந்தப்
பவ்வமுள் ளழுந்தி யுடல்புள கித்துப்
பரவய மாகிமுன் னின்ற
எவ்வமி னீதி பொறையற முடைய
விறைவனைப் பெரியவா ணேனச்
செவ்விய வுருவத் தனிமுத லுவந்து
திருவரு டழைப்புற நோக்கி (8)

மன்னகே ளெமக்குத் தெனுதுபால் வாச
மலர்மலி சாமிபுட் கரிணி
என்னுமித் தீர்த்தந் தனக்குமேற் றிசையி
னியைசுடர் மணிவி மானத்தின்
உன்னத மிகுசிந் தூரமரத் தின்கீ
ழுயரலர் மகளுர மிலகத்
தன்னிரு முழந்தா ளளவும்வன் மீகந்
தழைத்தெழீஇ மெய்யொளி தவழ (9)

நின்றனன் சீநி வாசனு முதல்வ
னிமித்தமே தெனினிக ரறுஞ்சீர்
ஒன்றிய பரம பதத்திருந் தார்த்த
வொலிக்குவப் புடன்செவி கொடுத்துத்

---

7. ஈறு - முடிவு. வாசாமகோசரம் - சொல்லுக்கு அடங்காப் பொருள். தேசனே - பிரகாசனே. ஆனந்த நேமி - ஆனந்தக் கடல். 8. பவ்வம் - கடல். பரவயம் - பரவசம். எவ்வம் - குறை. பொறை - பொறுமை. 9. புட்கரிணி - பொய்கை. சிந்தூர மரம் - புளிய மரம். உரம் - திரு மார்பு. இலக - விளங்க. வன்மீகம் - புற்று. 10. நிமித்தம் - காரணம்.

துன்றலைப் பாலின் வேலையை மருவித்
துயின்றுமிக் குளசரா சரங்கள்
என்றமன் னுயிர்க ளவநனி புரியு
மிரும்பவத் தொடரெலாந் தொலைத்தே (10)

சுத்தமாம் படிசெய் திகபரந் தமிலுஞ்
சுகந்தரும் பொருட்டதா யுயரும்
இத்தலத் தடைந்தா ஞகையா லவனை
யெய்தியஞ் சலித்தெழுந் தன்பாய்
எத்தலத் தவரும் வியப்புற வொளிசேர்
கோபுர மிணையின்மண் டபங்கள்
பத்திசெய் கோயிற் பணிகள்செய் வித்துப்
பண்புட னெனக்குநீ யுவப்பாய் (11)

தண்ணற வொழுகு மலர்வெறி கமழுஞ்
சாமிபுட் கரிணிமேல் சார்பில்
அண்ணலஞ் சீநி வாசன்வாழ் கோயிற்
கண்மிய வடாதுசெங் கனகத்
திண்ணிய கோயிற் றிருப்பணி யியற்றித்
தினமுமா ராதனஞ் சிறப்ப
உண்ணயப் புடனே செய்வியென் றுரைத்தாங்
குத்தமன் கரந்தன னன்றே. (12)

இவையெலாங் கேட்ட விறையவ னந்த
விரும்பணைச் சிந்துரத் தருக்கீழ்
உவமையின் முழந்தாள் வரையின்வன் மீக
முயர்தா நின்றசீ தரனைச்

---

ஆர்த்த - ஒலித்த. துன்று - நெருங்கிய. வேலை - கடல். சராசரங்கள் - அசையும் பொருளும் அசையாப் பொருளும். அவம் - வீண் செயல். பவத் தொடர் - பிறப்பிற் பாவங்கள். 11. இகபரம் - இம்மை மறுமை. அஞ்சலித்து - கைகுவித்து வணங்கி. 12. தண்நறவு - குளிர்ந்த தேன். வெறி - நறுமணம். அண்மிய - அணுகிய. வடாது - வடக்குள்ளது. நயப்பு - பற்று. கரந்தனன் - மறைந்தனன். 13. இறையவன் - அரசன். பணை - கிளைகள். தரு - மரம். சீதரன் - திருமகள் கேள்வன். மஞ்சனம் - நீராட்டு. சதுர்ப்

சுவையுறும் பாலான் மஞ்சனஞ் செய்யத்
துலங்கிய சதுர்ப்புய நேமி
தவளவெண் சங்க மகரகுண் டலங்க
டயங்கநற் பணியெலா மின்ன (13)

உரத்தினி னருளே யுருவமா மலர்மி
னுவந்துற வொளிதிசை யளப்பச்
சிரத்தினீண் முடிநன் கிலங்கவா னெழிலார்
சேவைதந் திடக்கணு னோக்கித்
தரைத்தலத் தினில்வீழ்ந் தெழுந்துளா னந்தந்
தழைத்தெழப் பரவய மாகிக்
கரத்தினைச் சிரமேற் கூப்பிமுன் னின்று
கருத்தொடு கழறலுற் றனனால். (14)

உலகெலாம் படைத்தே யளித்தழிக் கின்ற
வொருவனே யடியவர் பவநோய்
தொலைவுற வருளோர் டிம்மையம் மையினுஞ்
சுகந்தரு திருவினா யகனே
நிலையுறுங் கருணை மலிபெருங் கடலே
நின்மல மானமெய்ப் பொருளே
கலைகளி னுயர்வே தாந்தனே திருவேங்
கடதட மலையினின் றவனே. (15)

மூலமா மாதி தேவனே யென்றிம்
முறைபல பலசொலிப் பணியும்
சீலமார் தொண்டை மான்சக்ர வர்த்தி
திவண்முக மினிதுற நோக்கிப்

---

புயம் - நான்கு திருத்தோள்கள். நேமி - சக்கரம். தவளம் - வெண்மை. மகரகுண்டலம் - மகரவடிவாய்ச் செய்த காதணிகள். 14. உரம் - திரு மார்பு. மலர்மின் - தாமரை மலரில் வாழும் மின்னற்கொடி போன்ற திரு மகள். சேவை - காட்சி. பரவயம் - தன் வசமின்மை. 15. பவநோய் - பிறவிப்பிணி. இம்மை அம்மை - இப்பிறப்பும் மறுபிறப்பும். 16. திவள் -

பாலுறும் வேலைப் பாமனுஞ் செய்ய
பவளவாய் விண்டெதிர் விளம்பும்
சாலவு மகிழ்ந்தே னரசநின் பத்தி
தனையித யத்துற மதித்தே. (16)

உன்னுளம் வேட்கும் வரந்தனைக் கேளென்
றுரைசெய வரசனுண் மகிழ்ந்து
மன்னுமெம் பகைக ளனைத்தையும் வென்ற
மாதவர் காணவு மரிதாம்
நன்னய மிருந்த விப்படி வத்தை
நாட்டுளோர் யாவருந் தொழுதே
இன்னலற் றிடவீங் கென்றுநன் கிருக்க
வேண்டுமென் றிசைத்தன னன்றே. (17)

மாதவன் றுனீ வேட்டவா றிந்த
மலைமிசை யுறைகுது மென்னு
ஓதியு முலகிற் பத்திமை யுனைப்போ
லுஞற்றுந ரிலையென வுகந்து
நீதியா மனனை மிகப்புகழ்ந் தெனக்கும்
நின்மல வராகமூர்த் திக்கும்
மேதகு கோயிற் றிருப்பணி முதல
விருப்புற விரைவினி னடாத்தி (18)

மூன்றுகா லமுமா ராதன நாளு
முறைவழு வாமலே யுயருஞ்
சான்றவர் குழுவாற் செய்வியென் றுரைப்பத்
தரியலர்க் கசனியே றென்னுந்
தேன்றவ ழலங்கற் செம்பியன் மகன்மால்
செப்பிய பணிதலை மேற்கொண்
டான்றவர் துதிப்ப வாலய மியற்றி
யன்பினு ராதனந் தினமும் (19)

---

விளங்கும். 17. வேட்கும் - விரும்பும். படிவத்தை - தெய்வவுருவை. இன்னல் - துயர். 18. மாதவன் - திருமகள் கேள்வன். உஞற்றுநர் - செய்வோர். 19. தரியலர் - பகைவர். அசனி - இடி. அலங்கல் - மாலை. செம்பியன் - சோழன்.

காலமூன் றினினும் வைபவத் தோடு
கருத்துற நடத்திவைத் தன்பாற்
சீலமாய் நித்ய பக்கமா தத்தின்
றிருவிழா வினிதுநன் கியற்றி
வேலைசூழ் ஞாலம் வியப்புறப் பிரம
வுற்சவம் வேங்கடத் தானுக்
கேலவே செய்வித் திடுவனென் றுளத்தி
னெண்ணியே கன்னியாந் திங்கள் (20)

தன்னிலே துவசா ரோகண விழாவைத்
தானிய மத்துட னடாத்த
அன்னவா கனனோ டான்புரு கூத
னாதியாந் தேவர்க ளெவரும்
மன்னினர் ஞான யோகியர் தவத்தோர்
மருவினர் மண்ணுறு வேதர்
நன்னய வாசர் வசியர்சூத் திரர்க
ணண்ணின ரெண்ணிலர் மாதோ. (21)

எத்தலத் தவரும் பணிமலை யீச
னிணையடித் தாமரை விரும்பிக்
கைத்தலஞ் சிரத்திற் குவித்துவந் தேத்தக்
கமலைநா தன்றிரு விழாவை
மெத்தவை பவமா யிறையவ னடத்து
மேன்மையைக் கண்டவ ரெவரும்
பத்தியி னன்பி னுவட்டெழீஇப் பணிந்து
பற்பல பகர்தன்மே யினரே. (22)

ஆவண மெல்லாங் கன்னலுங் கமுகு
மரம்பையு மகாதோ ரணமும்
தூவண மலரி னலங்கலும் மணியின்
றொங்கலும் விதானமுங் கோல

---

20. நித்ய பக்க மாதத்தின் திருவிழா - நாள் விழா, பக்ஷ விழா, மாத விழா என்ற மூன்று திருவிழாக்கள். பிரம்மவுற்சவம் - பெருந் திருவிழா. கன்னியாம் திங்கள் - புரட்டாதி மாதம். 21. துவசாரோகணம் - கொடியேற்றம். அன்னவாகனன் - பிரமன். புருகூதன் - இந்திரன். 22. பணிமலை - சேஷகிரி. உவட்டு - பெருக்கு. 23. ஆவணம் - வீதி. கன்னல் -

மேவுகா வணமுந் தீபமும் பொன்னல்
விளங்குபூ ரணகும்ப முடனே
தேவரும் வியப்ப வலங்கரித் திருக்குஞ்
செயலினைச் சிலர்புகழ்ந் திடுவார். (23)

மனையிடந் தோறுஞ் சாந்தினன் மெழுகி
மதிறொறுஞ் சித்திர மெழுதி
நனைமல ரலங்க னவமணி மாலை
நாற்றியு நறும்புகை கமழப்
புனைவிதா னங்க ளியற்றியுங் கோலம்
புனைந்துமற் றளவிலா விதமாய்
வனைதல்செய் திருக்கு மகிமையைப் புகழ்ந்தே
வழுத்துவார் சிற்சிலர் மாதோ. (24)

அன்னதா னங்கோ தானம்பூ தான
மம்பொனின் றனமோ டெழிலார்
கன்னிகா தான முதலவா யறிஞர்
கழறிய சோடச மென்னும்
நன்னய தான நடத்திடும் பெருமை
நாடிநெஞ் சகமகிழ் வெய்தி
என்னவிம் மிதமீ தென்றுகொண் டாடி
யியம்புவார் பற்பலர் புகழ்ந்தே. (25)

இன்னவா றெவரு மதிசயஞ் சிறப்ப
வியம்பியாங் கிருந்துழி யழகாய்
மன்னிய வீதி தோறுமெய் யடியார்
வணங்கிட வுகந்தெழுந் தருள
அன்னபோழ் தரிய விருக்கெசுர் சாம
மதர்வணந் தம்மையந் தணர்கள்
கன்னியந் துளவோன் பின்புற நின்று
கழறுவே தத்தொனி யாலும் (26)

---

கரும்பு. அரம்பை - வாழை. தூவணம் - தூய நிறம். தொங்கல் - மாலை. விதானம் - மேற்கட்டி. காவணம் - பந்தர். 24. நாற்றி - தொங்க விட்டு. 25. சோடசம் - பதினறு. விம்மிதம் - வியப்பு. 26. கன்னி - புதுமை.

மாதவன் றனக்கு முற்புறங் கனிற்சீர்
வைணவர் தமிழ்முது மறையை
ஓதிடுந் தொனியுந் தர்க்கவியா கரண
முதலுயர் சாத்திர மாறும்
பேதக மின்றிக் கற்றவர் திரண்டு
பெட்புறப் பேசுறு மொலியுங்
கீதவே ழிசையின் றுழனியுங் கஞலிக்
கிளத்தொலி செவிபுகா தன்றே. (27)

தூரிய முருடா னகந்துடி திமிலை
துந்துபி படலிகை பதலை
பேரிகை முரசு தகுணிதந் தடாரி
பீலிவார் முழவொடு பம்பை
சீருறு சின்னங் காகள முதலாச்
செப்புவாச் சியம்பல பலவும்
வாரியி ளொலியு முட்குமா முழங்க
வானமுஞ் செவிபுதைத் ததுவே. (28)

களங்கிரு மதிய நிகர்முக மின்னார்
கையினின் மங்கல விளக்கம்
விளங்குற வேந்தி வரவெணி லாத
பத்திரம் வீசுசா மரைகள்
துளங்குகே தனங்க ளாலவட் டங்கள்
சுருட்டிகண் முதலபல் லணிகள்
இளங்களி றனையோ ரெடுத்துமுன் செல்ல
வெங்கணு நறும்புகை கமழ. (29)

---

27. வைணவர் தமிழ் முதுமறை - ஸ்ரீ நாலா யிரதிவ்ய ப்ரபந்தம். பெட்பு - விருப்பம். கீதவேழிசை - பாட்டுக்குரிய ச, ரி, க, ம, ப, த, நி என்ற சுரங்கள். துழனி - ஒலி. கஞலி - நெருங்கி. கிளத்தொலி - சொல்லும் ஓசை. 28. இதின் முதலிரண்டடிகளில் வகை முதலடுக்கு அணி உள்ளமை காண்க. இதிற் குறித்த பெயர்கள் பலவும் வாச்சியப் பெயர்கள். வாரி - கடல். உட்குமா - அஞ்சுமாறு. 29. களங்கு இருமதியம் - கறை யற்ற திங்கள். கேதனம் - சிறுகொடி. ஆலவட்டம் - பெரு விசிறி. இளங்களிறு அனையார் - இளைஞர்கள்.

இப்படிக் கதழ்ந்த விழாவணி யென்று
மெங்குநாங் கண்டிலோ மென்ன
ஒப்பிகு மும்பர் முனிவர்க ளரச
ரொருவருக் கொருவர்முன் புகழ்ந்து
செப்பியுள் ளுவகைப் பெருங்களி சிறப்பச்
சேவைசெய் தங்கைகூப் பிடுவார்
எப்பொழு தினுந்தந் நெஞ்சநெக் குருகி
யெண்ணியும் வாக்கினேத் தெடுப்பார். (30)

அதிசயஞ் சிறப்ப வின்னண மாமா
தங்கமோ டரிமுதற் பலவாம்
கதிசெய்வா கனங்க டமிற்றினந் தோறுங்
களிப்புறத் தெருவல மாக
புதியநன் மணிக ளழுத்திய விரதம்
பொற்பநற் பூமினுட் குகந்த
பதியெழுந் தருளு மணியினை யெவரும்
பரிந்துள நோக்கினர் பணிவார். (31)

முண்டகன் சிவன்விண் ணிறைமுத லோர்கண்
மொய்த்தடி தொழநவ தினத்தின்
விண்டுநா ளென்ன விளம்புறு திருவோ
ணத்தினன் றதிகமேன் மையதாய்
எண்டவர் புகழுஞ் சாமிபுட் கரிணி
யெனும்பெயர் பெற்றதீர்த் தத்திற்
றிண்டிறன் மிகுத்த வாழியாழ் வானைச்
சிறந்தவ விருதமாட் டியபின் (32)

அன்றுநீ ணிசியி னுன்முறை துவசந்
தனையவ ரோகணஞ் செய்து
துன்றிய பத்தி பயத்தொடு தீப
தூபநை வேத்திய மியற்றி

---

30. கதழ்ந்த - விரைந்த. 31. ஆ - காமதேனு. மாதங்கம் - யானை. அரி - சிங்கம். இரதம் - தேர். பூமின்னுள் - திருமகள். பதி - தலைவன். 32. முண்டகன் - பிரமன். நவ தினம் - ஒன்பது நாள். விண்டு நாள் - விஷ்ணுவுக்குரிய நட்சத்திரம். ஆழியாழ்வான் - சக்கரத்தாழ்வார். அவ

ஒன்றுட னவனு டன்னிலீ ராறென்
றுவந்தபூ சனையொடு சிறப்பாய்
வென்றிசேர் புட்ப யாகமு மேலாம்
விதிபிற ழாவகை முற்றி (33)

விழுமணி குயின்ற வானந்த நிலய
மெனும்விமா னத்தினின் மேவித்
தொழுதிடும் பிரம னான்புரு கூதன்
முதல்வரு சுவர்க்கநாட் டவர்க்கும்
பழுதறு தவஞ்செய் பண்ணவர் தமக்கும்
பாருறை யந்தண ரரசர்
குழுவிய வசியர் சூத்திர ரென்னக்
கூறிய வடியவ ரெவர்க்கும் (34)

விடைகொடுத் தருளி வெறிகமழ் துளப
விமலனு திப்பிரா னிருக்க
அடையலர்க் கசனி யாயவேற் சோழ
வாசருள் குமரனு மடைவே
நெடியவன் றனக்குத் திருவிழா நடாத்தி
நேர்மையின் முடித்துடல் புளகம்
உடையனு யிதய மகிழ்வா னந்த
முற்றிட யாவரும் புகழ (35)

அகனில மிசையின் வசந்தமொத் துயர்தன்
னரண்மனை யடைந்தன னென்று
மகதியாழ் முனிவன் பிருகுவுக் குகப்ப
வகுத்தன னெனவுயர் சூதன்
றகைபெறுஞ் சௌனகாதியர் தமக்குச்
சாற்றின னீதெலாம் விரிவாய்
நிகாறு பிரமாண் டப்பெயர் பெற்ற
நீள்புரா ணங்கிகழ்த் திடுமால். (36)

---

விருதம் - அவப்பிருத ஸ்நாநம். 33. நிசி - இரவு. அவரோகணம் - கீழ் இறக்குதல். ஈராறு - பன்னிரண்டு. 34. குயின்ற - அழுத்திய. 35. வெறி - நறுமணம். அடையலர் - பகைவர். அசனி - இடி. புளகம் - மயிர்க்கூச்சு. 36. வசந்தம் - இந்திரன் மாளிகை : சையந்தம். மகதியாழ் - மகதி என்ற வீணை.

தொண்டைமான் சக்கரவர்த்தி திருப்பணி உற்சவம்
நடத்திய அத்தியாயம் முற்றிற்று.

## 12. கிருஷ்ண சன்மாவின் சரித்திரம் உரைத்த அத்தியாயம்.

### எழுசீர் விருத்தம்.

செவிக்கமு தெனயாழ் நாப்பிசை வாக்குந்
திருக்கறு முனிவான் மீட்டும்
தவச்சிறப் புடைய பிருகுவை நோக்கிச்
சாற்றுவான் வேங்கடத் தானுக்
குவப்புறப் பிரம வுற்சவ முடித்த
வொப்பிலா வொண்முடி யாசன்
புவிக்கணி னறங்கள் பொலிதா மிகுத்துப்
பொற்புற வாசுசெய் நாளில் (1)

அளிக்குல நறுந்தா தளைந்துபாண் மிழற்றி
யாடிடக் களிநறுந் தேறல்
துளிக்குமென் முளரிச் சுமநசத் தொடையற்
றோமிலா வேதிய னொருவன்
களிக்கயல் பொருவுங் கருந்தட நெடுங்கட்
கற்புறு மனைவியோ டறங்கள்
விளக்குறு வேந்தன் முன்வா னோக்கி
மிகமகிழ்ந் தின்னுரை வழங்கி (2)

அய்யநீ யாரை யிவணடை கவ்வை
யஃதெனக் கருளுதி யெனலும்
செய்யவந் தணனுந் தெக்கண திசையின்
மருவுசா கரக்கரை திகழும்
பொய்யிலா வறிஞர் பொதிதரு சக்ர
புரியினி லறநிலை யறிந்த
துய்யனுங் கூர்ம னெனுமறை தெருண்ட
சுகுணனெற் பெறுதந்தை யாமால் (3)

1. நாப்பிசை - நரம்பினின்றும் எழும் பாடல் ஒலி. திருக்கு - குற்றம். 2. அளிக்குலம் - வண்டுக் கூட்டம். பாண் - பாடல். முளரி - தாமரை. சுமநசம் - பூ. தொடையல் - மாலை. தோம் - குற்றம். கயல் - கெண்டை மீன். 3. கவ்வை - காரியம். சாகரம் - கடல்.

### அறுசீர் விருத்தம்.

என்பெயர் கிருட்டிண சன்மா சுதாமணி யெனது பாரி
அன்புடன் திங்கண் மும்மை யாம்பசுங் குழவி தைம்மேல்
இன்புற வேன்று தீர்த்த யாத்திரை யேகு மென்றன்
பின்புவந் தடிய யர்ந்து பேதுறீஇத் தெருமந் தாளால். (4)

காசியாத் திரையா னெய்துங் கருத்தினே னாக லாலே
மாசிலென் மனைவி யோடு மகனையு மிங்கு வைப்பேன்
ஆசறக் காத்தி யாயின் யான்விரைந் தவணின் றெய்தித்
தேசுறு கங்கை யாடித் திருமியிங் குவந்து மீள்வேன். (5)

மன்றலங் குழலி யோடு மைந்தனைக் கொண்டு செல்வேன்
என்றுளம் வலித்து நின்சா ரெய்தினே னெனவு ரைப்ப
வென்றிகொ ளரச னந்த வேதியன் விளம்பக் கேளா
நன்றென வுடம்பா டெய்த நான்மறை துணிந்த தூயோன் (6)

தப்பறு மனையா ளோடுந் தனையனை யரசன் றன்பால்
ஒப்புவித் துயர்மால் பாதத் தொழுகுநீ ராடச் சென்றான்
விப்பிர னில்லாட் கந்த வேந்தனும் புக்கி லொன்று
செப்பமா யமைத்தோ ராறு திங்களுக் கமையு ணவும் (7)

சகலமு மனைக்கண் வைத்துத் தகுமறை யாளன் வேட்ட
அகமுடை யாடன் னோடு மரும்பெறற் சேயைச் சேர்த்துப்
புகழுடை யரச னேக்கிப் புகலுவான் றூயே யிந்தத்
தகைபெறு மனையை நீத்து வெளியிற்சா ராம னாளும் (8)

வேண்டுவ மிசையா நின்று வேட்கையி னுறைதி யென்றவ்
வாண்டகை யறைந்து சீரா ரம்மனைப் புறக்க பாடம்

---

4. பாரி - மனைவி. திங்கள் - மாசம். பேதுறீஇ - மயங்கி. தெருமந்தாள் - கலங்கினாள். 5. ஆசு - குற்றம். காத்தி - காப்பாற்றுவாய். திருமி - திரும்பி. 6. மன்றல் - மணம். 7. தனையன் - குழந்தை. மால்பாதத் தொழுகுநீர் - கங்கை. விப்பிரன் - பிராம்மணன். புக்கில் - தங்கும் வீடு. உணா - உணவு. 8. வேட்ட - மணந்த. அகமுடையாள் - மனைவி. 9. மிசையா நின்று - உண்டு. கபாடம் - கதவு.

பூண்டுறச் செறித்துத் திட்பப் பொன்னிலச் சினைபொ றித்திட்
டீண்டிய மணியிற் பொன்னி னிலங்கெழிற் சினக ரம்போய் (9)

இதயம தொருப்பட் டாளு மியலினி னிருந்து விட்டான்
மதியுடைக் கிருட்ண சன்மா வென்னுநன் மறையோன் கங்கை
நதியிடைத் துனைந்து மூழ்கிச் சிற்சிறு ணடந்த பின்னர்
துதிபெறு மாசன் முன்னர்த் தோன்றிநின் றினைய சொல்லும். (10)

என்மனை யாட்டி யோடு சுதனைநின் னிடத்து வைத்துச்
சன்மமீ டேறக் கங்கா சலத்திடைச் சென்று மூழ்கி
நன்மறைப் படிசி ராத்தங் கயையினி னயந்து செய்து
முன்மன மியைந்து சொற்ற மொழிப்படி திரும்பி வந்தேன். (11)

எண்சீர் விருத்தம்.

மனைவியுமைந் தனுமெங்கே யென்று கேட்க
மன்னவனும் மனந்திடுக்கிட் டிந்த நூலோன்
றனதுசுத னொடுபாரி தனைநா மந்தத்
தனியகத்தில் வைத்ததின்பின் விசாரி யாமல்
நினைவுகுலைந் தோமென்றே வருந்தி யத்தை
நெஞ்சடக்கி மந்தணமாய்ப் பாங்கர் நின்ற
மனிதனிடந் திறவுகோ றனைக்கொ டுத்தம்
மனையினிற்சென் றறிந்துவிரை வுடன்வா வென்றான். (12)

கணத்திலவன் விரைந்துசென்று நோக்கி வந்து
காதலனுந் தாயுமடிந் துலந்தா ரென்றே
உணர்த்தவா சன்வினவி யந்தோ வந்தோ
வுயர்குலப்பெண் ணத்திசிசு வத்தி மேவிப்
பிணித்தனவே யெனமிகுந்த துயரி னாழ்ந்து
பெருமைபெறு வேங்கடத்தான் றனையு ளத்தே
எணித்தனது மனந்தேறி யெதிராய் நின்ற
வின்மறையோன் முகநோக்கி யியம்ப லுற்றான். (13)

---

இலச்சினை - முத்திரை. சினகரம் - கோயில். 10. துனைந்து - விரைந்து. 11. சுதன் - மகன். கயை - கயா என்ற ஊர். 12. மந்தணம் - இரகசியம். பாங்கர் - பக்கம். 13. உலந்தார் - ஒழிந்தார். பெண்ணத்தி சிசுவத்தி - ஸ்திரீ ஹத்தி, சிசு ஹத்தி என்ற பாப தோஷங்கள்.

ஆதிநான் முழுதுணருந் தூயோய் நின்பே
ரகத்தவளென் ஞணையினுற் குழவி யோடும்
தாதுகமழ் துளவணிவேங் கடத்தா னம்பொற்
ருடொழுவே கினனுளை யிவணீ சார்ந்து
காதலியை மகவினுட னழைத்துக் கொண்டுன்
கடிநகருக் கேகெனவே யினிய தாக
ஓதியவன் றனையனுப்பி யரச னைந்தவ்
வோர்நொடியின் வேங்கடத்தி னும்பர் மேவி (14)

இலக்குமிநா யகனடியை யிறைஞ்சி யேத்தி
யிருகாமுஞ் சிரத்தின்முகிழ்த் தெதிரா யுள்ளம்
கலக்கமறத் தீர்க்கவைாக் கியத்தி னேடுங்
கருதியே யொருமுகுர்த்த கால நின்று
இலக்கமறு மண்டமெலாம் படைத்துக் காத்திட்
டிறுதிசெயுங் காரணனே யன்பர் துன்பம்
விலக்கியருள் செயுங்கருணைக் கண்ணு வென்று
மிகப்பலவாய்த் துதித்தினமும் விளம்பு வானே. (15)

எப்பொருட்கு மிறையாகி விளங்குஞ் சோதி
யீசனே கொடும்பாவ மியற்றி வந்தேன்
இப்பொழுதப் பிணியுலப்ப வருள வேண்டு
மேதென்னி லோர்மறையோன் கங்கைக் கெய்தித்
தப்பறவே மூழ்கிவர வேண்டு மென்று
தன்மனையா ளையுங்குழவி தனையு மென்பால்
ஒப்புவித்தே கினனடியே னவர்கண் மேவ
வோர்விடுதி யமைத்ததின்க ணிருக்கச் செய்தேன். (16)

திங்களிரு மூன்றினுக்குஞ் சாலு ணவைச்
சிறப்பினளித் தாசுரிமை புரிவிற் சிந்தை
தங்கிமறந் திருந்துவிட்டே னந்த நூலோன்
றகுநதிக ளிற்படிந்து சிலநாள் செல்லக்
கங்கையினி ல்டைந்தாடி யின்று வந்தென்
காதலியு மகனுமெங்கட் காட்டு கென்றான்
அங்கடியேன் மனமாழாந் தொருவன் றன்னை
யழைத்தந்த மனைத்திறவு கோலை யீந்தே (17)

---

14. துளவு - துளசி. நொடி - நொடிப் பொழுது. 15. இலக்கம் - எண்ணிக்கை. 16. விடுதி - வீடு. 17. மாழாந்து - வருந்தி.

சீக்கிரஞ்சென் றுணர்ந்துவா வெனயான் சொல்லச்
சென்றவன்றா யும்மகனு மிறந்து மண்ணில்
ஆக்கையுலந் தேகிடந்த தறிந்தென் முன்ன
ரறைந்திடயா னதிதுயரத் தாழ்ந்தே யுள்ளம்
நீக்கமற வடிகளை நினைந்து தேறி
நேருறவவ் வேதியன்றன் வதன நோக்கி
மேக்குயர்வேங் கடமுடையான் றனது செய்ய
விரைமலர்த்தா டொழச்செலுத்தி யிருக்கின் றேனால். (18)

அறுசீர் விருத்தம்.

மைந்தனுந் தாயு நாளை வருகுவ ருடன்கொண் டேகி
உந்தன்மா நகர்க்கே கென்ன வுரைத்தவன் றன்னை நீங்கி
வந்தன னடியே னென்று வணங்கிவாய் புதைத்து நின்றான்
எந்தமக் கிந்தப் பாவ மெய்திடா தவர் டம்மை (19)

உயிர்பெறும் படிசெய் யென்றாங் குரைத்தவன் வேண்ட லோடும்
நயமுட னளின நங்கை நாயகன் மனனை நோக்கிப்
பயமுற லொழிதி யென்று பகர்ந்துபின் னியம்பு மந்த
இயலுறு மறையோன் கங்கைக் கெய்துபோழ் தெனைச்சே வித்தான். (20)

விடைகொடு பெயர்ந்தா னந்த விப்பிர நாரி யுள்ளத்
திடையதி பத்தி யென்மே லியைந்தவ ளாகை யாலம்
மடவா லுயிரும் பிள்ளை சீவனும் வழுவா வண்ணம்
தடையற வுய்யச் செய்து மென்றுரை சாற்றிப் பின்னர் (21)

எழுசீர் விருத்தம்.

சேனைகா வலனை நோக்கியீ சான
திசையினிற் பவமெலாம் பாற்றி
ஞானமே யருளுஞ் சேரமென் கின்ற
நலனுறு தீர்த்தமொன் றுறைவ

---

18. ஆக்கை - உடல். வதனம் - முகம். மேக்கு - மேல். 20. நளின நங்கை - தாமரை மலரில் தங்கிய திருமகள். 21. விப்பிரநாரி - பிராம மணி. மடவரல் - இளம்பெண். 22. சேனை காவலன் - சேனாமுதலி. ஈசானதிசை - வட கிழக்கு. பவம் - பிறப்பு. பாற்றி - ஓட்டி.

தானதா லந்நீர் முகந்துகொண் டந்த
வரிவைதன் னுடலினு மவடன்
சூனுதே கத்துந் துவற்றினப் போழ்தே
தோன்றுவ ருயிரொடு மெனவே (22)

செப்பியச் சேனு பதியைநே மிக்கச்
சீக்கிரத் தினிலெழுந் தவனும்
அப்படிச் செய்து முடிக்கவக் கணத்தி
னவ்விரு வருந்துயின் றெழுந்த
தொப்பென வுலர்ந்த வுடம்பினி லுயிர்வந்
தெழுந்தன ருலகுளோர் மகிழ்ந்தார்
இப்படிச் சிறந்த வியப்பினைச் சிறிது
மெங்குநாங் கண்டிலோ மெனவே. (23)

கலிநிலைத்துறை.

அன்ன காலையி னழியம் பானந்த னுளன்
தன்னை நாயகி தனையனே டுறச்சடு தியிலே
இன்ன றீர்தர வழைத்திஃ தியம்புவா னினக்கிங்
கென்ன வேண்டுவ தியம்பென விசைப்பதா யினனால். (24)

மண்ணின் வீழ்ந்தெழுந் திருகாங் குவித்துவாய் பொத்திக்
கண்ண கன்றபே ருலகெலாங் காத்தளித் தழிக்கும்
தண்ணந் தாமரைத் தாக்கணங் குறைதிரு மார்பா
அண்ண லேயுன தடிமிசை யன்பெனக் கென்றும் (25)

அகல்கி லாதுற வாந்தரு கெனலுமவ் வரமே
மிகம கிழ்ந்துமா லருள்செய வேதியர் திலகன்
உகவை மீக்கொள வுறைதரு காலையிற் பிரமன்
வகிர்செ ழுஞ்சடை மழுவலான் வாசவன் முதலோர் (26)

அரிவை - பெண். சூனு - பிள்ளை. துவற்றின் - தெளித்தால். 24. ஆழி அம்பரன் - திருப்பாற்கடல் முதல்வன். தனையன் - பிள்ளை. இன்னல் - துன்பம். 25. தாக்கணங்கு - தெய்வ நங்கையார். 26. உகவை - விருப்பம். மழுவலான் - சிவன். வாசவன் - இந்திரன்.

ஆத ரத்துட னேசன காதியோ கியரும்
தீதில் வேகியன் கிருட்டிண சன்மனற் செய்கை
காத லாயுணர்ந் தநந்தபூ தரங்கடி நடைந்து
மாத வன்றனை வணங்கியே துதித்தனர் மகிழ்வால். (27)

எழுசீர் விருத்தம்.

அப்பொழு தமலன் செம்பியன் மகனை
யருட்டிருக் கடைக்கணு னோக்கி
இப்புவி யதனி லுனக்குநே ரொருவ
ரில்லையென் றினிதுற மகிழ்ந்து
செப்பியிம் மறையோன் புன்சிறு தேவர்ச்
சிந்தனை செய்தல்போ லெனையும்
ஒப்புற வுளத்தி னினைந்துபன் னாளா
யுறைந்தன னகையி னாலே (28)

இனிவரு பிறப்பி னிழுக்கறு வேதாந்
தத்தினை யியைபுறத் தெருண்ட
புனிதனைப் பரந்தா மத்தினைப் பெறுவா
னென்னலும் புகழ்பெறு மரசன்
கனிவுற மறையா ளனைச்சுத னினிய
காதலி யுடனரு கழைத்து
மனமகிழ் வுறப்பொன் மணிப்பணி யாடை
மட்டிலா வெடுத்தெடுத் தளித்து (29)

உமதுதே யத்திற் கேகுமி னென்று
விடையளித் துயர்குண வரசன்
நிமலனை வணங்கித் தன்பதி யணுகி
நிச்சமும் வேங்கட மலைசென்
றுமையிடப் பாகன் றுயர்களைந் தவனை
யுவமயில் பத்திமை செய்து
விமலமாம் பரம பதம்பெறக் கருதி
யிருப்புட னிருந்தனன் மாதோ. (30)

---

27. அநந்த பூதரம் - அநந்தகிரி என்ற திருமலை. 29. தெருண்ட - தெளிந்த. பரந்தாமம் - பரமபதம். 30. சுதன் - பிள்ளை. பணி - ஆபரணம்.

அடைந்தவர் வேட்ட வேட்டவா ருங்க
ணருள்சுரந் தளிக்குமொண் கமல
மடந்தைதன் மணாளன் மறிதிரைப் பாலார்
வாரியை மந்தர வரையாற்
கடைந்தவன் றிருவேங் கடமென வுயருங்
கரியபூ தரத்திறெண் முடிமேல்
இடந்தனிற் பிரமன் சிவன்மக பதியோ
டெவர்களு மேத்தநின் றனனால். (31)

ஈதெலா முயருஞ் சௌனகா தியருக்
கின்புற நறுஞ்சுவை யெனவச்
சூதமா முனிவ னருளுவட் டெழுமா
சொற்றன னிதனைநா றேர்ந்த
மேதையோர் புகழ்ந்தேத் துறுபிர மாண்ட
மேதினி யோருளந் தெளிய
ஓதுமா லுளமன் போடுகேட் பவர்க
ளுவந்தவை யடைந்துவாழ் குவரால். (32)

கிருஷ்ண சன்மாவின் சரித்திரம் உரைத்த அத்தியாயம் முற்றிற்று.

## 13. மேருபுத்திரன் என்பதை விளங்க உரைத்த அத்தியாயம்.

### எழுசீர் விருத்தம்

பரிதிதன் மரபிற் பிறந்தா சாளும்
பார்த்திவன் றிலீபனென் றெவரும்
கருதருங் குணத்தோ னாண்மனை நோக்கிக்
கலைபல வுணர்தரு வாசன்
வருதலு மெதிர்கொண் டுபசரித் துயர்ந்த
மணிகுயி லாசனத் திருத்தி
இருகரங் குவித்துத் தொழுதுநின் றேத்தி
யியம்புவா னயம்பெற மாதோ. (1)

---

31. மணாளன் - கேள்வன். வாரி - கடல். வரை - மலை. பூதரம் - மலை. 1. பரிதி - சூரியன். பார்த்திபன் - அரசன். குயில் - அழுத்திய.

சகலமு முணர்ந்த முனிவனே சேடா
சலத்தின்மான் மியமத னிற்சேர்
தகைபெறுந் தீர்த்தங் களின்றொகை யனைத்துந்
தாக்கணங் குறைதிரு வுரத்தோன்
மகிழ்வுட னவணின் வந்தகா ரணமும்
வழங்கென வத்திரி பயந்த
மகனக முவந்து திலீபமன் னவனே
கேட்கென வழுத்தன்மே யினனால். (2)

காசொளி திகழ்வேங் கடமலை சுவண
முகிநதிக் கரையினைந் தாய
யோசனை யகன்று நீளமீ ரைம்ப
தியோசனை யுடையதா யுயர்ந்த
தேசுறு மேரு மலைதருஞ் சுதனுய்ச்
சேடனோ டவணடைந் தமையால்
மாசறு சேடாத் திரியெனப் பெரியோர்
வழுத்துவ ரெனவழங் கினனால். (3)

கேட்டவத் திலீப மன்னவ னநந்தன்
கேடின்மே ருவின்சுத னோடு
தேட்டமா யவணின் வந்தமை யெல்லாந்
தெரிவுற விளம்பெனத் தவத்தின்
நாட்டமாந் துருவா சப்பெயர் முனிவ
னவிலுவான் சேடனோர் காலத்
தீட்டமா மண்ட மெண்ணில்கோ டியெலா
மினிதுற வகட்டிடை வைத்தான். (4)

எப்பொரு டமக்கு மிறைவனே யாகு
மீறிலா விலக்குமி கணவற்
கொப்பருந் தளிம மாகினோ மென்று
முலகெலாஞ் சுமக்கின்றோ மென்றும்

---

2. தாக்கணங்கு - திருமகள். உரம் - மார்பு. அத்திரி - முனிவர் பெயர். வழுத்தல் - சொல்லுதல். 3. சுவணமுகி - பொன்முகரியாறு. சுதன் - பிள்ளை. அத்ரி - மலை. 4. அநந்தன் - ஆதிசேடன். தேட்டம் - தேடுதல். அகடு - வயிறு. 5. தளிமம் - படுக்கை. தருக்கு - கருவம்.

தப்பறுந் தேவர் யாவரு நமது
சத்தியிற் றாழ்ந்தவ ரெனவும்
இப்படிச் செருக்கித் தருக்குட னிருக்கு
மெல்லையிற் சதாகதி யென்போன் (5)

திருப்பயோ ததியிற் றிருவொடு மிலங்குஞ்
செய்யதா மரைக்கண்மா யவனை
விருப்பொடு பணிதற் கெண்ணியே யணுகும்
வேலையி லாழியங் பரமன்
மருப்பொலி கமலை மண்மக ணிளை
மருங்குற மனோதத் துடனே
உருப்பொலி பிரமா னந்தமாம் வனத்தி
னுகந்துறை யமையமா யதினால் (6)

நீயிவண் வருதற் கடாதெனச் சினந்து
நேரினின் றாதிசே டன்றான்
வாயுவா னவனைத் தட்பவு மவன்றன்
மனத்ததி கதங்கொடே யெங்கும்
போயுற வசிக்கு மென்னைநீ மறிக்கும்
பூரண சத்தனோ வென்னத்
தூயநன் மணிச்சூட் டநந்தனு முனிந்தா
சுகனொடு சொல்வதா யினனே. (7)

ஆதிமா றனக்கியான் பாயலாய்ச் சிறந்த
வாதன மாய்க்கவி கையுமாய்ப்
பாதுக மாயும் பாங்குற விருந்து
பணிபல நாடொறு மியற்றிப்
பேதக மின்றி யந்தரங் கத்தும்
பிரிகிலே னீயெனைப் போல
ஓதரு மடிய னய்மிகு சத்தி
யுள்ளவ னயினென் முன்பே (8)

---

சதாகதி - வாயு. 6. பயோததி - திருப்பாற்கடல். மரு - மணம். கமலை - இலக்குமி. 7. வானவன் - தேவன். தட்ப - தடுக்க. கதம் - கோபம். சத்தன் - வலிமையோன். சூட்டு - முடி. ஆசுகன் - வாயு. 8. பாயல் - படுக்கை. ஆதனம் - இருக்கை. கவிகை - குடை. பாதுகம் - அடி நிலை. பேதகம் - மாறுபாறு. அந்தரங்கம் - உள்ளம்.

வாவென முனிந்து நின்றிட நகைத்து
வாயுவுஞ் சேடனை நோக்கிக்
காவலிற் பூசை யென்னநீ யுள்ளே
கரந்துகொண் டுறைபவன் யானே
மாவலி யுடைய யானைபோ லெங்கு
மருவுமெவ் வுயிர்க்குமா தாவாய்
மேவியே திரிவன் யானலா தெங்கும்
விளங்கிய பிராணியு மிலையோ (9)

பலத்தினு ஞானந் தன்னினும் விண்டு
பத்தியின் மேன்மையி னாலும்
நலத்தினு மெனக்குச் சரிசொல வெவனு
நாடிலா ருளரென நவிலச்
சலத்தொடு மனந்தன் சாற்றுவா னுனேநீ
தான்புகழ்ந் துரைத்தறக் கதுவே
ஒலித்தெழு மருத்தே பிறர்களா லன்றே
வுரைப்பது கீர்த்தியென் றிசைத்தே (10)

வீணிலே பிதற்றி யாவதெ னிருவர்
வீரமும் விளக்கமா யெவருங்
காணவே புரிவோ மெனவிழி சேப்பக்
கதங்கொடு மொழிந்திடுங் காலை
வாணிநா யகனோ டுலகெலா முந்தி
மலரிடை யளித்தவன் வாலும்
ஏணுலா வநந்தன் றனக்கும்வா யுவுக்கு
மெய்திய விகலதை யிசைப்ப (11)

திருச்செவி சார்த்தி யாழியா னாதி
சேடனற் றிறனறிந் திருந்தும்
பெருத்தெழு மமதை யடக்கிடும் பொருட்டும்
பேணிலீ லார்த்தத்தின் பொருட்டும்

---

9. கரந்து கொண்டு - ஒளிந்து கொண்டு. மாவலி - மிக்க வன்மை.
10. விண்டு - விஷ்ணு. நவில - சொல்ல. சலம் - பொறாமை. மருத்து - காற்று. 11. சேப்ப - சிவக்க. வாணி நாயகன் - பிரமன். உந்தி - கொப்பூழ். ஏண் - வலிமை. இகல் - பகைமை. 12. லீலார்த்தம் - விளையாட்டின் காரணமாக.

வருத்தமுள் ளநந்த னடைந்திட நோக்கி
வழங்குவான் சத்தியே துன்க்கு
மருத்துல கெவைக்குஞ் சீவவா தார
மாகவே மகிழ்ந்துசஞ் சரிப்போன். (12)

வலியவர்க் கெல்லாம் வலியவ னெனக்கவ்
வாயுவந் தரங்கனன் றுரீ
பொலிவுறு மென்னைத் தாங்குவோ மெனவும்
பூமியைச் சுமக்கின்றே மெனவும்
பலபல நினைந்து பெற்றவே மாப்பின்
பற்றினை யகலவிட் டுவிடு
தலமெலா நானே கச்சப மாகித்
தாங்குவே னலதுவே றிலேயே. (13)

என்றுநற் றுளப மாலைமா யவன்று
னிசைத்தல்கேட் டுள்ளநொந் தநந்தன்
மன்றலங் கமல மலரடி வணங்கி
வழுத்துவா னெமதிரு வர்கடம்
வென்றியை யடிக ளுக்குற வேண்டு
மாகையான் மேருபுத் திரனைச்
சென்றடி யேன்மெய்க் கயிற்றினுற் கட்டிச்
சேர்கின்றே னச்சயி லத்தை. (14)

அறுசீர் விருத்தம்.

ஆசுக னெடுப்பா னுயி னதிபல முடைய னென்று
பேசலா மெனவெ வர்க்கும் பெரியனு யாவு மீன்ற
ஈசனும் மமதை யின்னு மிவனிடத் துள்ள தென்று
மாசறு மனத்தி னெண்ணி வாயுவா னவனை நோக்கி (15)
சாடைசெய் திடவ றிந்து சதாகதி சார்ங்க மென்னும்
நீடிய சிலைகைக் கொண்ட நின்மலன் கருணை யாலே
ஈடறு வலிபெற் றேனு யெழின்மணிச் சூட்டுப் பேழ்வாய்ச்
சேடனை நோக்கி நீமுன் செப்பிய படிசெய் யென்ன (16)

---

13. ஏமாப்பு - களிப்பு. கச்சபம் - ஆமை. 14. மன்றல் - மணம். சயிலம் - மலை. 15. மமதை - தற்பெருமை. 16. சாடை - குறிப்பு. சார்ங்கம் - திருமால் வில்லின் பெயர். சிலை - வில். பேழ்வாய் - பிளந்தவாய்.

அநந்த னு மாழி யான்ற னருள து பெற்றுப் பார்மேற்
கனந்திகழ் மேரு வீன்ற கருதரு மலையை நண்ணிச்
சினந்துடல் கொண்டு கட்டித் தீவிழி களினின் றோங்க
முனைந்தெதிர் நின்ற வாயு மொய்ம்பனை நோக்கிச் சொல்வான். (17)

உன்னுடை வலியெ லாங்கொண் டுயர்ந்தெழு மிச்சி லம்பு
தன்னைநீ தாக்கென் றோதச் சதாகதி மலர்மேல் வந்த
மின்னினை மார்பில் வைத்த மேலவ னருளி னாலே
பன்னக விறைவ னோடப் பருவதந் தனையெ டுத்தே (18)

ஒன்றரை யிலக்க மான யோசனை யொல்லை கொண்டே
சென்றுதக் கணத்தின் வீழ்ப்பச் செழுமணி யினங்க டுன்றி
முன்றிகழ் வுறுஞ்சு வர்ண முகிநதிக் கரையின் வாசம்
துன்றுகா விலங்கு மந்தத் தொன்மலை வீழ்ந்த தன்றே. (19)

மேருதன் சுத னுக் கின்றே மேன்மையுண் டாயிற் றென்று
மாருதன் றனைக்கொண் டாடி மகிழ்ந்தனன் மருத்து மவ்வா
றேருறு முனது பிள்ளைக் கெய்திய துயர்ச்சி யென்றே
நேருறப் புகழ்ந்தா னந்த நிறைகடல் குளித்தான் மன்னோ. (20)

விடங்கொள்வா யரவின் வேந்தன் வேதமா முதல்வன் சொல்லால்
தடங்கிரி யுடனே சேர்ந்தத் தலத்தினிற் சேட வெற்பாய்க்
கிடந்தன னென்ன ஞானங் கிளர்தரு வாசன் றெவ்வை
அடுந்திறற் றிலீப னென்னு மாசனுக் கறைந்தா னென்னை (21)

மாதவச் சௌன காதி மறையவர் வியந்து கேட்ப
ஓதரும் பரம ஞான வுருவனு யுயர்ந்த வாய்மைச்
சூதமா முனிவ னென்னுந் தூயவன் சொற்று னிந்தக்
காதையைப் பிரமாண் டத்திற் றெருடாக் கழறு மாதோ. (22)

---

17. ஆழியான் - திருமால். கனம் - மேகம். மொய்ம்பன் - வலியவன். 18. சிலம்பு - மலை. பன்னகம் - பாம்பு. 19. ஒல்லை - **விரைவு**. **தக்கணம்** - தெற்கு. கா - சோலை. 20. மாருதன் - வாயு. மருத்து - வாயு.
21. சேட வெற்பு - சேஷ மலை. தெவ்வு - பகைவர். திறல் - **வலிமை**.

மேருபுத்திரன் என்பதை விளங்க உரைத்த அத்தியாயம் முற்றிற்று

# 14. சாமி புட்கரிணியின் பெருமை உரைத்த அத்தியாயம்.

கலிநிலைத்துறை.

பின்னருந் திலீப னென்னும் பெருந்தகை யாசன்கேட்ப
இன்னலி றவத்தான் மிக்க வெழிற்றரு வாசன் கஞ்ச
மின்னினை மார்பின் வைத்தோன் வேங்கட மலைமேல் வந்த
தின்னகா ரணமா மென்றுள் ளின்புற வியம்பு வானால். (1)

பாந்தளி னிறைவன் சார்ங்க பாணியாற் செருக்கு நீங்கிச்
சாந்தனு யந்தச் சேடா சலத்தினுத் தரத்தின் பாங்கர்க்
காந்துபொற் சிமயத் தொன்றிற் கவின்றமா தீர்த்த மெல்லாம்
வேந்தெனப் பணிய மேன்மை விளங்குறுந் திருக்கோ னேரி. (2)

சாமிபுட் கரிணி யென்னுந் தகையுறை யுகள மான
நாமதீர்த் தத்தின் வாயு நண்ணிய திசையின் மேலோர்
காமுறு நாக தீர்த்தக் கொழுங்கரை கதுவிச் சீர்சால்
மாமலை நினைந்து தேவ வருடமெண் ணிலவு கந்தே (3)

தவம்புரி வியாள வேந்தன் றனக்கருள் புரிந்து மாமன்
உவந்துவந் தெதிரி னின்றே யுனக்குவேண் டுவதியா தென்ன
நவின்றிடப் பணிந்து போற்றி நாயினேன் மமதை கொண்டே
அவந்தனை யியற்றித் தீய வபராதி யாயி னேனால். (4)

அய்யனே யெண்ணில் கோடி யண்டங்க ளவையு முந்திச்
செய்யதா மரையி னீன்ற தேவநா யகனே யான்செய்
வெய்யதோர் நவையை யின்னே விருப்பொடு பொறுத்தே யீங்குச்
சய்யமா மென்மே னின்றிச் சகத்துறை மாந்தர்க் கெல்லாம் (5)

---

1. இன்னல் - துன்பம். கஞ்சமின் - தாமரை மலரில் உள்ள திருமகள். 2. பாந்தள் - பெரும் பாம்பு. செருக்கு - கருவம். உத்தரம் - வடக்கு. சிமயம் - சிகரம். 3. உகளம் - இரண்டு. மாமன் - இலக்குமி நாயகன். 4. வியாளம் - பாம்பு. அவம் - வீண் செயல். அபராதி - தவறுடையோன். 5. சய்யம் - மலை.

சேவைதந் தருள்வா யென்று செப்பலு மலர்மேன் மங்கை
காவல னவில்வான் முன்னங் கருதிநன் னலங்கள் யாவும்
மேவுறை யுகம்யா தென்று வீணைநா ரதனைக் கேட்டு
மாவலி யுடையாய் நின்னை மலையுருப் பெறநே மித்தேன். (6)

அப்படிச் சொன்ன வாய்மை யதுநிறை வேறும் வண்ணம்
இப்படி யிங்கண் வந்தே யியைந்தகா ரணமா மென்றுன்
தப்பினை யாவும் யாமே சமித்தனந் திருவி னோடும்
ஒப்பரு நின்மே னாளு முவந்துறை குதுமென் றோதி (7)

எண்ணரும் பவங்க ளெல்லா மிரவிமுன் னிமம்போ னீக்கி
நண்ணருங் கதியை நல்கு நலம்பெறு திருக்கோ னேரிக்
கண்ணகன் கரைமே னாளுங் கட்செவி யரசுக் காக
அண்ணலஞ் சீநி வாச னன்பின்வீற் றிருக்கின் றானால். (8)

எனத்துரு வாசன் கூற விகலடு திலீப மன்னன்
மனத்திறும் பூது பூத்தம் மலையினி லநந்த தீர்த்தம்
செனித்தினி திருப்பச் சீர்சால் சீநிவா சன்கோ னேரி
தனக்கய னின்ற தென்ன காரணஞ் சாற்றென் றானால். (9)

அவ்வுரை யமையக் கேட்ட வத்திரி குமா ரனை
செவ்விய தவன்பெ யர்த்துஞ் செப்புவான் பண்டை ஞான்று
அவ்விய மவித்த சிந்தை யணிகெழு வாணி யென்பாள்
எவ்வமி லுயர்ந்த தீர்த்த மெவற்றுக்கு மேலா யெண்ணி (10)

ஈடகல் பிரம வாவர்த் தனமென விலங்கா நின்ற
பீடுடைத் தலத்திற் சீதம் பிறங்கெழி னதிய தாக
வேடமுற் றிருந்தா ளந்த வியனதி மருங்கி னோர்நாள்
நாடிவெம் பகைக ளாறு நலிபுலத் தியன்வந் தானால். (11)

---

7. சமித்தனம் - பொறுத்தனம். 8. இரவி - சூரியன். இமம் - பனி. கட்செவி - பாம்பு. 9. இறும்பூது - வியப்பு. 10. அவ்வியம் - பொறாமை. எவ்வம் - குறை. 11. ஈடு - ஒப்பு. பீடு - பெருமை. சீதம் - குளிர்ச்சி. பகைகள் ஆறு - அரிஷட்வர்க்கம் என்ற காம, குரோத, மோக, மத, லோக மாச்சரியம் என்பவை.

கலிவிருத்தம்.

வந்தவப் புலத்திய மறைவ லாளனைச்
சுந்தர மிகுஞ்சர சுவதி நோக்கியே
மைந்தனென் றுபசரித் திடுதன் மாற்றலும்
அந்தமா முனிகருத் தழன்று கூறுமால். (12)

நதிக்கெலா முயர்வுறாம் நண்ணு வோமென
மதித்தனை யுனக்கது வருவ தில்லைமால்
பதத்தினில் வருதிரி பதகை மேன்மையென்
றிதத்தினில் யாவரு மிசைப்பர் நாளுமே. (13)

எனப்புலத் தியன்கடுத் தியம்ப வீறிலா
வனப்பினி லொப்பிலல் வாணி மாநதி
சினத்தரிக் குவப்பில்செய் தீய ராக்கதர்
இனத்தினிற் கொடிபனு யிழிக நீயென (14)

அத்தவன் றனைச்சபித் திடவக் காலையே
மெத்தவு மாரந்தையுண் மேவித் தன்னிரு
கைத்தலஞ் சிரமிசைக் கதழ்ந்து கூப்பிவான்
வித்தகப் புலத்தியன் விளம்பு வானரோ. (25)

இலகெழி லன்னைநீ யிடுவெஞ் சாபந்தான்
விலகுவ தெற்றைஞான் றெனவி னவலும்
கொலைவல நிருதர்தங் குலத்திற் றோன்றியே
சிலபக றீமையிற் சென்ற தன்பினே (16)

தண்டுழாய்த் தனிமுதக ருனி ராமனாய்
மண்டனில் வருமவன் மனமு வப்புறும்
தொண்டனென் றுலகுளோர் சொலந லந்தனைக்
கொண்டவீ டணனென நாமங் கூர்தர (17)

---

12. அழன்று - கோபித்து. 13. திரிபதகை - கங்கை. 14. கடுத்து - கோபித்து. வனப்பு - அழகு. 15. அரந்தை - துன்பம். கதழ்ந்து - விரைந்து. 16. ஞான்று - நாள். நிருதர் - அரக்கர். 17. துழாய் - துளசி. நாமம் - பெயர்.

செனித்துல கினிற்சிரஞ் சீவி யாதியென்
றனுக்கிர கித்திடு் தருளிப் பின்னரும்
தனக்கிணை யறுசர சுவதி சார்ங்கனை
மனத்தினி னினைத்தருந் தவத்தின் மன்னினள். (18)

எண்ணில்கா லந்தவ மியற்றும் வேலையிற்
றண்ணறு வேரியந் துளவத் தாரவன்
நண்ணின னெழிற்சர சுவதி நங்கைதன்
கண்ணெதிர் பொன்னிறக் கலுழன் மீதரோ. (19)

வந்தவப் பரமனை வணங்கி வாழ்த்தியே
சந்தத நதிக்கெலாஞ் சாமி யாகுமா
முந்தெனக் கருள்கென முன்னி வேண்டலுஞ்
சிந்தையு ளுவந்திறை செப்பு மாலரோ. (20)

எழுசீர் விருத்தம்.

சீதநன் னதியா யுருக்கொடு தவஞ்
செய்புநா ளொருமறை யவன்வந்
தோதிய சாப முனையடைந் தமையா
லுயர்திரு வேங்கட மலையின்
மீதுபுட் கரிணி யுருவமா யெம்மை
விருப்பொடு பணிந்தினி துறையான்
ஆதர வுடனின் னருகுதக் கிணத்தி
னலர்மி னோடுவந்துறை கின்றேம். (21)

மூன்றுல கினின்முப் பத்துமுக் கோடி
மொழிதரு தீர்த்தங்க ளெல்லாம்
தோன்றியென் முனரிற் றங்கள்பா வங்க
டொலைத்திடு நிமித்தம்யா சிக்கும்

---

18. சார்ங்கன் - திருமால். 19. வேரி - தேன். துளவத்தார் - துளசிமாலை. கலுழன் - கருடன். 20. இறை - கடவுள். அலர்மின் - தாமரையில் உறையும் திருமகள். 21. வில் திங்கள் - தனுர் மாதம்; மார்கழி. அம்புலி - சந்திரன். 22. துவாதசி - பன்னிரண்டாம் நாள். அரு

தேன்றனைப் பொருசொற் சேயிழா யவர்கள்
செய்பவ நீங்கிடும் படியே
ஆன்றவர் புகழ்விற் றிங்களிற் சீத
வம்புலி வளர்பக்க மதினே (22)

திருத்துவா தசியி னருணன்வந் துதயஞ்
செய்திடுங் காலையின் முன்னம்
உரைத்தநன் னதிகள் யாவுமேழ் கிடவே
யுன்னிடத் தணுகவிட் டுளத்தின்
அருத்தியோ டவா னினக்குநல் லடைவே
யாசென வுயாபி டேகம்
கருத்துற வியற்று விப்பநீ நாளுங்
கவின்றுறச் சாமிபுட் கரிணி (23)

எனப்பெயர் பெற்றங் கிருவென வருளி
யிணையறு மறைமல ரதனிற்
சனித்தசெந் திருவின் புருடகா ரத்தாற்
றளிகைசெய் துவப்புற வளிக்கும்
கனக்குழல் வகுள மாலிகை தனைக்
கலைமக ளாம்பொய்கை தனக்கு
வனப்புறும் பூமி யுருவமா கென்று
வழங்கினன் மருத்துழா யணிந்தோன். (24)

நேமியான் கிளந்த சொற்படி யந்த
நிகாறு வகுளமா லிகையாள்
பூமியா முருவ மாகவுஞ் சாசு
வதிபொரு வறுமெழில் பொருந்துஞ்
சாமிபுட் கரிணி யாகினு ளதற்குத்
தக்கிணக் கரையினிற் சிறந்த
நாமமா யிரத்தோன் மலர்மினோ டுவந்து
நாடொறு மினிதிருந் தனனால். (25)

---

ணன் - சூரியன். 23. அருத்தி - விருப்பம். அபிடேகம் - நீராட்டு. 24. மறை மலர் - தாமரைப் பூ. புருடகாரம் - இடை நின்று பரிந்து பேசுதல். தளிகை - உணவு. மரு - மணம். 25. நேமியான் - சக்கரதாரணுகிய திருமால்.

என்றுயர் துருவா சப்பெயர் முனிவ
னியம்பின னெனத்தவச் சூதன்
நன்றறி வுடைய சௌனகா தியர்க்கு
நவின்றன னீதெலாம் புவிமேல்
ஒன்றிய வெவர்க்கு மமுதெனச் செவியி
னுவப்புற வுணமிக வுயர்ந்தே
நின்றிடும் பிரமாண் டப்பெயர் பெற்ற
நீள்புரா ணங்கழ றிடுமால். (26)

சாமிபுட்கரிணியின் பெருமை உரைத்த அத்தியாயம் முற்றிற்று.

## 15. வாயு, அகத்தியன், சங்கன் முதலியோருக்கு அருள் புரிந்த அத்தியாயம்.

எழுசீர் விருத்தம்.

கைத்தலங் கூப்பித் திலீபமன் பெயர்த்துங்
கருதருந் தவநனி யுயர்ந்த
அத்திரி குமரன் றனைக்கணு நோக்கி
யணிசெறி வேங்கட மென்னும்
வித்தக மலையின் வீறுபா டின்னும்
விரித்தெனக் குரைமதி யென்னச்
சுத்ததத் துவங்கள் யாவையு முணரத்
தொன்முனி சொற்றன்மே யினனால். (1)

வாயுவா னவன்முன் மாறிரு மேனி
மானுமெய் பெறவிருப் பமதாய்
மீயுயர் திருவேங் கடமலை யணுகி
விண்ணவர் வருடமா யிரமஞ்
சேயதா மரைக்கண் முகுந்தனை நினைந்து
செயவருந் தவம்புரிந் திடலும்
மாயவன் கருணை மலிந்தெழக் கவின்ற
மலர்மிசை டுவந்தெதிர் நின்றே (2)

1. வீறுபாடு - பிறிது ஒன்றற்கு இல்லாச் சிறப்பு. உரைமதி - சொல்லு வாய். சொற்றல் - உரைத்தல். 2. மானும் - ஒக்கும். முகுந்தன் - திருமால்.

பேரொளி தவழ்மெய் பெறுவையென் றருளிப்
பெருமைசேர் குமாரதா ரிகையென்
றேருறு தீர்த்த மருங்கினி னுளு
மென்னைநீ தியானயோ கத்தால்
சீருறப் பூசை செய்யென நவின்று
செப்புமத் தீர்த்தத்தின் பாங்கர்
நேருந் தவத்தைச் செய்துகொண் டிருக்கு
நீபநன் மாலையான் றனக்கு (3)

தவவுப தேசஞ் செய்துமா லேகத்
தாமரை யானர னேனோர்
எவர்களு மிகுந்த பிரபைபெற் றங்ங
னெழிற்றியா னத்தினி லிருந்த
பவனனை நோக்கி வியந்தரி பத்தி
பலத்தினால் வந்ததென் றறிந்து
புவிமகள் கொழுநன் றனைநினைந் தந்தப்
பொருப்பினி லருந்தவம் புரிந்தே (4)

எண்ணருந் தேவ ரவ்வித சித்தி
யெய்தின னெனத்துரு வாசன்
நண்ணலர் வணங்கும் வலிபொறை நீதி
ஞானநற் கல்வியாற் சிறந்த
புண்ணிய வாசன் செவித்தலத் தினையில்
புத்தமு தகுத்தெனப் புகன்றே
தண்ணிய வினிய சொல்லினாற் பெயர்த்துஞ்
சாற்றலுற் றனனக மகிழ்ந்தே. (5)

அகத்திய முனிவன் றிருவினு யகனை
யன்பொடு காணவே யாசை
மிகுத்தெழப் பொதிய வரையினிற் றவசின்
மேவுநாட் பிரமன்வந் தெய்திச்

3. நீபம் - கடம்பு. 4. தாமரையான் - பிரமன். பிரமை - ஒளி. பவனன் - வாயு. 5. நண்ணலர் - பகைவர். பொறை - பொறுமை. தண்ணிய - குளிர்ச்சியான. பெயர்த்தும் - மறுபடியும். 6. வரை - மலை.

சுகத்தினி லுயர்வேங் கடமலை யதனிற்
றவஞ்செயிற் சித்தியா மென்று
வகுத்துரைத் துயருஞ் சத்திய வுலக
மருவினன் வானவர் தொழவே. (6)

அவ்வுரை செவியுற் றணிதிரு மலையை
யகத்திய னடைந்தொரா யிரமாம்
எவ்வமி றேவ வருடமங் கெவரு
மியற்றருந் தவஞ்செயுங் காலை
செவ்விய வான வாணியம் முனியைச்
சீருற நோக்கியே யிந்தத்
திவ்விய மலையின் மகிமைபெற் றுயருந்
தீர்த்தமா யிரத்தொடெட் டுளவால். (7)

அவைகளின் மூல மந்திரம் பன்னி
யன்புறப் படிதலோ டிந்த
உவமையில் கிரியின் மகிமையை நவின்று
ளுவப்புற வலமதாய் வந்து
கவையறு தியான யோகமுற் றிருந்தா
னளினிகேள் வனைக்கணிற் கரிய
அவிருறு மிரவி யெனவெதிர் கண்டே
யடிதொழ லாமென வறைந்தாள். (8)

அந்தவா சகங்கேட் டகத்திய முனிவ
னவ்வணஞ் செய்தலர் வேரி
சந்தநங் கமழுஞ் சாமிபுட் கரிணி
தனக்கரு கினிலுய ரரியைச்
சிந்தையி னினைந்தே யிருந்திடுங் காலை
திருவுறை மார்பினு னெதிராய்
இந்துசெங் கதிர்போல் வலம்புரி யாழி
யிலங்கிட வெய்தினன் மாதோ. (9)

---

சத்தியவுலகம் - பிரமலோகம். 7. எவ்வம் - குறைவு. 8. பன்னி - உச்சரித்து. படிதல் - நீராடுதல். நளினி - திருமகள். அவிருறும் - விளங்கும். இரவி - சூரியன். கரிய அவிருறுமிரவி - இல் பொருளுவமை. 9. வேரி - தேன். இந்து - சந்திரன். வலம்புரி - சங்கு. ஆழி - சக்கரம்.

கண்டுளத் தளவில் களிப்புற வந்தக்
கலசமா முனிபணிந் தெழீஇநல்
அண்டர்கட் கமுதே யாதிநா யகனே
யமலனே யெனத்துதித் திடலும்
முண்டக னரன்விண் ணிறைமுத லெவர்க்கு
மூலமா முதல்வனா யுயரும்
விண்டுவம் முனிவன் கருத்தினை யறிந்தே
வேண்டிய வரமளித் தகன்றான். (10)

மலயமா முனியம் மாயனைத் தினமு
மனத்திடை விடாதுசிந் தித்து
நிலையினி னிருந்தா னெனத்துரு வாச
னிகழ்த்தியே பின்னரு நவில்வான்
சிலைவல னுடைய திலீபமன் னவனே
செஞ்சுடர் மரபினின் முன்னம்
நலனுற வுதித்த சங்கனென் றுயரி
ராசனா னவனொரு நாளின் (11)

மாதவ வசிட்ட முனிவனை யடைந்து
மலரடி வணங்கினா யேனிப்
பூதல மிசையெவ் விடத்தினிற் றவசு
புரிந்திடின் விரைவினிற் றிருவின்
நாதன்வந் துவந்து வினவிய வரங்க
ணல்குவா னெனவினா வுதலும்
போதனைச் சிவணம் முனிவரன் மகிழ்ந்து
புலப்படப் புகல்வதா யினனால். (12)

கண்ணகன் பொதிய வரைமுனி முதலாங்
கருதருந் தவத்தவர் நலமா
மண்ணதிற் சுவண முகிக்கொழுங் கரையின்
மருவுசே டாசலந் தன்னை

---

10. கலசமுனி - அகத்தியன். முண்டகன் - பிரமன். 11. மலையம் - பொதிய மலை. சிலை - வில். 12. போதன் - பிரமன். 13. சுவர்ண முகி - பொன்முகரியாறு. ஐந்து - ஐம்புலன்கள்.

நண்ணியைந் தடக்கித் தவத்தினை யியற்றி
ளுமமா யிரத்தவ னெதிர்வந்
தெண்ணிய வரங்க ளீந்திட மேன்மை
யெய்தினே னெண்ணில ருளரால். (13)

அத்திரு விலங்க லடியினிற் றாணு
வமர்ந்திட முடிமிசை யாழி
வைத்தகை நெடுமால் வானவர் தினமும்
வந்துவந் திறைஞ்சிட வவர்க்குச்
சித்தமு வுவந்து சேவைதந் திருந்த
செயலினு லுவமைவே றின்றி
மெத்தவு மேன்மை யெழில்வளஞ் சிறப்ப
விளங்கிய தகவ்ற்றுயர்ந் தெழுந்தே. (14)

அதனினு லேழாங் கலியுகந் தன்னி
லாசுக னுயருமாச் சிரம
விதமுறு வேடம் பெற்றுயர் தவத்தின்
மேவிய பன்னசா லையின்கண்
சததச நாமன் விருத்தனு யடைந்தச்
சந்நியா சியையெதிர் நோக்கிப்
பொதியில்வாழ் முனிவன் முதலுயர் ஞான
புங்கவ ருன்பெருந் தவத்தை (15)

வியந்துகொண் டனர்க ளெனச்சொலு மந்த
வேதிய விருத்தனை மருத்து
நயந்துகண் டெனது பன்னசா லையின்க
ணலமுற வடிகள்வீற் றிருந்து
இயைந்தடி யேன்செய் சாதுர்மா சியத்தை
யியல்புறும் படிநிறை வேற்றி
உயர்ந்திடு ஞான மறையவர்க் காசே
யுன்பதிக் கெழுந்தரு ளெனவே. (16)

---

14. விலங்கல் - மலை. தாணு - சிவன். ஆழி - சக்கரம். சேவை - காட்சி. 15. ஆசுகன் - வாயு. பன்னசாலை - இலைக்குடில். சததசம் - ஆயிரம். விருத்தன் - கிழவன். புங்கவர் - சிரேட்டர். 16. மருத்து - வாயு. சாதுர்மாசியம் - நான்கு மாதகால அளவிற் செய்வது ஒரு விரதம். பதி - ஊர்.

புகழ்ந்துப சரித்து வேண்டலு மெதிர்ந்த
　　பூசுரா னாகிய நெடுமால்
உகந்துமா ருதனுக் கவண்முன மேவி
　　யுதவினா னெனச்சொலிப் பினரும்
அகந்தைவே ரறுத்த வசிட்டமா முனிவ
　　னாதவன் மரபினிற் பிறந்த
சுகந்தவந் தொடையற் சங்கனென் றிசைக்குந்
　　தூயநன் னிருபனுக் கிசைப்பான். (17)

எண்ணரும் பரம தீர்த்தமவ் விடத்தி
　　னெய்திய வைபவந் தனையும்
விண்ணுயர் தாப விலங்கலிற் றென்பால்
　　விளங்கிய சிருங்கமீ தமரும்
தண்ணிய புனலார் சக்கர தீர்த்தந்
　　தனிற்குறு முனிபலர் சூழ
நண்ணுவ னோர்கற் பாந்தத்தி லெனவு
　　நவின்றனன் சுகன்முன மெனக்கே. (18)

ஆனதா னியக் குறுமுனி வனைப்போ
　　லத்திரு மலைவலம் வந்து
ஞானயோ கத்தி னிருத்தியேற் கமலை
　　நாதன்வந் தருள்செய்வா னெனலுந்
தேனம ரலங்கற் சங்கனென் றுயருஞ்
　　சீர்கெழு மன்னவன் கேட்டு
வானுயர் சேடா சலத்தினை விரைவின்
　　மருவியோ கத்தினி லிருந்தான். (19)

இந்திரை பதியை யெதிருற நோக்கி
　　யிருதய மகிழ்வொடு மிறைஞ்சிச்
சந்திர னிரவி யுள்ளநா ளளவுந்
　　தாக்கணங் குடனொளி திகழச்

---

17. பூசுரன் - பிராம்பணன். மாருதன் - வாயு. அகந்தை - அகங்காரம். ஆதவன் - சூரியன். தொடையல் - மாலை. நிருபன் - அரசன். 18. தாபவிலங்கல் - தாபகிரி என்ற மலை. சிருங்கம் - கொடுமுடி. குறுமுனி - அகத்தியன். கற்பாந்தம் - கல்ப காலத்தின் முடிவு. 19. இருத்தியேல் - இருப்பாய் ஆனால். கமலை - இலக்குமி. அலங்கல் - மாலை. 20. இந்திரை - இலக்குமி. பதி - தலைவன். தாக்கணங்கு - திருமகள்.

சுந்தர மிகுத்த விந்தமால் வரையின்
சுடிகையி னிருந்துல கனைத்தும்
வந்தனை புரிய நாயினேன் றினமும்
வணங்கிடச் சேவைதந் தருள்வாய். (20)

என்றெழி லேந்தல் வேண்டமா முகுந்த
னியம்புவா னுயர்தலங் களிலே
மன்றலங் கமல மேயவன் முதலாம்
வானவர் மானிட ரெவரும்
சென்றுவந் திறைஞ்ச வருச்சனைக் குரிய
திகழுரு வடைவனு தலினீ
ஒன்றிய சிலையிட் டிகைதரு வென்ன
வுரைப்பவற் றேதுகொண் டேனும் (21)

எனதுரு வமைத்தோ ரெழின்விமா னத்தை
யியற்றியவ் வுருவதிற் சேர்த்து
மனதுகந் தாரா தனைபுரிந் திறைஞ்சி
வழுத்திநின் சிந்தனைப் படியே
இனிதினவ் வுருவி னிந்திரை யுடனே
யிருந்தெணில் காலமிம் மலைமேல்
வினைதவிர்ந் திடுமா யாவர்க டமக்கும்
விருப்புறத் தரிசனை யருளி (22)

உனக்குயர் பரம மாங்கதி தன்னை
யுதவுவே னென்றெளி ரலர்மான்
றனக்குகப் பொடுமோர் பளித்தவன் காப்பச்
சங்கனென் கின்றகொற் றவனும்
கனக்கரு மேனி யான்மொழிப் படியே
கதிர்மணி மானமோ டெவரும்
நினைக்கயா வையுந்தந் துதவுவிக் கிரக
நேமமாய் நேருற வியற்றி (23)

சுடிகை - முடி. 21. முகுந்தன் - திருமால். மன்றல் - வாசனை. சிலை - கல். இட்டிகை - செங்கல். தரு - மரம். 22. ஆராதனை - பூசனை. 23. அலர்மான் - திருமகள். உகப்பு - விருப்பம். கனம் - மேகம். விக்கிரகம் - திருவுருவம்.

எண்ணருங் கால மவணிருந் தாரா
தனையியல் பாகவே நடத்தி
நண்ணருங் கதியை நண்ணின னென்றே
நற்றவ வத்திரி பயந்த
புண்ணியன் வலிய திலீபபூ பதிக்குப்
புகன்றன னெனவுயர் சூதன்
உண்ணய முடனே யுரைத்தன னிதனை
யொளிர்பிர மாண்டமோ திடுமே. (24)

வாயு, அகத்தியன், சங்கன் முதலியோருக்கு அருள் புரிந்த அத்தியாயம் முற்றிற்று.

## 16. தீர்த்த மகிமை உரைத்த அத்தியாயம்.

எழுசீர் விருத்தம்.

சிலைத்தழும் பிவர்ந்த வரையெனத் திரண்ட
திணிபுயத் திலீபனு மாசன்
கலைத்திற னறியுந் தவத்துரு வாசன்
கவின்முக நோக்கியே சேட
மலைத்தலை மருவு புண்ணிய தீர்த்த
மகிமைக ளனைத்துமென் மனத்தில்
நிலைத்திட வருளென் றுரைக்கவும் மகிழ்ந்து
நேருற நிகழ்த்தன்மே யினனால். (1)

அற்புத மிகுமவ் வரையினிற் றீர்த்த
மாறுபத் தாறுகோ டியதாய்ப்
பொற்புற விலங்கு மவற்றினன் மேன்மை
பொருந்திய வாயிரத் தெட்டாய்
விற்பனர் புகழ விளங்கிய தந்த
விழுமிய புனல்களி னுயர்ந்த
நற்பெருந் தீர்த்த மிரண்டுநூற் றெட்டாய்
நவிலுவ ரவ்வயங் களிலே (2)

---

1. சிலைத்தழும்பு - வில் அழுத்தியதனால் உளதாகிய தோள் வடு. கவின் - அழகு. 2. விற்பனர் - அறிஞர். அயம் - தீர்த்தம்.

சகலபுண் ணியமுந் தருவனூற் றெட்டுத்
தாழ்விலாப் பத்திவை ராகந்
தகவுட னளிப்ப வறுபதோ டெட்டுச்
சரியறு விபவங்க டம்மை
மிகவரு ளுவவோ ராறுமுத் தியினில்
விடுப்பவெண் மூன்றுட னிரண்டென்
றகன்மறைப் பொருள்க ளனைத்தையு முணர்ந்த
வறிஞர்க ளறைகுவ ரன்றே. (3)

சொன்னவித் தீர்த்தங் களினதி மேன்மை
துலங்கிய வேழவற் றிருமை
என்னெனி னறுபத் தாறுகோ டியவா
மெழின்மிகு தீர்த்தங்க ளெல்லாம்
மன்னிய வாண்டிற் கொருமுறை யிந்த
மாசறு தீர்த்தங்க டமில்வந்
தின்னிலம் புகழ வெய்திடு மந்த
வினிதமை காலமே தென்னில். (4)

கலிநிலைத்துறை.

மாசித் திங்களிற் பௌரணை கூடிய மகத்தில்
ஆசற் றேயுயர் சருவதீர்த் தங்களு மந்த
வாசத் தீம்புனற் குமாரதா ரிகையின்கண் மருவும்
நேசத் தாலதின் மூழ்குவோர் நீணில மதிக்க (5)

இயைபி ராயசூ யப்பெயர் மகப்பல னெய்தி
நயமு றுங்கதி நண்ணுவர் மீனமா தத்திற்
பயிலும் பூரணை சேருமுத் திரத்தினிற் பண்பாய்
உயருந் தும்புரு தீர்த்தத்தி னுதயகா லையிலே (6)

எண்ணி கப்பமுன் னியம்பிய தீர்த்தங்க ளெல்லாம்
நண்ணு கின்றன வதிற்படிந் தோர்நவை யகல

3. வைராகம் - ஆசையின்மை. விபவம் - சிறப்பு. முத்தி - மோக்ஷம். 4. இருமை - பெருமை : மாசு - குற்றம். 5. திங்கள் - மாசம். பௌரணை - பூர்ணிமை. 6. இராயசூய மகம் - இராஜசூய மகா யாகம். மீன மாதம் - பங்குனி மாசம். 7. நவை - குற்றம்.

உண்ண யந்தவை யாவையு முவப்புற வெய்தி
விண்ணின் மால்பத மேவுவர் மேலவர் புகழ. (7)

மகர மாதத்திற் பூரணை மருவுபூ சத்தின்
நிகரி லாதுறை கிருட்டின தீர்த்தத்தி னெருங்கிச்
சகல தீர்த்தமுஞ் சேருமத் தண்புனல் படிந்தோர்
இகமு நன்மைதுய்த் திருந்துபின் பரத்தினெய் துவரே. (8)

மேட மாதத்திற் பூரணை மேவுசித் திரைநாள்
பீடு லாவெழிற் சர்வதீர்த் தங்களும் பெருகிக்
கூடு கின்றவான் கங்கையி னதனிடை குடைவோர்
கேட றும்பெருங் கதியினிற் கெழுமிவாழ் குவரால். (9)

இடப மாதமொண் மதிவளர் பக்கமா றிரண்டாய்த்
தொடர்வு றுந்திதி ஞாயிறு தோன்றிய தினத்து
முடுப திக்குட றேயுநா ளூறுந்துவா தசியின்
இடையி னிற்குச னெய்திய சுபதினந் தனினும் (10)

சேண்ட யங்குறு கங்கையே முதலவாய்ச் சிறந்த
மாண்ட வத்தினர் புகழமூன் றுலகமு மன்னி
நீண்டு றும்புகழ் தங்குதீர்த் தங்களு நோயப்
பாண்டு தீர்த்தத்திற் சேர்ந்திடு மதிற்படிந் தோர்கள் (11)

பூத சன்மமு மேழினும் புரிபவம் விலகி
ஏத நீங்கிய பதத்தினெக் காலமு மியல்வார்
தீத றுந்துலாத் திங்களிற் பூருவத் தேழாய்
ஓது நற்றிதி பானுவா ரத்துத்தி ராடம் (12)

பொருந்து காலத்தும் புகழ்பெறு முத்திரட் டாதி
வருந்து வாதசி தன்னினும் வாழ்த்தரு மேற்றம்

---

8. மகர மாதம் - தை மாசம். பரம் - பரமபதம். 9. மேட மாதம் - சித்திரை மாசம். பீடு - பெருமை. குடைவோர் - முழுகுவோர். 10. இடப மாதம் - வைகாசி மாசம். மதிவளர் பக்கம் - சுக்கில பக்ஷம். ஆறிரண்டாய்த் தொடர்வுறும் திதி - துவாதசி நாள். உடுபதி - சந்திரன். குசன் - செவ்வாய். 11. சேண்தயங்கு - தூரத்தில் விளங்கும். 12. ஏதம் - குற்றம். துலாத் திங்கள் - ஐப்பசி மாசம். பூருவம் - சுக்கில பக்ஷம். பானு வாரம் - ஞாயிற்றுக்கிழமை.

இருந்த சீர்பெறும் பாபவி நாசமென் கின்ற
திருந்து தீர்த்தமேற் சருவதீர்த் தங்களுஞ் சேரும். (13)

அந்த பாநதி யாடுவோர் பவவினை யகல
இந்த மாநிலத் திட்டகா மியமெலா மெய்தி
விந்தை மார்பினன் விளங்குறு மெழிலுறை திருவை
குந்த மாகிய கோதறும் பதங்கூடி கொள்வார். (14)

வீறு சேர்த்தனுத் திங்களின் வெண்பிறை கலைகொண்
டேறு மாண்டுவா தசியினெல் லவன்வரு முன்னர்
ஆறு நாழிகை முதல்விடிந் தாறுநா ழிகைக்குள்
மாறி லாதநற் சர்வதீர்த் தங்களு மல்கி (15)

தன்னை நேரிலாச் சாமிபுட் கரிணியிற் சாரும்
அன்ன காலமே பெரிததிற் படிந்துசாத் திரத்திற்
சொன்ன வாறுள தேசெனுந் தூயவ ருவப்ப
நன்ன யத்தொடு தானமா யருளுவோர் நாளும் (16)

இகத்தி னன்மைசேர்ந் திருந்தபின் பிறவிவந் தெய்தா
தகற்றி யண்டத்தி னப்புறத் தளவிறா ரமதாய்
மகத்து வம்பெறு மாழியம் படையன்வாழ் பதத்தின்
மிகுத்த வானந்த மேவிவீற் றிருப்பர்க ளன்றே. (17)

கலிவிருத்தம்

இக்கதை வினவுவோ ரெழுதுவோர் சொல்வோர்
மக்களும் விபவமும் வலியு மெய்தியே
புக்குவர் கதியெனத் திலீப பூபற்குத்
தக்கதூர் வாசமா முனிவன் சாற்றினன். (18)

(கலிநிலைத்துறை)

என்று சூதனை மிசவன விருடிகள் கேட்ப
நன்று ரைத்தன னீமெலா நளிர்கட லுலகின்
வென்று மேவிய விழுப்புரா ணங்களின் மேன்மை
துன்று நற்பிர மாண்டமென் பதனுளே சொலுமே.

14. பவம் - பிறப்பு. இட்டகாமியம் - விருமபிய பொருள்கள். விந்தை - இலக்குமி. 15. தனுத்திங்கள் - மார்கழி. எல்லவன் - சூரியன். 16. தூயவர் - பரிசுத்தர். 17. ஆழியம் படையவன் - சக்கரபாணி.

தீர்த்த மகிமை உரைத்த அத்தியாயம் முற்றிற்று.

## 17. தீர்த்த விவரம் உரைத்த அத்தியாயம்.

எழுசீர் விருத்தம்.

பங்கமின் முனிவன் பகர்ந்தமை யெல்லாம்
பரிதிதன் மரபினிற் பிறந்த
சிங்கவே றனையான் கேட்டுள மகிழ்ந்து
செப்புவான் மறித்துமம் மலைமேற்
றங்கிய தீர்த்த நாமமு மிடமுந்
தரும்பயன் களும்விரித் தடியேற்
கிங்கிதத் துடனீ பகரென வமுத
மெனவெடுத் திசைப்பதா யினனால். (1)

தேனின முரன்று நறுநறு மாந்துஞ்
செய்யபூந் தருவினஞ் செறிந்து
வானுயர்ந் தெழுமம் மலையினின் மருவி
வளஞ்சிறந் தளவிடற் கரிய
மாநதி களின்பேர் வழுத்தினுங் கோடி
வருபிற விகளின்முன் செய்த
ஈனவெம் பவங்க ளிரவிமுன் னிருள்போ
லேகநன் முத்தியெய் திடுமே. (2)

என்றுரைத் தரசன் முகமலர் நோக்கி
யேருறு மந்தவேங் கடத்தின்
நின்றவெம் பெருமான் றனக்குதா சனன்வாழ்
நெடுந்திசை யதனினின் மலமாய்
வென்றியை யளிக்குஞ் சக்கர தீர்த்த
மென்னவொன் றுண்டதின் மேல்பால்
மன்றலங் கமல மலர்மலிந் தழகார்
வச்சிர தீர்த்தமொன் றுளதே (3)

---

1. பங்கம் - குற்றம். பரிதி - சூரியன். ஏறு - ஆண். மறித்தும் - மறுபடியும். இங்கிதம் - குறிப்பு. 2. முரன்று - ஒலித்து. நறு - தேன். தரு - மரம். 3. உதாசனன் - அக்கினி. நின்மலம் - களங்கம் இல்லது. மன்றல் - மணம். கமலம் - தாமரை.

செப்புமத் தீர்த்தத் தருகுற விசுவ
    சேனதீர்த் தம்மதன் மேல்பால்
ஒப்பற வுயர்பஞ் சாயுத தீர்த்த
    மோதரு மலாயுத தீர்த்தம்
எப்புவி யவரும் புகழ்நர மடங்க
    லெனும்பெயர்த் தீர்த்தமங் கதன்மேல்
அப்புறத் தொளிசேர் காசிப தீர்த்த
    மழகுறு மக்கினி தீர்த்தம். (4)

மன்மத தீர்த்தம் பிரமநற் றீர்த்த
    மகிமைசேர் கௌதம தீர்த்தம்
நன்மைசேர் விசுவா மித்திர தீர்த்த
    நவையகல் பார்க்கவ தீர்த்தம்
கன்மநோ யொருக்குஞ் சைவல தீர்த்தங்
    கருதருந் தேவதீர்த் தஞ்செய்
தின்மைதீ ரட்ட கோணமா விருடி
    தீர்த்தமஞ் சிறப்புற விளங்கும். (5)

விளங்குமத் தீர்த்தந் தனக்கொளிர் வன்னி
    மேவுமா சையினெவ ராலும்
உளந்துணிந் தணுகற் கரியதாந் தீர்த்த
    முலப்பிலா தனந்தமுண் டதற்குக்
களங்கறுத் தவன்வாழ் திசையினிற் கமலக்
    கடிகமழ் வைரவ தீர்த்தம்
வளங்கெழு சேட தீர்த்தமங் கேத்ர
    பாலகர் மாப்பெருந் தீர்த்தம். (6)

புகன்றதீர்த் தத்தின் பச்சிம பாகம்
    பொருந்திடும் பாண்டவ தீர்த்தம்
அகன்றெழில் வாய்ந்த மாருத தீர்த்த
    மத்திதோ யினுமுயி ரளித்துச்

4. பஞ்சாயுதம் - திருமாலின் சங்கு சக்கர சார்ங்க கட்க கதைகள். அலாயுதன் - கலப்பையைப் படைக்கலமாகக் கொண்ட பலராமன். நரமடங்கல் - நரசிங்கம். 5. நவை - குற்றம். ஒழுக்கும் - போக்கும். 6. வன்னி - அக்கினி. ஆசை - திக்கு. உலப்பிலாது - முடிவு இல்லாது. களம் - கழுத்து. கடி - நறுமணம். 7. பச்சிமம் - மேற்கு. அத்தி - எலும்பு.

செகந்தனி னலங்க ளுதவிடு மத்தி
  தீர்த்தமார்க் கண்டனற் றீர்த்தம்
சுகந்தரு வால கில்லியர் தீர்த்தஞ்
  சுத்தசா பாலிதன் றீர்த்தம். (7)

சுரங்களை விலக்குஞ் சுரகர தீர்த்தம்
  சுடுவிடங் களைத்துரப் பதற்காம்
நெருங்குசெஞ் சடில வத்திக முனியா
  னிருபணஞ் செய்திட விலங்கி
விரிந்தசெங் கமல மலர்வெறி கமழும்
  விடகா தீர்த்தமங் கதற்குப்
பொருந்துமீ சான பூர்வபா கத்திற்
  புனிதமா மிலக்குமி தீர்த்தம். (8)

இயம்புமத் தீர்த்தத் தருகுற விலங்கு
  மெண்ணிலாத் தீர்த்தங்க ளவைக்குச்
செயம்பெறு வாயு திசையினி லனந்த
  தீர்த்தமுண் டதன்வட திசையின்
நயம்பெறு மிட்ட தீர்த்தமேன் மையதாய்
  நவினறுஞ் சுதீக்கண தீர்த்தம்
வியம்பெறு சிருங்க தீர்த்தநல் விரைசேர்
  வில்வதீர்த் தஞ்சிறப் புறுமால். (9)

தவச்சதா னந்த தீர்த்தநன் கியற்றுஞ்
  சர்வதீர்த் தம்பிற விகளின்
பவத்தொ டறுக்கும் வேணுமா தீர்த்தம்
  பார்புகழ் சபாநற் றீர்த்தம்
உவப்புற வந்த நதியின்கா லாசை
  யுற்றிடு நான்முகன் றீர்த்தம்
நிவப்புற வெழில்சே ரிந்திர தீர்த்த
  நீள்பரத் துவாசநற் றீர்த்தம். (10)

---

8. நிருபணம் - அடைப்பு. வெறி - நறுமணம். ஈசான பூர்வபாகம் - வட கீழ்பாகம். 9. வாயுதிசை - வடமேற்கு. 10. கால் ஆசை - வாயு திக்கு ஆகிய வடமேற்கு.

அந்தர கங்கை பாராசர தீர்த்த
மதன்வட மேல்புற மருவும்
சுந்தர குமார தாரிகை மேலோர்
துதிவிபாண் டவமெனுந் தீர்த்தம்
நந்தலி னலஞ்சேர் தும்புரு தீர்த்த
நவையறு மெழிற்செக தீர்த்தம்
இந்தநற் றீர்த்தத் தருகினி னலங்க
ளீயுமீ ரொன்பது தீர்த்தம். (11)

தசவவ தார தீர்த்தங்க ளுயருஞ்
சத்தமா விருடிக டீர்த்தம்
இசைவுற முன்ன மியற்றிய சீர்கொண்
டிலங்குசே ஷுபதி தீர்த்தம்
திசைபுகழ்ந் திடுமந் நதிக்குமேல் புறமாய்ச்
சேர்தெச கோணமாந் தீர்த்தம்
சுசியொடு பொருந்திப் படிந்தவர்க் கதிக
சுகந்தரு முத்தம சரசு. (12)

நீதிசேர் மனுவின் றீர்த்தம்வா சவன்ற
னிருமல தீர்த்தமா தவர்தங்
கோதறு தீர்த்த முருத்திர தீர்த்தங்
குணமுறு வசுவினற் றீர்த்தம்
தீதறு நலமாம் பிரமதீர்த் தங்கள்
சிறப்புறு மருத்துவ தீர்த்தம்
மாதவர் புகழுஞ் சானவி தீர்த்தம்
வளங்கெழு வாருண தீர்த்தம். (13)

கவுணவ தீர்த்தஞ் சுகன்றிருத் தீர்த்தங்
கவின்செய்கா பேயர்தந் தீர்த்தம்
உவமையில் பாரி பத்திர தீர்த்த
முயர்ந்தபௌ மாசுர தீர்த்தம்

---

11. நந்தல் - குறைவு. 12. சுசி - தூய்மை. 13. வாசவன் - இந்திரன்.

பவமகல் சோம தீர்த்தமெந் நாளும்
பழுதக ஞாத தீர்த்தம்
நவையகல் லேம தீர்த்தமக் கினியி
னறுஞ்சுனை பசுவின்மா தீர்த்தம். (14)

இயக்கர்தந் தீர்த்தங் கணேசுர தீர்த்த
மிகத்திறே யாவையும் விலக்கும்
நயச்சக சாட்ய வரமெனுந் தீர்த்த
நமன்றனை வியற்றியெவ் வுலகும்
வியப்புறப் பொலியும் விசுவகல் லோல
வியனதி பொன்னவன் றீர்த்தம்
மயக்கறு முரோம விருடிதன் றீர்த்தம்
வயங்குசே னேசுர தீர்த்தம். (15)

அசாமிள தீர்த்த மருமகப் பலனை
யளித்திடுங் கருமநற் றீர்த்தம்
வசீகர முதவு மசுவதீர் த்தஞ்சீர்
வாய்ந்திடு மந்தரை தீர்த்தம்
கசானனற் கிளைய காளைதன் றீர்த்தங்
கடிகமழ் வாருணி தீர்த்தம்
திசாதிசை புகழுங் கயாதிவ சத்தின்
செழும்பலன் றருவட தீர்த்தம். (16)

வாசுகி தீர்த்தம் விட்டுணு தீர்த்தம்
வயினதே யன்றிருத் தீர்த்தம்
ஆசக விரண விமோசன தீர்த்த
மகமரு டணமெனுந் தீர்த்தம்
தேசுறு மனந்தன் றீர்த்தமிக் குயர்ந்து
திகழ்பருச் சன்னிய தீர்த்தம்
வீசலை சிறந்த மேகதீர்த் தஞ்சீர்
மேவுநா ராயண தீர்த்தம். (17)

---

15. நமன் - யமன். கல்லோலம் - அலை. பொன்னவன் - பிருகஸ்பதி. 16. மகம் - யாகம். கசானனன் - யானைமுகம் உடைய விநாயகன். 17. வயினதேயன் - கருடன்.

காலதீர்த் தஞ்சீர்க் கோமுக தீர்த்தங்
கருதரு மணிருத்த தீர்த்தம்
சீலமார் வாசு தேவநற் றீர்த்தஞ்
செழித்தவஞ் சனசுதன் றீர்த்தம்
கோலமார்ந் திடுசங் கருடண தீர்த்தங்
குலவிய கவின்குடி யிருந்தத்
தாலமும் புகழுஞ் சுதசுதா கார
சரசுடன் பிதிர்களின் றீர்த்தம். (18)

அறுசீர் விருத்தம்.

சீரிதி காச மென்னச் சிறந்திடுந் தீர்த்த மண்மேல்
நேரறு புராண தீர்த்த நீள்பிரத் துய்மனற் றீர்த்தம்
ஏருறு சுத்த தீர்த்த மியல்பெறு ஞான மீயும்
காரண தீர்த்த நூற்றெட் டாமெனக் கரைவர் மேலோர். (19)

தக்கன்முன் பெற்றெ டுத்த தநயரா யிரவர் சீர்சால்
அக்கன வரையி னுள்ளத் தைம்புல னடக்கி யன்பால்
மிக்கநற் றவஞ்செய் காலை விழுமிய யாழ்கைக் கொண்ட
முக்கிய முனிவ னெய்தி மொழிந்தநல் விஞ்சை யாலே. (20)

மற்றவ ரானே மித்த மறுவின ரதகோ ணத்தில்
உற்றநூற் றெட்டுத் தீர்த்த முண்டஃ தன்றி மேலாம்
நற்றவக் காசி பன்ற னவையிலாச் சிரமந் தொட்டுச்
சுற்றரைக் காத மட்டுந் துலங்கெழின் மலிந்து தோன்றும். (21)

குமாரதா ரிகையின் மேல்பாற் குலவுநூற் றெட்டுத் தீர்த்தம்
அமருமா லவற்றின் மாடே யாயிரந் தீர்த்த மேவுஞ்
சமமிலா வத்தோ யங்க டமிற்படி வோர்கட் கன்றே
இமையவர் தமக்கு மெய்தாச் சித்திக ளெய்து மாதோ. (22)

---

18. தாலம் - உலகு. சரசு - குளம். 19. கரைவர் - சொல்வர்.
20. நயர் - பிள்ளைகள். கனவரை - மேகஞ் சூழ்ந்த மலை. யாழ் - வீணை.
21. மறு - குற்றம். 22. தோயம் - குளம். இமையவர் - தேவர்.

எழுசீர் விருத்தம்.

*சொல்லிய விந்தப் புண்ணிய தீர்த்தத்*
*துறைபடிந் தவர்செயும் பவங்கள்*
*பல்லவு மிரவி முனமிம மென்னப்*
*பாறிடு மாகையி னாலே*
*வல்லவர் புகழும் மலையினிற் றீர்த்த*
*மகிமைக ளனைத்தையும் வழுத்தற்*
*கெல்லையில் புகழார் நான்முக னானு*
*மிசைப்பதற் கரியவா மெனவே* (23)

*வையக மொருங்கே புரத்தல்செய் திலீப*
*மன்னனுக் கிப்பெருஞ் சரிதை*
*துய்யனாந் துருவா சப்பெயர் முனிவன்*
*சொற்றன னெனத்தவச் சூதன்*
*ஐய்யமுற் றிரியச் சௌனகா தியர்கட்*
*கறைந்தன னீதெலாஞ் சிறந்த*
*மெய்யறி வுடையோர் புகழ்பிர மாண்டம்*
*விளங்கிட விரித்துரைத் திடுமே.* (24)

தீர்த்த விவர முரைத்த அத்தியாயம் முற்றிற்று.

## 18. தொண்டைமான் சக்கரவர்த்திக்குத் திருவாழி திருச்சங்கு ஈந்த அத்தியாயம்.

எழுசீர் விருத்தம்.

*மன்னவர் தினமும் வந்துவந் திறைஞ்சு*
*மணிமுடித் தழும்பொரு வாத*
*மின்னுபூங் கழற்கான் மனுவழி யுதித்து*
*விளங்கிய திலீபனென் றுரைப்போன்*

---

23. இமம் - பனி. பாறிடும் - ஓடிவிடும். 24. வையகம் - பூமி. துய்யன் - பரிசுத்தன். ஐயம் - சந்தேகம். 1. ஒருவாத - நீங்காத.

பன்னருந் தவத்தி னுயர்தரு வாசன்
பங்கயச் செழுமுக நோக்கித்
தன்னைநே ரில்லா வேங்கடத் தமருஞ்
சகத்திரப் பெயரினன் றனக்கு (1)

எப்பெயர் விளங்கு கின்றன வவனெவ்
விலக்கணத் துடன்கட வுளரோ
டிப்புவி யவருந் தொழவிருக் கின்று
னிதனையான் றெருளுமா வுவந்து
செப்பென நயஞ்செய் சுருதிநூல் யாவுந்
தெளிவுற வுணர்ந்துளந் தேர்ந்தே
ஒப்பற வுயாம் முனிமகிழ்ந் தமுத
மொத்துரைத் திடுவதா யினனே. (2)

சங்குசக் கரம்பீ தாம்பர மகர
குண்டலஞ் சதுர்ப்புய மகுடம்
கொங்கலர் துளவங் கௌத்துவ மணியுங்
குலவிய மாப்பெரு நீல
மங்குலொத் தொளிசெய் வடிவமா முதலம்
மலைமிசை யாவரும் வியப்பப்
பொங்கெழிற் சீநி வாசனென் றுயர்வு
பொருந்திய பெயரினைப் புனைந்து (3)

வாமநற் கரத்தை யிடையினிற் சார்த்தி
வலக்கரத் தபயமீந் தழகார்
பூமக டனைத்தன் னுரத்தின்மின் கொடிபோற்
பொற்புற விருத்திநல் லன்பர்
தாமுள முவப்ப வேண்டிய வெல்லாந்
தருதல்செய் கருணையங் கடலாய்க்
கோமள முறநின் றிடுந்திருக் கோல
மாகவே குலவுமெம் பெருமான். (4)

பங்கயம் - தாமரை மலர். சகத்திரப் பெயரினன் - சகஸ்ரநாமன் ஆகிய திருமால். 2. தெருளுமா - தெளியும்படி. 3. பீதாம்பரம் - பொன்னுடை. சதுர்ப்புயம் - நான்கு தோள்கள். கொங்கு - தேன். துளவம் - துளசி. கௌத்துவமணி - திருமாலின் மார்பிலணியும் தெய்விக ரத்தினம். நீல மங்குல் - கருமேகம். 4. வாமம் - இடது. அபயம் - அச்சம் இன்மை. உரம் - மார்பு. கோமளம் - அழகு.

(கலிநிலைத்துறை)

கலியிற் சக்கர வர்த்தியாய்க் கவின்றுநன் கிலங்கும்
புலியு யர்த்தவன் கான்முளை பொருட்டொளி சுலவும்
வலிய சங்குசக் கரங்களை வழங்கிய முறையால்
மலிவு றுங்கரு ணைக்கணம் மாயவ னுங்கே (5)

இலங்கு நேமிசங் கங்கையி னிலாதவ னாகித்
துலங்கு கின்றன னென்னலுந் துளிமதுப் பிலிற்றும்
அலங்கல் வேலிறை யம்முனி யருண்முக நோக்கி
நலங்க னிந்தநல் லடிகண்முன் னவின்றசீர் மேயோன். (6)

திகிரி மன்னவன் சரித்திரஞ் செவ்விதி னெனக்குப்
பகர்தி யென்றடி பணிதலும் பற்றறு மேனோர்
நிகரி லாமுனி நீதிகோ டாநெறி யரசே
அகம கிழ்ந்துகேட் கெனவினி தறையலுற் றனனால். (7)

கெழுமு செம்பிய நாட்டிடைக் கிருட்ணசேத் திரமென்
றெழிலு றுந்தல முண்டதி னெவர்களும் புகழும்
வழுவில் சீர்த்தியான் றிருதவன் மாவெனும் வளவன்
பழுதி லாதருந் தவம்பரி வுடன்செய்பா ணியிலே (8)

ஆங்கு வேதசாத் திரமெலா மறிந்துளந் தேர்ந்த
திங்கி லாதவை கானசச் செழுமறை யவனோர்
தேங்கொ டாமரைத் தெரியலா னிடஞ்செவி தழைப்ப
ஓங்கு தேவகிக் குதித்தவன் சரிதைகேட் டுவந்து (9)

தத்து வப்பொரு ளாகிய தண்டுழா யலங்கல்
வித்த கப்பெரு விமலனுங் கண்ணனை வேட்டு
நித்த லும்புகழ்ந் தன்பொடு நினைந்தடி வணங்கிப்
பத்தி யாலருந் தவத்தினைப் பண்புற வியற்ற (10)

5. புலி யுயர்த்தவன் - புலிக் குறியைக் கொடியில் எழுதிக் கொண்ட சோழன். கான்முளை - பிள்ளை. 6. நேமி - சக்கரம். மது - தேன். பிலிற்றும் - சொரியும். அலங்கல் - மாலை. இறை - அரசன் (திலீபன்). 7. திகிரி - ஆக்ஞா சக்கரம். 8. செம்பிய நாடு - சோழனுடு. வளவன் - சோழன். பாணி - காலம். 9. தெரியலான் - மாலை யணிந்த பிராமணன். 10. தத்துவப் பொருள் - மெய்ம்மைப் பொருள். துழாயலங்கல் - துளசி மாலை. நித்தலும் - நாள்தோறும்.

சீரு லாவிய மதிமுகச் செழுங்கயல் பொருகட்
காரு லாவிய பூங்கணி கமழ்தருங் கூந்தல்
ஏரு லாவிய கோவியர் மார்பிடங் கொண்ட
வாரு லாவிய வனமுலை பொருததோண் மாயன் (11)

ஒப்பில் வேதியன் செய்தவத் தினுக்குள முவந்து
சொப்ப னத்திடைத் தோன்றிமுன் சொல்லுவான் மேலாய்ச்
செப்பும் வேங்கட மலையினிற் சிறப்பொடு மிலங்கும்
மைப்பெ ருந்திரு மேனியான் சீநிவா சனுக்கு (12)

சந்த விருத்தம்.

ஆராதன மில்லாதவ ணமர்கின்றன னதனல்
நோராய விடத்தின்புற நேமப்படி நீசென்
றோராயருச் சனைசெய்தினி திருந்தாலுள மகிழ்ந்து
சீராயுன தெண்ணப்படி யருள்செய்குவ னென்று (13)

கண்ணன்னிவை சொலமாமறை கற்றோனிவ னீல
வண்ணந்திகழ் மாலென்னம தித்துப்பணிந் துரைப்பான்
விண்ணின்னுய ரம்மாமலை மேல்வாழ்பரன் மகிழ்வாய்
நண்ணுந்தல மீதென்றடை யாளந்நவி லெனவே (14)

வினவும்மறை யவனுள்ளம் வியக்கும்படி மீண்டும்
கனவின்மொழி வானுதியு கத்திற்கவி னுறவாழ்
தனதன்னிகர் விபவம்பெறு தக்கோர்புகழ் சங்கன்
எனுமன்முனி யற்றும்மணி யெழின்மேவு விமானம் (15)

மூடும்பிர ளயநாளினின் முழுதுஞ்சிதைந் தொழிய
நீடும்மொரு புற்றின்னடு நேராய்முன நவிலும்
தேடும்புக ழிறையாற்பிர திட்டைக்குவந் தருள்செய்
தோடொன்றிய மலராளுறை தூய்மார்பின னிலக (16)

11. மதி முகம் - சந்திரன் போன்ற முகம். கயல் - கெண்டை மீன். ஏர் - அழகு. கோவியர் - இடைச்சியர். வார் - மார்புக்கச்சு. 12. சொப்பனம் - கனவு. மை - மேகம். 13. ஆராதனம் - பூசனை. அவண் - அவ்விடம். நேமம் - விதி. 14. நீலவண்ணன் - கரிய திருநிறமுடையான். பரன் - மேலாகியவன். 15. தனதன் - குபேரன். விபவம் - சிறப்பு. 16. பிரளய நாள் - உலகின் ஒடுக்க நாள். இறை - சங்க அரசன். பிரதிட்டை - நிறுதவுல். தோடு - மலர் இதழ்.

வளர்ந்தோர்பெறு முழந்தாள்வரை வன்மீக மறைப்பக்
கிளர்ந்தேபல சினைகொண்டுகி ளைத்தோங்கி யெழுந்து
குளிர்ந்தேநல முறையோர்புளி குலவும்மத னிழல்வாய்
உளந்தூயவர் தொழுபூமக ளுரத்தோ னுறை கின்றான். (17)

எழுசீர் விருத்தம்.

அவ்வயி னிரண்டு தனுவினீ ளத்து
ளமர்ந்தபூ தீர்த்தமொன் றுண்டாற்
திவ்விய வந்த முகுந்தனுக் குவந்த
திருமடைப் பளிப்பணிப் பொருட்டால்
எவ்வமில் பூமின் றன்னைமுன் னேமித்
திருக்கின்ற தவ்விடந் தனிலே
செவ்வியின் மிருந்த கௌதமி யென்னுஞ்
செருத்தலான் சிறப்புடன் றினமும் (18)

அந்தமா யனைத்தன் பாலினுற் றிருமஞ்
சனஞ்செய்தே யங்ஙன மமருஞ்
சுந்தர வரங்க தாசனென் றுரைக்குஞ்
சூத்திர னத்திரு மலைக்கு
வந்தன திடத்துச் சேருவ னீவி
ரிருவரு மகிழ்வுற வனப்பார்
விந்தைநா தனையா ராதனஞ் செய்தே
விருப்புறப் பத்திசெய் திருந்தால் (19)

உண்மையா யுனக்கு மரங்கதா சனுக்கு
மொளிதிகழ் சீநிவா சன்றான்
தண்மையார் கடல்சூழ் நிலவல யத்திற்
றருமுளம் வேட்டவை யென்ன

17. வன்மீகம் - புற்று. சினை - கிளைகள். உரத்தோன் - திருமார்பு உடையான். 18. தனு - வில். மடைப்பள்ளிப் பணி - தளிகை சித்தஞ் செய்யும் சாலையில் தொழில். எவ்வம் - குறை. செருத்தல் ஆன் - பால் மடியையுடைய கறவைப் பசு. 19. திருமஞ்சனம் - திரு நீராட்டு. விந்தை - இலக்குமி. 20. வலயம் - வட்டம்.

வண்மைசேர் மறையோ னிறுதுநன் ஞமம்
வழங்கென மல்லரை வதைத்த
திண்மைசேர் புயனற் கோவியர் நாத
ஞனெனச் செப்புகா லேயிலே (20)

நித்திரை யுணர்ந்து பார்த்துல களிக்கு
நின்மல னந்தவ சினுக்குச்
சித்தமுள் ளிரங்கி யிக்கயிங் கரியஞ்
செய்யெனச் செப்பின னென்று
மெத்தவு மகிழ்ந்து வேங்கடா சலத்தை
மேவுமக் காலேயி லதிக
பத்திசே ராங்க தாசனங் கெய்த
விருவரும் பரிவுட னிணங்கி (21)

சென்றிடுங் காலே யாங்கதா சனுக்கச்
செழுமறை வேதியன் கனவில்
மன்றலந் துளவத் தாரினன் வந்து
வழுத்திய தியாவையும் வழங்க
நன்றென வவனு முளங்களிப் பெய்த
நடந்திரு வருமந்த மலேமேல்
நின்றதிந் திருணித் தருவினேத் தேடி
நேருறக் கண்டன ரன்றே. (22)

அத்தரு நிழல்வா யமர்ந்தபொன் னுரத்தா
னடியிணை யிறைஞ்சியப் புற்றைச்
சுத்தகோ மளத்தின் பயத்தினுற் கரைத்துச்
சொல்லுமப் புற்றின்மேற் புறத்தின்
எத்தலங் களுக்கு மீசனே மகிழ்வா
லெழுந்தரு ளப்பணி யெழில்சேர்
பத்திசெய் கோயிற் றிருப்பணி பியற்றப்
பசியபொன் னிலாமையி னுலே (23)

---

மல்லர் - மற்போர் செய்வோர். 21. கைங்கரியம் - திருப்பணி. 22. திந் திருணித்தரு - புளிய மரம். 23. பொன்னுரத்தான் - ஸ்ரீநிவாசன். கோமளம் - பசு. பயம் - பால்.

வனத்துறை திரணங் களினொரு சிறிய
மண்டப மெழிலுறத் திரண்ட
தனத்திரு வுரத்தான் மகிழ்வுற வமைத்துத்
தண்டுள வத்தொடு மலர்கள்
மனத்தினிற் பத்தி மருவுற வெடுத்து
மாண்குண வரங்கதா சன்றான்
கனத்தநூ றெரிவை கானச மறையோன்
கையினு டொறுந்தர வவனும் (24)

நேமமோ டாரா தனம்புரிந் தாங்க
ணெடிதுநாள் சென்றபி னொருநாள்
காமமே மலியுங் குண்டல னெனுமோர்
கந்திரு வன்மதி வதன
வாமமே கலையார் சூழ்தரக் கவினார்
மானமே லிவர்ந்துவந் தவணின்
நாமமா யிரத்தா னடியிணை யிறைஞ்சி
யுத்தா நயஞ்செய்பூங் காவில் (25)

நலத்தசிங் கார சாத்திர நுண்மை
நவையற வுணர்ந்துமோ கனஞ்செய்
அலத்தக மணிந்த பதத்திய ருடனே
ரழகுறு மாதவிப் பந்தர்
நிலத்தினின் வாச மலரணை மருவி
நிகரறு மதனநூல் முறையே
கலைத்திற னறியுங் குண்டலன் காமப்
போரிடைக் களிப்புறுங் காலை (26)

அச்சுதன் றனக்கு மலர்பறித் தணுகு
மரங்கதா சன்கணு னோக்கி
இச்சைகொண் டடங்கா திந்தியம் பெருக
விலச்சையும் பயமுமுண் மலிய

24. திரணம் - புல். துளவம் - துளசி. 25. நேமம் - விதி. ஆராதனம் - பூசனை. வதனம் - முகம். வாமம் - அழகு. மேகலையார் - மேகலை என்ற இடையணி அணிந்த இள மகளிர். மானம் - விமானம். இவர்ந்து - ஏறி. உத்தரம் - வடக்கு. 26. அலத்தகம் - செம்பஞ்சுக் குழம்பு. 27. அச்சுதன் - திருமால். இந்தியம் - இந்திரியம். இலச்சை - நாணம்.

எச்சிலா னோமென் றெண்ணியங் கெடுத்த
மலரெலா மெறிந்தொரு சுனையில்
உச்சித மிருந்த சாமிபுட் கரிணி
யுதகமுட் பின்னுநீ ராடி (27)

சுத்தியா யெழுந்து பின்னருஞ் சுகந்தம்
பெருமலர் விரைவினிற் கொய்து
பத்தியோ டணுகும் வேலையிற் றிருவின்
பதியச ரீரியாய் நவில்வான்
புத்திநைந் தாங்க தாசநீ மோகம்
பொருந்தியா ராதன காலத்
தித்தலத் துருது தாழ்ந்ததி னாலு
மெண்ணுகா மியவிச்சை யுடனே (28)

என்னிடத் தன்பு பொருந்தினை யதனா
லிப்பிறப் பொழிந்துநீ நலஞ்சேர்
இந்நில மதனி னேமிமன் னவனுக்
கெழிலுறு மகவெனப் பிறந்து
நன்னய போகத் திறனெலா நீயன்
னாடொறு நுகருபு நபம்போழ்
மன்னுகோ புரவி மானமண் டபங்கள்
வருபிரா காரமே முதலாய் (29)

எனக்குநீ செய்து பொதுவறும் பத்தி
யெய்தியங் கிருக்குநா டன்னில்
உனக்கெணி லாத வொன்னல ரெதிர்த்தங்
குறுவாக் காலையின் விசயஞ்
செனிக்கவெஞ் சங்கு மாழியுந் தருது
மதற்குமேற் சிலபகல் கழிந்தால்
நினக்குநின் சுற்றத் தவர்க்குமே லுயர்ந்த
நீள்பர கதியினை யளிப்பேம். (30)

---

உச்சிதம் - சிறப்பு. உதகம் - நீர். 28. சுகந்தம் - நறுமணம். திருவின்பதி - திருமகள் நாயகன். அசரீரி - ஆகாச வாக்கு. 29. நேமி மன்னன் - ஆக்ஞா சக்கரத்தையுடைய அரசன். மகவு - குழந்தை. நுகருபு - அனுபவித்து. நபம் - விண். 30. ஒன்னலர் - பகைவர். ஆழி - சக்கராயுதம்.

ஆதலா னேமி யாசனுக் குதிப்பா
யெனநிய மித்திட வவனுஞ்
சீதரன் மொழியா லவ்வுட னீங்கிச்
செப்பறு வளமலிந் தெழில்சேர்
மூதறி வினர்வாழ் நாரண புரத்தின்
மொய்ம்புறு நேமிவேந் தனுக்குக்
காதல னெனுமா தோன்றிவான் பிறைபோற்
காதலாய் வளர்த்திட வளர்ந்தே (31)

சாத்திர மெழுதாக் கிளவியெக் கலையுந்
தவறிலா துணர்ந்துல கோம்பும்
பார்த்திவர் புகழப் பொன்முடி பொறுத்துப்
பைம்பொனா சனத்திடை மேவிக்
காத்தல களித்து வேலென மிளிர்ந்து
கயலெனப் பிறழ்ந்துமை தோய்ந்த
நேத்திரக் கனியர் தம்மைவேட் டின்ப
நெடிதுநாட் டுய்த்தினி திருந்து (32)

தொண்டைமான் சக்ர வர்த்தியென் றெவருஞ்
சொல்லநன் னீதிவ ழாமே
எண்டகக் கோனன் கோச்சிறற் சேட
விறும்புறை தேவனே தேவாக்
கொண்டுநா டோறுஞ் சுரங்கநீ ணெறியாய்க்
கோதில்வேங் கடமலை யடைந்து
பண்டைநான் மறைக்கு மெட்டொணாப் பரமன்
பங்கய மலரடி பணிந்து (33)

திருமதி லிரண்டு கோபுர மிரண்டு
திருமடைப் பளிகொடி யேற்றும்
பெரியமண் டபந்தா னியப்புரை முதலாய்ப்
பெட்புறு திருப்பணி யெல்லாம்

---

31. சீதரன் - சீநிவாசன். 32. எழுதாக் கிளவி - சுருதி. பார்த்திவர் - அரசர். நேத்திரம் - கண். கனியர் - கன்னியர். 33. கோல் - செங்கோல். சேட விறும்பு - சேஷ மலை. 34. தானியப் புரை - தானியக் களஞ்சியம்.

இருபதோ டேழாங் கலியுக மதனி
னிலக்குமி நாதனுக் கன்பாய்ப்
பொருசிலை வலிசேர் தொண்டைமா னென்னும்
பூபதி யியற்றுவித் தனனால். (34)

பின்னரு நங்கள் சீநிவாச னுக்குப்
பெட்புறு மறைவலோர் தம்மால்
மன்னிய துவசா ரோகண முதலாய்
வளம்பெறு முற்சவங் களையும்
தன்னிக ரில்லா துயரவ பிருதந்
தகைபெற வாடலு நலங்கள்
துன்னிடும் புட்ப யாகங்க டாமுந்
துகளற வுவந்துசெய் வித்தே (35)

சொல்லிய காலந் தவறிலா தாரா
தனமிகு தூய்மையி னடத்தி
அல்லியங் கமல மலர்மகண் மருவு
மன்பனை நாடொறும் பணிந்து
மல்லலம் புவன மகிழ்வுற வாசாள்
காலையின் மருவலர் குழுமி
எல்லையில் படைக ளோடுமந் நகரி
னெயிற்புறத் தெய்தியே முற்றி (36)

அம்பினுங் கொலைசெய் வெம்படை களினு
மந்நகர் மாக்களை வதைக்க
வெம்பியுள் ளழன்று நேமிமன் னவனும்
வெஞ்சிலை முதலவாம் படைகொண்
டும்பரி னுயர்தேர் கரிபரி வீர
ருலப்பிலா ருடன்வரச் சென்று
கம்பமுற் றவனி வெருவுறப் பகைஞ
ருறைவிடங் கடிதினிற் கலந்தான். (37)

35. துவசாரோகணம் - கொடி யேற்றம். 36. அல்லி - அகவிதழ். மல்லல் - வளம். மருவலர் - பகைவர். எயில் - நகர் மதில். 37. அழன்று - கோபித்து. உலப்பிலார் - எண்ணிக்கை யில்லாதவர். கம்பம் - நடுக்கம். அவனி - உலகு.

கொற்றவின் ஞாணைச் செவியுற வாங்கிக்
கோல்பல மாரிபோற் றூரந்து
வெற்றிசெய் யிரதம் பலபொடிந் துலப்ப
வெம்பரிக் குலங்கரித் திரள்கள்
உற்றிடும் வயவ ருடலுறுப் பெல்லா
மோங்கல்போன் மண்ணிடை வீழ
இற்றுகு குருதி கடலெனப் பெருக
விருவிசும் பிமையவர் வெருவ (38)

அறுசீர் விருத்தம்.

கூற்றென வால மென்னக் கொழுங்கன லென்ன வூழிக்
காற்றெனச் சினந்து நீண்ட கார்முகக் கணையி னாலும்
ஏற்றசத் திரங்க ளாலு மெதிர்த்தவ ருடல்கூ றுக்கி
மாற்றினன் மாயன் செய்ய மலரடி மறவா மன்னன். (39)
இவ்வகை யமர்பொ ருங்கா லெண்ணிலா வெறுழ்வ லித்தோட்
டெவ்வர்சூழ்ந் தளவில் கொற்றச் சிலீமுக மழையிற் பெய்திட்
டெவ்வமி லிரதங் கைவி லிற்றுகப் படைகள் வீழ்த்திச்
செவ்விய வாசன் சிந்தை தெருமா லுறுவித் தாரால். (40)
அப்பொழு தாழி மன்ன னவரெதி ருடற்ற லாற்றுன்
ஒப்பறு பிலத்து வாரத் துள்வழி துனைந்து சென்று
செப்பருஞ் சேட வெற்பிற் சேர்ந்துமா மகிணன் றன்னைத்
தப்பற வெண்ணி வாழ்த்திச் சரணடைந் தஞ்ச லித்தான். (41)
இணைத்திரு வடியை யுள்ளத் திருவிநன் கிறுகப் புல்லிப்
பிணித்துல கெவையுந் தந்த பிரணவப் பொருளே யார்க்கும்
பணித்தடங் காத மேன்மைப் பரமனே துன்ன ரோடும்
கணித்தபோர் தொலைந்து மட்கிக் கடிதிவட் புகல டைந்தேன். (42)

---

38. கோல் - அம்பு. வயவர் - வீரர். ஓங்கல் - மலை. உகுகுருதி - சிந்திய இரத்தம். விசும்பு - ஆகாயம். 39. ஆலம் - விஷம். கார்முகம் - வில். சத்திரம் - கைவிடாப் படை. 40. பொருங்கால் - போர் செய்யும் போது. எறுழ் வலி - மிக்க வன்மை. தெவ்வர் - பகைவர். சிலீமுகம் - அம்பு. தெருமரல் - சுழற்சி. 41. உடற்றல் - போர்செயல். பிலத்துவாரம் - நில வறை. துனைந்து - விரைந்து. மாமகிணன் - திருமகள் கேள்வன். 42. இருவி - இருத்தி. துன்னர் - பகைவர். மட்கி - உடைந்து. புகல் - சரணம்.

கருணைசெய் தருள வேண்டு மென்னலுங் கமலக் கண்ணற்
றிருவரு டழைப்ப நோக்கிச் செப்புவான் வெருவல் வேண்டா
தருகுவ னுனக்கென் சங்கு சக்கர மவற்ற னுன்வெம்
மருவலர் தம்மைக் கோறி யெனவரா மகிழ்தந் தீந்து (43)

வாசனை நாறுஞ் செய்ய மலர்மகண் மருவு மார்பன்
றேசுறு வளையி னேடு திகிரியுங் கொடுத்துப் போக்க
ஆசறு மன்னன் வாங்கி யழகுறும் பதியி னெய்திப்
பூசனை செய்து வேண்டப் பொங்கொளி தவழச் சென்றே (44)

அடையலர் தம்மை யெல்லா மடிமுடி யறத்த டிந்து
படியினில் வீழ வீட்டிப் பார்த்திவ னிடத்தி லேயோர்
நொடிவரைச் சேர்த லோடு நுவலரு முவகை பொங்கி
உடல்புள கி ச் சங்கோ டொளிகிளர் திகிரி தன்னை (45)

ஏந்திவேங் கடமென் றோது மெழின்மலை யெய்தி யாங்குப்
பூந்திரு நா தன் செய்ய பொன்னடி யிறைஞ்சி யேத்தி
வேந்தன்ற ன் னிற்ப நோக்கி மேதகு பரமன் செய்ய
காந்திசெய் துவர்வாய் விண்டுன் கருத்தின் வேண்டுவதியா தென்ன (46)

அய்யநின் னருட்பேற் றல்யா னரந்தைமுற் றுங்க ளைந்து
துய்யனு கினனல் வேண்டிச் சொல்லுவ தியாதென் றலென்
வெய்யவொன் னலரை யெல்லாம் வீத்தசங் காழி தம்மை
வையகந் தனி யேற்கு வழங்கிய தெவர்க்குந் தோன்ற (47)

தேவர்ந லர்ச்சா விம்பத் திவ்யமங் களரு பத்தில்
மேவிய கதிர்செய் யாழி வெள்வளை தனையு மிந்தப்
பூவினி லெவரு மூனப் புறக்கணு லுணரா வண்ணஞ்
சேவைதந் தருள்வா யென்று செப்பலு முளத்திற் கொண்டே (48)

43. வெருவல் - அஞ்சுதல். கோறி - கொல்லுவாய். 44. வளை - சங்கு. திகிரி - சக்கரம். 45. அடையலர் - பகைவர். தடிந்து - வெட்டி. படி - பூமி. வீட்டி - அழித்து. பார்த்திவன் - அரசன். நொடிவரை - கைந்நொடிப் பொழுது. 46. காந்தி - ஒளி. 47. அரந்தை - துன்பம். துய்யன் - தூய்மையன். ஒன்னலர் - பகைவர். வீத்த - அழித்த. வையம் - உலகம். 48. அர்ச்சா விம்பம் - பூசனைக்குரிய திருவுருவம். ஊனப்புறக்கண் - தசையால் ஆகிய வெளிக்கண்.

வேங்கடத் தானீ யிங்ஙன் வேண்டிய பரிசு சின்னாள்
ஈங்குறு மவர்கட் கெல்லா மினிதுயச் சேவை யீந்து
தீங்கறத் திருவி னோடு சேர்ந்தினி திருக்கின் றேனென்
றோங்கலை யமுத மொப்ப வுரைத்தன னுவந்து மன்னோ. (49)

கொற்றவில் வலியின் மிக்க கோவெனுந் திலீபன் கேட்க
நற்றவத் துருவா சன்று னவின்றன னென்று சூதன்
சொற்றன னிதனை யெல்லாஞ் சோர்வற விதனின் மேன்மை
யுற்றிடும் பிரமாண் டத்தி னுகப்புற வுரைக்கு மன்னோ. (50)

இக்கதை வியந்து கேட்போ ரெழுதுவோர் நலிநோ யின்றி
மக்களும் பொருளும் பெற்று மருவல ரின்றி வாழ்ந்து
தக்கநற் கல்வி ஞானந் தழைத்திடக் கமலை கேள்வன்
மிக்குயர் பதத்தி னூடு மேவிவீற் றிருப்பர் தாமே. (51)

தொண்டைமான் சக்கரவர்த்திக்குத் திருவாழி திருச்சங்கு ஈந்த அத்தியாயம் முற்றிற்று.

## 19. தீர்த்த யாத்திரையின் விவரம் உரைத்த அத்தியாயம்.

அறுசீர் விருத்தம்.

ஐந்தடக் கியமெய்ஞ் ஞான வருந்தவத் துருவா சன்றன்
மைந்துடைத் திலீப னென்னு மன்னனை மகிழ்ந்து நோக்கி
நந்தலில் சேட வெற்பி னலமுறு மாண்பு தன்னைச்
சிந்தையு ளுவப்ப வின்னங் கேட்கெனச் செப்பு வானால். (1)

தீமைசெய் பவங்க ளெல்லாந் தீர்த்துயர் கதியை நல்குஞ்
சாமிபுட் கரிணி தீர்த்தந் தனக்குமா ருததிக் கின்கண்
நேமவெண் கணன்மு னோக்கி னேருறப் புகழ்வ ராக
நாமமுற் றுயருந் தீர்த்த நாடிலொன் றுளது மாதோ. (2)

49. அலை யமுதம் - பாற்கடல் அமிர்தம். 1. ஐந்து - மெய் வாய் கண் மூக்கு செவி என்ற புலன்கள். மைந்து - வலிமை. நந்தல் - குறைவு. 2. மாருத திக்கு - வாயு மூலை - வடமேற்கு. எண்கணன் - பிரமன்.

அப்பெயர் யாத ஞலத் தடத்தினுக் கமைந்த தென்னின்
ஒப்புறு பொற்க ணனிவ் வுலகெடுத் தொளித்த நாளிற்
றுப்புறழ் பவளச் செவ்வாய்த் துடியிடை மலராள் கேள்வன்
செப்பரு வாக மென்னத் திருவவ தாரஞ் செய்து (3)

சினத்தொடு மவுணற் றேடிச் சென்றிர சாத லத்து
முனைப்பெறு வளைவெண் கோட்டான் முடுகிமெய் பிளந்தெ ருக்கிக்
கனத்தமே தினிமான் றன்னைக் கதழ்ந்தொளி கஞலுங் கோட்டின்
நுனித்தலை யேந்தி முன்போ னொய்தரா முடியின் வைத்தான். (4)

ஏனமா முருவ மான விறையவன் சலவா சத்தைத்
தேனமர் கமல ஞலே தெரிந்துமா தவத்தோர் தேவர்
ஆனவ ரவனை வேண்ட வனைத்துல கவரு நோக்கி
ஈனபா வங்க ணீங்க விரணிய கருப்ப னெண்ணி (5)

அப்பெரு மயத்து ணின்று மாண்மைசா லேன மாகும்
ஒப்பறு மூர்த்தி தன்னை யுகந்தெழுந் தருளச் செய்தான்
செப்புமக் கால மாதி சிறந்தவப் பிலப்பேர் வேத
விப்பிரர் வராக தீர்த்த மெனவிளம் புவர்கண் மாதோ. (6)

அவ்வய மூழ்கி யேன மாம்பர னடிதா ழார்மேற்
செவ்விய சீநி வாசன் திருவுள முவப்பு றுனென்
றெவ்வமி லமரர் ஞான விருந்தவர் முதலி னோர்கள்
பவ்வநீ ராடை சூழ்ந்த பாருளோர்க் கறிவித் தாரால். (7)

அன்றியுங் கமலை கேள்வ னம்புவி தனிலெ வர்க்கும்
என்றுமவ் வேன மாலை யெணிப்புகழ்ந் தெக்கன் மத்தும்
ஒன்றுசங் கற்பஞ் செய்யும் படியொளிர் பவளந் தன்னை
வென்றெழி றிகழுஞ் செவ்வாய் விண்டுரைத் தனனு வந்தே. (8)

3. தடம் - தீர்த்தம். பொற்கணன் - இரணியாட்சன். துப்பு - பவளம். துடி - உடுக்கு. வராகம் - பன்றி. 4. அவுணன் - இராட்சசன். இரசாதலம் - கீழ் உலகங்களில் ஒன்று. வளை - சங்கு. கோடு - கொம்பு. முடுகி - விரைந்து. எருக்கி - கொன்று. மேதினி - பூமி. கதழ்ந்து - விரைந்து. கஞலும் - பொருந்தும். நொய்து - எளிது. அராமுடி - ஆதிசேடன் தலை. 5. ஏனம் - பன்றி. கமலன் - பிரமன். இரணியகர்ப்பன் - பிரமன். 6. அயம் - தீர்த்தம். விப்பிரர் - பிராம்மணர். 7. பவ்வம் - கடல். கமலை - திருமகள். 8. ஏனமாலை - வராகமூர்த்தியை. விண்டு - திறந்து.

வெந்திறற் கேழ லானோன் மேதினி வழுத்த வாங்குச்
சந்தத முறுங்கா லத்தோர் பிரளயஞ் சார மூழ்கிப்
பிந்திய காலந் தன்னிற் பேணியோர் சவர னேக்கி
வந்தனை செய்து கோயிற் றிருப்பணி வகுத்தா னன்றே. (9)

வகுத்தவே டுவனை நோக்கி மாலருள் புரிந்திப் பூவின்
மிகுத்தனன் னலநு கர்ந்து மேலதா யுயர்ந்து நாளும்
மகத்துவம் பொருந்தி நந்தா வளஞ்செறி பதத்தை யுற்றுச்
சுகித்தினி திருத்தி யென்று துவரிதழ் விண்டு சொற்றான். (10)

எழுசீர் விருத்தம்.

என்ன லுந் திலீப மன்னவ னுளத்தி
னெழுந்தபே ருவகையே மலிய
இந்நில மதனிற் புனிதநீர் படிதற்
கெவ்வித மாகவெக் காலந்
துன்னுவ தென்னக் கடாவலு முயருஞ்
சுருதிநூ லறிந்துமெய்ஞ் ஞானம்
மன்னிய முனிவன் வாய்மலர் திறந்து
வளம்பெற வழுத்தலுற் றனனால். (11)

நாமநீர் குடைதற் கடைதலி னித்திய
மென்றுநை மித்திய மென்றுங்
காமிய மெனவு மூன்றுள வவற்றிற்
கழறிய நித்யமா வதுதான்
சேமவை கறையு நன்பகற் பொழுதுந்
தினந்தின மயத்தின்மூழ் குவதாம்
நேமநை மித்திய மென்பது பரிதி
நிலவொடு கூடுநா ளுடனே (12)

9. கேழல் - பன்றி. சவரன் - வேடுவன். 10. பூ - பூமி. துவர் இதழ் - பவளம் போன்ற வாய். 11. படிதல் - முழுகுதல். கடாவல் - கேட்டல். 12. குடைதல் - முழுகுதல். நித்தியம், நைமித்தியம், காமியம் என்பன நாள்தோறும் நடப்பது, நிமித்தம் பற்றியது, விருப்பம் பற்றியது எனப் பெறும். வைகறை - விடியற் காலம். பரிதி - சூரியன். நிலவு - சந்திரன்.

திங்களூற் பவிக்குங் காலமென் றினையுந்
திகழ்மதி யையுமாத் தீண்டப்
பொங்குவெஞ் சினத்தொ டெழுதரு மமைய
முதலதாய்ப் பொருந்திய நலங்கள்
தங்கிய பருவ காலங் டம்மிற்
றனைநதி களினடைந் தாடல்
இங்கித மருவு காமிய மாவ
தென்னெனி விட்டமு ளெண்ணி (13)

சென்றுநீர் குடைதல் பெரியவ ரிந்தத்
தீர்த்தயாத் திரையினை மித்தியம்
என்றுரைத் திடுவர் பலத்தினை யெண்ணு
தேகியே புனிதநீர் படிவோர்
மன்றலந் துளவ மால்பத மருவி
வாழ்வர்கா மியத்தையிச் சித்தோர்
துன்றிய பிறவி வேலையி னமிழ்வார்
சொலுமிக பரமிரண் டினையும் (14)

விரும்புவோ ரிம்மை மறுமையு நலனை
மேவுவார் புனல்படி போழ்தின்
அரும்பனி மலரா ணுதனைத் துதியா
ரரற்றுமண் டூகரே ராவர்
சுரும்பிமிர் தொடையா யென்னமா முனிவன்
சொற்றன னெனவுயர் சூதன்
கரும்பென வமுத மென்னவாய் திறந்து
கழறினன் சௌனகா தியர்க்கே. (15)

எழுதொணு மறைக்கு மெட்டொணு வடிவத்
தெம்பிரா னெழிற்றிரு வடியை
வழுவிலா துளத்திற் பேணிநா டோறும்
வழுத்துமா தவர்புகழ் கின்ற

---

13. திங்கள் - மாதம். என்று - சூரியன். அரா - இராகு என்ற கோள். 14. துளவம் - துளசி. 15. மண்டூகம் - தவளை. சுரும்பு - வண்டுகள். தொடை - மாலை.

எழிலுலா வருமீ ரொன்பதென் றுரைக்கு
மேதமில் புராணங்க டம்மிற்
பழுதிலா மேன்மை யுறுபிர மாண்ட
மிவையெல்லாம் பகர்ந்திடு மன்றே. (16)

தீர்த்த யாத்திரையின் விவரம் உரைத்த அத்தியாயம் முற்றிற்று.

## 20. தான விசேடம் உரைத்த அத்தியாயம்.

அறுசீர் விருத்தம்.

மண்டமர் கடந்த வொள்வாண் மன்னவன் றிலீப னென்போன்
எண்டவத் தருவா சப்பே ரிணையறு முனியை நோக்கிக்
கொண்டல்சூழ் புயங்க வெற்பிற் கொடுத்திடுந் தான மேன்மை
விண்டெனக் கருள்வா யென்று வேண்டலு மகிழ்ந்து விள்ளும். (1)

அந்தண ருவப்ப வன்ன மளித்தறென் புலத்தோர் தம்மைச்
சிந்தையுண் மகிழச் செய்த றேசிகந் தாலிவ் வெல்லாம்
தந்தமக் கெய்து மத்தந் தனைக்கொடு புரிவா ராகிற்
சந்ததம் பரமா னந்தந் தரும்பதி தனில்வாழ் வாரே. (2)

பத்திரை யுவந்து தானம் பண்ணுவோ ரதின்மெய் ரோமம்
எத்தனை யுளதவ் வாண்டை யெய்துவர் விண்டு லோகம்
வத்திரங் கொடுப்போ ராயுண் மலிவுறப் பூவின் வாழ்ந்து
முத்தியை யடைவ ரென்றே மொழிந்தனர் முதுநூல் வல்லோர். (3)

வளமுறு வசுதை யீவோர் மாநிலத் தரச ராய்ப்பின்
துளவமால் பதத்தா னந்தந் துய்த்தினி திருப்பர் நாளுங்
களபநன் மலர்தாம் பூலங் கனகவா பரண மாயன்
உளமகிழ் வுறவாய்ந் தோர்கட் குவப்புற வுதவு வோர்க்கு. (4)

---

1. அமர் - போர். கொண்டல் - மேகம். புயங்க வெற்பு - சேஷகிரி. விள்ளும் - சொல்லுவார். 2. தென்புலத்தோர் - பிதிரர். தேசிகம் - பொன். அத்தம் - பொருள். சந்ததம் - எப்போதும். 3. பத்திரை - பசு. ஆண்டை - வருஷம். வத்திரம் - ஆடை. 4. வசுதை - பூமி. களபம் - சந்தனப் பூச்சு. கனகம் - பொன்.

தேசிக னிடத்திற் செய்த தீவினை யனைத்து நீங்கும்
மாசற விரதஞ் செய்து மலர்மகள் கொழுநற் கீந்தோர்
காசினி யதனிற் கோடி கன்னிகா தான நல்ல
பூசுரர்க் குவந்த ளித்த புண்ணியம் பொருந்து வாரே. (5)

சத்திரங் கால்செய் வட்டஞ் சாமரை தீபத் தம்பம்
சுத்தநீர்க் கடங்க ளாதி பாத்திரந் துளவ மாலை
வித்தகன் கோயிற் குள்ளம் விருப்பொடு கொடுப்போர் பன்னாள்
இத்தலத் தரசர்க் கெல்லா மிறையென விருப்பர் தாமே. (6)

ஆதியா யந்த மாகி யகண்டமுந் தானாய் நின்ற
சீதரன் சினக ரத்திற் செழுமணி சமைத்தீந் தோர்தாம்
பூதலத் துயருங் கல்வி போதமெய்ஞ் ஞான மெய்தி
மீதலத் தெவரும் வாழ்த்த விண்ணவ ராவர் மாதோ. (7)

பரமனுக் குவந்த பஞ்ச பருவவான் விழாச்செய் வித்தோர்
தரணியி லின்பம் யாவுந் தடாதினி தருந்திப் பின்னர்ப்
பிரமனை யுந்தி பூத்த பீதக வாடை பூண்ட
மரகத மேனி யண்ணல் வைகும்வை குந்தஞ் சேர்வார். (8)

புனிதவே தியர்க்கு நூலிற் புகல்விதி வழுவா வண்ணம்
மனதுடன் கனிகை தானம் வழங்குவோர் வானின் மேவும்
வனிதையர் கலவி தன்னின் மதனென நெடுநா ளின்பம்
இனிதுறத் துய்த்து மேல்வீ டெய்திவீற் றிருப்பர் தாமே. (9)

அந்தணர் தங்கட் கத்தங் கிடைத்ததை யற்ப மேனும்
சிந்தையி னுவந்து தானஞ் செயிற்றொல்லை மாத்தின் வித்து
விந்தையாய்ப் பருத்து யர்ந்தே விரிவுறு விருக்க மாபோல்
சந்ததம் பெருகி யோங்கித் தழைக்குமந் நன்மை தானே. (10)

---

5. தேசிகன் - ஆசாரியன். காசினி - பூமி. பூசுரர் - பிராம்மணர். 6. கால்செய் வட்டம் - ஆலவட்டம். கடம் - குடம். வித்தகன் - திருமால். இறை - தலைவர். 7. சீதரன் - திருமகள் நாதன். சினகரம் - திருக்கோயில். 8. பஞ்ச பருவ விழா :—மாதப் பிறப்பு, அட்டமி, சதுர்த்தசி, அமாவாசை, பௌர்ணமி இந்தக் காலங்களில் நடத்தும் உற்சவம். அட்டமி சதுர்த்தசி நீக்கி ஏகாதசி, சுவாமியின் திரு நட்சத்திரம் கூட்டிக் கூறலும் உண்டு. தரணி - பூமி. உந்தி - கொப்பூழ். பீதக ஆடை - பீதாம்பரம். 9. புனிதம் - பரிசுத்தம். வனிதையர் - மகளிர். மதன் - காமதேவன். 10. விருக்கம் - மரம்.

ஆனந்த முடன்மால் கோயி றினமடைந் தவன்ற ருமை
கானங்கள் புரிவோர் கட்ருக் கடியதோர் பிரம கத்தி
கோநந்த வியற்றுந் தீமை குருநிந்தை முதலா யுள்ள
ஈனங்கொள் பவங்க ளெல்லா மிரவிமுன் பனிபோ லாமே. (11)

என்றுபின் றுருவா சன்ரு ணியம்புவான் பூரு வத்தின்
நன்றறி விண்டு வன்ம னென்ருெரு நவையி னூலோன்
துன்றிய காமஞ் சூழத் தூநெறி தூந்து நன்மை
யொன்றுமுட் குறியா தாசான் மனைவியை யுவந்து கூடி (12)

கலிவிருத்தம்.

நாளொன் றேனு நவையென நாடலன்
நீளுங் கூந்தலங் நேரிழை யாளொடும்
காளை யாம்பரு வங்கழி காறுமவ்
வேளு நாண விழைந்தன னின்பமே. (13)

இன்ன வாறிழைத் தேயுட லெங்கணுந்
துன்னு மாபிணி சூழவி ருத்தனுய்
அன்ன மின்றி யாந்தை யடர்தர
மன்னி வாழ்மனை வாளெரி யுண்டதே. (14)

குட்ட நோய்தொழு நோய்கொடு மேலெலாம்
மட்டி லாதபுண் ணோர்ந்து மலிதரக்
கிட்டி மெய்தொளைத் துக்கிரு மிக்குலம்
விட்ட சோரி தரைவிழுந் தோடவே. (15)

சுற்றுந் தீய துர்க் கந்தஞ் சுலாவுற
உற்ற காசினி யோரிகழ்ந் தோச்சவே
பற்று றுந்தம ரும்பழித் தோட்டலும்
அற்ற மேவிவ னத்தடைந் தானரோ. (16)

---

11. கானம் - பாடல். கோநந்த இயற்றும் தீமை - கோஹத்தி : பசுவதை. இரவி - சூரியன். 12. பூர்வம் - முன்பு. நவை - குற்றம். 13. வேள் - காமதேவன். 14. விருத்தன் - கிழவன். ஆரந்தை - துன்பம். எரி - நெருப்பு. 15. கிருமிக்குலம் - புழுக்கூட்டம். சோரி - இரத்தம். 16. தமர் - உறவினர். அற்றம் - வறுமை.

விரண வேதனை வீறி மெலிந்தவன்
தாரணி மேல்விழ மெய்த்தடி நாய்நரி
முரணு டன்கடித் தீர்த்துமு டுக்கலும்
மாண மாயினன் வாய்கொ டலறியே. (17)

அன்ன காலையி னந்தகன் றூதுவர்
மன்னி யெண்ணில்பல் வாதைசெய் தேகொடு
இன்னல் சேர்நிர யத்தினி லிட்டனர்
பின்ன வன்றனக் குற்றது பேசுவாம். (18)

பூத லத்தி னவன்றரு புத்திரன்
வேத நாம னெனப்பெயர் மேவுவோன்
நீதி நூலி னெறியினி னின்றுயர்
மேதை தங்கு விவேக மனத்தனாய் (19)

பெற்ற தாதை யிழைத்த பெரும்பவம்
அற்று நன்மை யடைவதெற் றேயெனக்
கற்ற சிந்தையி னுய்ந்து கனந்திகழ்
வுற்ற வேங்கடத் தும்பரி னெய்தியே (20)

பூவின் மேல்வரு பொன்மகி ழும்மெழிற்
றேவ தேவன் செழுமலர்ச் சீரடி
ஆவ லோடும் பணிந்தவன் கோயிலின்
கோவி னெய்விளக் கேற்றியக் கோதிலான். (21)

நாடொ றுங்கங்கு லும்பக லுந்நகை
நீடு தீப நிரைநிரை யாய்நிரைத்
தேடு துன்று மிலங்கிழை கேள்வனை
நாடி யாங்குறை கின்றவர் நாளின்வாய் (22)

தந்தை செய்பவந் தானசித் தேகவே
நிந்தை சேரு நிரயத்தை நீங்கிவை

---

17. விரணம் - புண். தடி - தசை. 18. அந்தகன் - யமன். நிரயம் - நரகம். இன்னல் - துன்பம். 19. மேதை - அறிவு. 20. தாதை - தந்தை. எற்று - எப்படி. கனம் - மேகம். 21. பொன் - இலக்குமி. கோவின் நெய் - பசுவின் நெய். கோது - குற்றம். 22. கங்குல் - இரவு. நிரை - வரிசை. ஏடு - பூ இதழ்.

குந்த நாடு கலந்தவண் கோதொரீஇ
எந்த நாளுமி யைந்தன வின்பமே. (23)

பின்ன ரும்மவன் பீதக வாடையான்
சன்னி திப்பணி தானெடு நாட்செய்தே
இன்னல் பாற விலங்கி யிகபரந்
தன்னி னுந்நலஞ் சார்ந்திருந் தானரோ. (24)

ஆகை யாலுய ரஞ்சன மாமலைக்
கேகு வோரவன் றெடுத்தொ ரடியெனுந்
தாக மோடுவைத் தார்க்குத் தரைமிசை
வாகை வாசி மகப்பலன் வாய்க்குமே. (25)

மாசி லாவட வேங்கட வைபவம்
ஆசை யோடு வினவு மவர்கடாந்
தேசி னோடுயர் செல்வமெ லாமடைந்
தீச னோரருள் செய்ய விருப்பரால். (26)

வேங்க டத்தின் மகிமை விளம்பிய
பாங்கு றும்பொத்த கத்தைப் படிமிசை
வாங்கி யேனு மெழுதிவைத் தேனுந்தாம்
தீங்க றும்படி பூசனை செய்தவர் (27)

மிக்க செல்வம் புகழொடு மேன்மையுந்
தக்க கல்வியுந் தாழ்வறு ஞானமும்
மக்க ளும்மனை யாளொடு வாழ்ந்துபின்
சக்க ரக்கைப் பரன்பதி சார்வரே. (28)

தேனு லாந்தொடை மார்பன் றிலீபனும்
கோனு வந்திடக் கூறின னீதெலாம்
ஞான மெய்த்தவ வத்திரி நல்கிய
சூனு வாகி வருந்துரு வாசனே. (29)

---

23. வைகுந்த நாடு - பரமபதம். 24 பீதக ஆடையாள் - பீதாம்பர தாரியாகிய திருமால். பாற - ஓட. 25. அஞ்சனமலை - வேங்கட மலை. வாகை - வெற்றி. வாசிமகப் பலன் - அசுவமேத யாகபலன். 26. தேசு - ஒளி. 27. படி - பூமி. 28. சக்கரக் கைப்பரன் - திருமால். 29. தொடை - மாலை. கோன் - அரசன். சூனு - மகன்.

சூத மாதவத் தொன்முனி சௌனகர்
ஆதி யோர்கட் கழுதென வன்பினே
டோதி ஞனிக் கதையினை யொண்புகழ்க்
கோத றும்பிர மாண்டத்திற் கூறுமே. (30)

தான விசேடம் உரைத்த அத்தியாயம் முற்றிற்று.

## 21. சற்சங்கத்தால் வந்த மகிமை உரைத்த அத்தியாயம்.

அறுசீர் விருத்தம்.

**தத்துவந்** தெரிந்த ஞானச் சௌனக ராதி யாய
**வித்தக** முனிவர் சூழ்ந்து வேங்கட மகிமை யின்னம்
**சித்தமுள்** ளுவந்தெ மக்குச் செப்புவா யென்ன லோடும்
**சுத்தநன்** மேதை வாய்ந்த சூதமா முனிசொல் வானல். (1)

சத்திய வுலகந் தன்னிற் சதுமுக னவைக்க ளத்துச்
சுத்தமெய்ஞ் ஞான நூலின் சுவையுணர் வசிட்ட னெய்திப்
பத்திசெய் தடியிற் றூழ்ந்து பகருவா னெவரு மென்னைப்
புத்தியு ளுயரி ராச புரோகித னெனப்பு கழ்ந்தே (2)

பூசனை புரிவ தாலப் புரவலர் நாளுஞ் செய்த
மாசுறு பவங்க ளெல்லாம் வரும்புரோ கிதனுக் கென்றே
பேசுநூ லான தாலிப் பெரும்பவத் தொழிலி னுயேன்
ஆசுறு கொடிய தீய னுகியே துயரு ளாழ்ந்தேன். (3)

பிரமனீ யருள்வா யென்று பின்னரு நவில்வா னிந்த
வருமறை யவன்பொன் னில்லா னுசார வீன னுகிப்
பெரியநன் மகஞ்செ யந்தண் பெரியவர் நாப்ப ணெய்தி
மருவுற விருந்து வந்து வழங்குதக் கணைமே லாசை (4)

1. தத்துவம் - மெய்ப் பொருள். மேதை - அறிவு. 2. சத்திய வுலகம் - பிரம்மலோகம். அவைக்களம் - சபை. 3. புரவலர் - அரசர். ஆசு - குற்றம். 4. ஆசாரவீனன் - ஒழுக்கத்தில் இழிந்தவன். மகம் - யாகம். நாப்பண் - நடுவிடம். தக்கணை - கையுறைப் பொருள்.

மலிவுற வற்ப மீந்தால் வாங்காது முனிந்து நிந்த
சொலுங்குண மிலியை நோக்கித் தூயவந் தணர்க ளெல்லாம்
சலிலமுட் படித லின்றிச் சந்திவந் தனையு மின்றி
நலிவுறு நீயே னிங்கு நண்ணினை யெனச்சி னந்தே (5)

கொடுத்ததை வாங்கா தேநீ கோபமுட் கொண்டா யென்று
கடுத்துநிந் தனைக ளாகக் கழறியே வசிட்ட னென்போன்
இடத்தடைந் திருவென் றேத வெண்ணருந் துயரத் தோடும்
அடுத்தெனைத் துதித்துச் சுத்த னும்வகை யருள்வா யென்றே (6)

அஞ்சலித் தன்பாய் மேவு மந்தணன் பவமு நாயேன்
எஞ்சலில் பவமு நீங்கி யென்றுநற் சுத்த னாகக்
கஞ்சநாண் மலரின் மேய கடவுளே யருள்க வென்று
வஞ்சமில் வசிட்டன் வேண்ட மறையவன் வழங்க லுற்றான். (7)

விபுலையிற் சிறந்த மேலாம் வேங்கடாத் திரியி னெய்திச்
சுபமுறு கோண மென்று சொலுமயந் தன்னின் மூழ்கி
உபநிட தத்தின் சீர்சா லுட்பொரு ளாகி வெண்கோட்
டிபமழைத் திடமுன் றோன்று மீசனைத் தியானஞ் செய்தால் (8)

கலிவிருத்தம்.

விள்ளரிய பாவம் விலகு மெனவறைந்த
கள்ளவிழ் மலர்க்கடவு டன்கழல் பணிந்து
மெள்ளவிடை பெற்றுவரு வேதிய னுடன்மீண்
டொள்ளிய நிலத்திடை யடைந்தொளி விளங்கி (9)

நன்மைபெறு சொன்னமுகி யென்னுநதி யின்பால்
வன்மையுறு மாயையை மறுத்தசுக னுக்கு
முன்மகிழ்வி னோடருண் முகுந்தனை வணங்கிக்
கன்மவினை நீக்குமுயர் கபிலவய மூழ்கி (10)

---

5. நிந்தை - பழி. குணமிலி - நற்குணம் இல்லாதவன். சலிலம் - நீர். சந்தி - சந்தியா காலம். 6. கடுத்து - சினந்து. 7. அஞ்சலித்து - கை குவித்து வணங்கி. எஞ்சல் - குறைவு. கஞ்சம் - தாமரை. 8. விபுலை - பூமி. அயம் - தீர்த்தம் - பொய்கை. உபநிடதம் - வேதாந்தம். வெண் கோடு - வெள்ளிய கொம்புகள். இபம் - யானை. 9. கள் - தேன். 10. மாயை - மாயையின் மயக்கு. சுகன் - சுக முனிவர். முகுந்தன் - திருமால். கபிலவயம் - கபில தீர்த்தம்.

கட்கமை விலாதுயர் கனத்தவரை யெல்லாம்
வெட்கவொளிர் வேங்கட விலங்கன்மிசை சாமி
புட்கரிணி யாடியலர் பூமின்மகிழ் வோனை
உட்கனி வுறத்தொழுது வந்தெதிரி னின்றே (11)

சிந்தையு ளுவந்தடியர் செய்பவ மகற்றிச்
சந்ததமு நன்மையரு ளுந்தயை யுளோனே
இந்தமறை யோன்பவமு மென்பவமு நீங்க
விந்தையுடன் வந்தருளு வாயென விளம்பி (12)

சன்னிதி தனக்குவட சார்பதனி லெய்தி
நன்னய மிகுத்தபவ நாசநதி தோய்ந்து
பின்னருயர் கோணமென வேபெயர் சிறந்து
மன்னுபுன லின்கரையின் வந்தினி தினோடே (13)

அறுசீர் விருத்தம்.

அருந்துத றவிர்ந்தே யேகா தசிமுத லைந்து நாளுங்
கிருந்துநன் மீனத் திங்கட் பௌரணை யென்னு நாமம்
பொருந்திய திதியி னுச்சிக் காலத்திற் புகழ்சேர் கின்ற
கருந்தட நெடுங்கட் செவ்வாய்க் கற்பினுக் கரசி கேள்வன் (14)

களிர்புன லாட நண்ணுங் காலையி னயங்கொ ணூல்க
டெளிவுறு தவர்கள் சித்தர் கின்னர ரியக்கர் தேவர்
துளவநன் மாலை பூண்ட தூயனை விரும்பி யேத்தி
உளமகிழ்ந் தந்நீ ராடற் குறுதலு முவப்பக் கூடி (15)

உடன்வரு மறையோன் றன்னோ டுவந்துசங் கற்பஞ் செய்து
தடநதி மூழ்கித் தேவ தர்ப்பண முதல தான
கடன்முறை யினிதி னாற்றிக் கரையினிற் பதும பீடத்
தடைவுட னமர்ந்து பொன்மா தன்பனை யகத்தி னாடி (16)

---

11. வரை - மலை. விலங்கல் - மலை. 12. விந்தை - இலக்குமி. 13. பவநாச நதி - பாபநாச தீர்த்தம். 14. ஏகாதசி - பதினொன்றாம் நாள். மீனத் திங்கள் - பங்குனி மாதம். "கருந்தட..................கற்பினுக்கரசி" - அருந்ததி. அவள் கேள்வன். — வசிட்ட முனி. 15. தவர்கள் - தவசியர் — சித்தர், கின்னரர், இயக்கர் முதலியோர் வானவர் வகையினர். துளவம் - துளசி. 16. தர்ப்பணம் - திருப்தி செய்தல் ஆகிய சடங்கு. பதுமபீடம் - யோக நிலையில் ஒருவகை இருக்கை. பொன்மாது - திருமகள்.

ஏகசிந் தையனுய்ச் சற்று மிடைவிடா தெழிற்றி யான
யோகமங் கியற்றுங் காலே யொப்பிகந் துயரு மூலம்
ஆகிய சீநி வாச னமலையோர் டுவண நாம
வாகன மீது நீல மலேவரு வதுபோல் வந்தான். (17)

எழுசீர் விருத்தம்.

கண்டிரு கண்ணு மிதயமுங் களிப்பக்
கழலிணை பணிந்துநின் முடி
முண்டக னானுஞ் சுருதியுங் காணு
முதல்வனே நாயினேன் றனக்கு
மண்டனி லிராச புரோகிதந் தன்னுல்
வருபவ முடனிந்த மறையோன்
கொண்டவெம் பவமு நீக்கியாட் கொள்வா
யெனத்துதி செய்துகூ றுதலும் (18)

முகுந்தனுங் கருணை மலிந்தெழ வசிட்டன்
முகமல ரினிதுற நோக்கி
உகந்திசை மடந்தை கணவன்வாய் மொழிகேட்
டுயருமிக் கோணதீர்த் தத்தைப்
புகழ்ந்தமிழ்ந் தாடி யெனைத்தி யானித்துப்
பூசனை புரிந்தனை யதனுல்
மகிழ்ந்தன னுனைநின் மனம்விரும் பியவிம்
மறையவ னலம்பெற மதித்தேன். (19)

தப்புற வின்றி யெம்மிடத் தன்பு
சார்குவார் தம்மையான் விரும்பி
எப்படி யருள்செய் திருவினை யகற்றி
யின்புறக் காத்தருள் வேனே

---

17. ஏக சிந்தையன் - ஒருமனமுடையவன். அமலை - இலக்குமி. உவணம் - கருடன். வாகனம் - ஊர்தி. 18. முண்டகன் - தாமரை மலரில் உள்ள பிரமன். அரன் - சிவன். 19. இசை மடந்தை - சரசுவதிதேவி. 20. இருவினை - நல்வினை தீவினைகள்.

அப்படி நீயு மன்புவைத் திவன்ற
னரும்பவ நீக்கியா ளென்று
செப்பினை யதனுன் மகிழ்ந்தனன் சால
வென்றுபின் செப்பலுற் றனனால். (20)

அம்புவி யதனி லடுத்தவ ரிடத்தி
லன்புவைத் தவன்மகா புருடன்
வம்பகல் பெரியோர் தங்கண்மேற் பத்தி
வைத்தவன் புருடவுத் தமனும்
இம்பரி னின்மேற் பத்திவைத் ததனு
லிவணடைந் தெமைப்பணிந் திந்த
வெம்பவ மகற்றுங் கோணதீர்த் தத்தின்
மேவியா டக்கிடைத் ததுவால். (21)

ஆனதா லிவன்செய் பவமெலா மொளிசெய்
யாதவன் முனந்துகி னம்போல்
போனதுன் னுதவி யாற்பெருங் குணனும்
புகழறங் கல்விநற் செல்வம்
ஞானமு மடைந்து சர்வசித் தாக்கிய
னெனநவி னுமமும் பெற்று
மாநில மிசைவான் சுகமுட னெடிது
வாழ்ந்தினி திருப்பனென் றருளி (22)

மண்ணதி னரசர் புரோகிதந் தன்னால்
வருபவ நினக்குநீங் கியதென்
றண்ணலஞ் சீநி வாசனங் கருள்செய்
தறைகுவான் பின்னரு மிந்தப்
புண்ணிய கோண வயம்படிந் தென்னைப்
புந்தியு ணினைப்பவ ரெவரும்
பண்ணிய பவங்கள் பாறிட நினைத்த
பயனெல்லாம் பெறுவர்கண் மாதோ. (23)

---

21. வம்பு - தீமை. இம்பர் - இவ்வுலகு. 22. ஆதவன் - சூரியன். துகினம் - பனி. 23. அண்ணல் - சிறந்தோன். புந்தி - புத்தி. பாறிட - ஓடிட.

### கலிவிருத்தம்.

முன்னைநாட் டும்புரு முனியிங் கெய்தியே
பன்னருந் தவமெனை நினைந்து பல்பகல்
இன்னறீர் தரப்புரிந் திந்த மாநதிக்
கென்னது நாமமீ கென்று வேண்டினன். (24)

ஈந்தன னன்றுதொட் டின்று காறுந்தான்
வாய்ந்ததப் பெயர்நல மருவு மிவ்வயந்
தோய்ந்தவர் தமைத்திரி புவனத் தொண்கலை
ஆய்ந்தவர் புகழ்ந்துகொண் டாடு வாரென (25)

ஆசறு வசிட்டனுக் கருளி யந்தரத்
தீசனுங் கரந்தன னெவருஞ் சென்றனர்
ஏசறு சர்வசித் தாக்கிய னென்றுசொல்
பூசுர னுடனருந் ததிபொ ருந்துவோன் (26)

தருமலிந் தெழிலுறுந் தனது சூழலில்
மருவிநாள் சிலவவண் வாழ்ந்த பின்னையச்
சருவசித் தாக்கியன் றன்னை நோக்கியுன்
திருநகர்க் கினிதுறச் சென்று நாடொறும் (27)

சதுமறை விதிவழி சாந்த னுயிருந்
ததிதிகட் குணவொடு மாடை யாதிய
உதவிநல் லறத்துறை யொழுகி வாழ்ந்திடின்
பதுமநா பியனருள் பலித்த றிண்ணமே (28)

மக்களுஞ் செல்வமு மல்கி வாழ்ந்துபின்
புக்குதி கதியெனப் புகன்று போக்கலும்
தக்கவம் முனியுரை தலையிற் றுங்கியாங்
கக்கணந் தன்பதி யடைந்திட் டானரோ. (29)

---

24. இன்னல் - துன்பம். 25. கலை - சாஸ்திரம். 26. அந்தரம் - ஆகாசம். பூசுரன் - பிராம்மணன். 27. தரு - மரங்கள். சூழல் - இடம். 28. சதுமறை - நால் வேதம். அதிதி - விருந்தினர். பதும நாபியன் - தாமரை மலர் பூத்த கொப்பூழ் உடைய திருமால். 29. அண்டர் - தேவர்.

அடைந்தவ னறத்தொடு மண்டர் கட்கெலாம்
கடைந்தமு தளித்தவன் கழலை வாழ்த்தியே
படர்ந்தபே ரன்பொடு பாரில் யாவரும்
மிடைந்துவந் தேத்தவீற் றிருந்திட் டானரோ. (30)

பெரியவர் மீதுநற் பெட்பு வைத்தவர்
திருவுள முவப்புறச் செய்து நாடொறும்
மருவுவோர் பவமெலா மாறி யேயிக
பரமிரண் டினுநலம் பயக்க வாழ்வரே. (31)

என்றுயர் சூதமா முனிவ னேதமில்
மன்றலஞ் சீதனை மிசவ னத்துறை
துன்றிய ஞானமெய்த் துறவ ரன்பொடு
நன்றென வினவுற நவின்றிட் டானரோ. (32)

எத்தலத் தவர்களு மேத்து றும்பிரம்ம
உத்தர காண்டத்தி னுரைக்கு மிக்கதை
பத்தியிற் கேட்பவர் படிப்ப வர்க்கெலாம்
புத்தியுஞ் செல்வமும் புகழு மெய்துமே. (33)

சற்சங்கத்தால் வந்த மகிமை உரைத்த அத்தியாயம் முற்றிற்று.

## 22. தும்புருவுக்கு அருள் செய்த அத்தியாயம்.

கலிநிலைத்துறை.

சத்த மேமுத லானவைம் புலப்பகை தடிந்த
சுத்த மெய்த்தவச் சௌனகர் சூதனை நோக்கி
எத்த லத்தவ ரும்புகழ் தும்புரு வென்போன்
பத்தி யாற்றவம் புரிந்தகா ரணம்பக ரெனவே (1)

தொழுது வேண்டலுஞ் சூதமா முனிசொல்வான் மேனாள்
பழுதி லாததும் புருவிசை பாடியா காய

30. பெட்பு - விருப்பம். 31. ஏதம் - குற்றம். மன்றல் - மணம். சீதம் - குளிர்ச்சி. 1. ஐம்புலப்பகை - சத்த பரிச ரூப ரச கந்தங்கள் ஆகிய ஐந்து புலன்களால் உண்டாம் தீமை. தடிந்த - நீக்கிய.

வழிய தாய்வருங் காலையி ஞரதன் மலர்மான்
தழுவு மாதியை யாழினுற் சதிபெடுத் துரைத்து (2)

வாலு மன்புகொண் டிருவரு மகிழ்ந்தள வளாய்நம்
அரியை யாழ்கொடே யானந்த மோடுநீள் கானம்
புரியும் வேலையிற் பொருவருந் தும்புரு முனியைத்
தெரிய நாரத மாமுனி சிறப்புற நோக்கி (3)

என்றன் யாழினு மெரியணி குயின்றுளி யெறிப்ப
உன்றன் யாழ்கதி ருதவுகா ரணமுரை யென்ன
மன்ற ஞறுபூங் கற்பக மலிநக ரளிக்குந்
துன்ற லோதிவான் சசிபதி துன்னுபே ரவையில் (4)

அன்ன வன்றனை வீணையா லகமுவப் பித்தேன்
தன்ன கத்துளே மகிழ்ந்தென்கைத் தண்டினை வாங்கி
நன்ன யம்பெறு மணிகளாற் புதுக்கிநல் கினனென்
றின்ன றீர்தரு தும்புரு முனியெடுத் திசைத்தான். (5)

கடவுண் மாமுனி கதங்கொடு கடிகமழ் துளவ
நெடிய மால்புகழ் நிகழ்த்திடா திதரனைப் பேணி
மிடியர் போற்பொருள் வேட்டநீ விண்ணின்று வழுவிப்
படியின் வீழ்தியென் றிட்டனன் பழிப்பொடு சாபம். (6)

அன்ன காலையி னந்தர நின்றெழி றவழும்
பன்ன காசல மீதுறை பழிப்பறுங் கோணம்
என்னு நீர்க்கரை யினில்விழுந் தெங்குவந் தோமென்
றுன்னி யுட்டிகைத் துடன்றிட முறத்திசை யெல்லாம். (7)

---

2. மலர்மான் - இலக்குமி. ஆதி - திருமால். யாழ் - வீணை. 3. அளவளாய் - கலந்துரையாடி. அரி - திருமால். கானம் - பாடல். 4. எரிமணி - ஒளி பொருந்திய இரத்தினங்கள். குயின்று - அழுத்தி. கதிர் - ஒளிக்கிரணம். மன்றல் - நறுமணம். கற்பகமலி நகர் - தேவேந்திர நகர் ஆகிய அமராவதி. துன்றல் - நெருங்கல். ஓதி - கூந்தல். சசி - இந்திராணி. 5. இன்னல் - துன்பம். 6. கதம் - கோபம். கடி - நறுமணம். இதரன் - மற்றவன். மிடியர் - வறியர். படி - பூமி. 7. அந்தரம் - ஆகாயம். பன்னகாசலம் - சேஷகிரி.

தெரிய நோக்கிவேங் கடமலை யீதெனச் சிந்தித்
தரியை யன்பொடுந் துதிசெய்தந் நீர்படீஇ யழகார்
விரிவு றுங்கதிர் வருதிசை நோக்கிவீற் றிருந்து
பொருவி லாதியை யிதயபுட் கரத்திடை யிருத்தி (8)

அலைபு லன்களை யடர்த்தர னணிசடைக் களித்த
நிலைபெ றுந்நதி நீளடி நெஞ்சுறப் பிணித்துப்
புலவ ரற்புத மிதுவெனப் புகலவோர் வருடம்
வலிய யோகமிவ் வாறவண் மருவுநா டம்மில் (9)

மீன மாமதி பூரணை தனில்விளங் கொளிசெய்
தேனு லாமலர் மகளுடன் சீநிவா சன்றான்
வானு லாவருங் கலுழன்மேல் வந்துமுன் னின்றான்
ஞான யோகத்தும் புருவிரு நயனமுங் களிப்ப (10)

கண்டு காண்பருந் தேவனைக் கழல்பணிந் தெழுந்திட்
டண்ட கோடிக ளனைத்தையும் படைத்தளித் தழிக்கும்
விண்டு வேயடி யேன்செயும் வினையினா ரதனும்
பண்டை மாமுனி சபிக்கவிப் பாரிடை வீழ்ந்தேன். (11)

அன்னை யாமென வடைந்தவான் றொண்டருக் கருள்பூ
மன்னு கோதைவாழ் மார்பனே மனமகிழ்ந் தடியேன்
தன்னை நோக்கிநேர் சாபத்தி னிடர்களைக் களைதி
என்ன வேண்டலு மீசனுங் கருணையி னிசைப்பான். (12)

புனித மேவுமிப் புனல்படிந் தெனையுளம் பொருத்தி
இனிய யோகமிங் கியற்றிய நலத்தினெல் லவன்முன்
பணிய தாமெனப் பவமறப் பவித்திர னாய்
எனலு மாதவத் தும்புரு விருகரங் குவித்தே (13)

---

8. படீஇ - படிந்து. கதிர்வருதிசை - கிழக்கு. இருதய புட்கரம் - இருதய ஸ்தானம். 9. அரன் அணி சடைக்கு......... நீளடி - சிவன் தலையில் சேர்ந்த கங்கை நதியைத் தோற்றுவித்த திருமால் திருவடிகள். 10. மீனமதி - பங்குனி மாதம். கலுழன் - கருடன். நயனம் - கண். 11. விண்டுவே - விஷ்ணுவே. 12. பூமன்னு கோதை - திருமகள். களைதி - விலக்குவாய். 13. எல்லவன் - சூரியன். பவித்திரன் - தூயவன்.

இப்பெ ரும்புனற் கென்பெய ருதவென விசைப்ப
ஒப்பி லாதவ னவ்வா ழுகந்தளித் தென்சீர்
செப்பி யின்னிசை யாழ்முனி தன்னுடன் சேர்ந்து
தப்பி லாதிரு வெனச்சொலித் தான்கரந் தனனால். (14)

தெண்டி ரைக்கனை கடலொரு செங்கையால் வாரி
உண்ட மாமுனி யவண்வாத் தும்புரு வுவந்து
கண்டு தன்வர லாறெலாங் கழறிட மனத்துட்
கொண்டு சிந்தனை யறவிருந் தன்புடன் கூறும். (15)

வேங்க டாசல மகிமையும் விரிவுற விளங்க
ஆங்கு மேவிய தீர்த்தநற் பெருமையு மாழி
தாங்கு கையின னடியவர்க் கருள்செய்தன் மையுந்தேந்
தீங்க ரும்பின்வான் சுவையெனச் செவியுண வுதவி (16)

இதா ரைப்புகழ்ந் தேத்திடா திந்திரை மகிழ்நன்
துதியை நாடொறுஞ் சொல்லெனச் சொலியகன் றிடலும்
இதய சுத்தனுய்த் தும்புரு நாரத னிடத்தில்
அதிக வன்பொடு சேர்ந்தரி நாமமா யிரமும் (17)

இனிய வேழிசை யின்வழி வியப்புறப் பாடித்
தனதி டந்தனிற் சார்ந்தன னெனத்தவச் சூத
முனிவ னைமிச வனத்துறை முதுமறைக் கிழவர்
மனமு வப்புற வழுதெனச் செவியின்வார்த் தனனால். (18)

பிரம வுத்தர காண்டத்திற் பேசுமிக் கதையை
விரியு மன்பொடு கேட்பவர் வேண்டிய விபவம்
மருவி நோயறச் சுகமுற நெடிதுநாள் வாழ்ந்து
திருவி னாயகன் பதத்தினிற் சென்றுசேர் குவரே. (19)

---

14. யாழ்முனி - நாரதன். 15. தெண்டிரைக்கனை கடல்............ உண்ட மாமுனி - அகத்தியர். கழறிட - சொல்ல. 16. ஆழி - சக்காம். 17. இந்திரை - இலக்குமி. 18. ஏழிசை - ச ரி க ம ப த நி என்ற ஏழு சுரங்கள்.

தும்புருவுக்கு அருள் செய்த அத்தியாயம் முற்றிற்று.

# 23. பெரிய திருவடி பரம பதத்திலிருந்து கிரீடாசலம் கொண்டு வந்த அத்தியாயம்.

அறுசீர் விருத்தம்.

வலியபொற் கண்ணன் மாய மாட்டிமா நிலத்தைக் கோட்டின்
தலையெடுத் தாதி சேடன் றன்சிர மமைத்த கேழல்
நிலமதி னியற்றுந் தன்மை நிகழ்த்தெனச் சௌன காதி
நலிவறு தவத்தோர் வேண்ட நன்றெனச் சூதன் சொல்வான். (1)

மனத்தொடு வாக்குக் கெட்டா வலியசூ கரமா மாயன்
அனத்தையூர் பவனைக் கூவிச் சராசர மனைத்து முன்போல்
வனப்புறப் படைத்தி யென்று வழங்கவவ் வாறு செய்தான்
நினைப்பின்முன் னடப்ப வூர்வ பறப்பன நிற்ப வெல்லாம். (2)

பன்றியாம் பரமன் பாரைப் பாதுகாத் திடும்பொ ருட்டாய்த்
துன்றலை சுருட்டு முந்நீர் சூழ்தலத் துறவி ருப்பாய்த்
தன்றிரு வுளத்தி னெண்ணித் தடஞ்சிறை யம்பொன் மேருக்
குன்றுறழ் கலுழன் றன்னைக் கூவியாண் டின்ன கூறும். (3)

பத்தியா லெமையீங் குள்ளார் பணிந்தகி மேன்மை யோங்க
இத்தலந் தன்னில் வாழ வெண்ணினே மனவி ருப்பிற்
கொத்திடுங் குன்றம் வேண்டு மாகையா லோடி நீபோய்ச்
சுத்தவை குந்த மேவித் தூயதோ ராடற் குன்றை (4)

எடுத்திவட் கொணர்கெ னுமு னெழுந்தவ னடைந்தோர் குன்றைப்
பிடித்துவே ரொடுகீண் டேந்திப் பேசருங் கதியிற் சேரக்
கடித்துணர் கமழு மேன்மைக் கௌதமி நதியின் றென்பால்
அடுத்துமு விரண்டா மென்ன வறையும்யோ சனைதூ ரத்தில் (5)

---

1. பொற் கண்ணன் - இரணியாட்சன். மாட்டி - கொன்று. கோடு - கொம்பு. கேழல் - வராகமூர்த்தி. 2. சூகரம் - பன்றி. அன்னத்தையூர்பவன் - பிரமன். வனப்பு - அழகு. படைத்தி - படைப்பாய். சராசரம் - அசையும் பொருளும் அசையாப் பொருளும் நடப்ப, ஊர்வ, பறப்பன, நிற்ப என்பவை நால்வகைப் பிறப்பு உயிர்கள். 3. துன்று - நெருங்கிய. முந்நீர் - கடல். கலுழன் - கருடன். 4. ஆடற் குன்று - விளையாடற்குரிய செய் குன்றம். 5. கடித்துணர் - மணம் பொருந்திய பூங்கொத்து.

குணகட றனக்கு மேல்பாற் கூறும்யோ சனையைந் தாகி
மணமுறப் பொலிந்த சொன்ன முகிநதி மருங்கு வையென்
றணிதிகழ் வேத ரூப மாங்கக பதியை நோக்கி
மணியொளி தவழ்வ ராக மானமால் வழங்க வைத்தான். (6)

எழுசீர் விருத்தம்.

வைத்தவக் கிரீடா சலத்தின்மேல் வராக
மாயவ னுவந்தெழுந் தருளி
நித்தலு மடியர்க் கருள்புரிந் தெழிலாய்
நேமிசங் கிலங்கிட நிகரில்
சுத்தநீர்ச் சாமி புட்கரி ணிக்குச்
சொலும்வட மேற்புற மணியார்
பத்திசெய் மானத் தமர்ந்தான் கமலன்
பாகசா தனன்முதற் புலவோர் (7)

முனிவா ரெவரும் புகழ்ந்தடி வணங்கி
முதல்வவிப் பயந்தரு வுருவந்
தனைவிடுத் ததிக சாந்தரூ பத்தைச்
சார்தியென் றுரைத்துவேண் டுதலும்
இனிதுற விதய சாந்தனு யவனி
யெனுமினை மடிமிசை யிருத்திக்
கனிவுற வேத னுதியாய் நின்ற
கடவுளர் தமைக்கனு னோக்கி (8)

உயர்வற வுயரும் பரமமாம் பதத்தி
னுற்றுவ ணன்கொண ரிந்த
நயமுறு மலையி னடியவ ருளத்தி
னுடிய வளித்தினி துறைவேம்

6. குண கடல் - கீழ்க் கடல். ககபதி - பறவை யரசு ஆகிய கருடன். 7. கிரீடாசலம் - ஆடலுக்குரிய குன்றம். நித்தலும் - நாள்தோறும். நேமி - சக்கரம். மானம் - விமானம். கமலன் - பிரமன். பாகசாதனன் - இந்திரன். புலவோர் - தேவர்கள். 8. சார்தி - அடைவாய். அவனி - பூமி. மின்னை - மின்னல் கொடி போன்ற தேவியை. 9. உவணன் - கருடன்.

பயமற வுமது பதியடை வீரென்
றியாவர்க்கும் விடைபணித் தருளித்
தயையுட னிருக்கின் றுனெனக் கேட்டுத்
தவத்தவர் சாற்றலுற் றனரால். (9)

வினதைதன் புதல்வன் பரன்பதி யணுகி
விரைவினி லெடுத்தவந் திட்ட
புனிதநன் மலையிற் சாமிபுட் கரிணி
யெனப்புகன் றனையதன் பெருமை
தனையுரை யெனலுஞ் சூதமா முனிவன்
சாற்றுவா னழிவிலப் பதத்தின்
இனியபூந் திருமண் மடந்தைநீ ளையுட
னிதயமுண் மகிழுமீ சனுக்கு (10)

நீர்விளை யாடற் குறைநடை வாவி
நிகரற வெவர்க்குமே லாமக்
கார்விளை யாடுங் கிரியொடு மேந்திக்
ககபதி கொணர்ந்திட வந்த
ஏர்விளை யாடுஞ் சாமிபுட் கரிணி
யீர்ம்புனல் படிந்தவர் பன்னாள்
வார்விளை யாடுந் தனமினா ருடன்வாழ்க்
தரிபத மருவனிச் சயமே. (11)

சாமிபுட் கரிணி தனைக்கணுற் றிடினுஞ்
சாற்றினு நினைப்பினும் பவநோய்
போமதன் பெருமை நான்முக னானும்
புகலுதற் கரிதெனப் பெரிதா
மாமறைப் பொருள்க ளனைத்தையு முணர்ந்து
மனப்பகை தடிந்தமெய்ச் சூத
நாமநன் முனிவன் சௌனகா தியர்க
ளுவப்புற நவின்றனன் மாதோ. (12)

---

10. வினதை - கருடன் தாய். பரன்பதி - வைகுந்தம். மடந்தை - பெண். 11. நடைவாவி - நீர்நிலை. ககபதி - கருடன். ஈர்ம்புனல் - குளிர் நீர். வார் - கச்சு. மருவல் - சேர்தல். 12. தடிந்த - ஒழித்த. நாமம் - பெயர் - புகழ்.

ஏற்றுசீர் வராக மெனும்புரா ணத்தி
னியஃபுமிக் காதையைப் புவிமேற்
சாற்றுவோர் மனத்தி னுவப்புறக் கேட்போர்
சருவசித் திகளையு மடைந்து
மாற்றறு மெழிலார் சதுர்த்தச புவன
மருவுவோர் யாவரும் புகழ்ந்து
போற்றமா தவர்க்கு மறிவதற் கரிதாம்
புராதன னுலகமே புகுவார். (13)

பெரிய திருவடி கிரீடாசலங் கொண்டு வந்த அத்தியாயம் முற்றிற்று.

## 24. யாகமகிமை குமாரதாரிகை மகிமை உரைத்த அத்தியாயம்.

கலிவிருத்தம்.

போத னாதியர் போற்றுந் திருமலை
ஆதி தன்புக ழின்னமு மன்பினின்
ஓது கேனவை கேட்டுவப் பீரெனச்
சூத மாமுனி சொல்லலுற் றனரோ. (1)

திருப்பொ லிந்தம லன்றிகழ் கின்றவப்
பொருப்பு மந்திரங் கன்மம் புரிதவம்
நெருப்பி னெய்சொரி வேள்வி நெறியறம்
விருப்பி னாற்றும் விரதமு தலவாய் (2)

சகல சித்திக ளுந்தட்ட லின்றியே
மகித லத்தில்வ ழங்குவ தாதலான்
தகையு றும்பெரி யோர்கள்சிந் தாமணி
நகமெ னவுரைப் பாரத னமமே. (3)

1. போதன் - பிரமன். ஓதுகேன் - சொல்லுவேன். 2. பொருப்பு - மலை. வேள்வி - யாகம். 3. தட்டல் - குறைவு. மகிதலம் - நிலவுலகம். நகம் - மலை.

ஞான பூதரம் வேங்கட நன்மலை
சீநி வாச கிரிதெய்வப் பொன்மலை
ஏன நாக மெழிற்புட்ப காத்திரி
ஊன நீங்கிட பப்பெய ரோங்கலே. (4)

பொங்கு தீர்த்த கிரிபுகழ் சேர்நர
சிங்க வெற்புவை குண்டச்சி லம்புகார்
தங்கு நீல வரையுயர்சீ சைலம்
பங்க நீங்கு மநந்த பருப்பதம். (5)

கோதி லாண கோத்திர மஞ்சன
மாதி ரம்வட மாமலை யென்னவே
ஓது பேர்க ளுரைக்கடங் காதுயர்
ஆதி மால்குண நாம மடுக்குமே. (6)

மூன்று தத்துவத் தின்முடி வும்மனந்
தோன்று முத்தமர் சிற்சிலர் தூயொளி
கான்று மம்மலை வைபவங் காதலாய்த்
தேன்ற லைப்பொரு வச்செவி மாந்தியே (7)

அம்ம லைக்க ணடைந்துநல் வேள்வியைச்
செம்மை யாகச் செயிற்சித்தி யுண்டெனுத்
தம்மு ளேகுறித் தெய்தித் தவறற
மும்மை யாமுல குண்ட முதல்வனை (8)

நாடி வேள்வி நடத்திடுங் காலையில்
ஈடி லானே ரிறையென வெய்தலும்
நீடு மேதையர் நீயிருக் கக்கவின்
கூடி நின்றொளி கூர்வதெவ் வூரரோ. (9)

---

4. பூதரம் - மலை. ஏன நாகம் - வராகமலை. அத்திரி - மலை. 5. வெற்பு, சிலம்பு, வரை, சைலம், பருப்பதம் - மலை. 6. கோத்திரம், மாதிரம் - மலை. 7. மூன்று தத்துவம் - சித்து, அசித்து, ஈசுவரன். கான்றும் - வெளியிடும். 8. மும்மையாம் உலகு - மேல் கீழ் நடு உலகுகள். 9. ஈடிலான் - ஒப்பில்லாத இறைவன். இறை - அரசன். மேதையர் - அறிஞர்.

எத்த லத்து மிணையறு நீயெவன்
அத்த ஞருன் பெயரெது வன்புற
இத்த லத்திற் றனிநடந் தெய்திய
தெத்தை யெண்ணி யியம்புதி யென்றனர். (10)

கலிநிலைத்துறை.

அந்த வாசகம் வினவிய வமலனங் கறைவான்
எந்த நாமமோ வெண்ணிலே யெங்கணும் வசிப்பேன்
தந்தை தாயிலேன் குலமிலேன் சகலமுஞ் சமமாய்ச்
சிந்தை கொண்டுரு விலியுமா யுருவுமாய்த் திகழ்வேன். (11)

பேணி நீங்களீங் கியற்றிடும் பெருமகம் விரும்பிக்
காண வந்தன னென்றலுங் களிப்பொடு முனிவர்
ஆணர் மேவுநம் வேள்வியி னவியுவந் துண்ண
வேண வாவொடு வெளிப்பட விளங்கின னெனவே (12)

எழுசீர் விருத்தம்.

அடக்கரு முவகை மலிந்தெழக் கனலி
ஞகுதி விதிமுறை விரைவின்
நடத்திடுங் காலை நளினிமார் பிலக
நாந்தகங் கதைவளை நேமி
அடற்சிலை திகழ மகாகுண் டலங்க
ளலைந்திட மகுடம்வில் வீசச்
சுடர்ப்பொஞ ராடை துலங்கவண் டுளவத்
தொடைசதுர்ப் புயங்களிற் ரேன்ற (13)

---

10. அத்தன் - தந்தை. எத்தை - எதனை. 11. அமலன் - நிர் மலமான கடவுள். உருவிலி - உருவம் இல்லாதவன். 12. பெருமகம் - பெரிய யாகம். ஆணர் - (யாணர்) புதுமை. அவி - அவிர்ப் பாகம். வேணவா - மிக்க விருப்பம். 13. கனல் - யாகத்தீ. ஆகுதி - யாக அவி யுணவு. நளினி - இலக்குமி. நாந்தகம் - திருமாலின் கைவாள். வளை - சங்கு. நேமி - சக்கரம். சிலை - வில். மகுடம் - முடியணிகலன். வில் - ஒளி. துளவத் தொடை - துளசி மாலை.

ஆங்குள முனிவர் கண்டுகண் களிப்ப
வருமகத் தாகுதி யதனை
வாங்கியுண் ணுகர்ந்து கோடிசூ ரியர்போல்
வழங்கொளி விளங்கிநின் றிடலும்
தேங்கிய ஞானத் தவர்களம் மான்மெய்த்
தேசினுற் கண்வழுக் குற்று
நீங்கிலா தேக முகுர்த்தமோ வியம்போ
னின்றுநாம் புரிதவந் தன்னல் (14)

எண்ணிலா வண்ட கோடிக ளெல்லா
மீன்றளித் தழிப்பவன் முனே
நண்ணிநா மியற்று மகத்தவி விரும்பி
நலத்தினங் கீகரித் தனனென்
றெண்ணியா னந்த முறப்பல வாக
வேத்தியம் மகமுடித் தனரென்
றுண்ணயம் பெருகச் சூதமா தவத்தோ
னுரைத்துடன் பின்னையு நவில்வான். (15)

வேதிய னொருவன் முன்னமைம் புலன்கண்
மெலிந்துளந் தளர்ந்துவிண் ணுலவும்
ஆதவன் வெயிலாற் பசியினுற் புனலி
னுசையா லயர்ந்துதள் ளாடிப்
பாதநொந் தேகும் வழிதடு மாறிப்
பலவித வருத்தமுட் கொண்டு
மேதகு திருவேங் கடமலை யதனின்
மீதுகோ லூன்றியே நடந்து (16)

பயப்பய வருமவ் விருத்தனைத் திருவின்
பதியொரு குமரனு யடைந்து
வியப்புற நோக்கி யாரைநீ யெங்கு
மேவுகின் றனையென வினவ

---

14. நுகர்ந்து - உண்டு. அம்மான் - பெருமான். தேசு - ஒளி. வழுக்குற்று - மழுங்கி. ஓவியம் - சித்திரம். 15. மகத்து அவி - யாக அவிர்ப் பாகம். 16. ஆதவன் - சூரியன். புனலின் ஆசை - தாகம். 17. விருத்தன் - கிழவன். திருவின் பதி - திருமால்.

நியப்பழ மறையோ னிங்கொராச் சிரம
நேருள தாங்கடை கின்றேன்
நயப்புறு மனைவி புத்திரர் கிளைஞர்
நன்னிதி யிவையெலா மிலனாய் (17)

உடல்வளை இ நோய்மை யுளவெனைத் தெய்வ
மோதநீர்க் கடல்புடை சூழும்
படிமிசை யினமும் வைத்துநல் விநோதம்
பார்ப்பதென் னிமித்தமோ வென்று
மடலவிழ் கமல மாலையா னெஞ்சம்
வருந்திநாக் குளறியே வழங்க
வடிவுறுங் குமா பருவமா யடைந்த
மாயவன் கருணையுண் மலிந்தே (18)

விருத்தனு மறையோ யுனதுடல் விடுதல்
வேட்கைகொ லல்லது மிகவும்
பெருத்திடு மாற்ற லுடையயவ் வனத்தைப்
பெற்றிட வாசைகொ லின்னம்
திருத்தகு முலகி னெண்ணருங் காலந்
திரிந்துவாழ் தல்செய மனமோ
கருத்திதென் றெனக்கு வெளிப்படக் கழறு
கென்னலுங் கஞ்சமாலையினன் (19)

இவ்வித நம்மை வினவிய விவனே
ரெழிற்சிறு பிள்ளையென் றுணர்ந்து
செவ்வியோய் நீயிங் கியம்பிய வெல்லாஞ்
சிந்தையின் விருப்பில யினியான்
எவ்வித கரும மியற்றினும் பலத்தை
யிச்சியா தாற்றியே பின்பு
தெவ்வுரு வுடல்விட் டிடமன மென்று
செப்பினன் சாதமீ தெனவே. (20)

---

நியம் - விதி. ஆசிரமம் - முனிவர் இருக்கை. 18. வளைஇ - கூனி. ஓதம் - ஒலி. படி - உலகு. கமல மாலையான் - தாமரை மாலை யணிந்த கிழப் பிராமணன். 19. யவ்வனம் - இளமை. கஞ்ச மாலையினன் - வேதியன். 20. இச்சியாது - விரும்பாமல். தெவ்வுரு - பகையுரு. சாதம் - மெய்ம்மை.

புகலுமா மறையோன் றனையுடன் கொண்டப்
பொருப்பிலோ ரருவியின் மாடே
உகவையாய் நின்றிவ் வயந்தனின் மூழ்கி
னொருபதி னுறெனு மாண்டு
தகுமெழிற் குமா னுருவாய் நினக்குத்
தாணியி னித்திய கருமம்
புகாற நடத்தும் பொருட்டுநன் னிதியம்
புகழ்பெற வினிதளிக் கின்றேன். (21)

நீயது கொண்டுன் பதியினி லடைந்து
நேமமா யிருக்கென வடியார்
நேயனு முகுந்தன் காந்திட வவனந்
நீரினிற் றோய்ந்தெழ வடிவந்
தூயநற் குமா னனைதை யுணர்ந்து
சொல்லரும் வியப்பொடுங் கமலை
நாயகன் மனித வுருவுபெற் றோங்கி
நமக்கருள் புரிந்தன னெனவே (22)

சிந்தையி னினைந்து பத்திசெய் தேகத்
திசைமுக னரன்புரு கூதன்
நந்தலி லமா ரலர்சொரிந் தேத்தி
நாரணன் கருணையை வியந்தே
இந்தவே தியனிப் புனல்படிந் திளமை
யெய்திய பரிசினு லிதனுக்
கந்தமாங் குமா தாரிகை யெனப்பே
ரறைந்துநா டோறுமுக் காலம் (23)

திங்களோர் மூன்று படிந்தவர் புலன்கள்
செகுத்தவ ராகிமூப் பில்லா
அங்கம தடைவ ரெனச்சொலித் தத்தம்
பதியினி தடைந்தன ரெனவே

21. பொருப்பு - மலை. மாடு - பக்கம். உவகை - மகிழ்ச்சி. அயம் - தீர்த்தம். புகர் - குற்றம். 22. பதி - ஊர். நேமம் - விதி. முகுந்தன் - திருமால். கமலை நாயகன் - சீநிவாசன். 23. திசைமுகன் - பிரமன். புருகூதன் - இந்திரன். நந்தல் - குறைவு. அந்தம் - அழகு. குமரதாரிகை - குமரப் பருவம் ஈந்த தீர்த்தம். 24. செகுத்தவர் - வென்றவர். அங்கம் - உடம்பு.

பொங்கிய புகழ்ச்சா பாலியா முனிவன்
புகன்றன னென்றுரை மிசமாம்
பங்கமில் வனத்திற் பயின்மறை யவர்க்குப்
பகர்ந்தனன் சூதமா தவனே. (24)

இன்னதன் மையெலாம் வாகமாம் புராணத்
தெழிலுற வியம்பிடு மிதனை
நன்னயம் பெருகப் படிப்பவர் கேட்போர்
நானிலத் திட்டபோ கமெலாம்
மன்னிவாழ்ந் ததற்பின் மரைமலர் பொகுட்டின்
மருவிவாழ் திருமக ளென்னும்
அன்னம்வீற் றிருந்த மார்பினு னுலகின்
மருவுவர் தமரொடு மடைந்தே. (25)

யாகமகிமை குமாரதாரிகை மகிமை உரைத்த அத்தியாயம் முற்றிற்று.

## 25. சங்கன் என்னும் அரசன் சாமித்துவம் அடைந்த அத்தியாயம்.

கலிநிலைத்துறை.

மாத போதனர் யாவரும் வலனெனத் துதிக்குஞ்
சூத மாமுனி நைமிசத் துறவரை நோக்கி
ஏத நீங்குவன் மீகன்மு னெனக்கினி தாக
ஓதி னனது கேண்மினென் றுரைக்கலுற் றனனால். (1)

பொங்கர் மேவிய காசிநாட் டரசியல் பொருந்துந்
திங்கண் மாமர பினிற்பிறந் திசையுடன் சிறந்த
சங்க னுமிறை யவன்முனந் தரியலர்ச் செருத்துச்
சிங்க வேறெனச் செய்யகோல் செலுத்திவாழ் நாளின் (2)

1. தபோதனர் - தவத்தைச் செல்வம் ஆக உடையவர். வலன் - ஆற்றலான். துறவர் - துறவிகள். ஏதம் - குற்றம். 2. பொங்கர் - சோலை. தரியலர் - பகைவர்.

தெரிந்தி டாதறந் தீநெறி யொழுகிய செயலால்
திருந்த லார்களாற் சீர்த்தபே ரசிழந் துள்ளம்
வருந்தி மந்திரி மாரொடு தக்கிண மருவி
இருந்த சேதுவுக் கேகுது மென்றுசெல் வழியில் (3)

மகித லத்தினிற் பவமெலா மாற்றிடுஞ் சொன்ன
முகிந திக்கரை நண்ணியந் நீரிடைக் குடைந்து
நிகரி லாதுயர் மாயனை நினைத்ததன் வடசார்
அகலு மோர்அலர் மணங்கமழ் தடத்தினி திருந்தான். (4)

அன்ன காலையி னந்தர வாணியாங் குற்று
மன்ன கேடுயர் மருவற்க வளம்பெற வளர்ந்த
பன்ன காசல முடியினிற் பங்கய மலர்ந்து
தன்னை நேரிலாச் சாமிபுட் கரிணிசார்ந் துளதால். (5)

அத்த டத்தின்மேல் புறத்தழ காருமவன் மீக
மொய்த்த வோங்கலொன் றுளததின் முன்னுற விருந்து
நித்த மூன்றுகா லங்களு நிகழ்த்துமத் தடத்தின்
பத்தி யாற்படிந் தாங்குறை பரமனை யுளத்தே (6)

சிந்தை செய்தறு மதிசெபஞ் செய்யினீ யிழந்த
நந்த லின்றிய நகரசொண் ணிதி யெல்லாம்
நிந்தை யின்றிநிற் காமென நிகழ்த்திடக் கேட்டுக்
கந்த மன்னுபூங் காவுசூழ் வேங்கடங் கலந்தான். (7)

செம்மை யாயதன் மீதுபோய்த் திரிந்தலர் வேரி
விம்மு சாமிபுட் கரிணியாம் விமலநீத் தத்தைச்
செம்ம லாடிமேற் றெண்கரைத் தேத்தினி திருந்து
மும்மை யாகிய காலமு முறைப்படி மூழ்கி (8)

---

3. திருந்தலார்கள் - பகைவர். தக்கிணம் - தெற்கு. 4. மகிதலம் - பூமி. குடைந்து - முழுகி. தடம் - தீர்த்தம். 5. அந்தரவாணி - ஆகாச வாக்கு. துயர் மருவற்க - துன்பம் கொள்ள வேண்டா. பன்னகாசலம் - சேஷகிரி. பங்கயம் - தாமரை. 6. வன்மீகம் - புற்று. ஓங்கல் - குன்று. 7. அறுமதி - ஆறுமாசம். நந்தல் - குறைவு. 8. வேரி - மணம். நீத்தம் - தீர்த்தம். செம்மல் - சிறந்தோன். தேத்து - இடத்தில்.

உலகெ லாந்தன துதரத்தி னொருபுடை வைத்த
தலைவ னாகிய வேங்கடத் தானையுள் ளுவந்து
மலைவ றத்தியா னித்தரு மதிநறும் பலவாம்
பலம ருந்தியே பத்தியோ கம்பயில் காலை (9)

தேவ தேவனா கியதிரு மார்பினான் சிறந்த
பூவின் வேரிசூழ் சாமிபுட் கரிணியி னுப்பண்
தாவு சோதியங் கதிர்மதி தவழ்ந்தெனக் காங்கள்
மீது நேமிசங் கிலங்கிடப் பணிகள்வில் வீச (10)

எழுந்து தோன்றலு மயனா னிந்திரன் முதலாய்த்
தழைந்த தேவர்கள் யாவருந் தழுவியா னந்தம்
விழைந்து துந்துபி முழங்கிட விருப்பொடு பணிந்து
செழுந்து ணர்க்காஞ் சிரங்குவித் தேத்துகா லையிலே (11)

சங்க னென்றுசொல் லிறைவனுந் தாழ்ந்தடி வணங்கி
அங்கை சென்னியின் மிசைக்குவித் தன்புட னேத்தி
அங்க முற்றுநற் புளகங்க ளரும்பிநன் காடிப்
பங்க யத்திரு மார்பின னெதிர்நின்று பகர்வான். (12)

வேதத் துச்சியும் விரிசினைப் பழுமரத் திலையும்
போதத் துற்றநல் லன்பர்தம் மிதயமும் புகழ்ப்பால்
ஓதத் துஞ்சகத் திரபண முடியுடைப் பெரிய
நாகத் துந்திரு வேங்கட நாகத்து மமர்வோய். (13)

நினது சேயடிக் கடியன்யா னிழந்தநீ ளரசு
மனது வந்தெனக் கருளியு மன்னிய பவங்கள்
தினக ரன்முனந் திமிரமொத் தோடவுஞ் செய்யென்
றனக னம்புய வடிதொழு தன்பினேத் தினனால். (14)

---

9. உதரம் - வயிறு. பலம் - கனிகள். 10. நாப்பண் - நடு இடம். பணிகள் - ஆபரணங்கள். வில் - ஒளி. 11. துணர் - பூங்கொத்து. 12. புளகம் - மயிர்க்கூச்சு. 13. பழுமரம் - ஆலமரம். இதயம் - நெஞ்சம். ஓதம் - கடல். சகத்திரபணம் - ஆயிரம் படங்கள். நாகம் - பாம்பு, மலை. 14. தினகரன் - சூரியன். திமிரம் - இருள். அனகன் - குற்றமில்லாதவன். அம்புயம் - தாமரை.

அன்ன காலையி னருள்சுரந் தலையெறிந் தழகு
யன்னு தாமரை மலர்புரை விழியினன் மகிழ்ந்து
இன்ன றீர்தம நோக்கிநீ யிசைத்தசா மித்துவந்
தன்னை மேவிநற் சுகமுறத் தாணியின் வாழ்வாய். (15)

ஏடு லாமரை மலர்வெறி கமழுமித் தடநீர்
ஆடி யானந்த முறவெனை யன்புசெய் தவர்முன்
தேடு தீமைக டினகர னெதிர்திமி ரம்போல்
ஓட மேதகு நலமெலா முதவுவ னுவந்தே. (16)

தினமு மூன்றுகா லங்களுஞ் சிறப்புறு மிந்தப்
புனலி னாடியெங் கழல்புகழ்ந் தேத்தினை யதனால்
புனித னுய்ப்புவி பொதுவறப் புரத்தல்செய் வாயென்
றனகன் வாய்திறந் தருளியந் தரத்தினிற் கரந்தான். (17)

ஈதெ லாமுணர்ந் திருந்தவா னவர்திர ளெல்லாந்
தாது லாமலர்ச் சாமிபுட் கரிணியின் றகைமை
ஓதி யானந்த முறவெழுந் தவாவ ருலகங்
காத லோடுசென் றடைந்தனர் கண்ணனைத் தொழுதே. (18)

சங்க னென்றுசொல் விறையவன் றன்மனை யாளோ
டிங்கி தந்தெரி யமைச்சர்க ளுடன்வா வேகிப்
பொங்கர் சூழ்ந்தெழில் பொருந்துதன் னாட்டினிற் புகுத
அங்க வன்பகை யரசர்தங் களிற்சம ராடி (19)

வலிதொ லைந்துள மலைந்துவெங் கானிடைப் புகுதச்
சிலைவ லந்திகழ் சங்கனைக் கொடுதிற லரசர்
குலவு மாமணி மண்டபங் குறுகியா சனத்தின்
நல னுறும்படி யேற்றிமா நகைமுடி தரித்தார். (20)

---

15. இன்னல் - துயரம். தாணி - உலகு. 16. ஏடு - பூ இதழ். வெறி - மணம். 17. புனல் - தீர்த்தம். பொதுவறப் புரத்தல் - உலகு மற்றை யரசர்க்குப் பொது அல்ல தனது எனவே ஆட்சி செய்தல். 19. இங்கிதம் - குறிப்பு. அமைச்சர் - மந்திரிகள். பொங்கர் - சோலை. சமர் - போர். 20. வெங்கான் - கொடிய காடு. சிலைவலம் - வில் வெற்றி.

அஞ்ச னக்கிரி மீதெழு மாதிதண் ணருளால்
எஞ்ச லின்றிநல் லறத்தொடு மாசுசெய் திருந்தான்
நெஞ்சு வப்புற வெனநெடுந் தவக்கிழ வர்க்கே
அஞ்ச வித்துயர் சூதமா முனியறைந் தனனல். (21)

ஒப்ப ருந்திரு வராகமாம் புராணத்தி னுரைக்கும்
இப்பெ ருங்கதை யன்புட னெழுதுவோர் கேட்போர்
செப்பு வோர்திரை செறிகடல் சேர்புவி வழுத்த
எப்பெ ருந்திரு வும்மெளி தினிற்பெற்று வாழ்வார். (22)

சங்கன் என்னும் அரசன் சாமித்துவம் அடைந்த அத்தியாயம் முற்றிற்று.

## 26. இராமன் என்னும் பிராமணன் சித்தி பெற்ற அத்தியாயம்.

கலிவிருத்தம்.

முன்னம்வன் மீகனுன் மொழியக் கேட்டதைப்
பின்னுரை மிசவனப் பெருந்த வர்க்கெலாம்
கன்னலின் சுவையெனக் கழறு வானலம்
மன்னிய சூதனும் வள்ளி யோனரோ. (1)

அத்திசூ ழவனியி னணிய தாகிய
மத்திய தேசத்தின் மருவு மந்தணன்
உத்தம னிராமனென் றுரைக்கும் பேரினன்
நித்தலும் பயந்தவர் நெஞ்சு வப்புற (2)

உபசரித் தொழுகுகா லத்தி லுற்றதன்
விபவமற் றுறும்பொருள் வேறி லாமையால்
விபுலையி னெவர்களும் வெறுப்ப வுண்மெலிந்
தபலனுய் மனஞ்சலித் தலையு நாளிலே (3)

---

21. அஞ்சனக்கிரி - வேங்கட மலை. அஞ்சுஅவித்து - ஐம்புலச் சேட்டைகளை ஒழித்து. 1. கன்னல் - கரும்பு. வள்ளியோன் - வள்ளல். 2. அத்தி - கடல். அவனி - உலகம். நித்தலும் - நாள் தோறும். பயந்தவர் - பெற்றோர். 3. விபவம் - பெருமை. விபுலை - உலகு. அபலன் - பலன் அற்றவன்.

ஓர்தினத் தயரும்வேங் கடமென் றோதிய
பேர்திகழ் மலையருகு கண்மிப் பேசருஞ்
சீர்திகழ் கபிலதீர்த் தத்திற் றீயன
தீர்தா மூழ்கியே சித்த சுத்தனய் (4)

அக்கிரி மிசையிவர்ந் தணுக வாங்குநேர்
தெக்கிண மோரளை நாப்பட் டீயொளி
ஒக்குமெய்க் காந்திமீ துலவத் தியானமாந்
தக்கயோ கத்தினிற் சார்ந்தி ருந்திடும் (5)

சனற்குமா ரனையெதிர் சார்ந்து நோக்கியே
மனத்துளே பெரியனென் றுணர்ந்து மாசற
நினைத்தடி வணங்கினா யேற்கு நெஞ்சுவந்
தனத்தம்வந் தணுகுரு தருளென் றேத்தினன். (6)

ஏற்றமா முனிவா னிருக ணோக்கியே.
சாற்றுவான் பூருவ சனனந் தன்னினீ
ஆற்றிய பவமுள ததனை யிங்ஙனம்
மாற்றவோ ருபாயநான் வழங்கு வேனெனு (7)

தத்துவ ரகசியந் தன்னை யன்பொடும்
புத்தியிற் பொருந்துறப் புகலு வானுயர்
நித்திய நிருமல னோரி றன்னையே
ஒத்தவன் கருணையோ ருருவ மாகியான். (8)

அன்னவன் மார்பைவிட் டகல்கி லாதுறை
பொன்னின்மந் திரமிது புகலும் வேதத்தின்
முன்னினு நடுவினு முடிவி னுஞ்சொலும்
நன்னய மந்திர நவிலற் பாலதோ. (9)

வருபயன் வாய்ந்தவிம் மந்தி ரத்தினைத்
தரைமிசை நவிலுவோர் சகல சித்தியும்
திருவுற வடைகுவர் திண்ண மென்னவே
பெருமுனி பின்னரும் பேசு வானரோ. (10)

4. அண்மி - அடைந்து. சித்த சுத்தன் - மனத் தூய்மையன். 5. அளை - புற்று. நாப்பண் - நடு. காந்தி - ஒளி. 6. அனத்தம் - தீமை. 7. பூருவ சனனம் - முன் பிறப்பு. பவம் - பாவம். 8. நிருமலன் - மலம் அற்றவன். 9. பொன் - இலக்குமி.

அனைத்துல கவர்கட்கு மன்னை யர்ய்மிகு
கனத்தவான் செல்வமுங் காத லித்துளம்
நினைத்தவு மளித்தருள் புரியு நின்மல
மனத்திலக் குமியின்மந் திரமி தாதலால் (11)

இந்தமந் திரஞ்சொலி னியற்று தீவினை
சிந்திநற் செல்வங்கள் சிறந்து சேருவாய்
நந்தலில லந்தண வெனந வின்றவன்
புந்தியுண் மகிழ்தரப் பொருவி லெந்திரம் (12)

தன்னையும் வெளியுறக் காட்டித் தந்திரம்
இன்னதென் றியம்பியுட் பீதி யெய்திடா
துன்னகம் விரும்பியே கெனவு ரைத்தலும்
மன்னிய களிப்பொடம் மறைவ லாளனும் (13)

பூமலிந் தியன்மணம் பொலிந்து மாறிலாக்
காமலி வேங்கடங் கலந்தங் குற்றிடுந்
தேமலி யருவிநீ ராடிச் சேர்வெறி
ஏமலி சாமிபுட் கரிணி யெய்தியே (14)

மண்ணையுண் டுமிழ்பான் பெயர்ம னத்திடை
எண்ணியு மேத்தியு மினிய நல்குமப்
புண்ணிய வயங்குடைந் தாடிப் போதநேர்
பண்ணவ னிரங்கிமுன் பகரு மந்திரம் (15)

அறுசீர்விருத்தம்.

சந்தத மனுசந் தித்துத் தவறுறு தொழுகு நாளில்
அந்தரத் தமரர் போற்ற வழகிய விமானந் தன்னிற்
சுந்தரக் கமலக் கண்க டுலங்கிடச் சங்க நேமி
இந்துவோ டிரவி கூடி யெழுந்தபோ லொளியி லங்க (16)

---

12. நந்தல் - குறை. 13. பீதி - அச்சம். 14. கா - சோலை. தேமலி யருவி - மணம் மிகும் அருவி. வெறி - மணம். ஏமம் - இன்பம். 15. அயம் - தீர்த்தம். 16. அந்தரம் - ஆகாயம். இந்து - சந்திரன். இரவி - சூரியன்.

கவுத்துவ மணிவில் வீசக் கதிர்மணி மௌலி மின்னச்
செவித்தலத் திலகு கின்ற திருக்குழை வெயிலைக் கால
நவப்பசும் பொன்னி னுடை நகையுறப் புயத்தி னுற
உவப்புறக் கமல மின்னு ளூரத்தொளி திகழத் தோன்ற (17)

எழிலுற விருந்த சீநி வாசனை யிருக ணேக்கிப்
பழுதறு மறையோன் சிந்தை வியப்பொடு பாங்கர் நண்ணித்
தொழுதெழுந் தாடிப் பாடிச் சொல்லரு மண்ட கோடி
முழுதுமீந் தளித்த ழிக்கு முதல்வனே மூல தேவே (18)

என்றுபல் விதமா யேத்தி யிருகையுஞ் சிரமேற் கூப்பி
நின்றிடக் கருணை மேவு நின்மலன் கருணை பாலித்
தொன்றிய விராம னென்னு முத்தம மறையோ னுள்ளம்
நன்றறிந் தபய நல்கி நாளுநீ நளினை தன்னை (19)

உண்ணயந் ததிக பத்தி யுடன்மகிழ்ந் தேத்தி யானம்
பண்ணினை யாத லாலுன் பவந்தொலைந் ததுநீர் சூழும்
மண்ணிடை யாயுண் ஞானம் வளர்ந்துவான் விபவ மெல்லாம்
நண்ணிவாழ்ந் திடுதி யென்று நவிற்றியங் கொளித்தான் மன்னே. (20)

பின்னரம் மறைவ லாளன் பீதக வாடை பூண்டோன்
றன்னைமுன் காணு துள்ளந் தன்னுளே துதிசெய் தந்தப்
பன்னகா சலமீங் கித்தன் பதியடைந் தறத்தி னேடும்
இன்னலற் றளவி லின்ப மெய்திவீற் றிருந்தா னன்றே. (21)

பங்கமில் சௌன காதிப் பழமறை யவர்கள் கேட்பக்
கங்கைவே ணியனோர் சூதன் கருணையோ டினிது சொற்றுன்
பொங்கெழில் வராக மென்னப் புகல்புரா ணத்தி னூடே
இங்கிதம் பெறவீ தெல்லா மினிதுநன் கிசைக்கு மாதோ. (22)

---

17. வில் - ஒளி. மௌலி - கிரீடம். குழை - குண்டலம். பொன்னினுடை - பீதாம்பரம். கமலமின்னுள் - தாமரையில் உறையும் திருமகள். உரம் - திருமார்பு. 18. பழுது - குற்றம். பாங்கர் - பக்கம். 19. நளினை - திருமகள். 20. விபவம் - சிறப்பு. நவிற்றி - சொல்லி. 21. பீதக ஆடை - பொன் ஆடை. பன்னகாசலம் - திருவேங்கடமலை. இன்னல் - துன்பம். 22. வேணியன் - சடை முடியன் - சிவன்.

இராமன் என்னும் பிராமணன் சித்தி பெற்ற அத்தியாயம் முற்றிற்று.

## 27. சக்கரவர்த்தி திருமகன் வேங்கடம் அடைந்த அத்தியாயம்.

### அறுசீர் விருத்தம்.

நவிலரும் பெருமை வாய்ந்த நைமிச வனத்தின் மேவும்
சவுனக ராதி யாய தவத்தவர் தம்மை நோக்கி
யுவமையில் சூத னென்ன வுரைபெறு முனிம கிழ்ந்து
தவலரு வராக வெற்பின் றகைமையைச் சாற்று வானால். (1)

விண்மரு வமரர்க் குற்ற வெந்துயர் களைய மாயோன்
தண்மதிக் கவிகைச் செங்கோற் றயரதன் றனக்குச் சேயாய்
மண்மக ளுவப்ப வந்த வலியகோ தண்ட ராமன்
திண்மலை பொருவு பொற்றோட் டிறலிலக் குமன்ற னோடும் (2)

கொடியரா வணனே யாதி யரக்கரைக் கோறல் செய்வான்
கடியகா னண்ணிப் பம்பைப் பொய்கையங் கரையின் மேவி
அடலுள விரவி மைந்த னநுமனங் கதனே யாதி
படையுடை வயவர் சூழத் தெனாதுபாற் படருங் காலை (3)

வேங்கடா சலத்தின் வந்து மேவவப் போழ்து மேன்மை
தாங்கிய வநுமன் றாயா மஞ்சனை தழைய நோக்கிப்
பூங்கழல் பணிந்து போற்றிப் புவனியி னின்றென் றீமை
நீங்கிய துய்ந்தே னென்று நிகழ்த்துத லாயி னாளால். (4)

அண்ணலே நினது சேவை யகத்திடை விரும்பி யிந்த
விண்ணுயர் வெற்பி னெண்ணில் விழுத்தவர் தவஞ்செய் கின்றார்
உண்ணயந் தவர்பூ சிப்ப வுவந்திவ ணின்று வைகிக்
கண்ணனே போதி யென்னக் காதலின் வேண்டுங் காலை (5)

---

1. உவமை - ஒப்பு. தவல் - ஒழிவு. வராக வெற்பு - திருமலை. 2. அமரர் - தேவர். கவிகை - குடை. சேய் - பிள்ளை. பொருவும் - ஒக்கும். திறல் - வலிமை. 3. கோறல் - கொல்லுதல். கடிய - கடுமையான. அடல் - வலிமை. இரவி - சூரியன். வயவர் - வீரர். தெனாது - தெற்குத் திசை. 4. புவனி - உலகு. உய்ந்தேன் - பிழைத்தேன். 5. அண்ணல் - பெரியோன். சேவை - ஊழியம். அகம் - மனம். வெற்பு - மலை. விழுத்தவர் - சிறந்த தவசிகள். போதி - போவாய்.

அம்புயக் கண்ணி ராம னடிதொழு தாஞ்ச னேயன்
எம்பெரு மானீ யின்றிவ் வெழின்மலை மீது வைகி
நம்பெரும் படைஞ ரெல்லா நறுங்கனி காய்க ளுண்டு
வெம்பசி தணிய நாளை யேகுதல் விழுமி தென்றான். (6)

அன்னது கேட்டி ராம னுமென விருந்த காலை
தன்னிக ரில்லாத் திண்மைச் சதாகதி யுயிர்த்த தோன்றல்
முன்னரிற் குரக்குத் தானை யாவையு முறையி னோக்கி
இந்நக மெங்கு நீயி ரிச்சையின் படியே சென்று (7)

பனிமலர்ச் சோலை தோறும் பயின்றினைப் பாறி வேண்டுங்
கனிபல மூலந் தின்று வரும்படி கழற வாங்கண்
இனியசொ லியம்பி நின்ற வஞ்சனை யென்னு மாதின்
புனிதமுற் றிலங்கி மேன்மை பொலியுமாச் சிரமந் தன்னில் (8)

பங்கயச் செங்க ணய்ய னிலக்குவன் பரிதி மைந்தன்
அங்கத னோடு மெய்தி யவள்செய்பூ சனையு வந்து
கொங்கலர்த் தாது சிந்திக் குளிர்மதுப் பிலிற்றித் தெய்வப்
பொங்கெழில் வரிவண் டார்க்கும் பொழில்களி னுலவும் வேலை (9)

உத்தம மறையோர் தம்மி லுயர்நிரு லோம னுங்குச்
சத்திய வுலக மெய்தச் சதுமுகன் றன்னை நோக்கி
மெய்த்தவ மியற்ற வம்பொன் விரிசிறை யெகின மேற்கா
யத்திரிக் கிறைவ னண்ணி யருளுட னவில லுற்றான். (10)

தன்னிக ரிலாத வண்மைத் தயரத னென்னு நேமி
மன்னவன் குமார் வெள்ளி மலையைவே ரொடுப றித்த
தென்னிலங் கேசன் சென்னி சிந்துவான் பொருதற் காக
உன்னிவெங் குரக்குத் தானை யுடன்கொடே யணுகுங் காலை (11)

---

6. அம்புயம் - தாமரை. எழில் - அழகு. வைகி - தங்கி. சதாகதி - வாயு. குரக்குத்தானை - குரங்குச் சேனை. நகம் - மலை. 8. பல மூலம் - பழம் கிழங்குகள். கழற - சொல்ல. ஆச்சிரமம் - வனக்குடில். 9. பங்கயம்- தாமரை. பரிதி - சூரியன். கொங்கு - தேன். தாது - பூந்துகள். மது - தேன். வரி வண்டு - இசை செய்யும் வண்டு. பொழில் - சோலை. 10. சத்திய வுலகம் - பிரமன் உலகு. சதுமுகன் - பிரமதேவன். எகினம் - அன்னம். காயத்திரிக் கிறைவன் - பிரமன். (சாவித்திரி, காயத்திரி, சரசுவதி எனத் தேவியர் மூவர் பிரமனுக்கு உளர் என அறிக). 11. வண்மை - கொடை. நேமி - ஆஞ்ஞாசக்கரம். சென்னி - தலை. பொருதற்கு - சண்டை செய்ய.

வேங்கடா சலத்தின் மீது மேவுவ ரவர்க ளானீ
ஓங்குமென் பதியைச் சேர்வை யெனவுரைத் தகன்ற பின்னர்த்
தீங்கறு மறையோ னிந்தத் திறலினோர் வரவை நோக்கி
ஆங்குறுங் காலி ராம னனுசனோ டெதிரிற் றோன்ற (12)

வேதியன் பணிந்து போற்றித் தன்செயல் விளம்ப லோடும்
ஆதிநா யகனு முள்ளத் தன்பினிற் பிரம லோகத்
தேதமி லந்த ணாள வேகென வருள்செய் தெண்ணில்
மாதவர் புகழ்ந்து வாழ்த்த வனத்தெழில் சிறப்ப நோக்கி (13)

ஆங்குள வியக்க ராயோர்க் கணுகிய சாப மெல்லாம்
நீங்கிய வருள்செய் தப்பால் நேரிலா வெற்றி நல்கும்
பூங்கடி கஞல நின்ற சாமிபுட் கரிணி தீர்த்தம்
பாங்குற வெவரு மாடி நைருதி பாக மேவி (14)

சுதைதரு பாலின் வேலை தன்னினுந் துலங்கு கின்ற
சதவிதழ் துவன்று செய்ய தாமரை யிடத்தும் போந்த
மதிநுதற் பவளச் செவ்வாய் மங்கைவாழ்ந் திருப்ப மார்பம்
உதவுவேங் கடத்தான் வாச வொண்கழ லிறைஞ்சி யேத்தி (15)

சீர்பெறும் பன்ன சாலை செய்ததி லினோடு னோடும்
பேர்பெறு பரிதி மைந்தன் முதலிய பெரியர் சூழக்
கார்பெறு நிறத்தா னுண்ணக் காய்கனிக் கநுமன் சென்று
ஏர்பெறக் கொணர்ந்த ளிப்ப வினிதுற விருக்குங் காலை (16)

வானரத் தலைவ ராய மயிந்தன்கே சரிது விந்தன்
ஈனமி றீர்க்க பாத னிடபன்வெம் பனச னீலன்
தானவர்க் கிடியே றன்ன சதவலி குமுத னாதி
ஆனவர் நதிகட் கெல்லா மதிபதி யாகித் தோன்றும் (17)

---

12. பதி - உலகு. சேர்வை - அடைவாய். அனுசன் - தம்பி. 13. வேதியன் - பிராம்மணன். ஏதம் - குற்றம். 14 இயக்கர் - யக்ஷர்கள். நீங்கிய - நீங்கும் பொருட்டு. பூங்கடி - பூ மணம். கஞல - மிகும்படி. நைருதி பாகம் - தென்மேற்குத் திசை. 15. சுதை - அமிர்தம். வேலை - சமுத்திரம். சத விதழ் - நூறு இதழ். துவன்று - நெருங்கிய. 16. பன்ன சாலை - இலைக் குடில். பரிதிமைந்தன் - சூரிய புத்திரன் ஆகிய சுக்கிரீவன். கார்பெறு நிறத்தான் - இராமன். 17. தானவர் - அரக்கர்.

சாமிபுட் கரிணி யென்னுந் தடத்தினீ சான திக்கின்
தேமலி கானத் தூடே சேர்ந்தொரு முழையி னுள்ளே
தீமையர் சிந்தை போலச் செறியிரு ளூடு சென்று
பேமள வினிற்கண் காணப் பொருகதோ ரொளியைக் கண்டார். (18)

கண்டகம் வியந்து பின்னுங் கடுவிசை யோடு செல்லப்
பண்டைநான் முகனு மேத்தும் பழநக ரொன்று நோக்கி
மண்டமர் கடந்த தோளா ரப்பதி மறுகு செல்ல
மண்டப மாட கூட மணிமதில் கோபு ரங்கள் (19)

பொன்னினு மணிக ளானும் பொலிந்திலங் கிடவெண் முத்தால்
மன்னுதோ ரணங்க டோன்ற வச்சிரக் கபாட மின்னப்
பன்னக மணியின் காந்தி பரந்தெழு பந்தர் துன்னக்
கன்னல்பூங் கதலி பூகங் கதலிகை கவின வோங்க (20)

செவ்விய நான்கு தோளர் திகிரிசங் கங்கை யேந்துந்
திவ்விய புருடர் வாசஞ் சிறந்தபூஞ் சோலை வாவி
பவ்வமொத் ததிரும் பேரி முதற்பறை குழலின் கானம்
எவ்வமி னாப்பின கீத மெவையுமஞ் செவிக்க ணூர (21)

இனிதுறப் பருகி யாங்கோ ரெழின்மணி விமானத் தின்கண்
மினினுரு நித்தர் முத்தர் மிடற்கரங் குவித்து வாழ்த்தப்
பனகவா சனத்தின் மீது பைம்பொனம் பரமி லங்கக்
கனககே யூரஞ் செய்ய கவுத்துவ மணிவில் வீச (22)

சங்குசக் கரம்வா ளண்டு சார்ங்கமங் கையினி லங்கப்
பொங்கொளி திகழக் காதிற் குண்டலம் பொற்பி னுடைச்
செங்கதிர் வெள்க மௌலி திகழ்தா மரக தம்போல்
எங்கணும் வடிவின் காந்தி யேருற வெழுந்து போர்ப்ப (23)

---

18. தடம் - தீர்த்தம். ஈசான திக்கு - வடகீழ்த் திசை. முழை - குகை. 19. கடுவிசை - மிக்க வேகம். அமர் - போர். பதி மறுகு - நகரத் தெரு. 20. கபாடம் - கதவு. பன்னக மணி - நாக ரத்தினம். கன்னல் - கரும்பு. கதலி - வாழை. பூகம் - கமுகு. கதலிகை - கொடிகள். 21. திகிரி - சக்கராயுதம். வாவி - குளம். பவ்வம் - சமுத்திரம். பறை - தோற் கருவி. குழல் - புல்லாங் குழல். கானம் - பாட்டு. எவ்வம் - குறை. 22. மினின் உரு - மின்னல் போன்ற உரு. நித்தர் - நித்திய சூரிகள். முத்தர் - முத்தி உற்றவர். மிடல் - வலிமை. பனக வாசனம் - ஆதிசேடன் ஆகிய இருக்கை. அம்பரம் - ஆடை. கனககேயூரம் - பொன்னால் ஆகிய தோள் அணி. வில் - ஒளி. 23. சார்ங்கம் - வில். மௌலி - முடி.

வாசமார் துளவ மாலை மார்பிடை வயங்க மேலாம்
தேசுற விலங்கா நின்ற திருவலப் பாங்க ரென்றும்
மாசறு புவிமா னீளை வாமபா கத்தும் கொண்டு
நேசமா யிருந்த கோல நிருமலன் றன்னைக் கண்டார். (24)

அடக்கரு முவகை யோடு மடிதொழு தேத்தி நிற்பத்
தடித்தென மிளிர்வ தாய தண்டுடன் சேனை நாதன்
அடுத்தவன் றுரப்ப நெஞ்சத் ததிபயம் பெருக வந்த
இடத்தைவிட் டகன்று வந்த வழியின்மீண் டெய்தி யன்னோர் (25)

வானரத் தநீகத் தோடு மருவியோர் குகையிற் றங்கள்
போனது மாங்குக் கண்ட புதுமைக ளனைத்துஞ் செப்பிக்
கானமர் துளவ மாலைக் கடவுளோ மாயா ரூபி
ஆனவஞ் சகவ ரக்கர்க் கரசனோ வறிகி லேமால். (26)

போயவ னினமுந் தீய புல்லரா மரக்கர் தங்கள்
மாயையோ மெய்யோ வென்ன மயக்கறத் தெரிவோ மென்று
தூயசிந் தையினோ ரெண்ணித் தொகையில்வா னரம்பின் செல்லச்
சேயுயர் தருக்க டிண்ணென் சிலைகள்கைக் கொடுந டந்தே (27)

முன்னுறுங் குகையின் வேக மொடுநெடுஞ் சேய்மை நண்ணித்
துன்னிய தமமே யன்றித் துலங்கொளி கண்ணிற் காணா
தின்னல்சேர் தியக்க நம்மை யெய்திய தோவ தன்றி
மன்னுசொப் பனங்கண் டோமோ வெனமனந் திகைத்து நின்றார். (28)

திரும்பிவந் தெறுழ்வ லித்தோட் சேனையி னொருங்கு கூடி
இருந்தன ருதய காலத் திராகவ னிலங்கை வேந்தன்
கருந்தலை பத்துஞ் சிந்திக் காதலி தன்னை மீட்ப
விரும்பிவா னரங்க ளோடு விரைந்துதென் சலதி மேவி (29)

---

24. துளவ மாலை - துளசிமாலை. வயங்க - விளங்க. திரு - இலக்குமி. வலப் பாங்கர் - வலது புறம். புவி மான் - பூமி தேவி. நீளை - நீளா தேவி. வாம பாகம் - இடது பாகம். கோலம் - அழகு. 25. உவகை - மகிழ்ச்சி. தடித்து - மின்னல். சேனை நாதன் - சேனை முதலியார். உரப்ப - அதட்ட. 26. அநீகம் - சேனை. கான் - மணம். 27. சேய் - தூரம். தருக்கள் - மரங்கள். சிலை - கற்கள். 28. துன்னிய - நெருங்கிய. தமம் - இருள். இன்னல் - துன்பம். தியக்கம் - திகைப்பு. 29. எறுழ் வலி - மிக்க வலிமை. சலதி - சமுத்திரம்.

சேதுபந் தனஞ்செய் தேகித் திறன்மிகு கும்ப கர்ணன்
மோதுபோர் வல்ல மேக நாதனே முதலா யுள்ள
பாதக ருடனே தீய விராவணன் படக்கோ றாண்டிச்
சீதையை மீட்ட யோத்தி சென்றுமா மௌலி சூடி (30)

எழுசீர் விருத்தம்.

அவனியை நீதி யறந்தளிர்த் தோங்க
வாண்டன னெனவமு தெனவே
செவிமடுத் தெழில்செய் நைமிச வனத்திற்
சேர்ந்துறை சௌனகா தியராந்
தவமுனி வர்க ளுவப்புடன் கவியின்
றலைவர்போய் மீண்டிடு மந்தக்
கவியிருட் குகையின் பெருமையை விரித்துக்
கழறெனச் சூதனங் கறைவான் (31)

தூயவை குந்தக் குகையெனப் பெரியோர்
சொல்லுவ ரதன்பெரு மையினைச்
சேயதா மரைவாழ் திசைமுக னுஞ்
செப்புதற் கரியது மறைநூல்
ஆயுமா தவரு மணுகிடற் கரிதா
யமர்வதெவ் வுலகையு மளிக்கும்
மாயவ னிலகு நித்தர்நன் முத்தர்
மருவுற மகிழ்ந் துறை வதுவே. (32)

ஆனதா லந்தக் குகையினு ளடைந்த
வடல்பெறு வானரர் தமக்குக்
கானமர் துளவ மாயனு கையினுற்
கண்ணெதிர் தோற்றியே காந்தான்
றேனுறுஞ் சோலை நைமிசா ரணியச்
செழுந்தவத் தீரிஃ தெல்லாம்
ஞானநற் சயனு முனிசொல வறிந்தே
னெனச் சூதனங் கறைந்தான். (33)

---

30. சேது பந்தனம் - கரையிடல். மேக நாதன் - இந்திரஜித்து. கோல் - அம்பு. 31. அவனி - பூமி. கவியின் தலைவர் - வானர சேனை நாயகர். 32. சேய - செம்மையான. திசைமுகன் - பிரமதேவன். 33. கான் - மணம்.

சீருற விலங்கு வராகமென் றறிஞர்
　　செப்புசாத் திகபுரா ணத்தின்
ஏருற விரிவா யிசைத்திடு மிதனை
　　யின்புறக் கேட்பவர் தமக்குப்
பாருளோர் வியப்பக் காமிய மெல்லாம்
　　பலிப்பவா னந்தமாய் வாழ்ந்து
நேரறு பரம பதத்தினைப் பின்னர்
　　நிலைபெற வடைகுவார் மாதோ. (34)

சக்கரவர்த்தி திருமகன் வேங்கடம் அடைந்த அத்தியாயம் முற்றிற்று.

## 28. தேவர்களுக்கும் தசரத சக்கரவர்த்திக்கும் வரம் கொடுத்த அத்தியாயம்.

கலிநிலைத்துறை.

சூத புங்கவ னைமிசைத் துறவரை நோக்கிப்
பூத லத்தினில் வேங்கட பூதரத் தமரும்
ஆதி தன்செயன் முனமெனக் கன்புற வியாதன்
ஓதி னனவை கேண்மினென் றுரைக்கலுற் றனனால். (1)

மழலை வண்டிமிர் கற்பக நறுமல ரலங்கல்
தழுவு மார்பினர் தவமுனித் தலைவர்க ளெவரும்
குழுமி வெய்யரா நிருதர்செய் கொடுமையான் மெலிந்து
பழுதி லாழியா னன்றிநம் பகைபடுப் பவரார் (2)

என்று சிந்தையி னெண்ணிப்பயோ ததியிடை யமரும்
மன்ற லந்துழாய் மரகதப் பசும்புய றன்னைச்
சென்று வாழ்த்திநங் குறையினைச் செப்புது மென்னா
நின்ற காலையி னாரத னவ்வழி நேர்ந்தான். (3)

34. சாத்திக புராணம் - சாத்துவிக புராணமான முதன்மை யுடையது.
1. புங்கவன் - சிறந்தவன். துறவர் - துறவிகள். பூதரம் - மலை. ஆதி - கடவுள். 2. அலங்கல் - மாலை. நிருதர் - அரக்கர். ஆழியான் - திருமால். படுப்பவர் - தொலைப்பவர். 3. பயோததி - பாற்கடல். மன்றல் - மணம். புயல் - மேகம்; இங்கு அதுபோன்ற நிறமுடைய திருமால்.

கண்டு வந்தியா வருமவன் கழல்பணிந் தெழுந்து
எண்ட வத்திேனு யெவணடைந் தெய்தினே யென்னப்
பண்டை நான்மறை முடிமிசை நடம்பயில் பான்சீர்
தண்டி ஞெடொறு மிசைத்திடுந் தவனவில் குவனல். (4)

சுந்த ரத்தனி முதலையான் ெறுழவெணி யெழில்வை
குந்த நற்பதி குறுகின ஞங்கொளி குலவும்
நந்த லின்றிய நித்தரு முத்தரு நாடி
முந்தெ னக்குரைத் தாரவை யாவெனின் மொழிவாம். (5)

ஆதி நாயகன் றிருமுத லானவ ருடனிப்
பூத லத்துளோர் தமக்கருள் புரிந்திட நினைந்து
கோத றுந்திரு வேங்கட மெனுங்குளிர் வரையின்
மீது வைகின னென்றனர் வினவியான் மீண்டேன். (6)

என்று தேவர்க ளிருடிகள் கருத்தறிந் திசைப்பான்
இன்று போதன்மா டெய்துகின் றேனுட னிசைந்து
துன்று நீவிர்க ளனைவரும் வருதிரேற் றுலங்கு
மன்ற லார்மல ரவற்கிவை வழுத்துவோ மெனவே (7)

வினவி யாவரு நாரத னொடுவிரைந் தேகோ
கனகன் வாழிடங் கலந்துகா யத்திரி மாதோ
டினிய மாசர சுவதிசா வித்திரி யென்னும்
புனித மங்கையர் மூவரும் புடைபொலிந் திலக (8)

மேனி பொன்னொளி விரிதர நான்முகம் விளங்கத்
தேனு றுங்கம லத்தொடை திகழவீற் றிருந்த
ஞானி யங்கழல் பணிந்துன தருள்கொடு யாங்கள்
ஈன மின்றியே யித்துணை நாளினி திருந்தோம். (9)

4. தண்டு - வீணை. தவன் - தவசி. 5. சுந்தரத்தனி முதலை - அழகிய ஒப்பற்ற முதல்வனை. நந்தல் - குறைவு. நித்தர் - நித்திய சூரிகள். முத்தர் - முத்தி பெற்றவர். 6. திருமுதலானவர் - திருமகள், நீளை, பூமிதேவி முதலியோர்கள். கோது - குற்றம். வரை - மலை. 7. போதன் - பிரமன். துன்றும் - சேரும். மலரவன் - பிரமன். வழுத்துவோம் - உரைப்போம். 8. கோகனகன் - தாமரை மலரில் வாழும் பிரமன். புனிதம் - தூய்மை. 9. தொடை - மாலை. ஈனம் - குறை.

சற்று நன்மையி லாக்கொடுந் தசமுக் னுதிக்
கொற்ற வேனிசா சரர்களிப் போழ்தெமைக் குறுகிக்
குற்ற மேபுரி கின்றன ரன்னவர்க் கொன்று
வெற்றி கொள்பவர் விண்டுவை யலதுவல் லவரார். (10)

சேணு லாவிய திவாகரன் றிகழொளி மழுங்கி
நாணு மாறொளிர் நலந்தரு நேமிநா ரணனைக்
காணு மாறுநீ கருணைசெய் கெனக்கருங் கயற்கண்
வாணி நாயகன் மானசத் தாலறிந் துரைப்பான். (11)

மண்ணின் வேங்கட மலைமிசைச் செய்யதா மரையங்
கண்ண னெம்மனோர் யாரையுங் காத்திட வுளத்தின்
எண்ணி யிந்திரை யுடனிரு தயங்களிப் பெய்த
நண்ணி வாழ்ந்துறை கின்றன னலந்தர மாதோ. (12)

நீவிர் யாவரும் வேங்கட நெடியவெற் பெய்தித்
தேவ தேவனைப் பராயிவை செப்பிடிற் பொல்லாப்
பாவ காரிய ருயிர்தெறு மெனப்பணித் தியானும்
மேவு வேனென வவரொடு விரைந்தினி தெழுந்தான். (13)

எழுந்த நான்முக னிருடிக ளிலேகர்க ளுடனே
தழைந்த காவுசூழ் வேங்கடா சலத்தினைச் சார்ந்து
செழுந்த ணீர்களிற் றோய்ந்தரி செம்மல ரடிமேல்
விழைந்த சிந்தைய ராயவண் வேறுவே றிருந்து (14)

மலைவ றத்தியா னஞ்செயுங் காலையின் மனுவின்
குலம திற்பிறந் தயோத்தியி னிருந்தொரு குடைக்கீழ்
நிலமெ லாம்புரந் தறத்தினை நிலையுதல் செய்து
வலனு றுந்தச ரதனெனு மன்னவர் மன்னன் (15)

---

10. தசமுகன் - இராவணன். நிசாசரர் - அரக்கர்கள். விண்டு - விஷ்ணு. 11. திவாகரன் - சூரியன். நேமி - சக்கராயுதம். வாணி - சரசுவதி தேவி. மானசத்தால் - மானத்தினால். 12. இந்திரை - இலக்குமி. இருதயம் - திருவுள்ளம். 13. வெற்பு - மலை. பராய் - வணங்கி. பாவ காரியர் - பாவத்தைச் செய்யும் அரக்கர். தெறும் - அழிப்பான். பணித்து - கட்டுரை சொல்லி. 14. இலேகர்கள் - தேவர்கள். காவு - சோலை. அரி - திருமால். 15. மலைவு - மயக்கம். புரந்து - காப்பாற்றி. வலன் - வெற்றி.

### எழுசீர் விருத்தம்.

முன்னொரு தினத்தி லருந்ததி கொழுநன்
முளரியந் தாடொழு தெற்பின்
இந்நிலம் புரக்குந் தநயர்க ளிலொன்
றிரங்குறு மாசனை நோக்கிக்
கன்னியந் துளவோன் றிருவுட னமருங்
காட்சிசால் வேங்கட மலையின்
மன்னியாங் கவனை யுளத்தினி லமைத்துத்
தவத்தினை மருவினின் றனையேல் (16)

ஆதியா மமலன் கருணையா லெழில்கொ
ளரும்பெறற் புதல்வருண் டாமென்
றோதிய வசிட்ட னுடன்றிரு மலையை
யுற்றுயர் புனல்களிற் றோய்ந்து
தாதலர் பொழிலுங் குகைகளு நதியுந்
தண்மலர்த் தடங்களு நோக்கி
ஏதமற் றுயருஞ் சாமிபுட் கரிணி
யெய்தின ரிதயமுண் மகிழ்ந்தே. (17)

அருத்தியோ டமரர் முனிவர்க ணாப்ப
ணலர்மகண் மகிணனை யுளத்தின்
இருத்திநான் முகனங் கிருந்தியோ கஞ்செய்
திடுதல்கண் டருந்ததி கணவன்
திருத்தகு மாசை யினிதுற நோக்கிச்
செப்புவா னித்திசை முகற்குக்
கருத்துடன் பரமன் வெளிப்படுஞ் சின்னாட்
கழிந்தபி னென்றினங் கழறும். (18)

---

16. அருந்ததி கொழுநன் - வசிட்ட முனிவர். முளரி - தாமரை மலர். எற்பின் - எனக்குப் பின்னுளில். புரக்கும் - காக்கும். தனயர் - புதல்வர். துளவோன் - துளசி மாலையை யுடைய திருமால். 17. அமலன் - கடவுள். புனல் - தீர்த்தம். பொழில் - சோலை. ஏதம் - குற்றம். 18. அருத்தி - விருப்பம். நாப்பண் - நடுவில். அலர்மகள் - திருமகள். மகிணன் - கேள்வன். திசைமுகன் - பிரமன்.

நீயுமிவ் விடத்தி னிருந்தியோ கத்தை
நிரப்பென வெண்ணெழுத் தாய
தூயமந் திரத்தைச் சொலச்செவி யேற்றுச்
சுடர்மதிக் கவிகைவா ளரசன்
தோயமுட் படிந்து குருவுரைத் திடுமத்
தொன்மறை தனையுளத் திருவி
நேயமுற் றவனே ராசனத் திருப்ப
நிகரறு வசிட்டனம் முறையே (19)

தானுமங் கிருந்து தவஞ்செயும் வேலை
தனிலெவர் செவிக்குமின் புறவே
வானிடை மிகுந்த வொலியெழ மணங்கொண்
மலரவ னரன்புரந் தரனே
டேனைய வமர ரிருடிகள் வினவி
யேதிஃ தெனவியந் திருப்பப்
பானுவெண் ணிலவர் குழுமிவந் தென்னப்
பாயொளி திசையெங்கும் பாவ (20)

ஈடறு மணியா லமைந்தது பறைக
ளெண்ணில வுளதுபல் கானங்
கூடிய தெழில்செய் மங்கையர் நடனங்
கொள்வது சிறப்பெலா முளது
நீடிய தகன்ற தற்புத முளது
நிகரற மானமொன் றெய்த
காடினர் வியப்புற் றுயர்ந்தவா னந்த
நளிர்பெருங் கடலிடைக் குளித்தே (21)

மணங்கமழ் முளரி யாசனன் முதலாம்
வானவர் விழுமிய விருடிக்
கணங்கள்சூழ்ந் தருகிற் கலந்துநின் றேத்திக்
கரங்குவித் துத்தரி சிப்ப

19. எண்ணெழுத்து ஆய மந்திரம் - அஷ்டாக்ஷர மந்திரம் "ஓம் நமோ நாராயணாய" என்பது. கவிகை - குடை. தோயம் - தீர்த்தம். மறை - மந்திரமொழி. 20. மலரவன் - பிரமன். அரன் - சிவன். புரந்தரன் - இந்திரன். பானு - சூரியன். 21. பறை - சிறகுகள். மானம் - விமானம். 22. முளரியாசனன் - தாமரை மலரில் இருப்பவன் ஆகிய பிரமன்.

அணங்கர வணைய னவ்விமா னத்தி
னஞ்சனப் புயலென வதன்கண்
இணங்குமின் னெனவிந் திரையுர மிலக
வெழின்மணி மகுடவில் வீச (22)

கனககே யூர மகரகுண் டலம்பீ
தாம்பரங் கவுத்துவ மணியோ
டினமணி யார மிலங்கிடத் துளவத்
தொடைவெறி யெங்கணுங் கமழத்
தினகரன் மதியா மெனவிரு மருங்குந்
திகிரிசங் கிலங்கிடத் திகழும்
அனகன்மெய் யெழிலை யனைவரும் விழியா
லன்புறத் தெவிட்டிடா தருந்தி (23)

கலிநிலைத்துறை

ஆடி னார்சில ரானந்த மீக்கொளச் சுருதி
பாடி னார்சிலர் பங்கயத் திருவடி முடியில்
சூடி னார்சிலர் துள்ளியங் கெங்கணுஞ் சுழன்றே
ஓடி னார்சில ருடல்புள கித்துள முருகி. (24)

ஆதி யேயுல கனைத்தையும் படைத்தளித் தழிக்குஞ்
சோதி யேயமு தேமறை சொல்லரும் பொருளே
காத லாலெம திடர்களை யெனக்கடி கமழும்
பாத நாண்மலர் பணிந்துநின் றேத்தினர் பரிவால். (25)

அன்ன காலையி னுழியா னவர்முக நோக்கி
என்ன காரணத் தாலிவ ணீவிரெல் லீரும்
மன்னி னீரென வினுதலு மலரவன் பணிந்து
சென்னி மேற்கரங் குவித்திவை செப்பலுற் றனனால். (26)

---

அணங்கு - தெய்வத் தன்மை. அரவணையன் - சேஷசாயி. அஞ்சனப் புயல் - கருமையான மேகம். மின் - மின்னல் கொடி. இந்திரை - இலக்குமி. உரம் - திருமார்பு. வில் - ஒளி. 23. கனகம் - பொன். பீதாம்பரம் - பொன்னுடை. கவுத்துவமணி - திருமார்பின் மணி. துளபத் தொடை - துளசி மாலை. வெறி - வாசனை. தினகரன் - சூரியன். மதி - சந்திரன். அனகன் - குற்றமில்லாதவன். எழிலை - அழகை. 24. சுருதி - வேதம். பங்கயம் - தாமரை. 25. கடி - வாசனை. பரிவு - அன்பு. 26. மன்னினீர் - தங்கினீர்கள். மலரவன் - பிரமன். சென்னி - தலை.

புலத்தி யன்மகன் புத்திரன் புயமிரு பதுசேர்
வலத்தி னன்றச சிரனிரா வணனெனு மரக்கர்
குலத்து யர்ந்தமன் கொடுந்தவ மெனேக்குறித் தியற்றித்
தலத்தின் மானிடர் தவிரமற் றியாவர்க ளாலும் (27)

மாய்வி லாவரம் பெற்றன னவ்வரச் செருக்கால்
ஓய்வி லாதிமை யோர்முனி வோர்களை யுருத்து
நோய்வி ராவிய தெனப்பல நோதல்செய் கின்றான்
சாய்வி லானறத் துக்கொரு தரியல னெனவே. (28)

அஞ்சி யாவரு மடைந்தனந் தமரொடவ் வரக்கன்
துஞ்ச வேபொரு தடியர்தந் துயர்தவிர்த் தாள்வாய்
மஞ்செ னத்திகழ் மேனியாய் மணங்கதழ்ந் திலகு
கஞ்ச நாண்மலர் மகள்புண ரெழில்கொள்கா தலனே. (29)

பாலின் வேலையும் வைகுந்த பதியும்விட் டிந்தச்
சீல வேங்கட பூதரத் தடிகள்சேர்ந் ததனைத்
தால மீதறிந் தடைந்துதா டரிசித்த வெமக்கு
மேலு றாந்துய ருண்டுகொல் விழுமிய தலதே. (30)

என்று நான்முகன் முதலிய ரிசைத்தல்கேட் டொளிசெய்
வென்றி யாழியான் விளம்புவா னினிச்சில பகலில்
நன்றி லாதவவ் வரக்கனைத் தமரொடு நலியக்
கொன்று வாழ்வுமக் களிக்குறுங் கூசலீ ரென்றான். (31)

அந்த வாசகஞ் செவிப்பட வயன்முத லெவரும்
சிந்தை யூடடங் காதெழு மகிழ்ச்சிகொண் டிருப்ப
விந்தை நாயக னகத்தியன் றனைவிழி மலரால்
முந்த நோக்கிநீ வந்ததென் மொழிந்திடு கென்றான். (32)

---

27. புலத்தியன் மகன் - விசிரவசு - அவன் புத்திரன் இராவணன். தசசிரன் - பத்துத் தலையன். மன் - அரசன். 28. மாய்வு - மரணம். செருக்கு - கருவம். உருத்து - கோபித்து. தரியலன் - பகைவன். 29. தமர் - உறவினர். துஞ்ச - இறக்க. பொருத - தாக்கி. மஞ்சு - மேகம். கதழ்ந்து - விரைந்து. கஞ்சம் - தாமரை. 30. வேலை - சமுத்திரம். பூதரம் - மலை. தாலம் - பூமி. விழுமியது - சிறந்தது. 31. ஆழியான் - சக்ராயுதம் உடைய கடவுள். 32. விந்தை நாயகன் - திருமகள் கேள்வன்.

தெண்டி ரைக்கட லடங்கலுஞ் செங்கையால் வாரி
உண்ட மாமுனி யஞ்சலித் தோதுவா னுலகின்
பண்டை நான்மறை யவர்பலர் பதகராற் பயமுட்
கொண்டுன் பாதமே கதியெனக் குறித்தடைந் தனரால். (33)

துட்டர் யாரையுந் தொலைத்துல கினினல மியற்றுஞ்
சிட்டர் யாரையுங் காக்கின்ற தெய்வநீ யந்தக்
கெட்ட தீத்தொழிற் கள்வர்கள் கிளைஞர்தம் மோடும்
பட்டு வீழ்தரப் புரிந்திவர் தமைப்பரி வுடனே (34)

காவென் றேத்தவக் கள்வரைக் கதிர்செய்நே மியினால்
ஆவி பொன்றுவிப் பேமென வருளிவிண் ணவர்தங்
கோவை நோக்கியஞ் சேலெனக் கூறின னரிய
தேவ தேவர்க்குந் தேவனாந் திருவிறை யகனே. (35)

பின்ன ருஞ்சன காதியர் தமைப்பெருங் கருணை
மன்னு செங்கணா னோக்கியிங் கடைந்தமை வகுப்பீர்
என்ன வாங்கவ ரிறைஞ்சியெவ் வுலகுமுண் டுமிழுங்
கன்னி யந்துழா யமலனே கேளெனக் கரைவார். (36)

இந்த மாமலை தனிற்றவ மியற்றுநர்க் கெளிதாய்ச்
சிந்தை வேட்டன யாவையுஞ் சித்தியா மெனவே
வந்த மேதையர் வருந்தவன் றுயர்விளைக் கின்றார்
நிந்தை சேர்கொடுந் துட்டர்க ணித்தலும் புகுந்தே. (37)

அவர்க டுஞ்சிட வருளியிவ் வசலமே லடைவோர்
எவரும் பீதியற் றின்புறக் கருணைசெய் யெனவே
உவகை யோடவர்க் கவ்வர மீந்துமா பதியை
இவண டைந்தமை யேதவை யோதென விசைப்ப (38)

---

33. அடங்கலும் - முழுதும். அஞ்சலித்து - கைகுவித்து. பதகர் - பாதகர். 34. துட்டர் - தீயவர். சிட்டர் - நல்லோர். 35. நேமியினால் - சக்கராயுதத்தால். ஆவி - உயிர். பொன்றுவிப்போம் - போக்குவோம். கோ - தலைவன். 36. கன்னி - அழியாத. துழாய் - துளசி. கரைவார் - சொல்லுவார். 37. வேட்டன - விரும்பியவை. மேதையர் - அறிஞர். நித்தலும் - நாள்தோறும். நிந்தை - பழி. 38. அசலம் - மலை. பீதி - அச்சம். உவகை - மகிழ்ச்சி. உமாபதி - சிவன்.

மங்கை பாகனு மகிழ்ந்தடி வணங்கிநின் றேத்தி
அங்கண் மாநிலத் தனைவரு மன்புறப் பணிய
இங்கி ருந்தெளி தாயருள் புரியுமுன் னெழில்சேர்
மங்க ளந்திக ழுருவைநான் மருங்குற விருந்தே (39)

கண்டு நாடொறுந் தொழவா மருளெனக் கமஞ்சூற்
கொண்டல் மேனியான் குவலய மனைத்தையும் வாரி
உண்ட வாய்திறந் தொளிதிகழ் கின்றவிவ் வோங்கல்
அண்டை நீங்கலா தன்புற வாழ்கென வருளி (40)

நீதி சேர்தய ரதன்முக நெடிதுற நோக்கி
ஏதி வண்வரு காரிய மியம்பென விறைவன்
ஆதி மூலமே யடியனுக் கறந்தலை மணந்து
போத மேவுநற் புத்திர ருதவெனப் புகழ்ந்தான். (41)

திருவு ளந்தனின் மகிழ்ந்தெழிற் றிருவுறை யுரத்தான்
பொருவ ரும்புகழ்ப் புத்திரர் நால்வரை நினக்குத்
தருகு வம்வளஞ் சேருமுன் றலத்திடை விரைவின்
மருவி நான்முறை மகவருண் மகஞ்செயென் றிசைத்தான். (42)

அமுத மாமென வம்மொழி யஞ்செவிப் படலும்
தமர வேலைசூழ் நிலமெலாந் தன்குடை நிழற்கீழ்
அமர வாழ்தய ரதன்பணிந் தானந்த மெய்தி
விமலை நாதனை வேண்டிநல் விடைகொடு விரைந்து (43)

தன்னு டன்வரு வசிட்டனோ டயோத்தியைச் சார்ந்தான்
என்ன நைமிச வனத்தவர்க் கியம்பினன் சூதன்
கன்ன யம்பெறு வராகநா மப்புரா ணத்திற்
கன்ன மின்புற விவ்வெலாங் கட்டுரைத் திடுமே. (44)

---

39. மங்களம் - சுபம். மருங்கு - பக்கம். 40. கமம் - நிறைவு. கொண்டல் - மேகம். குவலயம் - பூமி. ஓங்கல் - மலை. 41. போதம் - ஞானம். 42. திருவுறை உரத்தான் - சீநிவாசமூர்த்தி. மகவு அருள் மகம் - புத்திர காமேஷ்டி யாகம். 43. தமரம் - பேரொலி. வேலை - சமுத்திரம். விமலைநாதன் - திருமகள் நாயகன். 44. கன்னம் - காதுகள்.

தேவர்களுக்கும் தசரத சக்கரவர்த்திக்கும் வரம் கொடுத்த அத்தியாயம் முற்றிற்று.

# 29. பிரமன் உற்சவம் நடத்துவித்த அத்தியாயம்.

**கலிவிருத்தம்**

தாதுகமழ் நைமிச வனத்துறை தவர்க்குச்
சூதமுனி பின்னரு மகிழ்ந்துநனி சொல்லும்
ஆதியம லன்னொளிசெ யாழிதனை நோக்கி
ஏதமகல் கும்பமுனி யென்னிட மிசைத்தான். (1)

நாடதனி னண்ணியுயர் நான்மறை யவர்க்குக்
கேடுபுரி தீயர்கிளை யோடுகெட நூறி
வாடுத லுறுதேவரை யும்மகிழ்வு றச்செய்
தோடியிவண் வாவென வுரைத்திட விரைந்தே (2)

எண்ணிலிர விக்கண மெழுந்தென வெவர்க்குங்
கண்ணொளி மழுங்கவெயில் காலவுல குட்க
விண்ணுற வெழுந்தவணின் மேவிநல மில்லாத்
திண்ணிய கொடும்பவ மிகுஞ்செறுந ரெல்லாம் (3)

பூமிசைசி தைந்துடல் புரண்டுவிழ வாவி
ஏமனிட முய்த்திணை யிலாவிசய மெய்தி
மாமலர் வருந்திரு மகிழ்ந்துறையு மார்பன்
தாமரைபொ ருங்கைமிசை தங்கியது வந்தே. (4)

அப்பொழுது வேதனம லன்பத மிறைஞ்சி
ஒப்பகலு முன்னுரு வுகந்தடிய ரெல்லாம்
எப்பொழுது மஞ்சலிசெய் தேத்திடவு வந்தே
இப்பருவ தத்தினிலி ருந்தருள்செய் கென்ன (5)

---

1. தாது - மகரந்தம். தவர் - தபசியர். அமலன் - மலம் இல்லாத கடவுள். ஆழி - சக்கராயுதம். ஏதம் - குற்றம். கும்பமுனி - அகஸ்திய முனிவர். 2. கிளை - உறவினர். நூறி - அழித்து. 3. இரவிக் கணம் - சூரியர் கூட்டம். கால - வெளிப்பட. உட்க - அஞ்ச. செறுநர் - பகைவர். 4. பூமிசை - நிலத்தில். ஆவி - உயிர். உய்த்து - செலுத்தி. விசயம் - விசேட வெற்றி. பொருங்கை - ஒத்த கை. வேதன் - பிரமன். அஞ்சலி செய்து - கைகுவித்து வணங்கி. பருவதம் - மலை.

எழுசீர் விருத்தம்.

வேண்டியுள் ளன்பு கனிந்திட மறித்தும்
விளம்புவா னடிகளுக் கியாங்கள்
மாண்டகு துவசா ரோகண முதலா
மறைவிதி மரபுளி நடத்தி
ஈண்டுகா ணுதற்கு வேட்டன மென்ன
வியம்பலு மேலதாங் கருணை
பூண்டசெந் திகிரித் தனிமுத லுவந்து
புரியெனப் புகன்றனன் மாதோ. (6)

புகன்றவம் மொழியை யினிதுறக் கேளாப்
பூமக னுளங்குதூ கலித்து
மகிழ்ந்தெதிர் நின்ற விச்சுவ கருமன்
வதனத்தை யிருக்கணு னோக்கி
முகுந்தனுக் கிரவி கனியுறுங் கால
முக்கிய விழவினை நடத்தற்
குகந்தநற் றுவசத் தம்பமொன் றியற்றென்
றுரைதர வவ்வுரைப் படியே (7)

பொன்னினு மொளிகொண் மணிகளி னாலும்
பொற்புறத் திரண்டுநீண் டழகு
மன்னிய துவசத் தம்பமொன் றமைத்தவ்
வளநகர் மறுகெலாம் வாழை
கன்னல்பைங் கமுகு கதலிகை மகர
தோரணங் கனககும் பங்கள்
துன்னிய வெறிகொ ணறுமலர்த் தொடைய
றுயல்வர நனியலங் கரித்தே (8)

---

6. மறித்தும் - மறுபடியும். துவசாரோகணம் - கொடி யேற்றம். மறை விதி - வேத விதி. வேட்டனம் - விரும்பினோம். திகிரி - சக்கரப் படை. 7. பூமகன் - பிரமன். வதனம் - முகம். முகுந்தன் - திருமால். இரவி - சூரியன். கனி - கன்னியா ராசியிடம். துவசத்தம்பம் - கொடிக் கம்பம். 8. மறுகு - வீதி. கன்னல் - கரும்பு. கதலிகை - கொடிகள். கனககும்பம் - பொன் கலசம். வெறி - வாசனை. தொடையல் - மாலைகள். துயல் வர - தொங்க.

பங்கய னிடஞ்சென் றடிகணே மித்த
படிமுடித் தாயதென் றுரைப்ப
அங்கவ னுவந்து விழவின்மா யவனுக்
கமுதுசெய் வித்திடற் காகச்
சங்கையில் பற்பல் பண்டமுங் கொணர்ந்து
தரிசனைக் குறுமவர் மகிழ்வு
தங்கவன் பெழுந்து தழைப்புற வடிசி
றுனங்க டவறற நடத்தி (9)

விதிமுறை துவச படத்தினைத் தம்ப
மீதினு ரோகணஞ் செய்தே
அதிரசஞ் சுகிய மனோகர முதல
வாம்பணி காரமு முலகில்
எதிரறு மிரத முறும்பல கனியு
மினிதுறு மடிசில்கள் பலவும்
விதவித மமைத்துப் பதுமைதன் பதிக்கு
விருப்புற நிவேதனஞ் செய்து (10)

முரசுயர் பேரி காகளஞ் சின்ன
முருடுசச் சரிமிரு தங்கம்
காடிகை சங்க முதலவாச் சியங்கள்
கடலென வொலிசெயக் கவிகை
வரிசையி னிழற்றக் கொடித்திர ணெருங்க
மருங்கினிற் சாமரை யிரட்டத்
தருணியர் பரத முறைநடங் குயிற்றத்
தம்புரு வீணைகின் னரங்கள் (11)

---

9. பங்கயன் - பிரமன். நேமித்த - கட்டளை செய்த. விழவு - உற்சவம். சங்கை - எண்ணிக்கை. தரிசனை - காட்சி. அடிசில் - திருவமுது. 10. துவசபடம் - கொடிச் சீலை. ஆரோகணம் - ஏற்றல். அதிரசம், சுகியம் மனோகரம், பணிகாரம் :—இவைகள் பக்ஷண வகைகள். இரதம் - ரசம். பதுமை - இலக்குமி. நிவேதனம் - படைத்தல். 11. கவிகை - குடை. மருங்கு - பக்கம். சாமரை - கவரிச் சின்னம். தருணியர் - இள மங்கையர். பரதம் - பரத சாஸ்திரம். நடம் குயிற்ற - நாட்டியம் செய்ய.

இனிதுறப் பாட வித்துவ சனங்க
ளெண்ணருங் கவியெடுத் தோதப்
புனிதவந் தணர்க ளாரண முழங்கப்
புலவர்க ளலர்மழை பொழிந்து
மனமுவந் தேத்த மண்ணவர் துதிப்ப
மாதவர் மகிழ்ந்துளம் வாழ்த்த
அனைவரு நயந்திவ் விழவினைப் போல
வறிந்திலோ மெனவதி சயிப்ப (12)

அனந்திறன் மடங்க லாஞ்சனே யன்புள்
ளரசுகைம் மாவுடன் பலவா
கனங்களிற் கமலை பதியினை யிருத்திக்
களிப்பொடு தினந்தெரு வுலாவி
இனந்திகழ் மணிசெ யிரதமீ தெழிலா
யெழுந்தரு ளும்படி யியற்றிப்
புனைந்தவம் மறுகு வலம்புரிந் தப்பாற்
பொற்புறு மிவுளிவா கனத்தின் (13)

வலம்புரிந் ததற்குப் பிற்றைநா ளுயர்ந்த
வளங்கொளச் சமைவிமா னத்தி
னலம்பெற வுலவி வருகையிற் சிறந்த
நான்மறை யோர்மறை முறையால்
இலங்குநற் கும்ப மமைத்தழ லோம
மியற்றிநீ டிக்குபந் தனங்கள்
பலங்கொளச் செய்து பலியளித் தத்தம்
பழமறை யந்தணர்க் கருளி (14)

---

12. வித்துவசனம் - புலவர்கள். ஆரணம் - வேதம். அனம் - அன்னப் பட்சி. மடங்கல் - சிங்கம். ஆஞ்சனேயன் - அனுமான். புள்ளரசு - கருடன். கைம்மா - யானை. கமலைபதி - திருமகள் கேள்வன். இரதம் - தேர். மறுகு வலம் புரிந்து - தெருவில் பவனி போந்து. இவுளி வாகனம் - குதிரை வாகனம். 14. விமானம் - பல்லக்கு. அழல் ஓமம் - அக்னியில் ஹோமம். திக்கு பந்தனம் : பலியளித்தல் - ஒருவகைச் சடங்கு. அத்தம் - பொன்.

ஏற்றிய துவச படத்தினை முறையா
　　விருந்தவ ரோகணஞ் செய்து
மாற்றரு மணியுங் கனகமு மிமைக்கும்
　　வளஞ்செறிந் தலர்வெறி கமழ்ந்து
சாற்றரு மகிமை சார்விமா னத்துட்
　　டாக்கணங் குரத்தினிற் றிகழும்
ஆற்றலந் திகிரி மாயவ னமர்ந்தாங்
　　கனைவரும் விருப்புடன் பணிய (15)

மணிமுடி மகரக் குழைகவுத் துவமா
　　மாலைதோ ளணிமுத லாய
பணியொளி கஞல வீதியி னுலவிப்
　　பைம்பொன்மண் டபத்தினத் தாணி
அணிபெற விருந்து பிரமனை நோக்கி
　　யன்பினீ நடாத்திய விந்த
இணையறு விழவா னனியுள மகிழ்ந்தே
　　மெனவுரைத் தின்னமு முரைப்பான். (16)

ஆண்டுக டோறுங் கன்னிமா மதியி
　　லன்புறத் திருவிழா விவ்வா
றீண்டெனக் குவப்போ டியற்றுவித் திடுவா
　　ரிருமையு மின்புபெற் றுய்வார்
வேண்டியுள் ளன்பு முதிர்தர விந்த
　　விழவினை வந்துகண் ணுறுவோர்
நீண்டவா ரிதிசூ ழுலகினி லுளத்தி
　　னினைந்தவை யாவையும் பெறுவார். (17)

என்றுரைத் தருளி வாச்சிய மெல்லா
　　மிருங்கட லெனவொலி வழங்கச்
சென்றெழில் சிறந்த சாமிபுட் கரிணிச்
　　சீதநீர் தனிற்றிரு மகிழ்நன்

15. அவரோகணம் - இறங்குதல். கனகம் - பொன். அலர் வெறி - மலர் மணம். தாக்கணங்கு - இலக்குமி. உரம் - திருமார்பு. 16. மகரக் குழை - மகர குண்டலம். அத்தாணி - ஆஸ்தானிகம். 17. வாரிதி - கடல். கன்னி மதி - புரட்டாசி மாதம். 18. சீதம் - குளிர்ச்சி.

நின்றவ பிருத மாடல்செய் காலை
நேமமோ டயனரன் முதலோர்
நன்றறி தவத்தார் யாருமவ் வயத்தி
னலம்பெறக் குடையவப் போழ்தே (18)
சனகமா முனிவ னமரர்க ணப்பட்
டன்காம் விசும்புற நீட்டி
அனைவருங் கேண்மின் சத்திய மாயோன்
றறைகுவ னஃதியா தென்னில்
தனியுறு வேத முதற்கலை களினற்
சாரமா ராய்ந்திடு மிடத்துங்
கனமுறுந் தியான மூலமாய் நோக்குங்
காலத்து மெழில்பெற விளங்கும் (19)
மூன்றுலோ கத்தி னுறும்புனற் கெல்லா
முதன்மைய தாகியே யுயர்ந்த
சான்றவர் புகழுஞ் சாமிபுட் கரிணி
தனிலவ பிருதமா டிடுவோர்
தோன்றுமுற் சனனப் பவத்தொடர் கணத்திற்
றொலைவுறு மெனச்செவி மடுத்துத்
தேன்றரு கமலன் முதலிய ரெவருஞ்
சிந்தையின் மிகவியப் புற்றார். (20)
எண்ணரும் புலவ ருடனய னேத்தி
யிறைஞ்சலு மிதழ்விரி கமலக்
கண்ண னுட் கருணை வழிதர நோக்கிக்
கமலநீ சத்திய வுலகம்
நண்ணியுன் றொழிலை நடத்தென வருளி
நறுமலர்க் கற்பக நிழல்வாழ்
பண்ணவர் பதியை விழிமலர் பரப்பிப்
பைம்பொனு டடைகெனப் பணித்து (21)

அவபிருதம் - விழவினிறுதியில் செய்யும் முழுக்கு. அயம் - தீர்த்தம். குடைய - நீராட. 19. விசும்பு - ஆகாசம். அமரர்கள் நாப்பண் - தேவர்கள் இடையில். 20. நறும் புனல் - புனித தீர்த்தம். சான்றவர் - பெரியோர். பவத்தொடர் - பிறவிச் சம்பந்தம். கமலன் - பிரமன். 21. புலவர் - தேவர். அயன் - பிரமன். சத்திய வுலகம் - பிரம்மலோகம். பண்ணவர் பதி - தேவர்கள் தலைவனாகிய இந்திரன். பணித்து - கட்டளைசெய்து.

உமையவள் பதியை விருப்புற நோக்கி
யுனதிடத் தேகென வருளி
இமையவர் முனிவர் யோகிய ரெவர்க்கு
மின்புற விடைகொடுத் ததன்பின்
தமரவா ரிதிசூழ் தலத்தவர் நாளுந்
தரிசனை பெறும்பரி சுவந்து
விமலைமார் பிலக வாநந்த நிலைய
மெனும்விமா னத்திருக் கின்றான். (22)

என்றுயர் சூதன் நைமிச மெனப்பே
ரிசைபெறு முயர்பெரு வனத்தின்
ஒன்றிய சௌன காதியர் கேட்ப
வுரைத்தன னிப்பெருஞ் சரிதம்
வென்றிகொள் வராக மெனும்புரா ணத்தின்
விரிவுற விளம்பிடு முலகின்
நன்றெனக் கேட்போ ரெழுதுவோர் நவில்வோர்
நலனிரு மையினுநண் ணுவரே. (23)

பிரமன் உற்சவம் நடத்துவித்த அத்தியாயம் முற்றிற்று.

## 30. சக்கர வேந்தன் வெற்றி உரைத்த அத்தியாயம்.

அறுசீர் விருத்தம்.

நவிலரும் பெருமை வாய்ந்த நைமிச வனத்தின் மேவுஞ்
சவுனக ரேன நாகத் தனிமுதன் முகுந்தன் சீர்மை
கவினுற மறித்துங் கேட்பக் காதலிக் குதுமென் றேதச்
சுவையுறு கேள்விச் செல்வச் சூதமா முனிசொல் வானால். (1)

22. உமையவள்பதி - சிவன். இமையவர் - தேவர்கள். தமரம் - பேரொலி. வாரிதி - கடல். விமலை - இலக்குமி. 1. நவிலல் - சொல்லுதல். ஏன நாகம் - வராககிரி. முகுந்தன் - திருமால். கவின் - அழகு. காதலிக்குதும் - விரும்புகிறோம்.

உலகமுண் டுமிழ்ந்த ளங்கோ னுற்சவ முடிந்த பின்னர்க்
கலைமகள் பதிவிண் வேந்தன் கடவுள ரெவருந் தத்தம்
நிலையடைந் திடமுக் கண்ண னீண்டுய ரனந்த வெற்பை
வலமுறச் சூழ்ந்தே கின்ற வழியினோர் மருங்கு வைகும் (2)
கபிலையான் றீர்த்தங் கண்ணிற் கண்டிவ ணிருந்தா லன்பர்க்
கபயமீந் தருளுஞ் சீர்சா லஞ்சன சலமால் சேவை
சுபமுற நாள்க டோறு தோற்றுமென் றுன்னி யந்த
நிபமறு தானந் தானே நீள்கையி லாய மென்றே (3)
மனமகிழ்ந் திருக்கின் றுனவ் வளஞ்செறி தலத்தை மண்ணோர்
கனமுறுங் காள கத்தி யெனக்கழ றுவர்கண் ஞானச்
சனகனே முதல வாய யோகியர் சமூக மெல்லாம்
நனிபெரும் பாப நாச நறும்புனற் கருகின் மேவும். (4)
தருக்கிளர் வனங்க டோறுஞ் சஞ்சரித் திருக்கின் றுரென்
றுருக்கிளர் சூத னோதி மறித்துமாங் குரைக்க லுற்றுன்
அருக்கன்வெப் பணுகா வென்ற னுச்சிர மத்தின் முன்னாண்
மருக்கமழ் கூந்தற் செவ்வாய் மாதருந் ததியா மென்பாள் (5)
கற்பினுக் கரசி பன்னாட் கமலையை மனத்தி னுடி
அற்புத மிஃதென் றியாரு மறைகுவான் றவநின் றுற்றப்
பொற்புறுந் திருமுன் றேன்றிப் புரிதவத் தினையு வந்து
பற்பல வரங்க ளீந்தப் பதிக்கரு கமர்ந்து தோன்றும் (6)
தெசநதி களினன் மீனத் திங்களுத் திரத்தின் மூழ்கிச்
சுசியுற வினையன் போடு துதிப்பவர் நினைப்ப வெல்லாம்
இசைவுற வளிப்ப லென்ன விசைத்தகன் றனளென் றோத
வசையறு சௌன காதி மறையவர் வணங்கிச் சொல்வார். (7)

---

2. கலை மகள் பதி - பிரமன். விண் வேந்தன் - இந்திரன். முக்கண்ணன் - சிவன். அனந்த வெற்பு - சேஷகிரி. 3. கபிலையான் - கபில பசு. அஞ்சனசலம் - அஞ்சனகிரி என்ற வேங்கடமலை. சேவை - தரிசனம். நிபம் - ஒப்பு. 4. கனம் - பெருமை. கழறுவர் - சொல்லுவார். யோகியர் சமூகம் - யோகியர் கூட்டம். 5. தரு - மரங்கள். அருக்கன் - சூரியன். மரு - வாசனை. 6. கமலை - இலக்குமி. அறைகுவான் - சொல்லும்படி. பொற்புறுந்திரு - அழகுள்ள இலக்குமி. பதி - இடம். 7. தெச நதி - தீர்த்தப் பெயர். மீனத் திங்கள் - மீன மாசம் அதாவது பங்குனி. உத்திரத்தின் - உத்திர நட்சத்திர நாள். சுசி - தூய்மை. வசை - பழி.

பாதகம் புரிச ழக்கர்ப் படிமிசை மடிந்து வீழச்
சோதிசெய் நேமி யாழ்வான் றுணித்தன னெனமுன் சொற்றாய்
சூதினர் நமனு முட்குந் தொழிலினர் தமையவ் வாழி
மோதமர் வென்ற தன்மை மொழிகென முனிசொல் வானால். (8)

ஒப்பரு திகிரி யின்சீ ருரைத்திடற் கடங்கா தேனும்
செப்புவன் றெரிந்த மட்டுஞ் செவ்விதி னினிது கேண்மின்
மைப்புயல் வண்ண னேவன் மறுக்கலா தொளிசெ யாழி
வெப்புறு தொழிலர்க் கெல்லாம் வேந்துருத் தாங்கி நின்று (9)

ஆயிரங் காங்க ளோடு மாடல்வெம் பரிகள் பூண்டு
பாயொளி மணியிற் செய்த பருஞ்சயந் தனங்க டாவி
ஞாயிறு வருதிக் கின்க ணலந்திகழ் கேசி யென்னும்
தூயபூ தரக்கா னண்ணி யாங்குள துட்ட ரெல்லாம் (10)

ஏமபா சத்தாற் கட்டுண் டிறந்திட விரைந்து மோதித்
தூமகே துறையுந் திக்கின் றுலங்கிய ரதத்தைத் தூண்டித்
தீமைசெய் பவரை யாங்குச் சிரமுடல் காங்கள் வேறாய்ப்
பூமியி னுருள வூழிப் புயலெனச் சரம்பெய் தார்த்து (11)

தெக்கிண திசையி னாழித் தீயெனச் செல்ல வாங்கே
உக்கிர வங்க னங்க னுடனடற் புளிந்தன் காலன்
ஒக்குமுத் தாயி கன்பே ருலகினெப் போழ்தும் பொல்லா
அக்கிர மம்பூ ணுக வணியுங்கா லகனென் போர்கள் (12)

---

8. சழக்கர் - பொய்யர். படி - பூமி. நேமி யாழ்வான் - சக்கரத்தாழ்வார். சொற்றாய் - சொன்னாய். நமன் - எமன். உட்கும் - அஞ்சும். 9. திகிரி - சக்கரம். மைப்புயல் - கருமேகம். வேந்துரு - அரச வடிவம். 10. ஆடல் - வெற்றி. பரி - குதிரை. பரும் சயந்தனம் - பெரிய தேர். கடாவி - செலுத்தி. ஞாயிறு வரும் திக்கு - சூரியன் உதிக்கும் கிழக்குத் திசை. பூதரக்கான் - மலைக்கானம். துட்டர் - தீயவர்கள். 11. ஏமபாசம் - எமன் கட்டியிருக்கும் கயிறு. தூமகேதுறையும் திக்கு - அக்னி தேவன் உறையும் தென் கிழக்குத் திசை. ஊழிப் புயல் - கற்பாந்த காலமழை. சரம் - அம்பு. 12. ஐந்து பாதகம் - பஞ்சமா பாதகம். கொலை, களவு, கள், பொய், குருநிந்தை என்னும் ஐந்து தீச்செயல்கள். சாகரம் - சமுத்திரம். சுருதியோர் - மறையோர். திகிரி வேந்தன் - சக்காராயுத அரசு. வாகை - வெற்றி.

ஆகவிவ் வைந்து போரா யைந்துபா தகமும் வந்து
சாகரஞ் சூழு மண்ணிற் சனித்துயர் சுருதி யோரை
நாகவெவ் விடம்போற் சீறி நலிபவர் திகிரி வேந்தன்
வாகைகொ ளுருவ நோக்கி மனஞ்சலி யாது நின்று (13)

இவனொரு துணையு மின்றி யிவ்விட மெய்தி னானென்
றவமதித் திரதம் யானை யச்சுவங் காலாள் சூழப்
புவனிகம் பிக்க வோங்கும் பூதரங் குலுங்கத் தேவர்
செவிசெவி டுறத்தோள் கொட்டிச் சேர்ந்திடி போல வார்த்து (14)

விளங்கொளி விளக்கைக் கண்ட விட்டில்கள் போல நாளும்
களங்கமி றிகிரி வேந்தைக் கள்வர்கள் வளைந்து கொள்ள
உளங்கனன் றுருமே றஞ்ச வூழிவெங் கனலு முட்க
வளங்கொள்கார் முகம்வ ணக்கி மழையெனச் சரம்பொழி தார்த்தான். (15)

சீற்றமோ டார்த்த வாழி யாசன்மேற் சினந்து தீயர்
ஏற்றுவாள் சூலம் வைவே லெழுமழுக் கதைக டாவி
மாற்றரு விசிக மெண்ணின் மழையெனப் பெய்து வெய்ய
கூற்றனு மஞ்ச விண்ணோர் குலைந்திடக் கொடும்போர் செய்தார். (16)

இவ்வகை நேமி வேந்து மிரக்கமி லாக்க ராய
வெவ்வினை யாளர் தாமும் வெகுண்டமர் புரியுங் காலை
அவ்வழி யெழுந்த தூளி யந்தர நதிசே றாக்கி
எவ்வமி லிமையோர் கண்க ளிமைத்திடப் பரந்த தன்றே (17)

சந்தக் கலிவிருத்தம்.

அக்காலையி னோதத்தெழு மாலாலமு மஞ்சத்
தக்கோர்புகழ் விசயம்பெறு தனிநேமிமன் னவனும்
திக்கோதைகள் செலவிற்கொடு திறல்வாளிக டமை
மிக்கோருடல் வெவ்வேறுற விடுத்தானுயிர் குடித்தான். (18)

14. அச்சுவம் - குதிரை. பவனி - உலகு. கம்பிக்க - நடுங்க. பூதரம் - மலை. 15. கனன்று - பொங்கி. உருமேறு - பேரிடி. ஊழிக்கனல் - ஊழிக்காலத்துத்தீ. கார்முகம் - வில். 16. வை - கூர்மை. எழு - இரும்பு உலக்கை. விசிகம் - அம்புகள். கூற்றன் - யமன். 17. அந்தர நதி - ஆகாச கங்கை. எவ்வம் - குறை. இமையோர் - தேவர்கள். 18. ஓதம் - சமுத்திரம். ஆலாலம் - நஞ்சம். ஓதைகள் - கோஷம். வாளி - அம்புகள்.

அடியற்றனர் கரமற்றன ரகடற்றனர் வலிசெய்
முடியற்றனர் புயமற்றனர் முகமற்றனர் முதுகோ
டிடையற்றன ருரமற்றன ரெயிறற்றனர் வேறாய்த்
தொடையற்றனர் புடைசுற்றிய தோலாவலி யவரே. (19)

உருடேர்பரி மதமாவொடு வுளதானைகள் யாவுந்
தரைமீதுடல் சிதையாவெதிர் தானைக்கதி பதியாம்
வரைபோலுயர் திணிதோளர்கண் மாபாதகர் மூன்றே
டிருவோர்களும் வெஞ்சாபமெ டுத்தார்கணை தொடுத்தார். (20)

தொடுவெங்கணை பலவுஞ்சில சுடர்வாளியின் விலகி
உடலங்களி னுருவும்படி யொருவர்க்கொரு நூறும்
அடலங்கியி னம்பேவியவ் வயவோர்சிர மைந்தாஞ்
சுடர்தங்கிய சரத்தால்விழத் தொலைத்தானரி கரத்தான். (21)

அனைவோர்களு மிவ்வாறுட லழியக்கறை பெருகிக்
கனமேவிய செந்நீருறு கடலாமென நிறையச்
சினமேவிய நரிநாய்கொடி திறல்சேர்கழு தியாவும்
இனமோடுவ ளைந்தத்தசை யினிதுண்டுதெ விட்ட. (22)

கண்டானவர்க் கரசாகிய கடியோனய சிரான்
கொண்டானதி கோபங்கொடுங் கூற்றுமென வெதிர்ந்தே
பண்டாலிலை துயில்வோன்கர பதுமத்துறை வோனேர்
திண்டேர்மிசை யயில்வாளிக டெறித்தானகங் கரித்தான். (23)

அக்காலையி னவன்மேற்பல வனலம்புதொ டுத்தே
எக்காலமு மியமன்பதி யிடைவாழ்கென விடுத்துத்
தக்கோர்புகழ் விசயம்பெறு தனிநேமிமன் றென்மேற்
றிக்கேகியங் குளதியரைச் செற்றான்செய முற்றான். (24)

---

19. அகடு - வயிறு. புயம் - தோள். இடை - இடுப்பு. உரம் - மார்பு. எயிறு - பல். தோலா - தோல்வி யடையாத. 20. உருள் - சக்கரம். மதமா - மத யானைகள். தானைகள் - சேனைகள். வரை - மலை. சாபம் - வில். கணை - அம்பு. 21. சுடர்வாளி - பிரகாசம் பொருந்திய அம்புகள். அங்கியினம்பு - ஆக்கினேயாஸ்திரம். வயவோர் - வெற்றியுடைய அசுரர். அரிகரத்தான் - திருமாலின் திருக்கையில் இருப்பவன். 22. கறை - இரத்தம். கொடி - காக்கை. தசை - உடல் மாமிசம். 23. கரபதுமம் - தாமரை மலர் போன்ற கை. அயில் வாளி - கூரிய பாணம். அகங்கரித்தான் - அகங்காரம் கொண்டான். 24. அனலம்பு - ஆக்கினேயாஸ்திரம். இயமன் பதி - யமபுரம். நேமிமன் - சக்கராயுதராஜா. செற்றான் - அழித்தான்.

வேகத்தொடு குடபாலுற வவன்வெற்பென வுயருந்
தேகத்தொடு திரிவோன்மிகு தீயன்கொலை நிருதன்
நாகத்திரள் குகையென்றுறை நாசித்தொளை யுடையோன்
வாகைத்திறல் பெறுவெஞ்சின வனகர்த்தனென் பவனே. (25)

### கலிநிலைத்துறை.

தேவ ரேமுதற் றெறுதொழிற் றயித்தியர் மனிதர்
யாவ ராலும்வெம் போரிடை யடருலைந் தாவி
வீவி லாவிறன் மிகுமொரு காதலன் வேண்டித்
தேவி பாகனை யெணித்தவஞ் செய்தன னெடுநாள். (26)

கங்கை யஞ்சடை யரன்றனைக் கண்ணெதிர் காணான்
அங்க ழன்றுதன் றலையறுத் தாகுதி யாகப்
பொங்கு மங்கியின் விடுவனென் றேதிகொள் போழ்தின்
மங்கை பங்கின னிரங்கிமுன் வந்தெதிர் தடுத்தே (27)

விருப்ப முற்றவன் விளம்பிய வரமளித் தேகப்
பொருப்ப திர்ந்திட முழங்கியப் பொங்குகா னண்ணி
நெருப்பெ னச்சின மேற்கொடு நேரறச் செருக்கோ
டிருப்ப வன்றிறற் றிகிரிவேந் தனையெதிர் கண்டான். (28)

கண்டி வன்பெருங் கருதல னெனமனங் கனன்று
துண்ட வெண்பிறை யெயிற்றின ரெண்ணிலர் சூழத்
தண்டு வெங்கொலை யயிலடற் றனுமுத லேந்தி
விண்ட லத்தவர் நடுங்கிட விரைந்துவந் தெதிர்த்தான். (29)

---

25. குடபால் - மேற்குத்திசை. வெற்பு - மலை. நாகத்திரள் - பாம்புக் கூட்டம். நாசித்தொளை - மூக்குத் துவாரம். வாகை - வெற்றி. 26. தெறு தொழில் - அழிக்கும் தொழில். தயித்தியர் - அரக்கர் வகையினர். ஆவி - உயிர். வீவு - அழிதல். காதலன் - பிள்ளை. தேவிபாகன் - சிவன். 27. அழன்று - கோபித்து. ஆகுதி - யாகத்தீயில் இடும் அவிசு. அங்கி - நெருப்பு. எதி - ஆயுதம். 28. பொருப்பு - மலை. செருக்கு - கருவம். திகிரி - சக்ராயுத அரசு. 29. கருதலன் - பகைவன். பிறையெயிற்றினர் - பிறை போன்ற பல்லை உடையவர்கள். தண்டு - கதை. அயில் - வேல். அடல்தனு - வெற்றிவில். விண்டலத்தவர் - தேவர்.

அட்ட நாகமுங் குலேந்திட வநந்தனும் பதற
வட்ட வேலேகள் சுவறநீண் மலேகளுங் குலுங்கத்
துட்ட ரானவர் சூலம்வே றோமா மெறிந்து
கிட்டி ''ார்த்துவஞ் சினமொழி கிளத்திமுன் னேர்ந்தார். (30)

நேர்த்த காலேயி னேமிமன் னெடுந்தனு நாணிற்
சேர்த்து வாளிகள் சிற்சில சிந்திட முகில்போல்
ஆர்த்த வாய்கைகான் முடிகளு மாரையுஞ் சினந்து
பார்த்த கண்களும் பிளப்புறப் படிமிசை யுருண்டார். (31)

சென்ற சேனேகளி றந்தமை தெரிந்தட னிருதன்
கன்றி நீடிறற் சுவாலபா தனேக்கடி தேவக்
குன்று போலவிற் குனித்தவ னெதிர்வாத் திகிரி
மன்ற னணேயின் வடவனல் சினமுற வெதிர்ந்தே (32)

வட்ட மாகவில் வளேத்தெணி லாசுகம் வழங்கிக்
கிட்டி மேல்வரு மரக்கன்மெய் கீழ்விழப் பிளந்து
துட்ட னும்வன கர்த்தன்மேற் றொடர்ந்துவெம் பகழி
விட்டு வேறெதி ரில்லவன் வெகுண்டுநின் றிடவே (33)

கூற்றெ னக்கொடுங் கோளரி யேறென வூழிக்
காற்றெ னக்கட னஞ்செனக் கானகர்த் தன்றான்
சீற்ற மிக்கெழ வனலவன் விடுசிலீ முகங்கள்
மாற்றி வெங்கணே தூற்றினன் றிகிரிமன் னவன்மேல். (34)

சுடர்வி ளங்கிய சுதரிச னப்பெயர்த் தோன்றல்
கடிய வெஞ்சின மூளவக் காதக னுடலம்
படியின் வீற்றுவீற் றுவிழப் பகழிகள் விடுத்து
முடுவல் சம்புகம் பறவைமொய்த் துணவிருந் தளித்தே (35)

30. அட்டநாகம் - எட்டுத்திசையிலும் உலகினேத் தாங்கும் எட்டு மகாநாகங்கள். வேலே - சமுத்திரம். சுவற - நீர்வற்ற. சூலம், வேல், தோமரம் - இவை படைக்கலம். 31. தனு - வில். வாளிகள் - அம்புகள். முகில் - மேகம். படி - பூமி. 32. கன்றி - கோபித்து. திறல் - வலிமை. கடிது - விரைவு. திகிரிமன் - சக்கர வேந்தன். வடவனல் - வடவைத் தீ. 33. ஆசுகம் - அம்பு. பகழி - அம்பு. 34. கூற்று - இயமன். கோள் - கொலேத் தொழில். அரியேறு - ஆண் சிங்கம். சீற்றம் - கோபம். சிலீமுகம் - அம்பு. 35. காதகன் - தீயவன். பகழி - அம்பு. முடுவல் - நாய். சம்புகம் - நரி.

வெகுளி மீக்கொடு வடதிசை விரைவின்வந் தணுக
அவனி யோங்கல்போல் விளங்கிய வாக்கையன் சிறந்த
தவமு ஞாற்றிநான் முகனிடைப் பெறுவரத் தருக்காற்
புவன மேங்குறத் தீமைகள் புரியருந் திறலோன். (36)

அறுசீர் விருத்தம்.

துண்டவெண் பிறைப்பற் பேழ்வாய்ச் சுடரழற் சுழல்கண் ணான்பே
றுண்டவ னென்னு நாம முடையவன் யவனன் றீநேர்
மண்டுவெஞ் சினக்காம் போசன் வலிபெறு மிலேச்ச ஞாதி
திண்டிற லாக்கர்தங்க டிராட்கதி பதியாய் வாழ்வோன். (37)

சக்கர வாசனாழிச் சண்டமா ருதம்போற் சீறி
உக்கிர முடன்போர் செய்ய வுற்றன னெனவு ணர்ந்தே
அக்கணந் தனது தானை யனைத்தையுந் திரட்டி யட்ட
திக்குறு மவரும் வானிற் றேவருந் திகைப்ப நின்றான். (38)

வன்றிறற் பெரிய வாழி மன்விரைந் தணுகி முன்னர்ச்
சென்றெணி லாக்கர் சூழச் சிலம்பெனக் கருமெய் தோன்ற
நின்றமை தெரிந்து நேரி னெடும்படைக் குழாங்க டோன்றத்
தன்றிரு வுளத்தி லெண்ணச் சனித்தன வளவி லானை. (39)

சனித்தசே னையும ரக்கர் தம்பெரும் படையுங் கூடிச்
சினத்துவெங் கொடும்போர் செய்து திகிரிமன் றனது தானை
முனைத்தலை தாழ்த னோக்கி முனிந்துகண் சிவந்தி யானை
இனத்தினுட் சினம டங்க லேறென விரைந்து பாய்ந்தே (40)

அத்திர மெய்து வாள்கொண் டறுபடத் துமித்து வேலாற்
குத்திவெங் கதையிற் றாக்கிக் கொடுஞ்சம ரியற்றுங் காலை
சுத்தமெய்த் திகிரி வேந்தன் சுடுசினத் தொருவன் றோன்றி
எத்தலத் தவரு மஞ்ச விடியென வுரறி முன்பே (41)

36. ஓங்கல் - மலை. ஆக்கையன் - உடலை யுடையவன். தருக்கால் - கருவத்தினால். புவனம் - பூமி. 37. பேழ்வாய் - பிளந்த வாய். அழல் - தீ. திண் திறல் - மிக்க வலிமை. 38. சண்டமாருதம் - கடுங் காற்று. தானை - சேனை. 39. சிலம்பு - மலை. கரு மெய் - கரிய உடம்பு. 40. முனைத்தலை - போர்க்களத்தில். மடங்கல் - சிங்கம். 41. அத்திரம் - அம்புகள். துமித்து - துண்டித்து. சமர் - போர். உரறி - ஆரவாரித்து.

சூலம்வாள் பிண்டி பாலந் தோமர முசலம் வல்வில்
காலவேன் முதல வாய வடற்படை கையி னேந்தி
ஆலமா மெனவு மூழி யாழ லெனவுஞ் சீறிப்
பாலலோ சனனை நேராம் பாவக னென்னும் பேரான் (42)

வந்தெதிர் நிற்ப நோக்கி மால்காத் தமர்வோ னிக்த
வெந்திற னிருதர் தம்மை வீய்த்திவண் வாவென் றேத
அந்தக னடுங்க விற்கொண் டாசுகம் பொழிந்து தீயோர்
சிந்தையுட் டிகைப்புக் கொள்ளச் செலுத்தினன் மோக வாளி. (43)

செலுத்திய வாளி தன்னாற் றிண்டிற லரக்கர் யாரும்
நலத்தகைப் படைகள் யாவு நழுவவிட் டயர்ந்து வீழ
நிலத்தின்முன் சோர்ந்து வீழ்ந்த நேமிமன் சேனை யெல்லாம்
கலித்தெழத் தெளிவித் தானப் பாவகன் கருணை யாலே. (44)

பாவகன் றன்னா லந்தப் படைதெளிந் தெழுத னோக்கித்
தீவிழி யரக்கர் சேனைத் திரட்கதி பதிதன் றானை
யாவுமங் கயர்ச்சி நீங்கி யதிர்த்தெழு மாறு செய்தான்
கோவமுற் றிருவர் சேனைக் குழுவும்வெங் கொடும்போர் செய்ய. (45)

கூற்றென வெகுளி பொங்கப் பாவகன் குனிவி லேந்தி
மாற்றரு விசய மேவுங் கிரவுஞ்ச வாளி யேவி
ஏற்றவல் லரக்கர் தானை யெல்லாமு மிரத்த வாரிச்
சேற்றிடைப் பலகூ றாகிச் சிதைவுறச் சிந்துங் காலை (46)

நிருதர்தஞ் சேனை நாத னெருப்பெழ முனிந்து சீறித்
துரிதமுற் றைந்து பைசா சகமெனுஞ் சுடர்செய் வாளி
ஒருதொடை யாக வுந்த வொன்றொரு கோடி யாகிப்
பரிதிமன் றந்த சீர்சால் பாவகன் கனன்று நின்று (47)

---

42. முசலம் - உலக்கை. ஆலம் - நஞ்சு. பாலலோசனன் - நெற்றியிற் கண்களையுடைய சிவன். 43. மால்காத்து அமர்வோன் - சக்ராயுத வேந்தன். வீய்த்து - அழித்து. அந்தகன் - யமன். ஆசுகம் - அம்பு. மோகவாளி - மோகனாஸ்திரம். 44. படைகள் - ஆயுதங்கள். கலித்து - ஆரவாரித்து. 45. அயர்ச்சி - இளைப்பு. வெகுளி - கோபம். இரத்தவாரி - இரத்த வெள்ளம். 47. துரிதம் - விரைவு. வாளி - அம்பு.

கோடறத் துணைந்தெய் திட்ட கிரவுஞ்ச வாளி யோடுங்
கூடிவல் லரக்கர் தானைக் குழுவையே யழியக் கொல்ல
நாடியற் புதமீ தென்று நலமில்பே றுண்ட வன்முன்
ஏடவிழ் கமலப் புத்தே ளிடம்பெறுஞ் சூலந் தாங்கி (48)

எட்டெனுந் திசையு மேலு மெறிகட னிலமு மஞ்ச
விட்டனன் சீற்றத் தோடு விடுதலு மூழிக் காலத்
தெட்டியண் டத்தை முட்டி யெழுங்கன லெனவச் சூலம்
கிட்டிவந் தடுக்க நாளுங் கேடில்பா வகன்சி னந்தே (49)

ஆசுகா சுகத்தை யேவ வதுகணத் தெழுந்து தீயன்
வீசிய சூலத் தோடு மவனையும் விரைவின் வாரி
மாசறு சேட வெற்பை வலஞ்செய்து விசும்பி னூறி
யோசனைக் கப்பா லெய்தித் தரைமிசை யெறிந்த தன்றே. (50)

அடலுறுங் கொடிய பேறுண் டவனவ னியின்கண் வீழா
உடல்சிதைந் தாவி கூற்றி னுலகுற விசய மேவும்
மிடல்கெழு திகிரி வேந்தை விண்ணவர் குழாங்கள் வாழ்த்திக்
கடிமலர் மாரி பெய்து கைகுவித் திறைஞ்சி நிற்ப (51)

வேதியர்க் கிடுக்கண் செய்யும் வெய்யவர் தம்மை யெல்லாம்
மோதிமெய் பிளந்தெ ருக்கி மொய்ம்புடைத் தனது தானை
தீதுசிற் றளவு மின்றித் தன்னொடு சேர வொன்றாய்ச்
சீதரன் கரத்தை நண்ணித் திகழ்ந்தது திகிரி மன்னோ. (52)

ஒப்பிலிச் சரிதை யெல்லா முயர்வுறு சூத னென்னும்
முப்பகை துறந்த ஞான முனிவர னமுத மொப்பச்
செப்பின னிதெலா மேன்மை திகழ்திரு வாக நாமத்
தப்பறு புராணந் தன்னிற் சாற்றிடுந் தெளிய மன்னோ. (53)

48. பரிதி மன் - சக்கர வேந்தன். துனைந்து - விரைந்து. ஏடு - மலர் இதழ். கமலப் புத்தேள் - தாமரைப் பூவில் அமர்ந்த தேவன் ஆகிய பிரமன். 49. ஆசுகாசுகம் - வாயவ்வியாஸ்திரம். 50. சேட வெற்பு - சேஷகிரி. 51. அவனி - பூமி. கூற்றினுலகு - யமபுரம். மிடல் - வலிமை. 52. எருக்கி - அழித்து. மொய்ம்பு - வலிமை. சீதரன் - திருமால். 53. முப்பகை - காமம், வெகுளி, மயக்கம் என்பவை. தப்பு - தவறு.

சக்கர வேந்தன் வெற்றி உரைத்த அத்தியாயம் முற்றிற்று.

## 31. இராமாநுசன் பிரார்த்தனைப்படி சீநிவாசன் சங்கு சக்கரம் தரித்த அத்தியாயம்.

### கலிவிருத்தம்.

வேங்கட மலைமிசை விளங்கு மாதவன்
ஓங்கிய புகழுமு தொப்ப வின்னமுந்
தேங்கிய வருண்முனி செப்பு கென்னவே
பாங்குற முனிவரன் பகர்தன் மேயினன். (1)

சென்னிய னருளிய செம்ம றெண்டைமான்
என்னுமன் விசயம தெய்து மாறுமுன்
தன்னெழிற் றிகிரியுஞ் சங்குங் கைக்கொடுத்
தன்னவன் பெறவர மளித்த வண்ணமே. (2)

தேன்றரு துளவினன் சிலதி னங்கடி
கான்றுறு திகிரியுங் கதிர்செய் சங்கமுந்
தோன்றிய கனைகடல் சூழு மண்ணுளோர்
ஊன்றிகழ் விழிகளுக் கொளித்து நிற்பவே (3)

கண்டவ ரவரவர் கருத்துட் டோன்றிய
கொண்டர னென்னவுங் குமர னென்னவும்
வண்டுள வணிபுய மாய னென்னவும்
விண்டுபல் சமயவா தியர்வெவ் வேறெணி (4)

தங்கடங் கட்கியை தலைவ னென்னவே
பொங்கியுள் ளிகல்வரப் போழ்து நன்னெறி
தங்கிய முதல்யுகந் தனில நந்தனுய்ப்
பங்கமி லிரண்டெனப் பகரு கந்தனில் (5)

---

1. மாதவன் - இலக்குமி நாயகன். 2. சென்னியன் - சோழஅரசன். செம்மல் - பெரியோன். மன் - அரசன். திகிரி - சக்கரம். 3. துளவினன் - துளசி மாலையுடையான். கடி - விளக்கம். ஊன் திகழ் விழிகள் - ஊனக் கண்கள். 4. அரன் - சிவன். குமரன் - சுப்பிரமணியன். துளவு - துளசி. மாயன் - திருமால். சமயவாதியர் - மதவாதிகள். 5. இகல்வர் - பகைமை கொள்ளுவார். அநந்தன் - ஆதிசேஷன். பங்கம் - குறை.

இலக்குவ னுயிரு நிலத்திற் றீயரைக்
கலக்கியோர் மூன்றெனக் கருது கத்தினின்
அலப்படை யிராமனு யணுகி நான்கெனச்
சொலப்படுங் கலியினிற் றாய்மை சேருமா (6)

அறுசீர் விருத்தம்.

ஏதநீங் கியவி ராமா நுசனென வெவரு மேத்த
ஆதிசே டன்றான் பூத புரிதனி லவத ரித்துப்
பாததா மரையொன் றுலிப் படியளந் தவன்பூ மாதின்
நாதநா ரணனே மேலா நவில்பரம் பொருளா மென்றும் (7)

மருண்மிகு மாயா வாத மறத்தபா டண்ட மேனைத்
தாமில்புன் புறம தங்க ளாம்பெருந் தமம்போந் தோடப்
பரிதியி னெருதா னுகிப் பழமறை யோடு சீர்சால்
குருகையின் வருமெய்ஞ் ஞானங் குவிதமிழ் வேத மோங்க (8)

கலைமகள் சிரமேற் கொள்ளக் கவின்பெறு பாடி யஞ்செய்
துலைவுறீஇப் பொய்ம்மை பாற வொண்மறை யொழுக்கம் வீற
நிலமிசைப் பூதூர் வந்த நெடுந்தகை யெதிகள் வேந்தென்
றுலகுசொல் லுரவோன் மேனு ளுரகவெற் பணுகி மேவி (9)

ஆங்குள குதர்க்க வாத ரடங்குற வென்று நீண்ட
வேங்கடத் தானை மிக்க விருப்பொடு வாழ்த்தி நின்றே
தேங்கமழ் துளவ மாலைச் செல்வனே யடிக ளிந்தத்
தீங்குறு கலிகா லத்திற் றிகழ்சுடர்த் திகிரி சங்கை (10)

---

6. அலப்படை - கலப்பை ஆயுதம். கலி - கலியுகம். 7. ஏதம் - குற்றம். பூதபுரி - ஸ்ரீபெரும்பூதூர். படி - பூமி. பூமாது - இலக்குமி. பரம்பொருள் - முதற் கடவுள். 8. மருள் - மயக்கம். மாயாவாதம் - அத்துவைத மதம். மறத்த - கொடுமையுடைய. பாடண்ட - (பாஷண்டம்) சமயவாத விபரீதம். தமம் - இருள். பரிதி - சூரியன். குருகை - திருக்குருகூர் என்ற ஆழ்வார் திருநகரி. மெய்ஞ்ஞானம் குவிதமிழ்வேதம் - திருவாய்மொழி. 9. கலை மகள் - சரசுவதி. பாடியம் - ஸ்ரீபாஷியம். பாற - ஓட. மறையொழுக்கம் - வைதிக மார்க்கம். வீற - மேம்பட. எதிகள் வேந்து - யதிராசர் என்ற இராமாநுஜ முனிவரர். உரவோன் - அறிஞன். உரக வெற்பு - சேஷகிரி. 10. குதர்க்கவாதர் - வீண்வாதம் செய்வோர். தேம் - மணம். துளவ மாலை - துளசிமாலை.

ஊன்றிகழ் விழிக்குத் தோற்று திவ்வண மொளித்தான் முன்னீர்
தான்சுலா மண்ணின் மேலோர் தமந்திரண் மனத்த ராகி
ஞான்றுநன் குணர்கி லாது நலிவர்க ளாகை யாலே
ஆன்றபே ருலகில் யாரு மறிவுற வளையோ டாழி (11)

தாமரைக் கரத்திற் றேன்றத் தரிசனை தருதல் வேண்டும்
மாமறைப் பொருளே யென்று வழங்கலுங் கருணை கூர்ந்து
நேமிவெண் சங்கி னேடு நேரற வுயர்ந்த சீர்சால்
சாமள வடிவன் யார்க்குந் தரிசனை தருவா னன்றே. (12)

எனவுரைத் துயருஞ் சூத னின்னமும் புகல்வா னந்தப்
பனகபூ தரத்தின் வாழும் பரன்றிரு விளையாட் டெல்லாம்
தனிமறைப் புருட னுலுந் தாமரை யோன்ற னுலுங்
கனிவுற நெடிது காலங் கழறினு முலவா தன்றே. (13)

ஈசனை மறவா தேத்து மிருந்தவச் சூத னென்னும்
தேசுறு முனிவன் றேவ ரமுதெனத் தெவிட்டா வண்ணம்
பேசின னிவற்றை யெல்லாம் பேருறு வராக மென்னும்
மாசறு புராணந் தன்னின் வளம்பெற வழங்கு மாதோ. (14)

இராமாநுசன் பிரார்த்தனைப்படி சீநிவாசன் சங்கு சக்கரம் தரித்த அத்தியாயம் முற்றிற்று.

## 32. வைணவச் சிறப்பு உரைத்த அத்தியாயம்.

### அறுசீர் விருத்தம்.

ஏதமில் சௌன காதி யிருடிகள் மறைநூ றோர்ந்த
மாதவச் சூதன் செய்ய வாண்முக மினிதி னேக்கித்
தீதறு வைண வத்தின் சிறப்பெமக் குரைத்தி யென்னக்
காதல்கொண் டகம கிழ்ந்தே கழறுவ தாயி னுனல். (1)

---

11. முன்னீர் - கடல். தமம் - இருள். வளை - சங்கு. ஆழி - சக்கரம். 12. கரம் - கை. நேமி - சக்கரம். சாமளம் - கருமை. 13. பனகபூதரம் - சேஷகிரி. மறைப்புருடன் - வேதபுருஷன். தாமரையோன் - பிரமன். கழறினும் - கூறினுலும். உதவாது - முடியாது. தேசு - ஒளி. 1. இருடிகள் - முனிவர். வைணவம் - வைஷ்ணவ சமயம். கழறுவது - சொல்லுவது.

விண்டுசம் பந்த ரான வைணவர் வேங்க டத்தான்
முண்டக மலர்க்க ணேக்கங் கருவிலே முறையிற் பெற்றுப்
பண்டைநூ லெவையுந் தேர்ந்து பழுதறு குணமே மேலாய்க்
கொண்டுவீட் டுலகி லிச்சை கூடிடக் குருமே லன்பாய் (2)

இருபுயந் தனிற்சங் காழி யிலச்சினை யிலங்கப் பெற்றுத்
திருவுரத் துவாத சோர்த்துவ புண்டரந் திகழச் சாத்தி
மருவுறுந் துளவத் தோடு மரைமணி மாலை பூண்டே
அருணல வாசா ரஞ்சீ ரனுட்டான முடையோ ராகி (3)

குருவரு ளாலே செய்யாள் கொழுநனே யெவைக்கு மேலாய்
வருபரப் பிரம மென்றே மனந்தெளிந் தவன்றன் செய்ய
திருவடி களிலே தங்கள் பரமெலாஞ் சேரச் சேர்த்தே
அரியநற் றவங்கட் கெல்லா மதிகமென் றறையப் பட்டு (4)

பேர்பெறும் பரநி யாச மெனும்பிர பத்தி யைச்செய்
தேர்பெறும் பணிவெற் பின்வா ழீசனற் கிருபை யாலே
பார்புகழ் புண்ணி யஞ்செய் பாவம்போய்த் தூய ராகிச்
சார்பெறுங் காண மென்னச் சாற்றிய மூன்றி னூலும் (5)

## எழுசீர் விருத்தம்

மற்றுள தேவர் தம்மையு மவர்தம்
மந்திரஞ் சாதனங் களையும்
உற்றிடு மிதர விடயமோ டயலா
வுரைசெயும் பயன்களு மொருங்கே

---

2. விண்டு - விஷ்ணு. முண்டகம் - தாமரை. கரு - கர்ப்பம். பழுது - குற்றம். வீட்டுலகு - மோக்ஷ லோகம். குரு - ஆசாரியன். 3. புயம் - தோள்கள். ஆழி - சக்கரம். இலச்சினை - முத்திரைக் குறி. துவாத சோர்த்துவ புண்டரம் - பன்னிரு திருமண் காப்பு. துளவம் - துளசி. மரை மணி - தாமரை மணிகள். ஆசாரம் - ஒழுக்கம். அனுட்டானம் - கடைப் பிடி. 4. செய்யாள் - திருமகள். கொழுநன் - நாயகன் ஆகிய திருமால். பரம் - பாரம். 5. பரநியாசம் - பிரபத்தி என்னும் சரணாகதி மார்க்கம். பணிவெற்பு - சேஷகிரி. தூயர் - பரிசுத்தர். கரணம் மூன்று - மனம், வாக்கு, காயம் என்பன. 6. சாதனம் - அடைதற்குரிய சார்புகள். இதர விஷயம் - வேறு பொருள்.

பற்றற விடுத்துத் தேசிக னுரைத்த
பண்டைய மூலமந் திரத்தைக்
கற்றுநா டோறு மதன்பொரு டன்னைக்
கருதிமா ணலம்பெறக் குறித்து (6)

தேகபந் துக்கண் மேற்செலும் பரிவைச்
சிதைத்துவேற் றுப்பயன் வேட்கா
தோகைகொண் டெந்த விதத்தினு முறுநாண்
மட்டுநா ராயண னுகள
கோகன கத்தா டம்மையே வாழ்த்தி
யவன்குணங் களைப்பயின் றுவப்ப
ஏகசிந் தையரா யுல்கினைத் திருத்தி
யென்றுமே பாரதந் திரராய் (7)

அச்சுத னடிக்கே தொண்டுசெய் திறத்தாங்
கவனுடை யடியர்தம் மேலும்
இச்சைகொண் டியற்றி யின்பதுன் பங்கள்
சமமென விதயத்தி னெண்ணி
அச்சமற் றுயரும் பகவனற் பாக
வதர்குரு வாமிவ ரிடத்தில்
நிச்சய பத்தி பிறந்தெழி லாசா
னேமனந் தனைமனங் கொண்டே (8)

அநந்தபூ தரத்தான் வறிதுசெய் கருணை
யஃதொன்று நோக்கிநன் னிலையின்
கனந்திகழ் கின்ற வைணவர் கட்கே
காணியா முயர்பத முளது

---

தேசிகன் - ஆசாரியன். மூலமந்திரம் - திரு அஷ்டாக்ஷரம் ஆகிய "ஓம் நமோ நாராயணாய" என்பது. அதன் பொருள் - அதன் அர்த்தம் ஆகிய நவவித சம்பந்தம். 7. தேக பந்துக்கள் - உடல் சுற்றத்தார். பரிவு - அன்பு. வேட்காது - விரும்பாது. ஓகை - உவகை. உகளம் - இரண்டு. கோகனகத்தாள் - தாமரை மலர் போன்ற திருவடிகள். ஏக சிந்தையர் - ஓர்மை உள்ளம் பெற்றவர். பாரதந்திரர் - பகவானுக்கு வசப்பட்டவர். 8. அச்சுதன் - திருமால். சமம் - ஒப்பு. இதயம் - மனசு. நேமனம் - கட்டளைகள். 9. அனந்த பூதரத்தான் - சேஷகிரி உடையான் ஆகிய கடவுள். கனம் - பெருமை. காணி - உரிமை. உயர்பதம் - பரமபதம்.

மனந்தெளி வில்லா விழுதையர்க் கஃது
வாய்த்திடா தெனமறை யாலுஞ்
சினந்தவி ருரவோ ராலுநா னறிந்த
சீர்கெழு வைணவ மகிமை. (9)

சுருக்கமீ திசைத்தே னுமக்கெனச் சூதன்
சொற்றன னிவ்வெலா முயர்ந்த
திருக்கிளர் வராக மெனும்புரா ணத்துட்
சேத்திர காண்டத்தி னூடே
உரைத்திடு மிதனை நன்றெனக் கேட்போ
ருவப்புற வுலகின்வாழ்ந் ததற்பின்
மருக்கமழ் துளவ மாயன்வாழ் பதியின்
மருவிவீற் றிருப்பர்கண் மாதோ. (10)

வைணவச் சிறப்பு உரைத்த அத்தியாயம் முற்றிற்று.

## 33. தத்துவம் கன்மம் ஞானம் பிரபத்தி மார்க்கம் உரைத்த அத்தியாயம்.

அறுசீர் விருத்தம்.

தத்துவப் பொருளி னோடு தழைத்திடுங் கன்ம ஞானம்
பத்திவை ராகப் பல்சீர்ப் பிரபத்தி மார்க்கந் தூய
சித்தமுண் மகிழ்ந்து சூதன் சௌனகா தியர்செ விக்குப்
புத்தமு துகுத்தா லென்னப் புகலுவ தாயி னானே. (1)

மலரவன் கற்பாந் தத்தின் மறையவ னரனிந் திராதி
புலவர்கண் முதலே ழென்னப் புகலுறுந் தோற்றத் தோடு
நிலமயந் தனினு மந்த நீரன றனினு மத்தீ
உலவுவா யுவினும் வாயு வுயருறு மாகா யத்தும் (2)

இழுதையர் - கீழ் மக்கள். சினம் - கோபம். உரவோர் - ஞானிகள். 10. இவ்வெலாம் - இவைகள் யாவும். திருக்கிளர் - சிறப்பு மிக்க. மரு - மணம். 1. தத்துவப் பொருள் - மெய்ம்மை ஆகிய பொருள். கன்மம் - வினை. வைராகம் - ஆசையின்மை. பிரபத்தி - சரணாகதி. புத்தமுது - புதிய அமிர்தம். உகுத்தாலென்ன - சொரிந்தாற் போல. 2. மலரவன் கற்பாந்தம் - பிரம கல்பத்தின் முடிவு. மறையவன் - பிரமன். அரன் - சிவன். புலவர் - தேவர்கள். எழுவகைத் தோற்றமாவது - தேவர், மக்கள், விலங்கு, ஊர்வன, பறவை, நீர்வாழ்வன, தாவரம். அயம் - நீர். அனல் - நெருப்பு.

இயம்பரு மவ்வா காய மிந்தியந் தனினு மந்த
நயம்பெறு மிந்தி யந்தா னவிறன் மாத்திரையி டத்தும்
சயங்கொடன் மாத்திரை பூதந் தன்னினு மந்தப் பூதம்
வியம்பெறு மகத்தி னும்மம் மகத்துமவ் வியத்தத் துற்றும் (3)

கலிநிலைத்துறை.

அவ்வி யத்தமக் காத்தினு மந்தவக் காந்தான்
செவ்வி யுற்றிடு தமசினுந் தமசுசீர் சிறந்த
எவ்வ மற்றுயர் பான்றன திடையெய்தி யொடுங்கும்
இவ்வ கைப்படு தூலசூக் குமங்களெல் லாமும். (4)

அறுசீர் விருத்தம்.

தன்னிடை யடக்கி நின்ற தனிப்பா னொருவன் றானே
இன்னலற் றழியா தென்று மிருப்பவ னவனுண் ணின்று
பின்னுமம் முறையே வந்து பிறக்குந்தத் துவங்க ளெல்லாம்
அன்னவ னுரோமகூபங் களினதி சயமாய்த் தோன்றும். (5)

எண்ணருங் கோடி யண்டங் களினிசை வுறவி ருக்கும்
தண்ணறுங் கமலத் துற்ற சதுமுக னான்விண் வேந்தன்
பண்ணவர் முதல வாய பலபல வுயிரி னுள்ளும்
நண்ணியெப் பொருளுந் தானய் நவையற விளங்கித் தோன்றும். (6)

அவனையே யேகோ நாரா யணனென்று மாதி யென்றும்
உவமையில் பிரம மென்று மொளிர்பாஞ் சோதி யென்றும்
தவலரு விண்டு வென்றுந் தனிப்பாந் தாம னென்றும்
நவிலரும் பாம னென்று நாயக னாதை னென்றும் (7)

---

3. இந்தியம் - இந்திரியம். தன்மாத்திரை - பூதகுணம். வியம் - பெருமை. 4. அக்காம் - அக்ஷாம் - இது பிரகிருதியினது மூன்று பேதங்களுள் ஒன்று. எவ்வம் - குறைவு. தமசு - அவிபக்த தமசு, விபக்த தமசு என இரண்டு வகையான பிரகிருதி என்பர். தூலம் - பருப்பொருள். சூக்குமம் - நுண்பொருள். 5. இன்னல் - இடர். உரோமகூபம் - மயிர்க் கால்கள். 6. சதுமுகன் - பிரமன். அரன் - சிவன். விண்வேந்தன் - இந்திரன். பண்ணவர் - தேவர். நவை - குற்றம். 7. உவமை - ஒப்பு. தவல் - தப்பு. விண்டு - விஷ்ணு. பாந்தாமன் - பரமபதநாதன்.

காரண னென்றுஞ் செய்ய கமலைதன் மகிழ்ந னென்றும்
ஆரண முதல்வ னென்று மந்தரி யாமி யென்றும்
நாரண னென்று மேலா நலமுறு மீச னென்றும்
பூரணன் பகவ னென்றும் புகல்பரா பரனு மென்றும் (8)

### எழுசீர் விருத்தம்.

நவிலரும் பெருமை நண்ணிய நாரா
யணனுயர் நலங்கொள்வை குந்தத்
துவமையி றிருமான் பூமக ணீளை
யெனவுரைத் திடுமனை வியரோ
டவிருறுஞ் சுடிகை யரவிறை யுவண
னடல்கெழு விச்சுவ சேனன்
இவர்முத லாய நித்தியர் முத்த
ரிணையடி பரவவீற் றிருந்தும் (9)

சிந்தையி னுவப்புற் றீன்றவை யனுக்குச்
சேய்மைய தேசங்கட் சென்ற
மைந்தர்கண் மீது மனங்கவல் வதுபோல்
வழங்குமண் டங்களி னுள்ள
நந்தலின் மன்னு முயிர்களுக் கிரங்கி
நலந்தரத் திருவுளங் கொண்டு
வந்தனை புரியு மணுக்கர்தந் துயரால்
வருந்தியாங் கரற்றுறு மொலிக்கு (10)

---

8. கமலை - தாமரை மலரிலுள்ள இலக்குமி. மகிழ்நன் - நாயகன். ஆரணம் - வேதம். அந்தர்யாமி - உயிர்களுக்கு உயிராயுள்ளோன். 9. வைகுந்தம் - பரமபதம். திருமான், பூமகள், நீளை :—இலக்குமி, பூமிதேவி, நீளாதேவி இம் மூவரும் முறையே தயை, க்ஷமை, ஆநந்தம் ஆகிய சக்தித் திரயங்கள் என்பர். சுடிகை - படம். அரவிறை - ஆதிசேடன். உவணன் - கருடன். விச்சுவ சேனன் - சேனை முதலியார். நித்தியர் - பரமபதத்திலுள்ள நித்திய சூரிகள். முத்தர் - மோக்ஷம் பெற்ற ஆன்மாக்கள். 10. உவப்பு - மகிழ்ச்சி. ஐயன் - தந்தை. சேய்மை - தூரம். கவல்வது - கவலைப் படுவது. நந்தல் - குறைவு. வந்தனை - வணக்கம். அணுக்கர் - நெருங்கியிருப்போர். அரற்றுறும் - புலம்புகிற.

அஞ்செவி கொடுத்தொண் கமலைப்பூ நீளை
யநந்தனு தியர்கடற் சூழ
எஞ்சலி திருப்பாற் சிந்துவிற் சயன
மெய்திநோக் கினதிலு முலகின்
விஞ்சிய சீவ கோடிக டிருந்தா
விதங்கணுற் றெழில்பெற விளங்கும்
கஞ்சநீள் விழியின் கருணையே மலியுங்
கரியவ னுகுமப் பரமன் (11)

அறுசீர் விருத்தம்.

இருந்துங் கிடந்தும் பார்த்ததிற்கா ரியந்தாழ் வுறுமென் றிதயத்திற்
பொருந்த நினைந்தே யினிநின்று புவன சீவ ராசியெலாந்
திருந்தும் படிசெய் வோமெனவே சிந்தை கருதி யாவர்களும்
தெரிந்து தொழுது விரும்பினவை சிக்கென் றடையும் படியாக (12)
உயருங் கதிக்கே காரணமா மிந்த வுலக மத்தியத்தின்
அயர்வி லநந்தன் றனைவிலங்க லாகும் படிசெய் ததன்கோட்டில்
இயையுஞ் சாமி புட்கரிணி யருகி லிலகிந் திரையுடனே
செயங்கொள் சேட னுவணனெழிற் சேன பதியே முதலானோர்.(13)

எழுசீர் விருத்தம்.

நித்தர்முத் தர்களொடுநனி கதழ்ந்து
நின்றிடுங் கோலமாய்ச் சேவை
எத்தலத் தவர்க்கு மினிதுதந் தெழிலா
யிலங்கிய சீநிவா சன்மா
வித்தக வுருவ மிருபெரி யப்பன்
மலையப்பன் வேங்கடத் துறைவார்
பத்தர்கட் கிரங்கி யருள்செயுஞ் செல்வ
ரெனும்பஞ்ச பேரங்க ளாயும் (14)

---

11. எஞ்சல் - குறை. சிந்து - கடல். சயனம் - படுக்கை. கஞ்சம் - தாமரை மலர். 12. இதயம் - மனது. புவனம் - உலகு. சீவராசி - உயிர் வருக்கம். சிக்கென்று - விரைவின். 13. அயர்வு - சோர்வு. அநந்தன் - ஆதிசேடன். விலங்கல் - மலை. கோடு - உச்சி, சிகரம். இந்திரை - இலக்குமி. சேடன் - ஆதிசேஷன். உவணன் - கருடன். சேனபதி - சேனைமுதலி. 14. கதழ்ந்து - விரைந்து. சேவை - தரிசனம். பஞ்சபேரம் - ஐந்து திருமேனிகள்.

**கலிநிலைத்துறை.**

மருப்பி னுனில மேந்திய வராகமூர்த் தியுமாய்
இருக்கி னேடுமுச் சுருதிக ளியம்பிய படியே
விருப்பி னுலர்ச்ச ரூபமாய் விளங்குறப் பெற்றுப்
பெருக்க மாங்கற்ப முடிவுதோ றுந்தொறும் பேணி (15)

தேவர் மானிட ராற்றினம் பூசைசெய் திடுமா
ருவ லாயுறை சீநிவா சப்பெய ரமலன்
பூவி னுடொறும் புந்தியி னலத்தினோர் புரியும்
பாவ நீங்கிடுங் கருமஞா னம்பத்தி யெனவே (16)

இயம்பு மூன்றியோ கங்கட்கு மிவற்றினிற் பிரிவாம்
நயங்கொ ளெண்வகை நவிலுறும் யோகங்க டமக்கும்
வியம்பெ ருங்கன்ம மாறுக்கும் வேள்வியைந் தினுக்கும்
வயங்கு மூன்றன றமக்குமற் றையமகங் களுக்கும் (17)

நிலைபெ ருந்தவ நித்திய நைமித்திக மெவைக்குந்
தலைவ னுகியுந் தரியலர்த் தமைமிசைப் போக்கி
மலைவ றும்படி மணிநிறை வேற்றுகின் றவனும்
உலைவி லாதுயர் துவமையு மிலாதுறை யவனே. (18)

என்று தன்மங்கள் யாவுமவ் வீசனுக் குவப்பாய்
நன்று றப்புரிந் தவன்றிரு வடியெனு நளின
மன்ற னன்மலர் மீதுதம் பரமெலாம் வைத்தே
வென்றி தங்குதே சிகனருள் விளங்குறப் பெற்ற (19)

---

15. மருப்பு - கொம்பு. இருக்கு - வேதம். அர்ச்சரூபம் - பூசிக்கத்தக்க திருவடிவம். 16. பூவில்-பூமியில். புந்தியின்-புத்தியின். 17. மூன்று யோகம்- கர்ம, ஞான, யோகங்கள். எண்வகை யோகம் - இயமம், நியமம், ஆசனம், பிராணுயாமம், பிரத்தியாகாரம், தியானம், தாரணை, சமாதி என்பன. கன்ம மாறு-அந்தணர் அறுதொழில், யஜன, யாஜன தான, தான ப்ரதிக்ரஹ, அத்ய யன, அத்யாபகம் என்னும் வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல், ஓதல், ஓதுவித்தல் ஆகிய ஆறு. வேள்வி ஐந்து - பிரம, தேவ, பித்ரு. மநுஷ்ய, பூதயக்ஞம் ஆகிய ஐந்து. அனல் மூன்று - தக்ஷிணுக்நி, காருகபத்தியம், ஆக வனீயம் ஆகிய அக்கினி காரியம். மகம் - யாகம். 18. நித்தியம் - நாட் பூசை. நைமித்திகம் - விசேட பூசை. தரியலர்-பகைவர். மலைவு - மாறுபாடு. உலைவு- முடிவு. 19. தன்மங்கள்-கடமைகள். நளினம்-தாமரை. மன்றல் - மணம்.

மேதை யோர்க்குயர் பதந்தரு வேங்கடத் தானே
ஆதி யாயுல கனைத்தையும் படைத்தளித் தழிக்கும்
நாத னுமென வறிந்தெவ ரேனுநல் லிதயப்
போதின் மேற்கொடு பூசையன் புறப்புரி குவரேல் (20)

அவர்கள் சிந்தையின் படியுவந் தருளுவ னூனும்
உவமை நீங்கிய பிரணவ முடனவன் பெயரைத்
தவறி லாதுசொல் லறிஞர்க ளிதயதா மரையே
நவையி னீங்குமா தனமென நலம்பெற வுறைவான். (21)

விந்தை மார்பினன் றனக்குவந் தாட்செய விரும்பி
இந்தி யங்களை யடக்கியோ கஞ்செய வெண்ணி
நந்த லில்லொரா சிரியனை நயந்தகத் தன்பாய்
வந்த னம்புரிந் தவன்சொலு மந்திரம் பெற்று (22)

தினமு மாசில்யோ கத்தினைச் செய்பவர் புவியின்
மனமு வப்புற வன்மைசா லுடலினைப் பெற்று
வினைசெய் கால்மா மிருத்துவைச் செயித்துவிண் ணுலவும்
அனலி சந்திர னுள்ளநா ளளவும்வாழ்ந் திருப்பார். (23)

அறுசீர் விருத்தம்.

பவமறு கன்ம ஞானம் பத்திவை ராக்கிய மெல்லாம்
தவறறத் தருவ தாயுந் தாழ்வில்வேங் கடமென் றோதும்
உவமையின் மலையிற் சித்த ரோடுசாத் தியர்சே விப்ப
நவையற விளங்கி மேலா நலந்தரு கின்ற தாயும் (24)

பாவநா சனதீர்த் தத்தி னுத்தர பாரிச த்தின்
பூவளந் திகழ்வ தாய புண்ணிய சரசின் மூழ்கித்
தேவர்கள் புகழ்முக் கோடி தீர்த்தமுட் குடைந்து நாளும்
தாவுநீர்ப் பறவை வைகுஞ் சனகதீர்த் தத்து மாடி (25)

---

20. மேதையோர் - அறிஞர். இதயப்போது - உள்ளமாகிய மலர். 21. பிரணவம் - ஓங்காரம். நவை - குற்றம். ஆதனம் - இடம். 22. விந்தை- இலக்குமி. 23. மாசு - குற்றம். மிருத்து - மரணம். அனலி - சூரியன். 24. பவம் - பிறப்பு. சித்தர் - சித்தி பெற்றோர். சாத்தியர் - சித்தி பெறு தற்குரியோர். 25. உத்தரபாரிசம் - வடக்குப் பக்கம். சரசு - தீர்த்தம்.

வேங்கடத் தானை மிக்க விருப்புட னுளத்தி னெண்ணித்
தீங்கற வுயரு மட்டாக் கரவுரு வயுதஞ் செய்தாற்
பாங்குட னவின்ற யோகம் பலித்துடற் பலமுந் தேசும்
தாங்கியெந் நாளு நன்மை தழைந்திட மகிழ்ச்சி மேவும். (26)

பலமுனிக் கணங்க ளுர்த்தப் பரிட்சையி னிமித்த முன்னாள்
நலமுறு சனக தீர்த்தந் தனிலொரு நவையில் வெள்ளை
இலையினைச் சேர்க்க வந்த விலைகறுத் ததனை யன்றிச்
சிலையினைச் சேர்க்க வந்தச் சிலையொரு மறையோ னாக (27)

அற்புத மெனவெல் லோரு மறைந்திடத் தோன்றி நின்றான்
இப்படி வெள்ளை வண்ண விலைகறுத் ததுவு மோர்கல்
பொற்புரு மறையோ னான புதுமையு முலந்தென் பாகும்
விப்பிரன் மனைவி சூனு மெய்யுயிர் பெற்ற வாறும் (28)

கூனுமெய்க் கிழவன் வால குமார னதுவு மெல்லாம்
ஞானபூ தரத்தின் வாழு நாயகன் கருணை யென்றே
தாநவின் றந்த மாயன் றன்பொருட் டாலே நாளும்
ஈனநீங் கிடநி வேதிக் கும்படி யினிதிற் றந்த (29)

தத்துவ மறுநான் கோடு தழைந்தவாக் கையினைக் கொண்டு
நித்தமு மவனுக் கேயாட் செய்வது நித்ய மாகும்
புத்திரர் மனைவி பூமி பொன்னெலாம் பூமி நாதன்
சொத்தென நினைந்தெந் நாளுந் தொண்டுசெய் பவர்தூ யோரே. (30)

இவ்வகை யின்றி யாவு மெனதென நினைந்தில் வாழ்க்கைப்
பவ்வமுட் படிந்தம் மாயன் பணியுவப் புறச்செய் யாத
அவ்விய மனத்தர் சாமித் துரோகரென் றகன்ற நீண்ட
கவ்வையங் கடல்சூழ் கின்ற காசினி யோர்சொல் வாரே. (31)

---

26. அட்டாக்கரம் - திருமந்திரம். அயுதம் - பதினாயிரம். தேசு - ஒளி. 27. சிலை - கல். 28. உலந்து - மடிந்து. என்பு - எலும்பு. விப்பிரன் - பிராம்மணன். சூனு - குழந்தை. 29. ஞானபூதரம் - ஞானகிரி என்பது திருமலையின் ஒரு பெயர். ஈனம் - குறைவு. நிவேதிக்கும் - ஆராதிக்கும். 30. தத்துவம் அறு நான்கு - பூதம் ஐந்து, பொறியைந்து, புலன் ஐந்து, கருமேந்திரியம் ஐந்து, பிரகிருதி, மகான், அகங்காரம், மனசு என்ற இருபத்து நான்கு. ஆக்கை - உடம்பு. 31. பவ்வம் - கடல். அவ்வியம் - அழுக்காறு. கவ்வை - ஆரவாரம். காசினியோர் - உலகத்தவர்.

பன்னக வரையி னானே பரமெனப் பணிவோர் நாளும்
இன்னலற் றழியா வீட்டி னெய்துவ ரென்று சூதன்
என்னுமா முனிவன் சொன்ன னிவ்வெலாம் வராக நாம
மன்னிய புராணந் தன்னின் வளம்பெற வழங்கு மன்றே. (32)

தத்துவம் கன்மம் ஞானம் பிரபத்தி மார்க்கம் உரைத்த அத்தியாயம் முற்றிற்று.

## 34. சௌனகாதியர் திருவேங்கடத்தானை ஆராதித்து வரம் பெற்ற அத்தியாயம்.

அறுசீர் விருத்தம்.

மாதவச் சௌனகாதி மறையவர் வியப்பி னோடுஞ்
சூதபுங் கவன்றன் செய்ய சுந்தர வதன நோக்கிச்
சீதமுற் றுயருஞ் சோலை திகழும்வேங் கடமென் றோதும்
பூதரத் தானை முன்னோர் பூசையெவ் வாறு செய்தார். (1)

அவ்வகை யருள வேண்டு மெனவக மகிழ்ந்து சூதன்
செவ்விதிற் செப்பி னான்முன் சேடனைக் கபில னோக்கி
இவ்வகை கேட்க வன்போ டிசைத்தன னதுவே தென்னின்
எவ்வமி லிசைமான் சேரு மிரணிய கருப்ப னென்போன். (2)

தலந்தனிற் றண்ணென் சொன்ன முகிநதிக் கரைசார்ந் தாங்குக்
கலந்ததா மரைய லர்ந்த கடிகமழ் மலர்க்கைக் கொண்டு
மலிந்தெழி றிகழுஞ் சேட மலையனை யன்பி னோடும்
நலந்திகழ் கின்ற வட்டோத் தரசத நாம மோதி (3)

---

32. பன்னகவரை - சேஷகிரி. இன்னல் - துன்பம். வீடு - பரமபதம்.

1. வியப்பு - ஆச்சரியம். புங்கவன் - சிரேஷ்டன். சுந்தரவதனம் - அழகிய முகம். சீதம் - குளிர்ச்சி. பூதரத்தானை - மலையப்பனை. 2. செவ்விதின் - செம்மையாக. சேடன் - ஆதிசேஷன். எவ்வம் - குறை. இசைமான் - சரசுவதி. இரணிய கர்ப்பன் - பிரமன். 3. சொன்னமுகி - சுவர்ண முகி நதி. கடி - நறுமணம். அட்டோத்தரசத நாமம் - நூற்றெட்டுத் திருப் பெயர்கள்.

பத்தியி னருச்சித் தேத்திப் பலவரம் பெற்று ளிவ்வா
றித்தலத் திருந்த வத்தோ ரெண்ணிலார் பூசை செய்து
எத்தலத் தவரும் வாழ்த்த வெண்ணிய வெல்லா மெய்தி
முத்தர்க ளுவப்ப மேலா முத்தியும் பெற்று ரென்றான். (4)

ஆனதா னீவி ரவ்வா றருச்சனை புரிவீ ராயின்
தேனுலாந் துளவ மாறன் றிருவருள் பெறுதி ரென்று
ஞானநூ றெருண்ட சூத நன்முனி மற்றுஞ் சொல்வான்
மாநில மீதி னேவ ராயினு மனத்தன் பாலே (5)

நித்தமும் வேங்க டேச நிமலனூற் றெட்டு நாமம்
பத்தியிற் பிரண வத்தைப் பண்பொடுங் கூட்டி யோதும்
உத்தமர் வேட்ட வெல்லா முவப்புடன் பெற்று வாழ்வார்
அத்தகைப் பெருநா மங்கட் கங்கநி யாச தேவன் (6)

கலிவிருத்தம்.

அம்புய னனுட்டுபு வாகுஞ் சந்தசுக்
கும்பரி னுயர்பணி யோங்கன் மேவிய
செம்பொனம் பானதி தேவ னுமவன்
வம்புறை மலரடி மனத்து ளடியே (7)

பவித்திர முடையகா ராவின் பாலினல்
உவப்புற மஞ்சன மாட்டி யோதரும்
புவித்தலத் திருந்தொரு புத்தியாகவே
அவத்தநீங் கிடத்தியா னித்த வன்பர்கள் (8)

---

4 இருந்தவத்தோர் - பெரிய தவசியர். முத்தர் - பிறவியின் விடுபட்டவர். 5. அர்ச்சனை - பூசித்தல். தேன் உலாம் துளவமால் - தேன் நிறைந்த துளசி மாலையணிந்த திருமால். தெருண்ட - தெளிவு பெற்ற. 6. பிரணவம் - ஓம் என்ற மூல எழுத்து. உத்தமர் - சிறந்தவர். வேட்ட - விரும்பிய. அங்க நியாச தேவதை :—மந்திரங்களொடு அங்கங்களைத் தொட்டுச் செய்யும் கிரியைக் குரிய தேவதை. 7. அனுஷ்டுபு - என்பது ஸம்ஸ்கிருத சுலோக வகையுள் ஒன்று. சந்தசு - பாடல். உம்பர் - மேலுலகு. பணியோங்கல் - சேஷகிரி. செம்பொன் அம்பரன் - பொன்னுடை யணிந்த இறைவனாகிய திருமால். வம்பு - மணம். 8. பவித்திரம் - தூய்மை. காரா - கரிய பசு. மஞ்சனம் - நீராட்டு. அவத்தம் - பொய்ம்மை.

இகத்தினி னலமெலா மெய்திப் பின்னர்மேல்
அகத்தடைந் தளவிலா னந்த மெய்திவான்
சுகத்துட னிருப்பர்க ளென்று சொற்றலும்
மிகத்தம திதயமுள் விருப்ப மீதுற (9)

சவுனகா தியர்செவி தளிர்ப்பக் கேட்டுவந்
துவமையில் வேங்கட வோங்க லானையாம்
அவணடைந் தன்பொடு நோக்கி யஞ்சலித்
திவணுற விச்சைகொண் டனமென் றேத்தவே (10)

சூதபுங் கவனும திச்சை சோர்வற
ஏதமில் பணிமலை யெய்தி யீசனற்
பாதபங் கயமலர் பணிந்து மீள்கெனு
ஓதலு முவப்பொடவ் வுரைசி ரங்கொடே (11)

மிடைந்தனை மிசவனம் விட்டு வேங்கடத்
தடங்கிரி யாத்திரை சௌன காதியர்
நடந்தெதிர் குறுமுயர் நதிக ளின்புனல்
படிந்துசென் றன்பொடு பணிச்சி லம்பினை (12)

## அறுசீர் விருத்தம்.

கண்டுகண் களிப்பச் சென்னி மிசைக்கரங் கூம்பச் சென்று
முண்டக மலியுஞ் சொன்ன முகிநதி மூழ்கிச் சூத
ஒண்டவ னுரைத்த வாறே யோதுதற் கரிய மேன்மை
கொண்டகோ னேரி யென்னுங் குளிர்நறும் புனலி னாடி (13)

வேங்கடத் தானை மிக்க விருப்பொடு விழியா னோக்கிப்
பூங்கழல் பணிந்து வாழ்த்திப் பொற்புறு கமலச் செய்ய
தேங்கமழ் மலர்க ளான்முன் செப்புவிஞ் சையினா லர்ச்சித்
தோங்கிய சகத்துக் கெல்லா மொருதனி முதலாய் நின்ற (14)

---

9. இகம் - இம்மை. மேல் அகம் - மேலுலகு. சொற்றலும் - கூறலும். 10. ஓங்கலானை - மலையப்பனை. அஞ்சலித்து - கைகுவித்து வணங்கி. 11. புங்கவன் - சிரேஷ்டன். பணிமலை - சேஷகிரி. பாதபங்கயம் - அடிமலர். 12. மிடைந்த - (மரங்கள்) அடர்ந்த. எதிர்குறும் - எதிர்ப்பட்ட. பணிச்சிலம்பு - திருமலை. 13. சென்னி - தலை. கரம் - கை. கூம்ப - குவிய. முண்டகம் - தாமரை. சொன்னமுகி நதி - பொன்முகரியாறு. ஒண்டவன் - ஒளி பொருந்திய தவசி. 14. பூங்கழல் - மலர்போன்ற திருவடிகள். கமலம் - தாமரை. விஞ்சை - மந்திரம்.

மணங்கமழ் மலர்மின் வாழு மார்பனே மறையந் தத்தின்
இணங்கிநின் ருடுஞ் சோதி யீசனே யெங்கட் குற்ற
கணங்கொளுங் கடிய பாவ நாசனே கருணை மல்கும்
வணங்கரி யவனே யாழி வலம்புரித் தடக்கை யானே. (15)

கடைந்தெழா வமுதே செய்ய கமலலோ சனனே யுன்னை
அடைந்தன மருள்செ யென்ன வன்பொடு பணிந்து வாழ்த்தும்
படர்ந்தனை மிசவ னம்வாழ் பண்ணவர் தம்மை நோக்கித்
தொடர்ந்தளி முரலும் வாசத் துளவினன் கருணை கூர்ந்தே (16)

கலிநிலைத்துறை.

எண்ணில் காலமிவ் வோங்கலி னிருந்துமா தவங்கள்
பண்ணு நற்பய னடைந்திடு வீரெனப் பணித்து
மண்ணின் வேங்கட மகிமையை வழுத்துவோர் கேட்போர்
உண்ண யப்புட னெழுதுவோ ருகந்துபூ சிப்போர் (17)

தூர தேசங்க டமின்வெளிப் படுத்துவோ ரவர்மேல்
வார மீக்கொடு வேண்டிய வழங்குறு மனத்தோர்
பாரின் மேனலம் பெற்றபின் பழுதறு கதியிற்
சேர வேயுவந் தளித்திடு வேமிவை திண்ணம். (18)

என்ன வோதலுஞ் சௌனகா தியரித யங்கள்
மன்னு மாநந்த மீக்கொடு வளம்பெற வாங்குத்
துன்னு மாநதி களிற்குளிர் தூங்குநீ ராடி
இன்ன றீர்நா வாண்டொன்றி னியைவுற விருந்து (19)

தாது லாமலர் நைமிச வனமது சார்ந்து
சூத மாமுனி துணைப்பத மலர்முடி சூடி
மாத வாவடி யோமுன தருளினால் வளஞ்சேர்
ஆதி சேடவெற் பணுகியாங் குறைநதி களிலே (20)

---

15. மலர்மின் - திருமகள். மறை யந்தம் - வேதாந்தம். கணம் - கூட்டம். ஆழி - சக்கராயுதம். வலம்புரி - சங்கு. 16. கமலலோசனனே - தாமரைக் கண்ணனே. பண்ணவர் - ருஷிகள். அளி - வண்டுகள். முரலும் - ஒலிக்கும். துளவு - துளசி. 17. ஓங்கல் - மலை. பணித்து - கட்டளையிட்டு. வழுத்துவோர் - கூறுவோர். உண்ணயப்பு - உள்ளத்தில் விருப்பு. 18. வாரம் - அன்பு. பழுது - குற்றம். 19. இதயம் - இருதயம். இன்னல் - துயர். ஆண்டு - வருஷம். 20. தாது - பூந்துகள்.

அன்பொ டுங்குடைந் தாடியாண் கேழலா மமலன்
தன்ப தம்பணிந் தழகிய தாமரைத் தையல்
இன்ப நன்கழ லிறைஞ்சினே மெமக்குகந் தளித்தான்
துன்ப நந்திடத் தொலைவறு சுகந்தரு வரமே (21)

அன்றி யும்மெமக் கடிகளிங் கறைந்தவேங் கடமாம்
குன்றி னல்லமான் மியத்தினை மகிழ்நனி சிறப்ப
மன்ற மாநிலத் தவருளந் தெருடர வகுப்போர்க்
கென்று நன்மையே பெறுவா மீந்தன மெனவே (22)

சொல்லும் வாசகங் கேட்கலுஞ் சூதனென் றுரைநூல்
வல்ல மாமுனி வேங்கட மாயவ னருட்கோர்
எல்லை யோதுதற் கில்லையென் றிசைத்தன னிவெலாம்
தொல்லை சேர்வரா கப்புரா ணத்தினிற் சொலுமே. (23)

சௌனகாதியர் திருவேங்கடத்தானை ஆராதித்து வரம் பெற்ற அத்தியாயம் முற்றிற்று.

## 35. சேடகிரி நான்கு யுகத்துக்கு நான்கு பேர் பெற்ற அத்தியாயம்.

### எண்சீர் விருத்தம்.

மாசறுமா மறைமுதலெக் கலையுந் தேர்ந்த
மாதவத்தோ யெங்களுக்கிம் மண்ணின் மீது
வாசமுறு மலைகளிலெம் மலைகண் மேலா
மான்மியம்பெற் றுளததனை வகுப்பா யென்னத்
தேசுறுநை மிசமெனப்பேர் சிறந்து மேன்மை
திகழும்வனச் சௌனகா தியர்ந யந்து
பேசவுள மகிழ்விெனொடு மினிய தாகப்
பெரியதவச் சூதமுனி பேசு வானல். (1)

---

21. கேழலாமமலன் - ஆதிவராகமூர்த்தி. தாமரைத்தையல் - இலக்குமி. நந்திட - குறைந்திட. 22. மான்மியம் - பெருமை. மன்ற - பெரிதும். தெருள்தர - தெளிவு பெற. 1. மாசு - குற்றம். கலை - சாஸ்திரம். வாசம் - வாழ்க்கை.

கங்கைநதிக் கரையின்முன மறைக ளான்காய்க்
கழறுமுனி யெனக்குரைத்தா னஃதே தென்னின்
புங்கமுறு பருப்பதங்க டமிற்சி றந்த
பொன்மயமா யுயர்மணிகள் பொலிந்து தோன்றி
எங்குமொளி தருமேரு மலையை யாழ்கொண்
டிசைபாடுங் கடவுண்முனி யெய்தி யாங்கண்
செங்கதிரை யுறழொளிகொண் மணிக ளாலே
செறிந்தகன்றற் புதமருவித் திகழா நின்ற (2)

ஒருபெருமா னத்தினையு மதற்கு நேரா
யுத்தரத்தி னுறழ்விகந்து விரிந்து நீண்டு
திருவுறவற் புதமலிய விளங்கித் தோற்றோர்
செழுமணிமண் டபத்தினையுஞ் சேர நோக்கி
பரிவினதற் குள்ள ணுக வாங்கோர் செய்ய
பவளமுடன் றரளமதா லொப்பித் தொன்றும்
பொருவருமண் டபநாப்பண் மின்னே யென்னப்
பொழிகதிர்மா ணிக்கமணிப் பீட மீதே (3)

கலைநிறையு மதியெனமெய் காட்ட வேனக்
கவினுறுமா னனந்துலங்க நான்கு தோள்கள்
இலகவிரு குழைமவுலி திகிரி சங்க
மிமைப்பநறுங் கவுத்துவம்பொன் னுடை மின்னக்
கலனவிர்கொ ளவயவங்க டோறுந் தோன்றக்
களிப்பொடுவா னவர்கணங்கை குவித்து வாழ்த்த
நலனுறவீற் றிருந்தவுயர் போழ்மு கத்து
நாயகனை நாரதமா முனிவ னோக்கி (4)

---

2. மறைகள்நான்காய்க் கழறும் முனி - வியாசர். புங்கம் - சேர்க்கை. பருப்பதம் - மலை. யாழ்கொண்டிசை பாடும் கடவுள் முனி - நாரதன். செங்கதிர் - சூரியன். 3. மானம் - விமானம். உத்தரம் - வடக்கு. அற்புதம் - வியப்பு. பரிவு - அன்பு. தரளம் - முத்து. ஒப்பித்து - புனைந்து. பொருவரு - ஒப்பு இல்லாத. நாப்பண் - நடு. 4. மெய் - திருமேனி. கவின் - அழகு. ஆனனம் - முகம். குழை - குண்டலம். மவுலி - கிரீடம். கவுத்துவம் - மார்பின் மணி. கலன் - ஆபரணம். கணம் - கூட்டம். போழ்முகம் - பிளந்த வாய்.

கருதரிய மறைமுதலி யாவுந் தந்து
காத்தளிக்குங் காரணனே யெனப்ப ழிச்சி
அருகினிற்சென் றஞ்சலித்தன் பகத்த டங்கா
தானந்த பாவயமா நிற்குங் காலைப்
பொருவருமா வசுந்தரைமின் றோன்றி யேத்தப்
பொற்புரைகே ழற்புனிதன் பொருந்த நோக்கி
இருதயமுண் மிகமகிழ்ந்து காதலின் வாரி
யெடுத்தணைத்து மடிமிசைவைத் தியம்பு வானே. (5)

### எழுசீர் விருத்தம்.

அன்னமே நினைப்பா தலத்தினின் றேந்தி
யாயிரம் பணவரா விறைவன்
சென்னியி னிருவி யலைவற வனந்தந்
திகிரியை யுதவியாய்ச் சேர்த்தப்
பன்னக விறைக்கா தாரமா யானே
பரிவுடன் சுமந்துகொண் டிருக்க
என்னதீங் குளதுன் றனக்கதை யெனக்கிங்
கியம்பென வினிதுறப் பகர்வாள். (6)

தீதின்மா யவநின் னருட்குரி யவர்க்குத்
தீங்குவந் தணுகுமோ வணுகா
தாதலா லினமு மெனையுவந் தாள்வ
தடிகடன் பரமென வறைந்து
தாதுலா மலர்ப்பூங் குழலினுண் மறித்துஞ்
சாற்றுவா ளெண்ணிலா துயர்ந்த
பூதரங் களையென் றனக்குப காரம்
பொருந்தவைத் தேமெனப் புகன்றாய். (7)

---

5. பழிச்சி - போற்றி செய்து. பரவயம் - பரவசம். வசுந்தரை - நிலமகள். கேழற் புனிதன் - வராகமூர்த்தி. மடிமிசை - மடியில். 6. பண வரா - படங்களையுடைய பாம்பு. சென்னி - தலை. திகிரி - மலைகள். அனந்தம் - எண்ணற்ற. பன்னகம் - பாம்பு. பரிவு - அன்பு. 7. பரம் - பாரம். தாது - பூந்துகள். மறித்தும் - மறுபடியும். பூதரங்கள் - மலைகள்.

அப்பரு வதங்க டமிற்பெரும் புகழ்சார்ந்
தழகிய வடுக்கலின் பெயரைச்
செப்பென வராகத் திருமுக முடைய
சீரிஞேன் சிந்தையுண் மகிழ்ந்து
துப்புற முதாத் துடியிடை வேற்கட்
டுலங்கிளம் பிறைநுத லமுதம்
ஒப்பறு மொழியம் புவிமினே யினிதா
யோதுதுங் கேளென வுரைப்பான். (8)

அறுசீர் விருத்தம்.

இணையறு மேரு சீரா ரிமயஞ்சா ளக்கி ராமம்
அணிகெழு சித்திர கூட மஞ்சனஞ் சுவண நீலம்
மணமுறும் பாரி யாத்திர மாலிய வான்சு வேதம்
விணிலுயர் மலயஞ் சிங்காத் திரியுயர் மேரு புத்திரன். (9)
கெந்தமா தனங்கை லாயங் கீர்த்திபூ தாஞ்சி ருங்கம்
மந்தா மேம கூட மகேந்திர மிடப மேனஞ்
சுந்தா நிடத மத்தி துலங்கிய வருணந் தூய
விந்தைமா கடிகை யென்ன விளம்புமத் திரிக ளென்றே. (10)
புகன்றுபின் னருஞ்சொல் வான்முன் புகன்றவத் திகிரிக் கைந்தாய்ப்
பகர்ந்தயோ சனையு தீசி பாரிசந் தனிற்சி றந்தாங்
ககன்றெழி றிகழுஞ் சொன்ன முகியுள ததற்கு தக்கின்
சுகந்தமார் கமல மென்னச் சொலுமொரு சரசுண் டாங்கே. (11)
மாதவச் சுகனுக் கன்பாய் வரங்கொடுத் தடியர் செய்த
பாதகம் பாற்றி நன்மைப் பயன்றரக் கருணை கூர்ந்து
தீதகல் வெள்ளை மேனிச் செம்மறன் னுடனே நந்தன்
காதலன் மகிழ்வு விஞ்சுங் கருத்தொடு மிருக்கின் றுனல். (12)

---

8. பருவதம் - மலைகள். அடுக்கல் - மலை. துப்பு - பவளம். உறழ் - ஒத்த. அதரம் - உதடு. துடியிடை - உடுக்கை யொத்த இடுப்பு. வேற்கண் - வேல் போன்ற கண். பிறைநுதல் - பிறைச் சந்திரன் போன்ற நெற்றி. அம்புவிமினே - அழகிய நிலமகளே! இணையறு - ஒப்பற்ற. அணி கெழு - அழகு பொருந்திய- விண் - ஆகாயம். 10. அத்திரி - மலை. அத்திகிரி - திருக்கச்சி. 11. உதீசி - வடக்கு. பாரிசம் - பக்கம். உதக்கு - வடக்கு. சரசு - தீர்த்தம். 12. பாதகம் - தீமை. பாற்றி - போக்கி. வெள்ளை மேனிச் செம்மல் - பலராமன். நந்தன் காதலன் - கிருஷ்ணன்.

அவ்வயி னறங்கொள் கின்ற வேங்கடாத் திரியின் மீதே
எவ்வமில் சாமி யென்னப் பேர்பெற விளங்கித் தோன்றும்
திவ்விய தடாக தீர்த்தச் செழுங்கரை மேற்றி சைக்கண்
செவ்விய நின்னொ டுள்ளஞ் சிறந்தினி திருக்கின் றேமால். (13)

இருக்குமெம் வலப்பா கத்தி னெல்லாமுந் தானாய் நின்ற
திருக்கிளர் சீநி வாசன் சேர்ந்திருக் கின்றா னந்த
மருக்கமழ் பொருப்பை முந்தி வருங்கிரே தாயு கத்திற்
றருக்கிள ரஞ்ச னாத்திரி யெனப்பெயர் தழைத்த தன்றே. (14)

எழுசீர் விருத்தம்.

நலனுறு மிரண்டாமூழியி னெவரு
நவிலுவர் நாராணத் திரியென்
றிலகிய மூன்றா மூழியி னாசிங்
காத்திரி யெனப்பெய ரிசைப்பார்
தலமதி னான்கா மூழியி னமர்வோர்
சாற்றுவர் வேங்கட நாம
மலையென வதுமா லுறைவிட மென்றே
வழுத்துவர் பெரியர்கண் மாதோ. (15)

அத்திரு மலையிற் புண்ணிய தீர்த்த
மள்ளிலா துளவவிற் படிந்து
சுத்தமெய்த் தவஞ்செய் தெண்ணிய தடைந்தோர்
தும்புரு வாசுகன் வடிவேல்
வைத்தகைக் குமா னகத்திய னாதி
வகைவகை பிரித்தெடுத் துரைக்கின்
இத்தனை பெயரெண் றெண்ணுத றனக்கெண்
ணிலையென மண்மக டனக்கு (16)

---

13. வேங்கடாத்திரி - வேங்கடமலை. எவ்வம் - குறை. 14. திருக்கிளர் - இலக்குமி விளங்கும். மரு - மணம். பொருப்பு - மலை. தரு - மரம். 15. ஊழி - கல்ப காலம். தலம் - நிலவுலகு. 16. அவ்வில் - அவைகளில். ஆசுகன் - காற்று. 17. ஏனம் - பன்றி. யாழ்முனிவன் - நாரதன்.

சீதவெண் பிறைக்கோட் டேனமா முதல்வன்
செப்புதல் கேட்டயாழ் முனிவன்
வேதநான் கென்ன விதித்தவன் றனக்கு
விளம்பின னவனெனக் குவந்தே
ஓதினு னதனை யுமக்கிவ ணுரைத்தே
னென்றுயர் சௌனகா தியர்க்குச்
சூதமா முனிவ னினிதுறு மமுதச்
சுவையெனச் சொற்றன னன்றே. (17)

ஈதெலாம் வராக மெனும்புரா ணத்தி
னியம்புமிக் கதைசெவி யேற்போர்
ஓதுவோர் கருத்தின் வேட்டவை யெல்லா
முவப்புறப் பெற்றினி திருந்தே
ஆதியாய் மூலப் பொருளதா யெவைக்கு
மந்தரி யாமியாய் நின்ற
தாதுலாந் துளவ முகுந்தன்வாழ் பரம
பதத்தினிற் சார்குவ ரன்றே. (18)

சேடகிரி நான்கு யுகத்துக்கும் நான்கு பேர் பெற்ற அத்தியாயம் முற்றிற்று.

## 36. வராகப் பெருமான் மந்திரசித்தி உரைத்த அத்தியாயம்.

### அறுசீர் விருத்தம்.

அன்ன வேனமால் புவிமினோ டஞ்சன வசலமீ தினின்வைகி
என்ன சீர்வினை யாடல்க ளியற்றினு னவையெமக் கிசைத்தருளென்றே
இன்ன றீர்தரு சௌனகா தியருள மினிதுவப் பொடுங்கேட்பப்
பன்னு நான்மறைச் சூதமா முனிமிகு பரிவொடும் பகர்வானல். (1)

18. வேட்டவை-விரும்பியவை. அந்தரியாமி-உயிர்க்குஉயிர். தாது-பூந்துகள். 1. ஏனமால் - வராகமூர்த்தி ஆகிய திருமால். புவிமின் - நிலமகள். அஞ்சன அசலம் - அஞ்சனகிரி. வைகி - தங்கி. இன்னல் - துயர்.

நலங்கொ ளுந்திரே தாயுகந் தனிலெழி னாரணத் திரிமீதே
இலங்கு மேனமா மூர்த்தியை யவனிமின் னிறைஞ்சிமுன் னெதிர்நின்று
வலங்கொ ணேமியா யடிகளை யெவ்வித மறைகொடு பூசித்தால்
துலங்கு சித்திக ளெளிதினுண் டாமதைச் சொற்றிடா யெனக்கென்றாள். (2)

என்ற வாசக மின்புறக் கேட்டுவந் தேனமா லுரைசெய்வான்
வென்றி சேர்தரு பிரணவத் தொன்றுவெள் ளேனமே லவனென்றும்
மன்ற லார்தரை மருப்பினு லேந்திய வலனுறுமவ னென்றும்
துன்று தேயுவின் மூழ்கிய மடந்தையைத் தோய்ந்ததூய் மையனென்றும் (3)

இயம்பு மிந்தமந் திரத்தினுக் குரியதோ ரிருடிசங் கருடணன்றேவன்
உயர்ந்த யானெழிற் சந்தசு பகவதி யிதையொரு குருவின்பால்
நயந்து வந்தனை செய்துகேட் டன்பொடு நவையற வுருவேற்றித்
தயங்கு மாவினற் பயத்தினாற் பாயசஞ் சமைத்ததை யினிதாக (4)

ஓமத் தீயிடைச் சுருதியா லுபசரித் துவப்புற வுதவிடவேண்டும்
காமத் தாலலை மனம்பவித் திரமுறக் கருதுமந் திரத்தினைச் சொல்வேன்
ஏமத் தானைச்சுற் றிரசித மாமலை யெனத்திரு மேனியுஞ் சிவந்த
வாமத் தாலுயர் கமலவாக் கமும்பெறு வராகவா னனஞ்சதுர்ப் புயமும் (5)

அடல்செய் யாழிவெள் வளையுடன் மவுலியு மபயவத் தமுநாளும்
கடிகொ ளுந்துழாய் மாலையுஞ் சிவந்தொளிர் கனமணி யணிபூணும்
உடைய வன்வல வுரத்தினன் மறுவுள னொருவரு நிகரில்லான்
மடியின் வைத்துனை வலக்கையி னணைத்தவன் வழுத்தரு முதலானேன். (6)

---

2. நாரணத்திரி - திருமலையின் ஒரு பெயர். (முன் பார்க்க) அவனிமின் - பூமிதேவி. வலம் - வெற்றி. நேமியாய் - சக்கராயுதனே! மறை - வேதம். சொற்றிடாய் - சொல்லுவாய். 3. வாசகம் - சொல். பிரணவத் தொன்று - பிரணவத்துடன் கூடிய. வெள்ளேனம் - வெண்ணிறப் பன்றி 'சுவேத வராகம்' என்பது. மன்றல் - மணம். மருப்பு - கொம்பு. வலன் - வன்மை. தேயு - அக்கினி. மடந்தை - பெண். 4. இருடி - ருஷி. வந்தனை - வணக்கம். நவை - குற்றம். பயம் - பால். பாயசம் - பால் அன்னம். 5. சுருதி - வேத மந்திரம். பவித்திரம் - தூய்மை. ஏமத்தானை - பொன்னுடை. இரசிதம் - வெள்ளி. வாமம் - அழகு. வராக வானனம் - பன்றி முகம். சதுர்ப்புயம் - நான்கு தோள். 6. அடல் - அழித்தல். ஆழி - சக்கராயுதம். வெள்வளை - வெண்மையாகிய சங்கு. மவுலி - கிரீடம். அபயவத்தம் - அஞ்சல் வேண்டா என்று காட்டும் திருக்கை. கடி - மணம். உரம் - மார்பு.

ஆதி கூர்மமா யதன்வெரி நின்மிசை யனந்தனு யவன்செய்ய
சோதி மாமணி முடியெனு முளரியிற் றுலங்கிட வுறைதூய
நீதி யானென நினைந்துமுன் னிகழ்த்திய நேரிலா மந்திரந்தனையே
ஓதி னிலக் கத்துநூற் றெட்டெனு முருச்செயிற் புவிமீதே (7)

நினைத்த யாவையு மெய்தியே பின்னரி னிமலமாங் கதிமேவும்
எனத்த ராதல மடந்தையு மடிகளிங் கிசைத்தநன் மனுவாலே
மனத்தி னெண்ணிய தடைந்தவர் யாரென வழங்கலு மமுதேபோல்
இனித்த மென்மொழி மண்மக ளுவப்புற வேனமா லுரைசெய்வான். (8)

அறுசீர் விருத்தம்.

முன்னொரு வாசன் றன்ம னெனும்பெயர் மொய்ம்பின் மிக்கோன்
என்னையுண் ணினைந்தே யிந்த மந்திர மியம்பி வாணி
மன்னிய பிரம பட்ட மருவினன் வானோர்க் கெல்லாம்
மன்னவன் றுருவா சப்பேர் மாமுனி யிடுசா பத்தால் (9)

விஞ்சிய விபவ மெல்லா மிழந்துபோய் வேலை சூழும்
அஞ்சக மடைந்திம் மேலா மந்திர மறைந்து பொல்லா
நஞ்செனும் சாப நீங்கி நலனுடை நாகர் நாட்டின்
நெஞ்சக மகிழ்ந்து முன்போ னேயமுற் றினிது வாழ்ந்தான். (10)

காசிப னிடத்து மேனாட் கடுவிடப் பாந்தள் வேந்தன்
ஆசிலிம் மறையைப் பெற்று ளன்பொடு முருச்செய் திந்த
மாசறு தலத்தி னீண்ட மலையுருப் பெற்று னிங்ஙன்
பேசிடி னநந்த யோகர் பெற்றமை நவிலற் பாற்றே. (11)

என்னலு மினிது கேட்ட வேருறுந் தாணி யென்னும்
அன்னமுள் வியந்து கேழ லாயமா யவனை நோக்கி
இந்நக முடியிற் சீநி வாசனென் றிசைகொ ளுதன்
மன்னிய காலந் தன்னை வழங்கென வழுத்த லானன். (12)

7. கூர்மம் - ஆமை. செய்ய - செம்மையான. வெரிந் - முதுகு. அனந்தன் - ஆதிசேடன். முளரி - தாமரை. 8. நிமலம் - மலம் அற்ற. தாரதலம் - பூமி. மனு - மந்திரம். ஏனமால் - வராகமூர்த்தி. 9. மொய்ம்பு - வன்மை. வாணி - சரசுவதி. மருவினன் - பொருந்தினன். 10. விபவம் - பெருமை. வேலை - சமுத்திரம். சகம் - உலகம். நாகர் நாடு - தேவருலகு. 11. கடுவிடம் - கொடிய நஞ்சு. பாந்தள் - பாம்பு. ஆசு - குற்றம். அநந்தயோகர் - எண்ணற்ற யோகிகள். நவிலல் - கூறுதல். 12. ஏர் - அழகு. தாணி - பூமி. கேழல் - பன்றி. நகம் - மலை.

ஆதியி னொருதி ரேதா யுகத்தினி லறத்தி னாறே
காதலித் தொழுகும் வைவச் சுதனெனு மனுவின் காலத்
தூதைவா னவன்பா லாழி நாதனை யுளத்தி னெண்ணி
மாதவஞ் செயவம் மாயன் மனந்தனிற் கிருபை கூர்ந்தே (13)

சாமிபுட் கரிணி தீர்த்தந் தனக்கயல் சீநி வாச
நாமமுற் றருளிசெய் மௌலி நகைமணிக் குழைகே யூரம்
நேமிசங் கேம வாடை நிலவவவ் வாயு தேவன்
மாமன முவப்பத் தோன்றி வேண்டிய வரங்க ளீந்தே (14)

அற்றைநாண் முதல தாக வளவறு கற்ப காலம்
உற்றவ ரெவர்க்குந் தோற்று துறைந்தன னிவனென் றோதச்
சிற்றிடைப் பவளச் செவ்வாய்ச் செகமகள் வினவிச் செய்யாள்
கொற்றவ னெவர்க்குஞ் சேவை கொடுத்ததெவ் விதஞ்சொல் லென்றாள். (15)

அகத்தியன் பண்டை ஞான்றங் கணுகியிம் மலையின் மேலே
மிகுத்தவன் போடு நின்றே விழுத்தவ மீரா றாண்டு
மகுத்துவ முடைய சீநி வாசனை மனத்தி னாடிச்
செகத்தவர் வியப்ப விண்ணிற் றேவருந் திகைப்பச் செய்தான். (16)

செய்திடுந் தவத்தை நோக்கிச் சிந்தையுண் மகிழ்ந்து முன்பே
எய்தியென் வேண்டு மென்ன விசைத்தலுந் தொழுது வாழ்த்தி
மைதவழ் மேனி யாயிம் மலைமிசை வருவோர்க் கெல்லாம்
உய்திற முறநின் சேவை யுதவிட வேண்டு மென்றான். (17)

அவ்வரங் கும்ப யோனிக் கன்பொடு மளித்தவ் வாறே
செவ்விய மானத் தூடே திகிரிசங் கிலங்க நின்று
பவ்வநீ ராடை சூழ்ந்த பாருளோர் தங்கட் கெல்லாம்
திவ்விய சேவை யீந்து திருவுர மிலங்கித் தோன்ற (18)

---

13. அறத்தின் ஆறே - தருமமார்க்கத்திலே. வைவச்சுதன் - சூரியன் புதல்வனாகிய மனு. ஊதை வானவன் - வாயுதேவன். பாலாழி - திருப்பாற்கடல். 14. மௌலி - திருமுடி. நகை - ஒளி. குழை - காதணி. கேயூரம் - கையில் அணியும் வளையம். நேமி - சக்கராயுதம். ஏம ஆடை - பொன்னாடை. 15. கற்பம் - ஊழி. சிற்றிடை - சிறிய இடுப்பு. செகமகள் - பூமிதேவி. செய்யாள் - திருமகள். 16. ஞான்று - நாள். விழுத்தவம் - சிறந்த தபசு. மகுத்தவம் - பெருமை. 17. இசைத்தலும் - சொல்ல. மை - கருமை. உய்திறம் - பிழைக்கும் மார்க்கம். 18. கும்பயோனி - அகத்திய முனிவர். மானம் - விமானம். பவ்வம் - கடல். உரம் - திருமார்பு.

எண்ணரு மூழி கால மிவ்வகை யிருக்க யானக்
கண்ணனுக் கிருபத் தெட்டா வதுசதுர் யுகத்தின் காலம்
நண்ணிய துவாப ராந்த நாளிலே நானு வந்து
திண்ணிய வராக மென்னத் திருவவ தாரஞ் செய்தேன் (19)

என்றுவெண் பிறைக்கோட் டேன விறைதரை மாது கேட்டு
நன்றுநன் றெனவி யப்ப நவிலுமிச் சரிதை மோகம்
வென்றுயர் சூதன் சௌன காதியர் விருப்ப மெய்தத்
தன்றிரு வுளத்தின் மிக்க தயையொடுஞ் சாற்றி னானே. (20)

உயர்வுறு வராக மென்ன வுரைத்திடும் புராணந் தன்னின்
மயர்வறச் சொலுமிவ் வெல்லாம் வழுத்துவோர் கேட்போர் மண்மேற்
றுயரறச் செல்வ மெல்லாந் துய்த்தபின் னழியா தென்றும்
நயமுற மேலா நின்ற பதத்தினை நண்ணு வாரே. (21)

வராகப்பெருமான் மந்திரசித்தி உரைத்த அத்தியாயம் முற்றிற்று.

## 37. அலர்மேல்மங்கை அவதரித்த அத்தியாயம்.

அறுசீர் விருத்தம்.

இன்னமும் வராக மூர்த்தி யிருநில மடந்தை கேட்பச்
சொன்னதை யெமக்கிங் கன்பிற் சொல்லுவா யென்ன வேட்டு
முன்னரின் வணங்கி நைமி சாரண்ய முனிவர் கேட்பத்
தன்னிக ரிலாத சூத மாதவன் சாற்ற லுற்றான். (1)

பண்டைநா ளெவரும் வாழ்த்தப் பனிமதி மரபிற் றோன்றும்
திண்டிறன் மித்ர வன்ம னெனப்பெயர் சிறந்த வேந்தன்
தொண்டைமண் டலத்தி னாரா யணபுரந் தனிற்று லங்க
எண்டிசை முழுதும் வென்றிட் டினிதுற விருக்கு நாளில் (2)

---

19. துவாபராந்தம் - துவாபர யுகத்தின் கடைசி நாள். திண்ணிய - வன்மையுடைய. வராகம் - பன்றி. 20. பிறைக்கோடு - பிறைச் சந்திரன் போன்ற கொம்பு. ஏன விறை - வராகமூர்த்தி. 21. மயர்வு - மயக்கம். துய்த்தபின் - நுகர்ந்த பின்பு. 1. நில மடந்தை - பூமிதேவி. வேட்டு - விரும்பி. 2. பனிமதி - குளிர்ந்த சந்திரன். மரபு - வமிசம். எண்டிசை - எட்டுத் திக்குகள்.

தென்னவன் றவத்தா லீன்ற சீர்மிகு கருங்கட் செவ்வாய்
அன்னமென் னடையி னளை யன்பொடு மணந்து வைகி
இன்னலில் வியனென் றேயோ ரெழின்மக வீன்றச் சேய்க்கு
நன்னய மிகுந்த காளைப் பருவம்வந் தெய்த னடி (3)

தயையெழிற் குணங்கற் போடு தயங்கிய தரணி யென்னும்
பெயர்பெறு மாதை யன்பாற் பெட்புற மணஞ்செய் வித்தே
உயர்வுறு மரசு மீந்து வேங்கட வோங்கன் மீதோர்
வயின்மறை முதலை யுள்கி மாதவ மியற்றப் போனன். (4)

போனபின் வியனென் றோதும் பொற்புடை யரச னிந்த
மாநில முழுதுஞ் செங்கோல் வழாதினி தோம்பு நாளின்
தானொரு மகஞ்செய் தற்காத் தவத்தவர் சூழ வேந்த
ரானவர் தொடரச் சென்றிட் டாரணி நதிதீ ரத்தில் (5)

பொன்னலத் துழும்போ தந்தப் பூவுளோர் கமலப் போதின்
மின்னுரு வெடுத்தா லன்ன விளங்கொளி திகழ வேயோர்
கன்னிகை தோன்றக் கண்டே கடிகம ழலங்கற் றிண்டோள்
மன்னவன் வியந்தா னந்த வாரியின் மூழ்கி னனே. (6)

அப்பொழு துயர்வா னின்க ணந்தர வாணி யிந்த
ஒப்பறு கனியை யன்பா லுன்மக ளெனப்பா வித்துத்
தப்பற வளர்த்தி யென்று சாற்றலுஞ் செவியேற் றுத்தன்
கைப்பட வெடுத்து மன்னன் காதலி காத்தி னீந்தான். (7)

---

3. தென்னவன் - பாண்டியன். இன்னல் - துன்பம். எழில் மகவு அழகிய குழந்தை. சேய் - குழந்தை. நாடி - ஆராய்ந்து. 4. தயை - அளி. பெட்பு - விருப்பம். ஓங்கல் - மலை. வயின் - இடம். மறை முதல் - வேத முதல்வன் ஆகிய கடவுள். 5. பொற்பு - அழகு. வழாது - தவறாது. ஓம்பும் - பாதுகாக்கும். மகம் - யாகம். 6. பொன் அலம் - பொன்னாற் செய்த கலப்பை. பூ - பூமி. கமலப்போது - தாமரைப் பூ. மின் - மின்னற் கொடி. கடிகமழலங்கல் - மணம் வீசும் மாலை. ஆனந்தவாரி - இன்பக் கடல். 7. அந்தரவாணி - ஆகாய வாக்கு. ஒப்பருகனி - ஒப்பில்லாத கன்னிகையை. வளர்த்தி - வளர்ப்பாய். செவி யேற்று - கேட்டு. காதலி - மனைவி.

மந்திரக் கிழவர் வேந்தர் மறையவ ரோடு சென்று
சிந்தையின் மகிழ்ந்து தன்பொற் றிருமனை சேர்ந்த பின்னர்
முந்துறு சனகன் சீதை யெனுங்கனி மொழிய ளாய
பைந்தொடி தனைவ ளர்த்த பான்மைபோல் வளர்க்கு நாளில் (8)
தன்மனை யாட்டி யான தரணியின் கருப்பந் தாங்கி
மன்மத னுனு மாறேர் மகவினைப் பெறவக் காலை
வின்மறை தேர்ந்த வீர வியனெனு மாசன் சிந்தை
இன்மகிழ் வடங்கா தெய்தி யெண்ணிறு னங்க ளீந்தான். (9)

சாதக முதல வாய கிரியைக டவறு தாற்றி
மாதவ ராலே நாமம் வசுதாச னென்னச் சாற்றிக்
காதலின் வளர்ப்ப வந்தக் காதலன் பூர்வ பக்கத்
தேதமில் மதியை யொப்ப வேருற வளர்ந்திட் டானே. (10)

பெற்றவன் றனினு மிக்க பெருந்திற லுளனாய்ப் பூவின்
உற்றவை சாக மாதத் துச்சியின் வருமா தித்தன்
கற்றையங் கதிர்வெப் பத்தைக் கண்டவர் மருளு மாபோற்
பற்றலர் வெருண்டு வாழ்த்தப் பண்புற விருந்தான் மன்னோ (11)

வாரகமா மமல னிந்த வாறெலா மகிழ்வி னோடு
தாரதல மடந்தை கேட்பச் சாற்றின னென்று சூதன்
இராகநீத் தவர்க்கன் போடு மிசைத்தன னிவைவ ராக
புராணமின் புறவி ரித்துப் புகாறப் புகலு மாதோ. (12)

---

8. மந்திரக் கிழவர் - ஆலோசனைக்கு உரிய அமைச்சர்கள். கனிமொழி யாள் - கனி போன்ற இனிய மொழியைப் பேசுபவள். 9. தரணியின் - தரணி என்ற பெயருடைய பெண்மணி. வின்மறை - தநுர்வேதம். இன் மகிழ்வு - இனிய மகிழ்ச்சி. தானம் - கொடை. 10. சாதகம் - பிறப்புக் குறிப்பு. நாமம் - பெயர். காதலன் - குழந்தை. பூர்வபக்கம் - சுக்கில பக்ஷம். ஏதம் - குறை. மதி - சந்திரன். 11. வைசாகம் - வைகாசி. ஆதித்தன் - சூரியன். கற்றை - தொகுதி. பற்றலர் - பகைவர். வெருண்டு - அஞ்சி. 12. அமலன் - இறைவன். இராகம் - ஆசை. இசைத்தனன் - சொன்னன்.

அலர்மேல்மங்கை அவதரித்த அத்தியாயம் முற்றிற்று.

## 38. ஸ்ரீநிவாசன் வேட்டையாடி வந்து பதுமினியைக் கண்ட அத்தியாயம்.

அறுசீர் விருத்தம்.

இன்னமுங் கேழ லானே னிருநில மடந்தை கேட்பச்
சொன்னதை யெமக்கன் போடுஞ் சொல்கென விணைத்தாட் பூவைச்
சென்னியிற் புனைந்து சௌன காதியர் செப்ப லோடும்
நன்னிலை தெரிந்த சூத மாமுனி நவில்வ தானன். (1)

இன்விய னெனுமா காச ராசனென் னும்பே ரேய்ந்த
மன்விருப் புடனே தந்த மகன்செயல் வழுத்தி னய்மண்
டன்வயி னுதித்த கன்னி சரித்திர மருளென் றேபூ
மின்வழங் கிடலு மேன மேலவன் விளம்பு வானல். (2)

அந்தவா காச ராச னழகுறும் பதுமத் தின்கண்
வந்தமா தினுக்கு நாமம் பதுமினி யெனவ ழங்கிப்
புந்தியா லழகா னந்தம் புத்திரிக் குவமை யாம்பெண்
எந்தலோ கத்து மில்லை யெனமகிழ்ந் திருக்கு நாளில் (3)

ஒருதினத் தழகான் மிக்க பதுமினி சகிமா ரோடு
மருவிமந் தாரை தென்னை வகுளமாப் பலாசம் பூகம்
பரியசண் பகந்த மாலம் பாடல முதல வாய
தருமலிந் திலங்கப் பிச்சி தளவமல் லிகைநெ ருங்க (4)

கோகில நிரைகள் கூடிக் கூவவஞ் சுகங்கள் கொஞ்சத்
தோகைக ணடன மாடச் சுரும்பினம் பாடக் கேட்டு
மேகம்வந் துறங்க மாக விண்ணம்போழ்ந் தகன்ற சோலைக்
கேகியொண் மலர்கள் கொய்துள் ளின்புற வுலவுங் காலை (5)

---

1. கேழலானேன் - வராகமூர்த்தி. இணைத்தாட்பூ - மலரடியிரண்டும். 2. மன் - அரசன். வழுத்தினய் - கூறினய். பூமின் - நிலமகள். ஏன மேலவன் - வராகமூர்த்தி. 3. பதுமம் - தாமரை. நாமம் - பெயர். புந்தி - அறிவு. உவமை - ஒப்பு. 4. சகிமார் - தோழிமார். வகுளம் - மகிழமரம். பலாசம் - முருக்கு. பூகம் - கமுகு. தமாலம் - பச்சிலை. பாடலம் - பாதிரி. தரு - மரம். 5. கோகிலம் - குயில். நிரை - வரிசை. அஞ்சுகம் - கிளி. தோகை - மயில். சுரும்பு - வண்டு. மாகம் - ஆகாயம். விண்ணம் - வானம்.

வீணைநா ரதனுங் கெய்தி வியமனன் மகளை நோக்கிப்
பூணினுக் கழகு நல்கும் பொற்றொடி நீயா ரிந்தச்
சேணுயர் சோலை யூடே செறியிருள் சீக்கு மின்னும்
நாணுறச் சகியர் சூழ நின்றனை நவில்கென் றானால். (6)
அவ்வுரை கேட்ட லோடு மணங்கர சவனை நோக்கிச்
செவ்விய வியமன் பெற்ற சிறுவியா னென்று செப்பக்
கவ்வையங் கடலிற் றோன்றுங் கவின்பெறுங் கன்னி நீயென்
றிவ்வயி னுணர்ந்தே னைய மில்லையென் றேத்திப் போனான். (7)
போனபின் சகிய ரோடப் பொங்கரின் மகிழ்வி னோடும்
மானின மருளத் தோகை மயிலின மொதுங்கச் செங்காற்
பானிற வனங்க ணாணப் பசுஞ்சிறைக் கிளிக ளஞ்சத்
தேனினந் தொடரா நாடிச் சென்றுபூ வெடுக்குங் காலை (8)
வெண்பிறைக் கோடு கொண்ட வெற்பெனப் புடைத்து யர்ந்து
மண்புரண் மேனி யங்கை வரைக்கெலாந் தலைமை பூண்டு
விண்படர் மழைபோ லார்த்தோர் வேழமங் கெழுத னோக்கிப்
பண்படு மொழியர் யாரும் பயங்கொடவ் வனத்தி னோர்சார் (9)
ஓடிநின் றிடவக் காலை யோரொழிற் படிக வண்ணப்
பாடல மீது வின்மின் பற்றிய கருமே கம்போல்
கோடிகந் தர்ப்பர் கூடி யோருருக் கொண்டா லன்ன
பீடுறு முருவந் தோன்றப் பீதவம் பரந்து லங்க (10)
பொன்னினு மணிக ளானும் புரிபல வணியி லங்கச்
சென்னியின் முடிவி ளங்கச் சிலைசரத் தொடும்வி ரைந்து
முன்னெழு மிருக மொன்றை முடுகியங் குறுதல் கண்டு
கன்னியர் விரைந்து நெஞ்சங் கரைகொள நின்ற போழ்தே (11)

---

6. வியமனன் - ஆகாசராசன். பூண் - ஆபரணம். சீக்கும் - போக்கும். 7. அணங்கரசு - தெய்வ மகளிர் தலைவி. வியமன் - ஆகாசராசன். சிறுவி - சிறு பெண். கவ்வை - பேரொலி. கவின் - அழகு. 8. பொங்கர் - சோலை. பானிற வனங்கள் - பால்போன்ற வெண்மையான நிறமுடைய அன்னப் பறவைகள். 9. கோடு - கொம்பு. வெற்பு - மலை. கைவரை - கையையுடைய மலையென யானைக்கு ஒரு பெயர். வேழம் - யானை. பண்படு மொழியர் - பண்ணிசை ஒத்த இனிய மொழியையுடைய மகளிர். 10. படிகம் - பளிங்கு. பாடலம் - குதிரை. வில்மின் - வானவில்லும் மின்னற் கொடியும். கந்தர்ப்பர் - மன்மதர்கள். பீடு - பெருமை. பீதவம் பரம் - பொன்னுடை. 11. அணி - ஆபரணங்கள். சென்னி - தலை. சிலை - வில். சரம் - அம்பு. எழுமிருகம் - காடி. முடுகி - விரைந்து.

முந்துறு மதமா வெண்மெய் முழுவலித் துரங்க மூர்ந்து
வந்தவன் றன்னை நோக்கி வணங்கியோ ரமலை யிட்டு
மைந்துறும் புழைக்கை தூக்கி வானுற நீட்டி யந்தப்
பைந்துணர்க் காவை நீங்கிப் பயங்கொடு போயிற் றன்றே. (12)

மதகரி போய பின்னர் வாசிமேல் வந்த சீரோன்
இதமுடன் போது கொய்தாங் கிருந்தவே ழையர்முன் னண்ணி
மதிநுதற் பவளச் செவ்வாய் மாதரீர் நீவிர் யாவிர்
பதியெது புகல்மி னென்று பகரவம் மாதர் சொல்வார். (13)

தனுக்கொடு வேட்டை யாடத் தனித்துவெண் பரிமேல் வந்த
கனக்கரு மேனி யாய்நீ யாரைநீ கானத் துற்ற
சினக்கரு விலங்கைச் செற்றல் சீரிதன் றெமது கொற்றத்
தனிக்குடை வியமன் காப்புன் றன்னிடம் விரைந்தே கென்ன (14)

வாசிவிட் டிழிந்து நின்று வழங்குவா னனக்கு ழாங்கள்
கூசுமென் னடையுங் காந்தி குலவிய பணியு மிக்க
தேசிகந் துலங்கத் தோன்றுந் திருவெனு மடவீர் நுங்கள்
மாசறு பிறப்பும் பேரும் வாழெழி னகருஞ் சொன்மின். (15)

அமுதெனக் கேட்டென் றூன மாகிய திரும லைக்கு
நிமிடமுட் செல்வே னென்று நிகழ்த்துமப் புருடன் றன்னை
உமிழ்சுடர்ப் பூணி னார்க டம்முளே யொருத்தி நோக்கித்
தமிழினு மினிய சொல்லாற் சாற்றுவ தாயி னாளால். (16)

---

12. மதமா - மதம் பொருந்திய யானை. துரங்கம் - குதிரை. அமலை - முழக்கம். மைந்து - வலிமை. புழைக்கை - துவாரமுடைய தும்பிக்கை. பைந்துணர் - பசிய பூங்கொத்துக்கள். கா - சோலை. 13. மதகரி - மதம் பொருந்திய யானை. வாசி - குதிரை. இதம் - நலம். போது - மலர்கள். ஏழையர் - மகளிர். நுதல் - நெற்றி. 14. பதி - ஊர். தனு - வில். பரி - குதிரை. கனக்கருமேனி - மேகம் போன்ற கரிய உடல். கானம் - காடு. கருவிலங்கு - யானை. செற்றல் - கொல்லல். கொற்றம் - வெற்றி. வியமன் - ஆகாசராசன். 15. வாசி - குதிரை. அனக்குழாம் - அன்னப் பறவையின் கூட்டம். காந்தி - ஒளி. பணி - அணிகலன். தேசிகம் - ஆடை. மடவீர் - இளம் பெண்களே. எழில் - அழகு. 16. தானம் - இடம். பூணினார் - அணியணிந்த மகளிர்.

மண்ணினிற் பிறந்தா காச மன்னவன் வளர்த்த காதற்
பெண்ணிவ ணலத்தான் மிக்க பதுமினி யெனப்பேர் பூண்டாள்
தண்ணறுந் தாராய் நாங்க டாதியர் நீயா ரிங்கு
நண்ணிய நிமித்த மேது நவில்கென நவில்வ தானுன். (17)

என்பெயர் கண்ண னென்பா ரிருப்புவேங் கடமிங் கேயோர்
வன்புறு மிருகந் தேடி வந்தன னினிதா யும்மை
அன்புறக் கண்டே னிந்தப் பதுமினி யழகி னாலே
என்புட லுருகி மோக விருங்கட லாழ்ந்தே னென்றான். (18)

அன்னவா சகங்கே ளாமுன் னனலென வெகுளி பொங்க
மின்னிடை வேற்கட் செவ்வாய் மெல்லிய ருனையெங் கொற்ற
மன்னவன் காணிற் காலின் வன்றளைப் படுத்து வானல்
உன்னிடங் கடிதி னேடி யுயிர்கொடு வாழ்தி யென்றார். (19)

என்றசொற் செவியி னோர்ந்தங் கிணையறு மாமீ தேறிச்
சென்றுவேங் கடமென் றோதுந் திருமலை யடைந்தா னென்று
பன்றியாய்ப் படியை யேந்தும் பரன்கட லாடை பூண்ட
மன்றலங் குழலிக் கன்பாய் வகுத்தனன் றொகுத்து மாதோ. (20)

எனவுயர் சூத னென்னு மிருந்தவன் சௌன காதி
முனிவர்கட் கமுதம் போல மொழிந்தன னிதனை யெல்லாங்
கனமுறு வாக மென்றே கழறுநற் புராணந் தன்னின்
இனிதுற வெவர்க்குந் தோன்ற விசைத்திடு மென்ப மன்னோ. (21)

---

17. தாராய் - மாலையணிந்தவரே. தாதியர் - தோழியர். நிமித்தம் - காரணம். 18. வன்புறு - வலிமையுற்ற. மோக விருங்கடல் - காதல் ஆகிய பெருங் கடல். அனல் - நெருப்பு. வெகுளி - கோபம். மின்னிடை - மின்னற் கொடி போன்ற இடுப்பு. வன்றளைப் படுத்துவன் - வலிய விலங்கு இடுவான். கடிது - விரைவு. 20. இணையறுமா - ஒப்பற்ற குதிரை. படி - பூமி. மன்றலங்குழலி - மணம் பொருந்திய கூந்தலை யுடையாள்.

ஸ்ரீநிவாசன் வேட்டையாடி வந்து பதுமினியைக் கண்ட
அத்தியாயம் முற்றிற்று.

## 39. வகுளமாலிகை பதுமினியிடத்தில் தூது சென்ற அத்தியாயம்.

### எழுசீர் விருத்தம்.

இருளியா முருவ மிச்சையிற் கொண்ட
வெம்பிரா னிலைகட லாடைத்
தாணிமா னுவப்ப வுரைத்தமை மற்றுஞ்
சாற்றென நைமிச மென்னும்
அரணிய மேவு மந்தணர் வினவ
வருள்செறி விழியினு னோக்கிக்
கருணைமீ தூரச் சூதமா முனிவ
னமுதெனக் கழறுவ தானுன். (1)

பாகெனு மொழியா ளினியபார் மடந்தை
பரிவுடன் கேட்டுளங் களிர்ப்பச்
சூகர வுருவச் சுருதிநா யகமால்
சொற்றன னக்கணன் சேட
நாகமுற் றுயரு நவமணி யொளிசெய்
நலந்திகழ் கின்றமண் டபத்தின்
ஏகிவெண் டாள நிரைத்தணி வித்த
விணையறு பசும்பொனு விலங்கும். (2)

மஞ்சமீ தந்தப் பதுமினி யென்னு
மங்கையர்க் கரசியைக் கருதி
விஞ்சிய மோக தாகமீ தூர
மெய்வெதுப் புறச்சய னித்தாங்
கஞ்சன வண்ண னிருந்துழி சகியா
யழகுறு வகுளமா லிகையாம்
மஞ்செனுங் குழலி யஞ்சலிப் பதற்காய்
வந்தடி வணங்கியே நின்று (3)

---

1. இருளி - பன்றி. தாணி - பூமி. அரணியம் - காடு. 2. பாகு - வெல்லப் பாகு. சூகரம் - பன்றி. சுருதி - வேதம். சேட நாகம் - சேஷகிரி. தாளம் - முத்து. 3. மஞ்சம் - கட்டில். வெதுப்பு - தாபம். அஞ்சன வண்ணன் - கரிய மை போன்ற மேனியன். மஞ்சு - மேகம். குழலி - கூந்தலுடையவள். அஞ்சலிப்பது - வணங்குதல்.

விதியான் முதலாம் விண்ணவர் தமக்கும்
விழிக்கெதிர் விளங்குத லரிய
பதமலர் களைத்தன் னிணைக்கரத் தாலும்
பத்திமை கொடுநனி வருடப்
புதிதலர் கமல விழிமலர் திறந்தெப்
பொருளுக்கு மிறைவனைக் கிடலும்
மதிநுதற் பவள வாய்க்கருங் கயற்கண்
வகுளமா லிகையுணர்ந் துரைப்பாள். (4)

ஏதுகா ரணத்தா லழுதுசெய் யாம
லினஞ்சய னித்திருக் கின்றீர்
காதலா லடையுந் தொழும்பர்தங் கருத்தின்
கவ்வையைக் களைந்தருள் செய்யும்
ஆதியே நினது நெஞ்சினிற் றுயா
மணுகுவ துண்டுகொ றுரங்க
மீதெழுந் தருளி மிருகவேட் டஞ்செல்
வேலையின் விழிக்கிலக் காக (5)

ஏதெனுங் கண்ட துளதுகொல் கடல்சூ
ழிப்புவி வருமினோ பொன்னு
மீதுல குறையுங் கன்னியோ வெவளோ
விழிவலைப் படுத்தினள் போலத்
தாதலர் கமல வானன மெனக்குச்
சாற்றுகின் றதுசொலற் கரிய
நீதநின் மனத்தைக் கவருதற் குரிய
நேரிழை யாவளென் னுதலும் (6)

---

4. விதி - பிரமன். இணைக்கரத்தானும் - இரண்டு கைகளாலும். வருட - தடவ. இறைவன் - கடவுள். மதிநுதல் - சந்திரன் போன்ற நெற்றி. 5. தொழும்பர் - தொண்டர். கவ்வை - இடர்கள். துரங்கம் - குதிரை. இலக்கு - குறி. 6. பொன்னுமீதுலகு - பொன்னுலகு என்னும் தேவர் உலகம். தாது - பூந்துகள். கமலவதனம் - தாமரை மலர் போன்ற முகம். நேரிழை - செம்மையான அணிகலன்களுடைய பெண்.

மின்னெழிற் பீதாம் பரதான் வினவி
விருப்பொடு வகுளமா லிகையைத்
தன்னிரு விழியா னோக்கிநெட் டுயிர்ப்புத்
தழைத்தெழ வாய்திறந் துரைப்பான்
முன்னொரு திரேதா யுகத்தினிற் றவத்தான்
முதிர்புலத் தியன்மக னீன்ற
சென்னிபத் துடைய விராவணன் விரிஞ்சித்
தேவனை யெணித்தவஞ் செய்தே (7)

மானிட ரல்லா மற்றுளோ ராலே
மரணமில் லாவரம் பெற்றுத்
தானதி தருக்குப் பெற்றுவா னவரைச்
சந்திர சூரியர் தம்மை
ஈனமி லட்ட பாலகர் தம்மை
யிருஞ்சமர் முருக்கியாங் குழக்கி
வானினு மிந்த மண்ணினுந் தன்னின்
வலியவ ரில்லெனச் செருக்கி (8)

அந்தணர் தமக்கு முனிவா ருக்கு
மரியபே ரலக்கணைத் தினமும்
தந்திலங் கையில்வாழ் காலையி னொருநாட்
டவமொளி மணிபல விமைக்குஞ்
சுந்தர மிகுந்த புட்பக மிசையிற்
றுனைந்துவிண் வழிச்செலும் வேலை
இந்திரை வேத வதியெனப் பிறந்தோ
ரிருடியாச் சிரமத்தி னிருந்தாள். (9)

---

7. மின்னெழில் - மின்னலின் அழகு. பீதாம்பரதான் - பொன்னுடை அணிந்தவன். நெட்டுயிர்ப்பு - பெரு மூச்சு. புலத்தியன் மகன் - விசிரவசு முனிவன். சென்னி - தலை. விரிஞ்சித் தேவன் - பிரமன். 8. அதிதருக்கு - மிக்க கர்வம். அட்டபாலகர் - எட்டுத் திக்குகளையும் காவல் செய்யும் தேவர்கள். சமர் முருக்கி - போரில் தோற்கடித்து. உழக்கி - வருத்தி. 9. அலக்கண் - துன்பம். சுந்தரம் - அழகு. புட்பகம் - வான ஊர்தி. துனைந்து - விரைந்து. இந்திரை - இலக்குமி.

அக்கனி யெழிலைத் தயமுக னோக்கி
யகத்தடங் காமயல் மீறிப்
பக்கமாங் குறளும் பவளவாய்க் கருங்கட்
பசுங்கிளி யிவனுளந் தேறி
மைக்கரும் புருவங் குனிதர வெகுண்டு
மறுகியித் தரைமிசை யென்னை
ஒக்குநல் லெழில்வா யொருபெண லாவி
யொழிகுதி நீயெனச் சபித்து (10)

தானுமக் கினியி னுடலினை யெரிப்பத்
தருக்குறப் பொருதொழி னிருதர்
கோனுமவ் வேத வதிமட வரலாற்
கூறுசா பங்கொடு தனது
மாநக ரணுகி யிருந்துழி யுடலை
வன்னியா லெரித்தவள் சென்னாள்
போனபின் னந்த விலங்கையி னெழில்சேர்
பொய்கையி னொருமரை மலர்மேல் (11)

அவதரித் தனளவ் வதிசயந் தனையி
ராவணற் கரக்கர்க ளறையச்
செவிமடுத் தருகிற் சென்றுநா லைந்து
கண்ணினுஞ் சீருற நோக்கிக்
கவலையுண் மலிய முன்னைநாள் வேத
வதியிடுங் கடியசா பத்தைத்
தவாற நினைந்திக் கனியினு னமக்குச்
சாவுசார் வுறுமென வெண்ணி (12)

பெட்டியின் முளரிப் போதுட னந்தப்
பெண்ணைவைத் திறுகுற மூடி
வட்டவா ரிதியின் விடவதை மிதிலை
வளநகர்க் கருகிலோர் வயினில்

10. கனியெழில் - கன்னியின் அழகு. தயமுகன் - இராவணன். மயல் - காதல். ஆவி - உயிர். 11. தருக்கு - கர்வம். நிருதர் கோன் - அரக்கர் தலைவன். மடவரல் - இளம் பெண். வன்னி - நெருப்பு. மரை மலர் - தாமரைப் பூ. 12. தவாறு - தப்புதல். கனி - கன்னிகை. 13. முளரிப்போது - தாமரைப் பூ. வாரிதி - கடல். வயின் - இடம்.

மட்டறு புகழ்சேர் வருணமன் கொணர்ந்து
வைத்திருந் தனனெடு நாட்சென்
றிட்டபின் னொருநாட் சனகமன் றுரக
வேள்வியை யினிதுற நடத்த
எண்ணியவ் விடத்தி னெய்திமா ழையினு
லியற்றிய வலத்தினு லுழலும்
மண்ணிடைப் பேழை புறத்தெழ வதனை
மகிழ்வுடன் சனகனு நேமி
அண்ணலங் கையினுற் றிறந்தத னுள்ளே
யழகெலாந் திரண்டொரு படிவம்
நண்ணிய தெனவாய்ந் திருந்தகன் னிகையை
நாட்டியற் புதமிஃ தெனவே (13)
மனத்திலா றின்ப மலிந்தெழ வெடுத்து
வளர்க்கயா னிராமனென் றுதித்துக்
கனக்கருங் கூந்தற் சானகி யெனும்க்
கனியைவேட் டின்றவன் மொழியால்
வனத்தடைந் தெழில்செய் தண்டகா ரணிய
மருவிய போழ்துல கங்கள்
அனைத்தையு மிடுக்கண் செயுமிரா வணனு
மரக்கனங் கொளிந்துவந் தணுகி (14)
சீதையை யெடுத்துச் சிறையிட வவனைக்
கிளையொடுந் தென்புலஞ் சேர
மோதிவீ டணற்கு முடிகவித் தனலிற்
சனகியை மூழ்கியங் குறச்செய்
போதுநான் முகன்பிஞ் ஞகன்புரந் தரனும்
புலவருந் தயரதன் றானும்
காதலி னணுகி யழகிய சனகி
கற்பினைப் புகழ்ந்துகொண் டாட (15)

(16)

மட்டு - அளவு. வருணமன் - வருணனாகிய தேவன். துரக வேள்வி - அசுவ்மேத யாகம். 14. மாழை - பொன். அலம் - கலப்பை. உழலும் - உழுதலைச் செய்யவும். பேழை - பெட்டி. நேமி - ஆஞ்ஞா சக்கரம். 15. கனக்கருங் கூந்தல் - மேகம் போலக் கரிய கூந்தல். வேட்டு - விரும்பி. இடுக்கண் - இடர். 16. தென்புலம் - யமலோகம். அனல் - நெருப்பு. பிஞ்ஞகன் - சிவன். புரந்தரன் - இந்திரன். புலவர் - தேவர்.

சானகி யுடனே யயோத்திமா நகரிற்
சார்ந்தொளிர் மணிமுடி தரித்து
வானவர் புவியின் வாழ்பவர் மகிழ
மனுநெறி முறைவழு வாமல்
தானர சியற்று நாளினிற் காழி
யன்புன்மை சாற்றிய தவற்றால்
ஈனமில் குணத்தாள் சீதையைக் கருப்பத்
துடனிலக் குமணனாற் கொடுபோய் (17)

அசைவருந் தவவான் மீகனுச் சிரமந்
தனின்விடும் படிசெய்தே னுங்குக்
குசலவர் பிறந்தார் பின்பொரு காலங்
குரகத மேதநா னியற்ற
இசைவுறு மனங்கொண் டழகொளி சிறந்த
விரணியச் சீதைசெய் தருகின்
வசையற வைத்து மகத்தினை முடிக்குங்
காலைவான் மீகமா முனிவன் (18)

தனையர்க ளிருவ ருடனெழிற் சனகி
தனையழைத் தணுகியென் முன்னே
துனியறு வசனங் கொடுசமா தானஞ்
சொலிவிடச் சீதையை யான்பார்த்
தனலினிற் படிந்து வாவென மொழிந்தே
னப்படி யவள்செய் துவந்து
மனவருத் தத்தான் மண்ணுளே நுழைந்தாண்
மைதிலி யெனவகுத் துரைத்தே (19)

பின்னருஞ் சீநி வாசனல் வகுள
மாலிகை யெனும்பெணை நோக்கிப்
பன்னுவா னெழுநான் காவது கலியிற்
பங்கய னான்விணோர் முனிவர்

---

17. காழியன் - வண்ணான். தவறு - தப்பு. 18. குரகத மேதம் - அசுவமேத யாகம். இரணியச் சீதை - பொன்னாற் செய்த சீதை வடிவம். மகம் - யாகம். 19. தனையர் - குழந்தைகள். துனி - வெறுப்பு. அனல் - நெருப்பு. மைதிலி - மிதிலை யரசன் மகள் ஆகிய சீதை. 20. பன்னுவான் - சொல்லுவான். பங்கயன் - நான்முகன்.

மன்னியே பிராட்டி தனைத்துதித் திந்த
மாநிலத் தவதரித் திடுவாய்
என்னவேண் டலுமச் சீதையா னவடா
னிலங்குநா ராயண புரத்தின் (20)

பூமியிற் பிறந்தா காசமன் வளர்க்கப்
பொற்புற வளர்ப்பது மினியாள்
தேமலர்ச் சோலை தனின்மலர் கொய்யச்
சேடிய ருடனடைந் துலவ
மாமிசை யிவர்ந்து வேட்டநான் சென்று
வனத்திடைக் கண்டன னந்தத்
தாமமென் குழலி யழகினை விரித்துச்
சாற்றரி தெனினுஞ்சாற் றுவன்கேள். (21)

முகில்பிறை சிலைவேல் சண்பகங் குமுத
முல்லைபொன் னூசல்கண் ணாடி
நகுவன கழையாழ் காந்தளென் றிவைக
ணறுங்குழ னுதல்புரு வங்கண்
மிகுமெழி னாசி வாயொளிர் முறுவல்
விளங்குமஞ் செவிகளங் கழுத்துத்
திகழ்திர டோண்முன் கையகங் கையாந்
திருவுறப் புகளினா ளணும் (22)

மலைவடத் திலைமின் வாழைஞெண் டேறு
வானகு மாமைதா மரையும்
முலைவயி றிடைநற் றொடைமுழந் தாளேர்
முதிர்கணைக் கால்புற வடிநன்
னலமலி யுளங்கா லெனுமவ யவத்தை
நாடியுட் பயங்கொளு மாயின்
இலகுபொன் னணிக டமக்கழ களிப்பாட்
கெப்பொரு ளுவமையா வதுவே. (23)

21. தேமலர் - தேன் பொருந்திய பூ. மா - குதிரை. இவர்ந்து - ஏறி. தாமம் - மாலை. 22. முகில் - மேகம். சிலை - வில். நகுவனகழை - விளங்கும் காட்டு மூங்கில். இச்செய்யுள் பெயர் நிரனிறையணி. 23. இதுவும் பெயர் நிரனிறையணி. வடத்திலை - ஆலிலை. ஞெண்டு - நண்டு. வரால் - ஒரு பருமீன்.

ஆனதா னீசென் றப்பது மினியை
யழைத்திவட் கொணரினென் றுயரம்
பானுமுன் னிமமா மெனப்பகர் தலுமுட்
பரிவுடன் வகுளமா லிகையாம்
தேனிகர் மொழியாண் முகுந்தனை நோக்கிச்
சென்றழைத் திவண்வரு வேனம்
மானுறை பதிக்கே கும்வழி யெனக்கு
வழங்கென மனமகிழ் துரைப்பான். (24)

எதிருறு மிந்த நரசிங்கக் குகையி
னெய்தியென் மலையினின் றிழிந்து
முதிர்தவ முடைய வகத்திய னென்னு
முனிவனுச் சிரமத்தை நண்ணிக்
கதிதருஞ் சொன்ன முகிநதிக் கரையிற்
கவினுநற் பிரமமாண் முனிவன்
சதிருறு வனத்தைச் சார்ந்தெழிற் பதும
சரசினீ ராடியாங் குறையும் (25)

அறுசீர் விருத்தம்.

தவசினிற் சிறந்த சாயா சுசங்கரென் னும்பேர் சார்ந்த
உவமையி லோரை நோக்கி யுவப்பொடு மவணின் றேகி
நவையகல் சுகன்பூ சிக்குங் கண்ணனை நாடி யேத்திப்
பவமற வுயர்ந்த சொன்ன முகிநதி கடந்தப் பாற்போய் (26)

அளவிகு வனமெ னைத்துங் கடந்துய ராணி யென்னுந்
தளிர்வன மேவி யந்திற் றவனநீத் தப்பாற் சார்ந்து
களிகொளா காய வேந்தன் கடிநகர் கதுவி யந்த
ஒளிர்மணிப் பூணி னானை யுறவுசெய் தழைத்துக் கொண்டே (27)

---

24. பானு - சூரியன். இமம் - பனி. பரிவு - துயர். முகுந்தன் - திருமால். 25. இழிந்து - இறங்கி. சொன்னமுகி நதி - பொன்முகலியாறு. சரசு - தடாகம். 26. உவமை - ஒப்பு. உவப்பு - மகிழ்ச்சி. நவை - குற்றம். பவம் - பிறப்பு. 27. அளவிகு - அளவு கடந்த. அந்தில் - அவ்விடம். கடிநகர் - காவலுடைய ஊர். கதுவி - அடைந்து.

வாவென விளம்பக் கேட்ட வகுளமா லிகையோர் வேக
மாவின்மீ திவர்ந்து கும்ப முனிவனாச் சிரம மன்னித்
தேவரும் புகழுஞ் சொன்ன முகிநதி கடந்து சென்று
மேவின எராணி யென்ன விளங்குபூங் காவின் மன்னோ. (28)

அவ்விடத் தெய்ப்பா றிப்பின் னன்புற வியம னாளுஞ்
செவ்விய நகர்செ றிந்து செல்லுறும் வட்டை யின்கண்
திவ்விய வுருவக் கன்னி சேடியர் தம்மை நோக்கி
நவ்வியை மருட்டுங் கண்ணீர் யாவர்நீர் நவின்மி னென்றாள். (29)

என்றலு மிகுளை மார்க ளிளநகை செய்து நின்று
மன்றலங் கூந்தற் செவ்வாய் வகுளமா லிகையை நோக்கி
வென்றிகொள் வியமன் கோயின் மேவுதா தியர்கள் யாங்கள்
குன்றெனு முலையா யென்று கூறியே மறித்துஞ் சொல்வார். (30)

எங்கள்பூ பதிக்கு மண்ணி னுதித்தெழின் மகளாய் வந்த
அங்கயல் விழியி னாளை யழைத்துமுன் பொருநாள் யாங்கள்
கொங்கலர் புறவ மெய்திக் கொழுமலர் கொய்து சூடிப்
பங்கயப் பதங்கள் சேப்பப் பரிபுரம் புலம்பச் சென்று (31)

ஆடியங் கசுணஞ் சிந்தை யயர்தர வினிய பாணி
பாடிநின் றுலவுங் காலை யோர்பழு மரத்தின் கீழ்பால்
கோடிவேள் படிவங் கூடி யோருருக் கொண்டா லன்ன
தேடரு நம்பி நின்ற செவ்வியைக் கண்ணுற் றாங்கண் (32)

அதிசய மடைந்து நங்கள் பதுமினி யறைதல் கேளா
இதயநெக் குருகிக் கண்டோ மிணையிலா நம்பி தன்னைப்
புதியபொன் னாடை சாபம் பொருகணைப் புட்டி றாங்கி
எதிருறத் தோன்றிக் காணா திமைக்குமுன் கரந்து போனான். (33)

---

28. மா - குதிரை. கும்ப முனிவன் - அகத்திய முனிவர். பூங்கா - பூஞ்சோலை. 29. எய்ப்பு - இளைப்பு. வியமன் - ஆகாசராசன். வட்டை - வழி. நவ்வி - மான். நவின்மின் - சொல்லுங்கள். 30. இகுளைமார்கள் - தோழியர். மன்றல் - மணம். மறித்தும் - மறுபடியும். 31. கயல் - கெண்டை மீன். கொங்கு - தேன். புறவம் - காடு. பங்கயம் - தாமரை. பரிபுரம் - சிலம்பு. 32. அசுணம் - இசையறிந்து இன்புறும் பிராணி. பாணி - பாடல். பழுமரம் - ஆலமரம். வேள் - மன்மதன். படிவம் - வடிவு. நம்பி - ஆண்மக்களுட் சிறந்தோன். 33. அறைதல் - சொல்லுதல். இதயம் - உள்ளம். நெக்கு - இளகி. சாபம் - வில். பொருகணை - தாக்கும் அம்பு. புட்டில் - அம்பறாத்தூணி.

அற்றைநாண் முதலா யந்த வழகனை யகம்பொ திந்து
மற்றொரு பொருளு மெண்ணாண் மனத்துளே யதிக மோகம்
உற்றுடன் மெலிந்து நங்கள் பதுமினி யுறைத னோக்கிக்
கொற்றவன் கிரக சங்கை யெனவுளந் தனிற்கு றித்தே (34)

பொன்னனைச் சிவணும் வல்ல புரோகிதன் றனைவி ளித்தென்
கன்னிகை கிரக சாரங் கருதியாய்ந் துரைக்க வேண்டும்
என்னவாங் கவன்றான் மெய்ம்மைக் கணிதநூ லெவையு மாய்ந்து
மன்னநின் மகட்கு நல்ல பலன்கள்வாய்த் துளதிக் காலம். (35)

நித்தியப் பயன்க டம்மை நிகழ்த்துவ லவைகே ளிந்த
உத்தமக் கனியோர் செவ்வி யுயர்புரு டனைமுன் னோக்கிச்
சித்தநொந் தயர்ந்தா ளென்று செப்பவவ் வாசகன் கேட்டுச்
சுத்தவந் தணவி தற்கென் செய்வது சோறி யென்றான். (36)

வேதபா ரகனு மந்த வேந்தனை நோக்கி யிந்த
ஏதமி னகரின் பாங்க ரிலங்ககத் தியலிங் கத்துக்
காதர முடனே பாலி னாட்டுதல் செயினிவ் வின்னல்
பீதிகொண் டகலு மென்று பேசவா காச ராசன் (37)

கன்னியர் பலரைக் கூய்நற் கடிமல ரோடு மற்றும்
என்னவேண் டுவன வெல்லா மெடுப்பித்தாங் கேகித் தாணு
தன்னையர்ச் சிப்போ னாலே தவறிலா தாட்டிப் பின்னர்
அன்னமென் னடையீ ரிங்ங னடைதிரென் றுரைப்பக் கேளா (38)

அப்படி மஞ்ச னஞ்செய் தணுகையி னின்னைக் கண்டோம்
செப்பெனு முலையாய் நங்கள் செய்தியி தனைத்துஞ் சொற்றோம்
தப்பற நீயா ரிங்கு வந்தமை சாற்று கென்ன
ஒப்பரும் புரவி மேனின் றிழிந்துவந் தன்பி னோக்கி (39)

---

34. கொற்றவன் - அரசன். கிரகசங்கை - தீக்கோள் பற்றப்படுதல். 35. பொன்னன் - பிருஹஸ்பதி. சிவணும் - ஒக்கும். புரோகிதன் - சுபாசுப காரியங்களில் முன் வைத்துக் கேட்டற்குரிய நிமித்திகன். கிரக சாரம் - கோள்களின் கதி நிலைப்பயன். 36. நிகழ்த்துவல் - கூறுவேன். கனி - கன்னிகை. சித்தம் - உள்ளம். அயர்ந்தாள் - சோர்ந்தாள். சோறி - சொல்லுவாய். 37. வேதபாரகன் - வேதங்களின் எல்லை கண்ட அறிஞன். ஏதம் - குறை. பாங்கர் - பக்கம். ஆதரம் - அன்பு. இன்னல் - இடர். பீதி - அச்சம். 38. கூய் - அழைத்து. தாணு - சிவன். ஆட்டி - திருமஞ்சனம் செய்வித்து. 39. மஞ்சனம் - நீராட்டுதல். செப்பு - குமிழ் பாண்டம். சொற்றோம் - சொன்னோம். புரவி - குதிரை.

வகுளமா லிகைசொல் வாளம் மங்கையர் விருப்ப மெய்த
நிகரறு சேட வெற்பி னின்றிவண் வந்தே னும்மை
அகமகிழ்ந் தினிது நாடி யாரென வினவி னேன்வெண்
ணகைமதி முகத்தீ ரென்று பின்னரு நவில்வ தானாள். (40)

மண்ணினிற் பிறந்தா காய மன்னவன் வளர்த்த காதற்
பெண்ணணங் கினையான் காண வேண்டுமென் றினிதுரைப்ப
வுண்ணயந் திருளை மாத ருவப்பொடு வினவி வாவென்
றண்ணறன் கோயி லூடே யழைத்துடன் கொண்டு போனார். (41)

அன்னகா லையிற்பூ மாதோ ரழகிய குறமா தாகி
மன்னுகா லங்கண் மூன்று மனந்தெளிந் துரைக்க வல்லேன்
என்னவே விளித்தாங் கண்வந் தெய்திட நோக்கி யந்தக்
கன்னிமா ரழைத்துக் கால மூன்றையுங் கழறென் றோதி (42)

முறத்தின்முந் நாழி முத்தை முன்னளந் தெதிரின் வைப்பக்
குறத்தியுட் குதுக லித்துக் கூறுவா ளுமது நெஞ்சில்
குறித்தவோர் பெண்ணைப் பற்றிக் குறிசொலென் றென்னைக் கேட்டீர்
எறித்தவேல் விழியீ ரப்பெ ணிலைமையை யியம்பக் கேண்மின். (43)

புகலரும் பெருமை சேரோர் புருடனைக் கண்ணி னோக்கி
மிகமதி மயங்கி யாக்கை மெலிந்திருக் குளளா லந்த
நிகரறு புருடன் யாவ னெனிலவ னீர்மை யென்னால்
அகநினைப் பவுமென் னுவா லறையவு மடங்கா தன்றே. (44)

ஆயினு மறிந்த வாறிங் கறைகுவ னுலகுக் கெல்லாம்
நாயக னழியா முத்தி நாட்டினன் கமலை மேவும்
தூயவ னநந்த வெற்பன் றொன்மறை முடிவி னின்ற
மாயவ னரச ரூப மருவிநன் மலர்க்கா னண்ணி (45)

40. சேட வெற்பு - திருமலை. நகைமதி முகத்தீர் - விளக்கமுள்ள சந்திரன் போன்ற முகத்தை யுடையீர். 41. இருளை மாதர் - தோழியர் அண்ணல் கோயில் - அரசன் மாளிகை. 42. பூ மாது - பூமிதேவி. விளித்து - அழைத்து. கழறு - சொல்லுவாய். 43. முந்நாழி - மூன்று படி. குதுகலித்து - களிப்புற்று. 44. யாக்கை - உடம்பு. அகநினைப் பவும் - உள்ளத்தால் எண்ணவும். 45. முத்தி நாட்டினன் - வைகுந்தத் தலைவன். கமலை - இலக்குமி. அநந்த வெற்பன் - திருவேங்கட மலையான், மாயவன் - ஆச்சரிய சக்தியுடையவன். மலர்க்கான் - மலர்ச் சோலை.

இந்திரை போலு நுங்க ளெழிற்பது மினியை நாடிச்
சிந்தையி னடங்காக் காதல் செனிப்பவாங் கருகு நின்ற
சுந்தர மலியோர் மாதைத் தூதுவிட் டிருக்கின் ருனப்
பைந்தொடி யிவணும் மோடு பரிவுகூர்ந் திருக்கின் ருளால். (46)

அந்தவுத் தமனைப் பாலி னலைவரு மமுதத் தோடு
வந்தவண் மகிழ்ந்து சேர்ந்த வண்ணமே யிவளுஞ் சேர்ந்து
சந்ததம் பரமா நந்தந் தங்கிவீற் றிருப்ப ளென்று
முந்தொளிர் முறுவ ருென்ற முகமலர்ந் தினிது சொல்லி (47)

என்னிள மகவுக் குச்சிக் கெண்ணெயும் பழந்தூ சொன்றும்
அன்னமுங் கொணர்க வென்ருங் கன்புறப் பெற்றெ ழுந்து
மின்னிடைக் குறத்தி யேக வேற்கணூர் விரைந்து சென்று
மன்னவன் றேவிக் கிந்த வகையெலாம் விரித்துச் சொன்னுர். (48)

சகியர்க ளுரைத்த வெல்லாந் தரணியாந் தாய்கேட் டன்பால்
மகளைமுன் னழைத்து வைத்துன் மனக்கருத் துரைப்பா யென்னத்
திகழ்மதி முகத்தா ளாய பதுமினி தெரியச் சொல்வாள்
அகமகிழ்ந் தினிதி யான்சென் றணிமலர் கொய்யுங் காலை (49)

பொற்பினுக் குவமை யில்லாப் புருடனைக் கண் ணுற் றேனவ்
வற்புத னென்னை நோக்கி யற்றைத்தொட் டிற்றைக் காறும்
அற்பமும் பிரிகி லாதென் னகத்திடை விரும்பி வந்து
நிற்பதி னுல்வே றென்று நிலாவுத லிலைநெஞ் சென்ருள். (50)

என்றவா சகங்கேட் டன்னை யிதயமுண் மகிழ்ந்தி ருப்ப
மன்றலங் கூந்தற் செவ்வாய் வகுளமா லிகையாந் தூதி
இன்றுநம் வரவிப் போதே பலித்ததென் றின்பம் வீறித்
தன்றனி நெஞ்சத் தோகைத் தழைத்திட விருந்தா ளன்றே. (51)

---

46. இந்திரை - இலக்குமி. சுந்தரம் - அழகு. பைந்தொடி - பசும் பொன்னுல் ஆகிய வளை அணிந்த பெண். 47. பாலின் அலை - திருப்பாற் கடல். சந்ததம் - எப்போதும். முறுவல் - சிரிப்பு. 48. உச்சிக்கு எண்ணெய் - தலையிற் பூச எண்ணெய். பழந்தூசு - பழைய ஆடை. மின்னிடை - மின்னற் கொடி போன்ற இடுப்பு. வேற்கணுர் - வேல் போன்ற கண்களையுடைய மகளிர். 49. சகியர் - தோழிமார். 50. பொற்பு - அழகு. அற்றை - முன் நாள். இற்றை - இந்நாள். 51. மன்றல் - மணம். ஓகை - உவப்பு.

கோலமா முதலன் போடு குரைகட லாடை பூண்ட
ஞாலமா தினுக்கிவ் வாறே நவின்றன னென்று சீர்கொள்
நூலெலா முணர்ந்த சூத னென்மைசால் சௌன காதி
சீலமா முனிவர் தூய செவிக்கமு தெனச்சொற் றானல். (52)

பேர்கெழு வராக மென்னப் பேசிய புராணத் துள்ளால்
ஏர்கெழ வினிதி யம்பு மிக்கதை கற்போர் கேட்போர்
பார்கெழு செல்வ மெல்லாம் பரிவுட னெய்திப் பின்னர்
சீர்கெழு பழிவில் வீடு சென்றுவீற் றிருப்பர் மாதோ. (53)

**வகுளமாலிகை பதுமினியிடத்தில் தூதுசென்ற அத்தியாயம் முற்றிற்று.**

## 40. பதுமினி கல்யாணத்திற்கு நகர்வர்ணனை உரைத்த அத்தியாயம்.

### கலிநிலைத்துறை.

கோதி லேனமால் குவலய மடந்தைகேட் டுவப்ப
ஓதும் வாய்மையை யின்னமு மெமக்குரை யென்று
சீத மேவுறை மிசவனத் தவர்கள்செப் பிடலும்
சூத மாமுனி மகிழ்வொடுஞ் சொல்வதா யினனால். (1)

ஆட ளிக்குலஞ் செறிகுழற் றாணியா மணங்கு
மாடி ருந்தநன் மகளிரை நோக்கிநும் மோடு
கூடி வந்தசுந் தரியிவள் குணநல முதல
நாடி னொப்பற வுயர்திரு நங்கைபோன் றுள்ளாள். (2)

எங்கு நின்றிவண் வந்தன ளார்கொலென் றிசைப்பக்
கொங்கு விம்மிய கோதையர் கூறுவர் யாங்கள்
அங்கி யம்பகன் றனக்கபி டேகமன் பினிற்செய்
திங்கு றும்மிடை வழியினி லெம்முடன் கலந்தே (3)

---

52. கோலமா முதல் - ஆதிவராக மூர்த்தி. ஞாலமாது - பூமிதேவி. 1. கோது - குற்றம். ஏனமால் - வராகமூர்த்தி. குவலயம் - பூமி. சீதம் - குளிர்ச்சி. 2. அளிக்குலம் - வண்டின் கூட்டம். குழல் - கூந்தல். அணங்கு - பெண். மாடு - பக்கம். 3. கொங்கு - தேன். கோதையர் - கூந்தலார் ஆகிய பெண்கள். அங்கி அம்பகன் - நெருப்புக் கண்ணன் ஆகிய சிவன்.

உன்னி டத்தெதோ காரிய வுறுதிபே சுதற்காய்த்
தன்ன கத்திடை நினைந்துசார்ந் தனளவ டனைநீ
என்னி மித்தமென் னிடத்தின்வந் தனையென வினவி
னன்ன யம்பெற வனைத்தையு நவில்வளென் றறைந்தார். (4)

அன்ன வாசகங் கேட்ட லும் பதுமினி யன்னை
முன்னி ருந்தநல் வகுளமா லிகைமுக நோக்கி
என்ன காரணத் தாலிவ ணெய்தினை நீயார்
அன்ன மேசொலென் றறைதர வவளறை குவளால். (5)

தாம மென்குழற் றரணிகேள் வகுளமா லிகையென்
நாமம் வேங்கட வரையுறை நம்பனோர் நாளில்
வாம மேவுமோர் மன்னென வடிவுகொண் டுயர்ந்த
சேம வாசிமேல் விலங்குவேட் டஞ்செலுங் காலை (6)

எண்ணி லாவன நதிநத மினிதுறக் கடந்து
நண்ணி நல்வளஞ் சிறந்ததோர் நந்தன வனத்தில்
விண்ணின் மின்னலோ ருருவெடுத் தனையமெல் லியலாய்த்
தண்ணந் தாமரைப் பெண்ணென வொளிநனி தவழ (7)

அங்க முற்றுமொண் மணிப்பணி யாலலங் கரித்துக்
கொங்கு விம்முதண் மலர்த்தொடை குழலின்மேற் புனைந்திட்
டெங்கு நன்மணம் வீசுசாந் தெழிலுறத் திமிர்ந்து
இங்கி தந்தெரி யனமென நடந்திடை துவள (8)

எழுசீர் விருத்தம்.

குயிலின நாணக் கூவியஞ் சிலம்பு
கொஞ்சிட வெழில்கொளுந் தோகை
மயிலினங் கூச முகமதி வெயர்ப்ப
மாழைநன் மேகலை திகழ

4. நிமித்தம் - காரணம். நவில்வாள் - சொல்லுவாள். 5. இவண் - இவ்விடம். 6. தாமம் - மாலை. நம்பன் - யாவரும் நம்பிப் புகல்பெறற்கு உரிய பெரியோன். வாமம் - அழகு. வாசி - குதிரை. விலங்கு வேட்டம் - மிருக வேட்டை. 7. நதி - பேராறு. நதம் - சிற்றாறு. தாமரைப் பெண் - இலக்குமி. 8. பணி - அணிகலன். கொங்கு - தேன். தொடை - மாலை. சாந்து - சந்தனம். இங்கிதம் - குறிப்பு. 9. மாழை - பொன்.

அயில்விழி பிறழக் குறுநகை யரும்ப
வசைந்தசைந் துலவிய நிறுது
நயமுறு செல்வத் திருமகட் கண்டு
நயந்தெழின் மாலுமா லாகி (9)

வேங்கட மலையை யடைந்தெனை நோக்கி
வியமன னினிதுறப் புரக்கும்
தேங்கமழ் பொழில்சூழ் பதியினவ் வரசன்
றேவிமுன் சென்றுகண் டவடன்
றீங்கறு மெழில்சால் பதுமினி யென்னுஞ்
செல்வியைக் கேட்டுவா வென்று
பாங்குட னயந்தெற் பணிப்பயா னுனது
பாங்கரின் விரைவினி லடைந்தேன். (10)

அகன்றசெங் கமல மனையகண் மயிலே
யரசன்மாட் டணுகியென் வரவைப்
புகன்றுநன் காக நினதுளக் கருத்தும்
புதல்வியி னெண்ணமு முணர்வுற்
றுகந்ததை யெனக்கிங் குரையென நவில
வொள்ளிய தரணியின் சால
மகிழ்ந்துதன் கணவற் குரைசெய வவனு
மனத்ததி விருப்பமீ தூர (11)

தகைபெறு மமைச்சர் தமைவரக் கூவித்
தன்மக ளோயுமரு கிருவி
வகுளமா லிகையை வருவித்தாங் கவடன்
வாய்மைகேட் டகத்தினி லோகை
மிகநறுங் கலைதேர் புரோகித வேத
விப்பிர னெழின்முக நோக்கி
மகிழ்வுட னெமது மகள்பது மினியை
வதுவைசெய் தளிப்பநன் முகூர்த்தம் (12)

---

அயில் - வேல். மால் - மயக்கம். 10. வியமனன் - ஆகாசராசன். புரக்கும் - காக்கும். பொழில் - சோலை. எழில் - அழகு. பணிப்ப - கட்டளையிட. பாங்கர் - பக்கம். 11. உகந்ததை - விரும்பியதை. மின் - மின்னற்கொடி போன்ற பெண். 12. அமைச்சர் - மந்திரிகள். இருவி - இருக்கச்செய்து. ஓகை - மகிழ்ச்சி. விப்பிரன் - பிராம்மணன். வதுவை - மணம்.

ஆய்ந்துரைக் குதியென் றறைந்திட வந்தப்
புரோகித னமரர்க டமக்கு
வாய்ந்தமந் திரியை வரவழைத் தவனுந்
தானுமாய் மகிழ்ந்தினி திருந்து
தேய்ந்தறண் மருங்குற் கனிமதி நாட்குஞ்
சேடமா மலையுறை திருமாற்
கேய்ந்திடு மோண மெனுந்திரு நாட்கு
மினியநற் பொருத்தமென் றுரைத்தே (13)

கலிவிருத்தம்.

மித்திரன் விடையிடை மேவு திங்களில்
உத்திரத் தினின்மன முவப்பொ டுன்னெழிற்
புத்திரி தனைமணம் புரிந்து வேங்கட
அத்திரி மாலினுக் கன்பி னல்கினால் (14)

எப்பொழு தினுஞ்சுக மெய்தி யின்பமாய்
ஒப்பற வாழ்வளென் றோதக் கேட்டலும்
தப்பறு மிறைவன்பொன் றனைமி கத்துதி
செப்பிவிண் ணவர்பதி செலவி டுத்தனன். (15)

மாதவன் றூதியாய் வந்த மங்கைதன்
சீதநன் மதிமுகஞ் சிறப்ப நோக்கியே
ஏதமில் வேங்கடத் தானை யெய்திநீ
ஓதுவ தேதெனி னுரைப்பல் கேட்டியால். (16)

வருநலம் பொருந்துவை காசி மாதத்தின்
திருவுறு முத்திர நாளிற் சீர்நலந்
தருமண முகூர்த்தநா டான்கு றித்ததென்
றுரைசெய்து பின்னுமாங் குரிய வாம்பொருள் (17)

---

13. உரைக்குதி - சொல்லுவாய். கனி - கன்னிகையாகிய பதுமினி. கனிமதி நாள் - புரட்டாசி மாசத்து மிருகசீர்ஷ நாள். சேட மலை - திருமலை. 14. மித்திரன் - சூரியன். விடை - ரிஷபராசி. திங்கள் - மாசம். அத்திரி - மலை. 15. இறைவன் - அரசன். பொன் - பிருஹஸ்பதி. விண்ணவர்பதி - தேவருலகு. 16. தூதி - தூது வந்த பெண். சீதம் - குளிர்ச்சி. ஏதம் - குற்றம். உரைப்பல் - சொல்லுவேன். 17. உத்திர நாள் - உத்தர பல்குந நட்சத்திரம் உள்ள நாள்.

வேண்டுவ கொண்டிவண் வரவி ளம்பெனு
ஆண்டகை மொழிதர வன்ன காலையின்
நீண்டவேல் விழியினு ணெஞ்சு ளேமகிழ்
பூண்டவ ளாயெழுந் தேகும் போழ்தினே (18)

சுகனெனு மொருவனைத் துணைசெய் வான்கொடு
வகுளமா லிகையுடன் வழிஇக்கொ ளென்றெழில்
நகைமுகப் பதுமினி நவின்ற னுப்பியங்
குகவையங் கடலினுழ்ந் துறையுங் காலையே (19)

## எழுசீர் விருத்தம்.

மண்ணவர் வணங்க வானவர் புகழ
மனுநெறி முறைதவ றூமே
கண்ணகன் ஞால முழுவதுங் கருணை
யொடுகதிர் மதியெனத் திகழும்
தண்ணவெண் கவிகை நீழலிற் புரக்குந்
தாமவேல் வியனெனு நாமத்
திண்ணிய விறைதன் குமரனை நோக்கிச்
சிந்தையுண் மகிழ்ந்துசெப் புவனுல். (20)

சேடவெற் புறைமா றனக்குநஞ் செல்வத்
திருமக டனக்குநன் மணமென்
றேடவிழ் மலர்த்தா ரிந்திரன் முதலா
மிறையவர்க் குரைத்துவா வென்ன
நீடெழிற் குமா னம்மொழிப் படிபோய்
நிகழ்த்தவா னவர்க்கிறை மகிழ்ந்து
பீடுடைக் கடவுட் டச்சனை நோக்கிப்
பிறங்குநா ராயண புரத்தை (21)

---

18. ஆண்டகை - ஆண் மக்களுள் சிறந்தோன். 19. நகை முகம் - ஒளி பொருந்திய முகம். உகவை - மகிழ்ச்சி. 20. ஞாலம் - பூமி. கதிர் மதி - கிரணங்களையுடைய சந்திரன். தண்ண - குளிர்ச்சி யுடைய. கவிகை - குடை. தாமம் - ஒளி. 21. இறையவர் - தேவர்கள். வானவர்க்கு இறை - தேவர்களுக்குத் தலைவன் ஆகிய இந்திரன். பீடு - பெருமை. கடவுட் டச்சன் - தேவ தச்சன் ஆகிய விசுவகர்மா.

திருவுறப் புனைதல் செய்கென வவனுஞ்
சென்றுநா ராயண புரத்தை
மருவுநன் மணிக ளாலுமா ழையினும்
வளங்கொளுண்மண் டபமதி னிலவும்
பரிதியி னவிரு மொளிகெட விமைக்கும்
பந்தரும் பண்புறச் சமைத்துப்
பொருவருந் தாளம் பொற்கலை கொடுமேற்
பொற்பவெங் கணுநனி பொதிந்து (22)
மனையெலாம் புதுக்கிக் கதலிகை நிரைத்து
மருங்கெலாம் வாசநீர் தெளித்துத்
தினமெலா மொளிர நவமணிக் கோலந்
தீட்டிநல் விதானமேல் விரித்துக்
கனியெலாங் கால்க டொறுநிரைத் தலர்ந்த
கடிகமழ் மலர்த்தொடை தூக்கி
இனியதாங் கரும்பு பூகநீள் கதலி
யெங்கணு மியைபுற நாட்டி (23)
பூரண கலயம் வேதிகை தோறும்
பொற்பநன் கமைத்தொளிர் மணியால்
தோரண மணிக ளாலினி தமைத்துத்
தூயவிண் ணவரொடு நலனு
ராரண முனிவர் வியப்புற வழகா
யணிதல்செய் ததன்பினர் வெள்ளை
வாரண மிவர்ந்திந் திரனரம் பையர்கண்
மருங்குற மகிழ்ந்தினி தெய்தி (24)
கற்பகத் தருவின் கடிகமழ் நறும்பூக்
கைகொடப் பதியெலாந் தூய்நற்
பொற்புற நிறைத்தா னளவிகு தனதா
னியங்களைப் புட்பக விமானன்

---

22. திருவுற - அழகு பொருந்த. புனைதல் - அலங்கரித்தல். மாழை - பொன். பரிதி - சூரியன். பொருவரும் - ஒப்பற்ற. தாளம் - முத்து. பொற்கலை - பொன் ஆடை. 23. கதலிகை - கொடி. விதானம் - மேற்கட்டி. மலர்த்தொடை - மலர் மாலை. பூகம் - கமுகு. கதலி - வாழை. 24. கலயம் - கலசம். வேதிகை - திண்ணை. ஆரணம் - வேதம். வாரணம் - யானை. 25. தரு - மரம். தூய் - தூவி. பொற்பு - அழகு. புட்பக விமானன் - குபேரன்.

பற்பல குவையாய் மனையிடந் தோறும்
　　பண்புற நிரப்பினு னியமன்
அற்பமும் பிணிக ளெவர்க்குமங் கணுகா
　　தகற்றின னன்புளஞ் செறிந்தே. (25)

வருணனுங் கெய்தி நவமணிக் குவாலம்
　　மனையுழை தோறுநன் கமைத்தான்
நிருதிசெஞ் சூலி சதாகதி யழலோ
　　னெஞ்சுற வந்தவ ரவர்கட்
குரியவை கொணர்ந்தங் குதவின ரிவ்வா
　　றோதநீர்க் கடல்புடை சூழும்
தாணிவா ழரசர் தத்தமக் குரிய
　　தாம்பொருள் களைவந்து தரவே (26)

இந்திர னகரு மளகைமா நகரு
　　மிதற்கொரு சிறிதுமொவ் வாவென்
றந்தர வாணர் வியப்புற மிகவு
　　மணிபெற வேய்தர வாங்குச்
சந்துவந் தகன்ற பைங்கொடி சுகனுஞ்
　　சாரண னெடுவிரை வினில்வை
குந்தநன் மலைய னருகுற வணுகிக்
　　குந்தம்விட் டிறங்கியஞ் சலித்தே (27)

பலித்தது நாயேன் சென்றகா ரியநற்
　　பழமறை முதலெனுந் தேவே
சிலைத்தழும் பணிதோள் வியமன னளித்த
　　செல்வியென் னுடனனுப் பியமெய்

---

குவை - குவியல். 26. குவால் - குவியல். நிருதி - தென் மேற்குத் திசை பாலகன். செஞ்சூலி - சிவந்த சூலம் உடைய ஈசானன். சதாகதி - வாயு. அழலோன் - அக்நி தேவன். ஓதநீர் - கடல். தாணி - பூமி. 27. அளகைமா நகர் - குபேரன் பட்டணம். அந்தரவாணர் - தேவர் உலகினர். சந்து - தூது. குந்தம் - குதிரை. அஞ்சலித்து - கைகுவித்து வணங்கி. 28. சிலைத்தழும்பு - வில் அழுத்திய தழும்பு.

சொலத்தகு சுகனு மத்தின னிவனுற்
றுலங்குமுன் மணவிழாப் பெருமை
நலத்தினை யெல்லாங் கேட்கென நயந்து
நாயக னவன்முக நோக்கி (29)
சொல்லெனச் சுகனு மடிபணிந் தனைத்துஞ்
சொலியம லாவுனை நுதலி
அல்லுநன் பகலு நினைந்துடன் மெலிந்து
ளாவிவைத் திருக்கின்றே னென்று
ஒல்லையிற் புகலென் றெனைப்பது மினியாங்
குரைத்திவண் விடுப்பயா னடைந்தேன்
மல்லலம் புவன மனைத்துமுண் டுமிழ்செவ்
வாயனே யெழில்கொண்மா யவனே. (29)
எனச்சுக னியம்பு மின்சொலான் மேனி
யெங்கணும் புளகங்க ளரும்ப
மனக்களிப் புடனேழ் பொழிலொடும் பிரமன்
றனைமல ருந்தியாற் றந்த
கனக்கருங் கொண்டல் யான்விரைந் தணுகிக்
கடிமண முடிப்பனென் றழகார்
அனத்தினுக் குரையென் றறைந்தெழிற் றுளவ
வணியறந் தவண்விடை யீந்தான். (30)
நறைகம ழணியல் கொடுதுனைந் தேகி
நண்ணிநா ராயண புரக்கண்
இறைமனை புகுந்து பதுமினி பதங்க
ளிறைஞ்சிநின் றணியலைத் தாலும்
கறைகமழ் நெடுவேற் கண்கொடு நோக்கிக்
கண்ணியைப் பணிந்துகை வாங்கிக்
குறையறு மகிழ்வு பொங்கிடச் சிரமேற்
கொண்டுளம் விருப்பமீ தூர (31)

---

நாமத்தினன் - பெயருடையோன். 29. நுதலி - சொல்லி. அல் - இராப் பொழுது. ஒல்லை - விரைவு. மல்லல் - வளம். புவனம் - பூமி. 30. பொழில் - உலகம். உந்தி - கொப்பூழ். கொண்டல் - மேகம். கடிமணம் - கலியாணம். துளவ அணியல் - துளசி மாலை. 31. நறை - தேன். அணியல் - மாலை. துனைந்து - விரைந்து. இறைமனை - அரண்மனை. கறை - இரத்தம். கண்ணி - மாலை.

அஞ்சன கிரிமால் விளம்பிய தெல்லா
மன்புகொண் டின்புறக் கேட்டு
நெஞ்சக மகிழ்ந்தாள் வியமனு னந்த
நெடுங்கட லமிழ்ந்தவ ளாகி
விஞ்சுதண் கிரணச் சோமனை யழைத்து
விரைவினி லறுசுவை யுடன்சேர்
வெஞ்சன மன்னம் பாயசம் பூப
மிகுபரி மளந்திசை கமழ (32)

இரதநற் கனிக ளிவையெலா நிருமி
யெனவுரைத் தருளிமங் கையரை
அருகழைத் தழகார் மகட்கலங் கார
மன்புறச் செயப்பணித் ததற்பின்
புரவல னமைச்சர் தம்மொடுங் கூடிப்
புயல்வணன் வரவுபார்த் திருந்தான்
கருதருந் தவமா முனிவரே யென்று
கழறினன் சூதமா தவனே. (33)

சீர்பெறு வராக மெனும்புரா ணத்திற்
செப்புமிக் காதைக ளெல்லாம்
ஏர்பெறப் படிப்போ ரெழுதுவோர் கேட்போ
ரிகத்தினி னன்மைக ளனைத்தும்
பார்புகழ்ந் திடப்பெற் றிருந்துபின் னழியாப்
பதிதனி லெழிலுற நாளும்
கார்பொரு மேனிக் கரியவ னருளாற்
கலந்துவீற் றிருப்பர்கண் மாதோ. (34)

---

32. அஞ்சனகிரி - திருமலை. சோமன் - சந்திரன். அறுசுவை - தித்திப்பு, புளிப்பு, கைப்பு, கார்ப்பு, உவர்ப்பு, துவர்ப்பு. வெஞ்சனம் - கண்ணுறை. பாயசம் - பாலுணவு. பூபம் - அப்பம். 33. இரதம் - ரஸம். புரவலன் - அரசன். புயல்வணன் - மேக நிறமுடைய திருமால்.

பதுமினி கல்யாணத்துக்கு நகர்வர்ணனை உரைத்த
அத்தியாயம் முற்றிற்று.

## 41. ஸ்ரீநிவாசன் அலர்மேல்மங்கை நாச்சியாரை மணம் புரிந்த அத்தியாயம்.

எழுசீர் விருத்தம்.

அடியவர்க் கருளு மஞ்சன சலன
காசமன் னகரிடை யடைந்து
நெடியவை வேலைக் கயலிணைக் கணையை
நேரறப் பொருதுநீண் டகன்ற
வடிவுறு கருங்கட் பதுமினி யெனும்பேர்
மருவிய மாதினை மகிழ்ந்து
கடிமணம் புரிந்த காதையைக் கேண்மி
னெனமுனி கழறலா யினனால். (1)

இனமணி திகழ வெவர்களும் வியப்ப
வெய்திநா ராயண புரத்தை
வனைதல்செய் ததற்பின் கற்பகத் தெரியல்
வாசவன் முதலிய தேவர்
அனைவருந் திருவேங் கடமலை யெய்தி
யாதிநா யகனடி பணிந்து
தனிமறைப் பொருளே யெழுந்தரு ளெனமுன்
சாற்றியங் கைசிரங் கூப்பி (2)

நெஞ்சிலா னந்த மிகத்துதித் தருகே
நிற்கவெவ் வுலகுமுண் டுமிழ்ந்த
கஞ்சநாண் மலர்க்கட் கரியவன் றிருமுன்
கழறுவான் மணப்பொருட் டால்யான்
இஞ்சிசூழ் நாரா யணபுரம் விரைவி
னெய்தல்வேண் டுமெதற் குரிய
விஞ்சிய பணிகள் யாவையுஞ் செய்வி
யெனவிடை தாவிருப் புடனே (3)

---

1. அஞ்சனசலன் - திருமலை இறைவன். வைவேல் - கூரிய வேல். கயல் - கெண்டை மீன். கணை - அம்பு. பொருது - போர் செய்து. கடிமணம் - கலியாணம். 2. வனைதல் - அலங்கரித்தல். தெரியல் - மாலை. வாசவன் - இந்திரன். 3. கஞ்சம் - தாமரை. இஞ்சி - மதில். பணிகள் - காரியங்கள்.

இந்திரை முகுந்த னிசைத்தசொற் கேட்டே
யிலங்குதன் றோழியர் தமது
சுந்தர வதனந் துலங்குற நோக்கிச்
சொல்லுவா ணமதுநா யகற்கு
நந்தலில் வதுவைக் காகிய பணிகள்
யாவையு நடத்துமென் றுரைப்பச்
சிந்தையின் மகிழ்ந்து செய்தனர் விரைவின்
றிருவரு ணேமனப் படியே. (4)

அன்னகா லையினிற் றேவகன் னியர்க
ளனைவருஞ் சோபனம் பாட
மின்னினே ரிடையார் சிலரக மகிழ்ந்து
விருதுகூ றக்கட லொலியாம்
என்னவே கருவி பற்பல முழங்க
வெழின்மதி யெனக்குடை நிழற்றத்
துன்னுகே தனஞ்சா மரைபுடை புரளத்
தோகையர் சதிமுறை நடிப்ப (5)

இருடிக டுதிப்ப வெழிலுற விருந்த
வீசனுக் குயர்நறு வாசம்
மருவிய தயிலங் கொணர்ந்துமுன் வைத்து
மணங்கமழ் மலர்வருஞ் செல்வத்
திருமக டயிலஞ் சாத்திவான் கங்கா
தீர்த்தநற் பொற்குடங் களிலே
விரைவுற வெடுத்து விரைப்பொருள் கலந்து
விளங்குற மஞ்சன மாட்டி (6)

---

4. இந்திரை - இலக்குமி. முகுந்தன் - திருமால். சுந்தர வதனம் - அழகிய முகம். நந்தல் - குறைவு. வதுவை - கலியாணம். நேமனம் - கட்டளை. 5. சோபனம் - மங்கலப் பாடல். விருது - சிறப்புரை. நிழற்ற - நிழல் செய்ய. கேதனம் - கொடி. தோகையர் - மயில் போன்ற சாய லுள்ள மங்கையர். சதி - தாளக் கட்டுரை. 6. விரைப் பொருள் - வாசனைத் திரவியம். மஞ்சனம் - நீராட்டு.

தூசினுற் கேச முழுவதுந் துவட்டித்
தூவிரைத் தூபங்க ளூட்டி
மாசற முடிந்து பீதவம் பரத்தை
மலர்மகள் கொடுத்திட வாங்கித்
தேசுறப் புனைந்து மிகவொளி திகழுஞ்
செம்பொனா சனத்திடை வைகி
ஆசற நிலவு மட்டமி மதியி
னமுததா ரைவிழுந் தாப்போல் (7)

நெற்றியிற் றிருமண் டரித்துயர் சந்தக்
கலவைமெய் யெங்கணுந் திமிர்ந்து
சுற்றுறு மரைஞா ணணிந்துகே யூரஞ்
சுடர்மணிக் குண்டல மகுடம்
கற்றையங் கதிர்கால் கவுத்துவ வாரங்
கனமணிக் கண்டிகை கடகம்
ஒற்றையா ழியந்தே ரவனெனி மழுங்க
வுளபணி யாவையுந் தரித்து (8)

தேனமர் துளவ மலர்த்தொடை யணிந்து
செழுமறை யுருவமாம் விநதை
சூனுவை யணிதல் செய்திர தங்க
டுளைக்கைமா துரகதங் களையும்
வானவர் வியப்ப வலங்கரித் ததற்பின்
மலர்க்கரங் குவித்தெதிர் நின்ற
சேனைநா யகனை நோக்கியா வருநற்
சிறப்புட னவரவர்க் குகந்த (9)

---

7. தூசு - ஆடை. கேசம் - தலைமயிர். தூவிரைத் தூபம் - தூய்மை யான நறுமணப் புகை. பீத அம்பரம் - பொன் சரிகை யாடை. தேசு - ஒளி. ஆசு - குற்றம். அட்டமிமதி - எட்டாம் திதிச் சந்திரன். அமுத தாரை - அமிர்தத்தின் ஒழுக்கு. 8. சந்தக் கலவை - சந்தனக் குழம்பு. அரைஞாண் - இடுப்பிற் கட்டும் கயிறு. கேயூரம் - தோள் வளையம். ஒற்றை யாழித் தேரவன் - சூரியன். 9. தொடை - மாலை. விநதைசூனு - கருடன். துளைக்கைமா - யானை. துரகதம் - குதிரை. சேனை நாயகன் - சேனை முதலியார்.

வாகன மிவர்ந்தே வரும்படி நவின்று
வகுளமா லிகைமுத லாய
பாகெனு மொழியார் தமையொளி ரிரதங்
களின்வரப் பணித்துநற் கரிய
மேகமின் றேன்ற வெழுந்தெனத் திருவா
மெல்லிய ளுடனிர ணியமாம்
நாகமே னீல மலையமர்ந் ததுபோல்
ஞானமெய்க் கலுழன்மீ திவர்ந்து (10)

மூன்றுல கவரும் புகழ்ந்துகொண் டாடி
முறைமுறை கரங்குவித் தேத்தத்
தேன்றவழ் மலர்க்கா வளஞ்செறி நாரா
யணபுர நோக்கியே செலுங்கால்
வான்றிசை மலைகள் குலுங்கிடக் கடலு
மஞ்சுமஞ் சிடக்கன கத்தால்
தோன்றிய முரசு துந்துபி முதலாய்த்
துலங்குவாச் சியத்தொனி முழங்க (11)

சின்னமெக் காள முரளிநா கசுரந்
திகழ்வளை கொம்புதம் புருநற்
கின்னரம் வீணை முதலவாய் விளங்குங்
கீதநா தத்தொலி தவழப்
பொன்னக ரம்பை மாதர்க ணடனம்
புரியவே ழிசைவழு வாது
நன்னய மிகுகந் திருவர்கள் கான
நளிகட லமுதெனப் பாட (12)

மலையிறை மகளுங் கலைமக டானு
மருங்குறக் கவரிகா லசைப்பச்
சிலையெனு நுதலி புலோமசை தாளச்
செழுங்குடை பிடித்திட வியக்கர்

---

10. வாகனம் - ஊர்தி. பாகு - வெல்லப்பாகு. இரணியம் - பொன். நாகம் - மலை. கலுழன் - கருடன். 11. மலர்க்கா - பூஞ்சோலை. மஞ்சு - மேகம். கனகம் - பொன். 12. அரம்பை - விண்ணுலக மங்கை. எழிசை - ச, ரி, க, ம, ப, த, நி என்ற எழு சுரங்கள். நளி - செறிவு. 13. மலையிறை - பர்வதராசன். மருங்கு - பக்கம். கவரி - வெண்சாமரை. கால் - காற்று. சிலை - வில். நுதலி - நெற்றி யுடையாள். புலோமசை - இந்திராணி. தாளம் - முத்து. இயக்கர் - யக்ஷர் என்ற தேவ கணத்தார்.

குலமடந் தையர்க ளாலவட் டங்கள்
கொண்டலைத் திடத்தெய்வ மடவார்
சிலரக மகிழ்ந்து விருதுகள் கூறச்
சிலர்கள்சோ பனக்கவி செப்ப (13)

சித்தர்கின் னரர்கிம் புருடர்கன் னியர்கள்
செழுமணி மங்களா ராத்தி
பத்தியி னெடுப்பக் கதலிகை நெருங்கப்
பற்பல முனிவர்க டீரண்டு
சுத்தநான் மறைகள் சொலக்கட வுளர்கள்
சுகந்தமா மலர்மழை சொரிய
இத்தகை யுடனே யிலக்குமி நாத
ணெய்திநா ராயண புரத்தின் (14)

அருகுற வணுகுங் காலையா காய
வாசனஞ் சனகிரி முதல்வன்
வருவது தெரிந்து மாதரை நோக்கி
மகட்குமங் கலப்புன லாட்டி
விரைவினின் மணக்கோ லஞ்செய விளம்ப
வினவியம் மாதர்கள் வாச
மருவிய தயிலந் தேய்த்துவான் புனலால்
மஞ்சன மன்புறச் செய்தே (15)

மஞ்செனுங் குழற்கு நறும்புகை யூட்டி
மான்மதங் கமழ்தர நீவி
விஞ்சிய வெழில்கொள் பின்னலிட் டுயர்நல்
விரைமலர்த் தாமத்தால் வேய்ந்தே
எஞ்சலி லிருநான் கியோசனை வாச
மெழீஇயினி துறநனி கமழ
விஞ்சையர் கொணர்ந்த விழுப்பெருங் கலவை
விளங்குற மேனியி னணிந்து (16)

---

ஆலவட்டம் - பெரு விசிறிகள். மடவார் - பெண்கள். சோபனக் கவி - மங்கலப் பாடல். 14. ஆராத்தி - ஆலத்தி. கதலிகை - கொடி. 15. அஞ்சன கிரி - திருமலை. மஞ்சனம் - நீராட்டு. 16. மஞ்சு - மேகம். மான்மதம் - கஸ்தூரி. நீவி-பூசி. விரை-மணம். தாமம்-மாலை. விஞ்சையர்-வித்தியாதரர்.

கோசிகக் கனக வாடைசேர்த் தொளிசெய்
குறுநுத லூர்த்துவ திலகம்
ஆசற வெழுதி நுனைகொள்வேல் விழிகட்
கஞ்சனந் தீட்டியொண் கணத்தின்
மாசறச் சிறந்த குங்குமச் சேற்றான்
மகரிகா பத்திரங் கோட்டித்
தேசுறு செம்பஞ் சணிந்தனர் செய்ய
திருவடித் தாமரை களிலே. (17)

அவயவ மெல்லா மணிமணிப் பணியா
லலங்கரித் தழகுறத் தொடுத்த
நவையறு சுகந்த மலர்த்தொடை வேய்ந்து
நளினநன் மலர்கரந் தாங்கப்
புவிபுகழ் வியம னிருகணுன் மகிழ்ந்து
புதல்வியை நோக்கியன் போடு
தவளவெண் பிறைக்கோட் டுயர்மத மலைமேற்
சகலருந் தொழுவினி தேற்றி (18)

பதிவலஞ் செயுமென் றிசைத்திடச் சிறந்த
பதுமினி பாங்கியர் கேட்டு
மதிமகிழ்ந் தருகர்ச் சோபனம் பாட
மதியென வாதபத் திரங்கள்
கதிரவன் வெயிலைக் காப்பமீச் சிறந்த
கதலிகைத் திரண்மிசை கஞலச்
சதிருற வனந்தங் கால்செய்வட் டங்க
டமனியக் கொம்பனார் வீச (19)

---

17. கோசிகம் - ஆடை. நுதல் - நெற்றி. ஊர்த்துவ திலகம் - சுடர் ஒளிப் பொட்டு. அஞ்சனம் - கண்ணுக்கு இடும் மை. மகரிகா பத்திரம் - தொய்யில் (மகளிர் மார்புக்கு - எழுது கோலம்). செம்பஞ்சு - செம்பஞ்சுக் குழம்பு. 18. நவை - குற்றம். தொடை - மாலை. நளினம் - தாமரை. வியமன் - ஆகாசராசன். தவளம் - வெண்மை. மதமலை - யானை. 19. பதி - ஊர். பாங்கியர் - தோழிகள். அருகர் - பக்கம். சோபனம் - மங்கலப் பாடல். ஆதபத்திரம் - குடை. கதிரவன் - சூரியன். கதலிகை - கொடிகள். கஞல - நெருங்க. சதிர் - அழகு. அனந்தம் - எண்ணற்ற. கால்செய் வட்டம் - விசிறிகள். கொம்பனார் - இள மகளிர்.

வேந்தர்கன் னியர்கள் கவரிகா லசைப்ப
விப்பிர நாரியர் வாழ்த்தப்
பூந்தரு நிழல்வாழ் புலவர்கன் னியர்கள்
பொற்புற நடஞ்செய விளங்குங்
காந்தரு வர்கடங் காரிகை யார்பாண்
கவினுறப் பாடவம் புவியை
ஏந்துமெண் களிறுஞ் செவிசெவி டுறத்தூ
ரியம்பல வெங்கணு மிரட்ட (20)

கின்னர் மகா வீணையாழ் முதலாங்
கீதநா தத்தொலி தழைப்ப
மின்னெனு மிடையார் குழூஉக்கொள நயமார்
வீதிவாய் வருமமை யத்தின்
தன்னிக ரிலாமா றனதுதா னையுடன்
றனுமங் கடைந்துசந் திப்ப
மன்னவர் திலக னகுமா காய
மன்னனு மெதிர்ந்தவண் கலந்தான். (21)

எண்ணறு மரசர் தம்முடைப் படையோ
டெய்திட விருடியர் திரண்டு
நண்ணயோ கியரு நணுகவே தியர்க
ணட்புடன் வாநலஞ் சிறந்த
விண்ணவர் மருவ வசியசூத் திரர்கள்
விருப்பமுட் கொண்டுபின் றொடா
அண்ணலஞ் சீநி வாசனு மலர்மே
லணங்குமந் நகர்வலம் புரிந்தே (22)

வருந்தெரு முழுது மங்கையர் திரண்டு
மங்கல விளக்கங்க ளெடுப்பத்
திருந்துநான் முகனைம் முகன்முதற் றேவர்
தேங்கொள்கற் பகமலர் சொரிய

20. கவரி - சாமரை. கால் அசைப்ப - காற்று அசைப்ப. விப்பிர நாரியர் - பிராம்மணப் பெண்கள். பாண் - பாடல். எண்களிறு - அஷ்ட திக்கஜங்கள். தூரியம் - வாத்தியங்கள். இரட்ட - ஒலிக்க. 21. திலகன் - சிறந்தோன். 22. படை - சேனை. அண்ணல் - சிறந்தோன். அலர்மேல் அணங்கு - பதுமினி. 23. நான்முகன் - பிரமன். ஐம்முகன் - சிவன்.

மருந்தினு மினிய மகளுடன் மருகன்
வனப்பையு மணவிழாச் சிறப்பும்
பொருந்தலர் புகழும் வியமனை னோக்கிப்
புளகமெய் யெழுமன மகிழ (23)

வந்தாண் மனையின் வாயிலுக் கெதிராய்
மலரவ னுடனுல கனைத்தும்
உந்தியி னளித்த வொருவனுங் கமலத்
துடன்றரை வருமெழி லனமும்
புந்தியி னுவந்தே யொருவருக் கொருவர்
பூந்தொடை மாறியிட் டழகார்
தந்தமூர் தியைவிட் டிறங்கலு மயிலின்
சாயலார் கண்ணெச்சில் கழித்தார். (24)

வியமனை னழைத்துக் கொண்டுசென் றுயர்ந்த
விழுமணி யினங்களா லிமைக்கும்
நயமுறச் சிறந்த மண்டப மீதி
னடுவணோர் கேசரித் தவிசின்
மயிலுடன் மேக வண்ணனை யிருத்தி
வசிட்டனே முதலிய முனிவர்
பயிலுநான் மறைதே ரந்தண ரரசர்
தம்மையு மிருந்திடப் பணித்து (25)

தானுமங் குறையுங் காலைமுன் வைத்த
தகையுறு முகூர்த்தநேர்ந் திடலும்
ஞானநல் வசிட்ட னாந்தியே முதலாங்
கிரியையை நவையற நடத்தித்

---

மருந்து - அமிருதம். மருகன் - மகள் கணவன். வனப்பு - அழகு. பொருந்தலர் - பகைவர். வியமன் - ஆகாசராசன். புளகம் - மயிர்க் கூச்சம். 24. மலரவன் - பிரமன். உந்தி - கொப்பூழ். கமலத்துடன் தரைவரும் எழில் அனம் - பதுமினி. பூந்தொடை - மலர் மாலை. ஊர்தி - வாகனங்கள். கண்ணெச்சில் - திருஷ்டி தோஷம். 25. விழுமணி - சிறந்த ரத்தினங்கள். கேசரித்தவிசு - சிம்மாசனம். மேகவண்ணன் - திருமால். 26. தகையுறும் - பொருத்தமான. நாந்தி - தொடக்கம். நவை - குற்றம்.

தேனமர் துளவ மாலையான் றனக்குஞ்
செம்பது மினிக்குமங் கையிலே
வானவர் புவியி னுள்ளவ ரெவரு
மகிழ்வுறக் காப்புநாண் சாத்தி (26)
பாங்குற நிறைபொற் கும்பம்வைத் தருகு
பாலிகை யணிபெறத் தெளித்துத்
தீங்கறு விசுவா மித்திர நான்கு
திசையினுஞ் சேர்த்தபி னுப்பண்
ஆங்கனல் வளர்த்தா னறுநெயா குதிசெய்
தன்பினு காயமன் னவனும்
தேங்கிய வருளுக் கிருப்பிட மான
சிந்தையான் றனையரு கிருத்தி (27)
மருகனைப் பூசித் தனதுபெண் கமல
மலர்க்கரம் பிடித்துத வெனலும்
அருள்செறி நிருபன் றநயையை மடியி
னழகுற விருவியந் தணர்தம்
திருவுள முவப்ப வெண்ணிலாத் தானஞ்
செய்துபின் சிறுமிகை பற்றித்
தருதலும் பெருமான் கோதைதன் னோடு
தழல்வலம் புரிந்தொளி திகழும் (28)
சதிருறு திருமாங் கலியநாண் சாத்திச்
சாத்திர விதிமுறை வேட்டு
விதியரன் முதலாம் விண்ணவர் துதிப்ப
விமலன்வீற் றிருந்திடுங் காலை

---

27. பொற்கும்பம் - பூரண கலசம். பாலிகை - முளைப்பாலிகை. விசுவாமித்திரம் நான்கு திசையினும் சேர்த்தல் - தருப்பைகளை ஹோமாக்கினி குண்டத்தின் நான்கு திசையினும் பரப்புதல். நாப்பண் - நடு. கனல் - ஹோமாக்கினி. ஆகுதி - தேவருணவு ஆக வார்த்தல். 28. மருகன் - மாப் பிள்ளை. கமல மலர்க்கரம் - தாமரைப் பூப்போன்ற கைகள். நிருபன் - அர சன். தநயை - மகள். இருவி - இருக்கச் செய்து. அந்தணர் - வேதப் பிராம்மணர். கோதை - பதுமினி. தழல்வலம் புரிந்து - அக்கினியை வலம் செய்து. 29. சதிர் - அழகு. திருமாங்கலிய நாண் - திருத்தாலிக் கயிறு. வேட்டு - மணந்து. விதி - பிரமன். அரன் - சிவன். விமலன் - திருமால்.

இதயமுள் ளுவந்தே வியமனன் றேவ
ரிருடிய ரந்தண ரரசர்
இதமுறு வணிகர் சூத்திர ரெவர்க்கு
மீந்தனன் வரிசைகண் முறையே (29)

அருளுட னரிய வறுசுவை யுண்டி
யனைவர்க்கு முகந்தளித் திவ்வா
றொருபது திவச முபசரித் திடுங்கா
லும்பருக் கிறையணி வித்த
திருவறை யதனுட் கண்ணனு மலர்மேற்
செல்வியும் பொற்றிரள் வாரி
அருமறை யவர்க்கீந் தடைந்தல ரணைமே
லன்பினின் மேய்விழி வளர்ந்தார். (30)

காலையி னுணர்ந்து கடன்முறை கழித்துக்
கண்ணனு மாமனை நோக்கி
நீலவண் டாற்று மலர்ப்பொழி னிறைந்த
நெடியவேங் கடமலைக் கெய்த
மாலைகொண் மார்பா விடைதரு கெனனு
மகிழ்ந்தெணில் வரிசைக டந்து
சீலநன் மகளைச் சிவிகையி னேற்றிச்
சிலதிய ரொடுசெல விடுத்தான். (31)

துளவமான் மலர்மா னொடுககபதிதன்
றோண்மிசை யிவர்ந்தய னரனோ
டளவரு மமரா ரிருடிக ளரச
ரருமறை யவர்புடை சூழக்

இதயம் - மனம். இதம் - நன்மை. 30. அறுசுவை யுண்டி - தித்திப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கைப்பு, கார்ப்பு ஆகிய ஆறு சுவைக் கலப்புடைய உணவு. ஒருபது திவசம் - பத்து நாள். உம்பருக்கு இறை - இந்திரன். திருவறை - கருவூலம். அலர்மேற் செல்வி - பதுமினி. பொற்றிரள் - பொன் குவியல். அலரணை - மலர்ப்பள்ளி. விழி வளர்ந்தார் - உறங்கினர். 31. அரற்றும் - ஒலிக்கும். பொழில் - சோலை. சிவிகை - பல்லக்கு. சிலதியர் - பணிப் பெண்கள். 32. துளவமால் - துளசி மாலை அணிந்த திருமால். மலர்மான் - பதுமினி. ககபதி - பறவை யரசு ஆகிய கருடன். இவர்ந்து - ஏறி. அமரர் - தேவர்கள்.

கிளர்மண முரசு துந்துபி துவைப்பக்
கீதநா தத்தொலி தழங்கத்
தளவநன் முறுவ லரம்பையர் நடிப்பத்
தாளவெண் கவிகைமே னிழற்ற (32)

வெண்மதிக் கதிரின் கற்றைபோற் கவரி
வீசநீள் கொடித்திரண் மிடையப்
பண்முதிர் கானம் பகரவே குழியுட்
பண்புயர் வியமனன் றன்மேல்
கண்மலர் பரப்பி நினக்குவேண் டுவன
கழறென மகிழ்ந்துநின் னிணைத்தாட்
டண்மரைத் தலத்தி னெனுதுள மளிபோற்
றங்குமா வருளெனத் தாழ்ந்து (33)

வேண்டலும் பரம னவ்வா மருளி
விரைவினிற் சென்றுவேங் கடமாம்
நீண்டபூ தாத்தை மேவியா னந்த
நிலயமா னத்தெழுந் தருளி
ஈண்டிய பிரமன் முதலிய ரெவர்க்கு
மின்புற விடைபணித் தொளிரும்
பூண்டயங் கியமெய் வகுளமா லிகைமேற்
பொலிவுறு கருணையுள் வைத்தே (34)

திருவொடு மலர்மேன் மங்கைதன் னோடு
சிந்தையின் மகிழ்ந்தினி திருந்தான்
மருவிரி துளவ மாலையா னென்று
வான்பிறை பொருவுவெண் மருப்பார்

---

மணமுரசு - கல்யாண பேரிகை. துவைப்ப - ஒலிக்க. தழங்க - முழங்க. தளவநாண்முறுவல் - முல்லை யரும்பு போன்ற பற்கள். தாளவெண் கவிகை - முத்துப் போன்ற வெண்குடைகள். நிழற்ற - நிழல் செய்ய. 33. கதிரின் கற்றை - கிரண சமூகம். கவரி - வெண்சாமரை. மிடைய - நெருங்க. பண்முதிர் கானம் - இசை மிக்க பாடல். தண் மரை - குளிர்ந்த தாமரை. அளி - அன்பு, 34. பரமன் - கடவுள். பூதரம் - மலை. ஆனந்த நிலயம் - திருமலை விமானத்தின் பெயர். பூண் தயங்கிய - அணிகள் விளங்கும், 35. மருவிரி - மணம் பரவும். வெண் மருப்பு - வெள்ளைக் கொம்பு.

இருளியா மமலன் றரைமினுட் குரைத்தா
னெனவெழிற் சௌனகா தியருக்
குரைசெய்தான் கடலின் வருசுதை சிவண
வுயர்வுறு சூதவே தியனே. (35)

ஒப்பறு வாராக மெனவுயர் புராணத்
துரைசெயு மிதனையுள் விருப்பால்
செப்புவோர் கேட்போ ரெழுதுவோர் நாளுஞ்
செய்ததீ வினையற நலனுர்
விப்பிரர்க் கனந்த கன்னிகா தானம்
விருப்புறச் செய்பலன் பெற்றே
இப்புவி புகழ வாழ்ந்துபின் னழியா
திலங்குவீ டெய்துவர் மாதோ. (36)

ஸ்ரீநிவாசன் அலர்மேல்மங்கை நாச்சியாரைமணம்புரிந்த அத்தியாயம் முற்றிற்று.

## 42. குருவைநம்பி, தொண்டைமான் சக்கரவர்த்தி மோட்சம் பெற்ற அத்தியாயம்.

கலிவிருத்தம்.

வளங்கெழு மண்மகட் குயர்வ ராகமால்
உளங்கனிந் துரைத்தவை யுமக்கிங் கின்னமும்
விளங்குற விரிப்பல்யா னென்று வெண்டிரைத்
துளங்கமு தென்னமெய்ச் சூதன் சொல்லுவான். (1)

ஆதியின் வலனெழி லறிவ றஞ்செறி
நீதியன் றொண்டைமா னென்னு நேமியன்
காதலின் வேங்கடங் கலந்து நிச்சலும்
நாதனைப் பணிந்துமீண் டுறையு நாளிலே (2)

இருளி - பன்றி. சுதை - அமிர்தம். சிவண - ஒக்க. 36. விப்பிரர் - பிராம்மணர். அனந்தம் - எண்ணில்லாத 1. வராகமால் - ஆதிவராக மூர்த்தி. வெண்டிரைத்துளங்கமுது - கடல் அமிர்தம். 2. வலன் - வலிமை, வெற்றி. எழில் - அழகு. நேமியான் - சக்கரவர்த்தி. நிச்சலும் - நாள்தோறும்.

சுத்தமெய்ஞ் ஞானநற் சுகனை யோர்பகல்
பத்திமை யாற்பணீஇப் பதும மென்றுசொல்
இத்தட மகிமையை யியம்பு வாயென
சித்தநற் கிளர்ச்சியிற் செப்பன் மேயினன். (3)

முன்னொரு காரணத் தாலிம் மோதலை
துன்னிய சரசிடைத் துலங்கு காஞ்சனம்
என்னவோர் முளரியம் போதி னேர்பெறும்
பொன்னதி நலமுறப் பொலிந்து தோன்றினள். (4)

அன்னகா லையிற்புரு கூத னங்ஙனம்
மன்னியவ் விந்திரை வடிவை நோக்கியே
சென்னியிற் றாழ்ந்தெலாச் செகமு மீன்றருள்
அன்னையே யமுதினுக் கமுத சாரமே. (5)

தேசுறு போதனைத் தந்த செல்வியே
மாசறு கூவிள வனத்தி லின்புற
வாசமா யுறையுமா ணிக்க மேகமழ்
ஆசறு தாமரை யலர்கொள் கையினாய். (6)

சேதனர் செய்தவச் செயற்குத் தக்கசீர்
வேதனென் னவுங்கயி லாய வெண்மலை
நாதனென் னவுஞ்சசி நண்ப னென்னவும்
சீதவெண் மதிதிவா கரனென் றேத்தவும் (7)

செய்தவ ரவர்கடஞ் சிந்தை வேட்பன
எய்துமா வாந்தருங் கருணை யேமலி
மெய்கவின் றுயரிய வேத ரூபியே
பைதிகழ் பாம்பணைப் பரமன் றேவியே (8)

---

3. பத்திமை - பற்று. பணீஇ - பணிந்து. 4. சரசு - தீர்த்தம். காஞ்சனம் - பொன். முளரி - தாமரை. போது - மலர். பொன் - இலக்குமி. 5. புருகூதன் - இந்திரன். இந்திரை - இலக்குமி. சென்னி - தலை. செகம் - உலகம். அமுதசாரம் - அமிர்தத்தின் சத்து. 6. போதன் - பிரமன். கூவிள வனம் - வில்வக்காடு. ஆசு - குற்றம். அலர் - பூ. 7. சேதனர் - அறிவுடை உயிர்கள். வேதன் - பிரமன் கயிலாய வெண்மலை நாதன் - சிவன். சசி நண்பன் - இந்திரன். சீதம் - குளிர்ச்சி. திவாகரன் - சூரியன். 8. வேட்பன - விரும்பியவை. கவின்று - அழகு பெற்று. வேதரூபியே - மறை வடிவாகிய அம்மையே. பைதிகழ் பாம்பு அணை - படம் விளங்கும் ஆதிசேஷனாகிய படுக்கை.

எனப்பல புகழ்ந்தெதிர் நின்ற விந்திரன்
றனக்குளம் விரும்பிய யாவுந் தந்துநீ
மனத்ததி விருப்பொடு வழுத்தும் வண்ணமே
தனித்தெனை வில்வநற் றழைகொ டேத்தியே (9)

பத்தியி னருச்சனை பயிலும் பண்பினர்
புத்தியின் வேட்பன பொருந்த வாழ்ந்துபின்
முத்தியும் பெறுகுவ ரெனமொ ழிந்துயர்
வித்தகத் திருமகள் மறித்தும் விள்ளுமால். (10)

இத்தடம் படிந்தெவ ராயி னும்மெனைக்
கைத்தலங் குவித்துளங் கருதி னோர்பவ
மித்திர னெதிரிம மாக மெய்பரி
சுத்தர்க ளாவரென் றெடுத்துச் சொல்லினள். (11)

என்றுமெய்ச் சுகமுனி யியம்பத் தொண்டைமான்
நன்றெனு வினவியந் நார மூழ்கியே
சென்றுவேங் கடமுறை சீநி வாசனன்
மன்றறங் கடிமலர் வணங்கி வாழ்த்தினன். (12)

துளவநன் மாலையான் றொண்டை மான்றனை
இளநிலா முறுவலித் தினிது நோக்குறீஇ
நளினையன் புடனுறை புலங்கொ டானமாய்
வளமுறுஞ் சண்பக மரங்க டம்மையும் (13)

மற்றையிம் மலையுறை மரம்புற் பூடெலாம்
சொற்றிடி னெனதுமெய்ச் சொரூப மாதலால்
கொற்றவ தடிதல்கீண் டுதல்கூ டாதெனு
வெற்றிகொ ளரிசொலிப் பினும்வி ளம்புமால். (14)

---

9. வழுத்தும் - பிரார்த்திக்கும். வில்வத்தழை - வில்வ இலை. 10. வித்தகம் - ஞானம். மறித்தும்-மறுபடியும். விள்ளும்-சொல்லுவாள். 11. தடம்-தீர்த்தம். படிந்து - முழுகி. பவம் - பிறப்பு. மித்திரன் - சூரியன். இமம் - பனி. 12. நாரம் - தீர்த்த நீர். மன்றல் - மணம். 13. துளவம் - துளசி. முறுவலித்து - சிரித்து. நளினை - திருமகள். 14. சொற்றிடின் - சொன்னால். கொற்றவ - அரசனே! தடிதல் - வெட்டுதல். கீண்டுதல் - பிளத்தல். அரி - திருமால்.

நின்மா பினினினி நிகர்வு வேறிலா
நன்கறி யறிஞனு ராய ணப்பெயர்
மன்கவி னுறப்பிறந் தெனக்கு மாழையால்
மின்கதிர் மானமேல் விளங்கச் செய்குவான். (15)

எனத்திரு வேங்கடத் திறைவன் றொண்டைமான்
தனக்குரைத் தானெனத் தவள வேனமால்
மனத்துளே மகிழ்கொளீஇ மண்ம கட்குரைத்
தினித்தசொல் லாற்பினு மியம்பன் மேயினன். (16)

முன்னவி றொண்டைமா னென்னு மொய்ம்புடை
மன்னவன் வேங்கட மான்ம லர்ப்பதம்
தன்னையன் போடுளந் தாங்கிச் சீருறச்
சன்னிதிப் பணிதவ றுதி யற்றியே (17)

சதுமறை வேதியர் தங்க ளானிதம்
விதிமுறை பூசனை யொடுவி ழாவெலாம்
மதிமகிழ்ந் தியாவரும் வாழ்த்து மாபுரிந்
தெதிரில்பைம் பொன்மல ரிணைக்க ரங்கொளீஇ (18)

மலிவுற நாடொறும் வழாத ருச்சனை
நலனுறச் செயும்படி நவில வேதியர்
கலைமுறை யியற்றிடுங் காலை மாயவன்
மலரடி மிசையினம் மலர்கண் மேலவாய் (19)

மண்மலர் கிடத்தனன் மறைவ லோருணர்ந்
துண்மலி வெருளொடு மாசற் கோதலும்
தண்மலர்த் தார்புனை சயங்கொள் வேலினன்
கண்மலர் பரப்பினன் கடிதி னோடியே. (20)

---

15. மரபு - சந்ததி. நிகர்வு - ஒப்பு. மண் - அரசன். கவின் - அழகு. மாழை - பொன். மின் கதிர் மான் - மின் ஒளி யுடைய விமானம். 16. தவள வேனமால் - வெண் பன்றி வடிவாகிய விஷ்ணு. 17. மொய்ம்பு - வலிமை. சன்னிதிப் பணி - கோயில் கடமைகள். 18. சதுமறை - நான்கு வேதங்கள். பூசனை - நித்திய ஆராதனை. விழா - நைமித்திக உத்சவம். இணைக்கரம் - இருகைகள். 19. கலைமுறை - சாஸ்திர விதிப்படி. மாயவன் - ஸ்ரீநிவாசன். 20. மண்மலர் - மண்ணால் செய்த பூ. வெருள் - அச்சம். சயம் - வெற்றி.

### அறுசீர் விருத்தம்.

தெண்டமிட் டெழுந்து சென்றுட் சிலர்களைக் காவ லாக
அண்டையி னிருவி நோக்கப் பின்னுமப் படியே தோன்றச்
கண்டுயர் நேமி மன்னன் கருத்திறும் பூது விம்மப்
புண்டரி கக்க ணானைப் போற்றியே பாவ லுற்றான். (21)

அம்பரந் தாமா மூவா வழகிய முதலே செம்பொன்
அம்பரந் திகழுஞ் சோதி யாரண முடிவே பாலார்
அம்பரத் தமர்வோ யார்க்கு மந்திரி யாமி யாகி
அம்பர மென்ன வெங்கு மகல்கிலா துறையுந் தேவே. (22)

ஒப்பறு கருணைக் கண்ணா வுலகமீன் றளித்த ழிக்கும்
தப்பறு திகிரி யங்கைத்தலைவனே கமலை மார்பா
மைப்புயல் வண்ணா வென்றே வாழ்த்திநின் றிருகை கூப்பிச்
செப்புவான் மட்பூ வானுன் திருவடி களினர்ச் சித்தோன். (23)

எவனவன் றனையான் காண விதயமுட் கருணை கூர்ந்து
நவிலெனப் பணிந்து வேண்ட ஞானபூ தரத்தான் கேட்டிப்
புவிமிசைக் குருவக் கிராமம் புகழ்பெற வசித்து ளானோர்
உவமையில் குலால னென்னை யுளத்தின்ஞா னத்தி னாலே (24)

நித்தமே காந்த மாக நினைத்தருச் சனைசெய் கின்றான்
பத்தியா லவன்செய் பூசை பரிவினேற் கின்றேன் சீரார்
உத்தம வரசே யென்ன வோதலும் வியந்தே யந்தச்
சுத்தமெய்ஞ் ஞானத் தோனைத் துரிசறச் சென்று நோக்க (25)

---

21. அண்டை - பக்கம். இருவி - இருக்கச்செய்து. நேமி - ஆஞ்ஞா சக்கரம். இறும்பூது - வியப்பு. புண்டரிகக்கணான் - தாமரை மலர் போன்ற கண்களையுடைய திருமால். 22. அம்பரந்தாமா - அழகிய வைகுண்டநாதனே! செம்பொன் அம்பரம் - பொன் ஆடை (பீதாம்பரம்). ஆரணம் - வேதம். பாலார் அம்பரம் - திருப்பாற்கடல். அந்தரியாமி - உயிர்க்குள் உயிர். அம்பரம் - ஆகாசம். 23. திகிரி - சக்கரப்படை. கமலை - இலக்குமி. மைப்புயல் - கரிய மேகம். மட்பூ - மண்ணால் செய்த பூ. 24. இதயம் - உள்ளம். ஞான பூதரத்தான் - திருவேங்கடமலைச் சீநிவாசன். உவமை - ஒப்பு. குலாலன் - குயவன். 25. ஏகாந்தம் - தனிமை. பரிவு - அன்பு. துரிசு - குற்றம்.

வேண்டுமென் றுரைத்து மான்முன் விடைகொடு நடந்து மேன்மை
பூண்ட நற் குருவைக் கிராமம் போயவன் மனையி னெய்திக்
காண்டலுங் குருவை நம்பி யெனக்கரை வீமன் வந்து
நீண்டகைம் முகிழ்த்தி றைஞ்சி நிற்பமுன் னேமி வேந்தன் (26)

வேங்கடத் தானை நீயெவ் விதத்தினா ராதிக் கின்றாய்
தீங்கற வெனக்கவ் வாறு செப்பிட வேண்டு மென்ன
ஆங்கவ னரசன் செய்ய வம்புய வதன நோக்கி
வாங்குவிற் றடக்கை மன்னா மட்கலம் வனையு நாயேன் (27)

முகுந்தனை வழிபா டாற்று முறைசிறி தேனுந் தேரேன்
உகந்தியா னர்ச்சிக் கின்றே னென்றுனக் கியாரு ரைத்தார்
செகந்தனை நீதி யாகச் செய்யகோ லோச்சி நாளும்
அகந்தைகள் விலக்கி யாளு மையனே யென்று சொன்னான். (28)

சொன்னதை வினவி நேமித் தோன்றலுங் குருவை நம்பி
தன்னையன் போடு நோக்கிச் சாற்றுவான் சீநி வாசன்
உன்னது வழிபா டுள்ள முகந்தன மிகவு மென்றும்
இந்நகர் வசித்தி யென்று மியம்பயான் செவியி னேற்று (29)

இவ்விடத் தினிதின் வந்தே னென்னலுங் குருவை நம்பி
செவ்விதின் வினவி முன்யான் சிநிவா சன்பாற் சென்று
திவ்விய மலர்ப்பா தத்தைத் தெண்டமிட் டியான்பூ சித்தல்
பவ்வநீ ருலகில் யார்க்கும் பகருத றவிர்தல் வேண்டும். (30)

எனமொழிந் திருப்ப வந்த வீசனின் றனக்கி யம்பி
இனிதுநீ யிங்க ணெய்துங் காரண மேதென் றான்முன்
கனிவின்வேங் கடமால் பாத கமலநான் பணிந்த போழ்து
பனிமலர் விழியி னாலப் பரனெனை நிவந்து நோக்கி (31)

---

26. கரை - சொல்லும். வீமன் - குயவன் பெயர். முகிழ்த்து இறைஞ்சி - குவித்து வணங்கி. நேமி வேந்தன் - சக்கரவர்த்தி. 27. ஆராதிக்கின்றாய் - பூசிக்கிறாய். தீங்கு - குற்றம். அம்புயவதனம் - தாமரை மலர் போன்ற முகம். வாங்கு வில் - வளைந்த வில். மட்கலம் - மண் பாண்டம். வனையும் - செய்யும். 28. முகுந்தன் - திருமால். செகம் - உலகம். செய்ய கோல் - செம்மையான ஆட்சி. அகந்தை - அகங்காரம். 29. நேமித்தோன்றல் - சக்கரவர்த்தி. வசித்தி - வசிக்கிறாய். 30. திவ்விய - தெய்வத் தன்மையுள்ள. பவ்வம் - கடல். 31. கனிவு - அன்பு. பாத கமலம் - தாமரை மலர் போன்ற அடிகள். பரன் - கடவுள்.

ஒப்பநீ யெனைப்பூ சிப்ப துலகில்லை யா ரிடத்தே னும்யான்
செப்பிநின் பாலெஞ் ஞான்று செல்கென விடுப்பே னக்கால்
தப்பற வழியா முத்தி சார்குதி யென்று ணந்தச்
சொற்படி விமானம் வந்து தோற்றிய தெதிர்பா ரென்றே (32)

புகன்று தன்மனைவி யோடும் பொலனவிர் மான மேறி
உகந்துவை குந்த நாட்டி லுற்றன னிதனைக் கண்ட
சகம்புகழ் நேமி வேந்தன் றன்னகத் திறும்பூ தெய்தி
முகுந்தனைப் பூசி யாதார்க் கிலையுயர் முத்தி யென்றே (33)

எண்ணியா னந்த மாய்மெய் யெங்கணும் புளக மெய்தக்
கண்ணகன் புரிசை மூதூர் கால்விசைத் தோடி யீன்ற
திண்ணிய குமா ரனை சீநிவாச னுக்கு மௌலி
மண்ணவர் புகழச் சூட்டி மனுநெறி முறையி னாளும் (34)

உலகையாண் டியருஞ் சேட வோங்கலான் கமல பாத
மலர்சிரம் புனைந்து நாளு மனத்ததி பத்தி யேய்ந்திட்
டிலகவாழ்ந் திருவென் றேறி யிணையிலா தோங்கு சேட
மலையடைந் தரியை யுன்னி மாதவ முயலுங் காலை (35)

திருவுரந் துலங்கச் சங்கந் திகிரிதோ ளணிக டோன்ற
இருகுழை யிமைப்ப மோலி யெழின்மணிக் கடக மின்ன
விரிகவுத் துவம்வில் வீச விளங்குபொற் றாசி லங்கக்
கருணையுண் மலிய வம்பொற் கலுழன்மேல் வந்து தோன்றி ( 6)

நிற்றலு நேமி வேந்த னெஞ்சிலா னந்த மெய்தி
வெற்றியந் திகிரி மாலே வேதனே டெண்ணில் கோடிப்
பொற்றையண் டங்க டந்து பொற்புறப் புரந்த ழித்துப்
பிற்றையு முதவு மேலாம் பெருமைமாண் டேவ தேவே. (37)

---

32. எஞ்ஞான்று - எந்தநாள். முத்திசார்குதி - மோக்ஷம் அடைவாய் 33. பொலன் அவிர் விமானம் - பொன்னொளி விளங்கும் விமானம். சகம் - உலகம். நேமிவேந்தன் - சக்கரவர்த்தி. இறும்பூது - வியப்பு. 34. புளகம் - மயிர்க்கூச்சு. புரிசை - மதில். விசைத்து - விரைந்து. மௌலி - கிரீடம். 35. சேட ஓங்கல் - சேடகிரி, திருவேங்கடமலை. அரி - திருமால். 36. உரம் - மார்பு. திகிரி - சக்கராயுதம். இருகுழை - இரண்டு குண்டலங்கள். இமைப்ப - ஒளி செய்ய. மோலி - முடி. கடகம் - தோள் அணி. கவுத்துவம் - கௌஸ்துப மணி. வில் வீச - ஒளி செய்ய. பொற்றூசு - பீதாம்பரம். கலுழன் - கருடன். 37. திகிரிமாலே - சக்கரபாணியே. வேதன் - பிரமன். பொற்றை - குன்றுகள்.

ஏதநீங் கடியர் தங்க ளிதயதா மரையும் பாலார்
ஓதவே லையும்வை குந்த முடன்வடத் திலையுஞ் சீரார்
வேதமா முடியு மிந்த வேங்கட மலையுந் தங்கு
மேதகு தான மாக விரும்பிய முதல்வா போற்றி. (38)

முத்தொழி னடாவு கின்ற மூவராய்ப் பூத மைந்தாய்
வித்தக வுருவாய் நின்ற விமலனே மீட லில்லா
முத்தியை யளிப்பா யென்று முளரியந் தாளின் வீழ்ந்து
பத்தியின் வேண்ட லோடும் பரன்மிகு கருணை யாலே (39)

தந்தன னெனலுஞ் செய்ய தமனிய மணிவி மானம்
வந்தெதிர் நிற்ப வந்த மன்னவ னதன்மீ தேறி
நந்தலில் வீடு பெற்றா னெனத்தரை நங்கை கேட்பச்
சுந்தர வராக மான தூயவன் சொற்றான் மாதோ. (40)

எனவுயர் சூதன் சௌன காதிய ரினிது கேட்டு
மனமுய ருவகை பூப்ப வகுத்தன னீது கேழற்
கனமுறு புராணந் தன்னிற் காசினி மாந்தர்க் கெல்லாம்
இனிதுளந் தெவிட்டா வண்ண மியல்பினி னிசைக்கு மன்றே. (41)

குருவைநம்பிக்கும் தொண்டைமான் சக்கரவர்த்திக்கும் மோட்சம் கொடுத்த அத்தியாயம் முற்றிற்று.

## 43. பிரயாகையின் மான்மியம் உரைத்த அத்தியாயம்.

அறுசீர் விருத்தம்.

குவலைய மடந்தை கேட்பக் கூரிய பிறைப்பற் பேழ்வாய்த்
தவளவாண் வராக மாயன் பின்னருஞ் சாற்ற லுற்றான்
புவிமிசை மிதிலை யாளும் பூபதி சனகன் மேலாய்
நவில்சதா னந்த னென்னு நற்றவன் வதன நோக்கி (1)

38. ஏதம் - குறை. ஓதவேலை - ஒலிசெய்யும் கடல். வடத்திலை - ஆல் இலை. 39. முத்தொழில் - ஆக்கல், காக்கல், போக்கல். வித்தகவுரு - ஞானரூபம். முளரி - தாமரை. 40. தமனியம் - பொன். நந்தல் - குறைவு. பூமிதேவி. வராகமான தூயவன் - ஆதிவராக மூர்த்தி. 41. உவகை - தரை நங்கை - மகிழ்ச்சி. கேழற் புராணம் - வராக புராணம். காசினி - உலகம். 1. குவலையம் - பூமி. தவளம் - வெண்மை. பூபதி - அரசன். வதனம் - முகம்.

சீதையா லலக்க ணென்றன் சிந்தையைக் கதுவ நொந்தேன்
ஏதெனி னியக்கர் வேந்துக் கிளையவ னுரு மின்னுப்
பாதகத் தயக்கி ரீவன் பங்கயத் தவனை நோக்கி
மாதவ மியற்றிப் பெற்ற வரத்தினிற் செருக்கு வாய்ந்து (2)

உலககண் டகனாய்த் தீமை யுருவெடுத் தெனமி குந்த
வலனுற விருக்கின் றனிம் மைதிலி மண்ணிற் றோன்றி
இலகெழிற் பருவ மாகி யிருப்பதைக் கேள்வி யுற்றால்
மலையென விகலி யென்பான் மலைந்தெடுத் தேகு வானே. (3)

உத்தம குணத்த ளாய வூர்மிளை யென்னு மென்றன்
புத்திரி தனக்கு மெம்பி புதல்விய ராகித் தோன்றும்
சுத்தநற் சுருதி கீர்த்தி துலங்குமாண் டவிக்குஞ் சீர்கா
யத்திரி கணவன் யாவர் வரரென வமைத்து ளானே. (4)

எனநவின் றெமது தொல்லோ ரிசைநனி பெறவு தித்த
கனமுறு தேவ ராத னெனச்சொல்லும் வலிய கொற்ற
மனனிடைச் சிறப்புச் சான்ற மைதிலி நிமித்த மோர்வில்
இனிதுறக் கொடுத்து வைத்தா ரிமையவர் முன்னர் மாதோ. (5)

அத்தவ ரிப்போழ் தும்பூ சனைசெய வமர்வ திங்கே
இத்தரை யரச ரெண்ணில் கோடிய ரென்மு னெய்திச்
சித்திரப் பாவை போலுந் தேன்மொழிச் சீதை யென்னும்
உத்தமக் கன்னி நங்கட் குதவென வுரைத்த லோடும் (6)

இப்பெருந் தனுவ ளைத்தாற் கீகுவ னெனயான் சொல்ல
ஒப்பற வுயர்வில் கண்ணேக் குற்றவர் விதிர்வி திர்த்துக்
கைப்பிடித் தெடுக்க லாற்றார் கனன்றெனோ டெதிர்ப்ப நாயேன்
தப்பறச் செருவி லேற்றுத் தனியனாய் வேறல் செய்தேன். (7)

2. அலக்கண் - துன்பம். கதுவ - பற்ற. இயக்கர் வேந்து - யக்ஷ ராஜன் ஆன குபேரன். தயக்கிரீவன் - இராவணன். பங்கயத்தவன் - பிரமன். செருக்கு - கருவம். 3. கண்டகன் - தீமை செய்வோன். வலன் - வெற்றி. மைதிலி - சீதா பிராட்டி. இகலி - பகைமை கொண்டு. 4. காயத்திரி கணவன் - பிரம தேவன். வரர் - மணவாளப் பிள்ளைகள். 5. கொற்ற மனன் - வெற்றியுடைய அரசன். இமையவர் - தேவர்கள். 6. தவர் - வில். 7. தனு - வில். விதிர் விதிர்த்து - நடுநடுங்கி. கனன்று - சினந்து. செரு - போர். வேறல் - வெற்றி.

இனியிரா வணன்வந் தால்யா னெங்ஙன மவனோ டேற்றுத்
தனியனு யமர்செய் கிற்பேன் றகைபெறு மெனது நான்கு
கனிகளுங் கலைக டேர்ந்து கவினுமங் கையர்க ளானார்
முனிவனே யவர்வி வாக முடிவதெக் கால மென்று (8)

சிந்தையின் மயரு கின்றேன் சிறுமியர் வதுவை முற்றிப்
புந்தியி னின்ன றீர்ந்து பொருவருங் கதியு மெய்த
இந்தலோ கத்தி னெந்தத் தேவனை வழிபா டாற்றி
வந்தனை புரியி னுண்டா மதன்வகை வழங்கென் றூனல். (9)

சாத்திர மொருங்கு ணர்ந்த தவச்சதா னந்தன் கேளாத்
தாத்திரி யரசே கேளென் றினிதுறச் சாற்று வானல்
மாத்திரைப் பொழுதே னுஞ்சீர் மாயனை மறவா துள்ளத்
தேத்துவான் மீகன் பாற்சென் றிறைஞ்சிநின் றொருநா ளாங்கண் (10)

தங்கியம் முனிவ னன்பாய்ச் சாற்றுறு கதைக டம்மை
இங்கித மோடு நானஞ் செவிவயி னேற்குங் காலை
அங்கையின் வீணை யேந்து மருந்தவன் வருத லோடும்
பங்கமில் குணவான் மீகன் பணிந்தெழுந் துபச ரித்தான். (11)

ஆதன மருளி யங்கை குவித்தெதிர் முகனி னின்று
போதன்வா ழுலகி னோடெவ் வுலகும்போ யுலாவு கிற்கும்
மாதவ முனியே மாயன் மலர்மக ளொடுவி ரும்பிப்
பூதலத் தடியர் துன்பம் போக்கவுட் கருணை வீறி (12)

எவ்விடத் துறைகின் றனத் தலத்தையு மேத நீங்குஞ்
செவ்விய கருமஞ் செய்தற் குயர்திருத் தூய தான
திவ்விய மகிமை பூண்ட சேத்திரந் தனையுஞ் செப்பென்
றெவ்வமின் முனிவான் மீக னியம்பநா ரதன்சொல் வானல். (13)

---

8. அமர் - போர். தகைமை - பெருமை. கனிகள் - கன்னியர்கள். கலைகள் - சாஸ்திரங்கள். கவினும் - அழகுற்ற. 9. மயருகின்றேன் - மயங்குகின்றேன். வதுவை - திருமணம். புந்தி - அறிவு. இன்னல் - துன்பம். 10. தாத்திரி - பூமி. மாத்திரைப் பொழுது - நொடிப் பொழுது. மாயன் - திருமால். 11. இங்கிதம் - குறிப்பு. வீணை யேந்தும் அருந்தவன் - நாரதன். பங்கம் - குற்றம். 12. ஆதனம் - இருக்கை. எதிர்முகன் - எதிர் இடம். போதன் - பிரமன். 13. ஏதம் - குற்றம். எவ்வம் - துன்பம்.

ஆதிநா ளிமய வெற்பி னறுமுக னெனக்குச் சொன்னான்
ஏதெனி லவன்கை லாய விறைவனைப் பணிந்து போற்றித்
தாதையே தமியன் சென்று தாருக வசுர னென்னுங்
காதகன் மாளப் போரிற் கருந்தலை துணித்த தாலே (14)

உற்றவெம் பிரம கத்தி யுறுகணு லகட்டின் மிக்குப்
பற்றிய பசிநீர் வேட்கை பயமடைந் தடிகள் சேவை
பெற்றன னிந்தப் பாவம் பெயர்தர வருள்செய் கென்னச்
சொற்றசண் முகனை நோக்கி யுருத்திரன் சொல்வ தானான். (15)

தக்கன்யா கஞ்செய் நாளிற் சற்றுமுண் மதியா தென்னை
அக்கிர மத்தாற் பேசி யவமதித் தானென் றேயான்
மிக்கவெஞ் சினத்தி னலவ் வேதியன் றலையைக் கொய்தேன்
அக்கணங் கையி லொட்டிக் கொண்டதச் சிரமத் தாலும் (16)

மேவிய பிரம சாயை யாலுமுள் வெதும்பிச் சோர்ந்து
நாவறண் டதிக தாகம் பசியோடு நலிந்து கையில்
தாவியொன் றியக பாலந் தன்னொடும் பிச்சை யேற்றே
ஆவலி னெங்கு மோடி யலைந்துமப் பவநீங் காமல் (17)

எவ்விடம் போகிற் றீரு மெனமனத் தாழ்ந்து தூக்கிச்
செவ்விய மேரு வெற்பைச் சென்றதன் சிகர மேவுந்
திவ்விய பிரம தீர்த்த மூழ்கியெச் செகமு மீன்ற
ஒவ்வறு திருமா லுந்தி யுதித்தநான் முகனை யுள்ளி (18)

அருந்தவஞ் செய்தே னந்த வயனும்வந் தென்மு னெய்தப்
பொருந்துமன் பொடும வன்செம் பொன்னடி பணிந்து தக்கன்
கருந்தலை துணிக்க வந்த கடும்பிர மகத்தி யென்னை
வருந்திடா தேகு மாறுன் மனத்தருள் புரிதல் வேண்டும். (19)

---

14. இமய வெற்பு - இமய மலை. அறுமுகன் - சுப்பிரமணியன். தாதை - தந்தை. தமியன் - தனித்தவன். காதகன் - கொடியவன். 15. உறுகண் - துன்பம். அகடு - வயிறு. வேட்கை - விருப்பம். சண்முகன் - சுப்பிரமணியன். உருத்திரன் - சிவன். 16. அக்கிரமத்தால் - முறையின்மையால். அவமதித்தான் - இழிவு செய்தான். சிரமம் - துன்பம். 17. வெதும்பி - வாடி. கபாலம் - தலையின் ஓடு. பவம் - பாவம். 18. தூக்கி - ஆராய்ந்து. வெற்பு - மலை. சிகரம் - முடி. செகம் - உலகம். ஒவ்வறு - ஒப்பில்லாத. 19, அயன் - பிரமன். பிரமகத்தி - பிரமஹத்தி தோஷம்.

எனப்பல புகழ்ந்து வாழ்த்து மெனையவன் மலர்க்க ணோக்கித்
தனிப்பர னுவப்பக் கங்கை யமுனைசங் கத்தின் முன்னாள்
கனப்பெரு முனிவ ரோடுங் கலந்துசென் றமல மான
வனப்புறு மகஞ்செய் தேனக் காலைமா தவன்முன் றோன்ற (20)

கண்டெழுந் தஞ்ச லித்துக் கருத்துடன் புகழ்ந்தே னந்த
விண்டுநெஞ் சுவந்து நீயிர் விருப்புட னியற்றி யாக
மண்டனி னிறைவே றிற்றி யானிங்கு வந்த தாலே
தெண்டிரைப் பாரி லிந்தச் சேத்திரந் தனக்கு நாமம் (21)

பிரயாகை யென்று சொல்லப் பெறுமிவ ணலத்தான் மிக்க
திருவினோ டிருந்தெ வர்க்குந் தீவினை விலக்கி நன்மை
வருகயா சிராத்தந் தன்னின் மகிழ்ந்துசெய் குநர்கண் முன்னோர்
நரகவே தனையை மாற்றி நற்கதி தந்தெந் நாளும் (22)

இத்தலந் தனின்வி ருப்போ டிருப்பனென் றினிதி யம்பி
அத்தகை மொழிகுன் றாமே யாவயி னமர்ந்தா னுங்குப்
பத்தநீ யேகுன் றனைப் பற்றிய பிரம கத்தி
மித்திர னொளியைக் கண்ட நிசியென வெருண்டு போமால். (23)

என்றெனக் குரைத்துப் பொன்போ லிருஞ்சிறை யெகின மூர்ந்து
சென்றுயர் பிரம லோகஞ் சேர்ந்தனன் விரைந்தி யானும்
மன்றலந் துளவ மாயன் வாழ்பிர யாகை யுற்றேன்
ஒன்றிய பிரம சாயை யோடுவெள் ளோடு மோவ (24)

மிகமகிழ் வெய்தி யந்த வியநதி யாடி யாங்கண்
அகமகிழ்ந் தினிது வைகு மச்சுத னடியிற் றாழ்ந்து
முகினிற முகுந்தா வாதி முதல்வனே நாயே னிந்த
மகிமைகொ டலத்தி னாளும் வசித்திட வருள்வா யென்ன (25)

---

20. பரன் - மேலான கடவுள். சங்கமம் - சேருமிடம். அமலம் - மலம் அற்ற. வனப்பு - அழகு. மகம் - யாகம். 21. அஞ்சலித்து - கைகுவித்து வணங்கி. விண்டு - திருமயுல். சேத்திரம் - இடம். நாமம் - பெயர். 22. திரு - இலக்குமி. கயாசிராத்தம் - கயையில் செய்யும் பிதிரர் சடங்கு. 23. குன்றாமே - குறையாமல். ஆவயின் - அவ்விடம். மித்திரன் - சூரியன் நிசி - இருள். வெருண்டு - அஞ்சி. 24. எகினம் - அன்னப் பறவை. மன். றலந் துளவம் - மணம் பொருந்திய துளசி. வெள்ளோடு - பிரம கபாலம். ஓவ - விலக. 25. வியநதி - பெருமையாகிய யாறு. அச்சுதன் - திருமால். முகில் - மேகம். முகுந்தா - திருமாலே !

வேண்டலுங் கருணை கூர்ந்து விருப்புற வென்னை நோக்கி
ஈண்டுமை யோடு தூய்தா மிருந்தவப் படிவந் தன்னைப்
பூண்டுகொண் டுறைதி யென்று புகலமெய் புளக முற்றேன்
ஆண்டகை யமலற் கன்பா யன்றுதொட் டின்று காறும் (26)

இப்பிர யாகை யின்க ணிருக்கின்றே னெனமுக் கண்ணன்
சுப்பிர மணிய னுக்குச் சொலிப்பினுஞ் சேட வெற்பின்
ஒப்பறு மான்மி யத்தை யோதின னெனயாழ் வல்லோன்
செப்பவான் மீகன் கேட்டுச் சிந்தையா னந்த மெய்தி (27)

வினையகல் சதானந் தற்கு விளம்பின னவன்ற னாலே
சனகவேந் தறிந்தா னென்று சயமுறு வாக மூர்த்தி
கனைகட லாடை பூண்ட காசினி மடந்தை கேட்க
இனியதெள் ளமுதம் போல விதமுற விசைத்தா னன்றே (28)

வயம்பெறு சவுன காதி மறையவர் தங்கட் கெல்லாம்
வியம்புனை சூத வேத விழுத்தவ முனிவன் சொன்னான்
இயம்புமிக் காதை யெல்லா மிசைபெறு வாக மென்ன
நயம்பெறு புராணந் தன்னி னவையற நவிலு மன்னோ. (29)

பிரயாகையின் மான்மியம் உரைத்த அத்தியாயம் முற்றிற்று.

## 44. சண்முகன் தவம் உரைத்த அத்தியாயம்.

எழுசீர் விருத்தம்.

தவாற வீணை நரம்பிசை பாடுந்
தவன்சதா னந்தனை நோக்கி
நவிலுவா னந்த வறுமுகன் றந்தை
நவின்றநற் சரித்திர மனைத்துஞ்

26. உமையோடு - பார்வதியோடு. தவப்படிவம் - தவ வேடம். புளகம் - மயிர்க்கூச்சு. 27. முக்கண்ணன் - சிவன். சேட வெற்பு - திருவேங்கட மலை. மான்மியம் - பெருமை. யாழ்வல்லோன் - நாரதன். 28. காசினி மடந்தை - பூமிப் பிராட்டி. 29. வயம் - வெற்றி. வியம் - ஏவல். நவை - குற்றம். 1. தவன் - தபசி (நாரதன்). அறுமுகன் - சுப்பிரமணியன்.

செவிமடுத் திதய மகிழ்ந்துகை குவித்துச்
செப்புவா னத்தனே தமியேன்
புவிமிசைச் சிறந்த தவஞ்செய லாற்றப்
புண்ணியத் தலம்புக லெனவே (1)

உமையிடப் பாகன் கருணையுண் மலிய
வோதுமஞ் சனகிரி யென்றும்
அமலநன் ஞான பூதர மென்று
மழகிய வேங்கட மென்றுஞ்
சமனறுந் தெய்வப் பொன்மலை யென்றுஞ்
சாற்றிய நாமமெண் ணிலதாய்
உமிழ்விட வரவி னரசுரு வமதா
யுயர்திரு வசலமொன் றுளதால். (2)

அந்தமா மலையி னுதிமா றவள
மாகுமாண் கேழலா யுதித்துப்
புந்தியிற் கதங்கொண் டெழுந்துபா தலத்திற்
புகுந்துபொற் கண்ணனைச் சவட்டி
சிந்துசூழ் தரணி மானைக்கூர்ங் கோட்டிற்
சேத்துபு மடிமிசைச் செவ்வே
சுந்தரம் பெறவைத் தவனுள மகிழ்ந்து
துலங்குற வீற்றிருப் பானல். (3)

சாற்றிய வராக மூர்த்திதன் றிருமுன்
சாமிபுட் கரிணியென் றறிஞர்
போற்றுற விளங்கு மதிற்குடைந் தோர்கள்
புந்தியிற் கண்ணிய பெறுவார்

---

செவிமடுத்து - கேட்டு. அத்தனே - தந்தையே. தமியேன் - தனித்தவன். புவி - உலகு. 2. உமையிடப்பாகன் - சிவன். அஞ்சனகிரி - திருவேங்கடமலை. அமலம் - மலம் இல்லாதது. ஞான பூதரம் - ஞான மலை. சமன் - ஒப்பு. நாமம் - பெயர்கள். விடவரவினரசு - ஆதிசேஷன். அசலம் - மலை. 3. தவளம் - வெண்மை. கேழல் - பன்றி. புந்தி - உள்ளம். கதம் - கோபம். பொற் கண்ணன் - இரணியாட்சன். சவட்டி - கொன்று. சிந்து - சமுத்திரம். தரணிமான்-நிலமகள், பூமிப் பிராட்டி. கோடு-கொம்பு. ஏந்துபு- தாங்கி. சுந்தரம் - அழகு. 4. திருமுன் - சமுகம். குடைந்தோர்கள் - தீர்த்தமாடினவர்கள். புந்தி - உள்ளம். கண்ணிய - எண்ணியவைகள்.

ஏற்றமா மந்தப் புண்ணிய சரசின்
　　கரையிலெவ் வுலகையுங் காக்கும்
ஆற்றல்சா றரும னெனும்பெயர் மனுமுன்
　　னருந்தவம் புரிந்தன னெடுநாள். (4)

வலியுடைக் கேழ லாயமா லவன்முன்
　　மருவிநீ யினிச்சின்னாள் கழியின்
உலகபா லர்களி லொருவனாய் நனிசீ
　　ரோங்கவே தருமரா சாவாய்
நலமறும் பவர்க ளெவரையு முறையி
　　னொடிநன் காய்ந்தொறுப் பதுசெய்
திலகுவை பல்யாண் டெனவா மளித்தா
　　னிதயமுட் கருணைமீ துறவே. (5)

வாயுவா னவனு மத்திரு மலையின்
　　வருந்திமெய்த் தவமது புரிவான்
நீயுமவ் விடனுக் கேகியம் பரனை
　　நினைத்தருந் தவஞ்செயி னுனைச்சேர்
தீயதாம் பிரம சாயைபோ மென்னச்
　　செப்பிய தந்தையை நோக்கித்
தூயமந் திரமொன் றருள்கெனப் பணிந்து
　　சொற்றன னறுமுகன் மாதோ. (6)

மங்கைபங் காளன் றாரகப் பிரம
　　மனுவினை வழங்கிடக் கேட்டுப்
பொங்கெழில் வாய்ந்த புட்பகாத் திரியிற்
　　போயவ னலம்பெற விளங்கும்

---

ஏற்றம் - உயர்வு. சரசு - தீர்த்தம். ஆற்றல் - வன்மை. 5. கேழலாய மாயவன் - வராகமாகிய திருமால். சின்னாள் - சில காலம். உலக பாலர்கள் - உலகைப் பரிபாலிப்பவர்கள். பவர்கள் - பாவம் செய்தோர். ஒறுப்பது - தண்டிப்பது. இலகுவை - விளங்குவாய். இதயம் - உள்ளம். 6. வாயுவானவன் - வாயுதேவன். அம்பரன் - இறைவன் ஆகிய திருமால். பிரமசாயை - பிரமஹத்தி தோஷம். சொற்றனன் - சொன்னான். 7. பங்காளன் - பாகத்தில் உடையவன். மனு - மந்திரம். புட்பகாத்திரி - திருவேங்கடமலை.

பங்கய மலிமாண் சாமிபுட் கரிணி
மருங்கினிற் பத்திமை வாய்ந்து
தங்கிநற் றவஞ்செய் பவனனை நோக்கித்
தானுமங் கேய்ந்தரி தனையே (7)

நினைத்தருந் தவத்தை நிரப்பினு னென்று
நாரத னிகழ்த்திட வினவி
அனைத்துமுள் ளுணர்ந்த தவச்சதா னந்தன்
சனகனுக் கறைந்தன னெனவே
இனித்ததெள் ளமுதச் சுவையென விதழ்விண்
டிசைத்தன னமிச மென்னும்
வனத்துறை முனிவர் வியப்புற ஞான
மாதவச் சூதவே தியனே. (8)

ஏருற விசைத்த விக்கதை யெல்லா
மியைபுற வாமன புராணம்
சீருற மொழியு நன்கென வுவந்த
சிரவணஞ் செய்பவர் நாளும்
பாருல கதனில் வேண்டிய வெய்திப்
பவமற வாழ்ந்துபின் னுயர்ந்த
பேருறும் பரம பதத்திலா னந்தம்
பெற்றுவீற் றிருப்பர்கண் மாதோ. (9)

---

பங்கயம் - தாமரை. பவனன் - வாயு. 8. நிரப்பினுன் - நிறைவேற்றி னுன். அறைந்தனன் - சொன்னுன். இதழ் விண்டு - வாய் மலர்ந்து. 9. ஏர் - அழகு. சிரவணம் - கேட்டல். பவம் - பிறவி.

சண்முகன் தவமுரைத்த அத்தியாயம் முற்றிற்று

## 45. இந்திரன் சாப விமோசனம் பெற்ற அத்தியாயம்.

கலிநிலைத்துறை.

மெய்ச்ச தாநந்த முனிமுதல் விழுத்தவ ரெவர்க்கும்
இச்சை நீக்கிய நாரதன் பின்னரு மிசைப்பான்
பச்சை மாமயில் வாகனன் பகர்திரு மலைமேல்
அச்சு தன்றனை யெணித்தவ மாற்றவே கியபின் (1)

உமைம ணாளனை நோக்கிநீ ளுயர்மறைக் கெட்டா
விமல மூர்த்தியை யறுமுகன் விழியெதிர் காண்டற்
கமையு நாள்பல கழியுமென் றகமிகத் துளங்கிக்
குமுத வாய்திறந் துரைத்தலுங் கொன்றையஞ் சடையோன் (2)

அன்ன நாண்மட நடையினா யகத்தனு ரடையேல்
பன்ன காசல மீதிமை யோர்பல முனிவர்
கன்னி யந்துழா யவன்றனைக் காணவுள் விரும்பி
மன்னு வாரினிச் சில்பகல் சென்றபின் மாதோ. (3)

நாமு மவ்வயி னணுகுது மெழிலுறு நலனார்
ஏம வாடையத் தனிமுத லெளிவரு மெவரும்
சேம மிக்குறக் கண்டுசே விக்கலா மென்றே
தூம வார்குழற் கறைந்தொரு கதைபினுஞ் சொல்வான் (4)

இந்தி ரன்னொரு நாளக லிகையையிச் சித்தான்
அந்த வாறறிந் தழலெனக் கவுதம னழன்று
முந்தெ னில்லவண் மேனசை முன்னிய வதனால்
நிந்தை யுற்றநி னுடலல்கு லாகென நிகழ்த்த (5)

---

1. விழுத்தவர் - சிறந்த தவசிகள். மயில் வாகனன் - சுப்பிரமணியன். அச்சுதன் - திருமால். 2. மணாளன் - நாயகன். விமலமூர்த்தி - மலரகித னாகிய பெருமான். குமுதவாய் - ஆம்பல் மலர்போன்ற வாய். கொன்றையஞ் சடையோன் - சிவன். 3. மடநடையினாய் - மெல்லிய நடையை யுடைய பெண்ணே! அனார் - தாயர். பன்னகாசலம் - திருவேங்கடமலை. இமையோர் - தேவர்கள். கன்னியந்துளாய் மாயவன் - தூய திருத்துளசி மாலை யணிந்த திருமால். மன்னுவார் - நிலைபெறுவார்கள். 4. அவ்வயின் - அவ்விடம். ஏமவாடையத் தனிமுதல் - பீதாம்பரதாரியாகிய திருமால். நணுகுதும் - அடைவோம். சேமம் - நலம். தூமவார்குழல் - இருள்போன்ற நீண்ட குழலை யுடைய உமையாள். 5. அழலென - தீப்போல. அழன்று - கோபித்து. இல்லவள் - மனையாட்டி. நசை - காதல். நிந்தை - பழிப்பு.

அன்ன காலையி னுடலெலா மவ்வணந் தோன்றப்
பொன்னி ஞட்டிறை புந்தியி னதிதுயர் பொருந்தி
என்ன செய்குவ தினியென வெண்கணு னுலகின்
மன்னி மானச வாவியின் மறைந்துறைந் தனனால். (6)

தேவர் கோனிலா தறிந்துதா னவர்திரண் டார்த்து
மேவ வானவர் புலோமசை வீற்றிருக் கின்ற
கோவி லெய்தியங் கைசிரங் குவித்துநின் றுனது
காவலா னெவட் போயின னுரையெனக் கழற (7)

எங்குச் சென்றன னேவுணர் கிற்கிலே னெவர்க்கும்
பங்க நீங்கிய பரமஞா னந்தரு குருவாம்
துங்க வேதிய னிடைத்தெரிப் பீரெனச் சொன்னாள்
மங்க ளஞ்செறிந் திலங்குநன் மங்கையாஞ் சசியே. (8)

சொன்ன வாசகங் கேட்டலுந் தூயவா னவர்கள்
பொன்னன் வாழிடன் புகுந்தடி போற்றிசெய் தெமது
மன்ன னெங்கணுற் றனன்கொலோ வழங்கென வழுத்தத்
தன்ன கத்தின்ஞா னத்தினுற் றுணித்திருந் தறிந்தே (9)

விண்ணின் வேந்தனோர் கடிதடம் வேட்டுட லெல்லாம்
எண்ணி லாநிதம் பங்களை யெய்தியுண் ணுணி
நண்ணி நான்முக னுறையுளி னுண்மலர் களுலும்
தண்ணென் மானச தடந்தனிற் றுணித்துறை கின்றுன். (10)

அவ்வி டத்துநாம் போந்துறி னறியலா மென்று
செவ்வி வாய்ந்ததே சிகன்சொல வவற்கொடு தேவர்
எவ்வ நீங்கிய நான்முக னுலகிடை யெய்தித்
திவ்வி யோதக மானசத் தடங்கரை சேர்ந்தார். (11)

---

6. பொன்னிஞட்டிறை - தேவருலகுத் தலைவன் ஆகிய இந்திரன். புந்தி - உள்ளம். எண்கணுன் - பிரமன். மன்னி - பொருந்தி. மானசவாவி - மானச தீர்த்தம். 7. தானவர் - இராட்சதர். வானவர் - தேவர். புலோமசை - இந்திராணி. கோவில் - அரண்மனை. 8. பங்கம் - குறை. துங்கவேதியன் - பரிசுத்த மறையோன் ஆகிய பிருஹஸ்பதி. சசி - இந்திராணி. பொன்னன் - பிருஹஸ்பதி. வழுத்த - வேண்டிக்கொள்ள. 10. விண்ணின் வேந்தன் - இந்திரன். கடிதடம் - பெண்குறி. வேட்டு - விரும்பி. நிதம்பம் - பெண்குறி. உள் நாணி - உள்ளத்தில் வெட்கி. உறையுள் - வாழ்விடம். களுலும் - நெருங்கியுள்ள. தடம் - தீர்த்தம். 11. செவ்வி - செம்மை. தேசிகன் - ஆசாரியனுகிய பிருஹஸ்பதி. எவ்வம் - குறை. திவ்வியோதகம் - தெய்வத் தன்மையுடைய தீர்த்தம்.

இந்தி ரன்கட வுளர்வர வுணர்ந்தெதி ரிசைப்பான்
நிந்தை யாகவென் மெய்யுறை நிதம்பங்க ளோவச்
சிந்தை கொண்டொரு வேள்வியைச் செய்குமி னெனலும்
கந்த மேவிய கற்பக நாட்டவர் கரைவார். (12)

அறுசீர் விருத்தம்.

சதிருறு மாசே நின்னைத் தவிர்ந்தியா மகமெவ் வாறு
இதமுறப் புரிதுஞ் சீற்றத் தெறுழ்வலித் தீய ரான
திதியருள் புதல்வர் செய்யுந் தீமையால் வெருக்கொண் டேநம்
பதிதுறந் துற்றேம் நீவந் தவர்வலி குறைய மோதி (13)

வென்றபின் சாப மோவ விதிமுறை வேள்வி செய்வோம்
மன்றலங் கமல மேவிம் மானச மடுவி னுள்ளால்
சென்றொளித் துறைத னுன்றன் றிறத்தினுக் கிகழ்ச்சி யன்றே
என்றுரைத் திடவச் சொற்கேட் டிந்திரன் விளம்ப லுற்றான். (14)

எவ்விதந் துறக்க நாட்டுக் கெய்துகே னென்மே லெல்லாங்
கவ்விய நிதம்ப மோடு கண்டவ ரம்பல் கூறச்
செவ்விய வுணர்ச்சி பேணத் தீவினை நயந்து வந்த
திவ்வகை யெனநா ணத்தோ டெழுந்தெதிர் தோன்ற நின்றான். (15)

தேசிக னடியிற் றாழ்ந்து செப்புகா லங்கண் மும்மை
மாசறத் தெருண்டநீ யென் மனச்செய லறிவை நாயேன்
பேசுவ தெவனிவ் வாறு பெற்றன னென்று பின்னும்
வாசவன் குரவன் பாத மலர்சிரஞ் சூடிச் சொல்வான். (16)

---

12. கடவுளர் வரவு - தேவர்களுடைய வருகை. இசைப்பான் - கூறுவான். நிந்தை - பழிப்பு. மெய் - உடம்பு. ஓவ - நீங்க. வேள்வி - யாகம். கந்தம் - நறுமணம். கற்பக நாட்டவர் - கல்பகம் முதலிய விருக்ஷங்களுடைய தேவருலகினர். கரைவார் - சொல்லுவர். 13. சதிர் - அழகு. மகம் - யாகம். இதம் - நலம். சீற்றம் - கோபம். எறுழ்வலி - மிக்க வன்மை. திதியருள் புதல்வர் - தைத்தியர் என்ற இராக்கதர். வெரு - அச்சம். பதி - ஊர். 14. ஓவ - விலக. மன்றலங் கமலம் - மணம் பொருந்திய தாமரை மலர். விளம்பல் - சொல்லுதல். 15. துறக்க நாடு - சுவர்க்கலோகம். கவ்விய - பற்றியுள்ள. அம்பல் - இகழ்ச்சி மொழி. பேண - பாதுகாவாத. நாணம் - வெட்கம். 16. தேசிகன் - ஆசாரியனாகிய பிருஹஸ்பதி. காலங்கள் மும்மை - இறப்பு நிகழ்வு எதிர் காலங்கள். தெருண்ட - தெளிந்த. வாசவன் - இந்திரன். குரவன் - ஆசாரியன்.

கலிநிலைத்துறை.

தேவ காரியப் பொருட்டுமுன் னோர்தினத் தினின்யான்
தூவ ளந்திகழ் பிருகெனுந் தொல்லைமா தவத்தோன்
மேவு சூழலின் மேயின னங்கொர்வெஞ் சாபம்
தாவி யென்னைவந் தடைந்தது பொருக்கெனச் சார்ந்தே. (17)

அடைந்த சாபமஃ தேதெனி னமரர்மேட் டிரங்கள்
மிடைந்தென் மெய்யுற விதித்தன னெனச்சுருக் கமதாய்
உடைந்த சிந்தைய னுரைத்தலுஞ் சிகண்டிகன் வினவிக்
குடைந்து வண்டிமிர் கற்பக நாடரைக் கூவி (18)

உங்கள் மேட்டிரங் களையும திறைவிருப் புற்றான்
இங்கு தந்திடு வீரென விசைத்திட வவருந்
தங்கள் மேட்டிரங் களையவன் கடிதடங் களிலே
தங்கவை த்தனர் யாவருஞ் சார்ந்தவண் மொய்த்தே. (19)

வைத்த தானிகம் பக்குறி யாவுமே கரப்ப
அத்த லத்தைவிட் டகன்றுதன் பதியடைந் தவுணர்
சித்த நைந்துகெட் டோட்டரச் செயித்திடை யின்றி
நித்த மெண்ணிலா வரம்பையர் தம்மைநே சித்தே (20)

எழுசீர் விருத்தம்.

கலவியை விழைந்து விரகமுண் மலிந்து
காமுக னயலைந் தாசான்
மலரடி வணங்கி யெனுதுடல் கதழ்ந்து
மருவிய மேட்டிர மெல்லாம்
விலகிடும் வகையை யருளென வவனும்
விளம்புவா னஞ்சன மலையின்
இலகெழின் மிக்க விச்சுவ சேன
தீர்த்தமென் றிசைப்பதொன் றுளதால். (21)

---

17. தூவளம் - பரிசுத்தமான செழுமை. சூழல் - இருப்பிடம். பொருக்கென - விரைவாய். 18. அமரர் - தேவர்கள். மேட்டிரங்கள் - ஆண்குறி. மிடைந்து - பொருந்தி. சிகண்டிகன் - பிருகஸ்பதி - (சிகண்டிசன்' என இருத்தல் வேண்டும்'. கற்பக நாடார் - தேவர்கள். 19. இறை - தலைவன். மொய்த்து - நெருங்கி. 20. கரப்ப - மறைய. அவுணர் - இராக்கதர். ஓட்டர - ஓட்டம் கொள்ள. அரம்பையர் - தேவமாதர். 21. கலவி - புணர்ச்சி. விழைந்து - விரும்பி. விரகம் - ஆசை. காமுகன் - ஆசைகொண்டோன். கதழ்ந்து - விரைந்து. அஞ்சனமலை - திருவேங்கடமலை.

அங்கடைந் தரிய தவஞ்செயிற் போமென்
றறையவா கண்டலன் வினவிப்
பொங்கெழின் மிகுந்த வஞ்சனத் திரியிற்
போய்முனம் புகன்றதீர்த் தத்தில்
அங்கையா ழியனை நினைந்துநீ ராடி
யதன்கரை நின்றெழீஇ யகமாம்
பங்கய மலரிற் பாமனை யிருத்திப்
பரிவின ராதனம் புரிந்தான். (22)

மறைக்கெலா முயர்கா யத்திரி யெனச்சொன்
மனுவினைப் பன்னியுச் சரித்துத்
தறைத்தலத் தொருகாற் பெருவிர லூன்றித்
தவநெடு நாட்குறை வின்றி
நிறைத்திட முகுந்தன் விழியெதிர் தோன்றி
நிற்றலுஞ் சசிபதி யுவந்து
நறைத்துழாய் கமழு நளினமென் பதத்தை
நன்குற வஞ்சலித் தேத்தி (23)

### அறுசீர் விருத்தம்.

தீட்டருஞ் செவ்வி வாய்ந்த திருமகிழ் மணளா மெய்யின்
மேட்டிர மொன்று நிற்ப மற்றைய வெல்லாம் வேறாய்
நாட்டிடை யற்று வீழும் படிவர நல்கென் றோதத்
தாட்டுழாய் மாலை யானவ் வரத்தினைத் தந்து போனன். (24)

முக்கிய நூல்க டேர்ந்த முனிவரா ருருக்க டாங்கி
மிக்கவன் போடு வான வேந்தனை நோக்கிச் சொல்லும்
தக்கவிந் திராணி யின்பந் தனையெணித் தவமுன் செய்தோம்
அக்கருத் தறிந்து வந்து கௌதம னழன்று சீறி (25)

22. ஆகண்டலன் - இந்திரன். அஞ்சனத்திரி - திருவேங்கடமலை. ஆழியனை - சக்கரபாணியாகிய திருமாலை. பங்கயம் - தாமரை. பரிவு - அன்பு. ஆராதனம் - பூசை. 23. மனு - மந்திரம். முகுந்தன் - திருமால். சசிபதி - இந்திராணியின் நாயகன் ஆகிய இந்திரன். நறை - தேன். நளினம் - தாமரை. அஞ்சலித்து - கையால் வணங்கி. 24. தீட்டு - சித்திரித்தல். மணளா - மணவாளனே. அரன் - சிவன். வச்சிரத்தோன் - இந்திரன். பீசம் - ஆண் குறிகள். 25. முனிவாருரு - முனிவர்கள் வடிவம். வான வேந்தனை - இந்திரனை. அழன்று - கோபித்து.

மேதகு சிறப்பு வாயுன் மெய்யின்மேட் டிரங்க ளாகி
ஏதமி லிந்தி ராணி தன்னுட னிணங்கி யின்பங்
காதலி னிடைவி டாது கலந்தனு பவிப்பீ ரென்றே
ஓதின னதனு லிவ்வா றுற்றன மெனச்சொ லுற்ற (26)

அவ்வகை கேட்ட தேவர்க் காசனு மவரை நோக்கி
எவ்வமி னீங்க ளோரா யிரவரு மெனக்கெப் போழ்துஞ்
செவ்விய கண்க ளாகச் சேருவீ ரென்ன வேண்ட
ஒவ்வியவ் வேத நூலோ ருவந்துபா தலத்திற் சென்றார். (27)

ஆயிரங் கண்க ளாய்வந் தமரர்கோன் முன்னர் நிற்ப
நேயமோ டவற்றை யெல்லா நேருற வுடலிற் சேர்த்தித்
தூயவர் புகழ விண்ணோர் தொடாவாழ் பதியிற் சென்று
மீயுயர் கோயி லெய்தி விளங்கவீற் றிருந்தான் மன்னோ. (28)

என்றா னுமையாள் கேட்ப விசைத்ததை யாழ்கைக் கொண்டோன்
நன்றறி சதாநந் தற்கு நவின்றன னவனன் போடும்
வென்றிகொள் சனகன் கேட்ப விரித்தன னென்னச் சொன்னான்
மன்றலந் துளவ மாலே மனத்துணர் சூதன் மாதோ. (29)

புகலுமிக் காதை யெல்லாம் பொற்புற வுயர்ந்த மேலோர்
மகிழ்வுற வமரர் மூவர் மருந்தெனத் தெவிட்டா வண்ணஞ்
சகமதிற் பவங்க ணீக்கித் தவறிலாக் கதியை மேவும்
வகையருள் புராண மென்னும் வாமனம் பகரு மன்னோ. (30)

---

26. ஏதம் குற்றம். 27. எவ்வம் - குறை. ஒவ்வி - ஒப்புக்கொண்டு. 28. அமரர்கோன் - தேவர் தலைவன். கோயில் - அரண்மனை. 29. யாழ்கைக்கொண்டோன் - நாரதன். மன்றல் - மணம். 30. மருந்து - அமுதம். பவம் - பிறப்பு.

இந்திரன் சாபவிமோசனம் பெற்ற அத்தியாயம் முற்றிற்று.

## 46. விச்சுவசேனர் உற்பத்தி உரைத்த அத்தியாயம்.

**அறுசீர் விருத்தம்.**

*கங்கைவே ணியினான் சொன்ன காதைகேட் டிமய மீன்ற*
*மங்கைவிம் மிதத்த ளாகி மதிமுக மலர்ந்து வந்து*
*சிங்கலில் விசுவ சேன தீர்த்தமேம் பாடு முற்றும்*
*இங்கெனக் கருள வேண்டு மெனச்சிவ னிசைப்பான் மன்னோ.* (1)

*அக்கதை தனைச்சொல் வேனென் றருந்தவச் சதாநந் தற்குச்*
*சக்காக் கையி னானைச் சதிமுறை தவறா வண்ணம்*
*இக்கிர தத்தை யேய்ப்ப வீணையி னினிது பாடும்*
*முக்கிய கானம் வல்ல முனிவான் மொழிகு வானே.* (2)

*முன்னொரு முதலா மூழி முனைகெழு வச்சி ரத்தோன்*
*மின்னிடை யரம்பை மாதர் தம்முளே விளங்கா நின்ற*
*அன்னமெ னடைய ளாய குந்தளை தனைய ழைத்துத்*
*தன்னிகர் துருவா சப்பேர்த் தவனுறை சாலை சென்று* (3)

*செய்தவஞ் சிதைப்பா யென்னாச் செப்பலுஞ் செகமோ கிப்ப*
*மைதவழ் வேற்கண் பார்வை வந்துமெய்ம் மீது தைக்கின்*
*உய்தனு மரிதென் றெண்ணி யொதுங்கிமா தவர்க ரப்ப*
*எய்தியத் திரிதன் சூனு வினிதுறை யிருக்கை யெய்தி* (4)

*சேவடி கவைஇய பொன்னஞ் சிலம்புகள் சிலம்ப முத்தத்*
*தூவட மிமைப்பக் கொங்கைத் துணைகதிர்த் தெழக்க ரத்தின்*

---

1. கங்கைவேணியினான் - கங்கையைச் சடைமுடியில் தாங்கியுள்ள சிவன். இமயமீன்ற மங்கை - இமய பர்வதம் பெற்ற மகளாகிய பார்வதி. விம்மிதம் - வியப்பு. சிங்கல் - குறைவு. மேம்பாடு - சிறப்பு. 2. சக்காக் கையினான் - சக்கராயுதத்தை திருக்கையிலுடைய திருமால். சதி முறை-தாள் வொற்று முறைமைகள். இக்கிரதம் - கருப்பஞ்சாறு. கானம் - இசை. 3. ஊழி - கல்பகாலம். வச்சிரத்தோன் - வச்சிராயுதத்தையுடைய இந்திரன். மின்னிடை - மின்னல்போன்ற இடுப்பு. அரம்பை மாதர் - தேவ மகளிர். தவன் - தவசி. 4. செகம் - உலக மக்கள். மைதவழ் வேற்கண் - அஞ்சனம் தீட்டிய வேல் போன்ற கண். அத்திரிதன் சூனு - அத்திரி முனிவர் மகன் ஆகிய துர்வாச ருஷி. இருக்கை - ஆசிரமம். 5. சேவடி கவைஇய - சிவந்த பாதங்களைச் சூழ்ந்துள்ள. சிலம்புகள் - காலிலணியும் நூபுரங்கள். சிலம்ப - ஒலிக்க. தூவடம் - பரிசுத்தமான மாலைகள். இமைப்ப - ஒளிவிட. கதிர்த்தெழ - விளக்கமாய் ஓங்க.

மேவிய வளையொ லிப்ப மெய்ம்மண மணப்ப வொல்கித்
தாவிமெல் லிடைத ளாடத் ததைமணிக் குழைக ளாட (5)

அசைந்தசைந் துலவிப் பூவா ரளகமே லளிகள் பாட
இசைந்தவே காசங் காற்று லிடையிடை விலகித் தோன்றக்
கசிந்தபே ரன்பி னேடுங் கறையிலாத் தவஞ்செய் வோன்முன்
வசுந்தரை யதிச யிப்ப வந்தெழி றிகழ நின்றாள். (6)

நின்றவ ளெழிலை நாளு நெஞ்சகப் பகைகள் பாற
வென்றமா தவன்கண் ணுற்று விழுத்தவஞ் சிதைக்க வந்தாள்
என்றக நினைந்து நீயிங் கெயினப்பெண் ணுதி யென்னக்
கன்றிய மனத்த னுகிக் கனலெழக் கழறி னுனல். (7)

குந்தளை யென்னு நாமக் கோமளப் படிவப் பாவை
சிந்தையுள் வெரூஉக்கொண் டந்தச் செழுந்தவ னடியில் வீழ்ந்து
இந்திர னேவ லாலிங் கெய்தினே னவையை நல்காய்
புந்தியுட் பொறுத்தி யென்று போற்றலு முனிவ னேக்கி (8)

இழியெயி னக்கு லத்தி லெய்திநீ யிணையி லாதோர்
பழுதிலா மகவை யீன்ற பின்னுனைப் பற்று சாபம்
ஒழியுமென் றுரைப்ப வந்த வொண்டொடி பின்னு மண்மேல்
தொழுதெழுந் திருகை கூப்பிச் சொல்லுதன் மேயி னுளால். (9)

அய்யநின் னருளி னல்யா னளிக்குமச் சேய்தீர்க் காயு
மெய்யறி ஞானம் பத்தி மிகுவலி சிறப்பு வாய்ந்த
துய்யவ னுக வேண்டு மெனச்சொலத் துறவு பூண்ட
பொய்யறு முனியவ் வாறே பொலிகவென் றருளப் போனுள். (10)

---

ஒல்கி - தளர்ந்து. இடை தளாட - இடுப்புச் சோர்வு அடைய. ததை மணிக் குழை - நெருங்கிய மணிகளால் செய்த குண்டலங்கள். 6. அளகம் - கூந்தல். அளிகள் - வண்டுகள். ஏகாசம் - உத்தரியம் - மேலாடை. கறை - குற்றம். வசுந்தரை - பூமி. எழில் - அழகு. 7. அகப்பகைகள் - உட்பகைகள் ஆகிய காமம், குரோதம், மோகம், மதம், மற்சரம் முதலியவைகள். பாற - ஓடும்படி. விழுத்தவம் - மேன்மையான தவம். எயினப் பெண் - வேட்டுவப் பெண். ஆதி - ஆவாய். கன்றிய - சினந்த. கனல் - தீ. கழறினன் - சொன்னன். 8. கோமளப் படிவம் - இளமையான உருவம். வெரூஉ - அச்சம். ஏவல் - கட்டளை. நவை - குற்றம். புந்தி - நெஞ்சம். பொறுத்தி - பொறுப்பாய். 9. எயினக் குலம் - வேட்டுவ சாதி. மகவு - குழந்தை. ஒண்டொடி - ஒளியுடைய வளையலணிந்த மங்கை. 10. தீர்க்காயு - பூரண ஆயுசு. துய்யவன் - பரிசுத்தன். துறவு - சந்நியாசம்.

போனவள் வீர வாகு வெனப்பெயர் பொருந்தி வாழுங்
கானவன் மகளாய்த் தோன்றிக் கவின்சுவற் சலேயென் னப்பேர்
தானடைந் துறையு நாளிற் பத்திரன் றனக்குத் தந்தை
ஈனமின் மணஞ்செய் தீந்தா னினிதுவான் கிளேகொண் டாட. (11)

பத்திரன் மனேவி யான சுவற்சலே பருவந் தாங்கி
உத்தம தினத்தி னல்ல வோரையின் முதுக்கு றைந்து
நத்துயர் மணிகள் சிந்து நருமதை நதியின் மூழ்கி
புத்தியின் முன்னிச் சென்ருேர் புதுமாக் காவி னின்ருள். (12)

நின்றவ டன்னே நோக்கி நோறு புனலின் வேந்தன்
சென்றரு கண்மி வேட்கை செழித்தெழத் தழீஇப்பு ணர்ந்து
மன்றலங் குழலி நின்மாட் டிளநல மல்கித் துய்த்தேன்
என்றுரைத் தனக்கு வேட்ட தியாதஃ தியம்பு கென்ருன். (13)

இயம்பிய வச்சொற் கேளா வெழிற்சுவற் சலேயின் ருேக்கி
வியம்புனே புனலின் வேந்தே மேதகு குணநன் ஞானம்
வயம்பெறு புகழ்பெற் ருேங்கு மகற்றரு கென்ன வேண்டி
நயம்பெற வுரைத்த லோடு மவ்வா நல்கிப் போனன். (14)

கருக்கொடு திங்கள் பத்துங் கழிந்தபின் களிப்பு மிக்குத்
திருக்கிளர் பூச நாளு மலவனுஞ் சேர வம்பொன்
உருக்கிளர் மின்னி னன்ன வுருவுடை மகனே யீன்ருள்
மருக்கமழ் மலரின் மாரி வானவர் பொழிந்து வாழ்த்த. (15)

ஈன்றவாண் மகவுக் கீரைந் தியாண்டுவந் தெய்து காறும்
ஊன்றிய பெட்பி னேடு முற்றரு கிருந்து பின்னர்ச்
சான்றனர் றுருவா சப்பேர்த் தவமுனி சாப நீத்து
வான்றல மடைந்தா ளந்த மகனுமத் தனேக்கை விட்டே (16)

11. கானவன் - வேட்டுவன். கவின் - அழகு. ஈனம் - இழிவு. மணம் - கலியாணம். வான்கிளே - பெருஞ் சுற்றத்தார். 12. உத்தம தினம் - நன்ஞள். ஓரை - முகூர்த்தம். முதுக்குறைந்து - பூப்பு அடைந்து. நத்துயர் மணிகள் சிந்தும் - சிப்பிகள் உயர்ந்த முத்துக்களேச் சொட்டும். கா - சோலே. 13. புனலின் வேந்தன் - வருணன். அண்மி - நெருங்கி. தழீஇ - தழுவி. மன்றலங் குழலி - மணம் பொருந்திய கூந்தலேயுடைய பெண். இள நலம் - புதிய இன்பம். துய்த்தேன் - அனுபவித்தேன். வேட்டது - விரும்பியது. 14. வியம் - பெருமை. வயம் - வெற்றி. 15. திங்கள் - மாதம். அலவன் - கற்கடகராசி. மரு - மணம். மாரி - மழை. 16. பெட்பு - விருப்பம். வான்றலம் - தேவருலகு. அத்தன் - தந்தை.

காசிப முனிபாற் சென்று கலைமறை யொருங்கு ணர்ந்தாங்
காசற விலங்கா நின்ற வஞ்சனைத் திரியின் மேவிக்
கேசவ னடிக ளுன்னிக் கேடிலாத் தவநின் றாற்றித்
தேசுறு முருப்பெற் றேங்கு சேனைநா யகப்பேர் பெற்றான். (17)

ஆதலா லவண மர்ந்த தடத்தினுக் கற்றை நாட்டொட்
டேதமில் விசுவ சேன தீர்த்த மென் றியற்பேர் யாரும்
ஓதலேழ் குநர்க்குப் பாவ மொழிக்குமப் புனற்கு மேல்பால்
தீதகல் கின்ற பஞ்சா யுததீர்த்த மென்றொன் றுண்டால். (18)

அத்தட மேக்குப் பாங்க ரக்கினி தீர்த்தஞ் சீர்சால்
சுத்தநற் பிரம தீர்த்தந் துன்னுமேழ் முனிவர் தீர்த்தம்
சித்தர்க டீர்த்த மென்றுஞ் செப்புமித் தீர்த்த மெல்லாம்
முத்தரும் மிகப்பு கழ்ந்து மொழியநன் கேய்ந்து தோன்றும். (19)

பாதலத் திருந்தெ ழுந்தொ ரிலிங்கந்திண் பாரைக் கீண்டு
மீதுறக் காம தேனு விழியனல் கதுவ நோக்கி
ஏதிது வென்று கொம்பா லெற்றுவான் முயலுங் காலை
ஓதிய திலிங்கந் தேனு வொளிதிகழ் வதன நோக்கி. (20)

என்னைநீ கவற்றல் வேண்டா வினிப்புற மெய்தா மல்யான்
உன்னெழிற் குராமு கத்தி னுறுகுறி யாகப் பெற்றீண்
டிந்நிலத் திருக்கின் றேனென் றியம்பியங் கிருந்த தந்த
நன்னய விலிங்கம் வந்த பிலத்தினன் னுமை நாடின் (21)

வெண்ணிறக் கபிலை யாகி மேவிய முனைவன் பேரால்
தண்ணெனுங் கபில தீர்த்த மெனப்பெயர் சார்ந்த தந்தப்
புண்ணிய சரசிற் றேளாந் திங்கட்பூ ரணைத்தி வாவின்
நண்ணிய கடிகை பத்து ணன்குறுந் தீர்த்த மெல்லாம் (22)

---

17. கலைமறை - சாஸ்திரமும் வேதமும். ஆசு - குற்றம். அஞ்சனைத்திரி - திருமலை. கேசவன் - திருமால். சேனை நாயகன் - சேனை முதலியார். 18. அவண் - அவ்விடம். தடம் - தீர்த்தம். மேல்பால் - மேற்குத் திசை. 19. மேக்குப் பாங்கர் - மேலைப் பக்கத்தில். எழ்முனி - சப்த ரிஷி. முத்தர் - வீடு பெற்றவர். 20. பார் - பூமி. கீண்டு - பிளந்து. விழியனல் - கோபாக்கினி. எற்றுவான் - குத்திப் பெயர்க்க. தேனு - தெய்வப் பசு. வதனம் - முகம். 21. கவற்றல் - துன்புறுத்தல். புறம் - வெளி. குராமுகம் - கால்குளம்பு இடம். பிலம் - நிலப்புழை. 22. கபிலை - பசு. முனைவன் - ருஷி. சரசு - தீர்த்தம். தேளாந் திங்கள் - விருச்சிக மாசம் ஆகிய கார்த்திகை. பூரணைத்திவா - பௌர்ணமி நாள். கடிகை - நாழிகை.

சேர்ந்திடும் வருடந் தோறுஞ் செப்புமக் காலந் தன்னில்
சார்ந்ததிற் குடைகு நர்க்குத் தறுகண்வெம் பவங்கண் முற்றும்
தீர்ந்துய மயனு லோகஞ் செறிவது திண்ண மென்றியாழ்
தேர்ந்தவன் சதாநந் தற்குச் செப்பினன் பண்டை ஞான்றே. (23)

அச்சதா நந்தன் சீர்சால் சனகனுக் கருளி ஞனென்
றிச்சைநீத் துயருஞ் சூத னியம்பின னிதனை யெல்லாம்
எச்சகத் தவரும் போற்ற விசைகொள்வா மனபு ராணம்
நிச்சய மாகத் தேவர் சுதையென நிகழ்த்து மன்றே. (24)

விச்சுவசேனர் உற்பத்தி உரைத்த அத்தியாயம் முற்றிற்று.

## 47. பெரிய திருவடியையும் வாயுவையும் திருமலையில் நிறுவிய அத்தியாயம்.

அறுசீர் விருத்தம்.

கண்ணுத லுமைக்குச் சொன்ன காதையைப் பினரும் வீணைப்
பண்ணவன் சதாநந் தற்குப் பகருவான் சலனன் முன்னாள்
விண்ணுயர்ந் தெழுந்து நீண்ட விழுமிய சேட வெற்பை
நண்ணியங் கமலை மேவு நாதனை யுளத்தி னாடி (1)

அருந்தவ நெடுநா ளுள்ளத் தன்புற வியற்றுங் காலை
மருந்தினு மினிய செய்யாண் மார்பன்வந் தெய்திப் பன்னாள்
வருந்தினை நினக்கு வேண்டும் வரந்தரு குதுமென் றோதப்
பெருந்திறற் பவன னாடிப் பெட்புறப் பணிந்து போற்றி (2)

அய்யனே யெனக்க யற்கு மப்பனே தமியே னிந்தச்
சய்யமே னிருது பாத தரிசனை செய்தெந் நாளும்
துய்யவ னாகி வாழ்ந்து துலங்குற வரந்தா வென்னச்
செய்யவ ளுத னன்பிற் செப்புவ தாயி னானே. (3)

23. குடைகுநர் - தீர்த்தமாடுவோர். தறுகண் - கொடுமை. பவம் - பிறப்பு. அயனுலகு - பிரம்மலோகம். யாழ்தேர்ந்தவன் - நாரதமுனி. 24. இச்சை நீத்து - ஆசை விட்டு. சகத்தவர் - உலகத்தோர். தேவர் சுதை - அமிர்தம். 1. கண்ணுதல் - சிவன். வீணைப் பண்ணவன் - நாரதன். சலனன் - வாயு. சேட வெற்பு - திருவேங்கட மலை. கமலை - இலக்குமி. 2. மருந்து - அமிர்தம். செய்யாள் - இலக்குமி. பவனன் - வாயு. பெட்பு - விருப்பம். 3. அயற்கும் - பிரமனுக்கும். சய்யம் - மலை. துய்யவன் - பரிசுத்தன். செய்யவள் - இலக்குமி.

எண்ணிகு கால மீங்க ணின்புற விருப்பே னீயிக்
கண்ணகன் மலையி னென்னைக் கைகுவித் துறைகென் றோத
விண்ணவர் புகழவ் வாயு விளங்கிரு காங்கு வித்து
மண்ணவர் காணு வண்ண மறைந்தினி திருக்கின் றானல். (4)

என்றர னுமைக்கி யம்பிப் பின்னருங் கிளக்க லுற்றான்
வன்றிறற் கலுழ னிந்த மலையெடுத் தமல னாடு
சென்றிட முன்னோர் நாளிற் சிந்தையி னினைப்ப மாயன்
தன்றிரு வுளத்திற் புள்ளின் றலைவனை யருள்சு ரந்து (5)

செய்யபங் கயக்க ணேக்கிச் சீரிதா விளங்கு மிந்தச்
சய்யமே லுவந்து நாளுந் தக்கிண முறைவா யாமிவ்
வையகத் தவர்கட் கெல்லாம் வாழ்வுற வளிப்ப வேண்டித்
துய்யநற் றிருமா தோடு துலங்கவிங் களவில் காலம் (6)

சிந்தையுண் மகிழ்ந்து றைந்து சிறப்பநன் கிருப்பே மென்று
சந்தத மலர்மல் குஞ்சீர்ச் சாமிபுட் கரிணி மாடே
வந்தினி திருந்து வானோர் மானிட ரெவர்க்குங் காட்சி
தந்தரு கருணை பூத்துத் தகைபெறப் புரக்கின் றானல். (7)

என்றுரைத் தந்நா கத்தின் மான்மியம் யாவுஞ் செப்பிப்
பொன்றிக ழிமய மீன்ற பொருவிலா நாரி யோடும்
வன்றிற னந்தி யூர்ந்து வலிகெழு கணங்கள் சூழச்
சென்றய நந்த வெற்பைச் சேர்ந்தது வலம்வந் தேத்தி (8)

சாமிபுட் கரிணி மேவித் தானணி யென்பு மாலை
ஏமுதல் யாவு நீவி யிமயமா துடனீ ராடி
மாமறைப் பொருளாய் நின்ற மாதவற் பணிந்து நீபத்
தாமனங் கிருந்தி யற்றுந் தவத்தினை வியந்து நோக்கி (9)

---

4. எண்ணிகு - கணக்கில்லாத. உறைக - தங்குக. விண்ணவர் - தேவர். 5. அரன் - சிவன். கிளக்கல் - கூறுதல். கலுழன் - கருடன். அமலன் நாடு - திருமாலின் வைகுண்டம். புள்ளின் தலைவன் - கருடன். 6. பங்கயக்கண் - தாமரை மலர்போன்ற கண்கள். சய்யம் - மலை. தக்கிணம் - தெற்கு. வையகத்தவர் - உலகத்தவர். துய்ய - தூய்மையான. 7. சந்ததம் - எப்பொழுதும். மாடே - பக்கத்தில். புரக்கின்றான் - காக்கின்றான். 8. நாகம் - மலை. மான்மியம் - சிறப்பு. பொருவிலா - ஒப்பற்ற. நாரி - மங்கை. அநந்த வெற்பு - திருவேங்கட மலை. 9. என்பு - எலும்பு. ஏ - அம்பு. நீவி - விலக்கி. இமயமாது - பார்வதி. மாதவன் - திருமகள் கொழுநன். நீபத்தாமன் - கடம்ப மலர் மாலையணிந்த சுப்பிரமணியன்.

கருத்துண்மிக் கோகை கூர்ந்து கபிலதீர்த் தத்தைக் கண்டங்
கிருத்தலே நலமென் றெண்ணி யெருக்கலர் சூடு தேவன்
உருத்திகழ் விழிக்குத் தோற்று துறைந்தன னெவர்க்கு மென்னுத்
திருத்தகு சதாநந் தற்கு நாதன் செப்பி னுனல். (10)

செப்பிய காதை கேட்ட செழுந்தவச் சதானந் தன்றான்
தப்பறு சனக வேந்தன் றன்மன முவப்பச் சாற்றி
ஒப்பற வுயர்ந்த சேட வோங்கலின் பெருமை மீட்டும்
துப்புறழ் கனிவாய் விண்டு சொல்லுவ தாயி னுனே. (11)

பூருவ காலத் தியாரும் பொருவரு நிமியென் றோதும்
பேருறு நேமி வேந்தன் பெறவருஞ் சனக னென்போன்
ஏருறை வாந திக்க ணெய்தியங் கசுவ மேதஞ்
சீருறப் புரிந்தான் வானிற் றேவரும் வியப்ப மன்னே. (12)

அம்மகச் சாலை யின்க ணருந்தவர் வருத லோடும்
இம்மையிற் பயன்பெற் றேமென் றெழுந்திறை வணங்கி யேத்தத்
தம்முள மகிழ்ந்தங் கோர்நாட் டங்கியம் முனிவர் யாரும்
எம்மையு மறிந்த வாம தேவனை யினிதி னோக்கி (13)

விளங்கொளி விரிக்குஞ் செய்ய விழுமணிச் சூட்டு நாகத்
திளங்கதிர்க் கரிய ஞாயி றெழுந்தெனப் பொலிந்து தோன்றுங்
களங்கனி வண்ணத் தண்ணல் காதையா மமுத வாரி
உளங்கனிந் துண்ண வூசை யுற்றன யாகை யாலே (14)

முத்தொழி னடாத்து மாதி மூலமாஞ் சீநி வாசன்
எத்தலத் தவரும் போற்ற வெங்கினி துறைகின் றானல்
சித்தமுட் கால மூன்றுஞ் செவ்விதி னுணர்ந்த ஞான
உத்தம முனியே சொல்கென் றுரைப்பவாங் குரைக்கின் றானல். (15)

---

10. ஓகை - மகிழ்ச்சி. எருக்கலர் - எருக்கம் பூ. உரு - வடிவம். 11. சேட வோங்கல் - திருவேங்கட மலை. துப்பு உறழ் - பவளம் போன்ற. 12. பூருவம் - முன். பொருவரு - ஒப்பில்லாத. நேமி வேந்தன் - சக்கரவர்த்தி. ஏர் - அழகு. வாநதி - கங்கையாறு. அசுவமேதம் - குதிரையைக் கொன்று செய்யும் ஓர் யாகம். 13. மகச்சாலை - யாகஞ் செய்யும் இடம். இம்மை - இப் பிறப்பு. இறை - அரசன். எம்மை - எவ்வுலக வியல்பும். 14. செய்ய - செம்மையான. விழுமணிச் சூட்டு நாகம் - சிறந்த இரத்தினத்தை முடியிலுடைய பாம்பு. கரிய ஞாயிறு - கருநிறச் சூரியன்: அபூத வுவமை. களங்கனி வண்ணம் - களாப்பழம் போன்ற கரு நிறம். அமுத வாரி - அமிர்தக்கடல். 15. முத்தொழில் - ஆக்கல், காக்கல், போக்கல். கால மூன்று - இறப்பு, நிகழ்வு, எதிர்வு.

இங்கிருந் திரண்டு நூற்றுக் காவத மெய்திற் கூற்றுத்
தங்கிய திசையின் ஞானந் தருந்தட வரையொன் றுண்டால்
அங்கதிற் புலகன் வீணை யருந்தவன் முதலா யுள்ள
சங்கையின் முனிவர் நாளுந் தவநனி நிரப்பு கின்றார். (16)

முன்னொரு தினத்தின் யானம் முனிவர்வாழ் வெற்பைச் சென்று
கன்னியந் துளவி னானைக் கருதியோ கஞ்செய் கின்ற
இன்னலில் கும்ப யோனி யிருந்தவாச் சிரமத் துற்றேன்
அன்னவ னென்னை நோக்கி யளவளா யறைத லுற்றான். (17)

### எழுசீர் விருத்தம்.

வளந்திகழ் கோதா வரிக்கொழுங் கரையின்
மரைமலர் மங்கைநா யகனை
உளந்தனி னிருவி முன்னர்யா னுஞற்றி
யொசிவுறு தியோகுசெய் காலை
விளங்குறு வீணை நாரதன் தோன்ற
விருப்பொடு பணிந்துப சரித்துக்
களங்கமின் முனியே கமலைமார் பினனைக்
காண்வகை கருணைசெய் யெனவே (18)

வேண்டினே னம்மா முனிவரா னோக்கி
விரிஞ்சன்மா டணுகியான் பெருமை
பூண்டமா யவனெவ் விடத்துறை கின்றான்
புகலென வவன்மகிழ்ந் தந்த

16. காவதம் - ஒரு காத எல்லை. கூற்றுத் தங்கிய திசை - யமன் உள்ள தென் திசை. தடவரை - பெரிய மலை. வீணை யருந்தவன் - நாரதன். சங்கையில் - எண்ணிக்கை யில்லாத. நனி நிரப்புகின்றார் - நன்கு நிறைவேற்றுகின்றார். 17. வெற்பு - மலை. கன்னியந்துளவினானை - திருத்துழாய் மாலை அணிந்த இறைவனை. இன்னல் - துயர். கும்பயோனி - அகஸ்தியர். ஆச்சிரமம் - தவ இருக்கை. அளவளாய் - கலந்து பேசி. 18. மரைமலர் மங்கை - தாமரை மலரில் இருக்கும் இலக்குமி. உஞற்றி - உழைத்து. ஒசிவுறுது - தளராமல். களங்கம் - அழுக்கு. கமலை மார்பினனை - திருமகள் நாயகனாகிய இறைவனை. 19. விரிஞ்சன் - பிரமன்.

நீண்டவ நெடுவெண் ணிலாவிரி சடையோ
 ஞதியா நீடுயிர் புரப்பான்
ஈண்டிய சேடப் பொருப்பின்மீ மிசைநின்
 றெய்துநர்க் கின்னரு டருவான். (19)

அவன்றிருக் கோல மஞ்சலித் திடுதற்
 காசையேல் யானவண் விரைவின்
உவகையிற் செல்கின் றேனுடன் வருவீ
 ரெனவுரைத் தும்பர்தற் சூழப்
பவமறு முனிவர் பழமறை பகரப்
 பளகிலா மலையிடை யெய்தித்
தவளவெண் சங்கந் திகிரிகைத் தாங்குந்
 தலைவனைக் காணவுள் வேட்டு (20)

தேடியங் கெங்குந் திருவுடைத் தேவன்
 சேவைகா ணமையி னெட்டை
ஏடவிழ் கமலத் தயனெனை நோக்கி
 யீசனெப் போழ்தெதிர் வந்து
நீடருள் புரிதல் செய்வனோ தெரியே
 னீவிரம் மலர்மகள் கொழுநன்
ஈடகல் சேவை யளித்திடு காறு
 மிம்மலை வலஞ்செய்வீ ரெனவே (21)

மொழிந்துதன் னுலகம் போயினு னெனவே
 மொழிந்தன னெனக்குறு முனிவன்
வழிந்திடுங் கருணை யொடுமெனக் கறைந்தா
 னென்றுயர் வாமதே வப்பேர்ச்

---

நெடுவெண்ணிலா விரிசடையோன் - சிவன். புரப்பான் - காப்பதற்காக. சேடப்பொருப்பு - திருவேங்கடமலை. மீமிசை - மேல். எய்துநர் - அடைபவர். 20. திருக்கோலம் - திருவுரு. அஞ்சலித் திடுதல் - கைகுவித்து வணங்குதல். உவகை - மகிழ்ச்சி. உம்பர் - தேவர். பவம் - பிறப்பு. பளகு - பொய்ம்மை. தவளம் - வெண்மை. திகிரி - சக்கராயுதம். வேட்டு - விரும்பி. 21. சேவை - காட்சி. ஏடு அவிழ் கமலம் - இதழ் விரிந்த தாமரைமலர். மலர்மகள்-இலக்குமி. கொழுநன் - நாயகன். ஈடு - ஒப்பு. 22. குறுமுனிவன் - அகஸ்தியன். அறைந்தான் - சொன்னான்.

செழுந்தவ முனிவ னிருடியர்க் கிசைப்பச்
　　சீர்பெறு சனகமன் விளைவு
தழைந்தெழ வினவி ஞனென வுரைத்தான்
　　சதாநந்த முனிசன கனுக்கே. (22)

எனவுள முவந்தெக் கலைகளின் பொருளு
　　மியைபுற வுணர்ந்துநிச் சலுமே
வினைகடிந் துணங்கில் விழுத்தவச் சூத
　　வேதிய னைமிசா ரணிய
முனிவர்கள் வினவி மெய்புள கரும்ப
　　மொய்ம்மயிர் பொடிப்பநெஞ் சுருகிக்
கனிவுற விதா நினைவற மகிழ்வு
　　கலித்தெழக் கழறின னன்றே. (23)

இக்கதை யெல்லாம் வாமன புராணத்
　　தெழிலுற வியம்பிடு மிதனை
மிக்குநெஞ் சுவந்து வினவுவோர் சொல்வோர்
　　மேதினி வியப்புறச் செல்வம்
மக்கடர்க் காயுள் வாழ்ந்துசெய் தீமை
　　மாறவீற் றிருந்துபின் மேலாம்
ஒக்கலி னுலகம் புகுந்துநித் தியரா
　　முதன்மைபெற் றுறைகுவர் மாதோ. (24)

---

இருடியர் - ருஷிகள். மன் - அரசன். 23. கலைகள் - சாஸ்திரங்கள். நிச்சலும் - நாள்தோறும். கடிந்து - நீக்கி. உணங்கு - வருந்துதல். புளகு மயிர்க் கூச்சம். கலித்தெழ - ஆரவாரித்துண்டாக. ஒக்கல் - சுற்றம்.

ஸ்ரீநிவாஸன் பெரிய திருவடியையும் வாயுவையும் திருமலையில் நிறுவிய அத்தியாயம் முற்றிற்று.

## 48. அகத்தியர் முதலிய முனிவர் திருமலை வலம் வந்த அத்தியாயம்.

கலிநிலைத்துறை.

நாம வேற்சன கன்முக நயந்துளப் பரிவால்
வாம தேவமா தவன்பினும் வழுத்தன்மே யினனால்
காம மாதிய கடும்புலப் பகைஞரைக் கடிந்த
நேம மாமுனி வோரய னியமனப் படியே (1)

ஆதி நாதனை யுளங்கொடம் மலைவலம் புரியும்
போது வாயுநீ டிசையினிற் பொங்கொளி கஞலும்
சீத வெண்ணிறச் செழுநலஞ் சிறந்தவோர் பாறை
மீது வந்தொரு புருடன்மெய் யொளிதிசை விரிய (2)

நிற்றல் காண்டலுங் குறுமுனி நெஞ்சிடை வியந்தீங்
குற்ற நீயெவ னுமம்யா துரையென வொன்றுஞ்
சொற்ற ராதுவிண் கரத்தலுந் தூயநா றோர்ந்த
நற்ற வத்தினர் நாடியற் புதமென நவின்றே (3)

அவ்வி டத்தினின் றுத்தர திசையினை யடைந்து
செவ்வி யுற்றவான் றயங்கெழு தீர்த்தங்க ளாடி
பவ்வ மொத்தலை பரந்தவோர் பங்கய சரசை
எவ்வ மற்பவர் நீத்தவ ரெய்திநோக் கினரால். (4)

அந்த நீரிடை விஞ்சைய ரமரர்கந் திருவர்
வந்து மூழ்கியா னந்தமாய் மலர்க்கரங் கூப்பிச்
சிந்தை மால்வயிற் செலுத்தியங் கிருப்பது தெரிந்தோர்
கந்த நாறுபூங் காப்புடைக் கலந்தன ராங்கே. (5)

---

1. நாமவேல் - அச்சம் செய்யும் வேல். உளப்பரிவு - மனமகிழ்ச்சி. வழுத்தல் - கூறுதல். புலப்பகைஞர்- ஞான விரோதிகள். நியமனம் -கட்டளை. 2. வாயுதிசை - வடமேற்கு. கஞலும் - நிரம்பிய. சீதம் - குளிர்ச்சி. குறுமுனி - அகஸ்தியர். நாமம் - பெயர். கரத்தலும் - மறைதலும். 4. உத்தரதிசை - வடக்கு. பவ்வம் - கடல். பங்கயசரசு - பங்கஜதீர்த்தம். எவ்வம் - குறைவு. நீத்தவர் - துறவியர். 5. விஞ்சையர் - வித்தியாதர தேவகணத்தார். கந்திருவர் - தேவகானம் வல்ல கணத்தார். கந்தம் - நறுமணம். பூங்கா - பூஞ்சோலை.

அண்ட ரெண்ணிலா ரருந்தவ மன்புற வாற்றல்
கண்ட கத்திய மாமுனி யாவர்நீர் கருத்துட்
கொண்டி வட்டவங் கோதற நடத்துவ தெனக்கு
விண்டு ரைத்திடு வீரென வேண்டலும் விரைந்தே (6)

ஆதி நாதனை யமலனை யரியினை யிதயப்
போதி னூடொறும் வைத்தருந் தவம்புரி கின்றேங்
கோதின் மாதவ வெனச்சொலக் குறுமுனி வினவி
மாத போதனர் தம்மொடு வழீஇக்கொடு நடந்து (7)

செல்லுங் காலையோர் செழுமரத் தடியினன் மறைநூற்
கெல்லை கண்டவேழ் முனிவர்க ளிணையிலா வாசக்
குல்லை யெங்தொடைக் கொண்டலை யுளத்தினிற் குறிக்கொண்
டல்லும் வெம்பக லுந்தியா னித்தமர்ந் தோரை (8)

விருப்ப மீதுறக் காண்டல்செய் தியாவரை வேண்டித்
தருப்பை மேற்றியா னஞ்செயுந் தன்மையை யெமக்கு
விரித்து ரைத்திடு வீரென விளம்பலு மன்னோர்
கருத்து வந்தெதிர் கருணையோ டினிதுறக் கரைவார். (9)

சங்க மங்கையிற் றூங்கிய தலைவனைக் காண
எங்க டம்மனத் திருவிநன் கெணித்தியா னஞ்செய்
திங்கு றைந்தன மெனச்சொல விருடியர் வினவி
அங்கி ருந்துகீழ்த் திசையின்க ணணுகின ரெனவே (10)

எழுசீர் விருத்தம்.

இருடியர் தமக்கு நியருள் சனக
விறைக்குமங் கினிதுற வுரைத்து
மருளறு வாம தேவமா முனிவன்
வளஞ்செறிந் தணியுற வுயாத்

---

6. அண்டர் - தேவர்கள். கோது - குற்றம். 7. இதயப்போது - உள்ளம் ஆகிய மலர். தபோதனர் - தவத்தைச் செல்வமாக உடையவர். 8. மறைநூல் - வேதசாஸ்திரம். குல்லை - துளசி. கொண்டல் - மேகம் போன்ற திருமால். அல் - இரவு. 9. தருப்பை - புல். கரைவார் - சொல்லுவார்கள். 10. சங்கம் - பாஞ்சசன்னியம். இருவி - இருக்கச்செய்து. இருடியர் - முனிவர். 11. இறை - அரசன். மருள் - மயக்கம்.

திருமலை வலஞ்செய் முனிவர்தம் மோடு
சென்றுசேர்ந் தனனெனச் சனக
நிருபனுக் கருளிப் பினுஞ்சதா நந்த
நெடுந்தவ னிகழ்த்தலுற் றனனால். (11)

அத்திரு மலையி னகத்தியன் வீணை
யருந்தவ னாதியா முனிவர்
சித்தமுண் மகிழ்ந்து செல்லுழி யுயர்ந்து
செழித்தவோர் தருநிழ லின்வாய்
மத்தவெண் கரியூர் சதமக னுதயன்
மாகதன் மறலியெண் வசுக்கள்
சுத்தசெவ் வங்கி முதலிமை யவர்கள்
சூழவீற் றிருப்பதை நாடி (12)

கலசமா முனிவ னேனைய ரோடு
கலந்தரு கடைந்துபூ சிப்பக்
குலிசபா ணியனு முகமனன் குரைத்துக்
கூடியாங் கிருந்தகா லையிலே
மலையமா மலைமா தவன்சசி பதிதன்
வாண்முக நோக்கிநீ ரிந்தச்
சிலையின்மேல் வந்த காரிய மெமக்குச்
செப்பெனச் செப்பலுற் றனனால். (13)

தானவர் புரியுங் கொடுமையான் மெலிந்து
சரோருகன் றனைச்சர ணடைந்தோம்
ஈனமி லவனு மெமைக்கணு னோக்கி
யிருஞ்சிறைக் கருளவா கனனைத்

நிருபன் - அரசன். 12. தரு - மரம். மத்தம் - மதமயக்கம். வெண் கரி - ஐராவதம் என்ற யானை. சதமகன் - இந்திரன். உதயன் - சூரியன். மாகதன் - குபேரன். மறலி - இயமன். செவ்வங்கி - செம்மை நிறமுள்ள அக்கினிதேவன். இமையவர்கள் - தேவர்கள். 13. கலசமாமுனி - அகஸ் தியர். குலிசபாணியன் - வச்சிராயுத முடைய இந்திரன். முகமன் - உபசார மொழி. மலையமலை - பொதியில் மலை. சசிபதி - இந்திரன். சிலை - மலை. 14. தானவர் - அரக்கர்கள். சரோருகன் - தாமரைமலரில் வீற்றிருக்கும் பிரமதேவன். ஈனம் - இழிவு. கருளவாகனன் - திருமால்.

தேனமர் பொழில்சூழ் திருமலை மிசையிற்
சென்றுநீர் பழிச்சிடி னுங்கட்
கானவெம் பகையை யறுத்தருள் புரிவ
னெனவ்வறைந்த னனது கேட்டே (14)

விந்தைநா யகனை விழியெதிர் காண
விருப்பமுற் றிங்ஙன மருவிச்
சந்ததந் தியானம் புரிந்துறை கின்றோ
மெனத்தவக் குறுமுனி முதலோர்
சிந்தையின் மகிழ்ந்து பாவகன் றிசையிற்
செலவவ ணொளிதிசை திகழ
நந்துசெந் திகிரி நாந்தகங் கதைவின்
ஞடியற் புதமிது வெனவே. (15)

பணிந்துதென் றிசையி னடைந்தவட் கதழ்ந்த
பனிமலர்க் காவெலாம் பார்த்து
மணந்திசை நான்கு மலியுமோர் சோலை
மருவவங் குயர்ந்தொளி மல்கி
வணந்திகழ் பிலக்க மரத்தரு கறுகுங்
கொன்றையு மதியும்வா னதியும்
அணிந்தவ னிருத்தல் கண்டுநோர் தொழுதே
யன்புட னண்டைசென் றேத்தி (16)

நஞ்சுமி ழெயிற்று நகைமணிச் சுடிகை
நாகவா பரணனே யிந்த
அஞ்சன வரையி னெவரையுண் ஞடி
யருந்தவ மியற்றுகின் றனையென்

---

பழிச்சிடின் - வழிபட்டுப் புகழ்ந்தால். 15. விந்தை - இலக்குமி. சந்ததம் - எப்பொழுதும். பாவகன்திசை - அக்கினியின் தென்கிழக்குத் திசை. திகிரி - சக்கராயுதம். நாந்தகம் - வாளாயுதம். கதை - தண்டாயுதம். 16. கதழ்ந்த - விரைந்த. மலர்க்கா - பூஞ்சோலை. பிலக்கம் - பிலக்ஷம் என்றமரம். அறுகு - அறுகம்புல். 17. எயிறு - பல். சுடிகை - கொண்டை. நாகவாபரணன் - சிவன். அஞ்சனவரை - திருமலை.

றெஞ்சலின் முனிவர் கடாவலு மந்த
வேழைபங் காள னு மகிழ்ந்து
விஞ்சிய வன்பி னகத்தியன் முதலாம்
விழுத்தவ ருடன்விளம் புவனல். (17)

விந்தைநா யகனு யுயர்பரா பரமாய்
வியூகமாய் விபவமாய் விளங்கும்
அந்தரி யாமி யாகியர்ச் சாவ
தாரமா யமர்ந்தநா ரணனே
வந்தனைக் குரியன் வேள்விகட் குரியன்
வழுத்துதற் குரியவ னெவர்க்கும்
சிந்தனைக் குரிய னவனலா லுயர்ந்த
தேவிலை யெனவுளந் தெளிந்தே (18)

தழைத்தவன் புடனம் மாயவ னுவந்த
தானமாய் மலைக்குல மெல்லாம்
தொழத்தகு மிம்மா வரைமிசை யவனைச்
சுருதிநூன் முறைவழு வாமல்
வழுத்திநன் குறத்தி யானயோ கத்தின்
மனமகிழ் வுடனுறை கின்றேன்
விழுத்தவத் தினர்கா ளென்றுரைத் திடலும்
வினவிமேற் றிசையினிற் சென்றார். (19)

சென்றிடு மெல்லை நிருதிவாழ் திசையிற்
செழித்தவோர் பழுமாத் தடியின்
வன்றிறற் றிகிரி வளைகதை சாபம்
வாளுட னன்குதோ ளிலங்கப்

---

எஞ்சல் - குறைவு. ஏழைபங்காளன் - உமையை இடப்பாகத்தில் உடைய சிவன். விழுத்தவர் - சிறந்த தவசியர். 18. விந்தை - இலக்குமி. வியூகம் - வாசுதேவ பிரத்தியும்ந அநிருத்த சங்கருஷ்ண நிலைகள். விபவம் - இராம கிருஷ்ணாதி அவதாரங்கள். அந்தரியாமி - உயிர்களுக்குள் உயிராயிருத்தல். அர்ச்சை - வழிபாட்டிற்குரிய தெய்வ உரு. வேள்வி - யாகங்கள். தே - தெய்வம். 19. தானம் - இடம். வரை - மலை. சுருதி - வேதம். 20. எல்லை - தருணம். நிருதிவாழ்திசை - தென்கிழக்கு. பழுமரம் - ஆலமரம். திகிரி - சக்கரம். வளை - சங்கு. கதை - தண்டம். சாபம் - வில்.

பொன்றிகழ் மேனி மிளிரவூர்த் துவபுண்
டரவொளி திசையெலாம் பொருந்த
வென்றிகொள் விசுவ சேனர்நா ரணனை
விரும்பிநன் குறத்தியா னித்தே (20)

இருப்பதை நலங்கொ ளிருடிய ரெவரு
மிருவிழி களிப்புற நோக்கி
விருப்பொடு பணிந்து நிற்பவு மந்த
மேலவன் கருணையுண் மலிந்தே
உருப்பொலி திருவின் கணவனை விரைவி
னுவப்பொடுங் காணவேண் டிடினிப்
பொருப்பைவிட் டகலா துறைகுவீ ரென்று
புகன்றெதிர் கரந்துபோ யினனால். (21)

போயபின் குடபான் மருவியாங் கஃகாப்
புதுமைக ளனைத்தையு நாடி
மீயுயர் சிகர மிசையடைந் தவணின்
விளங்கிய குமாரதா ரிகையின்
தூயநற் புனலிற் படிந்தறு முகனைத்
துதித்துநான் முகனுரைப் படியே
மாயனை நினைந்து குறுமுனி சிறந்த
வாமதே வன்முத லானோர் (22)

இனிதுற விவ்வா றுலவியம் மலையி
னிருந்தன ரெனச்சதா நந்த
முனிசன கனுக்கு மொழிந்தன னென்றே
முகமலர்ந் தன்பொடு முரைத்தான்
பனிமலர் கமழு நைமிச வனம்வாழ்
பழமறைப் பண்ணவர் தமக்குத்
துனியறுந் தவத்தின் மும்மையு முணர்ந்த
சூதமா முனிவரன் மாதோ. (23)

---

மிளிர - ஒளி செய்ய. ஊர்த்துவபுண்டரம் - நிமிர்நிலையில் தரிக்கும் திருமண் குறி. 21. உரு - வடிவம். திரு - இலக்குமி. பொருப்பு - மலை. கரந்து - மறைந்து. 22. குடபால் - மேற்குத்திசை. அஃகாப்புதுமை - குறைவில்லாத விசேடங்கள். சிகரம் - உச்சி. அறுமுகன் - சுப்பிரமணியன். 23. பண்ணவர் - முனிவர். துனி - வெறுப்பு. மும்மை - இறப்பு, நிகழ்வு, எதிர்வு.

மஞ்சிடை தவழ வளஞ்செறி மலர்க்கா
பலிதா நீண்டகன் றுயர்ந்த
அஞ்சன கிரியை யகத்தியன் முதலா
மருந்தவர் வலஞ்செயு மிந்த
விஞ்சிய வினிமைக் காதையை யெவர்க்கும்
விருப்புற விளக்கம தாக
எஞ்சலில் சிறப்பு வாய்ந்தவா மனப்பே
ரியைந்தமா புராணமோ திடுமே. (24)

அகத்தியர் முதலிய முனிவர்
திருமலை வலம்வந்த அத்தியாயம் முற்றிற்று.

## 49 சங்கராசன் தவமும் உபரிசரவசுவின் கதையும் உரைத்த அத்தியாயம்.

அறுசீர் விருத்தம்.

மனுநெறி வழுவா வண்ண மாயிரு ஞால மோம்பும்
சனகனுக் கன்பி னோடு தவச்சதா னந்த னென்னும்
முனிவரன் மறித்துஞ் சொல்வான் மொய்த்தளி பாந்து பாடும்
நனைமலர் பொதுளுஞ் சோலைக் கேகய நாடு காப்போன். (1)

புகழறங் கல்வி ஞானம் பொதுளிய சங்க னென்னு
மிகுதிற லுடைய வேந்தன் விரைமலர் மகண்மார் போனை
அகமதி னினைந்தன் போடு மலகறு மகங்கள் செய்தும்
தகுநதி நதந்த டாகந் தமின்விருப் போடு தோய்ந்தும் (2)

இயம்பிய விரத மெல்லா மியற்றியும் பத்தி செய்தும்
நயம்படு மலைகா வெங்கு நண்ணியு நயந்து மென்றும்
பயம்படப் பற்று நீங்கிப் பலகையறத் தவம்பு ரிந்தும்
சயம்புனை நேமி மாறன் றரிசனை கிடையா னாகி (3)

24. மஞ்சு - மேகம். மலர்க்கா - பூஞ்சோலை. அஞ்சனகிரி - திருவேங்கட மலை. 1. ஞாலம் - உலகம். ஓம்பும் - காக்கும். மறித்தும் - மீட்டும். அளி - வண்டு. நனை - அரும்பு. பொதுளும் - நெருங்கும். 2. திறல் - வலிமை. விரைமலர்மகள் - இலக்குமி. அலகு - அளவு. மகம் - யாகம். நதம் - கிழக்கினின்று மேற்குச் செல்லும்யாறு.; சிலர் கடலிற்கலவாதது என்பர். நதி - மேற்கினின்று கிழக்குச் செல்லும்யாறு. சிலர் கடலிற்கலப்பது என்பர். (சமுத்ரகாமி) தோய்ந்தும் - நீராடியும். 3. விரதம் - நோன்பு. கா - சோலை. சயம் - வெற்றி. நேமி - சக்காரயுதம். தரிசனை - காட்சி.

அதிதுய ரடைந்து வாடுங் காலையந் தரத்திற் றோன்றி
நதிதவழ் கமல பாத னவிலுவா னரசே சீத
மதிதவழ் சிகர ஞான மலையடைந் தெனையன் போடு
துதிசெய்தைந் தடக்கி யோகஞ் சோர்வறப் புரிவை யாயின் (4)

எண்ணிய வெண்ணி யாங்கெய் துவையென வியம்பி யேகப்
புண்ணிய வரசன் சேயைப் புவிபுரந் திடநே மித்து
விண்ணுய ரநந்த வெற்பின் விளங்குகோ ணேரி மாடு
நண்ணியங் களவில் கால நற்றவ மியற்றுங் காலை (5)

சிந்துநீர் முழுதும் வாரிச் சிந்திடா துண்ட சிந்து
வெந்திறன் முனிவ ராதி விழுத்தவ ரடங்க லும்வந்
தந்தமா மலையி னாதி யமலனை யருளான் மிக்க
விந்தைநா யகனைத் தங்கள் விழியெதிர் காண்கி லாராய் (6)

எழுசீர் விருத்தம்.

வாடியுட் குறைந்தம் மலையினோர் முழையின்
மருவியங் குறைதரு காலைத்
தேடரும் புகழ்சேர் தேவர்தே சிகனுந்
தெறுதொழி லசுரர்தே சிகனும்
நீடிய கதிரா யிரத்தவன் மரபின்
னேரறப் பிறந்தறம் வளர்க்கும்
பீடுறு முபரி சரவசு வெனும்பேர்
பெற்றகோ மானும்வந் தனரால். (7)

வந்திடு முபரி சரவசு வெனச்சொன்
மன்னவன் பண்டைநாள் வழாத
அந்தணர் விதித்த வெய்யசா பத்தா
லகன்றபா தலத்தடைந் துறைந்து

---

4. அந்தரம் - வானம். நதி - கங்கை. கமலபாதன் - தாமரைமலர் போன்ற திருவடியுடையவன். சீதம்-குளிர்ச்சி. ஞானமலை-திருவேங்கடமலை. ஐந்து - மெய் வாய் கண் மூக்குச் செவிகளின் விஷயங்கள் ஐந்தினையும். 5. சேய் - புதல்வன். புரந்திட - பரிபாலிக்க. அனந்தவெற்பு - திருமலை. 6. சிந்து - கடல். விழுத்தவர் - சிறந்த தவசியர். அடங்கலும் - எல்லாம். அமலனை - கடவுளை. விந்தை - இலக்குமி. 7. முழை - குகை. தேவர்தேசிகன் - பிருகற்பதி. அசுரர்தேசிகன் - சுக்கிரன். கதிராயிரத்தவன் - சூரியன். மரபு - வமிசம். கோமான் - அரசன்.

விந்தைதன் கணவ னருளினு லிவணின்
மேவின னெனச்சொல வினவும்
நிந்தையில் சனக னுயர்சதா நந்த
நெடுந்தவ னருண்முக நோக்கி (8)

அய்யவிங் கிதனைப் பரக்கவெற் கருள்செ
யென்னலு மம்முனி யறைவான்
மெய்யறி வாம தேவனுற் றெருண்ட
விதநினக் கறைகுவன் முன்னுட்
பொய்யறு மாச ரிருடியர் புலவர்
புரந்தரன் றன்னெடு குழுமி
வையகத் தறனை வளர்த்திடு முபரி
சரவசு முன்புவந் தனரால். (9)

வந்தவர் தமையவ் விறையுப சரித்து
வணங்கியீங் கடைந்தகா ரணத்தைப்
புந்தியி னுவந்தெற் குணர்த்துகென் றிரப்பப்
போதவான் செல்வருண் ணயந்து
சிந்தையிற் றரும நெறியெலா முணர்ந்த
சீர்கெழு மாசனே நின்பால்
நந்தலி லறத்தோர் சமையநாங் கேட்க
நாடிவந் தனமென நவின்றார். (10)

அந்தவா சகங்கேட் டடையலர் வெருவ
வாகவந் தனின்வயங் கொண்ட
மந்தர மனைய புயனிது நிமித்த
மாகவந் தீர்களா வெனலும்

8. விந்தை - இலக்குமி. நிந்தை - பழிப்பு. 9. தெருண்ட - தெளிந்த. அறைகுவன் - சொல்லுவேன். இருடியர் - ருஷிகள். புரந்தரன் இந்திரன். குழுமி - கூடி. வையகம் - உலகம். 10. இறை - அரசன். புந்தி - மனம். போத - மிகவும். வான் செல்வர் - இருடியர். நந்தல் - குறைவு. 11. அடையலர் - பகைவர். வெருவ - அஞ்ச. ஆகவம் - போர். வயம் - வெற்றி. மந்தரம் - ஒருமலை. புயன் - தோள்களை உடைய அரசன்.

புந்தியிற் கதங்கொண் டழன்றிரு விழிதீப்
　　பொறியெழ நகைத்தெதிர் நோக்கி
இந்தமண் புவியை யிழந்துபா தலத்தி
　　னெய்துதி யெனச்சபித் தனரால். (11)

இக்கொடுஞ் சாப மெய்திய வசுவை
　　யயனர னிருவரு நோக்கி
தக்கவந் தரத்தி னின்றரி யடிய
　　னிவன்மறை யோர்கள்சா பத்தால்
மிக்கதுன் பத்தோ டாழ்ந்தபா தலத்தின்
　　வீழ்கிறு னென்றுள மிரங்கி
முக்கியம் பொருந்து துவாதசாக் கரத்தை
　　மொழிந்திவை மறந்திடே லென்ருர். (12)

என்றசொல் வினவிப் பாதல மடைந்தே
　　யிதயமுள் வருந்திடா தென்றும்
வென்றியை யருளுந் துவாதசாக் கரத்தை
　　விளம்பியுட் பரிவிறக் கருதி
நன்றறி வசுவங் குறைதரு நாளி
　　னளினநா யகனுவந் தெதிரின்
நின்றவஞ் சிறைப்புள் வேந்தனை நோக்கி
　　யன்பொடு நிகழ்த்தலுற் றனனல். (13)

நலனுறு முபரி சரவசு வென்போ
　　னுன்மறை யாளர்சா பத்தால்
நிலனிழந் தாழ்ந்த பாதலம் வீழ்ந்தே
　　நெஞ்சிடை யெனைநினைந் துருகிப்
பலபகல் கழியப் பத்திவைத் திருக்கின்
　　ருனவன் றன்னையிப் படிமேல்
இலகுறக் கொணர்ந்து முடிகவித் திடுகென்
　　றிசைத்தலு முவணனப் பொழுதே (14)

---

புந்தி - மனம். கதம் - கோபம். 12. அந்தரம் - வான். துவாதசாக்கரம் - பன்னிரண்டு எழுத்துடைய திருமந்திரம். 13. பரிவு - அன்பு. நளினை - இலக்குமி. புள்வேந்தன் - கருடன். 14. படி - பூமி. இலகுற - விளங்க. முடி கவித்திடுக - பட்டம் சூட்டுக. உவணன் - கருடன்.

பாதலத் தணுகி யெடுத்ததி விரைவிற்
பறந்துவந் தவன்சுதே சத்தின்
மீதுற விடுத்து முடிகவித் தகல
மேலவர் புகழுமவ் விறைவன்
நீதியி னறத்தை வழுவற வளர்த்து
நிலம்புரந் தனனென வொளிருங்
கோதைவேற் றடக்கைச் சனகவேந் துவப்பக்
கூறினன் கோதமன் மகனே. (15)

என்றுயர் சூத னிமிச வனம்வா
ழிருடியர்க் கிசைத்தன னன்றோர்
நன்றென வியந்து மலர்மகட் கினிய
நாயக னுவந்துறை கின்ற
குன்றினன் மகிமை யின்னமு மெமக்குக்
குறையறச் சொல்லுதி யெனவே
மன்றலங் கமல மலரடி மிசையின்
வணங்கிநின் றேத்தினர் மாதோ. (16)

சொல்லுமிக் காதை யாவுமெத் தினமுஞ்
சோர்வறு பெருமையா னுயர்ந்த
எல்லையின் மறைகள் யாவையுந் திரட்டி
யெழில்பெற நான்கவாய் வகுத்த
வல்லவன் கால மூன்றையு முணரு
மாதவன் புகல்புரா ணத்தின்
நல்லியல் சிறந்த வாமன மெனப்பேர்
நவில்புரா ணங்கவின் றிடுமே. (17)

---

15. வழுவு - குற்றம். கோதை - மாலை. கோதமன் மகன் - சதானந்த முனிவன்.

சங்கராசன் தவமும் உபரிசரவசுவின் கதையும் உரைத்த
அத்தியாயம் முற்றிற்று.

## 50. அகத்தியர் முதலிய ரிஷிகளுக்கும் தேவர்களுக்கும் குரு, சுக்கிரன், வசு இவர்களுக்கும் சேவை தந்து வரம் கொடுத்த அத்தியாயம்.

**எழுசீர் விருத்தம்.**

மேதையோர் புகழுந் தவச்சதா நந்த
வேதியன் சனகனை நோக்கி
ஓதுவா னுபரி சரவசு வெனமுன்
னுரைத்தவுத் தமனொடு மௌளிசேர்
தீதிலா வமரர் தேசிக னுசனன்
சிறந்தவிம் மூவரு மந்தக்
கோதிலா மலையிற் கனலிமூன் றென்னக்
கூடியங் குலவுகா லையிலே (1)

தமிழ்முனி முதலா மிருடிகள் வரலுந்
தரிசனை செய்துப சரித்தே
இமிழ்திரைப் பரவை நிலத்திலிங் ஙனநீ
ரெய்துதல் சாற்றுதி ரெனவே
கமழ்துள வணியுங் காரணன் பணியாற்
கனம்பெறு கருளனுறை சூட்டும்
உமிழ்சுடர் மௌளி வேந்தனுள் ளுவப்புற்
றுரைத்தலுங் குறுமுனி யுரைப்பான். (2)

அம்பொனம் பரனை யாதிநா யகனை
யநாதியைக் காணயாம் விரும்பி
வம்பலர் பொழில்சூழ்ந் துயர்ந்தகன் றிடுமிம்
மலைவலம் புரிந்துமெண் ணரிய

---

1. மேதையோர் - அறிஞர். அமரர் தேசிகன் - பிருகஸ்பதி. உசனன் - சுக்கிரன் கோது - குற்றம். கனலி மூன்று - தக்ஷிணாக்கினி, காருகபத்தியம், ஆகவனீயம் என்ற மூன்று அக்கினிகள். 2. தமிழ் முனி - அகஸ்தியர். தரிசனை - காட்சி. பரவை - கடல். துளவு - துளசி மாலை. பணி - கட்டளை. கருளன் - கருடன். மௌலி - கிரீடம். குறுமுனி - அகஸ்தியர். 3. பொன் அம்பரன் - பீதாம்பரன் ஆகிய திருமால். வம்பு - நறுமணம். பொழில் - சோலை.

பம்பரு வியினுந் தடநதி களினும்
படிந்துமுண் ணினைந்துமே யந்தக்
கம்பொளிர் பரிதி யங்கைய னுருவங்
காண்கில மயர்ந்தன மெனவே (3)

சொல்லிய மாற்றங் கேட்டெழில் வசுமன்
சொல்லுவான் கேகய நிருபன்
எல்லையில் சுகுண சங்கனென் றுரைப்போ
னிதயமுள் விரும்பிரா ரணனை
அல்லும்வெம் பகலுஞ் சாமிபுட் கரிணி
யருகிலா ராதனம் புரிந்து
நல்லியற் றவமே யினிதுற வுளனு
லாங்கவன் றனக்குநன் குவந்தே (4)

உலகமுண் டுமிழ்ந்த தனிமுதல் சேவை
யுதவியங் கவனது பத்தி
வலையகப் பட்டு நின்றன னந்த
மலர்மகள் பதியெழி னோக்கி
நலனுற வணங்க யாங்களு முன்னி
நணுகினோ மாங்கண்யா மெல்லாஞ்
செலினவ வொளிசெ யற்புத வடிவங்
கண்டுசே விக்கலா மெனவே (5)

செப்பிய வசுவா தியருட னந்தத்
தென்றமிழ் முனிமுத லாய
ஒப்பறு முனிவ ரனைவருங் கூடி
யுளத்ததி விருப்பமீ தூர
எப்பெரு நதியு மிணையிலா துயருஞ்
சாமிபுட் கரிணிமா டெய்தித்
தப்பறு மரியா ராதனந் தனையே
தவமெனப் பூண்டமன் னவனை (6)

---

பமபு - பரவிய. கம்பு - சங்கு. பரிதி - சக்கரம். 4. மாற்றம் - மொழிகள். நிருபன் - அரசன். அல் - இரவு. ஆராதனம் - பூசித்தல். 5. சேவை - காட்சி. மலர்மகள் பதி - திருமகள் கொழுநன் ஆகிய திருமால். 6. தென்றமிழ் முனி - அகஸ்தியர். மாடு - பக்கம். அரியாராதனம் - திருமால் பூசை.

கண்டன ரவனு மிவர்வா வைத்தன்
கண்களிப் பெய்துமா நோக்கித்
தண்டமிட் டடங்கா மகிழ்ச்சியோ டுமது
தரிசனைப் பெருமையா லடியேன்
பண்டையி னியற்றும் பழவினை முழுதும்
பற்றறப் பாறிய தெனவாய்
விண்டுப சரிக்க விருந்தன ரந்த
வேலையின் விண்ணெலா மொளிர (7)

கோடிசெங் கதிர்க ளுதித்தெனத் தன்மெய்க்
கொழுஞ்சுடர் மலவிரு ளகற்றி
நீடிசை யளப்ப வாங்குமா தவர்க்கு
நிமலமா மற்புத வடிவை
நாடுதற் களித்தா னெங்குமாய் நின்ற
நறைகமழ் பசுந்துழாய் மாலைப்
பீடுடைப் பரம னென்றுரைத் தவன்ற
னழகினைப் பின்னரும் புகல்வான். (8)

விளங்கொளி திகழு முடிவெயி லெறிப்ப
மேதகு மணிக்குழை மின்னக்
களங்கமில் வாகு வலயநின் றொளிரக்
கவுத்துவ மாலைவில் வீசத்
துளங்குபொன் னுடை யவிருறக் கடகந்
துலங்கவை யாயுத மிலங்க
வளங்கிளர் பணிகள் யாவுமே சுடர
மார்பிடை யிந்திரை நிலவ (9)

யணந்திசை கமழ்வை சயந்தியுந் துளவு
மாலையும் பிரமசூத் திரமும்
பணிந்திடு மடியர்க் கருள்சுரந் தகன்ற
பங்கய விழிகளும் பவளம்

---

7. தண்டம் - வணக்கம். தரிசனை - காட்சி. பாறியது - ஓடியது. வாய்விண்டு - கூறி. 8. செங்கதிர் - சூரியன். நிமலம் - மலம் இல்லாதது. நறை - தேன் பீடு - பெருமை. 9. குழை - காதணியாகிய குண்டலம். வாகுவலயம் - தோளணி. வில் - ஒளி. அவிருற - விளங்க. ஐயாயுதம் - சங்கு சக்கர சார்ங்கம் கதை வாள் என்ற ஐந்து படைக்கலங்கள். பணிகள் - அணிகலன். இந்திரை - திருமகள். 10. வைசயந்தி - வனமாலையுடன் மார்பில் அணியும் வெற்றி மாலை. பங்கயவிழிகள் - தாமரை மலர் போன்ற கண்கள்.

அணிந்தென வொளிசெ யதரமு முறுவ
லழகுநற் றெய்வமா நீல
வணந்திகழ் புயமு மெவ்வுல கினுக்கு
மாறிலா வொளியுத விடவே (10)

வென்றிகொ ளுபரி சரவசு வம்பொன்
வெள்ளிவிண் ணுறைபுல வருக்குந்
தென்றமிழ் முனிவ ரூதிமா தவர்க்குஞ்
சேவைதந் திடுதலும் பணிந்து
நின்றுநாற் புறமுஞ் சென்றதி விரைவி
னிமலமா யவனொளிர் படிவம்
கன்றுற நாடி யுடல்புள கித்து
நயனமா நந்தநீர் வார (11)

பத்தியுண் மலியப் பரவய ராகிப்
பன்முறை பணிந்தெழுந் தாடி
உத்தமச் சுருதி மொழிகளான் மிகவு
முவந்துதோத் திரஞ்செய வானின்
மொய்த்துவிண் ணவர்க டுந்துபி சங்க
முதலிய தூரிய முழங்கச்
சத்திய வுலகத் தமரய னிந்தத்
தழங்கொலி யஞ்செவி மடுத்தே (12)

நாமுனம் விடுத்த நற்றவர்க் கிரங்கி
நான்மறை முடிவினின் றுடும்
தேமலர்த் திருவுக் கிறைவனு முகுந்தன்
சேவைதந் தனனெனத் தெரிந்து
காமரொண் கலைமா னுடனன மூர்ந்து
கடிதின்வந் தனன்கரு தரிய
தாமரைக் கண்மா றனைத்தொழு மாசை
தழைத்தெழுந் துந்தவேங் கடத்தே. (13)

---

அதரம் - உதடுகள். முறுவல் - நகை வணம் - வண்ணன். 11. பொன் - பிருகஸ்பதியாகிய தேவகுரு. வெள்ளி - சுக்கிரன் ஆகிய அசுரகுரு. புலவர் - தேவர். புளகித்து - மயிர்க் கூச்சம் கொண்டு. நயனம்-கண்கள். 12. சுருதி - வேதங்கள். தூரியம் - இசைக் கருவிகள். சத்திய வுலகம் - பிரமலோகம். அயன் - பிரமன். தழங்கும் - முழங்கும். 13. கலைமான் - சரசுவதி. அனம் - அன்னப்பறவை.

மலைமக ளுடனே யுருத்திரன் வந்தான்
வானவர்க் கரசனும் வந்தான்
கலைபல வுணரும் விச்சுவ சேனன்
றன்னொடுங் கருதரு யோக
நிலைபெறு முனிவ ரனைவரும் வந்தார்
நெஞ்சுளா நந்தமே மலிய
உலைவறு சித்தர் விஞ்சையர் முதலா
வுரைப்பவர் யாவரும் வந்தார். (14)

வந்தவ ரெவரு மிலக்குமி பதியை
வணங்கியா னந்தமீ தூரச்
சுந்தர வுருவி னொளியினுற் பார்வை
துளங்குறக் காண்பதற் கரிதாய்ச்
சிந்தையின் வியந்து கேசவா முகுந்தா
சீதரா நாரணா முதல்வா
விந்தைசந் ததமு முவந்துறை மார்பா
மேதகு கருணையங் கடலே (15)

சொல்லரு நினது விச்சுவ வுருவந்
தோன்றயாங் கண்டுசே வித்தற்
கெல்லையில் விழிக ளிருக்கினுஞ் சாலா
வாகலி னெழிலுறுஞ் சாந்த
நல்லுரு வோடு சேவைதந் தாள்வா
யெனநவின் றடிநமக் கரித்துத்
தொல்லையஞ் சுருதி முறைவழு வாமே
தோத்திரஞ் செய்தெதிர் நின்றே. (16)

ஈரமற் றுலக மெங்கணு மின்னா
வியற்றல்செய் நிசாசரர்ச் சவட்டி
எருறு மடியர்க் கருள்செய வேண்டு
மீசனே யிம்மலை மிசையின்

---

14. மலைமகள் - பார்வதி. வானவர்க் கரசன் - இந்திரன். கலை - சாஸ்திரங்கள். உலைவு - ஒழிவு. சித்தர் - சித்தி யடைந்தோர். விஞ்சையர் - வித்தியாதரர் ஆகிய தேவகணத்தார். 15. சுந்தரம் - அழகு. விந்தை - இலக்குமி. 16. விச்சுவ வுருவம் - உலகு யாவையும் அடக்கிய திருவடிவம். எழில் - அழகு. 17. ஈரம் - அன்பு. இன்னா - தீமை. நிசாசரர் - அரக்கர். சவட்டி - கொன்று.

நோறு மடிக டமைக்கணி ஞுடி
நெஞ்சக மகிழ்ந்தநங் களுக்குன்
சீருறும் பதத்தைக் கருணைசெய் துதவு
வாயெனச் செப்பியேத் தினரால். (17)

கலிநிலைத்துறை.

அன்ன காலையி னுலகமுண் டுமிழ்ந்திடந் தளந்த
பன்ன காசன னருள்சுரந் தெதிருறப் பார்த்து
என்னை நீவிர்வேண் டியவெலா மின்புறப் பெற்று
மன்னு வீர்சில பகலிலென் வளஞ்செறி பதமே (18)
என்று ரைத்தய னாஜிமை யோர்பதி முதலாய்
நின்ற விண்ணவர் நெடுந்தவ வகத்திய ஞாதி
துன்று பண்ணவர் சுரகுரு வசுவிவர் தம்மேல்
நன்று றக்குளிர் நயனவம் புயமலர் சாத்தி (19)
அவா வர்க்குவேண் டுவவா மருணனி சுரந்தீந்
துவமை யில்லதா முருக்காந் திடுதலு முவப்போ
டெவரு நல்விமா னத்திடை யிருந்தமா யவனைத்
தவற றப்பணிந் தேகினர் தத்தம பதிக்கே. (20)
என்று கோதமன் காதல னியம்பலுஞ் சனகன்
நன்று நன்றென வினவின னெனவுயர் ஞானஞ்
துன்று நைமிச வனத்துறை துறவர்க டமக்கு
வென்றி மாதவச் சூதவே தியன்விளம் பினனால். (21)
சொன்ன விக்கதை யாவுநற் றாயதா மேன்மை
மன்னு மொன்பதி னிரட்டியாய் வழங்கிய புராணத்
துன்னு வாமன முத்தமர் தமக்குளந் தெளிய
நன்ன யம்பெறுங் கடலமிழ் தெனநவின் றிடுமே. (22)

18. இடந்து - தோண்டி. பன்னகாசனன் - ஆதிசேடனைப் படுக்கையாக உடைய திருமால். பதம் - வைகுண்ட பதவி. 19. அயன் - பிரமன். இமையோர் - தேவர்கள் தலைவன் ஆகிய இந்திரன். துன்று - நெருங்கிய. பண்ணவர் - தேவர்கள். சுரகுரு - பிருகஸ்பதி. நயனம் - கண். அம்புய மலர் - தாமரைமலர். 20. உவமை - ஒப்பு. காந்திடுதலும் - ஒளித்திடவும். உவப்பு - மகிழ்ச்சி. தவறு - குறை. 21. கோதமன் காதலன் - சதாநந்த முனிவர். துறவர் - முனிவர்.

அகத்தியர் முதலிய ரிஷிகளுக்கும் தேவர்களுக்கும் குரு சுக்கிரன் வசு இவர்களுக்கும் சேவைதந்து வரங்கொடுத்த அத்தியாயம் முற்றிற்று.

## 51. கங்கையினும் சிறந்தது சாமிபுட்கரிணி என்று மார்க்கண்டருக்குப் பிரமன் உபதேசித்த அத்தியாயம்.

எழுசீர் விருத்தம்.

தாதுலாந் தொடையற் சனகவேந் தனுக்குப்
பின்னருஞ் சதாநந்த முனிவன்
ஓதுவான் மேலு ளஞ்சன கிரியி
னுற்றுயர் வாமதே வப்பேர்
மாதபோ தனனுன் முகன்றன்னைப் பன்னுண்
மனத்தெண்ணி யருந்தவஞ் செயவவ்
வேதனுங் கெதிர்வந் துறப்பணிந் தன்பால்
வேண்டிநன் குறவிளம் புவனால். (1)

செந்திரு மகிழ்ந னுந்தியம் போதிற்
செனித்துயிர் யாவையும் வகுத்த
தந்தையே யிந்த வேங்கடத் துறையுஞ்
சாமிபுட் கரிணியின் பெருமை
சிந்தைகொண் டுரைத்தி யென்னலு மலர்வாழ்
திசைமுகன் மிகமகிழ் வெய்திச்
சுந்தரப் பவள வாய்திறந் தமுத
ரசமெனச் சொல்வதா யினனால். (2)

சாமிபுட் கரிணி யருகினிற் றிருப்பாற்
கடல்வரு சந்திரன் மேனாள்
தாமரைத் தொடைய லந்தணர் தமக்குத்
தகைமணிப் பணிகளைத் தானம்
தூமன மகிழ்ந்து கொடுத்தமை யாலே
துலங்கெழிற் சீதகாந் தியினைப்
பூமியுள் ளளவு மெவர்களு நோக்கிப்
புகழ்தரப் பெற்றுவாழ்ந் தனனால். (3)

---

1. தாது - பூந்துகள். தொடையல் - மாலை. அஞ்சனகிரி - திருமலை. தபோதனன் - தவசி. வேதன் - பிரமன். 2. செந்திரு - இலக்குமி. மகிழ்நன் - கணவன். உந்தியம்போது - கொப்பூழில் தோன்றிய தாமரை மலர். திசைமுகன் - பிரமன். சுந்தரம் - அழகு. 3. தகை - சிறப்பு. மணிகள் - அணிகலன்கள். சீதகாந்தி - குளிர்ச்சியான ஒளி. எழில் - அழகு.

மகத்துவம் பெறுமச் சாமிபுட் கரிணி
மருங்கினின் மதன்மறை யோர்கள்
உகப்புறக் காமர் கன்னிகா தான
முளமகிழ்ந் துதவிய செயலால்
மிகுத்தசுந் தரமுங் கனசுக போக
மேன்மையும் விளங்குறப் பெற்றுச்
சகத்தவர் புகழ்ந்து போற்றிட வினமுந்
தருக்கொடு வாழ்ந்திருக் கின்றூர். (4)

அளகைமன் சிறந்த வந்தணர் தமக்குள்
ளன்புற வாடக தானம்
வளமலிந் துயருஞ் சாமிபுட் கரிணி
மருங்கின்வந் துபசரித் தேத்தி
உளமகிழ்ந் துதவு பலத்தினு லன்றே
வொண்ணிதி யொன்பதும் புவிக்கண்
விளைவுறப் பெற்று நாளுநன் னலங்கண்
மேவிவீற் றினிதிருக் கின்றூன். (5)

இத்திருமலையிற் சிகண்டிகன் சிறந்த
விருமறை யவன்றனக் குவந்து
வித்தியா தானஞ் செய்ததா லுயர்ந்த
விண்ணவர் தேசிக ஞனன்
பத்தியின் மொழிந்த தீர்த்தமாட் டணுகிப்
பரிவுட னலங்கொடா னங்கள்
தத்தமக் கியைந்த படியளித் துயர்ந்தோர்
தங்களை யெணிலிலக் குளதோ. (6)

---

4. மகத்துவம் - சிறப்பு. மதன் - மன்மதன். காமர் - அழகு. கன்னிகாதானம் - பெண் நன்கொடை. சுந்தரம் - அழகு. சகத்தவர் - உலகினர். தருக்கு - மனக்களிப்பு. 5. அளகைமன் - குபேரன். ஆடக தானம் - பொன்கொடை. நிதிஒன்பது - சங்கநிதி, பதுமநிதி முதலிய நவ நிதிகள். 6. சிகண்டிகன் - பிருகஸ்பதி. (சிகண்டிசன்; என்றிருத்தல் வேண்டும் சித்ர சிகண்டிசன் எனல் தெளிவு; ஆங்கீரஸின் புதல்வன்). வித்யாதானம் - கலைக்கொடை. தேசிகன் - ஆசாரியன். இலக்கு - கணக்கு.

என்றதன் பெருமை யாவையும் விரித்தே
    யிசைத்தயன் சத்திய வுலகம்
சென்றன னெனவம் முனிவனாற் கேட்டே
    னென்றுசீர் பெறுசன கனுக்கு
நன்றறி வுடைய தவச்சதா நந்த
    னவின்றுபின் னருமுவந் துரைப்பான்
வென்றியந் தவமார்க் கண்டமா முனிவன்
    வியநதிக் கரையின்மே னாளின் (7)

போதனை நினைந்து தவம்புரிந் திடலும்
    பொலஞ்சிறை யெகினமூர்ந் தெதிர்வந்
தேதுகா ரணத்தா லெனைநினைத் தரிய
    தவமியற் றினையென விசைப்ப
காதலிற் றெழுது நின்றுகை குவித்துக்
    கழறுவான் மூன்றுல கினிலும்
கோதற வுயரு நதிகளின் பெருமை
    கூறெனக் கூறலா யினனால். (8)

உலகமூன் றினிலுஞ் சுரநதி மேன்மை
    யுற்றதா மதனினு முயர்ந்த
நலமுறுந் தீர்த்த மொன்றுள ததனை
    நவிலுவன் றென்றமிழ் நாட்டின்
புலவர்க டுதிக்கும் வேங்கட மென்னும்
    பொருப்பஃ துண்டதன் மிசையே
தலமதிற் பவங்க டொலைத்துநன் கருளுஞ்
    சாமிபுட் கரிணியொன் றுளதே. (9)

கலிநிலைத்துறை.

அந்த நீரிடை யுலகமூன் றினுமுள நதிகள்
தந்த மக்குறு பவத்தொடர் தமைவிலக் குதற்காய்ச்
சுந்த ரம்பெறு தனுமதி வளர்துவா தசியின்
வந்து சேருமக் காலையின் வருடங்க டோறும் (10)

---

7. சத்திய வுலகம்-பிரமலோகம். வியநதி-ஆகாச கங்கை. 8. போதன்-பிரமதேவன். பொலஞ்சிறை - பொன்மயமான சிறகு. எகினம் - அன்னப் பறவை. கழறுவான் - சொல்லுவான். 9. சுரநதி - தேவருலக கங்காநதி. பொருப்பு - மலை. பவம் - பிறப்பு. 10. பவத்தொடர் - பாவச்சார்பு. தனுமதி - மார்கழிமாசம். துவாதசி - பன்னிரண்டாம் நாள்.

ஆவ லாலந்த வெல்லையி னதின்முழு கிடுவோர்
ஓது மூன்றுல கத்தினு முறைநதி களின்பாற்
காத லோடுசென் ருடிய கவினுறு பலனே
ஏத நீங்கிடப் பெறுவரென் றிசைத்தய னகன்றான். (11)
உகந்து கேட்டமார்க் கண்டமா முனியுளம் வியப்புற்
றகன்று மீமிசை யமர்ந்தவேங் கடமலை யடைந்து
சுகந்த மேவிய சாமிபுட் கரிணியின் றானீர்
மிகுந்த வன்பொடு மூழ்கியா னந்தமீ தூர (12)
போதின் வாழ்திரு நாதனைப் போற்றியஞ் சலித்துக்
காத லோடுமா ராதனை கருத்துறப் புரிந்தே
ஓது சில்பக லங்ஙன முவப்புற விருப்ப
ஆதி யாகுமப் பாமனு மன்புள மகிழ்ந்தே (13)
மிகுந்த வாயுளைத் தருதலும் விளங்குறப் பெற்றே
உகந்து தாழ்ந்தன னெனச்சதா நந்தனே துதலும்
மகிழ்ந்து சீர்பெறு சனகமன் மந்திரி யோடு
புகுந்த னன்றிரு வேங்கட மெனும்பொருப் பகத்தே. (14)
நேர றத்திகழ் சாமிபுட் கரிணிநீ ராடிக்
காரெ னப்பொலி நேமியங் கடவுளைப் பணிந்து
ஏரு றப்புகழ்ந் தவனரு ளெய்தியே தனது
சீரு ரும்பதி யடைந்தறஞ் செய்தினி திருந்தான். (15)
என்று சூதனை மிசவன விருடிய ருவந்து
நன்று நன்றெனு வியப்புற நவின்றவிக் கதையை
வென்றி வாமன மெனவிளம் பியபுரா ணத்தில்
துன்று பாருளோர்க் குணர்வுற வெளிபெறச் சொலுமே. (16)

11. எல்லை-பொழுது. கவின்-அழகு. ஏதம்-குறை. 12. மீமிசை - மேல். சுகந்தம் - நறுமணம். தானீர் - பரிசுத்த தீர்த்தம். 13. போது-தாமரை மலர். அஞ்சலித்து - கை குவித்து வணங்கி. ஆராதனை - பூசனை. பரமன் - மேலாகிய கடவுள். 14. ஆயுளை - வாழ்நாள். மன் - அரசன். பொருப்பகம் - மலையிடம். 15. நேர் - ஒப்பு. கார் - மேகம். நேமி - சக்கராயுதம்.

கங்கையினும் சிறந்தது சாமிபுட்கரிணி யென்று பிரமன் மார்க்கண்டருக்கு உபதேசித்த அத்தியாயம் முற்றிற்று.

## 52. சுகப்பிரம ரிஷிக்கு ஸ்ரீநிவாசன் சேவை சாதித்த அத்தியாயம்.

### அறுசீர் விருத்தம்.

தேவதரி சனமுனியைத் தேவலக னெனுமறையோன் சிறப்ப நோக்கி
மூவரினு முதலான பரப்பிரம மூர்த்தியின்சீர் மொழிவா யென்றே
ஆவலுடன் வேண்டவவ னகமகிழ்ந்து கருணையுட னருள்வான் முன்னாள்
பாவலர்கள் புகழுமகா மேருவெனும் பருப்பதத்தின் சிகர மீதே (1)

மாமதியுஞ் செங்கதிரு மழுங்கவொளி தவழ்மணிக ளாலே செய்த
காமருமா மண்டபத்திற் கதிர்மணியா தனத்தின்மிசை கவின்பெற் றோங்கும்
நாமகளோ டினிதிருந்த நான்முகனை நவையிலருந் தவத்தோர் நண்ணிச்
சேமமுறப் புகழ்ந்தேத்தச் சிந்தைமகிழ்ந் தவர்கடமைத் திருக்க ணோக்கி (2)

### எழுசீர் விருத்தம்.

வேங்கட கிரியின் மகிமையை விரித்து
விளம்பிட யாவரு முவந்து
பாங்குறக் கேட்குங் காலையிற் சுகனுட்
பரிவுகொண் டுயர்வுறு மந்த
ஓங்கலி னடைய விரும்பிநான் முகனை
யொண்மலர்க் கரங்குவித் தெழுந்து
தேங்கமழ் கமல மலரடி சேப்பத்
தென்றிசை கடிதுறச் சென்றே (3)

நலங்கொள்வேங் கடத்தை நண்ணியங் குறைநா
னாவித யோகியர் தம்மைத்
துலங்குற நோக்கிக் குமாரதா ரிகையிற்
றோய்ந்தெழிற் பாபநா சத்தும்
இலங்குமா காய கங்கையே முதலாங்
கிருந்தநீர் யாவையும் படிந்து
மலங்குசேல் வாளை வரான்மலி சுவண
முகியெனு மாநதி யாடி (4)

---

1\. மறையோன் - வேதியன். பாவலர்கள் - பாடலில் வல்லவர்கள். பருப்பதம் - மலை. சிகரம் - முடி. 2. செங்கதிர் - சூரியன். மதி - சந்திரன். காமர் - அழகு. ஆதனம் - இருக்கை. நாமகள் - சரசுவதி. நவை - குற்றம். 3. ஓங்கல் - மலை. பரிவு - அன்பு. கமலம் - தாமரை. சேப்ப - சிவக்கும்படி. கடிது - விரைவாக. 4. நானாவித - பலவகை. படிந்து - முழுகி. மலங்கு, சேல், வாளை, வரால் - இவை மீன்கள்.

அதினுறை கமல மலர்கள்கொய் தழகார்
பதுமதீர்த் தக்கரை யணுகி
இதயமுண் மலர்மா னுதனை யிருத்தி
யெண்ணிலார் தவமியற் றுவதாம்
கதலிசண் பகமா மலகமந் தாரங்
கபித்தநீ டென்னைபுன் னகம்
மதுமலி குரவஞ் சந்தன மசோக
மானவல் கிஞ்சுகந் தமாலம். (5)

பனசநீள் வகுள நிம்பசம் பீரம்
பன்னுபல் வகைத்தருச் செறிந்த
வனமதி னுயரு மிலக்குமி பதிதன்
மந்திரந் தன்னையுச் சரித்துப்
பணியுறுங் கால நீரினும் வெம்மை
பற்றிய காலவன் னியினும்
இனிதுற விருந்து தவஞ்செயுங் காலை
யிந்திரன் றெரிந்துளே யெண்ணி (6)

மிகுமெழிற் றேவ மகளிரை நோக்கி
மேதினி யடைந்துயர் சொன்ன
முகிநதிக் கருகிற் றவஞ்செயுஞ் சுகமா
முனிதவங் குலைத்திட ரெனலும்
நகைமணிப் பணியா லொப்பனை புரிந்து
நற்றவன் சூழலி னண்ணிப்
பகருங் கானம் பாடியுந் தண்டை
பரிபுரம் புலம்பிட நடந்தும் (7)

---

5. இதயம் - உள்ளம். மலர்மான் - இலக்குமி. கதலி - வாழை. ஆமலகம் - நெல்லி. கபித்தம் - விளா. மது - தேன். குரவம் - மருதோன்றி. கிஞ்சுகம் - செம்முருக்கு. தமாலம் - பச்சிலை மரம். 6. பனசம் - பலா. வகுளம் - மகிழமரம். நிம்பம் - வேம்பு. சம்பீரம்-எலுமிச்சை. தரு - மரங்கள். வன்னி - நெருப்பு. 7. மேதினி - உலகு. பணி - அணிகள். ஒப்பனை - அழகு. சூழல் - இருப்பிடம். கானம் - பாடல். பரிபுரம் - சிலம்பு.

வாசனை மலருங் களபமுந் தென்றல்
வருந்திசை நின்றணிந் தெதிரே
காசமுங் கலையுங் குலைத்துடுத் தழகார்
கருங்குழல் கையணி வளைகள்
பூசலிட் டொலிப்ப வவிழ்த்துமுன் னுதறிப்
பொற்புற முடித்துமை விழிவேல்
ஆசைக ளுருவ நோக்கியு நகைத்து
மாடினர் பரதநூன் முறையே. (8)

இவ்வித மின்னோர் செயச்சுக முனிவ
னிருவிழி களுந்திற வாமல்
எவ்வமற் றுயர்மெய்ப் பாஞ்சுட ரவனை
யிதயமுள் ளிருத்திப்பத் திமையால்
செவ்விய கனக மௌலிதோ ளணிசெந்
திருக்குழை பசுந்துழா யாரம்
திவ்விய வொன்பான் மணிச்சிக ழிகையா
திப்பொலம் பூடணஞ் சாத்தி (9)

ஆரண முறையி னருச்சனை புரியா
நின்றக மலைவா நிற்ப
வாரணி கலசக் கொங்கையர் தெருண்டு
மனமருண் டந்தரத் தோட
நாரண னுவணன் மிசையெழுந் தருளி
நவையறு மொளிதிசை யளப்பப்
பூரண கருணை பூப்பவச் சுகன்முன்
பொற்பவந் தெதிர்முக நிற்ப (10)

---

8. களபம் - கலவைச்சந்தனம். ஏகாசம் - மேலாடை. கலை - ஆடை. பூசல் - ஆரவாரம். பொற்பு - அழகு. ஆசை - திசைகள். பரதநூல் - நாட்டிய சாஸ்திரம். 9. எவ்வம் - குறை. கனக மௌலி - பொன்முடி. குழை - குண்டலம். சிகழிகை - மாலை. பொலம் பூடணம் - பொன் அணிகலங்கள். 10. ஆரண முறை - வேதநெறி. அகம் - உள்ளம். வார் - கச்சு. அந்தரம் - வான். உவணன் - கருடன். நவை - குற்றம்.

அகக்கணு ணோக்கி யஞ்சலித் திருந்த
தவன்புறத் தம்பகத் தாலும்
மிகத்தெளி வோடு கண்டடி வணங்கி
வேண்டியா னந்தமீ தோங்க
மகத்துவம் பொதிமா மறைகளி னாலும்
வழுத்துதற் கரியனே யன்பர்
உகப்புற நாளு நினைத்தவை யுதவு
மொப்பிலாக் கருணையங் கடலே (11)

எனப்பல வண்ண மேத்துரை சுகனை
யிலக்குமி நாயக னோக்கி
வனப்பொடு நாளும் வழுவற வுயர்ந்த
வயிணவ மந்திரத் தாலே
நினைத்தவை பெறுதி யென்றுரைத் தகன்று
னிமலமா யெங்குமாய் நின்ற
கனக்கரு மேனிப் பவளவாய்ச் செங்கட்
கதிர்வளை நேமியங் கானே. (12)

நெடியவ னகன்ற பின்னராங் கவனை
நெஞ்சுளே நினைந்துகொண் டந்தக்
கடிகமழ் கமலப் பொய்கையி னருகர்க்
கவினுறுஞ் சன்னிதி யமைத்து
வடிவுறு முருக்கு மிணியொடுங் கணனை
மந்திரத் தாற்பிர திட்டை
படிபுகழ் தரச்செய் தந்தணர்க் ககநூற்
றெட்டுளம் பரிவுட னியற்றி (13)

மனத்திலா னந்த மலிந்தெழ ஞான
மலையினை வழுத்தியம் பரனை
நினைத்தெழுந் தரிய தவத்தினர் வாழ்த்த
நெடிதகன் றுயர்ந்தெழில் சேர்ந்து

11. அஞ்சலித்து - கைகுவித்து வணங்கி. தவன் - தவசி. அம்பகம்-கண். மகத்துவம்-பெருமை. 12. வழு - குற்றம். கனம் - மேகம். வளை-சங்கு. நேமி - சக்கரம். 13. கடி - மணம். அருகர் - பக்கம். பிரதிட்டை - நிறுவுதல். படி - உலகு. அகம் - இல்லம். பரிவு - அன்பு. 14. ஞானமலை - திருமலை.

கனத்தபைங் கனக மணியொளி பொருந்திக்
கதிர்வலம் புரியுமா மேரு
எனத்திரு நாம முடையபூ தரத்துக்
கேகின னிருந்தவச் சுகனே. (14)

எனவுயர் சூதன் சௌனகா தியருக்
கிசைத்தன னிவ்வெலாம் விரித்துக்
கனமுறு பதும புராணமென் பதனிற்
கலைகட லுலகுளோர்க் கெல்லாம்
மனநனி வியப்ப விழுக்கற ஞானம்
வாய்ந்தெழ வமுதெனச் செவிகட்
கினிதுற நாளுந் தெவிட்டிடா நலங்கொண்
டியைபுற வியம்பிடு மாதோ. (15)

சுகப்பிரம ரிஷிக்கு ஸ்ரீநிவாஸன் சேவை சாதித்த அத்தியாயம் முற்றிற்று.

## 53. சூலி நரசிங்க உபாசனையும் பதுமசரசின் பெருமையும் சுகர் சரித்திரமும் உரைத்த அத்தியாயம்.

எழுசீர் விருத்தம்.

மாதவத் தேவ தரிசனன் மகிழ்ந்து
மறித்துமத் தேவல கப்பேர்
வேதியன் றனக்கு விளங்குமா விரித்து
மேதகு மமிழ்தென நலங்கொள்
சீதமுண் மலியுஞ் சாமிபுட் கரிணி
தீர்த்தமாட் டழகுற விருக்கும்
ஏதமில் வராக விறைவனூர் பாழிப்
பீடெலா மினிதுற விசைத்தான். (1)

கனகம் - பொன். கதிர் - சூரிய சந்திரர். பூதரம் - மலை. 1. மறித்தும் - மீட்டும். வேதியன் - மறையோன். சீதம் - குளிர்ச்சி. ஏதம் - குற்றம். பாழி - குகை. பீடு - பெருமை. வராக விறையனூர் - ஆதிவராக சுவாமி.

ஆளரி யுருவத் தமலனைக் கரந்தை
யணிசடை யானருச் சித்து
நாளுமெய்ந் நலங்கள் பெற்றகா தையினை
நவிலுவன் கேளென நவில்வான்
நீளுமத் தீர்த்தக் கிரியினுத் தரத்தி
னிகழ்த்துமா றைந்துகா வதத்தின்
கோளுறு முழுவை முதலிய விலங்கின்
குழாஞ்செறி புறவமொன் றுளதால். (2)

அந்தவான் கடத்தி னன்மலர்த் தடமொன்
றமைந்துள ததன்கொழுங் கரையின்
சிந்தையின் மகிழ்ந்து பரமனைத் தியானஞ்
செய்தகிற் புத்தினி யென்னும்
நிந்தையின் முனிவ னெடிதுறை கின்று
னதற்குநே ருதக்குறு மலையின்
கந்தரத் தருகிற் பழுமரத் தடியிற்
கனத்தவோர் பாறையி னிருந்தே (3)

சூலியா ளரியைக் கண்டுசே விப்பத்
துணிந்துதொன் மறைமுறை நெடுநாட்
சாலவும் புனித னுயுவந் திதய
தாமரை மலர்த்தடம் பொருட்டின்
மேலவன் றனைச்சேர்த் தன்புளத் தடங்கா
விருப்பொடும் பூசனை புரிந்து
மூலமா மனுவை யுச்சரித் துக்கண்
மூடியோ கஞ்செயுங் காலை (4)

---

2. ஆளரி - நரசிங்கம். கரந்தையணி சடையான் - சிவன். நவிலுவன் - சொல்லுகிறேன். உத்தரம் - வடக்கு. காவதம் - பத்து மைல் தூரம். கோள் - கொலை. உழுவை - புலி. குழாம் - கூட்டம். புறவம் - காடு. 3. கடம் - காடு. தடம் - பொய்கை. நிந்தை - பழி. உதக்கு - வடக்கு. கந்தரம் - குகை. பழுமரம் - ஆலமரம். 4. சூலி - சூலப்படையுடைய சிவன். ஆளரி - நரசிங்கமூர்த்தி. சாலவும் - மிகவும். புனிதன் - தூயன். மனு - மந்திரம்.

இருந்த வச்சிலை பிளந்தெழுந் தாளரி
　　யிணரொளி மௌலிதோ ளணிசீர்
பிருந்தை மஞ்சரி மணிக்குழை கவுத்துவம்
　　பீதவம் பரமொளிர் கடகம்
பொருந்து கைகளோ ராயிரம் பொலியவிண்
　　பூப்பொதிர்ப் புறவட வனலும்
வருந்தி நெஞ்சுமிக் குலைவுற வதிர்த்தனு
　　மங்கைபங் கினனெதிர் கண்டான். (5)

மிக்கவன் பொடுமஞ் சலித்தெழுந் தாடி
　　மெய்ப்புள கெழுநயந் திருநால்
அக்கரப் பொருளே பிரணவ முதலா
　　மாதியே யமலனே விசய
சக்கரக் கரனே யுலககா ரணனே
　　தனிமறை முடிவினின் ருடும்
முக்கிய மெய்ம்மைத் தேவனே யென்று
　　முறைமுறை பணிந்துநின் றேத்தி (6)

அயனொடு மெனையு முலகங்க ளையுமுன்
　　னருளினிற் படைத்தளித் தாங்கே
நயனொடு மொருவாய் விழுங்குதி பின்னை
　　நயந்துகொப் பூழ்நறு மலரின்
அயர்ந்துபா டின்றி யவ்வெலாந் தருதி
　　யப்பனே யருட்பெருங் குன்றே
செயிர்மலி யுயிருள் யானுமொன் றலனே
　　தேடியெற் புரந்திடல் வியப்பே. (7)

---

5. சிலை - கல்பாறை. இணர் - கொத்து. மௌலி - முடி. பிருந்தை மஞ்சரி - துளசிமாலை. மணிக்குழை - இரத்தின குண்டலம். பீதஅம்பரம் பொன்ஆடை. பொதிர்ப்பு - அதிர்ச்சி. வடஅனல் - வடவைத்தீ. மங்கை பங்கினன் - சிவன். 6. அஞ்சலித்து - கைகுவித்து வணங்கி. புளகு - மயிர்க்கூச்சு. இருநால்அக்கரம் - திரு அஷ்டாக்ஷரமந்திரம். விசயம் - வெற்றி. சக்கரக்கரன் - சக்கராயுதத்தைத் திருக்கையில் உடையவன். 7. அயன் - பிரமன். நயன் - நீதி. அயர்ந்து பாடு - தளர்ந்து ஒழிதல். அவ்வெலாம் - அவைகள் யாவும். செயிர் - குற்றம். புரந்திடல் - காத்தல்.

விதிமுறை வழுவா தருச்சனை புரிந்து
விளங்குமிவ் வரைமிசை நினைந்து
சதிருறு வடிவ மெவர்களுங் கண்டு
தகைபெறப் பணிந்துநா டோறும்
துதிசெய விருந்து சேவைதந் தருள்வா
யெனச்சொலி வேண்டியே தானும்
புதியதெள் ளமுத மெனவவன் புகழைப்
புகழ்ந்தரு கிருந்துபூ சித்தே (8)

தினமுமா னந்தங் கொளீஇயுறை கின்று
ஞதலா லச்சிலம் பினுக்குக்
கனமுறு நீல கண்டவெற் பெனப்பேர்
கழறுவர் பூழில் சந்த டர்ந்த
தனிவன மகிர்புத் தினிவன மென்றே
சாற்றுவா ராங்குறை கின்ற
பனிமலர்த் தடத்தின் மூழ்குவோர் பவங்கள்
பற்றற விரைந்துபா றிடுமே. (9)

மகாதவஞ் சிவன்செய் தாளரி யுருவ
மாயனைப் பணிந்தவப் பிலப்பேர்
அகோபில மெனச்சொல் வாரதன் பெருமை
யலகிடற் கரியதா மென்று
விகாரமற் றுயர்ந்த முனிமன மகிழ்ந்து
விளம்பினீள் புட்பகாத் திரியின்
சகோரநீர்க் காண்ட முலவுகோ னேரி
மகிமையைச் சாற்றலுற் றனனால். (10)

அத்திரி வசிட்ட ஞரிதன் வியாச
னகத்தியன் பிருகுமார்க் கண்டன்
சுத்தசா பாலி கௌதமன் சத்தி
தூயசாண் டிலியமா முனிவன்

---

8. வரை - மலை. சதிர் - அழகு. தகை - சிறப்பு. சேவை - காட்சி. 9. சிலம்பு - மலை. வெற்பு - மலை. கழறுவர் - கூறுவர். பூழில் - அகில். சந்து - சந்தனம். பாறிடும் - ஓடிடும். 10. ஆளரி - நரசிங்கம். பிலம் - நிலப் புழை. அலகு - அளவு. புட்பகாத்திரி - திருமலை. சகோரம் - ஒரு பறவை. நீர்க்காண்டம் - நீர்க்காக்கை.

மெய்த்தவப் போதா யனன்றுரு வாசன்
மேதகு பாராசரன் விசுவா
மித்திரன் றேவ குருசய முனிமெய்
விளங்கிய சனந்தன்வான் மீகன் (11)

காசிபன் பாத்து வாசன்மாண் டவியன்
கண்ணுவ ஞரதன் புலகன்
மாசறு காத்தி யாயனன் சிறந்த
மனுசுகன் சௌனகன் சனதன்
தேசுறு மாங்கி ரசன்சனற் குமாரன்
சீர்கெழு புலத்திய னேமன்
ஆசைவே ரகழ்ந்த சிருங்கமா தவத்தோ
னங்கிரா வாரண முனியே. (12)

சாற்றுமிம் முனிவ ரனைவரு மெழில்சேர்
சாமிபுட் கரிணிதீர்த் தத்தின்
ஏற்றநன் குறைத்தா ரினிதமர் சீநி
வாசனை யெண்ணிப்பத் திமையால்
போற்றியங் கீரின் மூழ்குவோ ரனந்தம்
பிறந்தைக டொறும்புரி பவங்கள்
காற்றெதிர் பூளை யெனக்கடி தோட
விட்டகா மியமினி தடைந்தே (13)

நித்திய வின்ப வீட்டினை மருவி
நிலைபெறாஉ வாழ்வர்க ளீது
சத்திய மெனவே சாற்றின ரென்று
சாற்றலுந் தேவல கப்பேர்
உத்தம மறையோ னுவந்துகேட் டினமு
மோங்குசீர் மாயவன் சரிதை
சித்தநன் கிரங்கிச் செப்பெனத் தேவ
தரிசனன் சிந்தையுண் மகிழ்ந்தே (14)

---

13. பிறந்தை - பிறப்பு. பவம் - பாவம். பூளை - ஒரு பூண்டு. இட்ட காமியம் - விரும்பியவை அவாவியவை. 14. வீடு - வைகுண்டம். மருவி - அடைந்து. சரிதை - வரலாறு.

புட்பகாத் திரியின் மகிமையு மதனிற்
பூமக ளுதன்வந் ததுவும்
பெட்புற விரித்து நவின்றெழிற் பதும
சரசுறும் பெருமையும் புகல்வான்
உட்பகை கடிந்த பிருகுமா முனிமுன்
னொளிர்பாத் துவமுண ருதற்காக்
கட்பொலி கமல னுடனரன் றனையுஞ்
சோதனை கண்டவர்க் கழித்தே (15)

கலிவிருத்தம்.

விண்டுவி னருகடைந் துதைப்ப வேரியந்
தண்டுள வணியுமச் சார்ங்க பாணியான்
கண்டுப சரித்துரை கனிந்து கூறலும்
எண்டவன் பராபர னிவனென் றேத்தியே (16)

சென்றன னவன்பத தூளி செய்யவள்
தன்றிரு மேனியிற் சார்ந்த தாலெழில்
துன்றிய வவணுறுந் தூய மாமனம்
கன்றிடப் பாதலங் கடிதெ ழுந்துபோய் (17)

கலிநிலைத்துறை.

கபில மாமுனி சூழலிற் கலந்திட வவனும்
சபல மாயின தின்றுநந் தவமெனத் தாழ்ந்தே
உபய பாதமீ தருச்சனை செயவுகப் போடும்
அபய மீந்துபின் னுளவ ணமர்ந்திடுங் காலை (18)

பரம னங்குறும் பங்கயச் செல்வியை நாடி
உருவ மெண்ணில்கொ டெங்கணு முலவிவிண் ணுயரும்
விரைம லர்த்தரு மலிந்தெழில் விளங்கிய கொல்லா
புரமெ னப்பெயர் பொலிதிருத் தலத்திடைப் புகுந்தே (19)

---

15. பெட்பு - விருப்பம். சரசு - தீர்த்தப்பொய்கை. உட்பகை - காமம், வெகுளி முதலியவை. கமலன் - பிரமன். 61. விண்டு - விஷ்ணு. வேரி - தேன். தண்டுளவு - குளிர்ந்த துளசி. சார்ங்கபாணி - சார்ங்கம் என்ற வில்லைக் கையில் உடைய திருமால். தவன் - தவசி. 17. செய்யவள் - இலக்குமி. கன்றிட - வருந்த. 18. குடில் - இருப்பிடம். சபலம் - பயனுடையது. உபயபாதம் - இணையடிகள். அபயம் - அச்சமின்மை. 19. பங்கயச்செல்வி- திருமகள். விரை - வாசனை. தரு - மரம்.

ஆங்க கத்தியன் பூசைசெய் யர்ச்சையா முருவம்
தாங்கு மிந்திரை தனைக்கணுற் றேதச வருடம்
பாங்கு றைந்தவக் காலையிற் பாரதி வாணிற்
றீங்க றும்மச ரீரியாய்ச் செப்பலுற் றனளால். (20)

அறுசீர் விருத்தம்.

அருடவுத் தமரந் தாயைப் பொருக்கெனக் காண வேண்டின்
தருமலிந் தோங்கி நீண்ட தக்கிண திசையிற் சென்றால்
மருமலர் பொதுளுஞ் சொன்ன முகியென வளங்கொண் டேயோர்
திருநதி யுளத தன்பாங் குத்தர திசையிற் சேர்ந்தே (21)
மாதவ ரெண்ணி லாரம் மாநதி தனைப்ப ராவிக்
கோதற வுறைகின் றாரங் கடைந்துகுந் தாயு தத்தாற்
சீதமுண் டலியுஞ் செய்ய செழுஞ்சர சொன்றுண் டாக்கி
மீதலத் தமர்ந்து மல்கி விரைசெயம் புயங்க டம்மை (22)
வரவழைத் ததினுண் டாக்கி மகிமைசேர்ந் துயரு மேகாக்
கரமனு வெனச்சொல் வேத மந்திரங் கழறி யந்த
மருமலர்க் குழாத்தா னங்க ளன்னையுண் மகிழச் செய்தால்
ஒருபதோ டிரண்டாண் டின்மே லுள்ளுறை வெகுளி தீர்ந்தே (23)
வருவளென் றுரைத்த லோடு மாயவ னேர்வேந் தென்ன
உருவமைந் தெழில்செய் சொன்ன முகிநதி யுற்றே யாங்குத்
தெரியொளிக் குந்தத் தாலோர் தெளிதட மமைத்து விண்ணின்
மருவுமுண் டகங்க டம்மை வாயுவால் வரவ ழைத்தே (24)
விரியுமக் குளணி லிட்டு வளர்ந்தபின் விளங்கு மந்த
மருமல ராலுஞ் சீர்சால் வானச ரீரி முன்சொல்
உரைதவ றாம லேயம் மந்திர வுருவி னாலும்
திருவுளா னந்த மெய்தச் செய்தன னன்பி னாலே. (25)

---

20. அர்ச்சை - வழிபாட்டிற்கு உரிய திருவுரு. இந்திரை - இலக்குமி. பாரதி - சரசுவதி. 21. பொருக்கென - விரைவாக. தரு - மரம். தக்கிண திசை - தெற்கு. மரு - மணம். உத்தரம் - வடக்கு. 22. கோது - குற்றம். குந்தாயுதம் - குந்தாலி. சீதம் - குளிர்ச்சி. சரசு - பொய்கை. அம்புயம் - தாமரை. 23. ஏகாக்கரமனு - ஓர் எழுத்து மந்திரம் ஆகிய பிரணவம்: "ஓம்" என்பது. மரு - மணம். வெகுளி - கோபம். 24. வேந்து - அரசன். குந்தம் - குந்தாலி. தடம் - பொய்கை. முண்டகம் - தாமரை. 25. குளன் - தடாகம். அசரீரி - வானொலி. மந்திர வுரு - மந்திர செபம்.

பன்னிரண் டாண்டிவ் வாறு போயபின் பதின்மூ வாண்டின்
மன்னிய தெறுக்காற் றிங்கண் மதிவளர் பக்க மைந்தாய்ச்
சொன்னநற் றிதியி னுத்தி ராடநா ளுசனன் வாரம்
தன்னினத் தடத்தி னுப்பட் டயங்குமம் புயங்க டம்மில் (26)

சகத்திர விதழ்சூழ் செய்ய தாமரைப் பொகுட்டிற் றோன்றி
மிகுத்தபொன் னணிக ளோடு விளங்குபொன் னுடை மின்ன
அகத்தெழு முவகை பொங்க வருள்விழி யிலகத் திங்கள்
முகத்தெழிற் கஞ்சி யோட முறுவல்கொண் டெதிரின் வந்தே (27)

அச்சுதன் றன்னை நோக்கிப் பணிந்தெழுந் தங்கை கூப்பிப்
பச்சைமா மலைபோன் மேனிப் பரமனே நின்னை யன்பால்
இச்சைவைத் தேத்தும் பத்தர்க் கெளியனென் றறிந்தே னென்னுப்
பொய்ச்சலில் கிளவி யானன் குபசரித் தருகிற் போந்து (28)

என்பிழை பொறுத்தாள் வாயென் றிறைவியாங் கிசைத்து வானோர்
முன்புகல் லார மாலை முகுந்தனற் றோளிற் சேர்க்க
இன்பமுற் றவளை மார்பி னேர்பெற வேந்திச் சிந்தை
அன்புறச் சீநி வாச னுனதை யமரர் பார்த்தே (29)

**எண்சீர் விருத்தம்.**

அந்தரதுந் துமிமுழங்கி யாடிப் பாடி
யலர்மாரி பொலிந்துமகிழ் வானோர் தம்மைப்
பைந்துளவ மஞ்சரியா னோக்கி யிந்தப்
பதுமசர சிற்படிந்தோர் பவங்கள் பாற்றிச்

---

26. தெறுக்கால் திங்கள் - விருச்சிக மாசம் ஆகிய கார்த்திகை. மதி வளர் பக்கம் - சுக்கில பக்ஷம். திதி - நாள். உத்திராட நாள் - உத்திராட நட்சத்திரம். உசனன் வாரம் - வெள்ளிக்கிழமை. தடம் - பொய்கை. நாப்பண் - நடுவிடம். அம்புயம் - தாமரை. 27. சகத்திரம் - ஆயிரம். பொகுட்டு - மலர் நடுவிடம். திங்கள் - சந்திரன். முறுவல் - சிரிப்பு. 28. அச்சுதன் - திருமால். பரமன் - பெரியோன். " பச்சைமாமலை போன் மேனி "—ஆழ்வார் திருமொழி. பொய்ச்சல் - பொய்த்தல். கிளவி - மொழிகள். 29. இறைவி - திருமகள். இசைத்து - சொல்லி. கல்லார மாலை - செங்கழுநீர் மலர் மாலை. முகுந்தன் - திருமால். ஏர் - அழகு. சீநி வாசன் - திருமகள் வாழும் மார்பன். அமரர் - தேவர்கள். 30. துளவ மஞ்சரியான் - துளசி மாலை யணிந்தவன். படிந்தோர் - நீராடினவர். பவம் - பிறவியில் செய்த பாவம். பாற்றி - ஓட்டி.

சிந்தைநுத லியவெல்லாம் பெறுவ ரென்றே
செப்பியுவ ணன்றேளிற் சேர்ந்து சேட
விந்தமடைந் துயர்திருக்கோ னேரி மாடே
விரும்படியர்க் கருள்புரிவான் மேயி னானே. (30)

ஆதியான் புகல்பதும சரசின் மூழ்கு
மவர்பிறந்தை தொறுமியற்றுந் தீமை யெல்லாம்
சோதியான் முனமிருள்போ னீவி நாளுஞ்
சுகம்பெறுவ ரெனவாங்கி ரசன்வ சிட்டன்
கோதினு ரதன்புலகன் கும்ப யோனி
கோதமனத் திரிமுனிவன் றெடக்கத் தோராங்
கோதினு ரதன்பெருமை யுரைக்க டங்கா
தெனவுரைத்துப் பின்னுமகிழ்ந் துரைசெய் வானே. (31)

நலந்திகழுஞ் சுகமுனிவன் பண்டை ஞான்று
நான்முகனு லுப தேசம் பெற்றே கொன்றை
மிலைந்தசிவன் றனினுமதி பத்தி மேவி
விளங்குசிறு பருவமுறுங் காலத் தேயும்
மலிந்தவெழிற் றிருமகடாய் மால்பி தாவம்
மாலடியர் சுற்றமக லுலக மெல்லாம்
பலந்தருசு தேசமெனக் கருதி யெங்கும்
பற்றறவா னந்தமொடு படருங் காலை (32)

அருக்கனிடத் தணவளவும் விரும்பி யாங்க
ணணுகவவன் கருணைமிகு விழியா னேக்கிப்
பெருக்கமகிழ்ந் துயருமறை நான்க தாகப்
பிரித்துரைத்தோன் பெருமகனென் றறிந்து சிந்தை
உருக்கமுற வுரைசெய்வான் முதலா முன்ன
முரைத்தவாச் சிரமவழி தபாத வண்ணம்
இருக்குமுனி யேமகவி லர்க்குத் தான
மெக்கியங்கள் செயினுமுத்தி யில்லை யென்றே (33)

---

உவணன் - கருடன். சேடவிந்தம் - திருமலை. 31. பிறந்தை - பிறப்பு. சோதியான் - சூரியன். நீவி - போக்கி. கும்ப யோனி - அகஸ்திய முனி. 32. மிலைந்த - அணிந்த. அதிபத்தி - மிக்க அன்பு. சுற்றம் - உறவினர். 33. அருக்கன் - சூரியன். அணவ - அணுக. ஆச்சிரம வழி - மக்கள் வாழ்க்கை நான்கு நிலைகள். தபாத - தவறாதபடி. மகவிலர் - பிள்ளை யில்லாதவர். எக்கியம் - யாகம்.

கலைபலவு மியம்புகையாற் கடிதிற் பூமி
கலந்தனது பிதிர்க்கடன்கள் கழித்தி யென்று
சொலவறிந்து சுகமுனிமண் ணுலகின் மேவித்
துனைந்துநனி முக்கடனுந் தீர்த்தற் குன்னி
உலைவறுதன் சாயையையோர் சுகனாய்ச் செய்தே
யுலகின்விடுத் துதயனிடஞ் சேர வந்த
நலனுறுசா யாசுகனு முயர்வி யாத
நாமவிரு டியையடைந்து பணிந்து போற்றி (34)
இணைபகர்தற் கரியவொரு கனியை மன்ற
லெய்திமகா ரீன்றளித்தங் குறையா நின்ற
குணநயவந் தணர்களுக்குந் தனது சீர்சால்
குமாருக்கும் பிரமவித்தை தனைப்போ தித்துத்
தணிவறுமெய்த் தவர்கள்புகழ் வியாத னாலே
தனையொவ்வா விண்ணெழுந்தே யகன்று நீண்ட
அணிதிகழஞ் சனகிரிவாழ் சீநி வாச
னழகியநன் மகிமைதெரிந் தக்கா னத்தே (35)

எழுசீர் விருத்தம்.

நலந்தருந் தனது சூழலி னுயரு
நான்மறை விதிமுறைப் படியே
மலர்ந்தசெங் கமல மலர்மகண் மருவு
மார்பனை யெழுந்தரு ளச்செய்
திலங்குதன் குமா ரந்தண ரோடு
மெழிற்றிரு மலையடைந் தவணில்
துலங்குகோ னேரி படிந்துமா யவனைத்
தொழுதுநின் றேத்தியே சொல்வான். (36)

சுத்தசாத் தீக பரமனே பணியுந்
தொண்டர்கட் கிரங்கியே கருணை
வைத்துநா டோறு மினிதுறக் காக்கு
மாதவா சீதரா முதலாம்

34. இயம்புகை - சொல்லுதல். துனைந்து - விரைந்து. முக்கடன் - தேவ பிதிர் ஆசாரிய கடன்கள். சாயை - நிழல். உதயன் - சூரியன். 35. கனி - கன்னிகை. மன்றல் - கல்யாணம். மகார் - பிள்ளைகள். அஞ்சனகிரி - திருமலை. 36. சூழல் - இருப்பிடம். மலர் மகள் - இலக்குமி. 37. சாத்தீக - சத்துவகுணமுடைய. சீதரன் - சீநிவாசன்.

கத்தனே தமியன், புத்திரர் களுக்குங்
கலந்துடன் வருமறை யவர்க்கும்
எத்திசா முகமும் புகழுமுன் விழவி
னியல்புறும் பணிகளை யெல்லாம் (37)
பரம்பரை யியற்றி வரவுநன் கிந்தப்
பண்புறு தலத்தினுக் கென்பேர்
வரும்படி யாயும் வரந்தரு கெனவம்
மாயனவ் வரந்தரப் பெற்றே
விரும்பிய சாயா சுகன்கும ரருக்கும்
வேதியர் தமக்குமால் பணிசெய்
தரும்பத மடைவீ ரெனப்பணித் தருளி
யகத்திலா னந்தமீ தூர (38)
பேதமின் ஞான சுகமுனி யான்முன்
பிரதிட்டை செய்தகண் ணனையுங்
மேதகு நீலாம் பரனையும் பதும
சரசையும் விருப்புறப் பணிந்து
போதன்வா ழுலகிற் புகுந்தன னென்று
பொய்யறு தேவல கப்பேர்
வேதியன் றனக்கு விளங்குறத் தேவ
தரிசன முனிவிளம் பினனே. (39)
என்றுயர் சூத முனிவனை மிசம்வா
ழிருடியர்க் கிசைத்தன னிதனை
நன்றென வுவவாச் செவிவயி னேற்போர்
நவையற வாழ்ந்துபின் மேலாம்
மன்றலங் துளவத் தற்பரன் பதத்தின்
மருவுவ ரிவ்வெலா மேன்மை
ஒன்றிய பதும மெனப்பெயர் பூண்ட
வொப்பிகு புராணமோ திடுமால். (40)

சூலி நரசிங்க உபாசனையும் பதுமசரசின்
பெருமையும் சுகர் சரித்திரமும் உரைத்த அத்தியாயம் முற்றிற்று.

---

தமியன் - தனியன். திசாமுகம் - திக்குகள். பணி - கைங்கரியம். 39. பேதம் - வேறுபாடு. பிரதிட்டை - நிறுவுதல். நீலாம்பரன் - நீல உடை அணிந்த பலராமன். போதன் - பிரமன். 40. உவவா - உவந்து. நவை - குற்றம். மன்றல் - மணம்.

## 54. சுவர்ணமுகி கல்லியை நதி மகிமை உரைத்த அத்தியாயம்.

### கலிநிலைத்துறை.

சுரத்து வாசமா யுறைநறுஞ் சுருதிநூ றெருண்ட
பரத்து வாசமா முனிமணிப் பணியணி சம்பு
சிரத்து வாசவெங் குருதிசிந் திடவிலாற் புடைத்த
கரத்து வாசவன் மைந்தனை நோக்கியே கழறும். (1)

முன்னர் நன்னதி மகிமைக ளனைத்தையு முறையால்
நின்ன கங்கொள நிகழ்த்தினே மவற்றினிற் கங்கை
என்னு மாற்றுட னெழுமனைசேர் சங்கம மகிமை
தன்னி னும்முயர்ந் தெழிற்கதி தருவதாய் விளங்கும் (2)

நலங்கொ ளுஞ்சொன்ன முகிநதி யோடுகல் லியையென்
றிலங்கு மாநதி கூடுசங் கமத்தினி லெய்தி
வலங்கொ ணேமியான் றிருக்கழன் மனத்துறக் கருதித்
துலங்க மூழ்குநர் பவங்களெல் லாந்தொலை வுறுமே. (3)

அத்த லத்தினுக் கரைகுறை யிரண்டியோ சனையின்
உத்த ரத்தினின் யோசனை யொன்றினும் பர்கடாழ்
சுத்த வேங்கட கிரியெனச் சொலும்பெயர் பெற்று
வித்த கஞ்செறி யறநதி கட்கெலா மேலாய் (4)

விளங்கு வேங்கட மலைமிசை வேரியங் கமலன்
களங்க றுத்தவ னிந்திரன் முதற்கட வுளரும்
துளங்கு தெண்டிரை சூழுல கத்தில்வாழ் பவரும்
உளங்க னிந்துசே விக்கவிந் திரையுட னெடுமால் (5)

---

1. சுரம் - ஒலி வகைகள். சுருதி நூல் - வேதம். தெருண்ட - தெளிந்த. பணிப் பணி - சர்ப்ப ஆபரணம். சம்பு - சிவன். சிரம் - தலை. குருதி - இரத்தம். வாசவன் மைந்தன் - இந்திரன் புதல்வனாகிய அருச்சுனன். (பாரதம் - அருச்சுனன் தவநிலைச் சுருக்கம்). 2. மகிமை - சிறப்பு. அகம் - உள்ளம். சங்கமம் - சேரும் இடம். 3. வலம் வெற்றி. நேமியான் - சக்கராயுதம் உடைய திருமால். திருக்கழல் - திருவடிகள். பவம் - பிறப்புக்கள். 4. உத்தரம் - வடக்கு. உம்பர்கள் - தேவர்கள். வித்தகம் - ஞானம். 5. வேரி - தேன். கமலன் - பிரமன். களங்கறுத்தவன் - கழுத்து நஞ்சக் கறைபால் கருமையாகிய சிவன். இந்திரை - இலக்குமி.

அடிய வர்க்குறு தீவினை யனைத்தையுங் கடிந்து
கடிதி னிட்டகா மியங்களைக் கருணையோ டளித்து
நெடிய வானந்த நிலயமா னத்துணிற் கின்றான்·
வடிகொள் வேலினு யெனவிச யன்மிக மகிழ்ந்தே (6)

எழில்கொள் வேங்கட மெனும்பெயர் வரைமிசை யிருந்த
பழும றைப்பொரு ளாகிய பரமமூர்த் தியின்சீர்
முழுது மென்றனக் குவப்பொடு மொழிகெனப் படிமேல்
தொழுது வேண்டலும் பரத்துவா சன்பினுஞ் சொல்வான். (7)

எழுசீர் விருத்தம்.

ஆதியி லேன வுருவெடுத் தம்பி
னாழ்ந்ததி துயரொடுங் கிடந்த
பூதல மடந்தை வெள்ளிய கோட்டிற்
பொலிதரப் பொறுத்துமுன் போல்வைத்
தேதமின் மான தோத்தர மலைநீ
டெண்கிரி மேருமால் வரையென்
றோதுறு சயில மனைத்துமா தார
முறவுளக் கருணையா லமைத்து (8)

விடங்கலு மெயிற்றுப் பஃறலைப் பாந்தள்
வேந்தனைப் பொறுக்குமா பணித்துத்
தடம்பெருங் கமட வுருவெடுத் தெவைக்குந்
தானுமா தாரமாய்த் தாங்கி
அடுந்திற லமரர் நிசிசரர் மனித
ரடல்கெழு மிருகமா பறவை
யொடுந்தரை யூர்வ நிற்பன வெனவோ
தெழுவகைத் தோற்றமு முதவி (9)

---

6. இட்டகாமியங்கள் - விரும்பியவை. ஆனந்த நிலயமானம் - விமானத்தின் பெயர். வடி - கூர்மை. விசயன் - அருச்சுனன். 7. வரை - மலை. பழமறை - தொன்மையான வேதம். 8. ஏனம் - பன்றி. அம்பு-நீர் (இங்குக்) கடல். பூதல மடந்தை - பூமிதேவி. கோடு - கொம்பு. பொறுத்து - தாங்கிக் கொண்டு. ஏதம் - குறை. எண்கிரி - அஷ்டகுல பர்வதங்கள். சயிலம் - மலை. 9. எயிறு - பல். பஃறலைப்பாந்தள் வேந்தன் - பல தலைகளையுடைய ஆதிசேடன். பொறுக்குமா - தாங்கும்படி. பணித்து - விதித்து. கமடம் - ஆமை. திறல் - வலிமை. நிசிசரர் - அரக்கர். எழுவகைத் தோற்றம் - தேவர் முதலாகக் கூறிய எழுவகைப் பிறப்புக்கள்.

கவினவக் கோணாட் களையொளி யுறவே
காலசக் கரத்தினி னிறுவிச்
சுவணபூ தரத்தைக் கதிதவ ரூமற்
சுற்றிவான் சுலாம்படி யியற்றி
நவையறு கால விவரமு முணர்த்தி
நவின்மறை முதற்பல கலைதந்
தவரவர்க் குரிய தொழில்வழி நடக்கு
மடைவுகுன் றதருள் புரிந்து (10)

அந்தரி யாமி பிறப்பிலி யாகி
யமருவோன் கற்பங்க டோறும்
வந்துதன் னிச்சை யாலவ தரித்தெவ்
வுலகையு மகிழ்ந்துகாத் தளிக்கும்
சுந்தர வரியிப் பிரமகற் பத்திற்
றுளக்கில்வெண் கேழலாய்த் தோன்றி
நந்தலில் வேங்க டாத்திரி தனிற்பூ
நங்கையை மடிமிசை யிருத்தி (11)

எவ்வுல கவர்க்குஞ் சேவைதந் திருக்கின்
றனத ஞலியல் பெரியோர்
செவ்விய சுவேத வராககற் பமெனச்
செப்புவா ரப்பெரு மானைக்
கொவ்வையங் கனிவாய் வாணிதன் கொழுநன்
குறுகியா ராதனஞ் செய்து
பவ்வநீ ராடை நிலமகள் கொழுநா
பரமனே யெனப்பணிந் தேத்தி (12)

---

10. கவின் - அழகு. நவக்கோள் - ஒன்பது கிரகங்கள். நாட்கள் - நட்சத்திரங்கள். சுவண பூதரம் - பொன் மலையாகிய மேரு. சுலாம்படி - சுற்றும்படி. நவை - குற்றம். அடைவு - முறைமை. 11. அந்தரியாமி - உயிர்க்குள் உறைபவன். கற்பம் - ஊழிக் காலம். அரி - திருமால். துளக்கு - கலக்கம். வெண் கேழல் - சுவேத வராகம் (வெண் பன்றி). நந்தல் - குறைவு. பூநங்கை - பூதேவி. 12. கொவ்வை - கோவை. வாணி - சரசுவதி. கொழுநன் - நாயகன். ஆராதனம் - பூசனை. பவ்வம் - கடல்.

இப்பெரு முருவங் கண்டுசே விப்ப
வெவர்களும் வெருவுவ ரதனால்
ஒப்பரும் பரனே சிறியநற் சாந்த
வுருவுகொண் டருளென வேண்டிச்
செப்பவங் ஙனமே சேவைதந் திருக்கின்
றனெனத் திறல்விச யனுக்கு
முப்பகை கடிந்த பரத்துவா சப்பேர்
முனிவனன் குறமொழிந் தனனே. (13)

என்றுமெய்ச் சூத முனிவனே மிசம்வா
ழிருடியர்க் கிசைத்தன னிதனை
நன்றுறக் காந்த மெனும்புரா ணத்தி
னவையறு தீர்த்தகாண் டத்தின்
மன்றலங் கமல மலர்மலி சுவண
முகிநதி மான்மியந் தனிலே
துன்றலை வேலை யெழுமமு தத்தின்
சுவையென வினிதுசொற் றிடுமே. (14)

சுவர்ணமுகி கல்லியை நதி மகிமை உரைத்த அத்தியாயம் முற்றிற்று.

## 55. சங்கன் சரித்திரமும் அஞ்சனை வரம் பெற்றதும் உரைத்த அத்தியாயம்.

எழுசீர் விருத்தம்

மெய்த்தவப் பரத்து வாசமா முனிவன்
விசயனை நோக்கியே மீண்டும்
சித்தமுண் மகிழ்ந்து செப்புவான் மேனாட்
கேகய தேசமா நிருபன்
உத்தமச் சுருதா பிதானனென் கின்றோ
னுதவிய சங்கனு மாசன்
பத்திசெய் தரியைக் காணவுள் வேட்டுப்
பகாரு மகம்பல வியற்றி (1)

13. வெருவுவர் - அஞ்சுவர். முப்பகை - காமம், வெகுளி, மயக்கம் ஆகிய மூன்று தீக்குணங்கள். 14. மன்றல் - மணம். வேலை - கடல். 1. நிருபன் - அரசன். அரி - திருமால். வேட்டு - விரும்பி. மகம் - யாகம்.

நலமுறு விரதங் களையனுட் டித்து
நான்மறை யவருள மகிழப்
பலகொடை தானம் பரிந்துளம் புரிந்தும்
பரமனைக் காண்கிலா னாகித்
தலமதின் மயங்கி யிருந்துழி யெங்குந்
தனியனா யிருக்குமெம் பெருமான்
அலைவறு விசும்பின் மிசையசரீரி
யாகவே கருணையோ டறையும். (2)

வேந்தனே பீழை யொழிதியென் றயர்வில்
விழுமிய வேங்கடாத் திரியின்
சேர்ந்துநீ தவஞ்செ யென்னலுங் கேட்டுச்
சிந்தையின் மிகமகிழ் வெய்திப்
பூந்தரு மலியங் நாடுநன் கோம்பப்
புதல்வன்வச் சிரன்றனக் கெழில்சேர்
காந்திசெய் மகுடம் புனைந்துயர் கருட
மலைமிசைக் கடிதுசென் றனனால். (3)

சென்றுகோ னேரி படிந்ததன் கரையிற்
றியானயோ கத்தினி திருப்பத்
தென்றமிழ் முனிவ னாதிய தவத்தோர்
தேவர்தங் குருமுத லோரும்
மன்றளந் துளவ மாலைசிற் பரனை
மனத்திடை வழுத்தியாங் குறலும்
வென்றிகொ ளேந்தல் கண்டடி பணிந்து
விருப்பொடு முகமனன் குரைத்தே (4)

2. மறையவர் - வேதியர். உளம்புரிந்தும் - தியானித்தும். விசும்பு - வான். அசரீரி - வான்மொழி. அறையும் - சொல்லுவான். 3. பீழை - துன்பம். அத்திரி - மலை. விழுமிய - சிறந்த. பூந்தரு - மலர் மரம். ஓம்ப - பாதுகாக்க. காந்தி - ஒளி. மகுடம் - கிரீடம். 4. தென் தமிழ் முனிவன் - அகத்தியன். தேவர் குரு - பிருகஸ்பதி. மன்றல் - மணம். சிற்பரன் - ஞான வடிவாய முதல்வன். ஏந்தல் - ஆண்டகை. முகமன் - உபசாரமொழி.

விருந்தா யவண்மே யிருந்தரி புகழை
விருப்பொடு வழுத்துற வெழிலாம்
கருந்தட நெடுங்கட் கமலைவாழ் மார்பன்
கருத்துவந் தவரெதிர் தோன்றி
அருந்தவ ரெவர்க்கும் வேண்டுவ தளித்துத்
தவம்புரி சங்கனு மாசைத்
திருந்துற நோக்கி யிம்மையம் மைக்குஞ்
சிறப்புற வரமருள் புரிந்தே (5)

கண்ணினுக் குருவந் தோன்றிலா தவணிற்
காந்தன னுகையி னாலே
மண்ணினிற் றிருவேங் கடமலை தனக்கும்
வளங்கொள்கோ னேரியென் றுரைக்கும்
புண்ணிய தீர்த்தந் தனக்குநேர் பிரமாண்
டத்தினும் புகல்வதற் கில்லை
திண்ணிய திகிரிச் சீநிவா சனைநேர்
தெய்வமு மில்லையென் றுரைத்தே (6)

பின்னரு நவில்வா னஞ்சனை யெனும்பெண்
பெருந்தவ மியற்றிடுங் காலை
மன்னுநன் மதங்க மாமுனி யவளை
மகிழ்ச்சியோ டினிதுற நோக்கி
என்னகா ரணத்தாற் றவஞ்செய்கின் றாயென்
றிசைப்பவோர் புத்திரன் வேண்டி
இந்நிலத் தரிய தவம்புரி கின்றே
னென்னலுங் கருணையுண் மலிந்தே (7)

வேங்கட வரையின் மேவியா காய
கங்கையின் விளங்குற மூழ்கிப்
பாங்குற விருந்தா சுகன்றனைக் குறித்துப்
பழுதறு தவஞ்செய்தி யானல்

---

5. விருந்தர் - புதியோர். வழுத்துற - பரவ. கமலை - திருமகள். இம்மை யம்மை - இப்பிறவி மறு பிறவி. 6. காந்தனன் - மறைந்தனன். திண்ணிய - வலிய. திகிரி - சக்கராயுதம். 8. வரை - மலை. ஆசுகன் - வாயுதேவன்.

ஓங்கிய திறல்சேர் புத்திர னினக்குற்
பவிப்பனென் றுரைத்திடக் கேட்டுத்
தேங்கமழ் குழலம் முனிவனைப் பணிந்து
சென்றுவேங் கடமலை சேர்ந்தே (8)

புகலுமா காய கங்கையிற் படிந்து
புலனவித் தருந்தவஞ் செயவா
சுகனெதிர் தோன்றி மிகுவல னுடைய
சுதனினக் கெய்திடு மென்றே
அகமகிழ் வுடனே வரந்தரப் பெற்றே
யமர்ந்துளி மறைகணான் கென்னப்
பகர்முனி தோன்றி யுலகெலாம் புகழும்
பாலனைப் பெறுவையென் றறைய (9)

அஞ்செவி மடுத்தவ் வஞ்சனை பெரியோ
ரருணனி யடைந்தன பென்ன
நெஞ்சக முவந்தங் கருந்தவ முஞற்றி
நினைத்தது பெற்றன ளெனவே
விஞ்சிய தவஞ்செய் பரத்துவா சப்பேர்
மெய்ம்முனி யகமிக வுவந்து
வஞ்சமில் விசய னினிதுறக் கேட்க
வழுத்தின னன்பொடு மாதோ. (10)

எனவுயர் சூத மாமுனி சௌன
காதியர்க் கிசைத்தன னிதனைக்
கனைகடற் புவியின் வாழ்பவர் தெளியக்
கழறுமீ ரொன்பதென் றுரைக்கும்
இனிதுறு புராணங் களினொன்றென் றியம்ப
வியைபுறு மிசைபெறு காந்தம்
தனிநலம் பெருகும் வேங்கட மகிமை
சாற்றிய விடத்தினிற் சொலுமே. (11)

---

தேங்கமழ்குழல்-(அன்மொழித் தொகை)—அஞ்சனா தேவி. 9. படிந்து-நீராடி. புலனவித்து - சத்தபரிச ரூபரச கந்தங்களாகிய விஷயங்களை நுகராது அடக்கி. ஆசுகன் - வாயுதேவன். வலன் - வன்மை. சுதன் - மகன். மறைகள் நான்கென்னப் பகர்முனி—வியாசர். 10. உஞற்றி - உழைத்துச் செய்து. செவி மடுத்து - கேட்டு.

**சங்கன் சரித்திரமும் அஞ்சனை வரம் பெற்றதும் உரைத்த அத்தியாயம் முற்றிற்று.**

## 56. மார்க்கண்டர் கருடனால் திருமலை அடைந்த அத்தியாயம்.

### கலிவிருத்தம்.

மேதையோ ராய்நனி விளங்கு சௌனகர்
ஆதியா முனிவரஞ் சலிசெய் தின்னமும்
கோதிலா வேங்கட மகிமை கூறெனச்
சூதமா தவனெதிர் சொல்வ தாயினன். (1)

மாசறு தவத்தின்மார்க் கண்ட மாமுனி
ஆசையி னருள்பிதா வனையை யஞ்சலித்
தோசையுற் றிடுகட லுலகிற் றிப்பிய
தேசமெய் துதற்கியான் சிந்தை யெண்ணினேன். (2)

விடைதரு வீரென வேண்டி யேமலர்
அடிமிசை பணிதலு மவர்க ளய்யவெம்
முடனிருந் தெங்களுக் குவப்ப வேவலிப்
படியினீ செய்துயர் பயன்க ளெய்துவாய் (3)

உன்னையாம் பிரிந்துயி ருய்கி லோமெனச்
சொன்னதாய் தந்தையை நோக்கிச் சொல்லுவான்
என்னபே றெய்தினு மீன்ற மூப்பினர்
இன்னரு ளின்றியே குதற காதென (4)

பெரியவர் கிளத்துத லானற் பேர்பெறு
திருமலி தலமுடன் றீர்த்த யாத்திரை
விரைவினிற் சென்றுநம் பிதிர்கள் மேன்மையின்
மருவயா னினைத்தனன் மனத்தி னுகையால் (5)

நன்றென விடைதரி னன்னெ ராண்டினுட்
சென்றுமீள் குவனெனச் செப்பக் கேட்டருள்
ஒன்றிய மனத்தவ ருடம்ப டச்சொலீஇ
மன்றலார் மலரடி வணங்கி வாழ்த்தியே (6)

---

1. மேதையோர் - அறிஞர். அஞ்சலி - வணக்கம். 2. அனை - தாய். திப்பியம் - தெய்வத் தன்மை. 3. ஏவல் - கட்டளை. படி - பூமி. 4. உய்கிலோம் - பிழைத்திருக்க மாட்டோம். பேறு - பெறும் உறுதிப் பொருள். மூப்பினர் - முதுமையாளர். 5. கிளத்துதல் - கூறுதல். பிதிர்கள் - குடிமுதல் தெய்வம். 6. மன்றல் - மணம்.

அந்தர நெறியதா யடைந்து காசியின்
வந்தடைந் துயர்வர நதிப டிந்தெழில்
இந்தணி சடையன்பா லிருந்து சில்பகல்
பிந்திவிண் வழிபினும் பெயர்ந்து போகுழி (7)

ககபதி வரவெதிர் கண்டு போற்றியிச்
சகமதி னெங்ஙனஞ் சார்கின் றாய்மிகுந்
தகையுறும் புண்ணியத் தலமெங் குள்ளது
புகலென வுவப்பொடு புகல்வ தாயினான். (8)

தென்றிசை தனிலெழில் சிறந்த வேங்கடம்
என்றொரு கிரியுள ததனி லெவ்வமில்
நன்றறி முனிவர்விண் ணாட ருந்தவத்
தொன்றிய மனத்தரா யுறைவர் நாளுமே. (9)

புண்ணியப் புனல்பல பொருந்தி யுள்ளதவ்
வெண்ணரு நதிக்கெலா மிறைய தாயுயர்
கண்ணகன் சாமிபுட் கரிணி யென்னவோர்
தண்ணறுந் தடமெழில் சார்ந்து வைகுமால். (10)

அத்தடத் தினுக்குமே லாசையின் றொளிர்
சுத்தவெள் வராகமாந் தூய மாயனுஞ்
சித்தமுள் ளுவந்துநஞ் சீநி வாசனுங்
கத்தனுந் தொழும்பர்மேற் கருணை காட்டியே (11)

இனிதுறச் சேவைதந் திருக்கின் றான்றனிப்
பனிவரைக் கேகியந் நீர்ப டிந்துயர்
தனிமறை முதலையாந் தரிசிப் போமென
வினவிமார்க் கண்டனு மிகவி ருப்பொடே (12)

---

7. அந்தரம் - வான். வரநதி - கங்கை. இந்து அணி சடையன் - சந்திரனைத் தலையில் அணிந்த சிவன். விண் வழி - ஆகாச மார்க்கம். 8. ககபதி - பறவையரசு ஆகிய கருடன். சகம் - உலகு. தகை - சிறப்பு. 9. எவ்வம் - குறை. விண்ணாடர் - தேவர். 10. புண்ணியப் புனல் - தீர்த்தம். இறை - தலைவனை. கண்ணகல் - இடம் அகன்ற. தடம் - பொய்கை. 11. மேல் ஆசை - மேற்குத் திசை. வெள் வராகம் - சுவேத வராக மூர்த்தி. கத்தன் - தலைவன். தொழும்பர் - அடியவர். 12. வரை - மலை. மறை முதலை - வேதத் தலைவன் ஆகிய கடவுள்.

கடிதின்வேங் கடமலை கலந்து பொன்னிறப்
புடர்சிறைப் பன்னகப் பகைவன் மேலன்பு
தொடரவங் குளவளந் துருவி நோக்கியே
இடரினி யிலையென விருந்திட் டானரோ. (13)

என்னநை மிசவனத் திருந்த வேதியர்க்
கின்னறீர் சூதனங் கிசைத்த னன்னிதை
இந்நிலந் தன்னின்மார்க் கண்ட மென்றுபேர்
மன்னிய புராணமாண் புறவ ழுங்குமே. (14)

மார்க்கண்டர் கருடனால் திருமலை அடைந்த அத்தியாயம் முற்றிற்று.

## 57. மார்க்கண்டரும் சுத்தரும் ஸ்ரீநிவாசன் சேவை பெற்ற அத்தியாயம்.

அறுசீர் விருத்தம்.

பண்டைநூன் முழுதுந் தேர்ந்த பழுதறு சூத னென்னும்
ஒண்டவன் பின்னுஞ் சொல்வா னுப்பின்மார்க் கண்டன் முந்நீர்
உண்டமா தவன்மா ணுக்க னுடன்கலந் தவனின் மேன்மை
கொண்டதீர்த் தங்க ளெல்லாங் கோதறக் குறுகி யாடி (1)

சாமிபுட் கரிணி தோய்ந்து தகைபெறு வெள்வ ராக
நாமநற் பரனைப் போற்றி நளினையை மார்பின் வைத்த
தாமரைக் கணனைத் தாழ்ந்து தவறறு மறையா லேத்தி
ஓமெனும் பொருளே நின்னை யல்லதொன் றில்லை யென்றே (2)

வந்தடி பணிந்தே னென்னை மலர்க்கணா னோக்கி நாளுஞ்
சிந்தைவைத் தாள்வா யென்று செப்பிமுன் னிற்பச் சீரார்
விந்தைதன் பதியு வந்து விரும்பிய துரைசெ யென்ன
ஐந்தடக் கியமார்க் கண்ட னன்புமீ துறச்சொல் வானே. (3)

13. கடிதின் - விரைவில். பன்னகம் - பாம்பு. பன்னகப் பகைவன் - கருடன். துருவி - ஆராய்ந்து. இடர் - துயர். 14. இன்னல் - துன்பம். 1. பழுது - குற்றம். ஒண்டவன் - சிறந்த தவசி. முந்நீர் - கடல். மாதவன் - அகத்தியன். கோது - குற்றம். குறுகி - அடைந்து. ஆடி - முழுகி. 2. தகை - சிறப்பு. நாமம் - பெயர். பரன் - கடவுள். நளினை - தாமரை மலரில் எழுந்தருளியுள்ள திருமகள். 3. விந்தை - இலக்குமி. பதி - நாயகன். ஐந்து அடக்கிய - ஐந்து புலன்களையும் கட்டுப்படுத்திய.

மணங்கமழ் துளவ மாலை மாதவ முன்னா னுன்னை
வணங்கிமிக் காயுள் பெற்று வேண்டுவ வரம்பெற் றுய்ந்தேன்
அணங்கர விறைவன் றாங்கு மவனியி னடிகள் பாதத்
திணங்குமன் பிடைவி டாதிப் போதருள் புரிதல் வேண்டும். (4)

என்றடி வணங்கி யேத்த வீறிலா வாதி தேவன்
நன்றெனக் கருணை யோடு மவ்வர நல்கித் தீமை
வென்றமார்க் கண்ட னென்னும் வேதிய னுடனே வந்த
தென்றமிழ் முனிக்கன் பாய சீடனைச் சிறப்ப நோக்கி (5)

என்பத சேவை கண்ணுற் றேத்திய பரிசி னானீ
உன்பவ மெல்லா நீவி யுயர்வுடைச் சுத்த னாய்
அன்புறக் குரவன் சூழ லடைதியென் றருள லோடும்
இன்புறத் தொழுது போயங் கிருந்தவ முனிவர் தம்மை (6)

பணிதலு மவர்க ணோக்கி யாவனீ பகரு கென்ன
அணிகிளர் சுத்த னந்த வந்தணர் களையு மாங்கு
துணையென வழைத்து வந்த தூயமார்க் கண்ட னென்னும்
இணையிலான் றனையு நோக்கி யியம்புவ தாயி னானால். (7)

எழிலுறு கச்சி யூர்யா னிருப்பிட மிலம்பாட் டாலே
அழகுறு நித்ய கன்ம மனைத்தும்விட் டலைந்து தீய
இழிவுறு துர்த்தா னம்பெற் றென்பெருங் குடும்பந் தன்னைப்
பழுதற நாள்க டோறும் பசிதவிர்த் தினிது காத்தேன். (8)

அங்குள மறையோர் நிந்தை யறையவென் மனைவி கேட்டுச்
செங்கைசென் னியிற்கு வித்துத் தெருமா லெய்தி நோக்கி
மங்கிய குணப கன்மக் குரியவாம் வரிகோ வாதி
சங்கையி றீய வாய தானநீ பெற்றெறந் நாளும் (9)

---

4. மாதவ! - இலக்குமி நாதனே! உய்ந்தேன் - பிழைத்தேன். அணங்கு அரவு இறைவன் - ஆதிசேடன். அவனி - பூமி. இணங்கும் - பொருந்தும். 5. ஈறு - முடிவு. வேதியன் - அந்தணன். தென்றமிழ் முனி - அகஸ்தியர். சீடன் - மாணாக்கன். சேவை - காட்சி. 6. பரிசு - தன்மை. பவம் - பிறப்பு. நீவி - நீங்கி. குரவன் - ஆசாரியன். சூழல் - இருப்பிடம். 7. இணையிலான் - ஒப்பில்லாதவன். 8. இலம்பாடு - வறுமை. துர்த்தானம் - இழிந்த வகையான பொருட் கொடை. பழுது - குற்றம். 9. நிந்தை-பழி. சென்னி - தலை. தெருமால் - மனக் கலக்கம். குணபம் - பிணம். குணபகன்மம் - பிரேதச் சடங்கு. வரி - அரிசி. கோ - பசு. சங்கை - எண்ணிக்கை.

எங்களுக் கிடலா லன்றோ விளிவுறும் பவத்துக் காளாய்த்
துங்கவே தியரெல் லாருந் தூற்றுதல் செயவும் பெற்றோம்
இங்கிவை யனைத்து நீக்கி யெழிற்றிரு மலையி னெய்திச்
சங்குசக் கரக்கை யானைத் தரிசனை யன்பிற் செய்தார் (10)

பவவினை நீங்கி யிட்ட காமியப் பயன்கள் பெற்றுப்
புவனியின் வாழ்ந்து பின்னர்ப் பொருவில்வீ டடைவ ரென்றே
அவமறு முதிஞர் சொல்வ ராதலா லவணீ சென்று
உவமையில் பெருமாற் போற்றி னுய்யலா மென்னக் கேட்டே (11)

அக்கணத் துயருஞ் சொன்ன முகிநதி யணுகி யாங்கண்
மிக்கவன் போடு கும்ப முனிகழல் விரும்பி யேத்திப்
புக்கவென் செய்கை யெல்லாம் புகலவம் முனிவ னென்னைத்
தக்கநற் கருணை பொங்குந் தடங்கணு லினிது நோக்கி (12)

வேங்கட மலைக்குச் சென்று விளங்குகோ னேரி தோய்ந்து
தேங்கமழ் துளவ மாலைச் சிரீதரப் பெம்மான் செய்ய
பூங்கழல் வணங்கி ஞனும் பவமெலாம் போக்கிச் சேடன்
தாங்குபே ருலகிற் சுத்த னெனும்பெயர் தருவ னென்றான். (13)

அந்தவா சகங்கேட் டிந்த மலைமிசை யணுகும் வேலை
நொந்தவெற் கடிகள் சேவை நொய்தினெய் தியதா னங்கள்
இந்திரை பதியைக் கண்ணு லெழிலுற வினிது நோக்கி
வந்தனை புரியப் பெற்றேன் மகிழ்ந்தவ னருளும் பெற்றேன். (14)

என்னவம் முனிவர் முன்ன ரேதமின் மார்க்கண் டேயன்
றன்னையன் பொடுபு கழ்ந்தே சாற்றியம் முனிவன் றன்னைப்
பின்னரு மினிது நோக்கிப் பேசுவா னகத்தி யன்பாற்
கன்னியந் துளவி னன்றன் காதையன் போடு கேட்டு (15)

---

10. பவம் - பாவம். தூற்றுதல் - பழித்தல். 11. புவனி - உலகு. பொருவு - ஒப்பு. அவம் - வீண். முதிஞர் - மூத்தோர். 12. கும்பமுனி - அகஸ்தியர். கழல் - திருவடி. 13. தேன்கமழ் - தேன் மணக்கின்ற. சிரீதரன் - ஸ்ரீனிவாச மூர்த்தி. சேடன் ஆதிசேடன். 14. வாசகம் - சொல். எற்கு - எனக்கு. நொய்தின் - விரைவில். இந்திரை - இலக்குமி. பதி - நாயகன். வந்தனை - வணக்கம். 15. ஏதம் - குற்றம். கன்னி - புதுமை : அழியாமை.

வளமலிந் துயருஞ் சொன்ன முகிநதி மருங்கிற் சின்னாள்
உளமகிழ்ந் திருந்த தாலவ் வொண்டவன் சீட னென்றே
ஒளிகிள ரபிதா னம்வந் துற்றதென் றுரைத்த லோடும்
தெளிவுற வினவல் செய்தச் செழுமுனி செப்ப லுற்றான். (16)

அரியநற் றவத்தான் மிக்க வகத்திய முனிவன் பாலும்
இருவருஞ் சொல்வோ மென்று வெழின்மலை யிழிந்து போந்து
தெருளுறு முனிவர் நாப்பட் சீருற விருந்த வந்தப்
பெருமுனி சூழ லெய்திப் பெட்புறப் பணித லோடும் (17)

தமிழ்முனி மார்க்கண் டப்பேர்த் தவனைநன் முகமன் கூறி
அமைவுறச் சுத்த னோடங் கமர்ந்தரு மருந்தே யென்ன
விமலமால் சரிதை யந்த மேதகு முனியாற் கேட்டுத்
தமருடன் கலந்தா னென்று சாற்றினன் சூதன் மாதோ. (18)

இப்பெருஞ் சரித மெல்லா மினியமார்க் கண்ட மென்னச்
செப்பிய புராணத் தூடே திகழ்திரு வேங்க டத்தின்
ஒப்பறு மான்மி யத்தை யுரைதரு மிடத்தி னன்கு
தப்பற விரிவ தாகத் தெளிவுறச் சாற்று மன்னோ. (19)

---

16. தவன் - தவசி. அபிதானம் - பெயர். வினவில் - கேட்டால். 17. தெருள் - தெளிவு. நாப்பண் - நடுவு. சூழல் - இருக்கை. பெட்பு - விருப்பம். 18. தவன் - தவசி. முகமன் - உபசாரம். மருந்து - அமுதம். விமல மால் - மல சம்பந்தமில்லாத இறைவன். தமர் - தம்மவர்.

**மார்க்கண்டரும் சுத்தரும் ஸ்ரீநிவாசன் சேவை பெற்ற அத்தியாயம் முற்றிற்று.**

## 58. அருந்ததி தவநிலை உரைத்த அத்தியாயம்.

எழுசீர் விருத்தம்.

கருந்தட நெடுங்கட் கதிர்முலை வேய்த்தோட்
கலைமுழு மதிமுகத் துவர்வாய்
அருந்ததி வசிட்ட னடிமல ரிறைஞ்சி
யாசிலா மங்கையர்க் கெல்லாம்
பொருந்திய பதிதன் றொழும்பலா லுயர்ந்த
புண்ணியம் வேறிலை யென்று
திருந்துமெய் யறிவாற் றெளிவுறும் பெரியோர்
செப்புவ ராகையி னாலே (1)

அடிகடம் வாய்மை யன்றிவே றறங்க
ளாசரித் திடினெனக் கவையிப்
படிமிசைப் பயவா தென்றுளங் கருதிப்
பகருகின் றேனலஞ் சிறந்த
கடிகமழ் துளவத் தாமனைக் குறித்துக்
கருதருந் தவஞ்செய நினைந்தேன்
விடைதரு கெனலு மம்முனி சால
வேட்கையோ டுரைக்கலுற் றனனால். (2)

அஞ்சன கிரியென் றியாவரும் போற்ற
வுளததன் மான்மிய மெழில்சீர்
கஞ்சநாண் மலரோ னெனக்கருள் சுரந்து
கழறயான் கேட்டுள னெல்கு

---

1. கதிர் - ஒளி. வேய்த்தோள் - மூங்கில் போன்ற பசுந்தோள். மதிமுகம் - சந்திரன் போன்ற முகம். துவர்வாய் - பவளம் போன்ற வாய். இறைஞ்சி - பணிந்து. ஆசு - குற்றம். பதி - நாயகன். தொழும்பு - ஊழியம். 2. அடிகள் - பெரியோர். ஆசரித்திடின் - ஒழுகினால். படி - பூமி. பயவாது - பயன் தராது. கடி - மணம். தாமன் - மாலையுடையவன். சால - மிகவும். வேட்கை - விருப்பம். 3. மான்மியம் - பெருமை. கஞ்சம் - தாமரை. மலரோன் - பிரமன். ஒல்கு - தளரும்.

வஞ்சிநுண் ணிடையா யவணினீ மருவி
வளங்கெழு தும்புரு வென்னும்
விஞ்சிய நலங்கொ டீர்த்தமுட் படிந்து
மேதகு தவஞ்செயென் றனனால். (3)

அந்தவா சகங்கேட் டடிபணிந் தவன்ற
னருள்கொடம் மலைமிசை யணுகிச்
சிந்தையின் மகிழ்ந்து தும்புரு தீர்த்தஞ்
சென்றுகண் டதிற்குடைந் தெழுந்து
விந்தைகேள் வனைத்தன் னுளத்தினி லிருவி
விரும்புமோர் பன்னிரண் டாண்டு
நந்தலி றவத்தோ ருளம்வியப் பூற
நற்றவ மினிதுசெய் காலை (4)

ஆழியான் மீனத் திங்களுத் தரத்தி
னலர்மக ளுடனக மகிழ்ந்து
சூழிரும் புவனங் களுமொளி தவழ
வெதிர்வரக் கண்டடி தொழுது
பாழிமா மறைக ளாலும்வாழ்த் தரிய
மாயநின் புகழ்பணி யிறையும்
ஊழிநா ளளவிட் டுரைப்பினு மடங்கா
தென்னின்யா னெங்ஙன முரைக்கேன். (5)

என்றுபல் விதமா யேத்தலு முகுந்த
னிதயமுட் கருணைமீ தூர
ஒன்றிய மனத்த ளாகியென் றன்னை
யுளங்கொடிங் கருந்தவ நெடுநாள்

---

வஞ்சி நுண்ணிடை - வஞ்சிக் கொடி போன்ற சிறிய இடை. விஞ்சிய - மிக்க. 4. குடைந்து - நீராடி. விந்தை கேள்வன் - இலக்குமியின் நாயகன் ஆகிய திருமால். இருவி - இருக்கச் செய்து. நந்தல் - குறைதல். வியப்பு - ஆச்சரியம். 5. ஆழியான் - திருமால். மீனத்திங்கள் - பங்குனி மாசம். அலர் மகள் - இலக்குமி. புவனம் - உலகம். பணியிறை - அரவுகளுக்கு அரசன் ஆகிய ஆதிசேடன். ஊழிநாள் - கல்பகாலம். 6. ஏத்தல் - புகழ்தல். முகுந்தன் - திருமால். இதயம் - உள்ளம். மீதூர - மிகுதியாக. ஒன்றிய - ஒருமைப்பட்ட.

நன்றுறப் புரிந்தா யாதலின் வேண்டுங்
கவ்வையை நவிலெனக் கடாவ
நின்றிரு காலுங் குவித்துளா னந்த
நிரம்பிட நிகழ்த்துவ தானாள். (6)

அய்யனே மூன்று புவனமீ துள்ளோ
ரனைவர்க்கு மிந்தநற் றீர்த்தம்
வெய்யபா தகங்கள் விலக்கிநற் பேற்றை
விளங்குற வுதவவுஞ் சிறந்த
துய்யவிம் மலையின் மகிமையைக் கேட்போர்
சொல்லுவோர் தங்களுக் கெல்லாம்
வையக மதனி னினைத்தவை மருவி
வாழவும் வரமரு ளென்றாள். (7)

அச்சுத னுகந்தவ் வரமவட் கருளிப்
பின்னரு மலைறகுவான் கற்பால்
உச்சமா மடவார் தமக்கெலா நாளு
முன்பெய ருவமிக்கும் பொருளாய்
எச்சகத் தவரு நவிலுவ ரெனவே
யிசைத்துவிண் கரந்தன னென்று
இச்சைவே ரறுத்த சூதமா முனிவ
னியம்பினன் சௌனகா தியர்க்கே. (8)

செப்புசாத் தீக மாயுயர் மகிமை
சிறந்தகா ருடமென வுரைக்கும்
ஒப்பறு புராணத் துரைசெயு மிதெலா
மோதநீர்க் கடல்புடை சூழும்
இப்புவி யதனிற் கேட்பவர் சொல்வோ
ரெழுதுவோ ரிட்டகா மியங்கள்
தப்பற வடைந்து பின்னரி னழியாப்
பதத்தினிற் சார்குவர் மாதோ. (9)

---

கவ்வை - காரியம். கடாவ - வினவ. 7. புவனம் - உலகம். வெய்ய - கொடிய. துய்ய - தூய்மையான. வையகம் - உலகம். 8. அச்சுதன் - திருமால். உச்சம் - சிறப்பு. மடவார் - இளமகளிர். இச்சை - ஆசை. 9. சாத்தீகம் - சாந்தமானது. ஓதம் - ஒலி. புவி - உலகு. அழியாப்பதம் - வைகுண்டம்.

அருந்ததி தவநிலை உரைத்த அத்தியாயம் முற்றிற்று.

## 59. வீட்டுமாசாரியார் தருமனுக்குத் திருமலையில் ஸ்ரீநிவாசன் வரவு உரைத்த அத்தியாயம்.

கலிநிலைத்துறை.

தருமன் வீட்டுமன் றனைப்பணிந் தெழுந்துகை குவித்து
விரிம லர்ப்பொழில் வேங்கட மலைமிசை விரும்பித்
திருவி னுயகன் சேர்ந்தமை யினிதுசெப் பெனலும்
பெருகு மன்பொடவ் வீட்டுமன் பேசலுற் றனனால். (1)

மடன்ம லர்ப்பொகுட் டுறைதரு மறையவ னீன்ற
கடவுண் மாமுனி யாதிநாட் கமலலோ சனன்றன்
அடிதொ ழுற்குறு மாசையா னேகுழி ஞான
வடிவு றுஞ்சுக னகத்திய மாதவன் முதலோர் (2)

கண்டு பற்பல வேத்தல்செய் துளங்கொடு கரைவார்
பண்டை மாமறை முடிவினி னடம்புரி பரமன்
அண்டை சென்றடி தொழவுளத் தாசைமிக் கடைந்தோம்
எண்ட போதனு வெவணுறிற் காணலா மென்றூர். (3)

என்ற வாசகங் கேட்டிசை யாழ்முனி யிசைப்பான்
மன்ற லந்துழாய் மரகத மேனியான் மண்மேல்
துன்று மன்னுயிர் கட்கெல்லாஞ் சூழொளி விசும்பும்
நன்று றும்பயோ ததியுநா டுதற்கரி தெனவே (4)

திருவு ளத்துளே கருதியிச் செகத்துமன் பதைகட்
கருள்சு ரந்துய ரஞ்சனுத் திரிமிசை யணுகிக்
கரிய ஞாயிறு போன்மெனக் களிப்புட னருச்சை
உருவ மேவியம் பொன்னெழி லுரமிலங் கிடவே (5)

---

1. பொழில் - சோலை. திரு - இலக்குமி. வீட்டுமன் - பீஷ்மர். 2. மடல் - இதழ். பொகுட்டு - மலர்க்கொட்டை. மறையவன் - பிரமன். கமலலோசனன் - தாமரை மலர் போன்ற கண்களை உடையவன். ஏகுழி - போகும் போது. 3. ஏத்தல் - போற்றுதல். கரைவார் - சொல்லுவார். பரமன் - மேலோன். தபோதனு - தவசைச் செல்வமாக உடைய தவசியே! 4. யாழ் முனி - நாரதன். மன்றல் - மணம். விசும்பு - வானம். பயோததி - பாற் கடல். 5. மன்பதை - மக்கள் தொகுதி. அஞ்சனுத்திரி - திருமலை. கரிய ஞாயிறு - அபூத உவமை. அருச்சை - உலகோர் பூசிக்கத் தக்க திருஉருவம். பொன் - இலக்குமி. உரம் - திருமார்பு.

ஆவ லோடுவந் தடிதொழு மன்பருக் கெல்லாம்
சேவை தந்துளன் றெருமரே லென்றுசெப் பிடலும்
மேவு நான்மறை விழுத்தவர் விருப்புற வினவித்
தேவ தேவன்வாழ் சேடபூ தரத்தினிற் சென்றூர். (6)

விண்ட லத்தவர் விழுத்தவ வேதியர் சிறந்த
மண்ட லத்தவர் தம்மொடு வந்தவ னுலகம்
உண்ட வன்றனை யெணித்தவ முவந்துசெய் வதெலாம்
கண்டு சிந்தையி னடங்கொணு மிகுகளிப் புடனே (7)

கதிக்கெ லாமுயர் சாமிபுட் கரிணியை நாடிக்
கதிக்குக் காரண மீதலா விலையெனக் கருத்தின்
மதித்து மூழ்கியங் குளவரா கத்திரு மாலைத்
துதித்து வேண்டியன் பொடுதொழு தானந்த முறவே (8)

உதய மண்டல முறழ்வென வொளிதவழ் மணிகள்
பொதியு மானந்த நிலயமா னத்திடைப் பொருந்தும்
மதும லர்த்திரு மகடனை மார்பில்வைத் தவனை
எதிர டைந்துகண் டிறைஞ்சியன் பொடுபுகழ்ந் தேத்தி (9)

மந்தி ரங்களான் மலர்கொடு சிலரருச் சித்தார்
சிந்தை யன்பொடு தூபதீ பஞ்சிலர் கொடுத்தார்
கந்த நற்கனி காய்களைச் சிலர்களிப் புடனே
முந்தி வைத்துநி வேதனஞ் செய்தனர் முறையே. (10)

இன்ன வாறெலா மிருந்தவ ரினிதினுங் கியற்றக்
கன்னி யந்துழாய் மாலையான் கருணையுண் மலிந்து
அன்ன வர்க்குளம் விரும்பிய வாமெலா மளித்து
மன்னு மன்பர்கட் காயவண் மகிழ்ந்திருக் கின்றுன். (11)

---

6. சேவை - காட்சி. தெருமரேல் - கலக்கம் வேண்டா. விழுத்தவர் - சிறந்த தவசியர். பூதரம் - மலை. 7. விண்டலத்தவர் - வானவர். வேதியர் - அந்தணர். 8. கதி - உயர்பதம். 9. உதயமண்டலம் - சூரியன் தோன்றும் பிரதேசம். உறழ்வு - ஒப்பு. பொதியும் - பொருந்திய. மானம் - விமானம். மது - தேன். 10. கந்தம் - கிழங்கு. நிவேதனம் - படையல். 11. கன்னி - புதுமை.

சிந்தை யன்பொடச் சீநிவா சன்றிரு வடியை
வந்த னஞ்செய நினைப்பினு மவர்மகி தலத்தில்
சந்த தம்பெரு வாழ்வுடன் றவறற விருந்து
நந்த லின்றியா னந்தமாங் கதியைநண் ணுவரால். (12)

உலக மீதுள புண்ணிய வுலகெலா மொருங்கே
வலம தாகவந் தன்பொடு வழுத்தியே தொழுவோர்க்
கிலகு நன்மைக ளெவ்வள வுளவவை யிந்த
நலமு றுந்திரு மலையனைப் பணிவர்நண் ணுவரே. (13)

என்று வீட்டுமன் றருமனுக் கிசைத்தன னென்னு
மன்ற லாருரை மிசவன மாதவர் கேட்பத்
துன்று மாதவச் சூதமா முனிசொனு னிதனை
வென்றி மேவிய பாரதம் விரித்துரைத் திடுமே. (14)

வணங்கி யன்பொடித் திருப்பதி மகத்துவ மிசைப்போர்
இணங்கி நன்றெனு வினிதுகேட் டுவப்பவ ரநந்தன்
பணங்கொள் பார்மிசைப் பழுதற நலனடைந் தலர்மேல்
அணங்கு கேள்வன்வாழ் பதியிலா னந்தமெய் துவரால். (15)

என்று சூதமா முனிவா னினிதுற நாடி
வென்ற மாதவர் கேட்டுளம் வியப்பநன் கமர்ந்து
நின்ற வேங்கட மான்மிய நிகழ்த்தலு மன்னோர்
நன்று நன்றெனு வுவந்துதம் முறையுணண் ணினரால். (16)

---

12. வந்தனம் - பணிதல். மகிதலம் - உலகு. சந்ததம் - எப்போதும். நந்தல் - குறைவு. நண்ணுவர் - அடைவர். 13. வழுத்தி - போற்றி. 14. மன்றல் - மணம். 15 மகத்துவம் - பெருமை. அநந்தன் - ஆதிசேடன். பணம் - பாம்புப் படம். மலர்மேல் அணங்கு - இலக்குமி. பார் - உலகு. கேள்வன் - நாயகன். பதி - வைகுண்டம்.

வீட்டுமாசாரியர் தருமனுக்குத் திருமலையில்
ஸ்ரீநிவாசன் வரவு உரைத்த அத்தியாயம் முற்றிற்று.

## வாழித் திருநாமம்.

### சந்த விருத்தம்.

தொண்டை நாடு வாழி சொன்ன முகியும் வாழி தூய்நலங்
கொண்ட சேட சயிலம் வாழி கோயில் வாழி கோதறும்
புண்ட ரீகம் விஞ்சு சாமி சரசு வாழி பொங்கெழில்
மண்டு வெள்வ ராக மான மாயன் வாழி வாழியே. (1)

ஆதி தேவன் வாழி சீர்கொ ளமலன் வாழி யைம்பெரும்
பூத நாதன் வாழி நேரில் புனிதன் வாழி பொற்புறும்
சோதி ரூபன் வாழி வேலை துயில்செய் மாயன் வாழிமா
மாது கேள்வன் வாழி சீநி வாசன் வாழி வாழியே. (2)

### அறுசீர் விருத்தம்.

ஒப்பரிய வாழ்வார்கள் வாழிகுர வோர்வாழி யுபயவே தாந்தம்வாழி
எப்புவன மும்புகழு மெதிராசன் வாழிதின மேத்துமடி யவர்கள்வாழி
செப்புதிரு மலைமுனிவர் வாழிவர வரமுனிவர் செம்மையெந் நாளும்வாழி
இப்புவியி னிக்கதையி சைப்போர்கள் வாழிநல னென்றுகேட் போர்வாழியே.

வாழித் திருநாமம் முற்றிற்று.

ஸ்ரீநிவாஸன் திருவடிகளே சரணம்.
அலர்மேல் மங்கை நாச்சியார் திருவடிகளே சரணம்.
ஆழ்வார் திருவடிகளே சரணம்.
ஜீயர் திருவடிகளே சரணம்.
ஆசாரியன் திருவடிகளே சரணம்.

திருவேங்கட தலபுராணம் முற்றிற்று.

---

1. சேடசயிலம் - சேஷமலை: திருமலை. கோது - குற்றம். புண்டரீகம் - தாமரை. விஞ்சு - மிக்க. சரசு - தீர்த்தம்: பொய்கை. வெள்வராகம் - சுவேத வராகப்பெருமாள். 2. புனிதன் - பரிசுத்தன். வேலை - சமுத்திரம். மாமாது - இலக்குமி. 3. குரவோர் - ஆசாரியர்கள். உபய வேதாந்தம் - ஆரிய திராவிட வேதாந்தங்கள். புவனம் - உலகம். எதிராசன் - ஸ்ரீ ராமாநுஜ முனிவரர்.

# பிழைதிருத்தம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 11 | 5 | ரில்லேத் | ரில்லே |
| 24 | 20 | என்று முண்ணிணேந்துங் | என்றுமுண் ணிணேந்துங் |
| 31 | 10 | அவ்வரை | அவ்வுரை |
| 36 | 18 | திருத்கு | திருத்தகு |
| 37 | 16 | விதலய | விதலேய |
| 43 | 7 | ளுவப்பப் | ளுவப்ப |
| 46 | 3 | ஞடொறேம் | ஞடொறும் |
| ,, | 14 | ஒழகு | ஒழுகு |
| 47 | 15 | மகிழ்வோடு | மகிழ்வொடு |
| ,, | 24 | றன்னேயோர் | றன்னேயோர் |
| 48 | 25 | சூரியன் | சூரியனே |
| 56 | 26 | 3 | 4 |
| 39 | 26 | சயனத்தில | சயனத்தில் |
| 80 | 32 | தோஷங்தள் | தோஷங்கள் |
| 82 | 14 | தவர் | தவர்க |
| 109 | 24 | பவத்தொ டாறுக்கும் | பவத்தொட ாறுக்கும் |
| 115 | 22 | ஒங்கு | ஓங்கு |
| 124 | 22 | தனியேற்கு் | தனிஞயேற்கு |
| 126 | 3 | ஒப்புறு | ஒப்பறு |
| 136 | 10 | சார்பத்னி | சார்பதனி |
| 198 | 4 | மாத்திரை | மாத்ரை |
| ,, | 15 | னுமோர | னுரோம |
| 212 | 25 | பெயரெண் | பெயரென் |
| 227 | 24 | தவரற | தவறற |
| 235 | 25 | தோகைத் | தோகை |
| 241 | 14 | டொறு | டொறு |
| 247 | 14 | ரவஞெனி | ரவஞெளி |
| 289 | 12 | யெங்தொடை | யங்தொடை |
| 291 | 5 | வறைந்த | வறைங் தனனது |
| 302 | 15 | தாடி | தாடி |
| 314 | 14 | அகிற்புத்தினி | அகிர்புத்தினி |

# பெயர் அகராதி.


| பெயர். | பக்கம். |
|---|---|
| அக்கினி | 107 |
| அகத்தியன் | 29, 96, 99, 99, 173 |
| அகலிகை | 272 |
| அகிர்புத்தினி | 314 |
| அச்சுதன் | 60, 119 |
| அஞ்சனை | 42, 44, 161 |
| அத்திரி | 86, 91, 92, 96, 316 |
| அபிராமி | 31, 93 |
| அரங்கதாசன் | 117, 118, 119 |
| அரன் | 27, 28, 29, 34, 68 மு |
| அலர்மேல் மங்கை | 217 |
| அனந்தாழ்வான் | 26, 27, 76, 87 |
| ஆகாசராசன் | 220, 223, 230 |
| ஆங்கிரசன் | 317 |
| ஆஞ்சனேயன் | 162 |
| ஆதிசேடன் | 62, 87, 91, 193 |
| ஆதிவராகர் | 3 |
| ஆரிதன் | 316 |
| இடபாசுரன் | 35, 36 |
| இந்திரன் | 27, 29, 68 மு |
| இரணியன் | 67, 269 |
| இராமன் | 93, 193 |
| இராமாநுசர் | 2, 192 |
| இராவணன் | 173, 264 |
| இலக்குவன் | 161, 193, 229 |
| உபரிசரவசு | 295, 297, 302 |
| எதிராசன் | 2 |
| கண்ணுவன் | 317 |
| கபிலன் | 204 |
| கருடன் | 200 |
| காசிபன் | 215, 317 |
| காத்தியாயன் | 317 |
| காம்போசன் | 189 |
| காமன் | 51, 57, 58 |
| காரி | 2 |
| காலன் | 184 |
| காலகன் | 188 |
| கிருஷ்ணசன்மன் | 78, 79 |
| குண்டலன் | 119 |
| குந்தலை | 278 |
| குமரன் | 97 |
| குருகையாத்தான் | 3 |
| குருவை நம்பி | 256, 261 |
| குலகர்ணன் | 166 |
| குலசேகராழ்வார் | 1, 2 |
| கூர்மன் | 78 |
| கேசரி | 42 |
| கோதண்டராமன் | 161 |
| கோதமன் | 304, 316 |
| கோதை | 2 |
| சக்கரவர்த்தி திருமகன் | 161 |
| சங்கன் | 96, 99, 101, 153, 249 |
| சண்முகன் | 268 |
| சதாநந்தர் | 263, 265, 268 |
| சனகன் | 183, 228, 263, 303 |
| சனற்குமரன் | 158 |
| சர்வசித்தாக்கியன் | 138, 139 |
| சரசுவதி | 93, 94 |
| சாண்டிலியன் | 316 |
| சாபாலி | 21 |
| சாயாசுகன் | 322 |
| சாயாசுசங்கர் | 231 |
| சானகி | 228, 264 |
| சிகண்டிகன் | 306 |
| ஸ்ரீதரன் | 121 |
| ஸ்ரீநிவாசன் | 92, 160 |
| சுகர் | 6, 20, 101 மு |
| சுக்கிரன் | 299 |
| சுதரிசனன் | 188 |
| சுதாமணி | 29 |
| சுப்பிரமணியன் | 19 |
| சுவற்சலை | 280 |
| சுவாலபாதன் | 188 |
| சூதமுனி | 25, 34, 50, 55 மு |

| பெயர். | பக்கம். |
|---|---|
| செம்பியன் | 25, 58, 62, 72 |
| சேனைமுதலி | 5, 27. 200 |
| சோழன் | 56, 59, 61, 77 |
| சௌனகர் | 35, 66, 85 மு |
| தசரதன் | 166, 169, 175 |
| தரணி | 218, 236, 238 |
| தருமன் | 215 |
| தனுசன் | 58 |
| திருதவன்மா | 115 |
| திருப்பாணர் | 2 |
| திருமங்கை மன்னன் | 1, 2 |
| திருமழிசையாழ்வார் | 2 |
| திலீபன் | 85, 86, 90, 91 மு |
| தும்புரு | 139, 140 |
| துருவாசன் | 85, 86, 92,96, 99 மு |
| தென்னவன் | 218 |
| தேவலகன் | 309, 313 |
| தேவதரிசனன் | 309 313 |
| தொண்டரடிப்பொடி | 2 |
| தொண்டைமான் | 6, 256 |
| நந்தன் | 51 |
| நந்தி | 283 |
| நம்மாழ்வார் | 1 |
| நாரதர் | 18, 20, 25, 26 மு |
| நாராயணமுனி | 30 |
| நான்முகன் | 19, 27, 28 |
| நிமி | 284, 289 |
| நிருதி | 292 |
| நீளை | 22, 27, 64 |
| பட்டர்பிரான் | 1, 2 |
| பதுமினி | 220, 238 |
| பாரத்துவாசன் | 21, 317 |
| பாராசரன் | 317 |
| பலராமன் | 7 |
| பிருகஸ்பதி | 273. 299 |
| பிருகு | 20, 25, 28, 30, 275, 316 |
| புண்டரீகன் | 21 |
| புரந்தரன் | 51 |

| பெயர். | பக்கம். |
|---|---|
| புலகன் | 285 |
| புலத்தியன் | 92, 93, 172 |
| புலோமசை | 273 |
| புளிந்தன் | 184 |
| பூதத்தார் | 1, 2 |
| பூதேவி | 22, 27, 28 மு |
| பேயார் | 1, 2 |
| பேரண்டவன் | 189, 191 |
| பொய்கையார் | 1, 2 |
| போதாயனன் | 317 |
| மணவாளமாமுனி | 2 |
| மதுரகவி | 1, 2 |
| மயிந்தன் | 163 |
| மனு | 113 |
| மாண்டவியன் | 317 |
| மாதவன் | 53, 55 |
| மார்க்கண்டன் | 21, 305, 307, 316 |
| மாருதி | 21, 162 |
| மாலினி | 53 |
| மாறன் | 2 |
| மித்ரவன்மன் | 317 |
| வகுளமாலிகை | 224, 229, 231 |
| வசிட்டன் | 99, 134, 139, 170 |
| வசுதாசன் | 219 |
| வராகமூர்த்தி | 72, 145 |
| வருணன் | 228 |
| வனகர்த்தன் | 187, 188 |
| வாயு | 87, 88, 282 |
| வான்மீகன் | 317 |
| விசுவசேனர் | 293 |
| விசுவாமித்திரன் | 317 |
| விநாயகன் | 19 |
| வியன் | 218, 238 |
| வியாசன் | 6, 18, 209 |
| வீடணன் | 93 |
| வைவச்சுதன் | 216 |
| வேதவதி | 226 |


—:o:—